
பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்



ச. குருஸ் அந்தோனி,
எம்.ஏ.




வித்துவான்,
ஆ. ஜெபரத்னம், எம்.ஏ.



வித்துவான்,
அ. நவநீத கிருஷ்ணன்.



ஆ. அருளப்பன், பி.எ.



வித்துவான்,
க. வெள்ளைவாரணன்.



வித்துவான்,
ந. சேதுரகுநாதன்.

உ

பத்துப்பாட்டுச் - சொற்பொழிவுகள்.

தலைமையுரை

[வித்துவான் திரு மு. வரதராசனார், எம். ஓ. எல்.]

தமிழறிஞர்களே!

ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டில் வாழ்ந்த நம் முன்னோர் எத்தனையோ கட்டிடங்களை எழுப்பிப் பெருவாழ்வு வாழ்ந்திருந்தார்கள். அந்தக் கட்டிடங்கள் மறைந்து போயின. அவர்கள் அரசியலில் எத்தனையோ அமைப்புக்களைக் கண்டு அமைத்து ஆட்சி நடத்திவந்தார்கள். அவைகளும் அழிந்துபோயின. அவர்கள் வாழ்ந்த ஊர்களும் பல, இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. அவர்கள் கையாண்ட கருவிகளும் பல அவ்வாறே மறைந்துபோயின.

ஆயினும், அவர்கள் எண்ணியிருந்த சிறந்த எண்ணங்களும் கொண்டிருந்த உயர்ந்த நோக்கங்களும் இன்னும் அழியாமல் நிலவுகின்றன. அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த கலைஞர்கள் அந்த எண்ணங்களையும் நோக்கங்களையும் கலையுருவில் அழியா வாழ்வு தந்து வாழச் செய்து;விட்டுச் சென்றார்கள். அத்தகைய கலைகளுள்ளும் ஓவியக் கலைக்காட்சிகள் பலவும் மறைந்தன; சிற்பக் கலைப் பகுதிகள் சிலவே நின்றன; நாடகக்கலைப் பகுதிகள் பலவகை மாறுதல் உற்றன; இசைக்கலையின் வரலாறும் அத்தகையதே. ஆகையால் இக்கலைகளின் வாயிலாக முன்னோரின் எண்ணங்களையும் நோக்கங்களை

யும் உணர முடியவில்லை. எஞ்சிய இலக்கியக் கலையே இன்றுவரையில் அழியாச் சான்றாக நின்று விளக்கிக் கொண்டிருக்கின்றது.

மிகப் பழைய தமிழிலக்கியங்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகும். பழந்தமிழ் மக்கள் எண்ணிய எண்ணங்களின் விழுப்பத்தையும் கொண்ட நோக்கங்களின் சிறப்பையும் இவற்றில் தெளிவாகக் காண முடிகின்றது. ஆகையால் இந்த அரிய தமிழ்ச் செல்வங்களை நம் செல்வம் என உரிமையோடு உணரவும், நம் வாழ்வு செழிக்கு மாறு சேர இருந்து தமிழ்ச்சுவை நுகரவும் இத்தகைய மாநாடுகள் வேண்டும்.

இத்தகைய முயற்சி சென்னையில் தொடங்கியது. பத்துப்பாட்டு மாநாடே இவற்றின் தோற்றுவாயாக இருந்தது. அந்த முதல் மாநாடு 1940-ஆம் ஆண்டில் சிந்தாதிரிப்பேட்டைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அகநானூறு முதலிய மாநாடுகள் கூடி நடைபெற்றன.

இவை தலைமுறைக்கு ஒரு முறை நிகழ்வதால் போதிய பயன் விளையாது. ஆகையால் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் மீண்டும் ஒன்றுகூடிப் பண்டைத் தமிழ் இலக்கிய விருந்தை உண்டு களிக்கவேண்டும். சென்னையில் மட்டும் அல்லாமல், தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இவ்வாறு தமிழ்மக்கள் சேர இருந்து இலக்கிய விருந்து உண்டு திளைக்கவேண்டும். இன்று திருநெல்வேலி நகரம் இம் மாநாட்டைக் கூட்டிப் 'புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே' என்று அழைக்கும் அழைப்பு எனக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கின்றது. இத்தகைய விருந்திற்கு உரிய ஏற்பாடுகளைச் சிறக்கச் செய்து, எனக்கும் அன்புடன் இடந்தந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு என் நன்றி உரித்தாகுக.

பத்துப்பாட்டு என்ற பெயரே இந்தத் தொகை நூலின் அமைப்பை விளக்குகின்றது. இதில் உள்ளவை பத்துப் பாட்டுக்களே. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் தனி வெண்பாக்கள் சில உள்ளன. இவை இருபத்தி

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே, திறப்ப
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே.

(புறம். 47)

என்று புலவரும் தம்தம் வாழ்க்கையைப் பறவைகளின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

பறவைகள் பழுமரம் தேர்ந்து பறக்கின்றன. பழம் உண்டபின் அம் முயற்சியையும் மறந்து ஆடல் பாடல்களால் இயற்கையன்னையின் கோயிலை அணிசெய்கின்றன. கலைஞரும் அத்தகையவர்களே. கரவும் செருக்கும் அற்றுக் கல்வியும் செம்மையும் பெற்று வளமாக வாழும் வள்ளல்களே கலைஞர் நாடும் பழுமரங்கள். அவர்களை அணுகி நல்லுதவி பெற முயல்வார்கள்; பெற்றதும் களிகூர்ந்து தம்மை மறந்து கலையின்பத்தை நாடெங்கும் பரப்புவார்கள். நாளை வாழ்க்கையைப்பற்றிக் கவலையே அவர்களுக்கு இல்லை. வறுமை தீரப் பரிசில் பெற்ற கலைஞர் ஒருவர் தம் மனைவியிடம் சென்று வாயாரக் கூறும் பழம்பாட்டு ஒன்று இதற்கு எடுத்துக்காட்டாகும்.

நின்னயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே

(புறம். 163)

அத்தகைய கலையுலகப் பறவைகளின் வாழ்க்கையே நாம் ஆற்றுப்படைகளில் காண்பது. புலவரும் பாணரும் பொருநரும் கூத்தரும் தம்தம் வாழ்க்கையின் பழைய நிலையை எடுத்துக்கூறக் காண்கின்றோம். பரிசு தந்து வறுமையைப் போக்கிய தலைவனுடைய புகழை எடுத்துக்

கூறக் காண்கின்றோம். வாடி வருந்தி எதிர்ப்பட்ட புலவரையும் பாணரையும் பொருநரையும் கூத்தரையும் நோக்கி, "இத்துன்பம் ஒழிந்து எம்மைப்போல் நீங்களும் வளம்பெற்று வாழவேண்டும். இந்த வழியே சென்று இன்ன தலைவனைக் கண்டு இன்ன பயன்பெற்று வருவீர்களாக!" என்று தன்னலம் அற்ற கனிவோடு, பொறாமை அற்ற பேரன்போடு கூறுகின்ற கருத்தை இவற்றில் நாம் காண்கின்றோம். தலை வகைக்கு ஏற்றவாறு, புலவராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை எனப் பெயர் பெற்றுள்ளன. புலவராற்றுப்படையே திருமுருகாற்றுப்படை என வழங்குவது. கூத்தராற்றுப்படையே மலைபடுகடாம் என வழங்குவது. பாணராற்றுப்படை இரண்டு உள்ளன. இரண்டையும் வேறுபடுத்த உதவியது பாணர்களின் கையில் விளங்கிய யாழின் வேறுபாடே. சிறிய யாழ் விளங்கிய காரணம் பற்றிச் சிறுபாணாற்றுப்படை எனவும், பெரிய யாழ் விளங்கியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை எனவும் பெயர்கள் வழங்கலாயின.

இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ
(சிறுபாண்—35)

இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி
(பெரும்பாண்—462)

என்று அவற்றில் முறையே வரும் அடிகளில் வரும் சீறியாழ், பேரியாழ் என்பவைகளே இவ்வாறு வேறுபடுத்த உதவின.

எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
(திருமுருகு. 61-66)

போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந!
ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு
நீடுபசி ஒராஅல் வேண்டின் நீடின்று
எழுமதி வாழி ஏழின் கிழவ
(பொருநர். 60-63)

அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்
தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம்அவ ணின்றும் வருதும்; நீயிரும்
இவன்நயந் திருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவி ராயின்......
தரீஇ, அன்றே விடுக்குமவன் பரிசில்
(சிறுபாண். 140-5, 260-261)

பழம்பசி கூர்ந்தஎம் இரும்பேர் ஒக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு
யாம்அவ ணின்றும் வருதும் நீயிரும்......
படர்குவி ராயின்......
தரீஇ, அன்றே விடுக்குமவன் பரிசில்
(பெரும்பாண். 25-28, 37, 492-493)

தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடல்படர்ந் தாஅங்கு
யாம்அவ ணின்றும் வருதும் நீயிரும்......
உள்ளினிர் சேறி ராயின்......
மழைசுரந் தன்ன ஈகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசில்
(மலைபடு. 51-53, 65, 580-581)

இவைகளே ஆற்றுப்படைகள் ஐந்தனுள்ளும் அமைந்த அடிப்படைக் கருத்துக்கள். இவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்தால், ஐந்தனுள்ளும் ஒருவகைப் பண்பே ஊடுருவி நிற்றல் காணலாம்.

கலைஞர் அளவறிந்து வாழும் வாழ்க்கை கல்லாதவர்கள்; "வல்லாங்கு வாழ்தும்," என்று எண்ணுவதே பெருங்குற்றமாகக் கருதுபவர்கள்; நாளை வாழ்க்கையைப் பற்றிக் கவலைகொள்ளாமல் நாளைக் கழிப்பவர்கள். ஆகையால், படிப்படியே வறுமை வந்து சூழ்வது இயல்பாகிவிட்டது. துவரப் பசித்த பிறகே உண்பவர்போல் கொடிய வறுமையின் எல்லையை எட்டியபோதே வள்ளல்களை நாடிச் செல்வார்கள். வறுமை மிகுந்த அவர்களின் வாழ்க்கை மழைவளம் இழந்து வறண்டு மரமெல்லாம் வெறுங் கொம்பும் கவடுமாய் நிற்கும் காட்டிற்கு ஒப்பானது. நன்னெஞ்சம் பெற்ற வள்ளலை அணுகி வளம்பல பெற்றுத் திரும்பும்போதோ, வறண்ட காடு மழைவளம் பெற்றுத் தழைத்துச் செழித்த மரங்களோடு கவின்பெறும் நிலைக்கு ஒப்பான வாழ்க்கை பெறுவார்கள்.

பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்
கருவி வானம் துளிசொரிந் தாங்குப்
பழம்பசி கூர்ந்தஎம் இரும்பேர் ஒக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு
யாம்அவ ணின்றும் வருதும்
(பொருநர். 23-28)

என்ற அடிகளில் இந்தக் காட்சியே தீட்டப்படுகின்றது.

செல்வம் பெருகிய காலத்தில் பிறரிடம் பணிவாக ஒழுகவேண்டும்; சுருங்கிய காலத்தில் பிறர்க்குப் பணியாமல் மானத்தோடு வாழவேண்டும்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (திருக்குறள்)

என்று திருவள்ளுவர் உணர்ந்தோதிய வாழ்க்கைச் சட்டத்தை இன்றும் நன்மக்களிடம் காண்கின்றோம். கலைஞர் நற்பண்புகளுக்கு உறைவிடமானவர்கள்; ஆகையால் அவர்கள் வாழ்க்கையில் இத்தகைய மான உணர்வைக் காண்கின்றோம். வறுமை மிகுந்த காட்சியும் அதற்கு இடையில் வீறு பெற்று விளங்கும் மான உணர்வும் கலைஞர் வாழ்க்கையில் காணும்போது, அவர்களிடம் நமக்கு உள்ள மதிப்பு மிகுகின்றது.

ஒரு பாண்குடும்பத்தின் வறுமையைச் சிறுபாணாற்றுப்படையில் காண்கின்றோம். வீட்டின் சுவர்களோ பழைய சுவர்கள். அங்கங்கே செல்லரிக்கும் காட்சியும் உள்ளது. கழிகள் சோர்ந்து விழும் நிலையில் உள்ளன. சமையலறையில் புழுதியும் புழுதியில் பூத்த காளானும் காண்கின்றோம். இந்த வறுமை குடும்பத்தாரையே அல்லாமல், அவர்களைச் சார்ந்து வாழும் நாயையும் விடவில்லை. அந்த நாய் சமையலறையில் குட்டி போட்டிருக்கின்றது. கண் திறக்காத நிலையில் உள்ள அவ்வளவு இளங்குட்டிகளையும் அந்த வீட்டு வறுமை விடவில்லை. இளங்குட்டிகளுக்குப் பால் இல்லை. தாய் நாயிடம் பால் குடிக்க அணுகுகின்றன. தாய் நாயோ குரைக்கின்றது. குட்டிகளிடம் மற்றவர்கள் நெருங்கினால் அவர்களை நோக்கிக் குரைப்பதே நாயின் இயல்பு. வறுமையின் கொடுமையால் இந்த இயல்பும் மாறிவிட்டது. தன்

இளங்குட்டிகளை அப்புறப்படுத்தவே நாய் குரைக்கின்றது. அந்தக் குட்டிகள் தன்னை அணுகிப் பால் கவர்வதை அதனால் பொறுக்க முடியவில்லை. அதனால் குரைக்கின்றது. இத்தகைய வறுமை மிக்க குடும்பத்தின் பொறுப்பு எல்லாம் ஒருத்தி தோள்மேல் நிற்கின்றது. அவள்தான் குடும்பத் தலைவி. அவளும் பசியால் வாடி மெலிந்து தோன்றுகின்றாள்.

> கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
> புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
> காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
> பூழி பூத்த புழல்காளாம்பி
> ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
> வளைக்கைக் கிணைமகள்

(சிறுபாண். 130-135)

இத்தகைய வறுமையிலும் கலைஞரின் செம்மை குறையவில்லை. சுற்றம் தழுவி மானம் காத்து வாழும் வாழ்க்கை குறைபடவில்லை. குடும்பத் தலைவி உணவுக்காகப் பெருமுயற்சி செய்து ஒன்றும் பெறமுடியாமல் குப்பையில் வேளைக்கீரைதான் தேடிப் பெறுகின்றாள். அதை வேகவைக்கின்றாள். அதைச் சுவைபட உண்பதற்கும் வழி இல்லை. வேளைக்கீரையோடு சேர்ப்பதற்கு உப்பு இல்லை. உப்பு இல்லாமலே கீரை வேகின்றது. குடும்பமோ பெரிய குடும்பம். சுற்றம் மிகுந்தது. எல்லோரும் உண்ண வருகின்றார்கள். உப்பில்லாமல் வெந்த கீரை எல்லோருக்கும் உணவாக வருகின்றது. தெருக்கதவு சார்த்தப்படுகின்றது. இங்குத்தான் கலைஞர் வாழ்க்கையில் சிறிய சுருக்கம் வந்த காலத்தில் மானம் காக்கும் திறன் விளங்குகின்றது.

உலகம் உண்மை உணராமலே பழிதூற்றுவது உண்டு. இதற்குக் காரணம் உலகத்தில் அறிவில்லாதவர் பலர் இருப்பதே. அவர்கள் ஒரு பயனும் இல்லாமல் பிறரைத் தூற்றிப் பேசுவதில் இன்பம் காண்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் கலைஞர் குடும்பத்தார் உப்பில்லாக் கீரை உண்பதைக் கண்டால் வாளா இருக்கமாட்டார்கள். அதைப் பற்றி எங்கும் தூற்றித் திரிவார்கள். ஆகையால் வீணானபழிமொழிக்கு இடந்தராமல் காத்துக் கொள்ளவேண்டும் என்று மான உணர்வு தூண்டிய

தால்தான், அவர்களின் கண்ணுக்குத் தோன்றுதவாறு கதவை அடைத்து உண்கின்றார்கள்.

ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைந்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம்

(சிறுபாண். 135-140)

இத்தகைய மான உணர்வுடைய கலைஞர் ஒரு வள்ளலை அணுகுவதானால், யாரோ சொல்லக்கேட்டு எவரிடமோ சென்று இரந்து நிற்கமாட்டார்கள். "ஈயென இரத்தல் இழிந்தன்று" (புறம்-204) என்பது அவர்கள் வாழ்வில் கொண்ட கொள்கை. ஆகையால் அறிந்தவர்களிடம் சென்று உதவி செய்யுமாறு கேட்பதும் அவர்களின் வாழ்க்கையில் இல்லை. தம்மைப்போல் மான உணர்வும் கலைப்பற்றும் உடைய கலைஞர் சொல்லி ஆற்றுப்படுத்தினால்தான் செல்லத் துணிவார்கள். கலைஞர் நிலையை உணர்ந்து உள்ளம் உவந்து உதவி ஆற்றும் பண்பாடு உடைய வள்ளல் எனத் தெளிந்தபிறகே அவரிடம் செல்வார்கள். அந்த வள்ளலிடம் சென்ற பிறகும் கைநீட்டி இரத்தலும் இல்லை; வாயால் கேட்பதும் இல்லை. ஆகையால், கலையின் சிறப்பை உணர்ந்து கேளாமலே கொடுத்துப் போற்றும் வள்ளலையே நாடிச் செல்வார்கள். இவைகளை ஆற்றுப்படைகளில் காண்கின்றோம்.

கலைஞரின் மானத்தை மதித்துப் போற்றும் பண்பாடு வள்ளல்களிடம் அமைந்திருந்தது. ஆற்றுப்படைகளைப் படிக்கும்போது, கலைஞரின் மான உணர்வு மிகுதியா, அல்லது அவர்களின் மானத்தைக் காப்பதில் வள்ளல்களுக்கு இருந்த கடமை உணர்வு மிகுதியா என்பது தெரிவதில்லை. வாடி மெலிந்து பசித்துத் தன்னை அணுகிய கலைஞர்க்குப் பசிதீர உணவு நல்குவது ஒரு வள்ளலின் முதல் கடமையாக அமையவில்லை; அவர்கள் களைப்புத் தீர இனிய தேன் தருவதும் முதல் கடமையாக இருக்கவில்லை. வறுமை வடிவாக உள்ள அவர்களுடைய கந்தலாடையைக் களைந்து சிறந்த புதிய ஆடைகளைக்

கொடுப்பதே முதல் கடமையாகக் காண்கின்றோம். இங்குத்தான் அந்த வள்ளலின் பண்பாடு புலனாகின்றது; கலைஞரின் மான உணர்வை உணர்ந்து அதற்கு ஏற்ற வாறு ஒழுகும் நுண்ணறிவும் புலனாகின்றது.

கலைஞர் வாய்க்கு இனிய உணவையோ வயிற்றையோ பெரிதாக எண்ணுகின்றவர்கள் அல்லர். அதனால் சுவை மிக்க உணவையோ இனிமை மிக்க தேனையோ முதலில் பெற்றாலும் மகிழ்ச்சி கொள்ளமாட்டார்கள். வள்ளலின் பெருவாழ்வைச் சூழ்ந்துள்ள செல்வச்சிறப்பையும் தம் உடலைச் சூழ்ந்துள்ள கந்தலையும் எண்ணி உள்ளம் குன்று வார்கள்; "என்ன செய்தோம்! இங்கு வந்தோமே! என்ன தவறு செய்தோம்!" என்று தம்மைத் தாமே நொந்து கொள்வார்கள், மனம் சுருங்கி முகம் சுருங்கி நிற்பார்கள். எதிரே வந்த உணவையும் தேனையும் பொருட்படுத்தாமல் வெறுத்தாலும் வெறுத்திடுவார்கள். இதை உணர்ந்துதான் வள்ளல் அந்தக் கலைஞரின் வறு மைக்கு அறிகுறியாகத் தோன்றும் கந்தலை நீக்கி மிக உயர்ந்த ஆடைகளை நல்குவதையே முதல்கடமையாகக் கொள்வான்.

ஒன்றியான் பெட்டா அளவையின்.........
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னல் சிதாஅர் துவர நீக்கி
நோக்குநுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை நல்கி
(பொருநர். 73-83)

நும், கையது கேளா அளவை ஒய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னல் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கி
(பொருநர். 152-5)

நீசில மொழியா அளவை மாசில்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇ
(சிறுபாண். 235-236)

அந்நிலை அணுகல் வேண்டி நின்னரைப்
பாசி அன்ன சிதர்வை நீக்கி
ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ
(பெரும்பாண். 467-470)

சென்றது நொடியவும் விடாஅன் நசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்
பொருமுரண் எதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்றம் அணுகல் வேண்டிக்
கல்லென் ஒக்கல் நல்வலத்து இரீஇ.........
நயந்தனிர் சென்ற நும்மினும் தான்பெரிது
உவந்த உள்ளமோடு அமர்ந்தினிது நோக்கி
இழைமருங்கு அறியா நுழைநூல் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ

(மலைபடு. 545-562)

கலைஞர் யாழ் இசைக்கவும் விடுவதில்லையாம். கையில் உள்ள யாழின் இனிய ஒலியைக் கேட்பதன் முன் விரைந்து பட்டுடை நல்க முனைவான் வள்ளல். இத்தகைய வள்ளல் கலைஞர் வாய்திறந்து வந்த காரணம் கூறவும் இடந்தருவது இல்லையாம். மானமுடைய மக்களின் வாழ்க்கையில் "இரப்பவர் சொல்லாடப் போஒம் உயிர்" (திருக்குறள்-1070) என்பது பெரிய உண்மை அன்றோ? ஆகையால் வள்ளல் கலைஞரை நோக்கியதும், "வந்ததே போதும்; என் பொருட்டாக எவ்வளவு வருத்தம் மேற்கொண்டீர்கள்," என்று அன்போடு வரவேற்பானும். அவர்கள் சிறிதும் தயங்காமல் கூசாமல் தன் அவைக்களத்தில் இருக்கவேண்டும் என்று விரும்பி ஆடையில் உள்ள வறுமைத் தோற்றத்தை முன்னே அகற்றுவான். அவர்களைச் சுற்றம்போல் தழுவவேண்டும் என்ற ஆர்வமே இதற்குக் காரணம்.

"கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி," அவ்வாறு செய்வதாக முடத்தாமக் கண்ணியார் பாடியுள்ளார்.

புரவலன் நல்கும் ஆடையோ மூங்கில் தோல் போன்ற மென்மையும் ஒண்மையும் நுண்மையும் உடையதாம்; நோக்கு நுழைய முடியாத நுண்ணிய இழை உடையதாம்; பூவேலைப் பாடும் உடையதாம்; பாம்பின் தோல்போன்ற பளபளப்பான மென்மைத் தோற்றம் உடையதாம்; பால் ஆவி போன்றதாம்; அழகிய கரை உடையதாம்; பட்டாடையாம். இவ்வாறெல்லாம் புகழப்பட்ட சிறந்த ஆடையை அணிந்தபிறகு கலைஞரின் அகத்தில் இருந்த வீறு புறத்திலும் அணிபெறத் தோன்றிடுமாம்.

புரவலன் உள்ளம் இப்படிப்பட்டது. அதனை என்ன என்று வாழ்த்துவது? கலைப்புறவை பறத்தற்கு உகந்த உள்ளமாம்; "பரந்து இடம் கொடுக்கும் விசும்புதோய் உள்ளம்," (மலைபடு-558) என்று புகழ்ந்தார் புலவர் ஒருவர்.

இலம்படு புலவர் ஏற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழல்தொடித் தடக்கை
(மலைபடு. 576-577)

என்று புலவரின் கை நிறைய வழங்கி வழங்கிக் கவிழ்ந்த கை என்று கையைப் புகழ்ந்தார். இடாதவர் கையை "இலமென மலர்ந்த கையர்" (மலைபடு-552) என மலர்ந்த கை என்று குறித்துப் பழித்தார். அவர்கள் தம் பெயரைத் தம்மோடு கொண்டு மாய்ந்த மக்களாம்.

புரவலனே உலகியல்பு இன்னது எனத் தெளிந்தவன். ஈதல், இசைபட வாழ்தல் இரண்டுமே உயிர்க்கு ஊதியம் எனத் தேறியவன். ஆகையால் கலைஞர் தன்னிடம் காட்டும் அன்பைவிடத் தான் அவர்களிடம் செலுத்தும் அன்பு மிகுதியாகும். புரவலன் கலைஞரை நயப்பான்; உவப்பான்; இனிது நோக்குவான்; கசிந்து உருகுவான்.

நயந்தனிர் சென்ற நும்மினும் தான்பெரிது
உவந்த உள்ளமொடு அமர்ந்தினிது நோக்கி
(மலைபடு. 559-560)

வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்
பருகு வன்ன அருகா நோக்கமோடு
உருகு பவைபோல் என்புகுளிர் கொளீஇ
(பொருநர். 75-78)

ஈற்று விருப்பின் போற்றுபு நோக்கி
(பொருநர்-151)

பிறகு களிப்புத்திரத் தேன் கிடைக்கும்; பசிதீர அறுசுவை உணவு அழகிய உண்கலத்தில் கிடைக்கும். புரவலனே, சமையலாளர் உணவை இடத் தான் தன் கடமைகளை மேற்கொண்டு எங்கோ போய் இருக்கமாட்டான். தானே இன்ன இன்ன உணவு நல்லவை என்று கலைஞர் விரும்புமாறு சொல்லிப் பேரன்போடு எதிரே நின்று உண்ணச் செய்வான்.

மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆறு விருப்பின் நான்றின்று ஊட்டி
(பெரும்பாண். 478-479)

விளங்குபொன் கலத்தில் விரும்புவன பேணி
ஆறு விருப்பின் நான்றின்று ஊட்டி
(சிறுபாண். 244-245)

இந்தச் சிறந்த பேரன்பு முதல்நாள் இருக்க முடியும்; வரவரக் குறைந்து போவதும் இயல்பே. இது கலைஞரல்லாத மற்றக் கல்லாதவர் நட்பில் காணப்படும் இயல்பாகும். கலைஞர்க்கும் கலையுள்ளம் பெற்ற வள்ளலுக்கும் இடையே உள்ள நட்பு தலையான நட்பாகும். இந்த நட்பு மேன்மேலும் மிகுமே அல்லாமல் குறையாது.

தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவர்
(மலைபடு. 565-566)

இவ்வாறு திருவுடைய புரவலர்க்கும் தெள்ளியராகிய கலைஞர்க்கும் இருந்த நல்லுறவை ஆற்றுப்படைகள் விளக்குகின்றன. நாட்டின் உயிர்நாடி கலையே என்றும், கலை வாழ்ந்தால்தான் மக்களின் மனம் பண்படும் என்றும் நாட்டுத் தலைவர்கள் உணர்ந்து வாழ்ந்து வந்தார்கள். இந்த உண்மையைப் பழந்தமிழ்ப் பாடல்கள் விளக்குகின்றன.

ஆற்றுப்படைகளில் திருமுருகாற்றுப்படை தனிச் சிறப்பு உடையது. மற்றவைபோல் அது பொருட் பரிசில் விழைந்த கலைஞரின் ஆற்றுப்படை அன்று; வீடு பேறு விழைந்த புலவரின் ஆற்றுப்படையாகும். ஆகையால் திருமுருகாற்றுப்படையை இலக்கிய உலகம் அறிந்த அளவைவிடச் சமய உலகம் போற்றும் அளவு பெரிது.

முருகனுடைய படைவீடுகளாகிய திருப்பரங்குன்றம் முதலியவற்றில் அக் கடவுள் எழுந்தருளியுள்ள காட்சியும் வழிபாடு நடக்கும் சிறப்புக்களும் பாடப்படுகின்றன. திருப்பரங்குன்றப் பகுதியில் சூரனை வென்ற வெற்றியைக் காண்கின்றோம். திருச்சீரலைவாயில் ஆறு முகங்களையும் பன்னிரு கைகளையும் காண்கின்றோம். திருவாவினன்குடியில் முனிவர் முதலானவர் வழிபடும்

காட்சி வருகின்றது. அந்த முனிவர்கள் உண்ணா நோன்பு இருந்து இருந்து எலும்பு தோன்றும் உடம்போடு காணப்படுகின்றார்கள். நக்கீரர் அவர்களை அறிமுகப் படுத்தும்போது, செற்றம் நீக்கிய மனம் உடையவர்கள் என்றும், கற்றோர் அறியா அறிவு உடையவர்கள் என்றும், கற்றோர்க்கு வரம்பாகிய தலைமை உடையவர்கள் என்றும், காமமும் கடுஞ்சினமும் கடிந்தவர்கள் என்றும், துன்பம் அற்ற வாழ்க்கை உடையவர்கள் என்றும் புகழ்ந்து கூறுகின்றார்கள். அங்கே யாழ்வல்லவர் இசை பாடி வழிபடக் கேட்கின்றோம். அவர்கள் யாழிசை பயின்று பயின்று நயனுடைய நெஞ்சம் பெற்று விளங்கு கின்றார்கள். வழிபாட்டுக்கு வரும் மகளிரோ நோயற்ற நல்ல உடலோடு எழிலுறத் தோன்றுகின்றார்கள்.

திருவேரகத்தில் மறைமுழக்கம் கேட்கின்றது. அடுத்த பகுதியில் முருகன் குன்றுதோறு ஆடும் ஆடலைக் காண்கின்றோம். வேலன் வெறியாடும் காட்சி வருகின்றது. ஆறும் பகுதியாகிய பழமுதிர்சோலையில் முருகன் விரும்பும் விழாக்களம் முதலாகப் பலவேறு இடங்களை யும் புலவர் எடுத்துரைக்கின்றார்.

உலகம் மகிழக் கடலில் எழும் இளஞாயிற்றின் அழகிய தோற்றம் திருமுருகாற்றுப்படையின் தொடக்க மாக அமைந்துள்ளது. இடையிடையே இயற்கைக் காட்சி கள் பற்பல அமைந்துள்ளன. இறுதியில் பலவற் றைத் தாக்கி உருட்டிப் புரட்டி அலைத்து இழுத்து அடித் துக்கொண்டு வந்து இழுமென இழிதரும் அருவியின் காட்சி அமைந்துள்ளது. முருகன் குறிஞ்சிக்கடவுள்; அழகுக்கு உறைவிடமான அழகுக்கடவுள்; ஆகையால் திருமுருகாற்றுப்படை என்னும் இந்நூல் புலவரை இயற்கையழகின் இன்பத்தை நாடுமாறு ஆற்றுப்படுத்து கின்றது.

பத்துப்பாட்டில் ஆறுவதாக உள்ள மதுரைக் காஞ்சியே மிக நீண்ட தமிழ்ப்பாட்டு; 782 அடிகளால் ஆகிய தமிழ்ப்பாட்டு. பழந்தமிழ் நகரமாகிய மதுரையின் பல்வகைச் சிறப்பும் இப்பாட்டில் காணலாம். புலவர் மாங்குடி மருதனார் இதை அக்காலத்துப் பாண்டிய வேந் தன் நெடுஞ்செழியனைக் குறித்துப் பாடியுள்ளார்.

காஞ்சித்திணையாக-நிலையாமையை அறிவுறுத்தி நன்னெறிப் படுத்துவதாக அமைந்த பாடல் இது.

செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழில் மண்டிலம் முற்றி
அரசியல் பிழையாது அறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது
குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்
குணமுதல் தோன்றிய ஆரிருள் மதியின்
தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்
(மதுரைக். 189-196)

என நெடுஞ்செழியனை வாழ்த்தும் அடிகள் பாட்டில் சிறந்து நிற்கும் அடிகளாகும். மேற்குவானத்தில் தோன்றும் வளர்பிறைபோல் வெற்றி பெருகவேண்டும் என்றும், கிழக்கு வானத்தில் தோன்றும் முழுமதிபோல் பகைவர் செல்வாக்குத் தேயவேண்டும் என்றும் வாழ்த்தியுள்ளார். பிறகு,

உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே;
முழங்குகடல் ஏணி மலர்தலை உலகமொடு
உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க்கு அஞ்சிப் பணிந்தொழு கலையே;
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக்கு எழுக என்னாய்; விழுநிதி
ஈதல் உள்ளமொடு இசைவேட் குவையே;
அன்னாய்! நின்னொடு முன்னிலை எவனோ;
கொன்னொன்று கிளக்குவல்; அடுபோர் அண்ணல்!
கேட்டிசின் வாழி; கெடுகநின் அவலம்;
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை;...
பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொருது இரங்கும் கனையிரு முந்நீர்த்
திரைஇடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே; அதனால்,...
அரிய தந்து குடிஅகற்றிப்
பெரிய கற்று இசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்...
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்

மகிழ்ந்தினிது உறைமதி; பெரும!
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே
(மதுரைக். 197-209, 234-237, 766-782)

என்னும் அடிகளில் நிலைமையை எடுத்துரைத்து நன்னெறியை அறிவுறுத்தி நல்வாழ்வு வாழ்ந்து மகிழுமாறு வாழ்த்துகின்றார். நிலையாமையை மட்டும் அறிவுறுத்தித் துறவு புகட்டும் காஞ்சித்திணை இங்கு இல்லை. உலக இயல்பை உள்ளவாறு உணர்ந்து உள்ளம் செம்மையுற்று இன்பமாக வாழ்நாளைக் கழித்து மகிழுமாறு வாழ்த்தும் வாழ்த்து முறையே மதுரைக் காஞ்சியில் அமைந்திருக்கின்றது.

பாண்டிய மரபைப்பற்றியும், நாட்டைப்பற்றியும், நெடுஞ்செழியனின் முன்னோர் சிலரைப்பற்றியும், அருஞ் செயல்களைப்பற்றியும், உயர் பண்புகளைப்பற்றியும் அறியத்தக்க கருத்துக்கள் பல மதுரைக் காஞ்சியில் உள்ளன. ஆயினும், பெரும்பான்மையாக விளக்கப்பட்டிருப்பது மதுரை நகரமே. மதுரை நகரத்தை விளக்கும் முறையும் தனிச்சிறப்பு உடையதாக இருக்கின்றது. ஈராயிரம் ஆண்டுகளாகிய கால எல்லையைக் கடந்து பின் சென்று, பழம் பாண்டி நாட்டில் புகுந்து, வைகை ஆற்றைக் கடந்து, அகழியையும் மதிலையும் கடந்து, மதுரை வாயிலில் நுழைந்து ஒரு நாள் காலையில் ஒருவர் பழைய மதுரை நகரத்தைக் காண்பதாக வைத்துக்கொள்வோம். இவ்வாறுதான் மதுரைக் காஞ்சியில் மதுரைக் காட்சி அமைந்துள்ளது. அன்று காலையில் அவர் நெடுந்தெருக்களில் சுற்றிச் சென்று முதலில் காணும் காட்சி காலைக் கடைகள் அல்லது நாளங்காடி என்பது. அங்கே பல வகைப் பொருள்களை விற்பவர்கள் குழுமிச் செய்யும் ஆரவாரம் திருவிழா ஒலிபோல் கேட்கும். நெடுந்தெருக்களில் அமைந்துள்ள கடைகளைக் கண்டு சுற்றி வருவதற்குள் முற்பகல் பிற்பகலாக மாறிவிடும். நாளங்காடி அல்லங்காடியாக மாறிவிடும்; அதுவே அடுத்துக்காணும் மாலைக் கடைத்தெருக் காட்சியாகும்.

கோயில்களில் இசை முழக்கம் கேட்கும். பௌத்தப் பள்ளிகளில் தொழுகை நடக்கும். அமண் பள்ளிகளில் அருந்தவப் பெரியோர்களைக் காணலாம். பலவகைத்

தொழிலாளர்களின் வேலைத்திறனைக் காட்டும் பொருள்கள் பல விற்கப்படுவதைக் காணலாம். பல வெளி நாட்டு வாணிகரையும் அங்கே காணலாம். அவர்கள் எல்லோரும் கூடிச் செய்யும் ஆரவாரம் பலவகைப் பறவைக் கூட்டங்களின் ஒலிபோல் கேட்கும். எல்லாம் பார்த்துச் சுற்றி வருவதற்குள் பகல் மறைந்து இரவு தொடங்கிவிடும். விளக்கேற்றி வழிபடும் மாலைக்காலம் வந்துவிடும்.

கதிரவன் மறைந்திட, முழுநிலாத் தன் கதிர்களைப் பரப்பி எழுந்து நகரை அணிசெய்யும். மகளிர் தம்மைப் புனைந்துகொண்டு அழகுற விளங்குவார்கள். பிறகு, பரத்தையர் இன்ப விளையாடல் முதலாகக் கற்புடை மகளிரின் ஒழுங்கான கடமைகள் வரையில், வேலன்வெறியாட்டு, பாட்டு, கூத்து முதலியன யாவும் காணலாம், கேட்கலாம். நள்ளிரவில் தெருக்கதவை அடைத்து மக்கள் துயில்வார்கள். அப்ப வாணிகர் முதலானவர்கள் விற்கக் கொண்டுவந்த தின்பண்டங்களைத் தம் எதிரே வைத்துக் கொண்டே தூங்கும் காட்சியைக் காணலாம். காவலர் நகரைக் காவல்காப்பதற்காகச் சுற்றி வருவார்கள். யாமம் இவ்வாறு கழிந்தவுடன், மதுரை நகரத்தின் வைகறைக் காட்சி அடுத்துவரும். மறையோர் மறை ஓத, வண்டுகள் மலர்களில் இசை முழக்க, யாழோர் மருதம் பாடுவார்கள். யானைகளும் குதிரைகளும் எழுந்து உணவு கொள்ளும். கடைக்காரர் கடைகளை மெழுகி அழகு படுத்துவார்கள். வீடுதோறும் மகளிர் எழுந்து கதவு திறப்பார்கள். பள்ளியெழுச்சி பாடப்படும். முரசு முழங்கும். சேவல் கூவும். அன்னம் கரையும். மயில் அகவும். தெரு முற்றங்களில் விழுந்த வாடிய மலர் முதலிய குப்பைகள் பெருக்கி அகற்றப்படும். பொழுது விடிந்திடும். இவ்வாறு முந்நூற்றைம்பத்து நான்கு அடிகளில் மதுரை நகரத்தை ஒருவர் ஒருநாள் காலை தொடங்கி மறுநாள் விடியல் வரையில் சுற்றிவந்து கண்டவற்றையும் கேட்டவற்றையும் முறை பிறழாமல் சொல்வதுபோல் நகரவருணனை அமைந்துள்ளது.

மதுரைக்கு அடுத்த நிலையில் தமிழ் நாட்டின் மற்றொரு சிறந்த நகரமாகவும் பெரிய துறைமுகமாகவும்

சோழர்களின் தலைநகரமாகவும் விளங்கிய காவிரிப்பூம் பட்டினம் மற்றொரு பாட்டில் புகழ்ந்துரைக்கப் படுகின்றது. அதுவே பட்டினப் பாலை என்பது.

மதுரைக் காஞ்சியில் மதுரை நகரமும் பாண்டியன் நெடுஞ்செழியனும் காஞ்சித்திணைப் பொருளும் அமைந்தமை போலவே, பட்டினப்பாலையில் காவிரிப்பூம் பட்டினமும் சோழன் கரிகால் வளவனும் பாலைத்திணைப் பொருளும் அமைந்துள்ளன. மதுரைக்காஞ்சி புறப்பாட்டு. பட்டினப்பாலை அகப்பாட்டு. ஆகையால், பட்டினப்பாலையில் சோழன் உவமை வாயிலாகவே அமைந்துள்ளான்.

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே......
திருமா வளவன் தெவ்வர்க்கு ஒக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே

(பட்டினப். 218-220, 299-301)

இந்த ஆறு அடிகளே அகப்பொருள் அமைந்தவை. தலைமகன் வெளிநாட்டுக்குச் சென்று பொருள்தேட எண்ணினன். பிறகு தலைவியின் துயர் அறிந்து செல்லத் தயங்கி நின்றுவிட்டான். அதன் காரணம் இன்னது என்று அவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறும் கருத்தே இந்த அகப்பொருட் பகுதி. "நெஞ்சமே! காவிரிப்பூம் பட்டினத்தையே யான் தேடும் செல்வமாகப் பெறுவதாக இருந்தாலும், நான் தலைவியைப் பிரிந்து வரமாட்டேன். பொருள் தேடுவதற்காக நாம் கடந்து செல்லவேண்டிய காட்டுவழியோ கொடியது; சோழன் கரிகால் வளவனுடைய வேலைவிடக் கொடியது. தலைவியின் தோளோ தண்ணியது; சோழனுடைய செங்கோலை விடத் தண்ணியது; ஆகையால் தலைவியைப் பிரிந்து வரமாட்டேன்", என்று நெஞ்சை நோக்கிக் கூறினன். இதுவே பட்டினப் பாலை.

பட்டினம் என்று 218-ஆம் அடியில் உள்ள காவிரிப்பூம் பட்டினத்தை முற்பகுதி நெடுக விளக்கிச் செல்கின்றது. திருமாவளவன் என்று 299-ஆம் அடியில் உள்ள சோழனைப் பாட்டின் பிற்பகுதி சிறப்பிக்கின்றது. ஒரு சில அடிகளால் அமைந்து பாலைத்திணைப் பாட்டாய்

னின்று குறுந்தொகையில் சேர்க்கப்பட வேண்டிய ஒரு பாட்டு இவ்வாறு நீண்டு பெருகி மூந்நூறு அடிகள் உடைய நெடும்பாட்டாகிவிட்டது; பத்துப்பாட்டில் ஒன்றாகிவிட்டது.

பண்டைத் தமிழ் நாகரிகத்தை விளக்கும் நற்சான்றுகளுள் ஒன்றாக இப்பாட்டு விளங்குகின்றது. தமிழ் நாட்டின் கடல்வாணிகம் ஓங்கியிருந்தகாலம் ஆகையால், புலவர் அதைப் பலவகையாக விளக்கியிருக்கின்றார். காவிரிப்பூம்பட்டினம் என்னும் துறைமுகப்பட்டினம் அக்காலத்தில் கிழக்கு நாடுகளுக்குக் கல்கத்தா போல் சிறந்து விளங்கியது. அதைவிடப் பெரிய துறைமுகப் பட்டினம் அந்நாளில் இல்லை. துறைமுகத்தில் அரசனுடைய புலிப்பொறியை ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களில் பொறித்துச் சுங்கம் விதித்து வந்தார்கள். வாணிகம் சிறந்திருந்த அந்த நகரத்துக் கடைத்தெருக்களில் உலகப் பொருள் எல்லாம் விலைக்கு வந்து மலிந்திருந்தன. வாணிகர் நடுநிலை தவறாமல் "கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது" வாணிகம் செய்துவந்தது தமிழர் பெருமைக்கு மணிவிளக்காக ஒளிர்கின்றது. தமிழ்மக்கள் எந்நிலையில் நின்றாலும் எத்தொழிலைச் செய்தாலும் அறம் என்னும் வேலியிட்டு மானம் என்னும் கொடி ஏற்றிவைத்தே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

கரிகாலனுடைய வீரப் பெருஞ் செயல்களையும் இப் பாட்டில் அறிகின்றோம். பொருநராற்றுப்படையில் முடிவில் காணும் காவிரிப் பெருக்கையே இப்பாட்டின் தொடக்கத்தில் காண்கின்றோம். இந்த இரண்டு பாட்டிலும் காவிரியாறு சிறப்பிடம் பெற்றதுபோலவே, கரிகால் வளவனும் தலைமைபெற்று விளங்குகின்றான்.

பத்துப் பாட்டில் மற்றும் இரண்டு அகப்பாட்டுக்கள் உள்ளன. அவை முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு என்பவை. இவற்றில் பாட்டுடைத் தலைவர் எவரும் இல்லை. எந்த நகரத்தையும் சிறப்பிக்கும் நோக்கமும் இல்லை. அகப்பொருள் ஒன்றே நோக்கமாகக் கொண்டு பாடப்பட்டவை இவை. ஆகையால் அந்த அந்தத் திணை பற்றியே குறிக்கப்பட்டுப் பாட்டு என்னும் பெயரா

லேயே வழங்கப்பட்டன. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு என்னும் இரண்டன தனிச்சிறப்பு இதுவே யாகும்.

முல்லைப்பாட்டே பத்துப்பாட்டுள் அடிவரையறை யால் சிறியது; 103 அடிகளை உடையது. போர்க் கடமையை மேற்கொண்டு தலைவன் பிரிந்தான். அப் போது ஆற்றியிருத்தல் தலைவியின் கடமை. ஆகையால் ஒருவாறு ஆற்றியிருந்தாள். தலைவன் மீண்டு வருவ தாகக் குறித்த காலம் நெருங்குவதாயிற்று. கார்காலம் தொடங்கிவிட்டது. இன்னும் தலைவன் வரவில்லையே என்று தலைவியின் நெஞ்சம் கலங்குவதாயிற்று. அவ ளுடைய துயரத்தை அறிந்த பெருமுது பெண்டிர் அவளை ஆற்றுவிக்கும் முயற்சியில் முனைந்தார்கள். நெல்லும் மலரும் தூவி வழிபட்டு வாய்ப்புள் கேட்டு நின்றார்கள். ஒரு வீட்டில் ஒரு நல்ல குரல் கேட்டது. தாய்ப் பசுக்களைக் காணமல் அலமரும் கன்றுகளை நோக்கி ஒருத்தி, "வருந்த வேண்டா. உங்கள் தாய்மார்கள் விரைந்து வந்திடு வார்கள்; இப்போதே வந்திடுவார்கள்," என்று சொல்லிக் கொண்டிருந்தாள். இந்தக் குரலைக் கேட்ட முதுபெண் டிர் திரும்பிவந்து தலைவிக்கு இதைப் பற்றிச் சொல்லி ஆற்றுவிக்கத் தொடங்கினர்கள். ஆயினும், தலைவியின் கலக்கம் தீரவில்லை. துயரால் வருந்தி நெட்டுயிர்த்துக் கலங்கினள். இந்த நிலையில் தலைவனுடைய தேரோசை யும் கேட்டது. தலைவன் வந்துவிட்டான். இதுவே இங்கே விளக்கப்படும் முல்லைத்திணைப் பொருளாகும்.

தலைவன் மேற்கொண்ட வினை போர்வினை; ஆகை யால் அவன் தங்கியிருந்த பாசறையும் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் பல அடிகளால் விளக்கப்படுகின்றன. தலைவன் சிறந்த வீரன் என்பதும், தலைமைக்கு ஏற்ற வாறு அருளும் அன்பும் நிறைந்தவன் என்பதும் விளக் கப் படுகின்றன.

மிகச்சில அடிகளிலே கார்கால வருணனை அழகுற அமைந்துள்ளது. பாட்டு, கார்கால வரவையும் தலைவன் வருகையையும் ஒருங்கே புலப்படுத்தி முடிகின்றது.

செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வயங்குகதிர் வரகின்
திரிமருப்பு இரலையொடு மடமான் உகள
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக்கு ஒழிய
(முல்லைப். 93-101)

இப்பகுதியில் கார்கால முல்லைநில வருணனை முற்றுப் பெறுகின்றது.

பாட்டு முடிவில் குறித்த காலம் வரையில் ஆற்றி யிருந்த தலைவியையும் சொல் திறம்பாக் கற்பு உடையவனாய்ப் பிரிந்தபோது சொல்லிச் சென்றபடியே கார் காலம் வந்தவுடனே மீண்டு வந்து துயர் தீர்த்த தலைவனையும் நெஞ்சம் வாழ்த்துகின்றது. ஆனால், தலைவியின் துயர் தீர்ந்ததா? தலைவன் மீண்டு வந்தானா? இரண்டனுக்கும் விடை பாட்டில் அமைந்த முறை வியக்கத் தக்கதாக உள்ளது.

நீடுநினைந் தேற்றியும் ஒடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழைநெகிழ்ந்து......

கிடந்தோள்

அஞ்செவி நிறைய ஆலின.........
வென்விளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.
(முல்லைப். 82-84, 88-80, 103)

தலைவி நினைந்து நினைந்து வருந்திக் கலங்கிப் பெருமூச்சு விட்டுக் கிடக்கின்றாள்; உடல் மெலிவால் நெகிழ்ந்து ஓடும் வளையல்களைத் திருத்தியபடியே கிடக்கின்றாள். அம்புபட்ட மயில்போல் நெஞ்சு நொந்து நடுங்கிக் கிடக்கின்றாள்; இவ்வளவே தலைவியைப் பற்றி நாம் அறியக் கிடப்பவை. இதுவோ முல்லைத்திணை; இதுவோ ஆற்றியிருக்கும் கற்பு; இங்கு ஒன்றும் இல்லையே என்று ஐயம் எழும். பாட்டைத் தொடர்ந்து படிக்கும்போது தலைவியின் செவி நிறையக் கேட்கும் ஒலி எழுகின்றது. தலைவியின் செவி கொண்டு அந்த ஒலியை உற்றுக் கேட்கின்றோம். அந்த ஒலியோ வெற்றி ஆரவாரம் மிக்க

ஒலி; ஊதுகொம்பும் சங்கும் கலந்து ஒலிக்கும் ஒலி; விரைந்து ஓடிவரும் தேரின் ஒலி; அந்தத் தேரில் பூட்டிய குதிரைகளின் ஒலி; எல்லாம் சேர்ந்து தலைவன் மீண்டும் வரும் வருகையின் ஒலி. இந்த ஒலியே துயர் உற்ற தலைவியின் செவியில் விழுகின்றது. பாட்டும் இதோடு முடிகின்றது. இவ்வளவு நுட்பமாக அமைந்த முல்லைத்திணைப்பாட்டு அகநானூறு முதலியவற்றிலும் இல்லை.

குறிஞ்சிப்பாட்டு வடநாட்டு அரசன் ஒருவனுக்குத் தமிழ்ச்சுவை ஊட்ட விரும்பிய கபிலர் ஆற்றிய தமிழ்த் தொண்டாகும். அகப்பொருளில் அறத்தொடு நிற்றல் என்னும் குறிஞ்சித்திணைப் பகுதி இதில் விளக்கப்படுகின்றது. குறிஞ்சித்திணைப் பாடல் பலவற்றைப் பாடிய கபிலர் 261 அடிகளால் நீளப் பாடிய பெரிய அகப்பாட்டு இதுவே.

தலைவனைக் கண்டு காதல் கொண்டாள் தலைவி. தலைவன் இரவில் வந்து எவரும் அறியாதவாறு கண்டு பேசிச் சென்றான். இந்தக் களவொழுக்கத்திற்கு இடையூறுகள் மிகுந்தன. தலைவியோ அந்த இடையூறுகளை நினைந்து நினைந்து நொந்தாள். தலைவன் வராத காலத்தில் வருந்தி வருந்தி மெலிந்தாள். அவள் இவ்வாறு மெலிவதற்கு நோய் காரணமா, தெய்வக் குற்றம் காரணமா என்று செவிலி கவலையுற்றாள். அந்நிலையில் தோழி செவிலியை நோக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாட்டு. "தாயே! எம்மேல் சினம் கொள்ளவேண்டா. உண்மையைச் சொல்லிவிடுகின்றேன். நிகழ்ந்ததைத உணர்ந்து அன்புகொண்டு காத்தல் வேண்டும்" என்ற வேண்டுகோளுடன் கூறத் தொடங்கினாள். தலைவியின் காதல் வாழ்வை நம்பும் வகையில் எடுத்துரைத்தாள். பிறகு அவன் வரும் வழியில் உள்ள இடையூறுகளைச் சொல்லி அவற்றை ஓயாமல் நினைந்து நினைந்து வருந்தி தலைவி மெலிந்துவிட்டதாக விளக்கினாள். தலைவியின் கண்ணீரும் வழித்துன்பமும் பாட்டில் முடிவில் கூறப்படுகின்றன.

ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண்
ஆகத்து அரிப்பனி உறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையின் நலம்செலச் சாஅய்
நினைந்தொறும் கலுழுமால் இவளே கங்குல்...
வழியின் வழாஅ விழுமம் அவர்
குழுமலை விடரகம் உடையவால் எனவே.

(குறிஞ்சிப். 218-251, 260-261)

இவ்வாறு தலைவியின் நல்வாழ்க்கைக்குத் தோழி அடிகோலக் காண்கின்றோம். தோழியின் அறிவின் ஆற்றலும் உரையாடலின் நயமும் பாட்டில் புலனாகின்றன. களவொழுக்கமாகிய அகப்பொருட் பகுதியில் தோழி இல்லையானால் ஒன்றும் இல்லை; தோழியின் திறனே குறிஞ்சித் திணையின் உயிர் எனலாம். இக் குறிஞ்சிப் பாட்டு விளக்குவதும் அதுவேயாகும்.

பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு என்னும் மூன்றும் அகப்பொருள் பாட்டுக்கள்.

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்.

(தொல். பொருள். 54)

என்னும் தொல்காப்பிய விதிக்கு ஏற்ப, அகப்பாட்டுக்களில் தலைவனுடைய இயற்பெயரோ, தலைவியின் இயற்பெயரோ அமைதல் ஆகாது. அகத்திணை உயர்ந்தோர் ஒழுக்கமாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது; ஆகையால் இன்னாருடைய வரலாறு என்று கற்பவர் ஒதுக்கிவிடாமல் அனைவரும் ஓதியுணருமாறு அனைவர்க்கும் உரிய பொதுப்பாட்டாக நிற்கவேண்டும்; இக்கருத்துக் கொண்டே முன்னோர் இயற்பெயர் கூறலாகாது என வரையறைப்படுத்தினார்கள். பத்துப்பாட்டுள் இம் மூன்று பாட்டிலும் தலைவன் தலைவி இயற்பெயர் இடம்பெறவில்லை.

ஆயின், அகப்பொருள் பற்றி மிகச் சிறந்த வகையில் பாடப்பெற்ற மற்றொரு பாட்டும் பத்துப்பாட்டில் உள்ளது. அதுவே நெடுநல்வாடை என்பது. இந்தப் பாட்டிலும் இயற்பெயர் அமையவில்லை. ஆயினும் ஒரு குறித்த குடும்பத்தின் ஒழுக்கம் என்று அறிதற்கு உரிய வகையில் ஒரு சொல் பெய்யப்பட்டுள்ளது. அது பற்றியே

இது அகப்பாட்டு அன்று என்று தள்ளப்பட்டுள்ளது. ஒழுக்கம் என்ற வகையில் ஒரு குலத்துக்கு உரிய வரலாற்றுப் பகுதி ஆகாமல, எல்லார்க்கும் ஒப்ப உரியதாகும் பொதுமை விளங்கவேண்டும் என்ற சான்றோர் கொள்கைக்கு மாறு ஆகையால், நெடுநல்வாடை அகப்பாட்டு அன்று என்று தெளிவாக்கப்படுகின்றது.

நெடுநல்வாடையில் வரும் தலைவனைப்பற்றிக் குறிப்பிடும் போது, அவன் கையில் உள்ள வேலை வேப்பமாலை சூடியிருப்பதாகப் புலவர் பாடியுள்ளார். வேப்பமாலை பாண்டியர் குடிக்கே சிறப்பாக உரியதாகும். ஆதனால் தலைவன் இன்னான் என்று அறியப்படுகின்றான். ஆகவே, பாட்டு ஒரு குடியின் செய்தி என வரலாறு போல் கொள்ளப்பட்டுப் புறப்பாட்டாகக் கருதப்படுகின்றது. வேம்பு என்ற ஒரு சொல் இல்லாதிருந்தால், இது எல்லாருக்கும் உரிய பொதுவான காதல் ஒழுக்கம் கூறும் அகப்பாட்டாகக் கொள்ளப்பட்டிருக்கும்.

பாட்டின் பெயரில் ஒரு சிறப்பு வாழ்கின்றது. மேற்கு நாட்டு ஷெல்லி முதலியவர்கள் பாடியவைபோல் மேல்காற்றைப் (Ode to the westwind) பற்றியும் பிற இயற்கைப் பொருள்களைப் பற்றியும் தமிழிலே பாட்டு இல்லை என்று சிலர் குறை கூறுவார்கள். இயற்கையைப் பாடிய பாட்டுக்கள் சங்க இலக்கியத்தில் மிகுதி. ஆனால் ஒரு வேறுபாடு உள்ளது. இயற்கையை இயற்கையழகின் காரணமாகவே பாடும் முறை தமிழில் இல்லை. இயற்கையழகை வாழ்க்கைப் போருக்குப் பயன்படுத்திப் பாடுவதே தமிழ் மரபு. ஷெல்லி பாடிய மேற்காற்றுப் பாட்டு முதலானவற்றிலும் வாழ்க்கைப் போர்க்களம் காண்கின்றோம். ஆனால் அங்குக் காணும் வாழ்க்கை புறவாழ்க்கையே. தமிழில் இயற்கைப் பாட்டுக்கள் பெரிதும் அக வாழ்க்கை, காதல் வாழ்க்கை காரணமாகவே பாடப்பட்டுள்ளன. நெடுங்காலம் நல்லரசும் நாகரிகமும் வளமும் அமைதியும் பெற்று வாழ்ந்து வந்த ஒரு மரபினர்க்குக் கலை என்பது பெரும்பாலும் அகவாழ்க்கையைப் பற்றி அமைவது இயல்பே. இந்த வேற்றுமையை உணர்ந்தால்தான் தமிழ்மக்களிடையே தமிழ்ச் சான்றோர் வழங்கிச் சென்ற இலக்கியத்தின் பெருமை, விளங்கும். 'முதல்

கரு உரி என்ற மூன்றும் நுவலுங்காலை முறை சிறந் தனவே" என்று தொல்காப்பியனார் அகத்திணையியலுள் கூறுவதன் கருத்தும் இங்கு ஆராயத் தக்கது. காதல் ஒழுக்கமாகிய உரிப்பொருளே பாட்டின் உயிர். இயற்கை யும் இயற்கையோடியைந்த வாழ்வுமாகிய முதற் பொரு ளும் கருப்பொருளும் பாட்டின் உடல். ஆகையால் பழந் தமிழ்ப் பாட்டுக்களில் இயற்கைக்கு முதலிடம் இல்லை; வாழ்க்கைக்கே முதலிடம் அமைந்துள்ளது; ஆயின், அவ்வாழ்க்கையை விளக்குவதற்கு இயற்கை பல் வேறு வகையாகத் துணைசெய்து அடுத்த இடம் பெறு கின்றது. வாழ்க்கை பாட்டின் உயிராக நிற்பினும், வாழ்க் கையும் இயற்கையும் பிணைந்து பிரிக்க முடியாமல் ஒன்றி நிற்றலும் காணலாம்.

இப் பாட்டு வாடைக்காற்றின் பெயரால் நிலவுகின் றது. அந்த வாடைக்காற்று, துயருறுகின்ற தலைவிக்கு நெடிதாய் நிற்க, தலைவன் மேற்கொண்ட போர்வினைக்கு நல்லதாய் உள்ளது. நெடுமையும் நன்மையும் வேறுவேறு வாழ்க்கைப் பகுதியினர் உணரும் பண்புகளாய்க் காண் கின்றோம். காற்றோ எவர்க்கும் பொதுவாக வீசுகின்றது. ஆனால் அதன் விளைவோ, இடத்திற்கு ஏற்றவாறு, உணர் வார் உணர்வுக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றது.

வாடைக்காற்று வானெல்லாம் பரவுகின்றது; மழை யைக் கொணர்கின்றது; காடுகளில் கோவலர்களையும் அவர்கள் மேய்க்கும் ஆடுமாடுகளையும் தாக்கிக் குளிரால் வருந்தச் செய்கின்றது; குரங்கும் குளிர் மிகுந்து வருந்து கின்றது; பறவைகள் குளிர் தாங்க முடியாமல் விழுகின் றன; ஈன்ற பசுக்கள் பால் கருதி வரும் கன்றுகளையும் வெறுக்கின்றன; காட்டைக் கடந்து நாட்டினுள் வாடைக் காற்று நுழைகின்றது; நகரத்துப் பெருந் தெருக்களில் நுழைந்து வீசுகின்றது. நகரப் பெருந் தெருக்களில் வீசும் காற்றைப் புலவர் நக்கீரனார் எவ்வாறு காட்ட முடியும்? மக்கள் எவரும் நடமாடாத நிலையைக் காட்டி, குடித்து உணர்விழந்து குளிரை உணராமல் சிறு தூறலை யும் பொருட்படுத்தாமல் திரியும் குடிகாரரைக் காட்டு கின்றார்; இந்தக் காட்சியால் வாடைக்காற்றை உணர்த்து கின்றார்.

வாடைக்காற்றைத் தெருக்களில் காட்டியபின் வீடுகளிலும் காணுமாறு செய்கின்றார். அந்தி வேளையில் மகளிர் விளக்கேற்றும் நேரத்தைப் பூக்கள் மலர்வதைக் கொண்டே அறிகின்றார்கள். பொழுது போயிற்று இல்லையா என்று அறிய முடியாதவாறு வானம் பகலெல்லாம் இருண்டு கிடக்கும் நிலையைப் புலவர் இவ்வாறு உணர்த்துகின்றார். அந்த வீடுகளில் வாழும் புறாக்களையும் நக்கீரனார் காட்டுகின்றார். வெளியே சென்று உணவு தேடமுடியாமல், பறந்து உடல்நோய் தீர்த்துக்கொள்ள முடியாமல், ஒரே இடத்தில் இருந்து காலை மாற்றி மாற்றி வைத்துக் காலத்தைக் கழிக்கின்றனவாம். வாடைக் காற்றின் விளைவைப் புறாக்களே அல்லாமல், பயனின்றிக் கிடக்கும் சந்தனக் கல் உணர்த்துகின்றது; எடுப்பாரின்றிச் சிலந்தி வலை பின்னக் கிடக்கும் விசிறி உணர்த்துகின்றது; நீர்வேட்கை இன்மையால் வாளா கிடக்கும் கூசாக்களும் அவற்றின் இடத்தைக் கவர்ந்த நெருப்புத் தடவுக்களும் உணர்த்துகின்றன.

இவ்வாறே வாடைக்காற்றைக் கண்டு சென்று இறுதியில் அரண்மனையில் அழகிய கட்டிலில் பஞ்சணை மேல் தலைவியைக் காண்கின்றோம். முதலும் கருவும் அமைந்த சூழலைக் கண்ட நாம் இங்குத்தான் உரிப்பொருளாகிய பிரிவாற்றாமையை உணர்கின்றோம். மகளிர் பலர் அடிவருடுகின்றார்கள்; செவிலியர் தலைவியைத் தேற்றும் பொருட்டுக் குறியவும் நெடியவும் சொல்லுகின்றார்கள்; இவை எல்லாம் பயனில்லாமல் போகின்றன. தலைவியின் துயரமோ தீரவில்லை கட்டிலின் மேற்கட்டியில் உள்ள மெழுகுத் துணியில் எழுதப்பட்டுள்ள நாள்கோள் நிலையை வானநூல் விளக்கத்தைக் காண்கின்றாள். தலைவன் வருகைக்கு உரிய நாளை நினைக்கின்றாள்; கலுழ்கின்றாள்; கண்ணீர் துளிக்கின்றது; விரல்நுனியால் அக்கண்ணீர்த் துளியை எடுத்துத் தெறிக்கின்றாள். இவ்வளவில் தலைவியின் நிலையும் அங்குச் சூழ்ந்துள்ள வாடைக் காற்றும் கூறும்பகுதி நிற்கின்றது.

அடுத்த காட்சி வாடைக்காற்று வீசும் பாசறையும் அங்குக் கடமையைச் செய்ய முனைந்துள்ள தலைவன் நிலையுமே ஆகும். அவன் நள்ளிரவிலும் உறக்கமில்லாமல், புண்பட்ட வீரரையும் யானை குதிரைகளையும் அன்

போடு பாராட்டித் தேற்ற முயல்கின்றான்; அதற்காக வெளியே புறப்பட்டுத் திரிகின்றான். வாடைக்காற்று அவனையும் விடவில்லை. அங்குள்ள பாசறை விளக்கை யும் விடவில்லை. விளக்கின் பெரிய சுடர் தெற்குப் பக்க மாகச் சாய்ந்து ஒளிவீசுகின்றது. தலைவனுடைய மேலாடை காற்றால் அலைய, அதனை அவனுடைய இடக்கை பிடித் துச் சேர்க்கின்றது. வலக்கை புண்பட்ட வீரன் ஒருவ னுடைய தோள்மேல் அமைந்து அவனுக்கு ஊக்கம் ஊட்டுகின்றது. தூறலும் காற்றும் கலந்து அரசனுடைய குடையைத் தாக்கித் 'தவ்' என்ற ஒலியை உண்டாக்கு கின்றன. இவற்றிற்கு இடையே உறக்கத்தையும் மறந்து தலைவன் மேற்கொண்ட கடமையில் முனைந்திருக்கின்றான்.

இந்த இருகாட்சிகளையும் இவற்றில் அமைந்துள்ள வாடைக்காற்றையும் காட்டும் புலவர் நக்கீரனார் பாட் டின் முழு அமைப்பை ஒரு வழிபாடாகச் செய்துள்ளார். தலைவியின் துயர் தீரவேண்டுமாயின் அடிவருடல் போதாது; குறியவும் நெடியவும் கூறுதலும் போதாது; பாசறையில் உள்ள தலைவன் அரண்மனைக்குத் திரும்ப வேண்டும்; அவனை அவ்வாறு திரும்பிவருமாறு செய் வதோ எவராலும் ஆவதாகத் தெரியவில்லை. அவன் கடமையில் முனைந்த வீரப்பெருமகன். ஆதலின் அந்தக் கடமை முடியவேண்டும் என்று, போரில் வெற்றிபெற்று விரைந்து திரும்பவேண்டும் என்று அரண்மனை மகளிர் கொற்றவையை வழிபடுகின்றார்கள்.

புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு
இன்னா அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிகதில் அம்ம......
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

(நெடுநல் 166-168, 186-188)

இந்த வழிபாடே நெடுநல்வாடையின் அமைப்பாகும்.

இந்தப் பத்துப்பாட்டுகளிலும் அங்கங்கே இயற்கை யின் எழிலைக் கண்டு களிக்கின்றோம். திருமுருகாற்றுப் படையில் கதிரவன கடலில் எழும் காலைக் காட்சியில் தொடங்கி, திருப்பரங்குன்றத்து மலைவளமும் சுனைவள

ழும் மலரழகும் கண்டு. இறுதியில் மலையிலிருந்து இழுமென இழிதரும் அருவியின் ஓசையைக் கேட்டு உள்ளங் குளிர்கின்றோம். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் நான்கு நிலப் பகுதிகளின் வளமும் அழகும் அங்கங்கே வாழும் மக்களின் வாழ்க்கை வகையும் பொருநராற்றுப் படையிலும் சிறுபாணாற்றுப் படையிலும் மதுரைக்காஞ்சியிலும் மலைபடுகடாத்திலும் பலவாறு விளக்கப்பட்டுள்ளன. முல்லைப்பாட்டில் கார்காலமும் நெடுநல்வாடையில் கூதிர்காலமும் விரிவாகப் பாடப் பட்டுள்ளன. பொருநராற்றுப் படையிலும் பட்டினப் பாலையிலும் காவிரியாற்றின் பெருக்கும் பெருமிதமும் காண்கின்றோம். மலைபடு கடாத்தில் சேயாற்றின் விறும் விளக்கமும் உள்ளன. குறிஞ்சிப்பாட்டில் மலைவருணனை அமைந்திருக்கின்றது. தொண்ணூற்றொன்பது வகையான மலர்களை இந்த ஒரு பாட்டில் காண்கின்றோம். மலைபடு கடாத்திலும் மலைவளம் எடுத்துரைக்கப்படுகின்றது. பலவேறு ஓசையும் கேட்டு, காண்பது மலை என்பதை மறந்து யானை என மயங்கிவிடுகின்றோம்; மலைபடுகடாம் என்ற பெயரை வியந்து வியந்து போற்றுகின்றோம்.

அழகிய உவமைகளை நூலெங்கும் காண்கின்றோம். வேறு எந்த நூலிலும் இல்லாத அவ்வளவு விளக்கமாக யாழின் சிறப்பும் அதன் உறுப்புக்களின் அமைப்பும் ஆற்றுப்படைப் பகுதிகளில் எடுத்துரைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டு மக்களின் பல்வேறு வகை வாழ்க்கையும் வேந்தர்களின் ஆட்சி முறையும் பல இடங்களில் விளக்கப்படுகின்றன. வாணிகப் பெருக்கும் கைத்தொழில் சிறப்பும் கூறப்படுகின்றன. அரண்மனையில் வாழ்ந்த அரச குடும்பத்து வாழ்க்கையை நெடுநல்வாடையில் அறிகின்றோம். போர்த்தொழில் மேற்கொண்டு அரசர் தங்கியிருந்த பாசறைகளைப் பற்றி முல்லைப் பாட்டிலும் நெடுநல்வாடையிலும் அறிகின்றோம்.

பத்துப்பாட்டைப் பொதுவாக நோக்கும்போது, இலக்கிய ஆராய்ச்சி செய்வார்க்கு மிகப் பயன்படும் கருவூலமாக உள்ளது. வரலாற்று ஆராய்ச்சியாளர்க்குப் பொய்யாச் சான்று பகரும் மெய்ம்மொழி பொதிந்ததாக

உள்ளது. மொழிவளம் ஆராய்வார்க்குத் தமிழின் தொன்மையும் நன்மையும் விளக்க வல்லதாக உள்ளது. கடுநடை என்றும், பழந்தமிழ் என்றும், நீண்ட செய்யுட்கள் என்றும் மயங்கி விலகுவார்க்குப் பத்துப்பாட்டு என்னும் இந்நூல் பயன்தராது. காலத்தால் நேர்ந்த கடுமையினிடையே கருத்துவளம் செறிந்துள்ளது. பழமையினிடையே தூய பண்பாடும் ஒளிர்கின்றது. நெடுமையினிடையே உவட்டாத இனிமையும் வாழ்கின்றது. ஆதலின், "நவில்தொறும் நூல்நயம்" என்னும் திருவள்ளுவர் வாய்மொழிக்கு இந்நூல் நல்ல எடுத்துக் காட்டாக நிலவுகின்றது.

—:—

௩. திருமுருகாற்றுப் படை

[சித்தாந்தகலாநிதி, ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

1. தோற்றுவாய்:—செந்தமிழ் நாட்டுப் பண்டைய இலக்கியங்களுள் சங்க இலக்கியங்கள் தலையாயவை. மிக்க தொன்மைவாய்ந்த தொல்காப்பியத்துக்கும் தொன்மை மிக்க பாட்டுக்கள் சங்க இலக்கியங்களுள் உண்டு என்பர். அவை எட்டுத்தொகை பத்துப்பாட்டு என இருதிறப் படும். அவற்றுள் பத்துப்பாட்டின் கண் முதற்கண் நின்று இனிய இலக்கியக்காட்சி வழங்குவது திருமுரு காற்றுப்படை.

முதற்கண் நிற்கும் திருமுருகாற்றுப் படையின் வேறாக, நான்கு ஆற்றுப்படைகள் இப்பத்துப் பாட்டினுள் உள்ளன. அவை பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப் படையா கிய மலைபடுகடாம் என்பனவாகும். திருமுருகாற்றுப் படை பெரும்பாணாற்றுப்படை யீறாக, நான்கனையும் முறையே நிறுத்தி, வேறு பாட்டுகள் ஐந்தனை இடையே நிறுத்தி இறுதியில் கூத்தராற்றுப் படையை வைத்துப் பத்துப்பாட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது. இத்தொகுதி யில் உள்ள பாட்டுப் பத்தனுள், செம்பாகம் ஆற்றுப்படை யாகவே இருப்பதும், தொடக்கத்தில் நான்கு ஆற்றுப் படைகளை நிறுத்தி, இறுதியிலும் ஆற்றுப்படையே நிற்கத் தொகுத்திருப்பதும் காணுமிடத்து ஆற்றுப் படைபத்து என்று பெயர் கூறுமாறு இஃது அமைந்து இருப்பது புலனாகும். சில உரைகாரர்கள், இப்பத்துப் பாட்டை, ஆற்றுப்படை யென்பதும் இதனால் பொருத்தமாதல் தெளியப்படும்.

2. ஆற்றுப்படை விளக்கம்:—ஆற்றுப்படை என்பது சங்கச் சான்றோர் பாடுதற்குக் கொண்ட பாட்டுவகை களுள் ஒன்று. ஆற்றுப்படையாவது ஆற்றின்கட் படுப் பது; ஆறு என்பதுவழி; படுப்பது செலுத்துவது. அஃதா வது, ஒருவர்க்குச் செல்லவேண்டும் வழிதுறைகளைச்

சொல்லித் தெரிவித்து அவற்றைப் பின்பற்றிச் செல்க எனச் செலுத்துவது என்பதாம். ஆகவே, செல்ல வேண்டும் குறிப்பு உடைய ஒருவனுக்குச் சென்று பயின்ற ஒருவன் செல்லுதற்குரிய நெறியைத் தெரிவித்துச் செலுத்துவது ஆற்றுப் படையின் கருத்தாம்.

இக் கருத்தே முடத்தாமக் கண்ணியாரது பொருநராற்றுப்படையிலும் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரது சிறு பாணாற்றுப்படையிலும், கடியலூர் உருத்திரங் கண்ணனாரது பெரும் பாணாற்றுப் படையிலும், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கோசிகனாரது கூத்தராற்றுப் படையிலும் அமைந்திருக்கிறது. ஏனைப் புறத்திலும் பதிற்றுப்பத்திலும் காணப்படும் ஆற்றுப் படைகளும் இக் கருத்தையே குறித்து நிற்கின்றன. இனி, ஆசிரியர் தொல்காப்பியனார்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

(தொல், புறத்: 36)

என்று ஆற்றுப் படையின் இயல்பைப் பொதுப்படக் கூறினர். பின்வந்த சான்றோர் புரவலன் ஒருவனிடம் சென்று பெரும்பொருள் பரிசிலாகப் பெற்ற பொருநர், பாணர், விறலியர், புலவர் முதலியோருள் ஒருவன் ஏனைப் பரிசிலருள் ஒவ்வொருதிறத்தார்க்குப் புரவலனுடைய நாடு, ஊர், பெயர், பரிசில் முதலியவற்றை எடுத்தோதி அவன்பாற்சென்று தாம்பெற்றவாறே பெறுக எனச் சொல்லி விடுப்பதென்றும், இவ்வாறு பாடும் பாட்டு ஆயிரம் அடிப் பெருமை உடையதென்றும் கூறினர்.

இவ்வாறு இயன்றுவரும் ஆற்றுப்படைகள் பலவும், பரிசில் பெற்ற ஒருவன் பெறாதான் ஒருவனுக்குத் தான் பெற்ற பெருவளத்தையும் அதனை நல்கிய தலைவன்பாற் செல்லுதற்குரிய வழிதுறைகளையும் எடுத்துச்சொல்லி அங்கே சென்று பெறுமாறு செலுத்துவது கருத்தாக

வேரோடு தொலைத்ததினால் உண்டான மறுவில்லாத வெற்றியால், என்றும் அழியாத புகழ்பெற்றுச் செவ்வேலேந்தும் இந்த முருகனுடைய செம்மை விளங்கும். திருவடியை நீ நினைந்து, செம்மல் உள்ளம் பெற்றனை; அவ்வுள்ளத்தால் நலம்புரி கொள்கையை மேற்கொண்டு பிறவிக்கேதுவாகிய புலன்கள் வழிச்செல்லாது முருகன் திருவடிக்கண் சென்று சேரும் அருள் நெறியில் செல்லும் செலவையே நீ விரும்புகின்றாய்; அதனால் நன்னெறித்தாகிய நின்நெஞ்சின்கண் நேயமாகிய இனிய ஞானவேட்கை நன்கு கைகூடக், கருதிய பேற்றைக் கருதியவாறே இப்போதே பெறுவாய்'' என்று சிவன் முத்தராகிய சான்றோர் முருகனது திருவடிஞானம் விழைந்துவந்த சான்றோர்க்கு உரைக்கின்றார்.

கேட்ட சான்றோர் தமது உள்ளத்தே, "முருகப்பெருமான் எங்கும் எல்லாமாய் இருக்கும் பரம்பொருளாதலால், எங்கே சென்று எப்படிக் காண்பது!'' என எண்ணமிடுகின்றார். அதனை யவர் முகக்குறிப்பால் உணர்ந்துகொள்ளும் சிவன்முத்தர்,—

கூடல் நகர்க்கு மேற்கிலுள்ளதும், ஞாயிறு தோன்றிய காலைப்போதில், வண்டினம் போந்து ஒலிக்கும் மலர் நிறைந்த சுனையையுடையது மான பரங்குன்றத்தில் நெஞ்சமர்ந்து உறைவன்; அதுவேயன்றி, உலகத்து நன்மக்களது புகழால் உயர்ந்த திருச்சீரலைவாய்க்கு விசும்பாறாகச் செல்வதும் அவனுக்கு நிலைத்த பண்பாகும். தேவரும் முனிவரும் பிறரும் வந்து தன்னைக் காணும்படியாகத் திருவாவினன்குடியில் மடந்தையுடன் சின்னாட்கள் இருப்பன்; அதுவேயன்றி இருபிறப்பாளர் தனக்குரிய ஆறெழுத்து மறையை ஓதி மலரிட்டு வழிபட அதனைப் பெரிதும் உவந்து திருவேரகத்தில் எழுந்தருளியிருத்தற்கும் உரியன். அதுவேயன்றிக் குறமகளிராடும் குரவைக் கூத்துக்கு முதற்கை கொடுத்து அவரோடு குன்றுதோறும் விளையாடுவதும் அவன்பால் நிலைபெற்ற பண்பு; அதுவேயுமன்றி, ஊர்தோறும் மக்கள் செய்யும் திரு விழாக்களிலும், தன்

பால் அன்புடையார் எத்துதற்கு அமைத்த இடங்களி லும், வேலேந்தி வேலன் வெறியாடும் இடங்களிலும், காடுகளிலும் காக்களிலும் அழகிய ஆற்றிடைத் தீவுகளி லும் குளங்களிலும் வேறுபல அழகிய இடங்களிலும், சதுக்கம், சந்தி முதலியவற்றிலும், புதுப்பூ மலரும் கடம்பு மரங்களிலும், மன்றங்களிலும், பொதியில்களிலும், கந்து நிற்கும் கந்துடை நிலைகளிலும், வேறுபிற இடங்களிலும் ஆங்காங்குத் தன்னை வேண்டுவோர் வேண்டியவாறு வழி பட எழுந்தருளுவன்" என்று கூறுகின்றார்.

அது கேட்டு மகிழ்ச்சியால் முகமலர்கின்றார் சான் றோர். அவரைச் சிவன் முத்தர் நோக்கி, ஆங்காங்கு அவன் எழுந்தருளக் கண்டதும், அவனது தெய்வ வடிவு நோக்கி அஞ்சாமல் அன்புடன் முகனமர்ந்து துதித்துக் கை கூப்பித் தொழுது அவன் திருவடியில் தலை பொருந்த விழ்ந்து வணங்கி, 'செல்வ, ஆல் கெழு கடவுள் புதல்வ, மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே, கொற்றவை சிறுவ, பழையோள் குழவி, தானைத் தலைவ, மாலை மார்ப, புலவ, ஒருவ, மள்ள, அந்தணர் வெறுக்கை, சொன்மலை, மங்கை யர் கணவ, பெருஞ் செல்வ, குறிஞ்சிக் கிழவ, புலவர் ஏறே, பெரும்பெயர் முருக, இசை பேராள, பொலம்பூண் சேய், நெடுவேள், பெரும்பெயர் இயவுள், மதவலி, பொருந, குரிசில்' என்று இவ்வாறு யான் கூறும் அளவில் அமை யாது மேலும் பல சொல்லி, 'நின்பெருமை அளந்தறிதல் மன்னுயிர்க்கரிது; நின் திருவடிபெற வேண்டி வந்தேன். நின்னோடு ஒப்பார் பிறர் இல்லாத மெய்ஞ்ஞானமுடைய வனே,' என மொழிந்து, 'உன் மனத்திற் கருதும் கருத் தைப் புலப்படுத்துவாயாயின், அங்கே பல வேறு உரு. வுடன் குறியராகிய பல கூளியர் நின் கருத்தை உணர்ந்து கொண்டு விழா அயரும் களத்தின்கண் எழுந்தருளும் முருகன் திரு முன்னே வணங்கி நின்று, 'பெரும, மிக்க வாய்மையுடைய புலவன் ஒருவன் நின் திருவருளை இரந்து இனியவும் கேட்போர்க்கு நலம் பயப்பனவுமாகிய நின் புகழை விரும்பிப் பல சொற்களால் வாழ்த்திக்கொண்டு

வந்துள்ளான்,' என்று தெரிவிப்பர். உடனே முருகன் தெய்வத்தன்மையோடு கூடிய வன்மை பொருந்திய தன் வடிவின் வானளாவி நிற்கும் பெருமையொடு எழுந்தருளிக் "கண்டார்க்கு அச்சம் பயக்கும் தன் உயர் நிலையைத் தன்னுள் அடக்கிக்கொண்டு பண்டு தான் கொண்டிருந்த தெய்வமணங்கமழும் இளமைக்கோலத்தைக் காட்டி, "வீடு பேற்றுக்குரிய ஞானம் வேண்டி வந்த நின் வரவினை அறிவேன்; அஞ்சற்க," என்று அன்பு பொருந்திய நன் மொழிகளை யருளிச்செய்து, கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்து வாழ்வோருள் நீ ஒருவனே வீடுபெறத்தக்கவன் என்று பலரும் விளங்கத் தெரியுமாறு விழுமியவற்றிற்கெல்லாம் விழுமியதும் பிறர் பெறுதற்கரியதுமாகிய திருவருள் ஞானத்தை, மலை கிழவோனாகிய அவன் நல்குவன்," என்று கூறுகின்றார்.

5. பரிசில் விளக்கம் :—இங்கே கூறிய இப்பொருளைத் தன்னகத்தே கொண்ட இத்திருமுருகாற்றுப் படையில் திருவருள் ஞானம் "விழுமிய பெறலரும் பரிசில் (294, 5) எனப்படுகிறது. நச்சினார்க்கினியர் அதனைக் கந்தழி என்று கூறி "கந்தழியைப் பெற்றானொருவன் அதனைப் பெறாதான் ஒருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப் படுத்துக் கூறுவான்," என்றும் "கந்தழியாவது ஒருபற்று மற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்," என்றும் "இதனை 'உற்ற ஆக்கையின் உறு பொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல் பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்,' என அதனை யுணர்ந்தோர் கூறியவாற்றானுணர்க," என்றும் கூறினர். கந்து பற்றுக் கோடு எனப் பொருபடுவதாகலின், கந்தழியாவது சார்பி னால் தோன்றாது, சார்பிறந்து நிற்கும் தூயபரம் பொருள் என்பதாகக் கொண்டார். பரம்பொருளை நல்கப் பெறுவ தென்பது, அதற்குரிய ஞானத்தைப் பெறுவ தாம். பரம்பொருளை எய்தினோர் மீள உலகிற்கு வாராராத லால், நல்குதற்கும் பெறுவதற்கும் உரியது பரஞானமே யாம் எனத் தெளிதல் வேண்டும். "பரஞானத்தால்

பாதத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர், பதார்த் தங்கள் பாரார்'' (சிவ. சித்தி) எனப் பிற்காலத் தான்ருேர் இதனை விளங்கக் கூறியிருப்பது காணலாம்.

6. முருகனுடைய திருப்பதிகள்:—இனி, இத்திருமுருகாற்றுப் படையில் அடங்கியுள்ள பொருளைக் காணுமிடத்து, முதற்கண் முருகனுடைய உருநலம், செயல் நலம் கூறுவதும், பின்னர் அவன் எழுந்தருளும் பரங்குன்றம் முதலாக வரும் இடங்களைக் கூறுவதும், பின்பு இறுதியாக முருகனை வழிபடுந்திறம் கூறுவதும் அவ்வழிபாட்டை யேற்று அவன் எழுந்தருளிக் காட்சி வழங்கியருளுவது கூறுவதும் காணப்படும். முருகப்பெருமானுடைய உருநலன் செயல்நலன் ஆகியவற்றை முருகாற்றுப் படையின் கருப்பொருட் பகுதியில் கண்டோம். இனி, அவன் எழுந்தருளும் இடங்களைக் காணலாம்.

(க) பரங்குன்றம்:—மதுரைமாநகர்க்கு மேற்கில் உள்ளது; மதுரைமாநகரின் வாயிலில் போர்குறித்து நெடுங்கொடி நிறுவப்பட்டிருக்கிறது; கொடியில் சிறியதொரு பாவையும் பந்தும் தொங்கவிடப்பட்டுள்ளன. நகர வாயில் பகையச்சமின்றித் திறந்தே கிடக்கிறது. பொருதற்குக் கருதும் பகைவரும் இல்லையாயினர். வாயிலைக் கடந்து சென்ருல் திருவிற்றிருக்கும் கடைத்தெரு உளது: அதற்கப்பால் இருமருங்கும் மாடங்கள் நிற்கும் நெடுந்தெரு நிலவுகிறது.

இத்தகைய சிறப்புடன் திகழும் மதுரைமாநகரின் மேற்கில் வளவிய சேறு பரந்த நெல் வயல்கள் காட்சி நல்குகின்றன. அகன்ற அவ்வயல்களிடையே தாமரை மலர்ந்து விளங்குகின்றது. அவற்றிற் படிந்து வண்டுகள் தேனுண்ணும்; இந்நிலையில் பகற்பொழுது மறைதலால் தாமரை குவிந்துவிடும்; அப்போது தேனுண்டு கிடக்கும் வண்டு அம்மலரிடத்தே உறங்குகிறது. விடியலில் அவ்வண்டு வெளிவரும். அப்போது நெய்தல் புதுப்பூமலர, அதனுள் அவ்வண்டு படிந்து தாதளைந்து தேனுண்ணும்; இதற்குள்

ஞாயிறு எழுந்துவிடும். உடனே அவ்வண்டு பரங்குன்றத் துக்குச் சென்று அங்குள்ள சுனையில் மலர்ந்திருக்கும் நீலமலர்களின் தேனையுண்டு சூழ்வந்து பாடும். இத்துணை இயற்கை நலம் சிறந்த பரங்குன்றத்தில் முருகன் விரும்பி உறைகின்றான்.

(உ) திருப்பரங்குன்றத்தில் அமர்ந்துறையும் முருகப் பெருமான், திருச்சீரலைவாய்க்கு யானையேறிச் செல்வன். அந்த யானை நெற்றியிலே பட்டமும், பக்கத்தில் மாறி யொலிக்கும் மணியும் கட்டப்பெற்றது; கூற்றத்தையொக் கும் வன்மையும் காற்றை யொத்த கடுநடையும் உடையது.

இதன்மேல் காட்சியளிக்கும் முருகனுடைய சென்னி யில் பலவகை ஒளிமிக்க மணிகள் இழைத்த முடியிருந்து அழகு செய்யும். அவன் காதுகளில் அணிந்துள்ள மகரக் குழைகள், முகம் முழுத் திங்கள்போல இருத்தலால், முழுமதியைச் சூழ்ந்து திகழும் விண்மீன்கள்போல விளங்குகின்றன. தத்தம் கொள்கையில் தப்பாது, மேற் கொண்ட தொழிலைச் செய்து முடிக்கும் திறலுடையவர் சிந்தையின்கண் அவனுடைய திருமுகம் ஒளிவிளங்கித் தோன்றும். முகம் எனப் பொதுப்படக் கூறினும், அம் முகம் ஆறெனக் கொள்ளல்வேண்டும்.

திருமுகங்கள் ஆறனுள், ஒருமுகம், புறவிருளிலே அழுந்திக் கிடக்கும் உலகம் குற்றமின்றி விளங்குமாறு பல வேறு ஒளிக்கதிர்களைப் பரப்பி ஞாயிறுபோல ஒளிசெய்யும்; ஒருமுகம், தன்பால் அன்புசெய்யும் அடியவர்கள், தன்னை வழிபட அவ்வழிபாட்டை மகிழ்ந்தேற்று அவர்கள் விருப் பத்துக்கேற்ப இனிதொழுகி, அவர் வேண்டும் வரங்களை அன்புடன் நல்குகின்றது. ஒருமுகம் மறைகளில் விதித்த முறையில் தவறாமல் அந்தணர்கள் செய்யும் வேள்வி குறித்து அதற்குத் தீங்கு வாராதபடி பாதுகாக்கின்றது. ஒருமுகம், நூலறிவாலும் இயற்கையறிவாலும் உணரப் படாத உண்மைப்பொருளை, இருள் நீங்கத் தண்ணிய நிலவினைப் பொழிந்து விளக்கும் கலை நிறைந்த திங்களைப் போல், அறியாமை நீங்கத் தண்ணிய அருளொளியைச்

செய்து உண்மை ஞானத்தைத் தலைப்படுவிக்கின்றது. ஒரு முகம், அன்பராயினருடைய பகைவரை வலியழித்து அவர் செய்யக் கருதும் போரைக் கெடுத்து அதுவே வாயிலாகக் கறுவு கொண்ட நெஞ்சத்தால் அவர் செய்யும் களவேள்வியை நிகழச் செய்கின்றது. ஒருமுகம், குறவருடைய இளமைநலங் கனிந்த மகளும், கொடிபோன்ற இடையையுடையவளுமாகிய வள்ளியுடன் மகிழ்ச்சி கொண்டாடுகின்றது.

இங்ஙனம் விளங்கும் முகங்கள் ஆறுக்கும் ஏற்ப, அவனுடைய கைகள் பன்னிரண்டும் முறையே பணி புரிகின்றன. அகன்றுயர்ந்த அவனது மார்பின்கண் சிவந்த வரிகள் கிடந்து சிறப்புச் செய்கின்றன. வெற்றியாலும் கொடையாலும் வீறு மிக்குப் புகழால் அவனுடைய தோள்கள் உயர்ந்திருக்கின்றன. புறவிருளை நீக்கும் திருமுகத்திற்கேற்ப, ஒருகை ஞாயிற்றொளியின் மிகுதியைத் தாங்கி விண்ணிடத்தே ஞாயிற்றொடு திரியும் முனிவர்களைத் தாங்கிச் செல்ல, ஒருகை, இடையிலே ஊன்றியிருக்கும்; யானைமேல் தோன்றி வரங் கொடுக்க வரும் திருமுகத்திற்கேற்ப ஒருகை அங்குசம் ஏந்த, ஒருகை, துடையின்மேல் கிடக்கும். அந்தணர் வேள்வி காக்கும் திருமுகத்துக்கியைய ஒருகை கேடகத்தை யேந்த, ஒருகை வேலைச் சுழற்றிக்கொண்டிருக்கும். உண்மை ஞானமுணர்த்தும் திருமுகத்துக்கொப்ப ஒருகை மார்பின்கண் ஞானக்குறிப்பொடு விளங்க, ஒருகை அம்மார்பின் மாலையோடே அழகாகத் தவழ்ந்து கிடக்கும்; களவேள்வி காணும் திருமுகத்துக்கேற்ப, ஒருகை தான் அணிந்த கொடியுடனே மேலே சுழன்று கொண்டிருக்க, ஒருகை மணிகள் மாறி மாறி யொலிக்கச் செய்யும்; வள்ளியொடு நகைமகிழும் திருமுகத்துக்கமைய ஒருகை நீல முகிலை மழை பெய்விக்கும்; ஒருகை வானர மகளிர்க்கு மணமாலை சூட்டி மகிழ்வுறுத்தும்.

பன்னிரண்டு கைகளும் இவ்வாறு முறையே பணி செய்ய, வானத்தே துந்துபி முழங்க, கொம்பு என்னும்

இசைக்கருவி ஒருபால் இசைக்க, ஒருபால் சங்கு ஒலிக்க, இடிபோல் முழங்கும் முரசமும், கொடிமிசை யெழுதிய மயிலும் ஒலிக்க வானமே வழியாக, உலகத்து நன்மக்கள் புகழும் சிறப்பமைந்த திருச்சீரலைவாய்க்கு முருகப்பெருமான் விரைந்து செல்வன்.

(ங) அலைவாய்க்கு யானைமேற் செல்லும் முருகப் பெருமான் திருவாவிநன்குடியில் சின்னாள் தங்கியிருப்பன். அப்போது பலவேறு முனிவர்களும் விரதிகளும் தாபதர்களும் முன்னேவர யாழ்வன்மையும் மென்மொழியும் உடைய இசைவாணர் நரப்புக் கருவிகளை இசைத்துவர, உடல்நலமும் மேனிநலமும் கற்புநலமும் உடைய நன் மகளிர் உடன் போந்து விளங்க, திருமாலும், உமையமர்ந்து விளங்கும் திருமேனியையுடைய சிவபெருமானும், வெள்ளையானை யேறும் இந்திரனும், முருகனால் ஒறுக்கப்பட்ட பிரமன் பொருட்டு வந்து காண, ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், மருத்துக்கள் என நால்வகையராகிய முப்பத்துமூவரும், பதினெண் கணங்களும் தாம் உறுகுறை தீர்ந்து முறை பெறல் வேண்டி விண்மீன் போன்ற தோற்றமும் காற்றொத்த செலவும், இடிபோன்ற குரலும் உடையவராய் வான் வழியாக வந்து வழிபாடு செய்வர். அக்காலை முருகப்பெருமான் மடந்தையோடு திருவோலக்கமிருந்து அவர்கட்குத் தன் திருவருளை வழங்குவன்.

ஆவிநன்குடி யென்பது இப்போது பழனியென வழங்கும் ஊர்; இது சங்ககாலத்தில் பொதினியென்ற பெயருடன் ஆவியென்னும் வேளிர் தலைவனுக்கு உரியதாயிருந்தது. இதன் அருகில் ஆய்க்குடியென இருக்கும் ஊர் ஆவிகுடியென்பதன் மரூஉ வழக்கு. இப்பகுதியைக் கல்வெட்டுக்கள் வையாவி நாடு என்றே குறிக்கின்றன. ஆவிகுடியினும் இப்பொதினிப் பகுதி நன்செய் வளம் சிறந்திருந்ததுபற்றி இது ஆவிநன்குடியென வழங்கிற்று. இவ்வரலாறு விளங்காத காலத்தில் பொதினி பழனியாயிற்று; திருவாவிநன்குடி திரு, ஆ, இனன், கு, டி

என்று பிரிக்கப்பட்டுத் திருமகளும், காமதேனுவும், ஞாயிறும், நிலமகளும், திக்கடவுளும் வழிபட்ட இடம் எனப் புராண வரலாறு பெறுவதாயிற்று.

(ச) திருவேரகம் என்னும் திருப்பதியில் அடியார் வழிபட முருகன் எழுந்தருளுவன். இந்த அடியார்கள், உயர்குடியில் தோன்றி நாற்பத்தெட்டாண்டுகள் பிரம சரியங் காத்து அறங்கூறும் கொள்கையும் நாடோறும் முத்தீயோம்பும் முறைமையும் உடைய இருபிறப்பாள ராகிய வேதியராவர். ஒவ்வொருநாளும் காலமறிந்து வேதமோதுவது இவர்களது தொழில்; மார்பிலே ஒன்பது புரிகொண்ட மூன்றாகிய பூணூல் அணிந்திருப்பர். இவர் கள் நாட்காலையில் நீராடி, ஈரவுடை தானே புலருமாறு அரையில் உடுத்து இருகைகளையும் தலைமேல் குவித்து முருகன் திருப்புகழை யேத்தி, அப்பெருமானுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தை நாப்பிறழு மளவும் பன்முறையும் ஓதி மணமிக்க புதுமலர்களை அவன் திருவடியில் இட்டு வழிபடுவர். அவ்வழிபாட்டை முருகன் பெரிதும் உவந் தேற்று அவ்வூரிலே எழுந்தருளி யிருப்பன்.

ஏரகம் என்பது தஞ்சை ஜில்லாவில் உள்ள சுவாமிமலை யென்று கூறுவர். இதற்கு அருணகிரிநாதரது திருப் புகழ் ஆதரவு தருகிறது. நச்சினார்க்கினியர் "மலைநாட் டகத்தொரு திருப்பதி" என்று எழுதுகின்றார். தென் கன்னடம் ஜில்லாவில் உடுப்பிப் பகுதியில் ஏரகம் என்ற பெயருடைய ஊர் ஒன்று உளது; இது மலைநாட்டது; இங்கே பழமையான முருகன் கோயில் இருந்திருக்கிறது. "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும், ஏரகமும் நீங்கா இறைவன்" என்ற சிலப்பதிகாரக் குன்றக் குரவை கூறும் இடங்களுள் வெண்குன்றைச் சுவாமிமலை யென அரும்பதவுரைகாரர் கூறியிருப்பது நினைவுகூரத் தக்கது. இதனால் ஏரகத்தைப்பற்றித் துணிபு கோடற்கு நன்கு ஆராய்ச்சி செய்யவேண்டியிருக்கிறது.

(ரு) முருகன் குறிஞ்சிநிலக் கடவுளாதலால், குன்று கள் எல்லாம் அவன் விளையாட்டயரும் இடங்களாகும். இக்

குன்றுகளில் வாழ்பவர் குறிஞ்சிநில மக்களான குறவர்களாவர். இக்குறவர்கள் முருகனை வழிபடுங்கால், இவர்களுள் வழிபாட்டுக்கென ஒருவன் இருப்பன். அவன் முருகனது வேற்படையைக் கையிலேந்தித் தன்னை இன்னான் எனத் தோற்றுவிக்கும் வகையில் இருப்பன்; அவனை அக்குறவர்கள் வேலன் என அழைப்பர். பச்சிலைக் கொடியில் சாதிக்காயும், தக்கோலக்காயும் இடையிடையே விரவ, காட்டுமல்லிகையும் வெண்கூதாளியுமாகிய பூக்களைக் கலந்து கண்ணி தொடுத்துச் சென்னியிற் சூடுவன்; மார்பின்கண் நறிய சந்தனம் பூசிக்கொள்வான். இவ்வேலன் முருகனை வழிபடுதற்கென ஓரிடங் கண்டு தூய்மை செய்து பச்சிலைப் பந்தரமைத்து கோழிக் கொடி நட்டுக் கோயிலமைப்பன். அவ்விடத்தே குறவர்கள் அனைவரும் வந்துகூடி மூங்கிற் குழாய்களில் பெய்து வைத்திருக்கும் தேன்பெய்து செய்யும் கட்டெளிவை உண்பர்; பின்பு இளையரும் முதியருமாகிய பலருங்கூடிக் குரவைக் கூத்தாடுவர். அக்காலையில் தொண்டகம் என்னும் சிறு பறை முழங்கும். அதன் தாளத்துக்கிசையவே கூத்தும் நடைபெறும்.

அவ்விடத்தே சில நல்லிளமகளிர் முருகனைச் சேவித்து நிற்பர். அவர் கூந்தலில் சுனைகளிற் பூத்த நீர்ப்பூக்களின் அரும்புகளைக் கொய்து அவற்றைக் கைவிரலால் அலர்த்தித் தொடுத்த கண்ணி சூட்டப்பெற்று இருக்கும். கண்ணிக்குப் பின்னே, வேறுபல மலர்ந்த பூக்களின் இதழ்களைப் பிரித்துத் தொடுத்த மாலை சுற்றப்படும். அவர்கள் இடையில் கஞ்சங்குல்லைப்பூவும் வேறுபிற பூங்கொத்துக்களும் பைந்தழைகளும் விரவித்தொடுத்த தழையுடை அணிந்திருப்பர். முடிமுதல் அடிகாறும் பன்னிறப் பூக்களும் பைந்தழையும் புனைந்து மென்மெல இயலும் அவரது இயல் மயிலின் சாயலைக்காட்டி மாண்புறுத்துகிறது. இந்நிலையில், யாழிசை போலும் இனிய மிடற்றோசையை யுடைய மகளிர் சிலர் சேவித்துப் பாடுவர்.

இம் மகளிரிடையே முருகன் தோன்றிக் குரவையாடும் மகளிர்க்குத் தலைக்கை தந்து அவர்களோடு குன்று

தோறும் விளையாடுவன். அவனுடைய பண்புகளுள் இதுவும் ஒன்றாகும். இவ்வாறு விளையாடுமிடத்து அவன் சிவந்த ஆடையணிந்து காதில் காம்பு சிவந்த அசோகந் தளிரைச் செருகிக்கொள்வன். இடையிற் கச்சையும் காலிற் கழலும் அணிந்துகொண்டு, வெட்சிப் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியைத் தலையிற் சூடுவன். ஒரு பால் குழலும் ஒருபால் கொம்பும், ஒருபால் குறிய பல இயங்களும் இசைக்க, யாட்டுக்கிடா பின்வரத் தான் மயில் மேலேறி கோழிக்கொடி உயரத்திற் பறக்க நெடியோனாய்க் காட்சி நல்குவன். அவன் தோளில் தொடிகிடந்து அழகு திகழும். இடையில் கட்டிய அரைக்கச்சையின் மேலே கிடந்து நிலத்தளவும் தொங்குமாறு மேலாடை தரித்துக் கொள்வன்.

(சு) குன்றுதோறும் விளையாடும் பண்புடையனாகிய முருகன் இழும் என்னும் ஓசை நிலவ வீழும் அருவியொடு சோலைகளிற் பழுத்திருக்கும் பழங்கள் கனிந்து வீழும் பழமுதிர் சோலைமலைக்கு உரிய தலைவனாவன். இவ்வருவிகள் மலையினின்று வீழுங்கால் பல வேறு ஆடைகளை விரித்துத் தொங்கவிட்டாற்போலத் தோன்றுகின்றன. அருவிநீர் அகிற்கட்டைகளைச் சுமந்துவருகிறது; வருங்கால் அயலி லுள்ள சந்தன மரங்கள் அலைப்புண்டு உருண்டு வீழ் கின்றன. பூச்சுமந்து நிற்கும் சிறு மூங்கில்கள் வேர் அரிப் புற்று வீழும்; வான் அளாவிநிற்கும் மலையுச்சியில் ஞாயிற்று வட்டம்போல் இருக்கும் தேனடை சிதைந்து வீழ, ஆசினிப் பலாப்பழங்கள் வீழ்ந்து பிளந்து, சுளைசுளையாகப் பிரிந்து அருவிநீரில் கலக்கின்றன; மலைமேல் நிற்கும் சுரபுன்னைப் பூக்கள் அருவியின் அதிர்ச்சியால் உதிர்கின்றன; நீர் வீழ்ச் சியில் புகைப்படலம்போல் எழுந்து பரவும் நீர்த்திவலை களின் குளிரால் கருங்குரங்குகளும் முசுக்கலைகளும் நடுங்கு கின்றன; பிடியானைகள் குளிரால் வேறிடத்துக்குச் சிதறி யோடுகின்றன; பெருங்களிறுகளின் மருப்பின்கண் உண் டாகும் முத்துக்கள்பல அருவிநீரில் கலக்கின்றன. மேலிருந்து வீழ்ந்து தலைகீழாய்க் கலங்குங்கால் நல்ல

பொன்னும் மணியும் மேல்வந்து அழகிய நிறத்தைச் செய்கின்றன. கரையில் நிற்கும் மலைவாழைகள் அருவியின் பெருக்கால் வேரொடு அரிக்கப்படுகின்றன; தென்னைகள் தாம் தாங்கும் இளநீர்கள் உதிருமாறு தாக்கப்படுகின்றன; மிளகுக் கொடிகள் கரியதுணரொடு அறுப்புண்டு மெலிய, அருகில் மேயும் மயில்களும் கானக்கோழிகளும் அஞ்சி நீங்குகின்றன; காட்டுப்பன்றிகளும் கரடிகளும் அஞ்சிக் கற்குகைகளில் ஒடுங்குகின்றன.

இம்முருகாற்றுப்படை பழமுதிர்சோலைமலை கிழவோன் என்றது கொண்டு, பழமுதிர்சோலையென ஒரு திருப்பதி முருகனுக்கு உரியதாகக் கூறுவதுண்டு. நச்சினார்க்கினியார் உரையால் அத்தகையதொரு திருப்பதி இருப்பதென அறிய இயலவில்லை; முருகாற்றுப்படையின் சொல்லமைப்பும் அதனை வற்புறுத்தவில்லை. ஆயினும், பழமுதிர்சோலையென ஒன்று தனியே கொண்டு, அதுவே மதுரைக்கண்மையில் அழகர்மலையென வழங்கும் பகுதியென்பவரும் உண்டு. அதனைத் திருமாலடியார்கள் "திருமாலிருஞ்சோலைமலை" யென்கின்றனர். அவர்கள் சோலைமலையென வழங்குவதும், முருகாற்றுப்படை பழமுதிர்சோலைமலையென வழங்குவதும் ஒத்திருப்பதுபற்றி இவ்வாறு கோடற்கு இடமுண்டாகிறது. இதுவும் நன்கு ஆராய்தற்குரியது.

(எ) இத்தகைய பொருள் நலஞ்சிறந்த அருவிகளோடு கூடிய மலைகட்குரியனை முருகன் குன்றுதோறும் விளையாடிக் காட்சி நல்குவதோடு, ஊர் தோறும் மக்கள் விழாச் செய்யும் இடங்களிலும், தன்பால் அன்புடையவர் தன்னை நினைந்து பரவும் இடங்களிலும், வேலன் வெறியாடுமிடங்களிலும், காடுகளிலும் பூங்காக்களிலும், அழகு பொலியும் ஆற்றிடைத் தீவுகளிலும், ஆறு குளங்களிலும், இவை போலும் வேறு இடங்களிலும், சதுக்கம், சந்தி, மன்றம், பொதியில் முதலிய இடங்களிலும், புதுப்பூ மலரும், கடப்பமரங்கள் நிற்கும் இடங்களிலும் கந்துடை மன்றங்

களினும் வேண்டுவோர் வேண்டியவாறு வழிபட, அவர்கள் வேண்டியவாறு ஆங்காங்கு எழுந்தருளுவன்.

7. வழிபாடுகள் :—முருகன் எழுந்தருளும் சிறந்த இடங்களைக் கூறியபோது, திருவாவினன் குடியில் முனிவர் முதல் பதினெண் கணங்கள் ஈறாகத் தேவர் பலரும் வழி படுந்திறமும், திருவேரகத்தில் வேதியர் வழிபடுமியல்பும் விளங்கக் காண்கின்றோம். இவ்வாறே, சூரர மகளிரும், குறமகளிரும் முருகனைப் பரவும் திறம் தொடக்கப்பகுதியி லும் இறுதிப் பகுதியிலும் குறிக்கப்படுகின்றன.

சூரர மகளிர் வானளாவ உயர்ந்த மலையிடங்களில் செழித்துவிளங்கும் சோலைகளில் விளவின் தளிர்களைக் கிள்ளி விளையாடுவர்; அப்போது ஒருவர்மேல் ஒருவர் எறிந்து, அது தம்பால் பட்டபொழுது மகிழ்ச்சி கூர்ந்து முருகனுடைய

> "கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
> வாழிய பெரிது,"

என்று எத்தி அவன் புகழைப் பாடியாடுவர். அவர்கள், தம்முடைய சிறிய அடிகளில் கிண்கிணி யணிந்திருப்பர்; கணைக்கால் நன்கு திரண்டிருக்கிறது; இடை வளைந்து நுண்ணிதாக இருக்கும்; தோள் பெருத்துளது; அவர்கள் உடுத்திருக்கும் ஆடை தம்பலப் பூச்சிபோல் இயல்பாகச் சிவந்த செந்நிறங் கொண்டுளது; அது செயற்கையாக நிறம் ஊட்டப்படுவதன்று; இடைக்கும் முழந்தாளுக்கும் இடைப்பகுதியாகிய அல்குலிடத்தே பல மணிகள் கோத்த மேகலை அணியப்பெற்றுள்ளது; அவர்கள்பால் தோன்றும் அழகு பிறர் ஒப்பனை செய்வதாற் பிறக்கும் செயற்கை யாகாது இயற்கையழகாகும்; அணிந்திருக்கும் இழைகள் சாம்பூநதம் என்னும் உயரிய பொன்னால் இயன்றவை. அவரது மேனியொளி நெடுந்தொலையில் சென்று விளங்கு கிறது. அவர்களுடைய கூந்தலொழுங்கு காணும் ஆய மகளிர் நன்று நன்று எனப் பாராட்டுகின்றனர். இணை யொப்பப் படிந்த கூந்தலில் வெட்சிப் பூவை வட்டமாகப்

புனைந்து இடையே குவளைப்பூவின் இதழ்களைக் கிள்ளி யிட்டுச் சிதேவிக்கோலம் ஒருபாலும் வலம்புரிக்கோலம் ஒருபாலும் செய்து கொள்கின்றனர். நெற்றியாகிய பிறையை விழுங்குதற்கு மகரமீன் ஒன்று வாயைத்திறந்து கொண்டு கிடப்பதுபோலத் தலைவகிரின் ஒழுங்கில் மகரமீன் கோலம் செய்கின்றனர். நெற்றியில் மணங்கமழும் திலகம் இடப்பெற்றிருக்கிறது. இவ்வாறு வேண்டுங் கோலமெல் லாம் குறைவறச் செய்யப்பெற்ற கொண்டையில் சென் பகப் பூவைச் செருகிப் பின்பு மருதம்பூவின் கொத்துக்களை அதற்குமேற் சூடுவர். நீரின்கீழ்ப் பச்சென்ற காம்பு பெற்று மேலே சிவந்து தோன்றும் நீர்ப்பூ வரும்புகளை மாலையாகத் தொடுத்து அதனைச் சுற்றி வளைத்துக்கட்டுவர். அசோகின் தளிர்களுள் இணையொத்த இரண்டைப் பூணார மணிந்த மார்பின்கண் தொங்கியசையுமாறு இரண்டு காதுகளிலும் செருகிக்கொள்வர். மார்பின்கண் சந்தனக் குழம்பை மருதிணர்போலும் தோற்றம் அமையப் பூசி அதன் ஈரம் புலர வேங்கைப்பூவின் நுண்ணிய தாதினைத் தூவுவர். இது சூரரமகளிரின் ஒப்பனை.

குறமகளிர் முருகனை வழிபடக் கருதியதும் வழிபாட் டுக்கென ஓரிடம் கண்டு நன்கு தூய்மை செய்வர். அங்கே கோழிக்கொடியை நிறுவி, அதனை நெய்யும் வெண்கடுகும் கலந்து பூசி அதற்குரிய மறைமொழியை மந்தமாக வாய்க் குள்ளே ஓதுவர். பின்பு, அதனெதிரே வணங்கி நின்று தூய பூக்களைத் தூவுவர்.

உள்ளே ஓர் ஆடையை யுடுத்து அதன் நிறத்துக்கு மாறுபட்ட நிறமுடைய வேறோராடையை மேலே உடுத்திக் கொண்டு கையில் சிவந்தநூலாற் காப்புக் கட்டிக்கொள் வர். காப்புமுடிந்ததும், வெள்ளிய பொரிகளைச் சொரிந்து, கிடாயினது குருதி கலந்து பிசைந்த வெள்ளரிசிச் சோற் றைச் சிறு சிறு பிரப்புக் கூடைகளில் படைச்சலிட்டு வைப்பர். அதன்பின் சிறு மஞ்சளை அரைத்துச் சந்தனக் குழம்போடு கலந்து தெளிப்பர். இதனைக் கூந்தல் தெளித்தல் என்று இக்காலத்துக் குறவர் வழங்குகின்றனர்.

4

இனி, அக்கொடியில் செவ்வலரிப்பூவையும் வேறு பல நறிய பூக்களையும் தம்மில் ஒப்பத்தொடுத்து இணையொப்பத் தொங்குமாறு கட்டிவிடுவர்.

பின்பு குறமகள் முன்வந்து மலைப்பக்கத்தில் அமைந்த தம் ஊர்கள் பசியும் பிணியும் பகையுமின்றி வசியும் வளமும் சிறக்க என்று வாழ்த்தி நறும்புகை காட்டிக் குறிஞ்சிப் பண்ணிற் பல பாட்டுகளைப் பாடுவள். ஒருபால் அருவியொலிக்க, பலவகை இயங்களும் ஒலிக்கும். பாட்டு முடிந்ததும் சிவந்த பூக்களைத் தூவிக் குருதி கலந்த தினையரிசியைப் பரப்பி முருகன் விரும்பும் இயங்களை இயக்குவர். அப்போது அவ்வழிபாட்டின்கண் முரணிய கருத்துடையவர்களும கண்டால் முரண் நீங்கி வழிபடுவர்.

இவ்விடத்தேதான் வேலன் வெறியாடுவதும் செய்வன். வெறியாடுகளம எதிரொலிக்க அதற்கு ஏற்ற பாட்டுக்களைப் பாடிக் கொம்புகள் பலவற்றை வாய்வைத்து ஊதி, கொடிய ஓசையைச் செய்யும் மணியை ஒலிப்பிப்பர். இறுதியில் முருகன் ஏறிவரும யானையை வாழ்த்தித் தம் வேண்டுகோள் புலப்பட நின்று வழிபடுவர்.

திருவாவினன்குடியில் முருகனை வழிபடும் முனிவர்கள் இயல்பை இனிக் காணலாம். இம் முனிவர்கள் அரையில் மரவுரியை யுடுப்பர்; தலைமயிர் வலம்புரிச் சங்கின் நிறம்போல வெளுத்து நரைத்திருக்கும்; காலந்தோறும் நீராடும் இயல்பினராதலால் அவர் மேனி மிக்க தூய்மையாய் ஒளிவிட்டு விளங்கும். மார்பில் கிருட்டிணசினம் என்னும் மான்தோலை யணிந்திருப்பர்; விரதங்களால் பட்டினியிருந்து மேனி கரைந்திருத்தலின், அவர் உடல் எலும்பை நன்றாகக் கண்களால் எண்ணலாம்; பல நாட்கள் வரை உண்ணு நோன்பு மேற்கொண்டிருந்து சிறிதே உண்ணுவர். அவர் நெஞ்சில் எதனிடத்தும் மாறுபட்ட உணர்வோ எவ்வுயிர்மீதும் பகைமையோ இருப்பதுகிடையாது; எலலாம கற்ற பேரறிவினர்க்கும் தெரியாத பெருநுட்பமுணர்ந்த பேரறிவுடையவர். கற்றோர் எனப்படுவார்

எல்லோருக்கும் நல்லவராக இருக்கும் கல்விச் சால்பு மிக்கவர். அவர்பால் காமமும் கடுஞ்சினமும் கடுகளவும் இல்லை; ஒன்றை வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதவ ராதலால், எவ்வகைத் துன்பமும் அவர்கள் அறிந்திலர்; ஒருவரையும் வெறுத்து நோக்கும் இயல்பில்லாதவர் இம் முனிவர்கள்.

இவரிடையே முருகன் திருப்புகழைப் பாடும் இசை வாணர் உள்ளனர். அவர்கள் இடையில் புகைபோன்ற மெல்லிய ஆடையணிந்து, மார்பில் புதிது மலர்ந்த பூவால் தொடுக்கப்பட்ட மாலை அணிந்துகொள்ளுகின்றனர். நல்ல யாழ்ப் பயிற்சியும் அன்பு நிறைந்த நெஞ்சும் உடையர்; இவருடைய வாயில் மென்மையான மொழிகளே நிலவு கின்றன. இப்பெற்றியோர் நரம்பை இயக்கி இனிய இசையை இசைக்கின்றனர். இவர்களுடன் மிடற்றுப் பாடும் நன்மகளிர் உள்ளனர். அவர் நோயின்றியன்ற உடம்பும் மாந்தளிர்போலும் மேனியும் உடையர்; அம் மேனியில் பொன்னிறம் கொண்ட தேமல் பூத்துளது. இவர்கள் அல்குலிடத்தே பருமமென்னும் மேகலையணிவர். இவரது கற்பு மாசுமறுவற்றது.

திருவேரகத்தில் முருகனை வழிபடும் வேதியர் அறு தொழிலோர் என்ற இலக்கணத்திற் குறைவில்லாதவர்; தாய்தந்தையர் நற்குலத்தவர் என உலகினர் புகழும் பல் வேறு குடியினர். நாற்பத்தெட்டு யாண்டு பிரமசரியம் காப்பவர்; எப்பொழுதும் அறம் கூறும கொள்கை யுடையர்; மூன்றுவகையான தீயை வளர்ப்பதையே செல்வமாகக் கொண்டவர்; முப்புரிநூல் மூன்று கொண்ட பூணூல் விளங்கும் மார்பையுடையர்.

இவ்வண்ணம் முருகனை வழிபடுவோர் இயல்பை மிக நுட்பமாக அறிந்து கூறும் ஆசிரியர் நக்கீரர், மகளிர் நலங்கூறுமிடத்து அவரது கற்புமாண்பை "மாசில்கற்பு" என்றும "மறுவில்கற்பு" என்றும் எடுத்துக்காட்டி-

வற்புறுத்துவதும், அவர்கள் ஆடவரிடையிலும் முருகன் திருமுன்பும் இருக்கும் நிலையின் தூய்மைநலத்தை "மறுவின்றிவிளங்க" என்று சுருங்கக் காட்டி விளக்குவதும் நனித்தெண்ணி இன்புறத்தகுவன. மகளிர் நலம்புனைந்துரைத்த பண்டைச் சான்றோருள் இவர்போல மகளிரது யாக்கையமைப்பை வியந்து "நோயின்றியன்ற யாக்கையர்" என்றது போல மொழிந்தோர் பெரும்பாலும் சிலர் என்றே கூறலாம். மகளிரது யாக்கை நோயின்றியன்ற அமைதியுடையதாக வேண்டுமெனக் கருதிக்கூறும் இப் புலமையுரை பொன்போற் போற்றத்தக்கது. இனி, இம் முருகாற்றுப்படையினை இவ்வாறு வளமிகக் கூறும் ஆசிரியர், முருகனைக் கண்டு வழிபடுவோர் அவன் புகழ்களை யெடுத்தோதும் வகையைச் சிறிது விரித்துரைக்கின்றார்.

"நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ,
ஆல்கெழு கடவுள் புதல்வ, மால்வரை
மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே,
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ,
இழையணி சிறப்பின் பழையோள் குழவி,
வானோர் வணங்குவில் தானைத் தலைவ,
மாலை மார்ப, நூலறி புலவ,
செருவில் ஒருவ, பொருவிறல் மள்ள,
அந்தணர் வெறுக்கை, அறிந்தோர் சொன்மலை,
மங்கையர் கணவ, மைந்தர் ஏறே,
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ,
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ,
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே,
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக,
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள,
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்,
மண்டமர் கடந்தநின் வென்றடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்,
பெரியோ ரேத்தும் பெரும்பெயர் இயவுள்,
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி,
போர் மிகு பொருந, குரிசில்"

என்பது முருகனைப் பரவுவோர் சொல்லி யேத்துதற்குரிய புகழுரை.

" நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ "

என்றது நெடும்பெரும் சிமயமாகிய இமயத்தின்கண் இறைவன் தந்த கருப்பத்தினை இந்திரன் வாங்கி முனிவர்பால் தர, அவர்கள் அதனைத் தாங்கமாட்டாது தீயின்கட் பெய்து தம் மனைவியர்பால் தந்தாராக, அவருள் அறுவர் தலைக் கொரு குழவியாக நீலம் மலர்ந்த பசிய சுனையின்கண் பதுமப் பாயலில் பெற்றெடுப்ப அந்த ஆறும் சேர்ந்து ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமுடையனாய் அமர்ந்த செல்வனே என்பது. ஐவருள் ஒருவன் ஏற்ப அறுவர் சிமயத்துப் பைஞ்சுனைப் பயந்த ஆறமர் செல்வ என இயையும்.

ஆல் கெழுகடவுள் புதல்வ என்றது, கல்லாலின் கீழிருந்து முனிவர்க்கு அறமுரைத்த கடவுளாகிய சிவபரம் பொருட்கு மகன் என்பது. இழையணி சிறப்பின் பழை யோள் குழவி என்றது, இழையணிந்து விளங்கும் சிவ சத்தியாகிய பழையவளின் குழவி யென்றவாறு.

இறைவன் பங்கிலுறையும் உமைநங்கையை மலைமகள் என்றும் கொற்றவையென்றும் பழையோள் என்றும் மூவகையாகப் பிரித்துக் கூறுகின்றார். சிவசத்தியாய் இறை வனுக்குத் திருமேனியையும் எல்லாவுயிர்கட்கும் வேண்டிய உடல் கருவி கரணங்களையும் உலகுகளையும் உலகியற் பொருள் நுகர்ச்சிகளையும் தரும் முதலாய் அமைதலின் பழையோள் என்றும், வெற்றிக்கு வேண்டிய ஆற்றலே தன் வடிவாகக் கோடலின் கொற்றவையென்றும், உயிர்கள் ஆணும் பெண்ணுமாய்க் கூடி உலகியல் நடாத்தி உய்தி பெறுவித்தலின் மலைமகள் என்றும் கருதப்படுவது விளங்க இம்மூவகையினையும் எடுத்தோதினார்.

நுண்ணூற் பொருள்களைச் சான்றோர்க்கு ஐயமறத் தெளிவித்துரைக்கும் சிர்மிக்க ஆசிரியன் என்பது விளங்க நூலறி புலவன் என்றும், பலர் புகழும் நல்லுரையால் சமயப்புலவர் தொடுக்கும் வாதங்களைவென்று மேம்படும் உயர்வு தோன்ற, "பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே," என்றும் கூறுகின்றார்.

என்றுங் குன்றாத இளமையும், பெறற்கரிய வீடு பேறு நல்குதலும் தனக்கு உரிமையாக வுடைமைபற்றி "அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக" என்றார்.

பிறரால் இடுக்கண்பட்டு வருந்தி வருவோர்க்கு, நடுவு நின்று முறைவழங்கும் செம்மையுடைமை தோன்ற "அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்" என்றார். நெடுவேள் என்பதற்கேற்பத் தன்னையடைந்த பரிசிலர்க்கு வேண்டுவன பெருக நல்கித் தாங்குவது தோன்றப் "பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்" என்றார்.

எத்தகைய பெரியோர்க்கும் பெருமைக்குரிய செயலாற்றுதற் கேற்ற மனத்திட்பமும் வினைத்திட்பமும் இன்றியமையாதன; அவற்றிற்குரிய அவரது ஆற்றலை எழுப்பி இயக்கும் திருவருள் இயக்கத்துக்கு அவன் முதலாதல் தோன்றப் "பெரியோ ரேத்தும் பெரும்பெயர் இயவுள்" என்றார்.

உலகியல் நுகர்ச்சிக்கு இளமையும் வினைத்திட்பத்துக்கு இயக்கமும் பெறற்கு முதலாதலின் இரண்டையும் உணர்த்தும் முருகன், இயவுள் என்ற பெயர்களைப் பெரும் பெயரெனச் சிறப்பித்தார்.

எல்லையில் காலமாகப் பல்வகைப் பிறப்பும் பிறந்து பிறந்து அறிவு சிறந்துவரும் மன்னுயிரெல்லாம் தன்னுள் ஒடுங்கத் தான் அவற்றை ஒடுக்கி மேற்பட விரிந்து நிற்றலின், அவ்வுயிர்கட்கு அவன் பண்பெல்லாம் அறிதல் இயலாமையின், "நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமை" என்றும், அவ்வருமை யுணர்ந்து அவை செயற்பாலது அவன் அடியில் வணங்குவது அன்றி வேறில்லை

என்பார், "நின்னடி உள்ளி வந்தனன்" என்றும் கூறினர். ஞானசம்பந்தரும் "தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார்" என்பது காண்க. இதுபோது கோயில் களில் நடைபெறும் வழிபாடுகளில் இறைவனை அருச்சிப் போர் முடிவில், "நானுவித மந்திரபுஷ்பாணி சமர்ப்பியாமி" என்று சொல்லி முடிப்பது முறையாக இருக்கிறது. இங்கே முருகனை அருச்சிப்போர் "அருச்சனை" முடிவில் "நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின், நின்னடி உள்ளி வந்தனென் நின்னொடு, புரையுநர் இல்லாப் புலமை யோய்" என முடிப்பது அறிவு நெறிக்கு மிகவும் ஒத்திருப்பது நோக்கத் தக்கது. இத் திருமுருகாற்றுப் படை, முருகன் திருவடி ஞானம் பெறுதற்குத் துணையா கும் திருமுறையாவதையும், அவ்வாறு ஆகுமிடத்து இடையிடையே கூறும் முருகனுடைய அருளுருச் செயல் களையும் பிறவற்றையும் காணும் நாம் இயற்கைப் பொருள் கள் சிலவற்றின் அமைப்பியல்புகளையும் காண்கின்றோம்.

8. காந்தட்கண்ணி :—அடுக்கம் என்பது மலைப் பக்கத்தைக் குறிக்கும் சொல். மலைப்பக்கம் மண் படிந்து மரங்கள் வானளாவ உயர்ந்து வளர்தற்குரிய இடம். மரங்கள் செறிந்த சோலைகளும் அங்கே நிறைந்திருக்கும்; சூரரமகளிர் அச்சோலைகளில் விளையாடுவர். குரங்கேறுத மரமில்லையென்பது பழமொழி; அத்தகைய குரங்குகளும் ஏறியறியாத உயரமுடைய மரங்கள் அடுக்கங்களில் நிற்கின்றன. அங்கே காந்தள் மலர்ந்து தேன் நிறைந்து மணம் கமழ்ந்துகொண்டிருக்கின்றன. இக்காந்தட் பூவால் தொடுக்கப்படும் கண்ணி முருகன் திருமுடியில் பெருமை யும் தட்பமும் கொண்டு விளங்குகிறது.

9. கூதளங்கண்ணி :—(192) கூதளம் என்பது தாளி யைக் குறிக்கும் சொல். இது வெண் கூதாளி, செங் கூதாளியென இருவகைப்படும்; இவையே வெண்டாளி யென்றும் செந்தாளியென்றும் வழங்கும். முருகனது வேலேந்தி விளையாட்டயரும் வேலன், இதனால் தொடுக்கப் படும் கண்ணியணிகின்றான். பச்சிலைக்கொடியை நாராகக்

கொண்டு சாதிக்காய் தக்கோலம் என்ற இவற்றோடு காட்டு மல்லிகையை இடையிடையே விரவி இத் தாளிப் பூங்கண்ணி தொடுக்கப்படுகிறது. சாதிக்காய் நறுமணம் பெற்று விளங்குதலால் அதனை நறைக்காய் என்றும், தக்கோலத்தின் காய் புட்டில் போன்றிருத்தலின் புட்டில் என்றும் முருகாற்றுப்படை மொழிகின்றது.

உருள் பூந்தார் :—(11) செங்கடம்பின் பூவால் தொடுக்கப்படும் தார் உருள் பூந்தார் எனப்படுகிறது. கடம்பின் பூ தேருருள் போலும் வடிவினையுடைமைபற்றி உருள் பூ எனப்பட்டது. இப்பூ இவ்வாறு உருண்டு திரண்ட காட்சி பெறுதற்கு வாயிலாக, முகில் கடற்குச் சென்று நீரை நிரமப முகந்து மேனிகருத்து வானத்திற் பரந்து கார்காலத்து முதல் மழையைப் பெய்கிறது. அக்காலத்தே இருளுண்டாகச் செறியத் தழைத்திருக்கும். இக்கடம்பு அடிபருத்து அழகுறப் பூத்து நிற்கும். இப்பூவால் தொடுக்கப்படும் தார், முருகன் திருமார்பில் கிடந்து இனிய காட்சி வழங்குகிறது.

வண்டுசூழ்ந் தொலிக்கும் சுனைமலர் :—பரங்குன்றத்தின் சிறப்புக் கூறவரும் முருகாற்றுப்படை, அங்குள்ள சுனையிடத்து மலர்ந்திருக்கும் பூக்களை வண்டினம் மொய்த்து ஒலிக்கும் காட்சியை எடுத்துக் காட்டுகிறது. கூடல் நகர்க்குக் குடபாலில் கருஞ்சேறு பரந்த அகன்ற வயல்கள் உள்ளன; அங்கே நீர் இடையறுமையின் தாமரைகள் இதழ் விரிந்து பூத்துள்ளன. இரவுப்போதில் தாமரை குவிதலின், வண்டினம் இரவெல்லாம் குவிந்த அத்தாமரை மலர்க்குள் இருந்து உறங்கும். வைகறைப்போதில் நெய்தல் மலருதலின் அவ்வண்டு தாமரையினின்றும் வெளிப் போந்து புதிது மலரும் நெய்தற்பூவிற் படிந்து தாதுஊது கின்றன. ஞாயிறெழுந்து வெயில் பரப்புங்கால் நெய்தலை நீங்கிச் சுனையையடைந்து அதன்கண் தோன்றி மலர்ந்திருக்கும் சுனைப்பூக்களைச் சூழ்வந்து ஒலிக்கின்றன.

பேய் மகள் துணங்கை :—பேய்மகள் நெய்ப்பசையின்றி புலர்ந்த தலைமயிரும் அகன்றவாயும் உடையள்; அவள்

வாயில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிரையொவ்வாமல் பற்கள் முளைத்திருக்கின்றன. அவளுடைய பசுங்கண்கள் எப்போதும் சினந்து சுழன்று திரியும்; கண் பார்வை மிகக் கொடுமையானது; காதுகளில் கூகையும் பாம்புகளும் வாழ்கின்றன; நீண்டு தொங்கும் அடிக்காது மார்பில் வீழ்ந்து அசைகிறது. வயிற்றின் மேந்தோல் பனையின் பட்டைபோல் சுரசுரப்பாக இருக்கும். அவள் நடக்கும் நடை காண்பார்க்கு அச்சம் தருகிறது. அவளது பெரிய கையில் போரிலே வீழ்ந்தாருடைய தலை இருக்கிறது. அதன் கண்களைக் கைவிரல் நகத்தால் குடைந்து தோண்டியெடுத்துத் தின்கின்றாள்; அவ்வாறு செய்வதால் அவள் கைவிரல் குருதிபடிந்து சிவந்திருக்கிறது. இந்நிலையில், நிணத்தைத்தின்றுகொண்டே கையைத் தோளுற முடக்கி விலாப்புறத்தை யடித்து ஓசை செய்துகொண்டு கூத்தாடுகிறாள். இது முருகன் அவுணரைக் கொன்றழித்த போர்க்களத்துக் காட்சிகளுள் ஒன்று.

உடை :—உடையைப்பற்றிக் கூறவந்தபோது இந்நூல் உடையென்பதன் வேறாகத் துகில், காழகம், உடுக்கை முதலிய சொற்களை எடுத்தாளுகின்றது. உடையென்பது கையால் முகந்த புகைபோல மென்மையும் நொய்மையுமுடையதெனவும், இதனை மென்மொழி வழங்கும் யாழ் வல்லுநர் உடுக்கின்றனரெனவும் கூறுகிறது. துகிலென்பது சூரரமகளிடத்தும், முருகனிடத்தும் காணப்படுகிறது. அரமகளிர் அணிந்திருக்கும் துகில் செந்நிறமுடையது; அந்நிறம் அதற்கு இயல்பாய் அமைந்ததேயன்றிச் செயற்கையாய்த் தோய்க்கப்பட்டதன்று. முருகன் திருமேனியில் கழுத்தைச் சூழ்ந்து மார்பின் இருமருங்கும் ஒழுகி உதரபந்தத்தின் உள்ளே இறுகி நிலத்தளவும் தாழ விடப்பட்டுளது; அதன்பால் நறுமணமும் மென்மையும் அமைந்துள்ளன. அருவி வீழுங்கால் அவற்றின் தோற்றம் குறியவும் நெடியவுமாகிய பல துகில்களை உவமமாகக் காட்டுகின்றது. மேலும் அம்முருகன் அரையில் செந்நிறமுடைய ஆடை திகழ்கிறது. முனிவர்கள்பால் மரவுரி

புடைக்கையும் முருகாற்றுப் படுக்கும் குறமகள்பால் மாறு பட்ட திறமுடைய அறுவைகளும் இருபிறப்பாளரிடையே காழகமும், முருகனேடு விளையாடும் மகளிர்பால் தழை புடையும் காணப்படுகின்றன.

கடல்:—கடல் நிலவுலகைச் சூழ்ந்து நிற்பது; அந் நிலவுலகு தோன்றுதற்குமுன் தோன்றிய தொன்மையும் இதற்குண்டு; இதனல் இது பார்முதிர்கடல் எனப்படு கிறது. இஃது எப்போதும் நீரறுத நிலையமாதலின் இத னைப் பனிக்கடல் என்றார். அளக்கலாகாத ஆழத்தால் நீலநிறங்கொண்டு தோன்றும் இதன்கண் விடியற்காலத்தில் செஞ்ஞாயிறு தோன்றுவது, நீலமயின்மீது செம்மேனி யனகிய முருகன் காட்சியளிப்பது போன்றிருக்கும். இதன் நலங்கண்டே இந்நூல் "ஞாயிறு கடற்கண்டாங்கு ஓவறஇமைக்குஞ் சேண்விளங்கவிரொளி" எனக்கூறுகிறது. எத்துணைக் கலங்கள் படரினும் காற்றுத்திரண்டு மோதி னும் கலங்காத இக்கடல், முருகன் சூர்மருங்கறுத்தற்கு உள்புக்கபோது கலக்க மெய்திற்றென்றார், கலங்காத கடலையும் கலக்கின முருகன் சூர் மருங்கறுப்பது அருமை யன்றென்பதற்கு. அதனை அவன் படைமேலேற்றிச் "சூர் முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்" என்றார். முகில்கள் நிலவுலகிற் பரந்து சென்று பெய்யும் மழைநீர்க்கு முதல் இக்கடலே; இதுபற்றியே இது கார்கோள் எனவும் சிறப் பிக்கப்படுகிறது.

கணவிரம்:—இது செவ்வலரிப் பூவுக்குப் பெயர்; இப்பூ பெருமையும் தட்பமும் உடையது; இதன் நறுமணம் குறித்துக் குறவர் முருகனைப் பரவுமிடத்தே, மாலையாகக் கட்டி வழிபடுகளத்தை ஒப்பனை செய்கின்றனர்.

களிறு:—இதன் பெண்ணினம் பிடி எனப்படும். அது களிறு போலக் கொம்புடையதன்று. இக்களிறும் பிடியும் அருவிவீழும் மலைச்சாரற் காட்டில் காணப்படுகின்றன. அருவியின் தட்பத்தால் பிடியானை குளிர்மிகுந்து நீங்கு கிறது; களிறுகள் வீழ்வதால் அவற்றின் மருப்புக்கள நீர்ப்பெருக்கில் நீங்கி யோடுகின்றன; அவற்றிடையே முத்

துக்கள் உள்ளன; முருகன் ஊர்ந்துவரும் களிற்றை இந் நூல் வேழமென்ற சொல்லால் குறிக்கிறது. இதன் நெற்றி தோட்டியால் தாக்குண்டு வடுப்பெற்று விளங்குகிறது; அந்நெற்றியில் வரிகள் கிடந்து அழகு செய்கின்றன. அந் நெற்றிமேல் முகபடாம் அணிவர்; அதனைச் சூழ்ந்து பொன்னரிமாலை அணியப் பெற்றுளது. இம்மாலையும் முகபடாமும் நெற்றிமேல் கிடந்தசைகின்றன. மாலை யில் உள்ளபூ பொன்னாற் செய்யப்பட்டமையால் அது வாடாமாலை யெனப்படுகிறது. இருமருங்கிலும் மணிகட் டப்பெறும். வேழம் அசைந்து செல்லுங்கால் அம்மணி கள் மாறிமாறி யொலிக்கும். நடையில் ஒசையும் எளிதில் வளைந்து திரும்பும் மென்மையும் இல்லாமையால் இம்மணி இன்றியமையாதாயிற்று. விரைந்த நடையும் தன்னால் குறிக்கப்பட்ட பகையுயிரைக் கொன்றல்லது மீளாத கொள்கையும் இவ்வேழத்தின் தனிப்பண்பு. இதனால் இதன்வன்மை, "கூற்றத்தன்ன மாற்றரு மொய்ம்பு" எனப் படுகிறது. படவே, இதனைச் செலுத்துவோர் கையில் தோட்டி இன்றியமையாமைபற்றி முருகன் கைகளின் இயல்பு கூறியவிடத்து "ஒருகை அங்குசம் கடாவ" என்றார்.

ஆகம் :—கழுத்திற்குக்கீழுள்ள மார்பகம் ஆகம் எனக் குறிக்கப்படுகிறது; சூரரமகளிரின் ஆகம் நுண்ணிய பூண் அணிந்து விளங்குகிறது (32); இசைவாணர் ஆகத்தின் கண் மொட்டலர்ந்த பூக்களால் தொடுக்கப்பட்டமாலை சூழ்ந்து கிடக்கின்றது. (139).

ஆசினி :—அருவிவீழும் மலைப்பக்கத்தில் செழித் திருக்கும் பலாவகையுள் ஒன்று. இது பழுத்து முதிருங் கால் வெடித்து நிற்கும்; அருவி வீழுங்கால் இதன் பழ முதிர்ந்து சுளைசுளையாகச் சிதர்ந்து நீர்ப்பெருக்கில் கலந்து வரும்.

ஆமா :—காட்டுப் பசுவகை; இதன் ஏறு வலிய கோடு களையுடையது; காட்டில் கொடிய பகைவிலங்குகள் பல

வாதலின், அவற்றோடு பொருதற்கென அமைந்திருத்தலின், ஆமா ஏற்றின் கோடுகள் வலியுடைய வெனச் சிறப்பிக்கப்படுகின்றன. "கருங்கோட்டு ஆமா நல்லேறு" என்பது காண்க.

இறல் :—இறல் என்பது தேனடை; வானளாவ உயர்ந்த மலைப்பாறைகளில் தேனீக்களால் கட்டப்பெற்றிருக்கும் தேனடை இப்பாட்டில் இடம்பெறுகிறது; நெடிதுயர்ந்து நீனிறங்கொண்டு தோன்றும் நெடுவரையில் தேனிறல் தன்பொன்னிறத்தால் ஞாயிற்று மண்டிலம் போல் காட்சி யளிப்பது.

உளியம் :—இது கரடியைக் குறிப்பது. இதன் உடல் மயிர் மேலே கருமையும் தோலடியில் வெண்மையும் கொண்டு உள்ளே அடியில் வெளுத்து மேலே கருத்துத் தோன்றும் பனைச்செறும்பை ஒத்திருக்கும். கரடியின் அடி உள்வளைந்து காணப்படும்.

முடிப்புரை :—இறுதியாக ஒன்று கூறி இச்சொற்பொழிவை முடிக்கின்றும்: பரங்குன்றில் உறைதலும், அலைவாயிற்சேறலும், ஆவிநன்குடியில் அசைதலும், ஏரகத்து உறைதலும் குன்றுதோறும் விளையாடலும் முருகன் செய்யும் செயல்வகையென இம்முருகாற்றுப்படை மொழிகின்றது. உறைதற்கு இரண்டிடமும் பிற செயல்கட்கு முறையே ஒவ்வோரிடமும் கூறப்படுகின்றன. அசைதல் என்பதற்கு உரைகாரர் இருத்தல் என்றே உரை கூறுகின்றார். எனினும், முருகாற்றுப்படை கூறுவதையே கொண்டால் உறையுமிடம் பரங்குன்றும் ஏரகமும் என்ற இரண்டுமேயாம். உறையுமிடத்து, பரங்குன்றில் அமர்ந்துறைவன் என்றும் ஏரகத்தில் பெரிதுவந்து உறைவன் என்றும் நக்கீரர் சிறப்பித்துக் கூறுவது குறிக்கத்தக்கது. ஏரகத்தில் உவந்து உறைவதுபோலவே பரங்குன்றில் அமர்ந்துறைவன் என்பதனால் ஏரகத்தில் அவன் உவத்தற்கேற்ப இருபிறப்பாளர் வழிபாடு செய்யக் காண்பதுபோலும் வழிபாடொன்று பரங்குன்றிலும் நிகழ்வது பெறப்படும்.

ஆனல் பரங்குன்றில் அகன் வயலில் மலர்கள் மலர்தலை யும் வண்டினம் தேனுண்டு கிடந்து சென்று சுனைமலரைச் சூழ்ந்து ஒலித்தலையும் காண்கின்ரேம். வண்டின் நிகழ்ச்சி யில் வழிபாடொன்று உள்ளுறுத்தப்படுவது இதனல் உணரப்படுகிறது. அவ்வழிபாடு யாது? தாமரையைச் செல்வர் மனையாகவும், தாமரையில் துஞ்சிய வண்டினைச் செல்வராகவும், வைகறையில் நெய்தலை யூதுவது செல்வர் வைகறையில் எழுந்து நீராடிச் செல்வதாகவும், அவ்வண் டினம் சுனைமலரை யடைந்து ஒலிப்பதைச் செல்வர் பரங் குன்றடைந்து முருகனை வழிபடுவதாகவும் சொண்டால், மதுரைமாநகரிடத்து வாழும் செல்வப் பெருமக்கள் காட் காலையில் எழுந்து நீராடிப் பரங்குன்றம் சென்று முருகப் பெருமானை வழிபடக் கண்டு அவன் அங்கே அமர்ந்து உறைகின்ருன் என்பது புலனுகிறது. ஆகவே, ஏரகத்தில் முத்தீச்செல்வர் வழிபாடும் பரங்குன்றில் மதுரைச் செல்வர் வழிபாடும் நிகழ்வது காணலாம்.

மேலும் முருகனை, தேவரும், முனிவரும் பதினெண் கணங்களும், எண்வகை வசுக்களும் மக்களுட் செல்வரும் இருபிறப்பாளரும் குறவரும் வழிபடுவதும், மகளிருள் சூரர மகளிர் முதல் குறவர் மகளிர் ஈருகப் பலரும் வழி படுவதும், உயர்ந்தோர்க்குப் பரங்குன்றம் முதலிய இடங் களில் எழுந்தருளி அவர் செய்யும் வழிபாட்டையேற்று உவந்தருளும் முருகன், குறவர் வெறியயர்களத்தும் குற மகளிர் குரவைக் கூத்தாடுமிடத்தும் எழுந்தருளி அவர் மகிழக் கலந்து தலைக்கை தந்து விளையாடுவதும் காணும் நமக்கு முருகப்பெருமான் எளியார்க்கெளியனுய் எழுந் தருளி இன்பம் அளிக்கும் இனிய பெருமான் என்பது தோன்றி ஊக்கம் தருகிறது.

இவ்வாறு அறிவுக்கு இன்பமும் வழிபாட்டில் ஊக்க மும் பயக்கும் காட்சிகள் பலவற்றை இம் முருகாற்றுப் படை நமக்குக் காட்டி உலகியல் வாழ்வின் புன்மையையும் சொல்லோவியம் செய்து மெய்யுணர்வுப் பேற்றின்கண் நம்மை ஈடுபடுத்தி நிற்கிறது. புறக்காட்சிகளால் நம் உள்

ளத்தைக் கவர்ந்து அகக்காட்சிகளால் முருகனுடைய திருவருட் காட்சிகளைக்கண்டு இன்புறுவித்து அவற்றின் வாயிலாக நம்மை முருகன் திருவடிக்கண் ஆற்றுப்படுத்தும் பெருமைவாய்ந்த முருகாற்றுப்படையின் நலம் ஆயுந்தோறும் இன்பந்தரும் இயல்பிற்றென்பது தெளிவாம்.

உ. பொருநராற்றுப்படை

[வித்துவான், வி. சிவக்கொழுந்து, பெரியகுளம்]

மாநாட்டுத் தலைவரவர்களே! தமிழ் விருந்துண்ண வந்த தக்கார்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கம். தென்னாட்டில் நீண்டகாலமாகத் தமிழ்ப்பணியைத் திறமையுடன் நடத்திவருகின்ற கழகத்தார் 'பத்துப்பாட்டு மாநாட்'டிற் கலந்து தொண்டாற்ற வேண்டுமென்று இட்ட கட்டளையை ஏற்று உங்கள் முன்வந்து நிற்கின்றேன் பேசுவனவற்றில் பிழையுளவேல் பொறுத்தருள்க.

ஒருநாட்டு மக்களின் சிறந்த கலை, நாகரிக மேம்பாட்டை எடுத்துக் காட்டுவன எவை? அம்மக்கள் பேசும் மொழியில் அமைந்த இலக்கியங்களேயன்றோ! தமிழில் பண்டுதொட்டே திருந்திய கருத்துடைய சான்றோர்களால் வரையப்பெற்ற இலக்கியங்கள் கடல்போற் பரந்துகிடக்கின்றன. பிறமொழிகளில் சிறந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்னரே நமது அருமைச் செந்தமிழ்மொழியில் பண்பட்ட நூல்கள் பல தோன்றியுள்ளமை தமிழராகிய நமக்குப் பெருமிதந் தருவதாகும். இப்பெருமை இக்காலத்துப் பேச்சுவழக்கிலுள்ள பிறமொழிகளுக்கு இல்லையெனலாம். உலகமெங்கணும் பரவியிருக்கும் ஆங்கில மொழியிற்கூட கி. பி. ஒன்பதாம நூற்றாண்டில்தான் முதன்முதலில் இலக்கியம் தோன்றியதாகக் கூறப்படுகிறது.

கடல்கோட்பட்டு மறைந்துபோன தலை, இடைச் சங்கநூல்கள்போக எஞ்சியவற்றை நாம் கடைச்சங்கநூல்கள் என வழங்குகின்றோம். கடைச்சங்கநூல்கள் **பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு** எனத் தொகுத்தும் வகுத்தும் நம்முன்னோர்களால் ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளன. இவ்வொழுங்கை நோக்குவோர்க்குத் தமிழர் தங்கள் நூல்களை அழியாச் செல்வமாகக் கருதிப்போற்றிப் புரந்து வந்தமை நன்குபுலப்படும். இன்றைய தமிழ்இலக்கிய வானிலே ஈடும் எடுப்புமின்றி ஒளிவீசித்

திகழ்வன அச்சங்க நூல்களேயாகும். தமிழ் முன்னோர்களது தூயவாழ்வின் விரிவுரைகளாக அவை விளங்குகின்றன. மன்பதையின் நல்வாழ்வுக்கு வேண்டிய நாகரிகமான கருத்துக்கள் அவற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவ்விலக்கியக் கருவூலங்களைத் திறந்து பயன் படுத்த இதுபோன்று இன்னும்பல மாநாடுகளைத் தமிழர்கள் நடத்த முற்படுதல்வேண்டும்.

பத்துப்பாட்டு:—மேற்சொன்ன சங்கநூற் றொகுப்பிலே முதன்மைபெற்றுத் திகழ்வது 'பத்துப்பாட்டு' என்னும் தொகுப்பாகும். பத்துப் பாடல்கள் இன்னவென்பதைப் பின்வரும்பாடல் சுருக்கமாக உணர்த்துகின்றது:—

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

சங்கநூல் வரிசையிலே பத்துப்பாட்டு முதன்மைபெற்றுத் திகழ்வதும் "சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒரு பது பாட்டு" என்று உரைச்சிறப்புப்பாயிரம் கூறுவதும இப்பத்துப்பாட்டின் பெருமையை நன்கு உணர்த்துவன வாம். பத்துப்பாட்டுள் ஒவ்வொருபாட்டும் நீண்ட அகவற்பாவாக அமைந்துளது. அவற்றின் இடையிடையே வஞ்சிப்பாவடிகளும் விரவிவந்துள்ளன. பத்துப்பாட்டு நூல் நூறடிச்சிறுமையும் ஆயிரம்அடிப் பெருமையும் கொண்டு விளங்குவதெனப் பாட்டியல் கூறுகின்றது.

இந்நூல் உரையாசிரியர் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணத்திற்கும கலித்தொகை முதலான சங்கநூல்கள் சிலவற்றிற்கும் உரைகண்ட நுண்ணறிவாளரான உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியராவர். நூலின் பலவிடங்களில் இவர்கொண்டுகூட்டிப் பொருள்கூறும் வகை வியததற் குரியதாயிருக்கின்றது. இவரது மாட்டேற்றுமுறை நூல்செய்த ஆசிரியர் கருத்துக்குப் பொருந்துமாவென்பதை அறிஞர் ஆராய்ந்து காண்டல்

வேண்டும். அவ்வாராய்ச்சியில் புகுவோர்க்கும் இவரது உரையே உதவியாக நிற்கும் என்பது உண்மை.

ஆற்றுப்படை:—கொடையாளி ஒருவனிடம் திரண்ட செல்வத்தைப் பரிசாகப்பெற்று மகிழ்வுடன் திரும்பும் புலவர், பாணர், பொருநர், கூத்தர் முதலியோர் தம்மை வழியில் எதிர்ப்பட்ட இரவலர்க்குத் தமது வறுமைநீக்கிய வள்ளலின் பெருமையை எடுத்துக்கூறி அவ்வள்ளியோனிடம் சென்று தாம் பெற்றதுபோலப் பெருஞ்செல்வம் பெறுமாறு அவரையும் வழிப்படுத்துதல், ஆற்றுப்படை என்னும் நூலாகும். (ஆறு - வழி; படை - படுத்துதல்) பத்துப்பாட்டில் முதல் நான்கும், இறுதியான மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படையும், ஆக ஐந்துபாடல்கள் ஆற்றுப்படை நூல்களாக அமைந்துள்ளன. இங்ஙனம் பத்தில் ஒருபகுதிப் பாடல்கள் ஆற்றுப்படையாக இருப்பதுகொண்டு இத்துறையான பாடல்களின் பெருவழக்கு உணரப்படும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் தமிழ்ப்பெருமக்களது சிரிய கொள்கை இவ்வாற்றுப்படைநூல்களால் அறியப்படுகின்றது.

பொருநராற்றுப்படை:—பொருநராற்றுப்படை என்பது பத்துப்பர்ட்டில் இரண்டாவது பாடலாக உள்ளது; பரிசில் பெறக் கருதிய ஒரு பொருநனைப் பரிசில்பெற்றானொருவன் கரிகாற் பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அமைந்தது; கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது. இதனை,

3—"வேறுபுல முன்னிய விரகறி பொருந

* * *

61—"வாடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டின் நீடின்று
எழுமதி; வாழி: ஏழின் கிழவ !

* * *

128—"என்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை நீர வந்தனன்........

* * *

148—"கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
தாள்நிழல் மருங்கின் அணுகுபு குறுகித்
தொழுதுமுன் நிற்குவி ராயின்.........
. . .
170—"நன்பல் ஊர நாட்டொடு நன்பல்
. . .
172—"வெருவரு செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கலோ விலன்........."

என்ற இந்நூலடிகளால் உணரலாம். ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப்பட்ட பொருநர்களில் இப்பொருநன் போர்க்களம் பாடுவோனாவன்.

146—"இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணிற் றாக்கிய வெருவரு நோன்குள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்."

என இவ்வாற்றுப்படையுள் வளவன் போர் நிகழ்ச்சி வருதல் காண்க. இப்பொருநராற்றுப்படைப் பாடல் கொண்ட கரிகாற்சோழனே பத்துப் பாட்டுள் மற்றொன்றான பட்டினப்பாலைப் பாடலையும் கொண்டிருக்கின்றான். அதனை இவன்மீது பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவராவர். நிற்க, வளவனது கொடைச் சிறப்பு, வீரம், நாட்டுவளம், காவிரிப்பயன் இவற்றைக் கூறுகின்ற இப்பொருநராற்றுப்படைப் பாடல் 248 அடிகளைக்கொண்டு விளங்குகின்றது.

உட்பொருள் :—வறுமையால் வாடிய பொருநன் ஒருவன் தன் மனைவியான பாடினியுடன் சுற்றம் சூழப் பரிசில் வழங்கும் வள்ளலை நாடிக் காட்டு வழியே வருகின்றான். வழிவந்த வருத்தந்தீரப் பாடினி மரத்து நிழலில் தங்கிப் பாலை யாழை வாசிக்கின்றாள். சோழமன்னன் கரிகாலனைப் பாடிப் பரிசுபெற்ற ஒருவன் அப்பொருநனைக் கண்டு தான் சோழனை அடைந்ததும், தன்னை அவன் தலையளி செய்ததும், பரிசுகள் பல வரிசைப்பட வழங்கியதும் ஆகிய செய்திகளை விரித்துக் கூறுகின்றான். கூறி அப்பொருநனையும் சோழனிடம் செல்லுமாறும், சென்றால்

இன்னின்ன பரிசுகளைப் பெறுவாய் என்றும் உரைக்கின்ருன். கரிகாலனது போர்த்திறமையையும் கொடைச் சிறப்பையும் எடுத்து இயம்புகின்ருன். சோழநாட்டு வளமும் காவிரிப்பயனும் அவனுல் நன்கு நவிலப்படுகின்றன.

இனி, இவ்வாற்றுப்படையில் வரும் செய்திகளை நூலில் உள்ளபடி தனித்தனியே காண்போம்:

யாழ்: (4—22) பாடினி கையிலுள்ளது பாலையாழாகும். அது மானின் குளம்பு அழுத்திய இடம்போல இருபுறமும் தாழ்ந்து நடுவுயர்ந்த பத்தல் என்னும் உறுப்பினையுடையது; சுடர்நிறம் வாய்ந்ததும் வயிற்றின் மயிரொழுங்குபோல் இருபுறமும் சேர்த்துக் கட்டப்பெற்றதுமாகிய விரித்துப் போர்த்திய தோற்போர்வையினையுடையது; ஆணிகள் முடுக்குதற்கமைந்த நண்டின் கண் போன்ற துளைகளையுடையது. இத்தகைய யாழின் கரிய தண்டு தலையெடுத்த பாம்பினைப் போன்றிருக்கின்றது. அத்தண்டில் அமைந்த வார்க்கட்டு கையில் இட்ட தொடி என்னும் ஆபரணம்போல் இருக்கின்றது. ஒன்றுக்கொன்று நெருக்கமாக நரம்புகள் இழுத்துக் கட்டப்பெற்றுள்ளன. மேலும் அந்த யாழ்,

19—"மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்குமெய்ந் நின்ற அமைவரு காட்சி
ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை."

என்று கூறப்படுவதால், மணமான பெண்ணை ஒப்பனை செய்தாற் போன்ற அழகுடையதென்றும், யாழிற்குரிய தெய்வம் தன்னிடத்தே நின்ற இலக்கணம் அமைந்ததென்றும், வழியிற் செல்வோரைத் துன்புறுத்தும் கள்வரும் தன் ஓசை கேட்பின் கைப்படையைப் போட்டுத் தம கொடுஞ் செயலையும் மறக்கச் செய்வது என்றும் அறிகிறேம். இச்சிறப்புக்கள் அமைந்த யாழை "வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்," இசைத்தல் முறையாகும்.

பாடினி :—(25—47) பாடினி என்பவள் பரிசு கருதி வரும் பொருநனின் மனையாள். அவளும் அவனுடன் காட்டு வழியே வருகிறாள். அவள் மிக்க வனப்புடையாள். ஆற்றின் கருமணல்போன்ற கூந்தலினையும், வில்லையொத்த புருவங்களையும், குளிர்ந்த கண்களையும், இலவின் இதழ் போன்ற உதடுகளையும் உடையவள். அவள் பற்கள் முத்துக்களை வரிசையாக வைத்தது போன்றும், காதுகள் கத்தரிக்கோலின் குழைச்சப் (பிடிகருவி) போன்றும் அமைந்துள்ளன; தோள்கள் மூங்கில்போல் திரண்டுள்ளன; விரல்கள் காந்தள்மலர் போன்று அழகியன; நகங்கள் கிளிமூக்குப் போன்று ஒளியுடையன; தனங்கள் நெருங்கி எழுச்சியும் திரட்சியும் பெற்றுள்ளன. மேலும், அவள் நீர்ச்சுழி போன்ற உந்தியுடையாள்; பெண் யானையின் துதிக்கை போன்று திரண்ட துடைகளையுடையாள்; ஓடி வருந்திய நாயின் நாக்கினைப் போலும் அடிகளையுடையாள்.

அவள் சாதிலிங்கத்தை உருக்கினாற்போன்ற செந்நிலத்தே நடந்து வருந்தினாள். சுக்கான்கற்கள்பட்டு அவள் அடிகள் கொப்புளங் கொண்டன. உச்சிக்காலத்தே நடத்தலை விட்டு, யானைகள் உலாவும் காட்டில், இலைகள் உதிர்ந்த மரத்தின் அடியில், வலைவிரித்தாற்போன்ற நிழலில் தங்கி இளைப்பாறினாள். பின்னர்க் காடுறை தெய்வம் மகிழத் தன் கையிலுள்ள பாலையாழை மீட்டி இனிய பாடல்களைப் பாடத் தொடங்கினாள்.

பரிசில் பெற்றவன் கூறும் செய்தி :—பொருநனே! யாழையுடைய கூத்தர்க்குத் தலைவனே! மற்றவர் புகழை அரசவைகளிற் பரப்ப வல்லவனே! கேட்பாயாக: (64—129) யானும் பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவை போலப் பரிசு தருபவர்களை நாடிச் சென்றேன். ஒருநாள் கரிகாலன் அரண்மனை வாயிலை அடைந்தேன். அவ்வாயில் அரசனை விரும்பி வந்தவர்களைத் தடுப்பாரற்றது. காவலனுக்குக் கூறாது அதனுட் புகுந்தேன். மகிழ்ச்சியால் என் இளைப்புத் தீர்ந்தது. என் கையிலிருந்த தழும்புபட்ட

உடுக்கையைத் தட்டி அவ்விசைக் கேற்பப் பாடத் தொடங்கினேன். வெள்ளி முளைத்த நேரம்; நன்ருகப் பொழுது புலரவில்லை. அரசன் கரிகாலன் புறப்பட்டு வந்து நெடுநாட் பழகிய நண்பனைப்போல என்னிடம் உறவுகொண்டு உபசாரங்களைக் கூறினான்; தனக்கு அருகிலே என்னை இருத்திக்கொண்டான்; தன் கண்ணுற் பருகுவதுபோல் என்னைப் பார்த்தான். அவனது மொழிகள் யான் யாசிக்குந் தொழிலையே எப்போதும் விரும்பும்படி அவ்வளவு இனிமையாக இருந்தன. அவனது பார்வை என் என்பையும் மெழுகுபோல் இளகச்செய்து குளிர்ச்சியை உண்டுபண்ணியது.

என் இடுப்பிலுள்ள கந்தை, வேர்வையாலே நனைந்திருந்தது; ஈரும் பேனும் கூடியிருந்து அரசாட்சி செய்தது; தையல்கள் பல பொருந்தியது. அதனை அவன் போக்கினான்; வேறு ஆடை நல்கினான். அவ்வாடை, இழை போனவழி அறிய முடியாதபடி அத்துணை மெல்லியது; பூத்தொழில் பொருந்தியது; பாம்புச் சட்டை போன்றது.

> 79—"ஈரும் பேனும் இருந்திறை கூடி
> வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
> துன்னற் சிதாஅர் துவர நீக்கி
> நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
> அரவுரி யன்ன அறுவை நல்கி."

நிற்க, அணியணிந்து பாட்டாலும் கூத்தாலும் அரசனை மகிழ்விக்கும் மகளிர் சிலர் வந்தனர்; பொற்கிண்ணத்தில் கள்ளை வார்த்துவார்த்துத் தந்தனர். யான் வழிநடை வருத்தந்தீர நிறையவுண்டேன். பின்னர் மாலைக்காலம் வந்தது. மன்னன் கோயிலின் ஒருபுறம் தங்கித் துயின்று எழுந்தேன். வேந்தனைக் காண்பதற்கு முன்னுள் என்பால் இருந்த சொல்ல முடியாத வறுமையையும் இப்போதிருக்கின்ற மகிழ்ச்சியையும் கண்டு கனவோ என்று மயங்கித் தெளிந்தேன். பல மணப்பொருள்களை மெய் முழுதும் பூசியிருந்த என்னைக் கண்டோர் இவன் நேற்று வந்தவனல்லன் என்று மருளும்படி

என்னை வண்டுகள் சூழ்ந்தன. என்னுடன் வந்த சுற்றம் மகிழ்ச்சியுற்றது.

அறுகம் புல்லால் திரித்த பழுதையையுண்ட செம்மறிக் கடாவின் வேகவைத்த துடையின் தசையை யாங்கள் தின்றோம்; இருப்புக் கம்பியிற் கோத்து நெருப்பில் வாட்டிய இறைச்சியையும் உண்டோம். இங்ஙனம் வேகவைத்ததும் சுடவைத்ததுமாகிய புலாலைத் தின்று வெறுத்த பின், பலவகையான பண்ணியாரங்களையும் எங்களுக்கு அவன் அளித்தான். விறலியர், யாழினது ஒலிக்கும் மத்தளத்தினது ஓசைக்கும் பொருந்தப் பாடி ஆடினர். கள்ளுண்டலில் பல நாள் போக்கினேம். ஒருநாள் அரசன் சோறு உண்ணவேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். முல்லை அரும்பு போன்ற முறியாத அரிசியாலமைந்த சோற்றை, பொரிக்கறியுடன் கழுத்தில் வந்து நிரம்புமாறு உண்டோம். இங்ஙனமெல்லாம் இராப்பகலாய்ப் புலால் தின்று எமது பற்கள் புன்செய் நிலத்தையுழுத கலப்பையின் கொழுப்போல முனைமழுங்கிவிட்டன. இளைப்பாறவும் இடமின்றித் தின்றமையால் உணவில் வெறுப்புண்டாயிற்று. ஊர் திரும்ப எண்ணினேம். ஒருநாள் அரசனை நோக்கிச் "செல்வ! எம் ஊருக்குச் செல்வேம்," என்று மெதுவாகத் தெரிவித்தேன். உடனே வளவன் கோபித்தான் போல யாங்கள் வருந்துமாறு பார்த்து, "எம்மை விட்டுப் போகின்றீரோ," என்றான். பின்னர் இணங்கிக் களிறுகளையும் பிடிகளையும் கன்றுகளுடன் தந்தான்; இன்னும் பல ஊர்திகள், ஆடைகள், அணிகலன்களையும் மேலும் மேலும் அளித்தான். யானும் அளவுடன் வேண்டியவற்றை வாரிக்கொண்டேன்; இனி வறுமை எக்காலமும் இல்லை என்னுமாறுவந்தேன்.

பரிசுபெறுவோன் செய்தி:—(பெற்றவன் சொல்கிறான்.)

நீ வேறொரு வழியிற் செல்லாது இவ்வழியில் வந்ததும் என்னைக் கண்டதும் உனது நல்வினைப் பயனேயாகும். உன் வறுமை உன்னைவிட்டு நீங்குதலை நீ விரும்புவை

யாயின் உடனே சுற்றத்துடன் புறப்படுக. (148—177) கரிகால் வளவனைச் சேர்ந்து உம் வறுமை தோன்ற அவன் முன்னே நிற்க. நிற்பின், அவன் கன்றையீன்ற பசுப் போல உம்மை நோக்குவன்; அழுக்குப் பொருந்திக் கொட்டைப் பாசியின் வேர்போல் தையலோடு விளங்கும் நும் ஆடையை நீக்கித் தூய்மையானதும் கரையிலே குஞ்சங்களையுடையதும் பட்டினாலாயதுமான உடைகளைத் தருவன்; அம்மட்டோ, இனிய பூமணம் வீசுவதும் போதுமென்று கையமைத்தற்குக் காரணமான கடுப் புடையதுமாகிய மதுவைப் பொற்கலத்திலே வார்த்து நாடோறும் அளிப்பன்; நின் மனைவியாகிய பாடினி கரிய குழலிலே சூடப் பொற்றாமரைமலரை நல்குவன்; மார்பிலே அணியப் பொன்னரி மாலையையும் வெண்முத்தாரத்தை யும் வழங்குவன்; நான்கு வெண்புரவிகள் பூட்டிய பெரிய தேரிலே உம்மை யேற்றி ஏழடி பின்னே வந்து உங்களை வழிவிடுவன். இங்ஙனம் பாணர்க்குக் கொடுக்கும் முறை யிற் கொடுத்த பின்னர், நல்ல பல ஊர்களையும் யானைகளை யும் நீங்கள் பிறர்க்கும் அளித்துச் செல்லுமாறு உங்களுக்கு அவன் கொடுப்பான்.

கரிகால் வளவன் :—(130—148) கரிகாலன் சோழ நாட்டு முடிமன்னன்; இளஞ்சேட் சென்னியின் புதல்வன்; செங்கோலன்; தண்ணளியன்; பகைவரிடத்து முருகனது சீற்றம் போலும் சீற்றமுடையவன். இவன் பிறக்க வேண்டிய காலத்தே பிறவாமல் நல்ல முகூர்த்தம் வரு மளவும் தாயின் வயிற்றிலேயேயிருந்து பின்னர்ப் பிறந்து அதனாலே அரசவுரிமை யடைந்தவனென்பர்.

130—" உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்
தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி."

என்று சொல்லப்படுவன காண்க. இவன் இளமைப் பருவத்திலேயே இயமன்போல வலிமையிற் சிறந்து விளங்கினான். பால் குடிக்கும் பருவத்திலேயே, முதல் இரை வேட்டைக்குச் சென்ற சிங்கக்குட்டி, ஆண்யானை

யைப் பொருது வீழ்த்தினற்போல, வெண்ணில் என்ற இடத்தில் சேர பாண்டியராகிய இரு பெரு வேந்தரையும் ஒருகளத்தே பொருது வீழ்த்தினன். ஒருசமயம் தம்முள் மாறுபட்ட இருவர், தமக்கு முறை வேண்டி இவ்வரசர் பெருமானது அவையிற் புகுந்தனர்; இவனது இளமை கண்டு, தம் மாறுபாட்டைத் தீர்க்க இவ்விளையோன் வல்லவனேவென ஐயுற்றனர். கரிகாலன் அவரது ஐயத்தைக் குறிப்பால் உணர்ந்து நரை முடித்து முதுமைக் கோலத்துடன் வந்து முறை வழங்கினன். இச்செய்தி இந்நூலுள் :

> 186............................" முதியோர்
> அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்."

என்ற தொடரால் கூறப்படுகின்றது. இவ்வரலாற்றை,

> " உரை முடிவு காணன் இளமையோன் என்ற
> நரைமுது மக்கள் உவப்ப—நரை முடித்துச்
> சொல்லான் முறைசெய்நான் சோழன் குலவிச்சை
> கல்லாமற் பாகம் படும்."

என்னும் பழமொழிப் பாடல் தெரிவிக்கின்றது.

சோழநாடு :—(178—226) நிறைந்த வளமுடையது சோழநாடு. ஒருமாநிலத்திற்கு ஒன்ருக மேடுகளெங்கும் நெற்கூடுகள் திகழ்வதை ஆங்குக் காணலாம். உழவர்கள் தென்னைமரச் சோலையில் குடியிருப்பர். உழத்தியர் கடற்கரை மணலில் வண்டல் (மணல் விளையாட்டு) விளையாடுவர். மருதநிலக் காக்கைகள் குருதி பெய்த சோற்றைக் குறைவிலாது உண்டு, பசித்தபோது தின்பதற்கென நொச்சியின் நிழலில் நெய்தல்நில ஆமைக்குட்டிகளை மறைத்து வைக்கும். பாகற் பழமும் பலாமரச் சுளையும் தின்ற மயிற்பெடைகள் காஞ்சி மரத்திலும் மருத மரத்திலும் இருந்து ஆரவாரிக்கும். ஆண்மயில்கள் வண்டுகளின் ஓசை கேட்டு மருதநிலத்தைவிட்டு நெய்தல் நிலத்து நிலா மணலிலே சென்று தோகை விரித்து ஆடும். மருதநிலத்தே அடும்பும் பகன்றையும் புன்கும் ஞாழலும் ஏனைய மரங்களும் திரண்டு வளர்ந்திருக்கும். அவ்விடத்து வாழ்வார் கரும்பையும் நெல்லையும் அறுக்கின்ற களமருடைய

ஓசையை வெறுத்தால் முல்லை நிலத்தே சென்று விரும்பி யுறைவர். முல்லை நிலத்தே தளவும் தோன்றியும் முல்லையும் கொன்றையும் காயாவும் செழித்து மலர்ந்திருக்கும். அங்கு வசிப்பவர் அவ்விடத்தை வெறுப்பின் மருத நிலத்தே சென்று அதனைப் புகழ்ந்து அங்கே தங்குவர். நெய்தல் நிலத்தே கடல் மீனைத் தின்று, புன்னைக் கிளையில் தங்கிய நாரைகள் அலையோசையை வெறுத்து மருத நிலத்துப் பனையில் சென்று தங்கும். நெய்தல் நில ஊர்களான பாக்கங்களில் தெங்கும் வாழையும் காந்தளும் சுர புன்னையும் பேராந்தைகளும் உள்ளன. அங்கு வாழும் பரதவர் அவ்வாழ்வை வெறுத்துக் குறிஞ்சி நிலத்தே சென்று தங்குவர். கானவர் மருதம் பாடுவர். பரதவர் குறிஞ்சி பாடுவர். தேனும் கிழங்கும் விற்பவர் மீனின் நெய்யும் கள்ளும் பண்டமாற்றாகப் பெறுவர். கரும்பும் அவலும் கொடுத்தவர் மான் தசையும் கள்ளும் கொண்டு போவர். குறிஞ்சிக் குறவர் நெய்தற் பூக்களைச் சூடுவர். காட்டுக் கோழிகள் நெல்லைக் கவர்ந்து தின்னும். மருதக் கோழிகள் தினைக்கதிரைக் கவரும். மலைக்குரங்கு கழியிலே மூழ்கும். கழியிடத்து நாரைகள் மலையிலே தங்கும்.

இவ்வகையில் நால்வகை நிலங்களும் அடுத்தடுத்து அச்சோழவளநாட்டிலே நெருங்கிவளப்பமாயிருக்கின்றன.

காவிரி.—(232—248) பகலவன் வெம்மையால் கஞ்சங்குல்லை தீய்ந்தன; மரக்கிளைகள் கரிந்தன: மலையிடத்து அருவிகள் இல்லையாயின; மேகம் கடல் நீரை முகந்து பெய்யவில்லை; இங்ஙனம் வறண்ட காலத்தும் காவிரி பெருக்கெடுத்து வருகின்றது; நறைக்கொடி, நரந்தப்புல், அகில், சந்தனம் இவற்றைத் துறைகள்தோறும் தள்ளிக் கொண்டு செல்கின்றது; நுரையைச் சுமந்து போகின்றது; ஆரவாரத்துடன் குளத்திலும் கோட்டத்திலும் புகுகின்றது. பெண்கள் அவ்விடங்களில் குடைந்து நீர் விளையாடுகின்றனர். அக்காவிரி தனது நீரைப் பாய்ச்சுதலாலே ஒருவேலி நிலத்தில் ஆயிரக்கலமாகச் சோழ

நாட்டிலே நெல் விளைகின்றது. இது காவிரியின் சிறப்பாகும்.

232—"மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மாண்
எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவும் கோடெரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவும் மற்றக்
கருவி வானம் கடற்கோள் மறப்பவும்
பெருவறன் ஆகிய பண்பில் காலையும்
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுந்தொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே."

உவமை:—உவமை என்பது ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை ஒப்புமை கூறுதலாகும். பொருளை விளங்க வைத்தற்குப் புலவர்கள் உவமையைக் கையாளுகின்றார்கள். புலவர்களது விரிந்த புலமைத் திறத்தை அளப்பதற்கு உவமை சிறந்த கருவியாகும். உவமையணி புலவர்கள் செய்யுட்களை அழகுபடுத்திப் படிப்போர் உள்ளத்தைக் கவர்கின்றது. தொல்காப்பியத்தில் உவமவியல் எனத் தனியே ஓரியல் கூறப்படுகின்றது காண்க. தம் செய்யுட்களில் தாம் எடுத்தாண்ட உவமையாலேயே சில சங்கப் புலவர்களின் பெயர் வழங்கப்படுவதைக் காண்கின்றோம்.

முடத்தாமக் கண்ணியார் இப்பொருநராற்றுப் படையில் அழகிய உவமைகள் பலவற்றைக் கூறுகின்றார். அவற்றிற் சில வருமாறு: யாழின் பத்தல் என்னும் உறுப்பு இரண்டருகுந் தாழ்ந்து நடு உயர்ந்து உள்ளது. அதற்கு மானின் குளம்பு அழுத்திய இடம் உவமை. "குளம்பு வழியன்ன கவடுபடு பத்தல்"(4). யாழின்

கரியதண்டு பாம்பு தலையெடுத்தாற் போன்று உளது. அதனைப் "பாம்பணந் தன்ன ஓங்கிரு மருப்பு," (13) என்கின்றார். யாழ்த்தலையும் அதிலமைந்த ஆணியும் வளையிடத்துள்ள நண்டின் கண்போன்று உள்ளன. "அளை வாழ் அலவன் கண்கண்டன்ன, துளைவாய் தூர்ந்த துரப்பமை ஆணி," (9—10) என்கின்றார். யாழைத் தோல் இட்டுப் போர்த்திருக்கிறார்கள்; அது விளக்கு அழல் போன்ற சிவந்த நிறமுடையது; இரண்டு பக்கமும் கூட்டித் தைக்கப் பெற்றது; தைக்கப்பட்டு விளங்கும் அத்தோற்றம் எப்படியிருக்கிறது? நன்றாக அறியப்படாத இளைய சூலினையுடைய சிவந்த நிறத்தாள் ஒருத்தியின் அழகிய வயிற்றிலே நடுப்பமாக மயிரொழுங்கு காணப்படுவதுபோல் இருக்கின்றதாம். அதனை "எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்று, ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போல," (6—7) என்ற தொடரால் உணர்கிறோம்.

இன்னும் பாடினியின் காதுக்குக் கத்தரிக்கோலின் பிடிக்குமிடத்தையும், நகங்களுக்குக் கிளி மூக்கையும், மென்மையான அடிகளுக்கு வருந்திய நாயின் நாக்கையும் உவமை கூறியிருப்பது படிப்போர்க்கின்பம் பயப்பதாம். பொருநன் சோழனது விருந்தினனாக இருந்து இராப் பகலாக ஊன் தின்று அவன் பற்கள் மழுங்கலுற்றன வாம். எப்படி? புன்செய் நிலத்தை உழுத கலப்பையின் கொழுவைப்போல.

117—" கொல்லை உழுகொழு ஏய்ப்பப் பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி."

என்பது நகைச்சுவைபட அமைந்துளது.

இப்பாட்டால் அக்கால வழக்குகள் பலவும் மக்களியல்புகள் பலவும் அறியக் கிடக்கின்றன.

பொருநர் எனப்படுவார் பரிசு தருவோரை நாடிச் செல்வதோடு விழாக்கள் நடக்கும் பேரூர்கள் தோறும் சென்று விழாக் கண்டு மகிழ்வர் (1—3) என்று தெரிகின்றது. அரச மாளிகையில் அரசற்கு விருப்பமான விருந்தி

வர் பருகுமாறு மகளிரால் பொன்வள்ளத்தில் மது வார்த்துத் தரப்படும்; புலால் உணவும் பண்ணியாரங்களும் அதன்பின் அரிசிச் சோறும் அருந்துவதற்கென அளிக்கப் பெறும். விருந்தினர் பார்த்தும் கேட்டும் மகிழ, ஆடலும் பாடலும் மகளிரால் அங்கு நிகழ்த்தப் பெறும். விருந்தினரை அனுப்பும்போது ஏழடி பின் சென்று வழிவிடுதல் மரபு. பெண்கள் காதுகளில் கனமாக அசையும்படி காதணியணிவர். மக்கள் பட்டுடை உடுத்தினர். உடுத்திக் கொள்ளும் ஆடை பல பூத்தொழில் பொருந்தியதாக இருந்தது; கரையிலே குஞ்சங்களையுடையதாக இருந்தது.

முடிவுரை :—செந்தமிழ்ச் செல்வர்களே ! பண்டைத் தமிழரின் ஒழுகலாறுகளையும், மன்னரது ஆட்சி புலவரது மாட்சி இவற்றையும், அக்காலப் பழக்கவழக்கங்களையும் கூறுகின்றன சங்கநூல்கள் அவையே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்நாட்டு மக்களது உண்மை வரலாறுகளாகும். பற்றுள்ள மின்றியும் உள்ளதை மறைக்காமலும் கூறுகின்ற அந்நூல்களின் பெருமையை இக்காலத் தமிழர் உணர்வதற்கு இம்மாநாடு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

இப்பத்துப்பாட்டு மாநாட்டில் பொருநராற்றுப்படையைப்பற்றிப் பேசுமாறு எனக்கு ஆணைதந்தும் என் உரையைக் கேட்டு ஆதரித்தும் ஊக்கம் நல்கிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் உரிமைப் படுத்துகின்றேன்.

"வாழிய செந்தமிழ்! வாழ்க நற் றமிழர்!"

௩. சிறுபாணாற்றுப் படை

[வித்துவான், கா. மாயாண்டி பாரதி]

தமிழகத்தில் வழங்கும் செந்தமிழ்ப் பனுவல்களிலே, சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயக்கும் சீரிய கருத்துக் களைச் செப்பமுறவமைத்து, எப்பாலவரும் விரும்பும் அகவலோசையின் ஒழுகிச் சிறப்புற்றொளிர்வதும்; செக்க ரொளி விரவிய வெள்ளிய வானிலே வேல் கொண்டெறியி னும் விழித்திமையா வீரரின் கண்களை வெளவி, ஒரேரென மறையும் மின்னலோ என ஒளியைக் காலும் விண்மீன் களின் நாப்பண், தண்ணொளி பரப்பி விளங்காநின்ற வெண் மதிபோல, நிலவுலகெங்கணும் வாழும் பல்வேறு பிரிவின ராய மக்கள் பயிலும் கலைகளெல்லாம், தொன்மையாலும் வன்மையாலும் நன்மையாலும் பிற்படுமாறு, தலைமைபெற் றுத் துளங்கா நிற்பது தமிழ்க்கலை ஒன்றே யெனத் தலை நிமிர்ந்து தருக்குற்றுத் துணிந்து கூறத் துணையாய் நின் றிலங்குவதும்; தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமு றும் கவிஞர் பெருமக்கள் யாத்தளித்த, முத்தமிழானியன்ற கலைச் செல்வங்களாகிய இலக்கியம் இலக்கணம் பலவற்றி னுக்கும், தன் நுண்மாண் நுழைபுலத்தால் தக்கவுரை வரைந்து தமிழகத்திற்கு வழங்கிய புலவர் பெருந்தகை யாம், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரால் உரை வகுக்கப் பெற்றும், 'ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து சான்றோருரைத்த தண்டமிழ்த்தெரியல் ஒருபது பாட்டும்' எனப் போற்றிப் புகழப்பெற்றதும்; ஏனை உரை யாசிரியர் பல்லோராலும் மிகுதியும் எடுத்தாளப்பட்டுச் சிறப்புறச் செந்தமிழ் நாட்டார் படித்து இன்புற்று வருவதும்: பழந்தமிழர் வகுத்த அகம் புறம் எனும் பொருட்பாகுபாடும்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் திணைப் பாகுபாடும், இயல், இசை, நாடகம் எனும் கலைப்பாகுபாடும், ஒருங்கே செறிந்து வேற்று மொழிச் சொல்லும் பொருளும் பெரிதும் விரவாது, செம் மாந்து செல்லும் தூய செந்தமிழ் நடை பயின்று பழகுங்

தொறும் பழகுந்தொறும் பண்புடையாளர் தொடர்பு மேம் படுதல்போல, பயில்தொறும் பயில்தொறும் பல்விதச் சுவையினைக் கருத்திற்குப் பெருவிருந்தாக நல்கிச் சாந்துணை யுங் கற்க விழையும் அவாவினை உள்ளத்து எழச் செய்வ தாய தமிழ்க்கருவூலமாக நின்று நிலவுவதும்; இந்நாளில் உலகினை உய்விப்பான் புகுந்த விஞ்ஞானக் கலையின் வீறு கொண்டு, 'எவரும் காணுச் செவ்வாய் மண்டிலத்தினை எய்திவிட்டோம்; புத்தேளிர் வாழும் புதன் மண்டிலம் புகுவேம்; அளக்கரின் ஆழத்தினை அளவிடுவேம்; அணுக் குண்டின் ஆற்றலைக் கணிப்பேம்' என்று, ஆசைக்கோரள விலராய்க் கணக்கில் கருவிகளின் உதவிபெற்றுத் துருவித் துருவி ஆராய்கின்ற மேனாட்டுக் கலைவாணர்களும் கண்டு வியந்து வெள்குமாறு, கற்றோன்றிமண் தோன்றாக்காலத்தே பிறந்து, நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி, நானிலம் வென்ற தமிழன் கொண்டொழுகிவந்த பண்பாடுகளிலே, மக்கள் இனத்திற்கே மாண்பு தருவதாய், சாதிமத வேறுபாட்டை வேரறுப்பதாய், எந்நாட்டவரும் இந்நாள் வரவேற்கும் பொதுவுடைமை வழங்குவதாய், 'எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்' என்பதை நன்கு உணர்ந்து, மககள் மக்களாக வாழவேண்டுமெனும் தூயகொள்கையைப் புகட் டுவதாய், அருவாய் நண்ணிதாய் யாண்டும் யாவர்க்கும் இன்பம் பயப்பதாய் உள்ள செல்வத்துப் பயனென வரை யறுத்த ஈதற்றன்மையோடியைந்த விருந்தோம்பும் நெறி யும், ஒப்புயாவற்ற வாழ்வில் பெறும் தனியுரிமையும், ஆய இருதலை சிறந்த பண்பாட்டினைப் பாடல் ஒவ்வொன்றின் கண்ணும் வலியுறுத்துவதோடன்றி, பொன்றுங்கால் பொன்றாத் துணையாவது அறமே என்பதை அறிந்து, இல னெனும் எவ்வமுரையாது, வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரையாது வழங்கிய வள்ளல்களின் அருட்கொடைச் சிறப் பினையும், கேட்டார் உள்ளமேயன்றி உயிரும் உணர்ச்சி பொங்கச் சித்திரித்துக் காட்டித் 'தமிழன் என்ற பெருமை யோடு வாழ்க' என்பதையும் குறிப்பால் புலப்படுத்தித் தூயவாழ்வுபெறத் தூண்டி நிற்பதும் பாரோர் புகழும் பத்துப் பாட்டெனும் சங்கநூலேஆம்.

இப்பெற்றி வாய்ந்த பத்துப்பாட்டின் இயல்பு என்னை யெனின், சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் அடியவர் சிந்தையுள்ளும், உறைவான் உயர் கூடலில் ஒப்ப வீற்றிருந்து, ஒண்டீந்தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர் பெருமக்கள் எண்மரால் பாடியருளிய, தொடை மாண்ட பாக்கள் பத்தினையுடையதாதலின் பத்துப்பாட்டு எனும் பெயர்த்தாயிற்று இவற்றின் முறைவைப்பினை நோக்குழி, காலத்தின் ஏற்றத் தாழ்வு கருதியோ, பொருட் சிறப்பினைக் கருதியோ, அடிகளின் அளவு கருதியோ அமைக்கப்பட்டதாகக் கூறுதற்கில்லை. வேறு எக்கருத்துப்பற்றி முறைப்படுத்தினர் என்பதை உறுதிப்படுத்தும் சான்றும் கிடைத்திலது. ஆனால், இன்று வழங்கிவரும் முறையினை,

" முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

என்ற வெண்பாவால் அறியலாம். இவற்றைத் தொகுத்தார் சங்கப் புலவர்களே என்பது, இந்நூலின் இறுதிப் பாடலாயமைந்துள்ள மலைபடுகடாத்தில், 'தீயினன்ன வொண் செங்காந்தள்' என்பதன் உரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனம் நீக்காது கோத்தற்குக் காரணம், ஆனந்தக் குற்றமென்பதொரு குற்றம் இச்செய்யுட்கு உரூமையான் என்று உணர்க' எனக் குறித்தமையான் விளங்கும். ஈண்டு அவர் கூறும் காரணம் பொருந்துமா றில்லை யெனினும், சங்கத்தாரால் தொகுக்கப் பெற்றது என்பது ஒப்புக்கொள்ளுதற் குரியதாகும். இங்ஙனம் தொகுத்தவற்றைப் பின்னுளில் முறைப்படுத்தியவாறு, மூன்றுவதாக அமைந்து கிடப்பதே இவண் ஆய்வான்புக்க சிறுபாணாற்றுப்படை ஆகும்.

இச்சிறுபாணாற்றுப் படையை ஆய்வான் புக்க தென்னையோவெனின், முடியுடை வேந்தருள், சோழ

மன்னரில் சிறந்தார் மூவரது அவைக்களத்து வீற்றிருந்து தமிழ்ப் பணியாற்றிக் கவிஞர்கோனாய் விளங்கிச் சென்று செவியளக்கும் செம்மையவாயும் சிந்தையுள்ளே நின்று அளவில் இன்பம் நிறைப்பனவாயும் பல சிறந்த கவிகளை யாத்து விருதுகளைப் பெற்று, நரை முதிர் யாக்கை நடுங்கா நாவின் உரை மூதாளராய் வாழ்ந்த வீரப்புலவராகிய ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற, தக்கோர் புகழும் தக்கயாகப் பரணி எனும் பெருநூலிற்கு ஆசிரியர் கருத்தறிந்து பேருரை வழங்கி இருமொழி வல்லுநராய உரையாசிரியர், தாம் மேற்கோளாக எடுத்தாண்ட எண்ணில் தமிழ் வடமொழி சமயம் முதலிய நூல்களுள்ளும் சிறப்பாகப் பழந்தமிழ் நூலாகிய பத்துப்பாட்டினுள்ளும், விழுமியதாக மதித்து விதந்து கூறியிருப்பது சிறுபாணாற்றுப்படை ஒன்றேயாதலின் என்க. இவர், 'தார்மார்பமும் முகபிம்பமும் நுமகாதலர் தரநீர் சேர்தாமரை யிறையாளடி பணிவீர் கடை திறமின்' என்ற கடை திறப்பின் முதற்பாடற்கு உரைவரையுமிடத்துச் சிறப்புரையின் இறுதியில், இப் பாட்டுக் குறிப்பாற் பொருளுணர்த்தும் அருமையும் பெருமையும் உணர்க; "காவெரியூட்டிய கவர்கணைத்தூணிப் பூவிரி கச்சைப் புகழோன்றன்முன்," என்பது பீமசேனற்குப் பெயராயிற்றெனவுணர்க. இது சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை," எனக் குறித்தமை நினைந்து இன்புறுதற்குரியதாம். பன்னூல்களினும் புலமை மிக்காராகிய இவர் எதுகை, மோனை முதலிய அழகு அமைதலொன்றே கருதி வாளா கூறினரென்றோ, வெற்றடை மொழி கொண்டு சிறப்பித்தாரென்றோ கொள்ளாது, ஏனை நூல்கள் பெறவியலாத அடைமொழி இஃதொன்றுமட்டும் உரித்தாகப் பெறும் சிறப்பியல்புகள் பொதிந்த பகுதியினை அடிதொட்டு முடிகாறும் நடுவண் நின்று ஆய்ந்து பல்லோரும் ஒப்பும் பான்மையில் கருத்துக்களை விளக்கிக் காண்பாம்.

இதன் பெயர்க் காரணத்தைச் சுட்டுதற்குமுன் ஆற்றுப்படையின் இயல்பைப் பழந்தமிழிலக்கண நூல் கொண்டு

ஆய்தல் கடனும். தொல்காப்பியப் பெருநூலின் பொருட் பகுதியில் மக்கட் பாடாண்டிணைக்குரிய துறை கூறு மிடத்து,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்......"

எனும் நூற்பாவின் அடிகளும், 'ஆடன் மாந்தரும் பாடற் பாணரும் கருவிப்பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியும் என்னும் நாற்பாலரும், தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி, அவ ரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறு மாறு கூறிய கூறுபாடும்,' என உரையாசிரியரெனப் பெயர் பெற்ற இளம்பூரணர் கூறியாங்கே, நச்சினார்க்கினியர் உரைப்பொருளும் ஆற்றுப்படையின் இலக்கணத்தை வரையறுப்பனவாம். எனவே, ஆற்றுப்படை என்பது, கூத்தராயினும், பாணராயினும், பொருநராயினும், விறலி யாயினும், வண்மையினீங்கா வள்ளலின்பால் தாம் பரிசி லாகப் பெற்ற பெருஞ் செல்வத்தையும், எதிர்வந்த இர வலர்களுக்கு நன்கு அறிவுறுத்தி, அவரும் அவன்பாற் சென்று தாம்பெற்றவற்றையெல்லாம் பெற்று மகிழுமாறு வழிப்படுத்தலாம். இவ்விலக்கணம் பிற்காலத்தெழுந்த பன்னிருபாட்டியலில் விரிவடைந்து காணப்படுகிறது. அஃதாவது,

"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை.

என்பதாம். அஃதல்லாமல், 'புலவராற்றுப்படை புத்தேட் கும் உரித்தே' எனும் சிறப்பு விதியொன்றும் கூறப்பட் டிருக்கின்றது. தொல்காப்பியத்தின் கண்ணே முன்னரே சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்க, மீட்டும் நூற்பா

ஆக்கவேண்டியதன் இன்றியமையாமை எற்றிற்கெனின், பத்துப்பாட்டின் முதலாவதாகவுள்ள திருமுருகாற்றுப் படை என்பதொன்றினையே கருதிச் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பது வெளிப்படை. இவ்வாறு நூற்பாவினை வலிந்து அமைப்பின், இலக்கண வரம்பென்பதொன்றின்றி மொழியின் வளர்ச்சி குன்றும் என்பது ஒருதலை. இக் கருத்துப் பொருந்தாமையினைப் பிற்கூறுவாம்.

இனி இந்நூலின் பெயர்க் காரணத்தைப் பிற ஆற்றுப் படைகளோடு ஒப்பு நோக்கிக் காண்பாம். சேர மன்னர் களின் வரலாற்றினைச் செவ்விதின் உணர்த்தா நிற்கும் பதிற்றுப்பத்து எனும் நூலின்கண், ஒவ்வொரு பாடலினும் காணும் பொருட் சிறப்புடைய தொடரால், அப்பாட்டின் பெயரைக் குறித்திருப்பது போலன்றிப் பத்துப் பாட்டின் கண் வெவ்வேறு பொருள்பற்றிப் பெயர்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டி னப்பாலை என்ற மூன்றும் ஒழுக்கம் பற்றியும், நெடுநல் வாடை என்பது வாடைக்காலத்தில் தலைவனைப்பிரிந்து அல்லலுறும் தலைவி வருந்துதலாகிய சிறப்புக் கருதியும், மதுரைக் காஞ்சி என்பது நிலையாமையைச் செவியறி வுறுத்தலாகிய தன்மை பற்றியும் பெயரிடப்பட்டிருத்தலை அறிகின்றோம். எஞ்சிய ஐந்து பாடல்களும் ஆற்றுப் படையாக உள்ளன. அவை ஆற்றுப்படுத்தப் படுபவர் களது பெயராலேயே வழங்கப்படவேண்டுமென்பது மரபு. ஆனால், இரண்டு பாடல்கள், அஃதாவது முதலும் இறுதி யும், மரபின் வழீஇ வழங்கி வருதலோடன்றி, அதற் கியைய நூற்பாயாத்து அமைதி கூறுதலையும் காண, நகைப் புக்கிடனாயுளது. ஆற்றுப்படை ஐந்தனுள், மூன்று தன் இயற்பெயரோடு வழங்க, இரண்டுமட்டும் பிறழ நிற்றல் என்னையோ எனின், பிற்காலத்து வந்த பெருமக்களால் செய்யப்பட்டு வந்த இடைப்பிறவரல் என்பதைத்தவிர வேறு யாதாயிருத்தல் கூடும்? பதிற்றுப்பத்தினைப் பயின்ற ஒருவர்தாமே கூத்தராற்றுப் படையினையும் கூரிய மதியுடன் ஆழ்ந்து கற்குங்கால், 'அலகை தவிர்த்த வெண்

ணருந்திறத்த மலைபடுகடாஅ மாதிரத்தியம்ப' என்ற அடியின்கண் அமைந்த உவமை நலங்கண்டு உருகி, பொருட் சிறப்புடைய 'மலைபடுகடாஅம்' என்ற சொற்றொடரையே கூத்தராற்றுப் படைக்கு அமைத்திருத்தலும் கூடும் என்று கருதுதல் தவறாகாது. அவ்வாறன்றிச் சங்கத்தாரே இப்பெயரினைச் சூட்டினரெனக் கொளின், ஏனைப் பாடல்களெல்லாம் சிறப்புடையனவல்ல, இஃதொன்றே பொருட் சிறப்புடைய சொல் அமையப் பெற்றது எனப் பொருள்படு மாகலானும், தோலா நாவின் மேலோர் இலக்கண வரம்பினின்றும் வழுவினரென அவர் தம் புலமைக்கு இழுக்கு உண்டாமாதலானும், அஃது ஏற்புடைத்தன்று. தொன்னெறி மரபின் வழாஅது கூத்தராற்றுப்படை என வழங்கியிருத்தல் வேண்டுமென்பதே சால்புடைத்து. இது கிடக்க.

பத்துப்பாட்டின் முதற்கண்ணுள்ள திருமுருகாற்றுப் படை எனும் பெயரின் தொன்மையினை, இருசார் அறிஞர் ஆய்வுமொழி கொண்டு உண்மை காண்பாம். ஆற்றுப் படையின் இயல்பினைத் தெரிக்கும் தொல்காப்பிய நூற்பாவில், 'ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்' என்ற அடிகட்கு, சொற்கிடந்தவாறே பொருள்கூறிச் செல்லாது, தாம் கொண்ட கொள்கையைச் சாதிப்பேம் எனும் கருத்துடையராய், வலிந்து பொருள் கொண்டு, நூற்பாவின்கண் குறிக்கப்படாத முருகாற்றுப் படையினையும் புனைந்து, 'ஆற்றுப் படைகள், கூத்தராற்றுப் படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, முருகாற்றுப்படை என வழங்குதலும் கொள்க!' என்று கூறியுள்ளார். இன்னும், 'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற, வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்ற நூற்பாவில், 'கந்தழி' என்பதற்கு 'ஒருபற்றுக்கோடின்றி, அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள்' என்று எழுதி, கந்தழியை யுணர்த்தும் ஆற்றுப்படையே திருமுரு

காற்றுப்படை யெனவும் கருதியுள்ளார். அவற்றோடமை யாது, முருகாற்றுப் படையைப் புலவராற்றுப் படை யென்று உய்த்துணராது பெயர் கூறுவார்க்கு, 'முருகாற் றுப்படை யென்னும் பெயரன்றி அப்பெயரான் வழங்கா மையான் மறுக்க,' எனத் துணிந்து உரைமுடிவு செய்துள் ளார். இவர் உள்ளம் இம்முடிவிற்குப் பணிந்தமைக்குரிய ஒரே காரணம், 'தாஅனுட்டித் தனைஅது நிறுத்தல்' எனும் கொள்கையை விடாது கொண்டொழுகும் தன்மையே யன்றிப் பிறிதில்லை என்க.

'கந்தழி' என்றதற்கு உரையாசிரியர் இளம்பூரணவடி களும், புறப்பொருள் வெண்பாமாலை யுடையாரும் வெவ் வேறு பொருள் கொள்ளுதலானும், ஆற்றுப்படுத்தப்படு வாரது பெயரே அமைதல் மரபு என்பது வெண்பாமாலைப் பாடாண் படலத்தில் கூறப்படுதலானும், புலவராற்றுப் படை என வழங்குதலுண்டென்பது 'இருங்கண் வானத்து இமையோருழைப் பெரும் புலவனை ஆற்றுப்படுத்தன்று' என வரூஉம் கொளூஉம், 'விரும்பிய கரூஉம் விண்ணவர் தம்முழை அரும்பெறற் புலவரை ஆற்றுப் படுத்தன்று' எனவரூஉம் இலக்கண விளக்க நூற்பாவும், சுட்டுகின் றமை கருதற்குரியது. 'புலவராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே' என வரூஉம் பன்னிரு படல நூற்பாவொன்று, புலவராற்றுப்படுத்தல் மக்களிடத்தேயன்றித் தெய்வத் தன்மையுடையாரிடத்தும் ஆற்றுப்படுத்தும் மரபுளதென வும் குறிப்பிட்டுள்ளமை அறிக. அதன்கண் பாட்டுடைத் தலைவன் பெயரைச் சுட்டவேண்டுமென்னும் வரையறை பெறப்பட்டின்றுதலானும் நச்சர் கொண்ட கருத்துப் பொருந்துமாறில்லை. முருகனிடத்து ஆற்றுப் படுத்தப் படுபவன் புலவனாதலின், புலவராற்றுப் படையெனும் பெயரே முன்னர் வழங்கிவரப்பெற்று, இடைக்காலத்தில் முருகப்பெருமான்பால் பேரன்புடையாரால் மாற்றியமைத் திருத்தல் வேண்டுமென்பதும் உய்த்துணரக் கிடக்கிறது. இக்கொள்கையை வலிவுடையதாக்க உறு துணையாக நிற்பது என்னையெனின், இறைவழி பாட்டுத் திருமுறைத்

தொகுப்பில் பத்துப்பாட்டுள்ளும் திருமுருகாற்றுப்படை ஒன்றே சேர்க்கப்பெற்றுத் தமிழ்மக்களால் பெரிதும் பயிலப்பட்டு வருதலேயாம். ஆகவே, சங்கத்தார் வழங்கிய பெயர், புலவராற்றுப்படை என்பதே தெளிவு.

இதுகாறும் ஆராய்ந்ததென்னையெனின், ஆற்றுப் படைகள் ஐந்தும் புலவராற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை எனச் சங்கத்துச் சான்றோரால் வழங் கப்பட்டு வந்திருத்தல் வேண்டுமென்பதூஉம், இற்றைநாள் வழங்குவன சில்லோரால் மாற்றியமைத்துக் கொண்டன என்பதூஉம் ஆகும். இவை அமைந்து கிடக்கும் முறை பற்றி, கருத்தினை ஆராயப்புகின் விரிந்து செல்லுமாகலின், அதனை விடுத்துப் பொருள் மேற்செல்வாம்.

பெயர்க்காரணம் :—பரணிகொண்டு பார்காத்த வண் புகழ் மூவரும், வையங் காவலர்வழி மொழிந்து ஒழுகு மாறு செங்கோலோச்சி, விண்முட்ட நிறீஇய வென்றிப் புகழினையும், வையத்துள் வாழ்வாங்கு வாழக்கருதிய பெருங்கொடை வள்ளல்கள் எழுவரும், தமக்கென வாழும் குறுகிய கொள்கையினீங்கிப் பிறர்க்கென வாழும் பெற்றி யுடையராய், வாணாளில் வீணாள்படாமை நன்றாற்றி ஈட்டிய ஒண்புகழினையும், தன்னதாக்கித் தமிழர் குடியினைத் தன் பெயரால் வழங்குமாறு மேலோங்கி நின்ற புகழ் வாய்க்கப் பெற்ற ஒவியர் பெருமகனாகிய ஒய்மாநாட்டு நல்லியக் கோடன்பால், பரிசில் பெற்றானொருபாணன், பரிசில் பெறக் கருதிய ஒரு பாணனை வழிப்படுத்துமுகத்தான், நல்லிசைப்புலவராகிய இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்த னரால் யாத்தமைத்த செய்யுளே சிறுபாணாற்றுப்படை என்பதாகும். இச்செய்யுட்கு இப்பெயர் பொறிக்கப் பட்ட காரணத்தை நோக்குவாம்.

இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப் பகுத்துக்கண்ட பாண் குழுவினுள், இப்பாட்டினுள் குறிக்கப்படும் பாணன் யாழ்ப்பாணருள் ஒரு பிரிவினன்

எனவும், அவனை ஆற்றுப்படுத்தினமைகொண்டு இப்பெயர் குறித்து வழங்கலாயிற்றெனவும், சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை எனும் இரண்டு பாடலிற்கண்ட அடிகளின் சிறுமை, பெருமை நோக்கியேனும் அன்றி, 'இன்குரற்சிறியாழ் இடவயிற்றழீஇ' எனவும், 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக்கழிப்பி' எனவும் வரூஉம் அடிகளில் குறிக்கப்பட்ட சிறியாழ், பேரியாழ் எனும் சொற்றொடர் கொண்டேனும் இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம் எனவும் ஐயுற்றுக்கூறியுள்ளனர். ஆழ்ந்து நோக்குமிடத்து இவற்றினும் சிறந்த காரணம் ஒன்றிருக்கவும் கூடுமெனக் கருதுகின்றேன். அஃதை இவண்கூறுதல் மற்றொன்று விரித்தல் எனும் குற்றத்தின்பாற் படாதாகலின் வரைதல் இன்றியமையாததாயிற்று.

பாணர் என்ற சொல் இக்காலத்துப் பாடுவோரையே குறிக்குமாயினும், அதன் வேர்ச்சொல்லை நோக்க வேறு பொருளும் கொள்ள இடனுளது. பண் என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததே பாணர் என்பது. பண்டைத்தமிழர் பண் என்பதைக் குறிக்க வழங்கிய சொல் யாழ் என்பதே யாம். எடுத்துக்காட்டாக, குறிஞ்சிப்பண் என்பதற்குக் குறிஞ்சியாழ் என வழங்கியமை காண்க. யாழிற்பிறக்கும் ஓசையினும் உள்ளத்தை ஈர்த்து இன்பமூட்டவல்லது வேறில்லாமையே அவ்வாறு வழங்கக் காரணமாயிற் றென்னலாம். வள்ளுவப் பெருந்தகை மழலைச்சொல்லின் மாண்புகூறவந்தவிடத்து, 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள், மழலைச்சொற் கேளா தவர்' என இன்னிசை பயக்கவல்ல கருவிகளுள் சிறந்தது குழல் யாழ் என்பதைக் குறிப்பாக உணர்த்தியுள்ளார். ஆகவே யாழ் வல்லார் கட்கே பழந்தமிழர் பாணர் என்றழைத்தனர் என்பதும், 'பாணன், பறையன், துடியன், கடம்பன் என்றிந்நான் கல்லது குடியுமில்லை' என்றமையின், பழந்தமிழ்க் குடியின ருள் தலைசிறந்து விளங்கியவர் பாண் மரபினரே என்பதும் தெற்றென அறியலாம். இம் மரபினரே சிறுபாணர் பெரும்பாணர் என இரு பிரிவினராயிருந்தனர் என்பதற்கு

இலக்கியங்கள் சான்றுபகருமாயினும், உயர்வு தாழ்வு கருதியோ யாழின் சிறுமை பெருமை கருதியோ இப் பிரிவு உளதாயிற்று என்று யாண்டும் வரையறுக்கப்பட்டின்று. அன்றியும், அடிகளின் நிமிர்வு தாழ்வுபற்றி வந்த தென்று கருதுதலும் செவ்விதன்று. ஆயின், இப்பிரிவு எற்றால் வந்ததெனிற் காண்பாம்.

தமிழிலே பண் இருவகைப்படுமென்பது, 'நிறை நரம்பிற்றே பண்ணென லாகும்' 'குறை நரம்பிற்றே திற மெனப் படுமே' எனும் திவாகர அடிகளால் அறியலாம். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழிசையான் இயன்றது பண்ணும் என்பதும், ஆறு, ஐந்து, நான்கு எனக் குறைந்த இசையானியன்றது திறமாம் என்பதும் உணர்க. பண், திறம் என்பன இரண்டையும் சேர்த்துப் பண்ணென்றே வழங்கினர். தமிழில் ஐந்திணைக்குமுரிய பண்களையும் குறிஞ்சியாழ், பாலையாழ், முல்லையாழ், நெய்தல்யாழ், மருதயாழ் என்றழைத்தனர். அஃதன்றியும், திறங்களுடைய யாழே பெரும்பண் எனவும் பாகுபடுத்தினர். 'யாம யாழ்ப் பெயர் குறிஞ்சி யாழும் செவ்வழி யாழ்ப்பெயர் முல்லை யாழும் பாலையாழும் மருதயாழும் என நால்வகை யாழும் நாற்பெரும்பண்ணே' என்ற திவாகர நூற்பாவால், குறிஞ்சி, செவ்வழி, பாலை, மருதம் என்பனவே நான்கு பெரும் பண்களென அறிகின்றும். இந்நாற்பெரும் பண்களுள்ளே குறிஞ்சியாழுக்கு எட்டும், பாலையாழுக்கு ஐந்தும், மருதயாழுக்கு நான்கும், செவ்வழி யாழுக்கு நான்கும் ஆக இருபத்தொரு திறங்களென வரையறுத்துள்ளமையும் அறியற்பாற்று. இவ்வரையறையினை, 'ஈரிருபண்ணும் எழுமூன்று திறனும்' எனும் பிங்கல நூற்பாவால் தெள்ளிதின் உணரலாம். இப்பண்களை வெளிப்படுப்பனவாகிய யாழ் பலதிறப்படும். அவை, பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பனவாம். இவற்றிற்கு நரம்பு முறையில் வேறுபாடுண்டென்பது,

" ஒன்றுமிருபதும் ஒன்பதும் பத்துடனே
நின்ற பதினன்கும் பின்னேழும்—குன்ருத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி "

என்றமையால் விளக்கமுறுவதோடு, முறையே இருபத்தொன்றும், பத்தொன்பதும், பதினன்கும், ஏழும் என்பதும் பெறப்படுகின்றது. இங்குக் கண்ட யாழ்வகையினை மீட்டுபவர் யாவரேயாயினும் பாணர் என்றே அழைக்கப்படுவர். ஆகவே, யாழ்பற்றியது என்பது சாலாது. பாணர்கள் தாங்கள் அறிந்த பண்களை எந்தயாழினும் சிறிதாவது நிறுத்திக்காட்டுவர். அவர்களுள், யாவரும் திறங்களோடியைந்த நூற்றுமூன்று பண்களை அறிந்து திறனுடையராயிருப்பர் என்பது முற்றிலும் இயலாததே. விரல்விட்டெண்ணத்தக்க சிலரே இருந்திருத்தல் வேண்டும். அவர்களே பெரும்பாணரென அழைக்கும் தகுதி வாய்ந்தவர். ஏனையர் சிறுபாணராவர். பண் அறிந்த காரணம் பற்றி இப்பிரிவு உண்டாயிற்றுதல் என்று கோடலே பொருத்தமுடையதெனப் புலனுகின்றது. இசையாராய்ச்சியின் மிக்கோர் இக்கருத்தினை ஆய்ந்து உறுதியளிப்பாராக.

ஆக்கியோன் வரலாறு :—இந்நூலை இயற்றியருளியவர் இடைக்கழி நாட்டினைச் சார்ந்த நல்லூரின்கண் வாழ்ந்த நத்தத்தனர் ஆவர். பண்டைக் காலத்துப் புலவர்களின் பெயர்களை, தாம் வாழும் ஊரினையும், செய்யும் தொழிலினையும், தந்தையின் பெயரினையும் சிறப்பாகக் கொண்டு வழங்கி வருதல் மரபு என்பது, காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர், கூலவாணிகன் சாத்தனர், மதுரைக்கணக்காயனர் மகனர் நக்கீரர் என்ற பெயரால் அறியக்கிடக்கின்றது. இம்முறைபற்றியே ஊரின் பெயரால் சிறப்பிக்கப்பட்டு நத்தத்தன் என்ற இயற்பெயருடன் ஆர் என்ற உயர்வுப் பன்மை விகுதிசேர்ந்து "இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனர்" என வழங்கப்பட்டார் என்பர். சிறப்புப் பொருளைத் தரும் 'ந' என்ற இடைச்சொல்லும், உயர்த்தற்கண் வழங்கும் ஆர் எனும் பன்மை விகுதியும் முன்னும்

பின்னும் பெற்று, நக்கீரர், நப்பாலத்தர், நச்செள்ளையார் எனும் பெயர் வழங்குமாறுபோல, தத்தன் எனும் இயற்பெயரும் கல்வி மேம்பாடுகுறித்து "நத்தத்தனார்" எனப் பிற்காலத்தில் வழங்குவதாயிற்று எனக் கூறியுள்ளார். நத்தத்தனார் என்ற பெயர் வெவ்வேறு காலத்திற்றோன்றிய புலவர்கட்குத் திரிபின்றி வழங்கி வருதல், புறநானூறு, திருவள்ளுவமாலை, நத்தத்தம் முதலிய நூல்களால் அறி கின்றோமாதலானும், நக்கீரர் முதலிய பெயர்கள் பிற் காலத்து எவருக்கும் வழங்கப்படாமையானும், தன்னை விரும்பித்தொழுவார்க்கெல்லாம் இனிய தன்மையான் எனும் பொருளில்வரும் நச்சினார்க்கினியர் என்ற பெயர் போல, இயற்பெயர் நத்தத்தன் என்பர். இஃது ஆராய்தற் குரியதாம்.

இப்புலவர் தொண்டை நாட்டிற்குரியவர். இவர், 'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை' என்று கூடலைச் சிறப்பிக்கின்றமையான், மதுரை யில் தமிழாராய்ந்த சான்றோர் வரிசையில் விளங்கிநின்று, இப்பாடலைப் பழங்கால முறைப்படி, சிறந்த ஓசையான் ஒழுகும் அகவற்பாவால் யாத்துள்ளனர். சங்ககாலத்தில் இழுமென் மொழியான் விழுமிய ஓசைபெற வியலநிற்கும் பா, அகவற்பாவெனின் மிகையாகாது. பழங்கால நூல்கள னைத்தும் அகவற்பாவால் இயன்றுள்ளமையே சான்றாம். இச்செய்யுள், பாவினுக்கு வேண்டும் உறுப்பெல்லாம் கொண்டு, இன்னோசை தழுவி, பொருள்வளமும் சொல் வளமும் துறுமி, சில்சொல்லில் பல்பொருள் தேற்றி, அறிவை நுணுகச்செய்து, கேட்பார் யாவரும் இன்புறும் பான்மையுடைத்தாதல் நன்கு தெளியப்படும். இந் நூலினைப் பயில்வார் உள்ளத்தைப் பிணிக்குமாறு, ஆற்றுப் படை இலக்கணநெறியினின்றும் வழாஅது, இயற்கைக் காட்சிகளையும் உண்மை நிகழ்ச்சிகளையும் கண்டவாறே கிளந்து முறைப்படுத்திய திறம், இப்புலவர் விரிந்த அறிவின் மாட்சியை உணரச் செய்தலோடு, இந்நூலின் உயர்வைத் தெற்றெனப் புலப்படுத்தா நிற்கும். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்க' என்ற பொன்மொழிகளை வாழ்க்கையில்

கடைப்பிடித்தொழுகுதல் புலவரியல்பென்பதும், எண்ணிய எண்ணியாங்குச் செய்வினையைச் செவ்வனே முடிக்கக் கருதும் செம்மல் உள்ளம்படைத்தோர், இன்னலின்றி இனிதே வெற்றியுற ஏற்புடைய முழுமுதற்பொருளை வாழ்த்திப் புகுதல் இயல்பென்பதும் அறிவுறுத்துவான்,

" மணிமலை பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போல "

என்று இயற்கைத் தெய்வத்தைவழுத்தி, அளக்கலாகா அழகு நிறைந்திலங்கும் உயர்மலையினையும், அடிதோய்ந்து கிடக்கும் நிலப்பரப்பினையும் உள்ளத்தே நிறுத்தி, பணைத்தோளினையும் முத்து வடம் தவழும் மார்பினையும் உடைய நிலமடந்தையாக உருவகப்படுத்தி, உள்ளக்கிழியில் ஒவியம் வரைந்து கண்டு களிப்புற்று, இச்சிறுபாணாற்றுப் படையினைத் தொடங்குதல் மாட்சியுடைத்தாம்.

அதன்பின், பாணருடன் சென்று விறல்பட ஆடும் மகளிரியல்பும், முடியுடை மூவேந்தர் பெருமை கூறுமுகத்தான் அவர்தம் தலைநகராய வஞ்சி, உறந்தை, கொற்கை, மதுரை. முதலியவற்றின் சிறப்பும், கடையெழுவள்ளல்களின் அருஞ்செயல்களும், ஐந்திணை வளங்களும், ஆங்குள்ள மக்கள் வாழ்க்கை முறையும், விருந்தோம்பலாகிய வேள்வியும், பாணனுடைய வறுமைநிலையும், பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக்கோடனது நற்குணங்களும், வீரச் செயல்களும், வள்ளன்மையும், யாழின் அமைப்பு முறையும், நல்லியக் கோடனைப் புகழுமுறையும், அவன் பாணர் முதலியோர்க்குப் பரிசில் நல்கும் அருமையும், விளக்கமுற வரைந்து காட்டுகிறார். இவையனைத்தையும், நூற்பாவின் வழியேசென்று ஒழுங்குறக்காண்டலே இன்பந்தருமாகலின், அமைந்துகிடக்குமாற்றான் உணர்ந்துமகிழ்வாம்.

பாலைநெடுவழியிற் பாணரிருவர் :—இந்நூலின்கண் யாழ் வல்ல பாணரிருவர் வழியின்கண் எதிர்ப்படுதலாகவைத்து, அவ்விருவரையும் ஒரே தன்மையில் வைத்துக்காட்டாது, வறுமையின் முடிந்த எல்லையினை ஓர்புறமும், செல்வத்தின் எக்களிப்பை ஓர்புறமும் உருவெழுதிக் காட்டுவார்போல,

வள்ளியோரின்மையான் வாட்டமுற்ற பாணனையும், வரையாது வழங்கிய பெரும்பொருளால் மகிழ்ந்து செம்மையுற்ற பாணனையும் எதிர் நிறுத்துகின்றார். புலவர்கள் வறுமைக்காலத்தும் செம்மை குன்றாதவர் எனும் உயர்ந்த பண்பை நிலைநாட்டுவார் போலவும், இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் தமியராய் உண்ணாது பகுத்துண்டு மகிழும் பான்மையுடைய தமிழ்க்குடியின் சிறப்பைத் தெளிவுறுத்துவார் போலவும், பெரும்பரிசில் பெற்ற பாணன் காண்டலும் இரங்கித் தான்பெற்ற இன்பம் பெறுதல் வேண்டுமென இனவுணர்ச்சிகொண்டு, தன் எதிர் வந்த பாணனை விளித்துக்கூறும் தன்மையில் அமைக்கின்றார். பாணன் வறிதே அவனை விளித்தல் நலம் பயவாததோடு பசியின் கொடுமையால் புறக்கணித்தலும் கூடுமாகலின், அவ்வாறு கூறாது, வறுமையுற்ற புலவனோடு தானும் வருந்தி, காலத்தின் கொடுமை, வழியின் அருமை, விறலியர்சிறப்பு, புலமை ஏற்றம் முதலிய புனைந்து கூறும் திறம் புலன்களை இன்புறுத்துவதாகும்.

இச் சிறுபாணாற்றுப்படை இலக்கணத்திற்கென்றே யாக்கப்பட்டதோவெனும்படி சிறப்புடைத்தாக அமைந்துளது. ஐந்திணை இயல்புகளைச் செவ்வனேகூற விழைந்து, முதற்கண் பாலைத்திணையின் இயல்பைச் சித்திரிக்கின்றார். பாலைத்திணையின் இயல்பென்னையெனின், 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து நல்லியல் பிழந்து நடுங்குதுயருறுத்துவது' என்பதும், 'காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலை தேம்பிக்கூவல் மாறி, நீரும் நிழலுமின்றி நிலம்பயந்துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று, இன்பமின்றித் துன்பம் பெறுவதாய இளவேனில் முதுவேனில் இரண்டையும் தனக்குக் காலமாக உடைத்து' என்பதும் ஆம். இவ்வியல்பனைத்தையும் முறையே கொண்டியல்வதைக் காண்பாம்.

பாலை நெடுவழியிலே பாணரிருவரும் எதிர்ப்படுங்கால், பரிசில் பெற்றான் விளித்துக்கூறுவதாக அமைக்கிறார். அஃதாவது,

"மஞ்சுதவழ் மலைத்தலையினின்றும் இழியும் அருவிகள், பொன்னும் மணியும் அகிலும் ஆரமும் உந்திக் கரையைக் குத்தி அழிக்கும் கான் யாற்றொடு கலந்து, அலையின் ஒலி மிக்குச் செல்லும் புனல் இல்லையாகவும், ஆற்றிடைக் குறையில் நின்ற இள மண் மரங்கள், குயில்களின் அலகால் உதிர்க்கப்பட்டு, மயிர் விரிந்து கிடந்தாலொத்த கருமணலின்மேல் சிதறி, வாடுதற்கு ஏதுவாகிய இளவேனில் நிலைபெற்ற காலமும், அஃதொழிய, ஞாயிற்றினது வெங்கதிர் நாள் முழுதும் தெறுதலால், வெம்மையுற்ற பருக்கைக் கற்கள், வேல் காய்ந்த தன்மையவாய், அடியைக் கிழிக்கும் கானத்தின் நடுவே செறியாத நிழலையுடைய கடம்பின் அடியிலே இளைப்பாறிப் பின்பு போகவேண்டும் முதுவேனிலும், நிலைபெற்ற பாலைநிலமாகிய தொலையாத சுரத்தினை, வறுமை நலிதலான் கடந்து தளர்வெய்தி, அதனால் இளைத்து ஒய்ந்த விறலியர் தம் அடியின் வருத்தந்தீர, ஏவலிளையர் மெத்தென்று வருடவும், பாண்மகன் பாலையாழை இனிமை பொருந்த இயக்கவும், பரிசில் ஊட்டும் வள்ளியோரை நாடி, சிறியாழை இடப்பக்கத்தே முறைப்படி தழுவி, வழியால் வந்த வருத்தம் தீர்ந்திருந்த பேரறிவுடைய பாணனே!" என்பதாம்.

விறலியர் சிறப்பு:—அழகிற்கு உறைவிடமானவர்கள் பெண்கள் என்பது யாவரும் கூறுவதாம். இயற்கையிலே அழகு பெறுதல் ஒரு பெரும்பேறெனினும், செயற்கையாலும் தங்கள் அழகு குன்றாவண்ணம் ஆவன செய்தலும், இன்றியமையாததே. அத்தகைய நிலையிலே, பண்டை நாளில் உறுப்புகளெல்லாம் செப்பமுறவமைந்து அழகுற்று, ஆடல் பாடல் வன்மையிற் சிறந்து விளங்கியவர்களே, தமிழ்நாட்டுப் பெண்களாகிய விறலியர். ஈண்டு விறலியின் உறுப்புகள் ஒவ்வொன்றையும் உவமை முகத்தால் சிறப்பித்துள்ளமை காணலாம்.

'வானின்று நண்ணிதாய்த் தாழ்ந்து பெய்யாநிற்கும் மழைபோன்ற அழகிய நெய்கனிந்த இருண்ட கூந்தலினை

யும், கார்கண்டு களிகொண்டு தோகை விரித்தாடும் மயிற் குழாஅங்களும் வெள்கி மறையுமாறு கட்புலனாய்த் தோன்றும் சாயலினையும், நாயினுடைய நல்ல அழகுடன் மடிந்து நிற்கும் நாவும் வருத்தமுற, அணியும் சிலம்பு முதலியவின்றி வறுமையால் பொலிவழிந்த அடியினையும், பிடியினது தூங்குகைபோன்று அடியோடு தொடர்புபட்டு முறையாற் பருத்தும், ஒழுங்குபட வளர்ந்த வாழையெனத் திரண்டும், ஒன்றையொன்று நெருங்காநின்ற குறங்கினை யும், வாழையின் பூவினது தோற்றம் போலப் பொதிந்த ஒதியினையும், வேங்கை நாண்மலரினைவென்ற சுணங்கினை யும், கோங்கின் முகையை எள்ளி மெல்லிய பணிகளுக் கிடையிலே அடங்கிய நகிலினையும், நுங்கின் இனிய குளிரிளநீரும் தன்னீர்மையாற்றாழும் எயிற்றினையும், முல்லைசான்ற கற்பினையும், மெல்லிய இயல்பினையும், மானோக்கினையும், ஒளிவிளங்கு நுதலினையும் உடைய, விறல்பட ஆடும் மகளிர்' என்று "மஞ்செனத் திரண்ட கூந்தல்"தொட்டு "பஞ்செனத்தகைய அஞ்செஞ்சீறடி" காறும் பொருத்தமான உவமைகளால் அமைத்துப் பாடி யிருத்தல் கற்போர் கருத்தைக் கவர்வனவாம்.

மூவேந்தரின் நாடு, நகரச் சிறப்பு :—இப்பாட்டுடைத் தலைவனாகிய ஒய்மாநாட்டு நல்லியக் கோடனின் நாட்டு வளப்பத்தையும், நகரத்தின் சிறப்பையும் ஒருபாணன் எதிர்வந்த பாணனுக்குக் கூறுவதாக அமைக்குமிடத்து, முடியுடை மூவேந்தர் கடையெழுவள்ளல்கள் ஆகியோர் நாடு, நகரங்களின் சிறப்பினொடு ஒப்பிட்டுக் காட்டுமா போல் சிறப்பித்துள்ளார். மூவேந்தர் என்பார் பழந் தமிழ்க் குடிகளாகிய சேரசோழபாண்டியர் என்று புகழ்ந்து சுட்டப்படினும், ஈண்டு முதற்கண் சேரனையும், பின்னர்ப் பாண்டியனையும், இறுதியில் சோழனையும் நிறுத்திச் சிறப்பித்துள்ளமையும், 'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு' என்ற நாட்டின் இலக்கணத்தை விடாதுளத்தமைத்து முறை பிறழாது பாடியுள்ளமையும், கண்டு மகிழற்குரியன.

முதற்கண் சேரநாட்டினைக் கருத்துட்கொண்டு அந் நாட்டின் இயற்கைவளத்தை வரைந்துகாட்டும் பகுதி, புலவர்தம் பரந்த புலமையை விளக்குவதோடு நில்லாது, நம்மையும் இயற்கையழகில் தோய்ந்தின்புறுமாறு செய்ய வல்லதாம்.

ஐந்திணை வளமும் பழுநிய சேரநாட்டின் நிலப்பகுதி ஒன்று. ஆங்கே அழகுற விளங்கும் பொருள்கள் கொழுவிய மீன், வளவிய செங்கழுநீர், கயவாயெருமை, பசிய மிளகுக்கொடி, நிவந்த பலா, மெல்லிலை மஞ்சள், காட்டு மல்லிகை முதலியன. இப்பொருள்களைக் கருத்திற் கொண்டார். நாட்டுவளத்தை நயம்படத் தெரிக்க எண்ணினர். ஓவியமாகத் தீட்ட உள்ளங்கொண்டார். கருத்து வண்ணத்திலே அறிவுக்கோல் தோய்த்து உள்ளக்கிழியிலே உயிரோவியமாக வரைந்தார். அவ்வோவியமாகிய கைபுனைந் தியற்றுக் கவின்பெறுவனப்பைக் கவியாக யாத்தமையை உள்ளத்தால் முகந்து மகிழ்வாம்.

தமிழ்நாட்டின் செல்வச்சிறப்பை யுணர்த்தும் தட மருப்பெருமை, கொழுவிய மீன் துணியும்படி நடந்து, வளவிய செங்கழுநீர்ப்பூவை விரும்பித்தின்று, பசியமிளகுக்கொடி படர்ந்த பலாவின் குளிர்ந்த நீழலிலே, மஞ்சளினது மெல்லிய இலை தனது மயிரையுடைய புறத்தினைத் தென்றல்போல் தடவ, தேன் மணம் கமழமென்று அசையிட்டுக்கொண்டே, பாறின்நிறந்தோற்றுத பரந்து பூத்து விளங்கும் காட்டுமல்லிகைப் பாயலிலே, இனிது துயில் கொள்ளும்' என்பது. இவ்வோவியம் சேரநாட்டின் செல்வச் சிறப்பை யுணர்த்தி, ஆங்குள்ள அஃறிணைப் பொருளும் எவ்வித பசியும் பிணியும் பகையுமின்றி வாழ்தலான், மக்கள் வாழ்க்கையும் செல்வம் பொருந்தியிருந்த தென்பதையும் உணர்த்துகின்றதன்றோ? இக் கருத்தினைப் பொதிந்த பொன்போன்ற அடிகளை உளத்திலே பதித்து நினைந்து நினைந்து உருகுதல் கடனும். அவற்றினைக் கீழே குறிக்கின்றாம்.

> " கொழுமீன் குறைய வொதுங்கி, வள்ளிதழ்க்
> கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
> பைங்கறி நிவந்த பலவி னீழன்
> மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
> வினையா விளங்கள் நாறமெல்குபு பெயராக்
> குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
> குடபுலம் " (சிறுபாண்: 41-47)

இத்தகைய நாட்டுவளம் அகத்துறைக்கண் வரும் செய்யுட்களிலும் குறிப்பாகப் பொதிந்துள்ளமை காண லாம். அஃதை உள்ளுறைப்பொருள் என்று கூறுவர். பன்னாட்கள் முயன்று வருந்திக் கணக்கில்லாத அரும் பொருளைக் கண்டானொருவன் உலப்பிலா உவகைக் கலுழ்ச்சியில் ஆழ்தல்போல, அகத்துறைக்கண் உள்ளுறைப் பொருளைத் தன் நுண்புலத்தால் ஆய்ந்துகாண்பார், தன் னையுமறந்து இன்பக்கடலில் திளைத்தல் காணலாம். ஈண்டு, அகநானூற்றின் முதற்கண் வீறுபெறவியலும் களிற்று யானை நிரைப்பகுதியில் வரும் அரும்பாடலொன்றை நினைவுறுத்திச் செல்ல விழைகின்றேன்.

தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள். தலைவன் ஆற் றுமைமிகுதியான் பகற்குறிக்கண் வந்திருக்கின்றான். தோழி தலைவன் வருகையையுணர்ந்து, தலைவி இற்செறிக் கப்பட்டுளாள் என்பதையும், களவொழுக்கம் ஒழுகுதலைத் தவிர்தல் வேண்டுமென்பதையும் உணர்த்தி, விரைவில் வரைந்து கொளல் நலம் என்பதைக்குறிப்பால் அறிவுறுத்து கின்றாள். இக்கருத்தினை, அவனை விளித்துக் கூறும் பொழுது அமைத்த திறனை உன்னுவாம்.

> " கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
> ஊழுறு தீங்கனி உண்ணு நர்த் தடுத்த
> சாரற் பலவின் சுளையொடு ஊழ்படு
> பாறை நெடுஞ்சினை விளைந்த தேறல்
> அறியா துண்ட கடுவன், அயலது
> கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது
> நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
> குறியா இன்பம், எளிதின் நின்மலைப்
> பல்வேறு விலங்கும் எய்தும் நாட !" (அகம்: 2)

இப்பாடலுள், ஒரு கடுவன் வளமிய வாழைக்கனியை உண்டு வெறுத்தபின், சாரற்பலவின் இன்சுளையுண்டு அதனையும் வெறுத்துப் பாறையிடத்தேயுள்ள நெடிய சுனையில் விளைந்த நறுந்தேனுண்டு, அவ்வுண்ட மிகுதியால் கறிக்கொடிபடர்ந்த சாந்தமரத்து ஏறமுடியாது மயங்கிப் பாரிடத்தே விரிந்து செறிந்து கிடந்த பூக்களாலாய படுக்கையில் கண்படைகொள்ளும் நாட்டையுடையவன் என்ற வெளிப்படைப் பொருளும், கடுவனைப்போன்று தலைவன் களவொழுக்கமாகிய இன்பம் நுகர்ந்து, தன் தொழிலாகிய அறநெறியையும் தப்பி, இக்களவினைத் தவிர்ந்து வரையவு மாட்டாது, களவொழுக்கமாகிய இன்பக்கேணியில் மூழ்கி மயங்கா நின்றான்' எனும் உள்ளுறைப் பொருளும் கொண்டிலங்குதல் காண்க. இத்தகைய பாடல்களே, உளத்தைக் கனிவித்து, பயில்தொறும் பயில்தொறும் பாவின் நலமெலாம் பயக்குமேயல்லாது, பிறவெல்லாம் அங்ஙன் ஆகா.

மந்திகள் பழங்களையே உணவாகக்கொண்டு வாழும் இயற்கை வாழ்வும், அளவின் மிகின் மயங்கிச் சோரும் எனும் உண்மையும், ஈண்டுக் கண்டாற்போலவே, மணிவாசகப் பெருந்தகையின் திருச்சிற்றம்பலக்கோவையிலும் காணப்படுகின்றன. இதனால் புலவர் பெருமக்கள் இயற்கை நெறியினை உள்ளவாறே உருவாக்கும் பெற்றிமையுடையார் என்பது புலனாகின்றது.

> "மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
> எய்யா தயின்றிள மந்திகள் சாரும் இருஞ்சிலம்பா!
> மெய்யா வரியதெ னம்பலத் தான்மதி யூர்கொள் வெற்பின்
> மொய்யா ரிளவள வேங்கைபொன் மாலையின் முன்னினவே"

என்று காலங்கூறி வரைவுகடாவும் துறைப்பாடலும் உரைநயமும் ஒத்து நின்று இன்புறுத்துமாற்றை ஓர்க.

இத்தகு வளமெலாம் நிரம்பவுடைய குடநாட்டுக் காவலனும், வடஇமய நெற்றியில் ஒன்னாரைச் செற்று வென்றிபடைந்தமைக்கறிகுறியாக வில்லைப் பொறித்த விறலோனும் ஆகிய குட்டுவனுடைய தலைநகராம் வஞ்சி மாநகர், 'வருபுனல் வாயில் வஞ்சி' என்ற அடியில்

வள்ளுவர் குறித்த நாட்டின் இலக்கணம் அமைந்துகிடத் தலைப் பார்க்கலாம். 'இருபுனலும் வாய்ந்த மலையும், வருபுனலும், வல்லரணும் நாட்டிற் குறுப்பு' என்ற குறளிலுள்ள வருபுனலும், வல்லரணும் என்பதற்கு உரை வரைந்த பரிமேலழகர், மலையினின்றும் வருவதாய நீரும், அழியாத நகரியும் என்று எழுதினர். இவ்விரண்டு இலக் கணமும், வருபுனல் வாயில் வஞ்சி என்பதனல் அறியக் கிடக்கின்றன. வானம் வறப்பினும் புனல் இடையறு தொழுகிச் செல்லும் துறைக்கண் அமைந்த, அரண் சூழ்ந்த வழக்கறுவாயிலையுடைய வஞ்சிமாநகர் என்று சிறப்பித்தமை காண்க.

இனி, பாண்டிநாட்டு வளப்பம் காண்பாம். புலவர் பெருமக்கள் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பினுல், அதன் சிறப்பனைத்தையும் விரித்துச் செல்லுமியல்பினரல்லர். அவற்றுள், தலையாயதும், தொன்மையதும் ஆகியவற்றை விழுமிய சொல்லால் சுருங்க அமைத்து விளங்கவைப்பதை யாண்டும் காணலாம். பண்டைநாட் புலவர் பெருமக்கள் நிறைந்த கருத்தைச் சுருங்கிய சொல்லால் விளக்கியிருக்க, பின்னுளில் சுருங்கிய கருத்தைப் பரந்த சொல்லால் விளக்கிவருதலைக் காண்கிறோம். இஃது கால மாறுபாட் டாலுண்டாயதென்பதிற் கையமின்று. நிற்க. ஈண்டு, பாண்டி வேந்தனின் புகழை நிலைநாட்டத் துணையாய்நின்ற இரண்டு நகரங்களைக் கண்டார். ஒன்று கடற்பாங்கரும், பிறிதொன்று ஆற்றின் கரையிடத்தும் அமைந்துள்ளவை. இவ்விரண்டும் வெவ்வேறு சிறப்புடையன. பாண்டிநாட் டின் சிறந்த வளம் முத்து என்பது. 'முத்துடைத்துப் பாண்டிநாடு' என்ற சொற்றொடராலும், சங்கநூற் பாடல் களானும், வரலாற்று வல்லுநர் குறிப்புச் சுவடியாலும் தெள்ளிதின் உணரலாம். முத்துக்கொழிக்கும் துறைகள் பன்னுடுகளினும் இருப்பினும், பாண்டிநாட்டுத் துறை யாகிய கொற்கை முத்தையே, பெரிதும் மதிப்புடையதாக எல்லா நாட்டினரும் விரும்பி அணிந்து அழகுசெய்து மகிழ்ந்ததாகக் காண்கிறோம். முத்து வாணிபம் ஒன்று

கொண்டே தமிழ்நாடு பெரும்பொருளை ஈட்டியது என்பதை, உரோம் நாட்டுப் புலவன் பாடலால் அறியலாம். ஆண்டுதோறும் மூன்று இலக்கம் பெறுமான இடாலர்களை வாணிபத்தால் கொள்ளையடித்ததாகக் கூறி வருந்துகின்றான். இன்னும், ஒரு நாட்டு அரசி, மூன்று இலக்கம் பொன் கொடுத்து மூன்று கொற்கை முத்துக்களைப் பெற்று மகிழ்ந்தாள் என அறிகின்றோம். இலக்கியங்களில், 'கொற்கையம் பெருந்துறை முத்து' எனவும், 'விளைந்துமுதிர்ந்த விழுமுத்தின் இலங்குவளையிருஞ்சேரிக் கட்கொண்டிக் குடிப்பாக்கத்து நற்கொற்கை' எனவும், 'பல்லரண் கடந்த பசும்பூட் பாண்டியன் மல்குநீர் வரைப்பிற் கொற்கை முன்றுறை ஊதையீட்டிய உயர் மணலடைகரை ஓதை வெண்டிரை யுதைத்த முத்தம்' எனவும் பலபடப் பாராட்டி இருத்தலும் குறித்துணரற்பாற்று. இனி, பாண்டிநாட்டின் சிறந்த வளம் தமிழ். உலகெலாம் பரந்து விளங்கியதெனினும், தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்க்கே யுரியதாம். தமிழ் மூவேந்தராலும் போற்றப்பட்டமையும், உயிராகப் போற்றி அரசியலில் வழங்கச் செய்ததோடன்றி, உலகெங்கும் தமிழ் ஆட்சிபுரியச் செய்தமையும் காணலாம். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில், 'ஒருமொழி வைத்துலகாண்ட சேரலாதன்' என்று இளங்கோவடிகள் சிறப்பித்துள்ளார். உலகாண்ட தமிழ், மதுரையிடத்தே வீற்றிருந்தது என்பதை, 'தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின் மகிழ்நனை மறுகின் மதுரை' என்று உளங்குளிரக் கூறியுள்ளமையுங் காண்க. இத்தகு சிறப்பிற்றாய, தமிழ்வளம் பழுநியிருந்தவிடம், முத்தமிழ்க் கலைவளர்த்த பாண்டியன் தலைநகராய மதுரை என்பது யாவரே உணராதவர்? ஆகவே, எல்லாரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாற்றான், கொற்கை, மதுரை எனும் இரண்டு நகரங்களின் சிறப்பினால் பாண்டிநாட்டு வளத்தைக் காட்டுமருமை போற்றற்குரியது. கொற்கை வளத்தைக் கூறுகின்றபோழ்தே ஆங்குள்ள மக்கள் வாழ்க்கைநிலையும் உடன் கூறுகின்றார்.

கொற்கை வளமாகிய உப்பையும் முத்தையும் விற்பவர் வணிகர்களாகிய உமணர்கள். உமணர்கள் நாடோறும் விளைகின்ற உப்பைச் சகடங்களில் ஏற்றிச் சென்று விற்று மீளும் வாழ்க்கையுடையராகலின், தங்கள் இல்லாளையும், மக்களையும் கூட்டியே செல்வர். மக்கள் தங்கள் அலுவலுக்கு இடையூறுயில்லாமலும், தனித்திருந்து வருந்தி அழாமலும் உதவிக்காக, மந்தியின் மகார்களையும் தங்கள் பிள்ளைகளைப்போல் வளர்த்து, மார்பில் அழகுபெறச் சாதிலிங்கந்தோய்த்து, நெற்றியில் நெட்டியாற்செய்த பூக்களாலாகிய மாலையைச் சூட்டி, அழைத்துச் செல்லும் காட்சியும், உமட்டியர் முத்துநிறைந்த கிளிஞ்சல்களை வயிற்றிடத்தே இட்டுப் பொதிந்துசெல்லும் தோற்றமும், உமட்டியர் மக்களும், மந்தியின் மகாரும் இன்புறக் கிலுகிலுப்பை கொண்டு விளையாடும் காட்சியும், காண்போர்க்குப் பெருவிருந்தாகவிருக்கும்.

கொற்கைத் துறையிடத்தே முத்துக்குளிப்பார்தம் சிறார்கள், மந்தி மகார்களுடன் அச்சமின்றிக் கொஞ்சி விளையாடும் உள்ளம், இளமைக் காலத்திலேயே அமைந்து விடுகின்றது. பண்டைத் தமிழ்மக்கள் சிறார்களை வீரவுணர்ச்சியும், கலையுணர்ச்சியும்பெறச் செய்தார்களேயன்றி, அச்சுறுத்தி அவர்தம் உள்ளத்தைக் கோழைத் தன்மைப்படுத்தினரல்லர் என்பது, சங்க இலக்கியங்களில் பலபடக் காணலாம். அஃதேயன்றிக் கானவர் குலம் விளங்கக் காளத்தியப்பர் அருளால் தோன்றிய திருக்கண்ணப்பர் வரலாற்றில், அவர்தம் வேடர்குலச் சிறார்கள் உள்ளப்பண்பைச் சித்தரித்துக் காட்டுவதைச் சேக்கிழார் தம் செந்தமிழ் நலங்கனிந்த செய்யுள் உரைப்பது காண்பாம்.

> ‘ வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னோடும்
> புன்தலைச் சிறும கார்கள் புரிந்துடன் ஆட லன்றி,
> அன்புறு காதல்கூர அணையுமான் பிணைக ளோடும்
> இன்புற மருவி யாடும் எயிற்றியர் மகளிர் எங்கும்’,

இதன்கண், வேடருடைய ஆண்மக்கள் புலிக்குருளையொடும், வேழக்கன்றினோடும் விரும்பி ஆடினர் என்ப

தால், அவர்தம் இளமைக் காலந்தொட்டே பண்பட்டு வரும் உளத்திண்மையும் உடல் வன்மையும், எயிற்றியர் மகளிர் மான் பிணைகளோடும் மருவியாடினர் என்பதால், அன்போடியைந்த இன்ப வாழ்வும் உணர்த்தப்பட்டமை நன்கு அறியலாம். பண்டைநாளில் ஒவ்வொருவரும் புலியினது உள்ளம் படைத்தவர்களாகி விளங்கியமை, 'புலி சேர்ந்து போகிய கல்லளைபோலத் தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே,' என வீரத் தமிழ்மாது கூறும் புறநானூற்று அடிகளாலும், 'துஞ்சு புலி யிடறிய சிதடன் போல உய்ந்தனன் பெயர்தலோ அரிதே,' எனச் சோழ வேந்தனாகிய நலங்கிள்ளி கூறும் வஞ்சின உரையாலும், 'தொடங்குவினை தவிரா அசைவில் நோன்றாள், கிடந்துயிர் மறுகுவதாயினும், இடம்படின் வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த தாழ்வில் உள்ளம்,' எனவரும் அகநானூற்று அடிகளானும் அறியக்கிடக்கின்றது. இக்காலத்து மக்களைத் தாயரும் பிறரும் அச்சுறுத்தி, உள்ளத்தை உருக்குலைத்து, புலியடியைக் கண்டவனைக் கண்டஞ்சும் நெஞ்சராய் ஆக்கிவருதலைக் காண்கிறோம். தமிழர் தம் வாழ்விற்குத் தமிழனே பகைவன் என்பதற்கு இத்தகைய உள்ளம்படைத்த தாயரே சான்றாவர். இனியேனும், தாயர் பண்டைப்பண்பின் வழிநின்று புலி நிகர்த்த இளவல்களைக் கண்டு களிதுளும்புவர் என்பது உறுதி.

சோழநாட்டின் திறங் கூறுதல் காண்பாம். 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி,' எனச் சிறப்பித்துக்கூறும் பொன்னியாறொழுகிப் பொன் கொழித்தணிசெய் சோழநாடு. மருதத்தண்பணை மாண்புற விளங்குதல் வேறெங்கணும் காண்டல் அரிது. இத்தகு வனப்புடைச் சோணாட்டின் சிறப்பை இரண்டு பொருளால் விளக்கிச் செல்லுதல் குறிப்பிடத்தக்கது. முதலிலே, மருதவளம் தெரிப்பதை நோக்குவாம்.

செறிவுடைக் கடப்ப மரங்கள் சூழநிற்கும் நறுநீர்ப் பொய்கை. கடப்ப மலர்களின் தாது சேர்ந்து சித்தி

ரத்தையொத்து விளங்குகின்றது. அப்பொய்கைத் துறையிடத்தே எழுகின்ற நகிலினையொத்த தாமரைமுகை. அஃது, சாதிலிங்கம் தோய்ந்த அங்கைபோன்று, சிவந்த இதழ்கொண்டு, அழகு பொலிமுகமோ என மலர்ந்திருந்தது. அதன் நாப்பண் செம்பொன்னாற் செய்தாலொத்த பீடத்திலே, தும்பி தன் இன்பெடை தழுவித் துயில் கொள்ளுகிறது. இரவெல்லாம் துயின்று சீகாரமென்னும் இன்னிசை விருந்தளித்து மகிழ்விக்கிறது. இதுபோன்றே, எங்கும் பசுந்துணி போர்த்தாற்போன்று விளங்கும் செழுமையுள்ள கழனிகளும், வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பரும் ஒருங்கேகொண்டு, தங்கண் வாழும் குடிகள் தேடி வருந்தாமலும், பிறவிடம் செல்ல விழையாமலும், நாடா வளங்கொண்டு விளங்குவதே மருத வளமாம். 'சோணாடு சோறுடைத்து,' எனப் பாராட்டுவதும் மருதவளத்தாலன்றோ ?

இவ்வாறு நாட்டுவளந் தெரிக்கப் புகும் புலவர், பெருமக்கள் உய்த்துணருமாறு பாடல் மொழிவதே சிறப்புடைத்தெனக் கருதினர் என்பது, நக்கீரர் தாம் இயற்றிய திருமுருகாற்றுப் படையின்கண், நான்மாடக்கூடலின் அணித்தேயுள்ள செவ்வேளுறை திருப்பரங்குன்றின் வளஞ்சுட்ட வந்தவிடத்து,

> "மாடமலி மறுகின் கூடற் குடவயின்
> இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
> முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
> கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
> கண்போன் மலர்ந்த காமரு சுனைமலர்
> அஞ்சிறை வண்டின் அரிக்கண மொலிக்கும்
> குன்று......"

எனக் கூறியமை ஒப்புநோக்கித் தெளிக.

இனி, சோழர் தம் அறந்துஞ்சு உறந்தைப்பதியின் சிறப்பினைப் புலப்படுத்துமாறு காண்பாம்.

சோழர் தம் தலைநகர் உறந்தை என்பது யாவரும் அறிந்ததே. அப்பதியின் சிறப்பினையுணர்த்தும், 'ஊரெ

னப்படுவது உறையூர்,' என்பதும், அதன் வென்றிச் சிறப்பினையுணர்த்தும், 'முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய புறஞ்சிறை வாரணம் புக்கனர்,' எனவரும் சிலப்பதிகார அடிகளும் உன்னத்தக்கனவாம். தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தம் 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல்,' என்ற அருமைப் பாடலுக்கு உரை பெய்வான்புக்க பரிமேலழகர், வாய்மை எனப்படுவதென்பதற்கு, மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது; அஃது, 'ஊரெனப் படுவது உறையூர்,' என்றாற்போல நின்றது எனக் கூறியுள்ளமையால் தமிழ்நாட்டுச் சிறப்புடைய நகரங்களுக்குள் உறையூரொன்றே அழியாப் புகழ்கொண்டு விளங்கியது என்பது உணரக்கிடக்கின்றது. அஃதேயன்றி, மதமுக வேழத்தை வெண்கோழி பொருது வென்றி எய்தியதெனவும், செம்பியன் படைவீரர்கள் இடுக்கண் பல அடுக்கிவரினும் பின்னடையாத திண்மையுள்ளம் படைத்த கொள்கை யுடையவரெனவும் பல்லிடத்தும் புகழ்ந்து சுட்டப்படும் கருத்து, இப்புலவரால், 'ஓடாப் பூட்கை உறந்தை,' என்று மிக அழகுபட அமைக்கப்பட்டிருக்கிறது. இது, 'விழித்தகண் வேல் கொண்டெறிய வழித் திமைப்பின், ஒட்டன்றோ வன்க ணவர்க்கு,' எனத் தமிழர் வீரப்பண்பைச் சுட்டிய வள்ளுவர் கருத்தொடு ஒன்றி நின்று சிறத்தலைக் காணலாம்.

கடையெழு வள்ளல்களின் சிறப்பு :—தமிழ்நாடு சிறக்கக் காரணமாயிருந்தோருள் கடையெழு வள்ளல்கள் தலை சிறந்தோராவர். அவர்கள் எழுவர் வரலாறும் ஒன்றுபடக் காணக்கிடப்பது புறநானூற்றிலும், இவண் ஆராயும் சிறுபாணாற்றிலும் ஆம். வள்ளியோர் எழுவரும் உள்ளி வந்தோர்க்கு இலன் எனும் எவ்வம் உரையாது உளங்குளிரக் கொடையளித்தமை கூறப்பட்டுளது. இவ் வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவணதெய்த இருதலையும் எய்துமென்பதும், செல்வத்துப் பயன் ஈந்து இசைபட வாழ்தல் என்பதும், உளங்கொடு, தனக்கென

வாழாப் பிறர்க்குரியாளராய், அன்பும் அருளும் உடைய ராய் வாழ்ந்தனர் என்பதும் அறிஞர் உணர்ந்ததேயாம். இவர்கள் கொடைப்பண்பை நமக்குக் காட்டியவர், புலவர்களாகிய நத்தத்தனாரும், பெருஞ் சித்திரனாரும் எனினும், இவர்கள் பாடுதற்குத் துணையாய் நின்றிலங்கிய இரு பெரும் வள்ளல்களாகிய நல்லியக் கோடனையும் குமணனையும், தமிழ்நாடு என்றும் மறவாது நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்! 'சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்றும் சொல்வித்ததே,' என்று பிற்காலப் புலவன் பெருமிதத்தோடு பாடியதுபோல, வள்ளல்களின்றேல் வண்டமிழ் வாணரெங்கே? வளப்பமிகு பாடல் எங்கே? வாழ்வில் தமிழர் செழிப்பதெங்கே? நிற்க.

இந்நூலினகத்தே குறிக்கப்பட்ட பேகன், பாரி, காரி, ஆய், அதிகமான், நள்ளி, ஓரி எனும் பெயருடைய எழுவரும் காலத்தால் ஒத்தவரென்று கொள்ளினும் எவர் முதல்வர் எனத் துணிதல் இயலாது. அதுபோன்றே வள்ளற் றன்மையிலும் இன்னவர்தான் சிறந்தாரெனக் கூறவியலாவாறு புகழ்கொண்டு திகழ்கின்றனர். ஆனல், யாம் எழுவரையும் ஒன்றுகவே மதித்தல்வேண்டும் என்னும் கருத்தையுட்கொண்டோ, வேறெக் காரணம் பற்றியோ, ஒவ்வொரு வள்ளலையும் நந்நான்கு அடியில் வரைப்படுத்திச் சிறப்பித்து யாத்த திறம், பாராட்டற் குரியதாம். ஒவ்வொரு நான்கு அடிகளினும், முன் இரண்டில் வள்ளல்தம் கொடைச் சிறப்பும், பின்னிரண்டில் அவர்தம் நாட்டுவளம், வென்றிச்சிறப்பு முதலிய குறிக்கப்பட்டிருக்கும் அருமையை என்னென்பது! இதன்கண் குறித்துள்ள முறையிற்பிறழ்ந்து, புறநானூற்றில் பெருஞ்சித்திரனார் எழுவரையும் அமைத்துப் பாடியுள்ளார். யாம் ஈண்டுக் காணும்முறையில் வரைவாம்.

முதற்கண், பேகன் என்ற வள்ளல் புகழப்படுகின்றான். இவ்வள்ளல் மலைநாட்டிடத்தே மகிழ்மீக்கூர்ந்து கூவாநின்ற மயில் ஒன்றினைக்கண்டு, குளிர் மிகுதியால் துன்புறுகின்றது போலுமென இரக்கமுற்று, அருள்

மிகுதியால், விலைமதிக்க வொண்ணாத கலிங்கமொன்றை நல்கினன் எனக் கூறப்பட்டுளது. அதன்பின்னர், பறம்பு நாட்டை யாண்ட பாரி எனும் வள்ளலின் சிறப்புக் கூறப் படுகின்றது. பாரி எனும் வள்ளல் மலைநாட்டின்கண் ணுள்ள நெடுவழியில் தேர்மீது இவர்ந்து சென்றுழிகை, அதுபோழ்து வழியிடத்தே முல்லைக்கொடி படர்ந்து காற்றலைசைந்து கொண்டிருக்கவும், அஃது கொழுகொம் பின்றித் தவிப்பதாக எண்ணி, அருள் மிகுதியான் தன் தேரை முல்லைக்குப் பற்றுக நிறுத்தி மீண்டனன் என அறிகின்றோம். இனி, காரி எனும் வள்ளல் தன்னை வந் தடைந்த இரவலர்க்கெல்லாம் இல்லையென்னாது இன்மொழி கூறி, குதிரையோடே தன் வளப்பமிகு நாட்டினையும் கேட் டார் வியக்குமாறு அளித்தனன் என்பது தெரியவரு கிறது. ஆய் எனும் வள்ளல், ஆலமர் செல்வராம் சிவ பெருமானுக்கு, நாகமொன்று தனக்கு நல்கிய ஒளிமிகுந்த நீலநிறம் பொருந்திய கலிங்கமொன்றை, இறைவன்பால் வைத்த அன்பின் மிகுதியால் மனமுவந்து கொடுத்தான் என்பது உணரக்கிடக்கிறது. அதிகமான் என்ற வள்ளல், கிடைத்தற்கரிய சிறியிலை நெல்லித் தீங்கனி யொன்றைத் தானுண்டு நெடிதுவாழ்தலை விரும்பாது, புலமை மிக்குடை ஔவையாருக்கு விரும்பி அளித்தனன் என்று காண் கிறோம். நள்ளி என்ற வள்ளல் தன்னிடத்துள்ள பொருள் களைக் கரவாது, நட்டோர் உவப்ப, அவர்கள் இல்லறம் இனிதே நடைபெறக் கொடுத்து மகிழ்ந்தனன் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. இறுதியாக, ஓரி என்ற வள்ளல் கூறப்படுகின்றான். இவ்வள்ளல் பெருந்தகை தனது வளப்ப மிகுந்த நாடுகளை இசைவல்லோர்க்கு வரையாது வழங்கினன் என்று கூறப்பட்டுள்ளது.

இவண் பேசப்பட்ட எழுவரது கொடைப் பண்பின் திறனை ஆராயின் ஒருவரையொருவர் விஞ்சி நின்று எவர் சிறந்தவர் என்று அறியவியலாவாறு கொடையில் சிறந்து நிற்றல் புலனும். இரு பெரு வள்ளல்கள் அஃறிணைப் பொருள்களைக் கண்டுளம் இரங்கிச் செய்தது அருட்

கொடையாகும். ஒரு வள்ளல் வறுமையால் வருந்திவந்த இரவலர்க்கெல்லாம் வரையாது வழங்கியது பெருங் கொடையாகும். ஒரு வள்ளல் இறைவனுக்கு அளித்தமை பற்றற்ற கொடையாகும். அதிகமான் ஔவையாருக்கு அளித்த கொடை உயிர்க் கொடையாகும். நள்ளி கரவிலா உளத்தோடு நட்டார்க்கு அளித்த கொடை அறக் கொடையாகும். ஓரி இசைவாணர் முதலியோருக்கு அளித்தமை கலைக்கொடையாகும். இவை யாவும் நமக்கு ஒருண்மையை உணர்த்துதலை உற்றுநோக்குழிப் புலப் படும். தமிழ்நாட்டில் எத்தனையோ வள்ளல்க ளிருக்கவும் இவ்வெழுவரைமட்டும் எடுத்துச் சிறப்பித்ததன் கருத்தென் னையோவெனின், இறைவனைப் போற்றலும், இரவலரை ஓம்பலும், புலவரைப் பேணலும் இசைச் செல்வரை ஏத்து தலும், அஃறிணைப் பொருள்கள்பால் அருள் புரிதலும், இன்றியமையாது காத்து வருவது தமிழர் கடமை என் பதை வலியுறுத்தற்கேயாம். அன்றியும் இறைவனால் படைக்கப்பட்ட பொருள்களுள் எவையேனும் ஒன்றற்குத் துன்பம் வந்துறின் அதன்மாட்டு இரக்கம் காட்டி இயன்ற வாற்றான் அருளும் நீர்மையர் தமிழ்ப் பெருமக்கள் என்ற சிறந்த உண்மையைத் தெளிவாக்குகிறது. இன்று நம் மிடையே உலவுகின்ற பதிற்றுப்பத்துள் சேரவேந்தரனை வரும் பெருங்கொடை வள்ளல்களாக விளங்கினர் என்ப தும், தமிழர் உயர் பண்பை வலியுறுத்துவதாகும். இவர்க ளுள், பாரியும்பேகனும், 'முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் எல்லை நீர் ஞாலத்திசை விளங்கத் தொல்லை யிரவாமலீந்த விறைவர்' எனப் புறப்பொருள் வெண்பா மாலையுடையார் பாராட்டுதற்குக் காரணம், 'அவர்கள் அஃறிணைப்பொருள்கள்பால் காட்டிய அளவிலாக் கரு ணையே என்பதற்கு ஐயமுண்டோ! இவர்கள் செயல் உண்மையாமோ என்ற ஐயம் எழுவது இயற்கையே. அன்பு கனிந்து அருள் முற்றிய பெருமக்கள் எவரும் இத்தகைய வியத்தகு செயலைத் தம்மையு மறந்து செய்த லுண்டென்பதற்கு ஒருசான்று அகநானூற்றினின்றும் சுட்டுதல் பொருத்தமுடைத்தாகும்.

தலைவன் பிரிந்து பன்னாட்களாயின. தலைவி அவன் வரும்வழிமேல் விழிவைத்துக்கொண்டு நிற்கிறாள். நாடோறும் நினைந்து நினைந்து உருகிய உள்ளமும் பார்த்துப் பார்த்துப் பூத்த கண்ணும் உடையளாய் வருந்தியிருந்தாள். இந்நிலையை அறிந்த தோழி, தலைமகன் வருங்காலமாகிய கார்ப்பருவம் தொடங்கியது. அவன் உன்னை மறந்து வாழ்தலும் கூடுங்கொல்! என்று பருவங்கூறி வற்புறுத்தி அவன் அருளுடைமையைப் புலப்படுத்துகின்றாள். அஃதாவது,

"குரங்குளைப் பொலிந்த கொய்சுவல் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்."

என்பதாம். தலைவன், தலைவி வருந்துவள் எனும் கருத்துடையனாய், புரவியினை விரைந்தோட்டித் தேரினைச் செலுத்திவரும் வழியில், பொழிலகத்தே தேனுகர்ந்து மலரின்கண்ணே பெடையோடு வதிந்த வண்டு, மணியோசை கேட்டு மயங்குமெனும் அருளுடையனாய், மணிகளின் நாவை அசையாமல் இழுத்துக் கட்டிவரும் இயல்பினன். இத்தகைய அஃறிணைப் பொருள்களிடத்தும் அருளுடையவன் நின்பால் அருளுதற்கு மறப்பனோ? மறவான். ஆகலின், சிறிதும் கவல்தல்வேண்டாம் என ஆற்றுகின்றாள். இதனால் அறியக்கிடப்பதென்னையெனின், தமிழ்நாட்டு மக்கள் அருளுளம் படைத்து விளங்கினர் என்பதேயாம். இந்நாளில் இந்நிகழ்ச்சி எங்கேனும் நிகழுமேல் எள்ளி நகையாடுவரென்பது திண்ணம்!

பாட்டுடைத் தலைவன் வரலாறு:—கடையெழுவள்ளல்கட்குப் பின் பெருங்கொடையாளிகளாக விளங்கியவர்களுள் தலைசிறந்து நின்றவன் இப்பாட்டின் தலைவனாகிய நல்லியக்கோடன் என்பான். இவன் நாடு ஒய்மாநாடென்பது பெயர்க்கு முன்னின்று சிறப்பிக்குமாற்றால் அறியலாம். இவன் மிக்க வலிமைபொருந்திய ஒவியர் குடியிற்

பிறந்தவன் என்பது, 'உறுபுலி துப்பின் ஒவியர் பெருமகன்' என்ற அடியால் விளக்கமுறுகிறது. இவன் முன்னோர்களில், ஒய்மானல்லியாதன், ஒய்மான் வில்லியாதன் என்ற இருவர் வள்ளலாயிருந்தனர் என்பது புறநானூற்றால் தெரியவருகிறது. இவனும் புறத்திணை நன்னாகனார் என்ற புலவரால் புறநானூற்றில் புகழப்பட்டுளான். 'ஒரையாயத் தொண்டொடி மகளிர்' எனத் தொடங்கும் பாட்டில், 'பெருமாவிலங்கைத் தலைவன் சீறியாழ் இல்லோர் சொன்மலை நல்லியக் கோடன்' என்ற அடிகட்கு விரிந்த பாடல் வழங்கியமைபோலச் சிறுபாணாற்றுப்படையில் நத்தத்தனார் குறித்துள்ளார். இவ்வள்ளல் தம் ஊர்களாகிய மாவிலங்கை, எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்பனவற்றுள், மாவிலங்கை ஒன்றையே இருவரும் சிறப்பித்துள்ளமையின், அது இவனது தலைநகரமாயிருந்திருத்தல் வேண்டும் எனக் கருத இடமுளது. இவற்றுள், மாவிலங்கை என்பது தமிழகத்தின் பன்னிரு நாடுகளில் அருவா நாடென்று கூறுவாருமுளர். ஏனைய மூன்றும் தொண்டை நாட்டின் இருபத்துநான்கு கோட்டங்களுள் மூன்று கோட்டங்களுக்குத் தலைநகராயுள்ளவை ஆகும். இந்நான்கின் சிறப்பினையும் பாணன் வாயிலாகப் பிறிதோர் பாணனுக்கு அறிவிக்குமாற்றான் அமைத்துள்ளமை மிக விரிந்து காணக்கிடக்கிறது. இவ்வாற்றுப் படைக்கண், 'வஞ்சியும் வறிதே, மதுரையும் வறிதே, உறந்தையும் வறிதே' என்றும், 'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம், விரிகடல் வேலி வியலகம் விளங்க, ஒருதான் தாங்கிய உரனுடை நோன்றாள்' என்றும் கூறப்பட்டுள்ளமையின், முடியுடை மூவேந்தருக்கும் கடையெழு வள்ளல்கட்கும் பின்னாளில் பெரும் புகழ்பெற்று விளங்கியவன் என்பது தெரிகிறது.

இவ்வள்ளலின் நாட்டுவளம், நகரச்சிறப்பு, உள்ளத்தூரன், ஈகையின் ஏற்றம் முதலிய அருமைகளைப் பாணன் கூறுமுகத்தாற் கூறிக் காண்பாம்.

முதுவாயிரவல! புலமைக்கு நண்பன் வறுமை. வறுமையின் துணை என்றும் நம்பால் உளதாயிருக்கும்.

வறுமையின்றேல் ஈகை சிறக்குங்கொல்? நின்பால் எய்தி நிற்கும் வறுமை எம்பாலும் மிக்கு விளங்கி வருத்தியது. எம் இல்லின்கண் குடிகொண்டிருந்தது. எம் இல்லில் அட்டிலிலே உணவு சமைத்துப் பன்னாட்களாயின. அவ் அடுக்களையின் காட்சியை இவண் கூறுவன் கேள்.

விழியாத கண்ணையும் வளைந்த செவியினையும் உடைய நாய்க்குட்டி முலையை யுண்ணுதலின் வருத்தம், தன் பசித் துன்பத்தால் வருத்தமும் பொறுத்தலாற்றாது குரைக்கும் புனிற்று நாய் உறைகின்ற அட்டில். ஒருபுறம் கூரையிடத்துள்ள கழிகள் ஆக்கையற்று விழுகின்ற அட்டில். சுவரெல்லாம் திரண்ட கறையான்கள் அரித்த அட்டில். அதோடு புழுதியிடத்தே காளான்கள் பூத்து விளங்கும் அட்டில். இவ் அட்டில் நெடுநாட்கள் இந்நிலையில் இருந்தமையின், யாங்களிருவரும் பசியால் வாடினேம். உடல் இளைத்த என் இல்லாள் கடும்பசிக் காற்றாது குப்பை வேளையை உகிராற் கிள்ளி வந்தாள். சுவை பயத்தற்கு இடும் உப்பும் இல்லாத வறுமையள். என் செய்வாள்! உப்பின்றி அட்டிலிலே பக்குவஞ் செய்து வறுமையுறுதல் இயற்கை என்பதை அறியாது புறங்கூறுவோர் காண்டற்கு நாணித் தலைவாயிற் கதவையடைத்து, இரும்பேரொக்கலொடு பகிர்ந்துண்டனம். இம்முறையில் உயிர் வாழ்தலியலுமோ? இயலாதன்றே. இத்தகு வறுமை எம்மைவிட்டு அகலவும், அறிவு முதலியன அழிதற்குக் காரணமாகிய பசியால் உளதாகிய வருத்தங்கள் அறவே ஒழியவும், அறுசுவை யுண்டியும் இரும்பெருஞ் செல்வமும் களிறும் தேரும் அளவின்றிப் பெற்று வந்தனம். மக்களுக்கு இன்றியமையாதனவாகச் சொல்லப்பட்ட மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, இன்பம் ஆகிய பத்தினையும் சிதைத்துத் திருச்செற்றத் தீபுழி உய்க்கும் பசியெனும் பாவியை எங்களைவிட்டு நீங்கச் செய்த வள்ளல் பெருமகன் ஒருவன் உளன். அவன் ஒருவனே இந்நாளில் பசிப்பிணி மருத்துவனாக விளங்கிப் புகழ் கொண்டுளான். உங்கள்பால்

உறைந்து நலியும் உறுபசியும் அவன்பால் செல்லின் ஒழியும். ஆகலின், அப்பெருந்தகையின் இயல்பு கூறுவன் செவி மடுப்பீராக.

வானிடத்துள்ள உருமேறு தான் ஏறுதற்காக இடித்து வழியாக்கிச் சென்ற உயர்ந்த சிகரத்தினையுடைய மலைகள் செறிந்த குறிஞ்சி நாட்டுக்குரியோன். எந்நாளும் இடையறாது நடைபெறும் விழாவினையும், களிற்றுமத அருவி எழுந்த துகளை அவிக்கையினாலே, புழுதியடங்கின அழகுமிக்க தெருக்களையும் உடைய பழமையான ஊரை யுடையவன். பொருநர்க்கும், புலவர்க்கும், எவ்வுயிர்க் கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்க்கும் வரையாதளித்தற்பொருட்டு, கடவுள் மால்வரையாகிய இமயம் ஒரு கண்ணை விழித்துப் பார்த்தாலொத்த, அடையா நெடுங்கதவத்தையுடைய வாயிலமைந்த அரண் மனையுடையவன். இவன் செய்ந்நன்றி கொன்றோர்க் குய்தியில் என்பதை யுணர்ந்து நன்றிமறவாது வாழும் மாண்பினன். 'கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அது வல்லது, இல்லை நிலக்குப் பொறை' எனும் உண்மை தெளிந்து, சிற்றினத்தைத் தனக்கு உறவாகக் கொள்ளாத வன். முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா வஞ்சரைப் போலன்றி, எவரிடத்தும் இன்முகமுடைமையும் இனிய மொழி பகர்தலும் உடையவன். அழியுநர் புறக்கொடை அயில் வேலோச்சாது அருளுதலைச் செய்யும் ஆண்மை யாளன். இவன் ஆண்டகைமை யுணர்ந்து அஞ்சிவந்து அடிபணிந்து ஈயென இரக்குவராயின், சீருடைமுரசுகெழு தாயத்து அரசெயல்லாமல் இன்னுயிரும் கொடுக்க ஒருப்படும் உரவோன். அங்ஙனன்றி, அவன் ஆற்றல் போற்றாது உள்ளம் எள்ளியோர், துஞ்சுபுலி யிடறிய சிதடன்போல உய்ந்து பெயர்தல் அரிதாகும். மாற்றார் முன் தன் படை அழிந்து குலையினும், அக்கெட்டோடு மிடத்தும், தான் தனிநின்று ஒன்னாரைத் தெறும் பேராண் மையாளன். கூற்றமே குறுக்கிடினும் எண்ணிய எண்ணி யாங்கு செயலாற்றும் திண்ணியன். தன்னைக் கண்டார்

உள்ளம் பிணிக்கும் தோற்றப் பொலிவுடையன். கேட்டார் செவி குளிரும் வீரப் புகழ்உடையன். ஆடவரும் அவாவும் அகன்ற மார்பும், பணைத்த தோள்களுமுடையன். இத்தகு அழகின் வயப்பட்டு நகர விரும்பும் மகளிர்க்கு இன்பத்தை அளிக்கும் எழிலோன். எனினும் அவர்தம் இன்பத்தின் வழியே சென்று அழிக்கும் பொறிவழிச்செல்லாது, ஐம்பொறிகளையும் வென்றடக்கும் விறலோன். 'ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன், வான்சுதை வண்ணங் கொளல்' என்ற பெருண்மையை நன்குணர்ந்து, அறிவுடையார்மாட்டு அறிவுடைமை காட்டியும், அறியாதார்மாட்டுத் தானும் அறியாமைப்பட்டிருந்தும் ஒழுகும் உலக அறிவு வாய்க்கப் பெற்றவன். தொன்றுதொட்டு அழியாது வருகின்ற சிறப்பினையும், யாவராலும் வெல்லுதற்கியலாத அமைப்பினையும் உடைய தொல் இலங்கையின் பெயர்தாங்கிய மாவிலங்கையைத் தலைநகராக உடையவன். புகழ்வாய்ந்த அரசர் பலர் தோன்றிய ஒவியர்குடிவழி வந்தவன். 'நல்லாண்மை என்பதொருவற்குத் தான்பிறந்த, இல்லாண்மையாக்கிக் கொளல்' என்ற குறண்மொழிக்கிலக்காய், தன்குடியிற் பிறந்தார் புகழெல்லாம் தன்னதாக்கொண்டு குடிவிளங்கநின்ற தகைமையோன். தமிழர் குடிசிறக்க வந்த முடியுடை மூவேந்தரும் கடையெழுவள்ளல்களும் பெற்ற புகழை உலகமெல்லாம் விளங்கும்படி தானே பொறுத்த மேம்பாடு உடையவன். உண்டாயிற் பதங்கொடுத்து இல்லாயின் உடனுண்ணும் இல்லோர் ஒக்கற்றலைவன். இவ்வகைச் சிறப்பெல்லாம்கொண்டு, எங்கள் மிடியினைப் போக்கிக் களிற்று நிரைகளோடு தேரினையும் உவந்தளித்த வள்ளலே, நல்லியக்கோடன் எனும் பெயருடையான். அன்னான்பால் நீவிர் செல்லுதற்குரிய வழியினை அறிவிப்பல். மகிழ்வுடன் ஏகுவீராக.

எயிற்பட்டினச் சிறப்பு :—முதலிலே, நெய்தல் வளமிகுந்த அவனுடைய பட்டினம் காண்பீர்! ஆங்கே திரை எற்றிப் பொருகின்ற நீலவானையொத்த கடல்,

அதன் கரையிடத்தே நிலவுக் குவித்தன்ன வெண்மணல் பரப்பு. அன்னத்தையொப்பத் தாழை பூத்து விளங்கா நிற்கும். பொன்னென்று கண்டார் மருளச் செருந்தி செறிந்து தோன்றும். நீலமணியோவெனக் கழிமுள்ளி ஒளியுடன் நிறைந்துகாணும். நித்திலமொத்த அரும்புகளையுடைய புன்னை மரங்கள் செழித்தோங்கிக் காட்சி தரும். அதன் பின்னர் அழகிய வைப்பினையும், எயிலாற் சூழப்பட்ட குளிர்மிகு பொய்கையையும் உடைத்தாய எயிற்பட்டினம் அணுகுவீர்.

அவன் திருமுகத்துச் சேயிழையாராகிய நுளைச்சியரால் அரிக்கப்பட்ட தேட்கடுப்பன்ன நாட்படுதேறலைப் பரதவர் விழைந்து மாந்துவர். அவ்வூரிடத்தேயுள்ள கிடங்கில் எனும் ஊரின் அரசனொருவன் உளன். அப்பெருந்தக்கானை நின் மகளிரொடு பாடிச் செல்வீராயின், மனைதொறும் மனைதொறும் மகிழ்ந்து கொடுக்கும் சுவை மிகுந்த மீன் சூட்டினைப் பெறுவீர்கள் !

வேலூரின் சிறப்பு :—அடுத்துச் சென்றீராயின், முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற்றிரிந்த பாலைத்தன்மையுடைய அவனது வேலூரினை அடைவீர்! ஆங்கே அவரையானது பவழம்போலப் பூத்து விளங்கும். காயாக்கள் மயிலின் கழுத்துப்போன்று அழகுறத் திகழும். முசுண்டை வெண்பஞ்செனப் பூத்துநிற்கும். செங்காந்தள் கைவிரலையொத்த வடிவினவாய்ப் பரந்துவிளங்கும். நெடிய வழிகளெல்லாம் இந்திரகோபம் இயற்கையழகுடன் பொலிவுறும். இல்லிருந்து நல்லறஞ்செய்யும் தலைவிக்குத் தலைவன் வருங்காலத்தை யுணர்த்துதல்போல, தமிழ் முருகனின் தனிவேல் நுதிபோலப் பூத்துவிளங்கும் முல்லை பரந்துள்ள வேலூர் உளது. அவண் உறைகின்ற மக்களிடத்து அவ்வரசன் புகழைப்பாடிச் செல்வீராயின், எயினர்தம் மகளிரால் அடப்பட்ட இனிய புளிங்கறிச் சோறும் ஆமானினது சூட்டிறைச்சியும் பெற்று அழிபசி கெட உண்ணுவீர் !

ஆமூரின் சிறப்பு:—அவன் பெயர்ந்து எகுவீராயின், மருதவளம் பழுகிய அவனது ஆமூரைச் சேர்வீர்! மணங் கமழ் பூக்களால் தொடுத்த மாலையேபோன்று நிரலே பூத்துப் பொலிவுறும் காஞ்சிமரங்கள் உள. அதன் கொம்பரில் தங்கி, உறமீன் வருமளவும் நெடிதிருந்து, புலவுக் கயலெடுத்த அழகுமிக்க சிச்சிலிப்பறவை உறைந்து வரும். வெள்ளிய மதியைக் கரும்பாந்தள் சென்று கவ்வு தல்போல, வெண்டாமரை மலர்களிலெல்லாம் வண்டொ ழுங்கு சென்று கொங்கினை ஆராயும் காட்சி நிறைந்து விளங்கும். விளைகழனியும், குளிர்கிடங்கும், அகன்ற அகழும் மிகுந்துள்ளதோடு ஊடியும் கூடியும் வாழும் இன்பவொழுக்கம் சான்ற மக்கள் வாழ்வர். அவர்கள் பால் இவ்வள்ளலைப் பாடிச் செல்வீராயின், உழவர் மகளிர் உள்ளிருந்து தம் பிள்ளைகளைக்கொண்டு நம்மனைவரையும் போகாது விலக்கி, அமலை வெண்சோற்றை, ஞெண்டும் பீர்க்கும் கலந்த கலப்புடனே உண்ணத்தருவர்.

நலைநகர்ச் சிறப்பு:—இத்துணையன்பும் விருந்தோம் பும் பண்பும் நிறைந்த மக்களைக்கண்டு களைப்புத்தீர்ந்து செல்லுவீராயின், அவனது மூதூரைச் சார்வீர்! அஃது மிகத் தொலைவுடைத்தன்று; மிகவும் அண்மையதே. மயங் காது விரைவிற் சென்றடையலாம். ஆங்கே விழா இடை யறாது நிகழும். விண்முட்ட ஓங்கிய அவன் இருக்கைநகர் உளது. அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல் லும் உடையனாய் ஆங்கே வீற்றிருப்பன், இல்லோர்சொன் மலையாகிய நல்லியக்கோடன். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்க்கலையை எடுத்துக்காட்டி அறிவு விருந்தளிக்கும் புலவர்குழாமும், இருசெவி குளிரவும் இருகண் விருந்த யரவும் இன்னிசை அளிக்கும் பாணரும் கூத்தரும் சூழ்ந்து புகழ, பன்மீன் நடுவட் பான்மதி போலப் பெருமையுடன் அமர்ந்திருப்பன். பரிசில் மாக்கட்கு வரிசையறிந்து நல்குதலும், வரிசையறியாதே ஏனையோர்க் கும் வழங்குதலும் இடையறாது நிகழ்தலைக்காணலாம். இரவலர் பிறரிடத்து நில்லாமல்போகின்ற புகழ் என்றும் நின்று நிலவுகின்ற நல்லியக்கோடன் எனும் வள்ளியோன்,

இவன்பால் மகளிரொடு சென்று வணங்கி, இலக்கணம் யாவும் நன்கமைந்த நல்யாழை இசைநூல் கூறுகின்ற முறையாலே குரல் குரலாக நிறுத்திப் பண்ணெழுப்பி, "அரசே! ஈயேன் என்றல் மிகமிக இழிவுதருந்தகையது என்பதை யுன்னிப் பலகாலும் குவித்த கையினையுடையை. மக்களுடைய கட்கினியனுதலினும் செவிக்கினியனுதலே சிறப்புடைத்தெனக் கருதி, இளையர்க்கு எறிதற்பொருட்டு மனமகிழ்ந்து கொடுத்த வடுவழுந்தின அகன்ற மார்பினை யுடையை. உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்பதும், உழவினர் கைம்மடங்கின் உலகில்லை என்பதும் 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனுல், உழந்தும் உழவே தலை' என்பதும் நன்கு தெரிந்து, குடிபுறந்தரூஉம் செங்கோலினை யுடையை. வையங்காவலர் வழிமொழிந்தொழுகவும், போகம்வேண்டிப் பொதுச்சொற் பொறுது, அரசர்க் கெல்லாம் வெம்மை பயக்கும் வேலினையுடையை," என்று நீ சில புகழினைக் கூறுவாயாக. அவை சென்று அவன் செவிப்புகா முன்னரே, இன்மொழிகூறி எதிர்கொண் டழைத்து, இருக்கைதந்து, மாசில்லாத மெல்லிய உடை யினை உடுக்கப் பண்ணி, வழிவருத்தந்தீர அரவு வெகுண் டன்ன அருந்தேறல் நல்குவன். அவ்வளவன்றி, மடை நூல்நெறியிற் றப்பாத பல்வேறு அடிசிலை, செங்கதிர் ஒளியையும் இகழும் செம்பொற்கலத்தே கொடுத்து, நும் பால் பிணித்த அன்பினுல் தானே நின்று உண்ணப் பண்ணுவன். அம்மட்டோ! பரிசில் நீட்டிப்பன் எனக் கவலற்க. ஒருநாட் செல்லினும் இருநாட்செல்லினும் பல நாட்பயின்று பலரொடு செல்லினும் தலைநாட் போன்றே விருப்பமுடையனுய்ப் பரிசில் தரும் பான்மையோன். முதலிலே, மூவேந்தர் மன்னும் அரண்களை யழித்து அவ் விடத்துப்பெற்ற பொருளை, வறுமையான் நலிந்து இவன் பால் நயந்து வந்தோர்க்கும் பாணர்க்கும் குறைவற அளித்து மகிழ்வன். அவர்களைப் போக்கியபின், படை வீரர்கள், வென்றியால் கொணர்ந்த வளவிய செல்வத்தை, கைவினை முற்றிய தச்சரால் அழகுபெறச் செய்யப்பட்டுப் பாகரால் ஏறிப் பார்த்து, உண்மை ஒட்டம் உண்டென்று

கண்ட தேரினை, அதனைச் செலுத்தும் பாகரோடு கொடுப்ப தன்றியும், களிறும் பரியும் கணக்கில் பல் அணியும் பரிசிலாகத்தந்து அன்றே விடுப்பன். ஆகலின் அவ்வள்ளன்மை மிக்கானை இப்போழ்தே சென்றடைந்து நும் வறுமை ஒழிவிராக,' என்று பாணன் ஆற்றுப்படுத்தித் தமிழ்நாட்டில் இனவுணர்ச்சியையும தன்னலமற்ற தன்மையையும் நிலை பெறுத்துதல் கண்டு உணர்வு பெறுவோமாக.

உவமை நலம்: பண்டைப் புலவர்பெருமக்கள் உவமைபழகின்றி ஒரு பாடலேனும் பாடினரல்லர். அகப் பாடலினும் புறப்பாடலினும் உவமைகள் சிறந்து விளங்குதல் இயல்பே. ஆசிரியர் தொல்காப்பியனர், உவமை இன்றியமையாது வேண்டற்பாலது என்ற கருத்தினராவர் என்பதை உவமவியல் எனத் தனியே ஒன்றை வகுத் துள்ளமையால் அறியலாம். இவ்வுவமை உள்ளுறை யுவமை ஏனையுவமையென இருகூறுபடும். உள்ளுறை யுவமை, மிகுதியும அகத்துறைப் பாடற்கண் சிறந்து விளங்கும். அஃதேபோன்று ஏனையுவமம் எனப்படும் வெளிப்படையுவமம், புறப்பொருட்கண் மிகுதியும் எடுத் தாளப்பட்டிருப்பதை உணரலாம். இற்றைநாளில் தொல் காப்பியர் கண்ட உவமையே பலவாறுக விரிவடைந்து பிறமொழிப் பெயர் தாங்கித் தமிழ்ப்புலவர் மதியை மயக்கி நிற்கின்றன. சிலர் தொல்காப்பியர் உவமைவிரி கூறினரில்லையெனக் குறைகூறி, வடமொழியைப் பெருமைப் படுத்தா நிற்பர். அவா கூற்றுப் பொய்ம்மையாம என்பது 'உவமை யென்னும் தவலருங்கூத்தி பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து......' எனும் நூற்பாவால் தெளிவுறும். பழந்தமிழ் இலக்கணம் நன்கறியாது செந்நா வன்மைத திந்தமிழ்ப் பேராசிரியனைக் குறைகூறத் துணிப வர், வான்முட்டப் புகழ் கொண்டிலங்கும் வள்ளுவப் பெருந்தகையைப் பிற்காலத்தவர் எனப் பிதற்றுமொழி பகரும் சிறுமதியுடையார்க்கு ஒப்பாவர் என்பதற்கு ஐயமுண்டோ? இவர்கள் கடல்போலப் பரந்த தமிழ் மொழியைத் தம் மொழியொடொப்பாகாதெனக் கருது

தல், 'கூவலாமை குரைகடலாமையைக் கூவலோடு ஒக்குமோ கடல்' என்றல் போலாகுமேயன்றி, வேறு என்னும்? இச்சிறுபாணாற்றுப்படைக்கண் புலவர் நத்தத்தனர், கற்போர் கருத்தை இன்புறுத்தும் நுட்பமான உவமைகளும் உருவகங்களும் பல்லிடத்தும் கூறியிருப்பினும், அவையனைத்தையும் இவண் விளக்கிப்போதல் இயலாமையின், சிறந்த மூன்றினைமட்டும் குறிக்கின்றும்.

பரிசில் பெற்ற பாணன் ஆற்றுவழி கூறுமிடத்து மருதவளம் மிகுந்த ஆமூரைச் சுட்டுகின்றான். ஆண்டு ஓர் உவமையினை நாட்டி உணர்வை எழுப்பும் திறனை,

'வள்ளுயிர் பிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவன்
மறுசே ரரவின் மானத் தோன்றும்' (கஅ௨-கஅ௫)

எனும் அடிகளால் காணலாம். புலவர் உவமை கூறுகின்ற இரண்டு பொருளைத் தனித்தனி எடுத்து உரிய இயல்புகளைப் புலப்படுத்தி ஒப்பிடுவர். இவண் தாமரை வெண்மையா செம்மையா என்பதைச் சுட்டாது, பசிய இலை, முள், தண்டு முதலியவை கூறி, வண்டு நீலநிறமும், சிவந்த கண்களும் உடைத்தாய்த் தேனுகரச்சென்றது என்பதை இயற்கையொடு பொருந்தக் கூறினர். உள்ளுவதெல்லாம உயர்வே உள்ளும் பண்புடையராதலின், நிலத்தின் நிகழ்ச்சியைத் தெளிவுறுத்த, வானை நோக்கினர். வெண்திங்களை அரவுசேர்தல் கண்டார். இஃது உலகோர் யாவரும் அறிந்ததென மகிழ்ந்து பொருந்த உவமித்து, வெண்திங்கள் என்ற உவமையால் வெண்டாமரையையும் நீலவண்டு என்ற பொருளால் கரும்பாந்தள் என்ற உவமையையும் உணர்த்தியமை வியத்தற்குரியதாம்.

இவ்வாறே, மணிவாசகப் பெருந்தகையும் பொருட்கண் ஒரு பண்பை மறைத்து உவமைமுகத்தான் கூர்ந்தறியச்செய்யும் திறல் உடையார் என்பதை ஈண்டுச் சுட்டுதல் மற்றொன்று விரித்தலாகாதாம். அஃதாவது, 'ஈசற்கி

யான் வைத்த அன்பினகன்று..........' என்ற திருக் கோவைச் செய்யுளில், தலைவியின் கண்ணை ஈசற்கு உவமித்துக் காட்டுகின்றார். இப்பாடலுக்கு உரையெழுதப் பேராசிரியரின்றேல் இவ்வுவமையினை அறிந்துகோடல் மிக அரிதாம். என்னை? 'கண்ணிற் கியல்பு கசடறக் கிளப்பின், வெம்மை கருமை செம்மை யகலம், நீளம் ஒளி யென நிகழ்த்துவர் புலவர்' எனும் கண்ணின் இலக்கண முறைப்படி ஆராய்கின்ற காலத்துச் செவ்வரிக்கு உவமை காணவில்லை. மணிவாசகப் பெருந்தகையைக் குற்றம் சொல்ல ஒருப்படுவரோ? மாட்டார். 'அவன் தோளிற் பூசத்திருநீ' றென்றதனுல் செம்மையும் கூறிற்று என்றூர். எவ்வாறெனின், செம்மேனிப் பெம்மான் தோளில் வெண்ணீற்றைப் பூச, இடையிடை செம்மை புலப்படுமன்றோ? அஃதே செவ்வரிக்கு உவமையாம் எனத் தம் நுண் மாண் நுழை புலத்தால் கண்டு நமை மகிழச் செய்தமை மறக்கற்பாலதோ?

இனி, கற்போர் உளம் சலிப்புறுவண்ணம் பிறிதோரிடத்து அமைத்துள்ள உவமை நலங்காண்பாம். அஃதாவது,

> 'கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன
> அடையா வாயில் அவளருங் கடை' (உ0௫-௬)

என்பது. இவ்வுவமை, நல்லியக்கோடன் தலைநகராய மூதூர்க்கண் அமைந்த அரண்மனைக்குக் கூறப்பட்டது. ஈண்டுப் புலவர் வள்ளலது வானளாவ உயர்ந்து, உயர்வுக் கொப்ப வாயிலமைந்து, அடையாத வாயிலையுடைத்தாய் இலங்குவதாகிய கோயிலை அண்ணூந்து நோக்கினர். இறும்பூதெய்தி உள்பொருளை உவமைகூற எண்ணி யாண்டும் அறிவுக்கண்ணைச் செலுத்தினர். உயர்ச்சிக்கு உவமையாகக் கூறத்தகுவது உமையொருபாகனுறையும் இமயமெனக்கண்டார். ஆனுல், உயர்ந்த வாயிலுக்கு உவமிக்க அதனுள் ஒன்றும் அமையவில்லை. என் செய்வார்! கற்பனையின் எல்லையடைந்தார்! இமயம் ஒரு கண்ணை விழித்துப் பார்த்தாலொப்ப உயர்ந்த அடையா வாயிலெ

னும் உவமை தோன்றிற்றெனின், அவர் உள்ளம் அடைந்த மகிழ்ச்சியினை யாவரே கண்டார்? இத்தகு சிறந்த உவமையினைக் கண்டு இன்புறும் நம்மினும் பேறு பெற்றார்தாம் யாவரே?

இறுதியாக, ஓர் உவமை கூறி நிறுத்துவாம். பாணன் கையில் கொண்ட யாழின் இலக்கணந் தெரிக்குமிடத்து, நம் வாழ்வில் கண்ணுறும் பொருளைச் சுட்டி உள்ளத்தை உவகைக்கடலுள் ஆழ்த்தும் புலமைத்திறம் உணர்வாம். அஃதாவது,

> 'பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
> அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவிங்கு திவவின்' (உஉக-உ)

என்பது. இதன்கண் குரங்கின் உள்ளப்பண்பை, யாழ் செறிக்கும் இசைவல்லோன் செயலொடு ஒப்பிட்டுக்காட்டும் ஆற்றல் நெஞ்சினை ஈர்க்குந்தகையது. இன்றும் யாம் நேரில் காண்கிறோம். எங்காட்டிலுள்ள குரங்கின் இயல்பும் அஃதே. என்றும் உலகில் நிலைபெறும் பண்பைத் தம் கவியில் நிறுத்தும் புலவனன்றோ இயற்புலவன்! அங்ஙனன்றி, வழங்காத கையனை வள்ளல் என்பதுபோல, தமிழறியாதார் சிலர், தமிழ்முழுதறியாதாரை இனப்பற்றென்று கருதியே இயற்புலவன் என்றும் வரகவி என்றும் வாளா புகழ்ந்து பறைசாற்றுதலைக் கண்டு மயங்குவதை அறிவோம். உண்மைப்புலவன் கவியினைச் சுவைத்து மகிழும் பொறியிலாதாராகின்றமை வருந்தற்பாலதன்றோ? நிற்க. பசிய கண்களையுடைய குரங்கு, பாம்பின் தலையைப் பிடிக்கவும் கையில் சுற்றிக் கொள்கிறது. சிறிதுபொழுதில் அதன் தலையை விட்டு, மீண்டும் பிடிக்கின்ற காலத்து, அப்பாம்பு ஒருகால் இறுகவும் ஒருகால் நெகிழவும், அதன் கையைச் செறியச் சுற்றுதல் போல, யாழின் தண்டினிடத்தே செறியச் சுற்றின நரம்பை மீண்டும் செம்மைப் படுத்த நரம்பு துவக்கும் வார்க்கட்டினை யாழ்வல்லோன் பிடிக்க, நெகிழவேண்டுமிடத்து நெகிழ்ந்தும் இறுகவேண்டுமிடம் இறுகியும் வருதலைக் காணலாம். இவ்வுவமையின் அழகினை என்னென்பது! இத்தகு உவமை பலவும் சிறந்து

மாண்புற்று இலங்கும் இந்நூலினைப் பயின்று பயன் துய்த்து வாழ்விர்களாக!

தமிழர் பண்பாடு :—முதன்முதலில் மக்கள் தோன்றிய இடம் தமிழ்நாடு என்பது மேனாட்டு அறிஞர் ஆராய்ந்து கண்ட உண்மை. இவ்வாராய்ச்சியினை வலியுறுத்த நம் தமிழ் நூலில், 'கற்றோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்தகுடி' என்ற அடிகள் துணைநிற்கின்றமை காண்க. இதனை ஒப்புக்கொளின், நானிலத்திலும் நாகரிகத்தினைப் பரப்பியவன் தமிழன் என்பதும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. நாகரிகம் என்பதே பண்பாடு என்று சொல்லப்படும். அஃது 'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்' என்ற குறட்பாவால் அறியக்கிடக்கின்றது. தமிழர்பண்பாடுகள் சங்கநூல்க ளனைத்திலும் பரந்து காணப்படினும், இந் நூலகத்துச் சிறந்த பண்பாடுகள் கூறப்பட்டுள்ளன. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற கணியன்பூங்குன்றனர் கண்ட உயர்ந்த பண்பு, இவண் மிளிர்கிறது. 'தனக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்ற இளம்பெருவழுதியின் தன்னலமற்ற பண்பு, இவண் செறிந்துளது. 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் தமியர் உண்டலு மிலரே' எனும் விருந்தின் பண்பும் பொதிந்துளது. இன்னும் எத்தனையோ தமிழர்பண்புகள் ஒளிர்கின்றன. அவற்றையெல்லாம் விளக்கிப் போதல் அருமையுடைத்தாதலின், தமிழர்களின் விருந்தோம்பும் பண்பை மட்டும் சுட்டுகிறேன்.

விருந்து எனும் பண்பு தமிழனுக்கே உரியது. 'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து' என்ற இலக்கணமறிந்து செயலாற்று வன். விருந்தினரைப் புறத்தே வைத்துத் தானுண்ணும் சிறுமதி கொண்டவனல்லன் தமிழன். பகுத்துண்டு வாழ் தலைச் சிறப்பாகக் கொண்டு வாழ்பவன். இத்தகைய தமிழர்பண்பு ஈண்டு ஒரு வறுமையுற்ற பாணன்பால் குன்றாதிருத்தலைக் காண்மின்.

'வறுமைக்கு அறிகுறியான காட்சிகளெல்லாம் நிறைந்து விளங்கும் புலவர் இல்லம். நெடுநாள் மனைவியொடு தானும் உண்டியின்றிக் கழியும் வாழ்க்கையர். என்பெழுந்தியங்கும் யாக்கையராய் இயங்குகின்றனர். பசி மிகுதியும் வருத்துதலினால், குப்பை வேளையைக்கிள்ளி உப்பின்றி அடுதல் செய்தாள் மனைவி. அத்தகைய வறுமை நிலையிலும் செம்மை நெறி தவறாது விருந்தினராய ஒக்கலொடு உண்டு மகிழ்ந்தனர்,' என்று வரையப்பட்டுளது. இதனால் உயிர் போமளவும் விருந்தினரைப் பேணுதலில் தவறார் என்பதும், எளிய உணவாயினும் பகிர்ந்துண்டு மகிழ்ந்து வாழும் பண்பினர் என்பதும் தெரிகின்றன. இங்ஙனம் விருந்தோம்பும் நெறிபிழையாதார் எந்நாளும் பசிப்பிணியின்றி நலம் பெறுவர். தொலையா நெடுவழியிற் சென்ற காலத்திலும் நல்லுண்டி பெறுவர் என்பது உறுதி. இடைக்காலத்தில் விருந்து எனும் சிறந்த பண்பு மாறியது. ஆற்றுநர்க்கு அளிப்போர் அறத்தை விலைக்கு விற்போராவர் என்பதை அறியாது, சூழ்ச்சியால் வாழ்பவர்க்கே விருந்தூட்ட முற்பட்டனர். மணிமேகலையிற் கூறியுள்ள 'ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர், மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை' எனும் உண்மையை மறந்து வாழ்வாராயினர். இளங்கோவடிகள், 'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' எனக் கண்ணகி கூற்றாகச் சிறப்பிக்கும் விருந்தினை உளங்கொண்டிலர். இதையுணர்ந்த அருணகிரியார், 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்பாடிய பாடலின் இடையே, விருந்தின் மேன்மையைச் செறித்து வற்புறுத்தியுள்ளமை, இந்நூலின் கருத்தோடு ஒற்றுமைப்பட்டிருத்தலைக் காண உள்ளம் மகிழ்வால் பொங்குகிறது. அஃதாவது,

" மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியபின்
நிலையான மாதவம் செய்குமினோ நும்மை நேடிவரும்
தொலையா வழிக்குப் பொதிசோறும் உற்ற துணையுங்கண்டீர்
இலையாயி னும்வெந்த தேதாயி னும்பகிர்ந் தேற்றவர்க்கே."

என்பது. இப்பாடல் சிறுபாணாற்றுப் படைக்கே பாடியதோவென நினைக்குமாறு கருத்துக்கொண்டமை காண்க. பாணன் மனைவியுடன் இல்லிருந்து வெந்த கீரையைப் பகுத்துண்டு, பரிசில் வேட்டுச் செல்லுங்கால், தொலையா நெடுவழி எங்ஙனும் அமலை வெண்சோறு விருப்புடன் அழைத்துக்கொடுக்கப்பெற்றனரன்றோ? ஆகலின், தமிழர்பண்பாட்டை மறவாது ஆற்றுமாக்களின் அரும்பசி களைந்து சிறந்து நிற்பீராக.

மொழிப்பற்று:—தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரே தமிழர்கள். அன்னார்களிற் சில்லோர் தமிழ்மொழி தனித்தியங்காதெனவும், தமிழ்நூற் கருத்தெல்லாம் பிறமொழியினின்று வடித்ததெனவும் கூறும் மயக்க ஆராய்ச்சியினர். இவர்கள் குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சி புக்க மான் போலவும், இடர்ப்பட்டுத் தமிழினத்தினின்றும் ஒதுக்கப்படுவர் என்பதை அறிவிக்கின்றோம். தமிழ் முதன்மொழியென அரசியலார் ஒப்புதல் அளித்த பின்னரும், வள்ளுவர் நாள் சிறப்புறக்கொண்டாடவேண்டுமெனும் சுற்றறிக்கை விடுத்த பின்னரும், நிலத்தியல்பால் நீர் திரிந்ததுபோல, இயலறிவு திரிந்து இனவுணர்ச்சியின்றி வாழும் குறுகிய கொள்கையுடையாரை என் கழறுவது? வடமொழி தமிழ்நாட்டிற் புகுந்து விரவிய பண்டைக்காலத்தும் தனித்தமிழில் எழுதியும் பேசியும் வந்திருந்தனர் புலவர்கள்; பிறமொழி விரவுதலைத் தூயதோர் உடலில் நஞ்சூட்டியதை யொக்குமென நினைந்து பாதுகாத்தமை பெறப்படுகின்றது. இச்சிறுபாணாற்றுப் படையினை இயற்றிய புலவர் தனித்தமிழ்ப் பற்றுடையார். தமிழிலே உரையாட விழைபவர். தமிழிலே எழுதுபவர். இவரது தன்மையை விளக்க நமக்கு அகச்சான்றுளது. அஃதன்றியும், தக்கயாகப்பரணிக்குத் தக்க உரை வரைந்த இருமொழிப் புலவராகிய உரையாசிரியர், தம விஞ்சிய தமிழ் உணர்ச்சியால் அந்நூலின்கண் சிறப்பித்துள்ளமை அறியற்பாலது. அஃதாவது, 'காவெரியூட்டிய கவர்கணைத்தூணி பூவிரிகச்சைப்புகழோன்றன்முன்' என்பது. இவ்வடிகள் ஐவருள்

ஒருவனுன அருச்சுனனைச் சிறப்பித்து, அதன்பின் உடன் பிறந்தானுகிய மடைத்தொழில் வல்ல பீமனை யுணர்த்து கின்றன. இவண் குறிப்பிடத்தக்கது யாதெனில், அருச்சுனன், பீமன் என்ற வடசொற்களைச் செம்மாந்து செல்லும் தமிழ்நடையொடு விரவுதலை விரும்பாது, தமிழ்ச் சொற்கள் பல அடுக்கி அவர்களை உணரவைத்தார் என்பதே. இச்சிறப்பினை நன்குணர்ந்தே பரணிக்கு உரை வகுத்த பெரியார் இதனைச் சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படையெனத் துணிந்து கூறினர். இவ்வாருகப் புலவர்களும், உரையாசிரியர்களும் வடசொல் விரவுதல் மொழியைச் சிதைக்குமெனக் கண்டிருக்கவும், இந்நாளில், ஒரு சிலர், மணியும் பவழமும் விரவியமாலைபோல அழகுறும் எனமயங்கா நிற்பது மிகவும் வருந்துதற்குரியதாம். இனியேனும், முன்னேரின் தூயவழி நின்று நல்லதமிழ் வளர்க்க நாட்டங் கொள்வார்களாக!

தமிழறிஞர்களே!

தமிழ்நாட்டின் தலைவரும், தமிழர்பண்பு மாசுபடாது காக்க முப்போதும் சிந்தனை, பேச்சு, செயல் மூன்றினுலும் உழைத்து யாங்கும் தனித்தமிழ் வேரூன்றிப் பரவ அடிகோலிய பெரியாரும், மும்மொழியும் ஒருங்கு கற்றுப் பன்னூல் ஆசிரியராகவும் இலங்கும் மறைமலையடிகளார் காட்டிய வழிநின்று ஆராய்ந்து இந்நூலினைக் கட்டுரையாக வரைந்துள்ளேன். குற்றங்களைந்து குறைபெய்து கற்றல் அறிஞர்தம் கடனுதலின் ஏற்றுப் பயில்வீராக. இதன்கண் ஆராயும் அறிவினை மிகுதிப்படுத்திய திரு வ. சுப்பையா பிள்ளையவர்கட்கும் என் உளங்கெழுமிய நன்றியுரியதாக.

வாழ்க தமிழ்!

---

௨. பெரும்பாணாற்றுப் படை

[வித்துவான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர்]

1. தோற்றுவாய் :— தமிழ்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் ஆட்சிபுரிந்த தமிழ் மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்கள் சங்கம் அமைத்துத் தமிழ்ப் புலவர் கட்குத் தண்ணளி செய்தனர்; தமிழை வளர்த்தனர்; தாமும் தமிழ்ப்புலவர்களாய்த் திகழ்ந்தனர்; நுண்ணுணர் வினரோடு கூடித் தமிழினிமையை நுகர்ந்தமையாலேயே அத்தமிழ்வேந்தர் புலவர்களால் தாம் பாடப் பெறுதலைப் புகழாகவும், பாடப் பெறுதொழிதலை இகழாகவும் கருதி யிருந்தனர். இவ்வுண்மை, ஒரு சேரமன்னன் சூளுரை கூறும்போது, "யான் இன்னது செய்யேனாயின் என்மலை புலவரால் பாடப்பெறுதொழிக," என்ற கருத்தில்,

"புலவர் பாடாது வரைக என் நெடுவரை"

என்று கூறியதால் விளங்கும்.

தமிழ்ப் புலவர்கட்கு அக்காலத்தில் இருந்த பெருமை அளவிடற் கரியது. புலவர்க்கு எல்லா வீடுகளும் திறந் திருந்தன: புலவர்கள், வறுமை வரினும் அதனைப் பொருட்படுத்த மாட்டார்கள்; வள்ளல்களிடம், பிறர்க் குக் கொடுத்தாலும் குறைவுபடாத செல்வத்தைப் பெற்ற மையால் மகிழ்வுடன் வாழ்ந்தனர். உள்ளங் குளிர ஊர் ஊராய்ச் சென்று, இயற்கையைக்கண்டு நுகர்ந்து இனிமை யாகப் பாடினர். ஆளுடைய பிள்ளையார் ஓரிடத்தில்,

"உளங் குளிர்ந்த போதெலாம் உவந்துவந்து பாடுவன்"

என்கிறார். இதனால் உள்ளங் குளிராத நிலையிற் பாடும் பாட்டு பாட்டாகாது எனத் தெரிகிறது. பழந்தமிழ்ப் புலவர் பாடல்கள் இயற்கையோடு பொருந்திக் கருதிய பொருளைப் படிப்போர் உளத்தில் பதியச் செய்வனவாய் உணர்ச்சி யூட்டுவனவாய் இருக்கும்.

இத்தகைய புலவர் சங்கத்தில் வளர்ந்த தமிழே, "சங்கத் தமிழ்," எனப்படும். சங்கங் கூடித் தமிழ்மொழி

ஆராயப் பெற்றதுபோல, வேறு எம்மொழியும் ஆராயப் பெறவில்லை. தமிழ்வேந்தரும், தமிழ்ப்புலவரும், தமிழ்ச் சங்கமும் இக்காலத்தில் சீரிய முறையில் வளர்ச்சி பெறா மையால், மக்கள் தம் குறைந்த தமிழறிவு கொண்டு, பழைய சங்கநூல்களைப் படிக்கப் புகுந்து, "பழங்காலப் புலவர்கள் பொருள் விளங்காமல் பாடியுள்ளனர்," என்று குறைகூற முற்படுகின்றனர். பிறர்க்கு விளங்காமற் பாட வேண்டும் என்று எவர்தாம் கருதுவர்? அக்காலத் தமிழ் நடை சிறந்திருந்தமையால், அதற்கேற்ப மக்களுக்கு அறிவுவிளக்கம் தருவனவாகவே முன்னோர் பாடினர் என்க.

சங்கத் தமிழ்நூல்களுள், கடல்கோள், தீ, இவற்றால் அழிந்தன போக எஞ்சியவை: தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் ஒன்றும், பத்துப்பாட்டு என்ற பகுதியுள் அடங்கிய திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடு கடாம் என்ற நூல்கள் பத்தும்; எட்டுத்தொகையுள் அடங்கிய நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற நூல்கள் எட்டும்; பதினென் கீழ்க்கணக்கு என்ற பிரிவில் உள்ள நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணை மாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்ற நூல்கள் பதினெட்டு மாகும்.

இந்நூல்கள், பழந்தமிழ் மக்கள் அரசியல், நாட்டின் முன்னேற்றம், நிலப்பண்பு, வாழ்க்கை நலம், கலை வளர்ச்சி, நாகரிகம் முதலியவற்றை நன்குணர்த்துவன வாகும்.

இவற்றைக் கற்றுணர்ந்து இக்காலத்திற்கு ஏற்பன கோடல் எத்துணை நலமாகும் என எண்ணுமின்.

2. பாணர்:—பத்துப்பாட்டுள் பெரும்பாணாற்றுப் படையை ஆராயுமுன், பாணர் பற்றியும் ஆற்றுப்படை பற்றியும் அறிதல் அவசியமாகும். பாண் என்றால் இசை; எனவே, பாணர் என்பதற்கு இசைபாடுவோர் என்பது பொருளாகும். இசைபாடுவது, பாண்மகன் தொழிலாகவும், விறல் பெற ஆடுவது, பாண்மகள் தொழிலாகவும் பண்டு இருந்திருக்கிறது. இப்பாணர் தாழ்ந்த குலத்தினர் ஆவர்.

பாணர்களில், இசைப் பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் எனப் பல பிரிவினர் உண்டு. இசைப் பாணர் வாய்ப்பாட்டுப் பாடிப் பிழைப்பவர்; யாழ்ப் பாணர் யாழ் மீட்டி வாழ்பவர்; மண்டைப் பாணர் பிச்சை ஏற்றுப் பிழைப்பவர். யாழ்ப்பாணருள் சிறு பாணர் பெரும்பாணர் என இருவகையினர் உளர். இவர்கள் சிறிய யாழையும் பெரிய யாழையும் உடைமையால் இப்பெயர் பெற்றனர் என்று கருதவேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாணர், போர்க்களத்தே அரசரது செல்வ மிகுதியைப் புகழ்ந்து பாடுவதுண்டு. அது, "களவழி வாழ்த்து," என்று கூறப்படும். விடியற்காலையில் அரசரைப் புகழ்ந்து பாடித் துயில் எழுப்புவதும் இவர்கள் வழக்கம். அதற்குத், "துயிலெடை மங்கலம்," எனப் பெயர். பாணர்கள் போரில் இறந்த வீரர்களின் ஆற்றல் தோன்றப் பாடும் பாட்டு, "பாண் பாட்டு," எனப்படும்.

இங்ஙனமாகப் பாணர்கள் இசைப்பயிற்சியால் ஐந்திணைமக்களையும் இன்புறச்செய்து, அவர்கள் தரும் பொருளால் வாழ்க்கை நடத்தியிருக்கின்றனர். சில பாணர்கள் மீன் பிடித்தும் வாழ்ந்திருக்கின்றனர். தற்காலத்தில் தையற்காரர், "பாணர்," எனப்படுகின்றனர். இவ்வாறு பாணர்பற்றிய பல செய்திகளையும் சங்கநூல்களிற் காணலாம்.

3. ஆற்றுப்படை :—இனி, ஆற்றுப்படை என்பது, ஒரு வள்ளலிடம் பரிசு பெற்றானொருவன், பரிசு பெறக் கருதியவனை அவ் வள்ளலிடம் செல்லும்படி வழிப்படுத்துவதாகப் பாடும் பாட்டாகும். இதன்கண் பரிசு பெற்றோன் நிலை, பரிசு பெறக் கருதினோன் நிலை, வள்ளலின் மாண்பு, அவ்வள்ளலின் ஊருக்குச் செல்லும் நிலை, வள்ளலைக் காணும் முறை, பெறத்தகும் பரிசு முதலியன விளக்கப்பெறும்.

முற்காலத்தில் ஒரு வள்ளலிடம் பரிசுபெற்றோர் அனைவரும், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்," என்ற பெருநோக்காளராய், மேற்கூறியபடி பலரை ஆற்றுப்படுத்துவர்; அதனாற் பலரும் பயன்பெறுவர். அவ்வள்ளலின் புகழும் எங்கும் பரவி நிலைபெறும். இவ்வாறு பலர், பலரை ஆற்றுப்படுத்துவதால், வள்ளல்கள் மனங் கலங்காரோ எனின்? கலங்கார். முற்காலப் புரவலர், தமிழறிவு நிரம்பியவராய்ப் புலவர் பாடும் புகழையே பெரிதும் விழைந்து ஆற்றுப்படுத்தலைக் குறித்து உளமகிழ்வர் என்க.

ஒரு புலவர், யான் ஒருநாள் மட்டுமன்று, இருநாள் மட்டும் அன்று, பலநாட்கள் பலரை அழைத்துக்கொண்டு அவ் வள்ளலைக் காணச் சென்றாலும், யான் முதல்நாள் அவ்வள்ளலைக் கண்டபோது அவன் எவ்வாறு ஒப்புரவு செய்தானோ, அவ்வாறே எப்பொழுதும் உதவுவான் என்பதை,

> "ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
> பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
> தலைநாட் போன்ற விருப்பினன்"

என்று கூறுவதால், பண்டைத் தமிழ்வள்ளல்களின் மனநிலை நன்கு உணரக்கூடும்.

ஆனால், தற்காலத்தே பொருள் நிறைந்த தம்மிடத்தே வந்து ஒருமுறை அருள்பெற்றான் ஒருவன், மறுமுறை வந்தாலும், அன்றி அவன் பிறரைத் தம்பால் அனுப்பி

ருலும், "ஏடா! நீ நேற்று இங்கு வந்து பொருள் பெற்று யல்லேயோ? இன்று ஏன் மீண்டும் வந்தாய்? நீ பொருள் பெற்றுப் போவதோடு நில்லாது, நின் உற்றாரையும் இங்கு அனுப்புகிருய்; இதனலேயே உனக்கு உதவுதல் கூடாது," என்று வெருட்டிப் பின் சில கொடுத்து, "இனி ஒருவரிடமும் இதனைக் கூருதே," என்று கூறும் பொருளாளரும், அவரிடம் பொருள்பெற்றுப் போவானை வழியில் வறியோன் ஒருவன் கண்டு ஆவலுடன், "நீ இப்பொருளை யாண்டுப் பெற்ருய்?" என்று வினவின், "அதுபற்றி நினக்கென்ன?" என்றிவ்வாறு கூறி அப்பொருளாளர் சொல்வழி நிற்பாரும், பண்டைப் புரவலரையும் இரவலரையும் பின்பற்றி நடத்தல் நலமாகும்.

4. பெரும்பாணற்றுப்படை:—இனி, பெரும்பாணற்றுப்படை என்பது சங்கநூற் பிரிவினுள் ஒன்ருகிய பத்துப்பாட்டுள் அமைந்த நான்கு ஆற்றுப்படைப் பாடல்களுள் ஒன்ருகும். இதன்கண், "காஞ்சியில் இருந்த 'தொண்டைமான்—இளந்திரைய'னிடம் சென்று பரிசுபெற்று வருபவனெருவன், பெரும்பாணன் ஒருவனைக் கண்டு அவனது நிலைக்கு இரங்கி, யான் இன்ன அரசனைக் கண்டு இன்னின்ன பரிசுகளைப் பெற்றேன்; நீயும் நின் சுற்றஞ் சூழ அவனிடம் சென்ருல் இத்தகைய பரிசு பெறலாம்; அவனூர்க்கு வழி இது; இன்னின்ன இடங்களில் இன்னின்ன உணவு பெறலாம்; இளந்திரையன் பெருமைகள் இவை; அவனைப் புகழும் முறை இது," என்று அறிவுறுத்தி அவ்வரசனிடம் வழிப்படுத்துவது ஆகிய முறையில் பாடப்பெற்றுள்ளது.

இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனர் என்ற புலவர் ஆவர். இவரது காலம் கி. பி. 50 முதல் 95 வரை என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இப் புலவர், பத்துப்பாட்டுள் இப் பெரும்பாணற்றுப்படையையன்றி 9-ம் பாட்டாகிய பட்டினப்பாலையையும் பாடியிருக்கிருர். அப் பட்டினப்பாலை கரிகாற் சோழனைப் பற்றிப் பாடியதாகும். இவ்விரு பெரும் பாட்டுக்களுடன்,

எட்டுத்தொகை நூல்களுள் அகநானூற்றிலும், குறுந் தொகையிலும் பாலைபற்றிய பாட்டுக்கள் ஒவ்வொன்று பாடியுள்ளார்.

ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் பாலைநில நிகழ்ச்சி களை நயம்பெறப் பாடுதலில் வல்லவர் என்பதும், பொருள் களை உற்றுநோக்கி அறிவதில் மேம்பட்டவர் என்பதும், உவமை கூறுவதில் தேர்ந்தவரென்பதும், பலாப்பழத்தை உண்பதில் மிகப் பற்றுள்ளவர் என்பதும், மக்கள் வாழும் விதத்தைக் குறிப்பாக அறிவிப்பவர் என்பதும் பிறவும் இவரது பாடல்களாற் புலனாகின்றன.

பெரும்பாணாற்றுப்படையுள் இப்புலவராற் பாடப் பெற்ற தொண்டைமான்—இளந்திரையன் காஞ்சியிலிருந்த ஒரு தமிழரசன்; நாகப்பட்டினத்திலிருந்த சோழன் ஒரு வன், பிலத்தின் வழியே நாகருலகஞ் சென்று ஆங்குள்ள நாககன்னிகையுடன் கூடிய காலத்து, அக்கன்னிகை யான் பெறுங் குழந்தையை என் செய்வேன் என்று கேட்க, அச்சோழன் தொண்டைமாலையை அக் குழந்தைக்குச் சூட்டிக் கடலில் விட்டால், அது வந்து கரையேறின், அதற்கு நாடாட்சி வழங்குவேன் என்று கூற, அவளும் அவ்வாறே, தான் பெற்ற ஆண்குழந்தையைக் கடலில் விட, அக கடலின் திரை கொணர்ந்து கரை சேர்த்தலால் அக்குழந்தை 'தொண்டைமான்—திரையன்' எனப் பெற்று நாடாளும் உரிமை எய்தியது. அத்திரையன் மரபில் தோன்றிய இவனும் தொண்டைமான் இளந்திரை யன் ஆயினன்.

இவ்வரசன் அறமலிந்த ஆட்சியுடையவன்; வீரர்க்கு வீரன்; எளியோர்க்கு எளியன்; புலவர்க்கு வரையாது வழங்குபவன் என்று இப்பாட்டுள் உரைக்கப்படுகிறான்.

சங்கநூற் பாக்கள் யாவும் பெரும்பாலும் ஆசிரியப் பாவாலேயே யாக்கப்பெற்றிருக்கும். அம்முறையில் இப் பெரும்பாணாற்றுப்படையும் ஆசிரியப்பாவினால் ஆகியுள் ளது. இப்பாட்டு ஐந்நூறு அடிகளை உடையது; ஆங்

காங்கே சொல்நயம் பொருள்நயம் அமைந்து விளங்குகிறது. கண்ணனாரது பெரும்பாணாற்றுப்படையைவிட, அவரது பட்டினப்பாலை மிகவும் சுவைநலம் தோய்ந்து விளங்குவதை ஆராய்ந்துணர்க.

பத்துப்பாட்டு முழுமைக்கும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார். அவர் பாட்டுப் போக்கின்படி உரை வரையாது தம் மனப்போக்கின்படி வரைந்துள்ளார்: தம் உரைக்கு ஏற்றவாறு பாட்டிலமைந்த சொற்களை அசைத்து எடுத்துக் கொண்டுகூட்டி எழுதியிருப்பது அவ்வளவு இனிமை தரவில்லை; என்றாலும் முதற்கண் உரைகண்டு வெளிப்படுத்திய அவருக்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது. அவரது உரையைச் சிறிது வருந்திப் படித்துப் பாட்டின் போக்கின்படியே நாம் உரைப்பொருளை அமைத்துக் கோடல் பெரிதும் நலம் பயக்கும்.

பொருள் அமைதி

பாணன் தோற்றம்:—ஒரு முதுவேனிற் காலத்தே பகற்பொழுதில், வறுமையால் வாடிய பெரும்பாணன் ஒருவன், தன்னை ஏற்றுப் புரப்பாரை எங்குந் தேடிப் பெறாது, பெரிய யாழ் ஒன்றை இடது கையில் ஏந்தித் தன் சுற்றஞ் சூழத் திரிந்துவருவானாயினன்.

பரிசிலன் ஒருவன் பாணனை எதிர்ப்படுதலும், தான் பெற்றது கூறி வழிப்படுத்தலும்:—அதுகாலை, தொண்டைமான்—இளந்திரையனிடம் பரிசுபெற்று வரும் ஒருவன் அப்பாணனை எதிர்ப்பட்டான். "இரவல! இளந்திரையன் என்ற அரசனது தலைநகராகிய காஞ்சிக்கு யான் சென்று குறையாத செல்வத்தையும், குதிரை யானைகளையும் பரிசாகப் பெற்றேன். அவ்வரசன் சேர சோழ பாண்டியரினும் சிறந்தவன்; சோழர்குடியில் தோன்றியவன்; அறம் மலிந்த செங்கோலாட்சி உடையவன்; அவனை நினைத்தாலும் நின் வறுமை ஒழியும்; ஆதலின் அவனைத்

தேடி அடைக," எனத் தொண்டைமானிடம் வழிப் படுத்துகிறான்.

தொண்டைநாடு செல்லும் வழிநிலை: காட்டுவழியின் தன்மை:—நீவிர் செல்லுங் காட்டுவழி பல கிளைகளை உடையது; அவ்விடத்தே வழிப்போக்கரை அலறும்படி வெட்டிக் கொள்ளையிடுவோர் இல்லை. அக்காட்டில் இடியேறும் இடியாது; பாம்புந் தீண்டாது; புலி முதலிய கொடுவிலங்குந் திங்கு செய்யா; அச்சமின்றி இளைப்பாறிச் செல்லலாம். மேலும் அவ்வழிகளில், உப்புப் பொதிகள் ஏற்றப்பட்ட வண்டியினை உமணப்பெண் ஓட்டிச் செல்ல, உமணர் அவ்வண்டியின் இருபுறமும் பல எருதுகளுடன் வண்டிக்குப் பாதுகாப்பாக நடந்து உப்பு விலைகூறிச் செல்வர்.

முத்து, மாணிக்கம் ஆகியவற்றை எங்குங் கொண்டு சென்று விற்கும் பிறநாட்டு வணிகர், உடைவாள் செருகிய உடையினராய், மிளகுப் பொதிகள் சுமந்து செல்லும் கழுதைகளின் பின்னே சென்றுகொண்டிருப்பர். இவ்வாறு உப்பு வண்டிகளும் கழுதைச் சாத்தும் போகும் வழிகள் கூடுமிடத்தே, சுங்கவரி வாங்குவோர் இருப்பர். வழியெல்லாம் ஆரவாரமாக இருக்கும்.

எயினர் இருக்கை:—அக்காட்டிடம் எயினர் என்ற வேட்டுவர் குடியிருப்பினையுடையது. எயினரது சிறு வீடுகள் எலி நுழையாமல் கூரிய ஈந்தின் ஓலையால் வேயப் பட்டிருக்கும். அங்கே எயிற்றியர், கரம்பை நிலத்தில் எறும்புகள் சேர்த்துவைத்த புல்லரிசியினைப் பாரை கொண்டு கிளறி எடுத்துவந்து, நில உரலிற் குற்றிச் செம்மையாக்கி, உப்புநீர் ஏற்றிய உலையில் வார்த்துச் சோறு சமைப்பர். இவ்விடத்தே நீவிர் சென்றால் புல்லரிசிச் சோற்றுடன் உப்புக் கண்டத்தினை உண்ணுதற்குத் தருவர்.

பாலை நிலம்: எயினர் அரண்:—அருகே உள்ள பாலை நிலத்தில் நீரின்மையால், அலையும் மான்களின் அடிச்சுவ

டுள்ள இடங்களில், மழை வறண்டகாலத்து நீர் தேங்குவதற்குத் தோண்டிய குழிகள் உண்டு. அவற்றையடுத்த பள்ளங்களில் கானவர் பதுங்கியிருந்து நீர் குடிக்கவரும் பன்றிகளை நள்ளிரவில் வேட்டையாடுவர். பகற்போதில் முயல்களை வேட்டையாடுவர். இதற்கப்பால் எயினர் அரண் தோன்றும்; அது ஊகம் புல்லால் வேயப்பட்டது. ஆங்குள்ள அகன்ற வீடுகள் முள்வேலியும், நாயின் காவலும் தாழிட்ட கதவுகளும் உடையவை. வீடுகளினுள்ளே வில் வேல் வாள் கேடயம் அம்புக் கூடுகள், பாலைப்பறை இவை வைக்கப்பெற்றிருக்கும். இவ்விடத்தே செல்வீராயின், ஈந்தின் விதைபோன்ற சோற்றை உடும்புப் பொரியலுடனே வீடுகள்தோறும் உண்ணப் பெறுவீர்கள்.

குறிஞ்சி நிலம்: மறவர் குடியிருப்பு:—இதற்கப்பால் சென்றால் குறிஞ்சி நிலத்தை அடையக்கூடும். அந்நிலத்து மறக்குடி மக்கள் தம் வலிமையால் வாட்போர் புரிந்து கொள்ளையடிப்பர். மறக்குல மகளிர் யானை பாம்பு இடியேறு ஆகியவற்றிற்கு அஞ்சாதவர். மறவர் தலைவனோ துணைவருடன் பகைவரது காட்டிற் புகுந்து பசுக்களைக் கவர்ந்துவந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாக்குவான். பின், வீடு சென்று தோப்பிக் கள்ளைப்பருகிக் கிடாயை அறுத்துத் தின்று பலருடன் களியாட்டயர்வான்.

முல்லை நிலம்: ஆயர் குடியிருப்பு:—இத்தகைய குறிஞ்சி நிலத்தைக் கடந்தால் முல்லைநிலத்து ஊரை அடைவீர்கள். ஆங்குள்ள ஆயர் வீடுகள் குறுந்தடிகள்மீது அமைக்கப்பெற்றிருக்கும். அக் குறுந்தடிகளில் கட்டப்பட்ட தழைகளை ஆட்டு மந்தை நின்று மேயும். வீட்டு முற்றத்தே முளைகளில் பசுக்களைக் கட்டும் கயிறுகள் கிடக்கும்.

ஆய்ச்சியர் விடியற்காலையில் நிலை மத்தினால் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பர். ஆய்மகள் மோர்ப் பானையைத் தலைமீது சுமந்து குறிஞ்சி நிலத்திற்குச்சென்று விற்பாள். விற்றதனாற் பெற்ற நெல்லைக் கொண்டு தன் சுற்றத்தாரை உண்பிப்பாள். அவள் நெய்விற்கச் சென்றால், அதற்கு விலையாகப் பொன் பெறாதவளாய்ப் பசு,

பாலெருமை இவற்றையே பெற்றுவருவாள். இவ்வாறான ஆயர் குடியிருப்பில் தங்கினால், தினையரிசிச் சோற்றைப் பாலுடனே உண்ணத் தருவர்.

ஆயர்கள் பசுக்கூட்டத்தைக் காட்டிற்கு ஓட்டிச் சென்று, பாற்சோறுண்டு, புல்லாங்குழலில் பாலைப் பண்ணையும், ஒருவகை யாழில் குறிஞ்சிப் பண்ணையும் வாசித்துப் பறவைகளும் விழையுமாறு செய்வர்.

படைத்தலைவர் இருப்பு :—இத்தகைய புல்வெளியைக் கடந்து சென்றால், முட்காடுகள் சூழ வளர்ந்த தொழுக் களையுடைய ஊர்களில், ஆங்காங்கே வரகுக் குதிர்கள் நிறைந்த முற்றம், வரகுத் திரிகை நடப்பெற்ற பந்தர், கலப்பை சார்த்திய புகைக் கொட்டில் இவற்றையுடைய வரகுவைக்கோல் வேய்ந்த சிறுகுடில்கள் நிறைந்திருக்கும். இவ்விடத்தில் வரகுச் சோற்றினை வெந்த அவரைப் பருப்புடன் உண்ணப்பெறலாம்.

மருத நிலம் : உழவர் குடியிருப்பு :—இக்குடியிருப்பினுக்கு அப்பால் சென்றால் மிக்க உணவுப் பொருள்கள் நிறைந்த உழவர் மனைகள் தோன்றும். உழவர் எருதுகளை ஏரில் பூட்டி நன்கு உழுது விதைத்தமையால் செழித்த பயிர்த் தோட்டங்கள் காணப்பெறும். வயல்களில் உழவரும் உழத்தியரும் நாற்று முடிகளை நடுவதும், களை பிடுங்கி எறிவதும், அவர்களால் எறியப்பட்ட பூக்களைக் குழந்தைகள் சூடுவதும், கதிர் அறுப்பதும், போர் அடுக்குவதும், போர் அடிப்பதும், வைக்கோலையும் கூளத்தையும் நெல் மணியினின்று பிரிப்பதும், ஆகிய தொழில்கள் ஆரவாரமாக நிகழும். உழவர் மனைகளில் நெற்கூடுகள் நிறைந்திருக்கும். உழவர் சிறுமியர் சிறுதேர் உருட்டி விளையாடுவர். வறுமையே அறியாத இவ்வுழவர் குடியிருப்பில் தங்குவீராயின், நெற்சோற்றினைக் கோழிப் பொரியலுடன் உண்ணப் பெறுவீர்கள்.

அவ்விடத்தை அடுத்துக் கரும்பு ஆலைகள் இருக்கும். அங்கே கரும்பினை ஒடித்து ஆலையிலிட்டுச் சாறு பிழிவர் ;

பின் அச்சாற்றினைக் காய்ச்சுவர். அவ்விடத்தே நீவிர் சென்றால், கரும்பின் சாறு, கற்கண்டு இவற்றை உண்ண வழங்குவர்.

வலைஞர் குடியிருப்பு :—அம் மருத நிலத்திற்கு அப் பாற்சென்றால், வலைஞர் குடியிருப்பை அடைவீர்கள். அவ்வலைஞர் வீடுகள் மரக்கொம்புகளால் ஆகிய தூண்களை யும், மூங்கில் கழிகளால் ஆகிய வரிச்சுகளையும், தருப்பை யாலாகிய இறப்பினையும் உடையவை. வீட்டு வாயிலிலே சுரைக்கொடி படர்ந்திருக்கும். முற்றத்தில் மீன் பறிகள் கிடக்கும். வலைஞர் குளங்களில் மீன் பிடித்துவருவர். இவ்வலைஞர் குடியிருப்பில் தங்குவீராயின், கொழியல் அரிசிக் கூழுடன் இடித்த நெல்முளையைக் கலந்துவெவ்விய கள்ளைச் சுட்ட மீனுடன் உண்ணுதற்குத் தருவர். வழி யிடையே குளங்களில் பூப்பறிப்பார் நுங்கட்குத் தரும் பூக்களைச் சூடி மகிழ்வுடன் செல்லுமின்.

பார்ப்பார் இல்லம் :—அவ்விடத்தை விட்டு அகன்றால் பார்ப்பார் இல்லங்களைக் காணலாம். அங்கே பசுவின் கன்றுகள் பந்தற் கால்களில் கட்டப்பெற்றிருக்கும். கோழி, நாய் முதலியன அவ்வில்லங்களை அணுகமாட்டா. மெழுகப்பட்ட தூய அவ்வில்லங்களில் வழிபடு தெய்வங் கள் இருக்கும். பார்ப்பர் ஓதும் வேதத்தைக் கிளிகளும் கேட்டுப் படிக்கும். பார்ப்பன மகளிர் நல்ல சுவையுள்ள உணவினைச் சமைப்பர். ஆங்குச் சென்றால் சிறந்த அன் னத்தையும், நெய்யில் வெதுப்பிய மிளகுப்பொடி தூவிய மாதுளங்காய்ப் பொரியலையும், மாங்காய் ஊறுகாயினையும் வகைபெற உண்ணும்படி பெறுவீர்கள். ஆங்காங்கே வேள்விச் சாலைகள் மலிந்திருக்கும்.

நெய்தல் நிலம் : கடற்கரைப் பட்டினம் :—அதற்கு அப் பால் உள்ளது கடற்கரை; அது மேலைநாட்டுக் குதிரைகள், வடநாட்டுப் பொருள்கள் இவற்றைக் கொணர்ந்து குவிக் கும் மரக்கலஞ் சூழ்ந்தது; காவலையுடைய பண்டகசாலை, பரதவர் மாளிகை இவை தெருக்கள்தோறும் காணப் பெறும். உயர்ந்த மாடங்களில் வணிகமகளிர் மயில்கள்

போல உலாவுவர். காற்சிலம்பு ஒலிக்கும் வண்ணம் பந்தினை ஆடுவர்; கைவளை அசையும்படி மணலில் கழங்காடுவர். இத்தகைய கடற்கரைப்பட்டினத்தே தங்கினால், கள்விற்கும் இடங்களில் கொழுவிய ஆண்பன்றியின் தசையுடனே நல்ல கள்ளையும் உண்ணும்படி பெறலாம்.

கடற்கரைத் துறைமுகத்தின்கண், நீண்டுயர்ந்த கலங்கரை விளக்கம் உண்டு. அது மரக்கலங்களுக்குப் பேருதவியாய் இருக்கும். ஆங்குள்ள குடிகளது மனைகட்குச் சென்றால் பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், பனைநுங்கு, பண்டங்கள், வள்ளிக்கிழங்கு இவற்றை உண்ண வழங்குவர்.

திருவெஃகா :—அப்பட்டினத்தைக் கடந்தால், திருமால் பள்ளிகொண்டருளும் திருவெஃகா என்ற ஊரை அடைவீர்கள். அங்கே இன்னிழல் தரும் இளமரக்கா உண்டு. அவ்விடத்தே பாண்மகளிருடன் தங்கி விளையாடுவீராக. பெரிய நீர்த்துறையில் இளவேனிற் செவ்வி நுகர்வாருடன் தங்கி இளைப்பாறுவீராக. நும் யாழை மீட்டித் திருவெஃகாவிலிருக்கும் கடவுளை வாழ்த்திப் போவீராக.

காஞ்சி நகர் :—இளந்திரையன் தலைநகராகிய காஞ்சி பழமையானது; அழகு குடிகொண்டது; புகழ்மிக்கது; தேரோடும் பெருவீதிகளைப் பெற்றது; வாணிபம் நிறைந்தது; பரிசிலர்க்கு அடையாத வாயில் அமைந்தது; உயர்ந்த கோட்டையினை உடையது; பலாப்பழம்போல் இனிது சிறப்பிக்கப்பெறுவது. பல சமயத்தாரது விழாவும் இடையறாது நிகழ்வதற்கிடமானது. வெற்றி சூழ்ந்தது. இத்தகைய காஞ்சியில் பாண்டவர் நூற்றுவரை வென்றதுபோல், இளந்திரையன் பகைவரை வென்று, அடைக்கலம் புகுந்தவரை அன்புடன் காக்கும் அண்ணலாக வீற்றிருக்கின்றான்.

இளந்திரையன் ஏற்றம்:—இங்ஙனம் வீற்றிருக்கும் அரசனுக்கு, தன்னை விரும்பாத பகைவரது ஊர்களைப் பாழ்படச் செய்தலும், விரும்பிய நண்பரது ஊர்களைச் செல்வப்

பொலிவுபெறச் செய்தலும் எளியது. பல நாட்டரசர் அவனது அரண்மனைவாயிலில் திறைகளுடன் காத்து நிற்பர். அவ்வரசர்கள் அவனைக் காணுஞ் செவ்வியை எதிர் நோக்கி இருப்பர். இந்நிலையில் இளந்திரையன் மயங்காத அறிவுடன் உள்ளே எழுந்தருளியிருந்து, முறைவேண்டியும் குறை முடிக்கவும் வந்தோர்க்கு வேண்டுவன கொடுத்தும், புலவர்க்கு அணிகலன்கள் அளித்தும், இவ்வாறு கொடை புரிந்து, கொடுமையில்லாத அமைச்சருடன் கூடியிருந்து அருளுவான்.

இளந்திரையனை ஏத்தும் முறை:—அவ்வரசனை அணுகி, சிங்கக்குட்டி யானையின் மத்தகத்தைக் கொள்ள விரும்பினாற்போல, பகையரசரது மதில்களை அழித்து, அவர்களது முடியினைப் பறித்து, வீரமுடி புனையும் வெற்றியினையும், பகைப்புலத்தே கவர்ந்த வருவாயினையும், மாறுகொண்ட அரசரைப் பொருத்தும் விருப்பமின்மையும் உடைய, தொண்டை மாலை சூடிய குலத்தோன்றலே! வீரர்க்கு விளக்கந் தருவோய்! கொடியோர்க்குக் கொடியோய்! செல்வருட் செல்வ! போர்த்தொழிலில் மேம்பட்டோய்! நின் பெரும் புகழிற் சிலகூறிப் புகழ்ந்து வந்தேன். நீ நெடிது வாழ்க!'' என்று கூறி யாழினை முறையே மீட்டிக் கைதொழுது வாழ்த்துக.

அரசன் பரிசு வழங்குதல்:—இவ்வாறு வாழ்த்தினால், மயில்கள் ஆடும் இளமரக்காவினையும், மந்திகள் செத்தைகள் வார, மானும் புலியும் உறங்கும் முற்றத்தே, யானை முறித்துக் கொணர்ந்த நந்த விறகால் முனிவர் செந்தீ வளர்த்து ஓமம் செய்கின்ற சாரல்களையும், அருவிகளையுமுடைய மலைநாட்டரசனாகிய திரையன், நினது நிலையெல்லாம் தெரிவதற்கு முன்பாகவே, நிலையில்லாஉலகில் நிலைத்த புகழை விரும்பி, உன்னை அன்புடன் அழைப்பான். அந்நிலையிலே, உனது அரையிலுள்ள கிழிந்த உடையை அகற்றிப் பாலாவிபோன்ற நுண்ணிய நூலாடையை உன் சுற்றத்தாருடன் உடுத்தச் செய்வான். மடைத்தொழில் வல்லோனால் ஆக்கப்பெற்ற இறைச்சியையுஞ் சோற்றையும்

இன்சுவை உணவுகளையும், வெள்ளிக் கலன்களில் இட்டு, தம் பிள்ளைகளுடனே உண்ணச் செய்வான். பாண் மகளிர் சூடும்படி பொன்னரி மாலையினையும், பொற்றாமரைப்பூவினையும் அளிப்பான். வெண்குதிரைகள் பூட்டிய அழகிய தேரினைத் தருவான். அத்துடன் வேறு பல குதிரைகளையும் கொடுப்பான்.

5. உவமை யழகு :—பழந்தமிழ்ப் புலவர்கள் புரவலரைத் தேடிச் செல்லுங்கால், வழியிடையே பல காட்சிகளையும் உற்றுநோக்கிச் செல்வர். ஒருவரைப் பொருளுக்காக வரம்புமீறிப் புகழார். குறை கூறுதற்கு அஞ்சார். ஒரு பொருளுடன் மற்றொரு பொருளை ஒப்பிடுமிடத்துத் தாம் கண்டவற்றையே கூறுவர். அம்முறையில் கண்ணனார்,

பாணன் கையிலுள்ள இறுகவேண்டிய இடம் இறுகியும், நெகிழவேண்டிய இடம் நெகிழ்ந்தும் இருக்கும் யாழ் நரம்பிற்கு, அப்பாணன் மனைவியின் கையிலணிந்த இறுகியும் நெகிழ்ந்தும் இருக்கும் வளையலையும்; வேனிற்காலத்தே வறுமையால் நலிவுற்றுப் பொருள் பழுத்த அருளாளரைத் தேடி அலையும் பாணன் சுற்றத்தாருக்கு, மழை வறண்ட காலத்தே பழுத்த மரத்தைத் தேடி அலையும் பறவைக் கூட்டத்தையும்; இளந்திரையனது பழியற்ற சிறப்பிற்கு, மறுவற்ற தூய வலம்புரிச் சங்கினது சிறப்பையும்; பன்றியின் சிறிதாகி வளைந்த வெண்ணிறக் கொம்பினுக்கு, சிறிய வளைந்த வெள்ளிய அகத்திப்பூவையும்; முயலின் வெண்மையான நீண்ட மெல்லிய செவிக்கு, வெண்டாமரைப் பூவின் நீண்ட புற இதழையும்; கரும்பாலைகளின் ஆரவாரத்திற்கு, அச்சந்தரும் தோற்றமுள்ள சிங்கத்தின் தாக்குதலுக்குப் பல யானைகளும் கலங்கிப் பிளிறுதலையும்; யாவரும் விரும்புதற்கினிய சிறந்த காஞ்சிநகருக்கு, உலகம் மிக விரும்பிக் கூறும் பலாப்பழத்தையும்; இளந்திரையன் அரண்மனைவாயிலில் சிற்றரசர் திறைகளுடன் வந்து காத்து நின்று அரசனது செவ்வியை எதிர்நோக்கி யிருத்தற்கு, ஆற்றின் கரையிலே வணிகர் தோணியின் வருகையை

எதிர்நோக்கி யிருத்தலையும்; இளந்திரையன் பகையரசை வென்று அவர் முடியைப் பறித்து வெற்றியடைதற்கு, சிங்கக்குட்டி யானையின் மத்தகத்தைத் தாக்கி வெற்றி யடைவதையும்; சிவந்த பாம்பாகிய பள்ளியின்மீது கரிய திருமால் பள்ளிகொண் டிருத்தற்கு, செங்காந்தள் பூத்த மலைமீது கரிய களிறு துயில்கொண் டிருத்தலையும்; நுண்ணிய நூலாடைக்கு, பாலாவியின் நுண்மையினையும் உவமையாக்கிக் கூறும் அழகு நுகர்ந்தின்புறற் பாலதாகும்.

6. மக்கள் பழக்க வழக்கம்:—முற்காலத் தமிழ்மக்கள் பழக்க வழக்கங்களுட் சிலவற்றை இப் பெரும்பாணாற்றுப் படையால் அறியலாம்.

க. முன்னாளில் உப்புப்பொதி ஏற்றிய வண்டியினை உமணப்பெண்டிரே ஓட்டிச் சென்றனர்; இவ்வாறு செல்லுமிடத்து அவ்வண்டியின் இருபுறத்தும் உப்புவாணிகர் வண்டியின் அச்சு முறியாமற் பாதுகாத்து நடப்பர்; அதுகாலை, வண்டியில் முன்பூட்டிய எருதுகள் இளைத்தால், அவற்றிற்கு எதிராகப் பூட்டுதற்குரிய சில காளைகளையும் உடன்நடத்தி வருவர் எனத் தெரிகிறது. இவ்வருட் பழக்கத்தை, இக்காலத்தே இரு காளைகளையே பாரவண்டியிற் பூட்டி வருத்தி, அக் காளைகளின் கழுத்திலுள்ள புண்ணையுங் கருதாராய்த் தாற்றுக்கோல்கொண்டு புறத்தே குத்தி, இரக்கமின்றி அடித்து ஓட்டுவார் உணர்ந்து மேற்கொள்ளல் நலமாகும்.

உ. முத்து, மாணிக்கம் முதலிய விலைப்பொருள்களை விற்போர், வழிப்பறி செய்வோரால் தம் முயிர்க்குக் கேடு நேராவண்ணம் தடுக்கும்பொருட்டு, உடைவாள், அரைவாள் முதலியவற்றைக் கொண்டு செல்வர்; அவர்கள் மிளகுப் பொதிகளைக் கழுதைகளின்முதுகில் ஏற்றி நடத்தி வருவதும் உண்டு. கோவேறு கழுதைகளின்மீது பொதிகளை ஏற்றி நடத்தும் வழக்கம் மேலைநாட்டில் மிகுதி; நம் நாட்டில் பண்டு வணிகர் கைக்கொண்ட வழக்கத்தை இன்று வண்ணார் கைக்கொண்டனர். அவர்கள்கூட அவ்

வழக்கத்தை மெல்ல மெல்ல நழுவவிடுவதாகத் தெரிகின்றது.

௩. பல வழிகள் கூடுமிடத்தே வண்டி முதலியவற்றிற்குச் சுங்கவரி வாங்கும் வழக்கம் பண்டே இருந்தமை புலனாகிறது. ஆனால் நெடுங்காலம் பின்பற்றப்பட்டு வந்த அவ்வழக்கம் தற்போது அகன்றுவிட்டது.

௪. பாலைநிலத்தே வேட்டுவர் எலி, அணில் இவை நுழையாதபடி, கூரிய ஈந்தின் ஓலையால் கூரை வேய்தலும்; நள்ளிரவில் பன்றிகளை வேட்டையாடுதலும்; எயிற்றியர், கரம்பைநிலத்தே எறும்புகள் வருந்திச் சேர்த்துவைத்த புல்லரிசியினை ஈவின்றிக் கவர்ந்து உண்பதும், நாய் கவர்ந்து தந்த உடும்பினைப் பொரியல் செய்வதும் வழக்கமாகும். இதனால் பாலைநிலம் ஈரமின்றிக் காய்ந்து போவார் வருவாரை எவ்வாறு வாட்டுமோ, அவ்வாறுதான் அந்நில மக்களும் இருப்பார்கள் என்பது தெளிவாகிறது.

௫. குறிஞ்சி நிலத்து மறவர், பகைப்புலத்தே கவர்ந்து வந்த பசுக்களைக் கள்விலைக்குத் தந்து, வீட்டில் நெல்லாற் சமைத்த கள்ளை உண்டு களித்தலை வழக்கமாக வுடையார் எனத் தெரிகிறது.

௬. முல்லைநிலத்தே ஆயரும் ஆய்ச்சியரும் மெய்ம் முயற்சி மிகவும் உடையர் என்றும், ஆயன் அரையில்மட்டும் ஓராடையை உடுத்துவதும், பசுவினிடம் பால் கறந்தால், பால்பட்ட கையைக் கழுவாது தலையில் தடவிக் கொள்வதும், பசுக்களை மேய்ப்பதும் வழக்கம் என்றும், ஆய்மகள் குறிஞ்சிநிலத்திற்சென்று நெய்விலைக்காகப் பாலெருமையை வாங்க வல்லவள் என்றும் தெரிகிறது. நெய்விலைக்குப் பாலெருமையை எளிதிற் கொடுத்தல் குறிஞ்சிநில மறவர்க்குப் பெருமையாகக் கூறுவதற்கில்லை. அது அவர்க்குச் சிறுமையேயாகும். எவ்வாறெனில், அன்னோர் நல்வழியில் தேடாது பிறகாட்டில் கொள்ளையடித்துத் தீயவழியில் தேடிய அவ்வரிய பொருள், எளிதான நெய்யின் விலைக்கே சென்றமையால் என்க.

எ. பார்ப்பனமகளிர் சமைக்கும் சுவைமிக்க நல் லுணவுகளில், மாதுளங்காயினை வில்லையாக்கி மிளகுப் பொடி தூவி நெய்யில் வெதுப்பிப் பொரியல் செய்தல் முன்னைய வழக்கமாகும். மாதுளங்காய் குளிர்ச்சியானது; வயிற்று உளைச்சலுக்கும், வயிற்றுப் புண்ணிற்கும் ஏற்ற மருந்து என மருத்துவ நூலோர் கூறுவர். மேற்கண்ட வழக்கம் இன்று புதுமையாக இருப்பினும் அதன் பயன் உணர்ந்து யாவரும் மேற்கொள்ளல்வேண்டும்.

அ. துறைமுகங்களில் மேலைநாட்டுக் குதிரைகள் வட நாட்டுப் பொருள்கள் இவை மரக்கலங்களில் வந்திறங்கும் என்பதால், தமிழருக்குப் பிற நாட்டாருடன் வாணிபஞ் செய்யும் வழக்கம் இருந்தமை அறியப்படும்.

கூ. கடற்கரையில் துறையறியாது செல்லும் மரக்கலங் களுக்குத் துறை இது என்று கூவி அழைக்கும் கலங்கரை விளக்கம் (Light House) அக்காலத்திலேயே உண்டெனத் தெரிகிறது. ஆனால், அது தற்காலத்திற்போல மின்சார ஒளியால் ஆகியதன்று; அக்கால நாகரிகத்திற்கு ஏற்ப, மிகப் பெரிய எண்ணெய்த் தீபமாக இருந்திருக்கிறது.

க0. அறமலிந்த ஆட்சி புரிதலும், எளியர்க்கு எளிய னய்க் காட்சி தருதலும், தன்பால் வந்தோரது குறைகளைக் குறிப்பாலுணர்ந்து வரையாது வழங்குதலும், புகழ் பெறு தலையே குறிக்கோளாகக் கொள்ளுதலும், ஏழைகளாகிய பாணரது பசி தீர்த்தலையே தம் தலைக் கொடையாகக் கருதி, அதனைத் தம் கடமையாக மேற்கொள்ளுதலும், முற்காலத் தமிழரசர் வழக்கங்களாகும். இத்தகைய அரசர் ஆட்சியின்கீழ நாடு செழித்தோங்கி யிருக்கும என் பதில் ஐயமும் உண்டோ?

கக. அரசர் பாலாவி போன்ற நூலாடையைப் பாணர்க்கு வழங்கினர் என்பதால், அக்காலத்தில் மிக மெல்லிய ஆடைகளையும், தமிழர் கையால் நெய்தற்குப் பழகி யிருந்தனர் என அறியலாம். இதனால், இக்காலத் தில பொறிகளால் மெல்லிய ஆடைகள் நெய்யப்பெறு தலைக் குறித்து நாம் வியத்தற்கில்லை.

கஉ. முனிவர் தாம் உறையுஞ் சாரல்களில் ஓமஞ்செய்வதற்குரிய விறகுகளை யானைகள் ஒடித்துத் தரவும், புலியும் மானும் பகையின்றி உறங்கவும், மந்திகள் செத்தைகளை அகற்றவும் பழக்கி யிருந்தனர். இதனால் அருள் குடி கொண்ட இடத்தில் பகைமையுணர்ச்சி தோன்றாது என்பதும் நல்லுணர்வே தோன்றும் என்பதும் தெரிகின்றன.

7. சொல் நயம்:—ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் நயம்பெறப் பாடுவதில் வல்லவர் என்பதற்குச் சில உதாரணம் காண்போம்.

பாணர்கள் புலால் உண்பவர்கள்; இசைக் கலையில் தேர்ந்தவர்; அவர்களுக்கு வறுமை சூழ்ந்த காலத்தே 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்றபடி, கற்ற கல்வியை வெறுக்கவே தோன்றும்; இக்கருத்தைப் 'புலவு வாய்ப் பாண' என்ற தொடர்மூலம் புலப்படுத்துகிறார். உணவுப் பொருளுடன் சேர்த்து உண்ணப்பெறுவது உப்பு; அது சிறிது மிகினும் குறையினும உணவு சுவை பெறமாட்டாது; உணவு சுவை பெறுமளவில் சிறிதாகச் சேர்க்கப்பட வேண்டுதலின் அவ்வுப்பினைச 'சில் பத உணவு' என்று குறிப்பிடுகிறார். பலாவினது சுளை சிறிதாகவும் பழம் பெரிதாகவும் இருக்கும்; ஆனால் நல்ல சுவைப் பெருமையுள்ள பழத்திற் சுளை சிறிய அளவிலேயே இருக்கும்; இவ்வியல்பினைச் 'சிறுசுளைப் பெரும் பழம்' என்ற தொடரால் அறிவிக்கிறார். வாகைப்பூ வெற்றிப் புகழுக்கு அறிகுறியாகச் சூடப்பெறும்; அகத்திப் பூவிற்கும் இப்பெயருண்மையால் அதனைக் குறிப்பிடுமிடத்து 'புகழா வாகை' என்கிறார். சிறிய முயலுக்குப் பெரிய செவிகள் இருப்பதனை, 'நெடுஞ் செவிக் குறு முயல்' என முரண்தொடை நயம்பெற அமைத்துள்ளார். மறவர் தாம் கொள்ளையடித்த சிறந்த பசுக்களை நல் விலைக்குக் கொடாது, கள்விலைக்குத் தொலைத்துவிடுவதால், கள் விலைக்குக் கொடுத்து என்னாது 'நாளாத் தந்து நறவு நொடை தொலைச்சி' என்கிறார். ஆயர் சிவந்த தீக்கொள்ளியால் மூங்கிற் குழலைச் சுட்டுத் துளை உண்டாக்கியவிடத்து,

அத்தனை கருநிறம் பெற்றிருப்பதை, 'செந்தீத் தொட்ட கருந்துளைக் குழல்' என முரண்தொடை நயம்பெறக் கூறுகிறார். உழவரது நெற்கூடுகள் அழியாதனவாய்ப் பழமையுடையவாய் இருக்கின்றன என்பதைக் 'குமரி மூத்த கூடு' என்னுமிடத்து, 'குமரிப்பெண் வயதில் மூத்தல்' என்பது தொனிக்கிறது. தளர்நடைச் சிறுவர் கையால் தள்ளி உருட்டி விளையாடும் சிறு தேரானது மேலேறி நடத்தப் பெருமையால், அதனை 'ஊரா நற்றேர்' என்கிறார். மறை என்றால் இரகசியம். வேதத்திற்கும் பெயருண்டு. அந்தணரே ஓதிவருகிற அம்மறையைக் கிளி கேட்டிருந்து வெளிப்படுத்திவிடும் என்பதுபோல, 'வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்' என்று அமைத்துள்ளார். நெருங்கிய இலைகள் அடர்ந்து நிழல்தரும் பொழிலை, 'வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்' என்று கூறுகிறார். இவ்வுலகம் நிலையில்லாதது; சுழன்றுகொண்டிருப்பது; இவ்வுலகப் பொருள்களும் நிலையில்லாதவை என்பதனை 'நில்லா வுலகத்து நிலை' என்று கூறியுள்ளார். இன்னும் பல உள; அவற்றைப் படித்து உணர்க.

8. அருஞ்சொல் ஆட்சி :—பெரும்பாணாற்றுப்படையில் பல அரிய சொற்கள் ஆளப்பெற்றுள்ளன. அவை: திவவு (யாழ் நரம்பு); கனலி (சூரியன்); புலவுவாய் (வறுமையால் கல்வியை வெறுக்கும வாய்); வால் உளைப்புரவி (வெள்ளிய தலையாட்டத்தையுடைய குதிரை); உம்பல் (குடிப்பிறந்தோன்); அத்தம் (வழி); உரும் (இடி); உராறுது (இடியாது); அறைவாய் (ஒலிக்கும் வாய்); முடலையாக்கை (முறுக்கேறிய உடம்பு); உமணர் (உப்பு வாணிகர்); வம்பலர் (புதியோர்); அடிபுதை அரணம் (பாதத்தை மறைக்கும் செருப்பு); படம் (சட்டை); கருப்பை (எலி); வெரிந் (முதுகு); சாத்து (வாணிகம்); இயவு (வழி); எய் (முள்ளம்பன்றி); பிணவு (குட்டி); குழிசி (பானை); தெய்வமடை (கடவுட்பலி); உல்கு (சுங்க வரி); புகழா வாகை (அகத்தி); அதர் (வழி); அழுங்குதல் (தவறுதல்); ஞமலி (நாய்); எருக்கி (ஒட்டி); சொன்றி-மூரல் (சோறு); அணல்

(தாடி); நொடை (விலை); கெண்டி (தின்று), தண்ணுமை (மத்தளம்); குளகு (தழை); அதள் (தோல்); துருவை (ஆடு); அளை (தயிர்); ஞெகிழி (தீக்கொள்ளி); வீ (பூ); நாஞ்சில் (கலப்பை); சவட்டல் (மென்று கிழித்தல்); கட்சி (காடு); கொடிறு (கன்னம்); அமலை (கட்டி); முனைதல் (வெறுத்தல்); யாணர் (புது வருவாய்); வல்சி (உணவு); அளகு (கோழி); பிழா (தட்டு); வத்தம் (நெல்); சிலதர் (தொழிலாளி); எகினம் (நாய்); வள்ளம் (கிண்ணம்); துப்பு (துணை); பாணி (தோணி); சிதர்வை (கிழிந்த உடை) என்பனவாம்.

9. முடிப்புரை :—பழந் தமிழ்ப் பெருமக்களது தலைசிறந்த வாழ்வினை—நாகரிகத்தினை—நல்லொழுக்கத்தினை—நாமும் எய்தி நலம்பெற வேண்டுமேல், பத்துப்பாட்டு முதலிய சங்கநூல்களைப் படித்து உணர்தல் வேண்டும். அந்நூல்களை மனம் பற்றிப் படித்து உணரும் ஆற்றல் பெற்றவர்க்கு, வேறு நூல்களைப் படிக்க மனம் பற்றாது என்ற கருத்தில், மனோன்மணீய ஆசிரியர் திரு. P. சுந்தரம் பிள்ளையவர்கள்,

“பத்துப்பாட் டாதிமனம் பற்றினோர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கு இயையும் இலக்கணம்இல் கற்பனையே”

என்று கூறியுள்ளார்.

ஆதலின், தமிழ் அன்பர்களே! பத்துப்பாட்டினை யாவரும் கற்றுணரும் முன், அவற்றைக் கேட்டு இன்புற வேண்டும் என்ற பெருநோக்குடன், மாநாடு கூட்டிய திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்குத் தமிழுலகம் கடமை பூண்டுள்ளது. இவ்வாறு நூல்கள் பற்றிய மாநாடு கூட்டுவதில், இச்சங்கம் முனைந்து நின்று பல ஆக்கவேலைகள் புரிந்துவருவது பாராட்டுதற்குரியதாகும். தாய்மொழிக்கு முதன்மை தரும் காலம் இது; ஆகவே தமிழ்மொழியும், தமிழ்நூல்களும், தமிழ்ப்புலவர்களும் புத்துயிர் பெற்று எழும் பணி புரிதலே தமிழர் கடமையாகும். தமிழ் வெல்க.

ரு. முல்லைப் பாட்டு

ச. குருஸ் அந்தோனி, எம். ஏ.

(தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை)

முன்னுரை: முல்லைப்பாட்டின் நுண்ணிய மாண்பினை நவலுவதற்கு முன்னர் 'பாட்டு' என்ற சொல்லின் பிறப்பியலைத் தெரிந்து கொள்ளுதல் சாலவும் பொருத்தமுடையதாகும். இன்று தமிழ் ஆராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டற்பாலது 'மொழியியற்கலையே' (Philology) இக்கலை கற்றூர்க்குச் சொற்களின் பிறப்பியல் தெளிவாகத் தோன்றும்; பிறப்பியல் தோன்றவே, அச் சொற்களை ஆக்கிய பெருமக்களின் அறிவுச் செறிவையும், அவர்களுடைய கூட்டுறவான அகவியல்பையும் கண்ணாடியில் முகத்தைப் பார்ப்பதுபோல் பார்க்கலாம். ஆதலால், தமிழ் மக்கள் கண்ட 'பாட்டு' என்ற சொல்லைப் பகுத்துத் துருவிக் காண்டல் ஏற்றமும் பொருத்தமுமாகின்றது.

பாட்டு - பிறப்பியல்: 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் தொல்காப்பிய விதியால் தமிழ்ச் சொற்கள் எல்லாவற்றிற்கும் காரணம் உண்டு என்று தெளிகின்றோம். ஆனால், சொல்லின் காரணங்களைப் பார்த்த அளவில் காண முடியாதென்பதை 'மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா' என்னும் நூற்பாவால் அறிந்துகொள்கிறோம். பாட்டு, பா என்பனவற்றிற்கு அறிஞர் வெவ்வேறு வகையில் பொருள் கொள்வர். ஆனால் 'பாட்டு' என்ற சொல்லை, பாண் + து என்று பகுக்க இடம் இருக்கிறது. 'கண்' என்ற பெயரினடியாகப் பிறந்த 'காண்' என்ற சொல் 'து' என்னும் விகுதி பெற்று, 'காட்டு' என்று ஆனது போல் பண் என்ற சொல் 'பாண்' என்றாகி 'து' விகுதி பெற்றுப் பாட்டு என்று ஆயிற்று. பண் என்பதற்கு, பண்ணு என்னும் ஏவல், பண்ணுதல், ஆக்குதல், செய்தல், படைத்தல் என்ற பல சொற்கள் இருக்கின்றன. பாட்டு எவ்வாறு பண்ணப்படுகின்றது? ஒரு புலவன் தன்

நுண்மாண் நுழை புலத்தால் கண்ட அரிய பெரிய ஆழ்ந்த உண்மைகளை உலகத்திற்கு எடுத்து ஓத விரும்புகின்றான். விரும்பியவாறு, உணர்ச்சியால் உந்தப்பட்டுச் சொற்களை மரபுநிலை தவறாது அடுக்கிக் கேட்டார்க்கு இன்பம்தோன்ற இசைக்கின்றான். அவன் விரும்பியவாறு உரைநடையில் உரைப்பானாயின் அவன் உள்ளக்கிடக்கை கலித்து நயம் படத் தெளிவுபடுவது இயற்கையன்று. ஆதலால், மக்கள் படித்து இன்புறுமாறு பாடுகின்றான்.

மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே
வானையும் கடலையும் நோக்கியிருந்தேன்;
மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல் கண்டேன்.

இதில் புலவன் கருத்து எவ்வாறு பொதிந்து கிடக்கின்றது? படிப்பார் பயன்தான் யாதோ? மாலைப் பொழுதில் வானம் சிவந்து தோன்றப் புலவன் ஒரு மேடைமீது நின்று பார்க்கின்றான். கடலும் வானமும் ஒன்றையொன்று தழுவி மிளிர்கின்றதைக் கண்டு, தன் வயம் இழந்து நிற்கின்றான். அவ் வானமும், கடலும் முத்தமிடுவது போன்று காட்சியளிக்கின்றது. இவ் வுண்மையையே

மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல் கண்டேன்.

என்று பாடுகின்றான். இன்னும் படிப்போரும், பார்ப்போரும் படித்த அவ்வளவில் தானே பாடலில் திளைத்து, பாடலில் கண்டவாறே, தம் உடலிலும் நீர் அரும்பிக் குறும் வியர்வை சொட்ட, விதிர் விதிர்த்துக் கண்ணீர் ததும்ப, உள்ளம் வெதும்பி அசைவற்று அப்படியே நின்று விடுகின்றார்கள்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

எல்லாம் உடையவனே! உனது மணமார்ந்த திருவடியைப் பெறும் பொருட்டு என்னுடைய உடல் பொடித்து

நடுநடுங்கி கைகளைத் தலைமேல் கூப்பி வைத்து கண்களில் நீர் நிரம்பி, உள்ளம் குழைவால் வாடி மனமானது பொய் யொழுக்கத்தினின்று நீங்கி உன்னை, உனக்கு வெற்றி வெற்றி என்று வழிபடுகின்ற ஒழுக்கத்தை அடியேன் கை நழுவ விடேன். ஆகையால் எனது நிலைமையைக் கண்டா வது ஏற்றுக்கொள்ளே என்று இறைஞ்சுவது எப்படிக் கேட்டாரை உருக்குகின்றது? உனக்கு 'வெற்றி வெற்றி' என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருப்பேன். இவ் வொழுக்கம் என்னையறியாமல் நின்றுவிடலாம் என்பதற்கு 'நெகிழ' என்ற சொல் இடையில் பெய்தது எத்துணை ஏற்ற முடையதாயிருக்கின்றது? இப் பாடலின் ஒவ்வொரு சொல்லையும் ஆய்ந்து நிறுத்தி உள்ளத்தோடு ஒன்றி ஊன் றிப் பார்க்க. பெருமிதமான சொற்கள். அன்பு உள்ளி ருக்க மாட்டாது அதை வெளிப்படுத்த வந்த செந்தமிழ்ச் சொற்களன்றோ நாம் ஈண்டு இதில் காண்பவை? கடவுள் தன்மை வாய்ந்த கவிகளுக்கன்றோ கேட்டாரை மெய் பொடிப்பச் செய்யும் திருவாக்குத் துள்ளிக் குதித் தெழும்.

> தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
> சிறப்பை மறந்துவிட்ட பூவும்
> வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த
> வைய முழுதுமில்லை தோழி.

கண்ணன் என் காதலன் என்ற தலைப்பில் பாரதியார் இதைப் பாடினர். தேனீயினுடைய இயற்கை தேனைத் தேடித் திரட்டுவதே. எனவே தேனை மறந்திருக்குமோ தேனீ? மலருக்கு ஒண்மை இயற்கை. இதை நீங்கி மலர் இருக்குமோ? பயிரும் அவ்வாறே. இவ்வியல்பான முக் கால உண்மைகளை எத்துணை அழகோடு பொதிந்து காட் டிக் கண்ணனுகிய காதலனை மறக்கவே முடியாதென்கிறார்.

முழு மணிகளைத் திரட்டி அவைகளை மாலையாகக் கோத்த பின்னரே, மணிகளுடைய ஒளி வீசும் அழகினைக் கண்குளிரக் கண்டு நுகர்கின்றோம். அதுபோல் புலவர் பல்வேறு சொற்கூட்டங்களிலிருந்து ஏற்றமான சொற்

களைத் தேர்ந்து, தாம் கொண்ட கருத்தினையோ, உள்ளக் கிடக்கையையோ கோத்துப் பாடலாகப் பாடுகின்றார். படிப்போர் கேட்டு, உள்ளம் இழந்து உருகி அசைவற்று நின்று விடுகிறார்கள்.

அன்றி, 'பாட்டு' என்பதற்கு நான் கூறிய பொருளே மிகவும் பொருத்தமானது என்பதைப் பாட்டைக் குறிக்க எழுந்த பல சொற்களையும் ஆராய்ந்து பார்த்துத் தெளிவுறலாம். செய்யப்படுவது செய்யுள், யாக்கப்படுவது யாப்பு, ஆராய்ந்து தேர்ந்து பண்ணுவது தூக்கு, பின்னப்படுவது பனுவல்.

நான் கூறும் இப் பொருளுக்கு ஆதாரமாக அயல் நாட்டுச் சொற்களையும் துருவி ஆராய்ந்து கூறுவேன். ஆங்கிலத்தில் சொல்லும் பொயட்ரி (Poetry) என்ற சொல் பிரான்ஸ் மொழியில் பொயத்தே (Poete) என்றும், இலத்தீன் மொழியில் பொயத்தா (Poeta) என்றும், கிரேக்க மொழியில் பொயத்தஸ் (Poietes) என்றும் காணப்படுகிறது. இச் சொற்களுக்கெல்லாம் வேர் பொய்யின் (Poiein - to make) என்பதாகும். வடசொல்லாகிய சுலோகம் என்பதற்கும், சேர்க்கிறது, செய்கிறது என்ற பொருள் உள்ளதாக வடமொழியாளர் கூறுவர். பழங் காலப் பல்வேறு நாட்டு மக்கள் பாட்டைக் குறிப்பதற்கு ஆக்கிய பல்வேறு சொற்கள் ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது வெள்ளிடைமலை. எனவே, உயிர் ஒன்று உடலோ வேறுபட்டிருக்கிறது. ஈண்டு நான் எடுத்துக் கொண்ட பாட்டின் சொற்பொருள் முல்லையோடு பொருந்தும் வகையைச் சொல்வேன்.

முல்லைப் பாட்டு: முல்லை சான்ற கற்புப் பொருந்தியதனால் இதற்கு முல்லை என்னும் பெயர் பொருத்தமாயிற்று. குடும்ப வாழ்க்கை குதூகலமாக இருக்கவேண்டுமானால், அதற்குப் பொருள் இன்றியமையாததன்றோ?

> முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமெனப்
> பனிவருங் கண்;......

என்று மணிவாசகர் கூறியதை ஆழ்ந்து ஆராய்க. ஆதலால் குடும்பத் தலைவன் பொருள் தேடுவதற்குப் போகின்றான். அவன் மீண்டும் வருமட்டும் அவன் ஆணைப்படி பொறுமையோடு இருந்த தலைவியின் இயல்பான நிலைமையே முல்லையாகும். எனவே முல்லை என்பதன் பொருள் இயல்பு என்பது யாவர்க்கும் தெரிந்ததே. தலைவன் பிரிவால் தலைவி தனியே இருக்கின்றாள். ஆதலால், முல்லைக்குரிய ஒழுக்கம், இருத்தலும் அதற்குரிய காரணமுமாகும். இஃது அகத் துறைப் பொருளாக இருந்தாலும் இம் முல்லைப்பாட்டில் அகமும் புறமும் இணைந்து செல்லும் போக்கை இயற்கை இன்பத்தை நுகர்ந்த நுண்புலவரே கண்டு களிப்புறுவர்.

அகம்: அகம் இன்றேல் புறம் இன்று. அகத்தால் உந்தப்பட்டு முயற்சியால் தேடும் பொருள் புறத்தைச் சார்ந்ததாகும். ஒளிக்குக் கண்ணும் ஞாயிறும் இன்றியமையாதன போன்று மக்கள் வாழ்வுக்கு அகமும் புறமும் இன்றியமையாதன. மக்களுடைய அரும் பெரும் முயற்சிகள் எல்லாம் அகவாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவே. எனவே, அகம் என்ற சொல்லின் நுட்பத்தையும் ஒரு சிறிது கூறுதல் பொருத்தமுடையதாகும். அஃகுதல் - சுருங்குதல், நுண்ணிதாதல், நுட்பமாதல்

அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

நுட்பமான அகத்துணர்வாலே நுகரும் இன்பமே அகமாகும். அறிவற்ற மக்கள் இவ் வின்பத்தினை எய்தினும் அது விலங்கின்பமே ஒழிய சான்றோர் கூறிய ஒப்பற்ற இன்பமாகாது. இதன் மேன்மையை இன்னும் விளக்கிக் கூறலாம். இறைவனோடு இரண்டறக் கலந்து இன்பம் நுகர்ந்த பெரியோர்கள் தாங்கள் சுவைத்த இறைபோகத்தை தலைவன் தலைவி வாயிலாகவே வெளியிடுகின்றார்கள். தலைவன், தலைவியர் தம்முள் நுகரும் நுகர்ச்சி நுண்ணியதாயிருப்பதால் பிறருக்கு அத்தன்மையை எடுத்துரைக்க முடியாது; உள்ளத்துணர்வால்தான் நுகரமுடியும். ஆதலால் சான்

ளோர் அதை அகம் என்று கூறுகின்றனர். இச்சொல் தூய தமிழாம். தமிழின் வழிமொழிகளாகிய ஏனைய திராவிட மொழிகளிலும் இச்சொல்லே காணப்படுகின்றது. மலையாளம் - அகம்; கன்னடம் - அகே; துளுவம் - அம். சிங்களம் - அகா.

புறம்: புறம் - வெளி - வெறுமை. ஒன்றும் இன்மை. தலைவன் சிறுவன்; கண்டதைப் பார்த்துக் களித்துப் பொறுப்பற்று இருக்கின்றான். வாழ்க்கைத் துன்பம் வாட்டுகிறதில்லை; அகவாழ்வு ஆட்டுகிறதில்லை. கல்வி கற்கத் தொடங்குகிறான; கல்வி பெறும் வகையில் சிறிது கவலையடைகின்றான். எனினும் வரப்போகும் அகவாழ்வை நினைந்து நன்கு படிக்கின்றான். இளமைப்பருவம் கடந்து காளைப்பருவம் கண்டவுடன் ஏந்திழை ஒருத்தியைக் கூடி இன்புற எண்ணுகின்றான். எண்ணிய வழி எழில் மிக்க ஒருத்தியை விதி கூட்டக்கண்டு காதலித்துக் கடிமணம் செய்து இன்பவாழ்வை எய்துகின்றான். இதனாலன்றோ மணிவாசகரும் திருக்கோவையாரில்

> வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வானுகத்தின்
> துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
> கிளைவயி னீக்கிஇக் கொண்டையங் கன்னியைக் கொண்டுதந்த
> விளைவையல் லால்விய வேன்நய வேன்தெய்வ மிக்கனவே

என்று மன்னிருந் தெய்வத்தை மகிழ்ந்துரைத்ததாகக் கூறினார். இந்த இணைவிழைச்சு தூய்மையாயிருப்பின் அவ்வின்பம் அளவிடற்பாலதன்று என்பது நாயனார் கூறிய

> தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு.

என்ற பாடலால் விளங்கும். இல்லறத்தில் மூழ்கி இறுதியில் என்ன காண்கின்றான்? வாழ்க்கைத்துன்பம்; போராட்டம். துன்பத்தை நினைக்கும்பொழுது, பழங்கால இன்பத்தை நினைக்கின்றான். நிலையாமை அவன் கண்முன் நிற்கின்றது. இவ்வுலகம் 'புல்லிய நிலத்து' என்று முடிவு காண்கின்றான். எனவே புறம் என்ற சொல்லின் வேர் 'புன்மை' யாக விருக்கலாம் என்று தோன்றுகிறது.

நிற்க, ஆசிரியர் நப்பூதனுர் அகத்தையும் புறத்தையும் சேர்த்து, ஒன்றுபடுத்தி முல்லைப்பாட்டைப் பாடினர். தலைவனைத் தலைவி பிரிந்திருக்கின்ற பிரிவு, அகத்தின்பாற் பட்டது; வினைமேற் சென்ற வேந்தன் பாசறையிலிருப்பது புறத்தின்பாற் பட்டது. அகமும் புறமும் சேர்ந்ததே வாழ்க்கை என்று காட்டுவதற்குப்போலும் நப்பூதனுர் முல்லைப்பாட்டை யாத்தார் என்று யூகிக்க இடம் இருக்கிறது.

முல்லைப்பாட்டில் காணும் காட்சிகளை இரு பெரும் பிரிவுகளாகவும், ஏழு உட்பிரிவுகளாகவும் பிரிக்கலாம்.

1. காதலியின் பிரிவுத் துன்பம்.
2. பகைவர் மேற்சென்ற மன்னனின் பாசறை அமைப்பு.

இவ்விரு பெரும் பிரிவுகளை 7 வகையாக வகுத்துக் கூறுவேன்.

1. கார்காலத்தின் மாலைப்போது.
2. காதலனைக் காணுது கடுந்துயருழந்து நிற்கும் காதலியின் பிரிவாற்ருமை.
3. மாற்ருரை மடக்கச்சென்ற மன்னன் பாசறை அமைப்பு.
4. தலைவனுடைய அகநிலை.
5. வெற்றிகண்ட வேந்தன் துயில் கொள்ளுதல்.
6. தலைவியின் துயரம்.
7. தலைவன் மீண்டு வருதல்.

கார்காலத்தின் மாலைப்போது: பகைவரோடு போர் செய்து வெற்றிகாணப் புறப்பட்ட வேந்தன் போருடையணிந்து பொருக்கெனக் காதலிமுன் நின்று 'பாவாய்! யான் பகையரசரை அழிக்கச் செல்கின்றேன்,' எனக்

கூறப் பைந்தொடி பதைபதைத்துத் துடித்துக் 'காதல! என்னைத் துனிகூரத் தனிமைப்படுத்திச் செல்லின் யான் இறந்து படுவேன்,' என்று இயம்புகின்றாள். தலைவனோ, அன்பு ததும்பி வழியும் அத் துன்புறும் சொற்களைக் கேட்டு, 'நங்காய்! நானிலம் நடுங்கப் போர் தொடுத்து வெற்றி பெற்று கார்காலத் தொடக்கத்தே கடுகி வருவேன்,' என்று பிரிகின்றான். காதலி அதற்கிசைந்து பொறுத்திருக்கின்றாள். தலைவன் கூறிச்சென்ற கார்காலம் தொடங்குகின்றது; கார்காலத்தின் முதல்மழையும் பெய்கிறது. மாலைப்போதில் மங்கை மயங்கி மன்னனை நினைக்கின்றாள்.

கார்காலம் காதலனை நினைவூட்டுகின்றது. காதலன் இன்னும் வாராமையால் கண்பனிப்பத் தேம்பித்தேம்பி அழுகின்றாள். இவ்வாறு அழுது ஏங்கிநிற்கும் தலைமகளைக் கண்டு முதுபெரும் பெண்டிர் அவள் துயரைத் தணிப்பதற்கு நெல்லும் பூவும் எடுத்து மாயோன் கோயிலுக்குச் சென்று நல்வரம் கேட்டு நிற்கின்றனர். அவ்வமயத்தில் ஆயர்குல நங்கை ஒருத்தி தன் கன்றுகளைப் பார்த்து, 'கன்றுகாள்! கவலைகொள்ளவேண்டா; இடையர் பின்னின்று செலுத்திக்கொண்டு வர உங்களுடைய தாய்ப் பசுக்கள் விரைவில் வரும்,' என்று சொல்லிக்கொண்டிருக்கின்றனள். இயல்பாகக் காதில் வீழ்ந்த இச் சொற்களை நல்ல நிமித்தமாகக் கொண்டு அப் பெண்டிர் மகிழ்ந்து தலைவியிடம் வந்து 'தாயே! பகைவர்மேற் சென்ற அரசன் இப்பொழுதே வந்துவிடுவான். ஏன் என்றால் நாங்கள் நல்ல நிமித்தச் சொல் கேட்டு வந்தோம்,' என்று சொல்லி ஆறுதல் கூற, ஆற்றாதவளாய்க் கண்களில் அறுந்த முத்துக்கள் போல் நீர் சொரிய வாடி மிகவும் வருந்துகின்றாள்.

போர்க்குத் தகுந்த காலமாகிய வேனிற்காலத் தொடக்கத்தில் மாற்றரசன்மீது படையெடுத்துச் சென்ற மன்னன் பகைவருடைய நகரத்துக்குப் பாதுகாப்பாக இருந்த காடுகளை வெட்டி, வேட்டுவர் குடிசைகளை அழித்து, முட்களை மதிலாக வளைத்துக் கடல்போன்ற அகன்ற பெரியதோர் பாடிவீடு அமைக்கின்றான்.

வீடுகள் தழைகளால் வேயப்பட்டிருக்கின்றன. தெருக்கள் ஒழுங்காக அமைந்திருக்கின்றன. சந்தியில் காவலாக நின்ற யானைகள் கரும்பும், நெற்கதிரும், அதி மதுரத் தழையும் சேர்ந்த உணவை உண்ணாது தம் துதிக் கையால் நெற்றியைத் துடைத்துக்கொண்டும், வளைந்த கொம்பில் தும்பிக்கையைத் தொங்கவிட்டுக்கொண்டும் நிற்கின்றன. ஆதலால், யானைப்பாகர் துறட்டியால் குத்தி, 'ஆது அப்பூது' போன்ற வடசொற்களால் அதட்டிக் கவ ளம் ஊட்டுகின்றனர்.

காவியாடை யணிந்த துறவிகள் தமது திரிதண்டங் களை ஊன்றி அவற்றின்மேல் காவியாடைகளை உலரவைக் கிறதுபோல விற்களை வரிசை வரிசையாக ஊன்றி அவற் றின்மேல் அம்புக்கட்டுகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. குந்தாயுதங்களை ஊன்றி அவற்றின்மேல் கேடயங்கள் படல்கள்போல் சார்த்தப்பட்டிருக்கின்றன. இவ் விற் கோட்டையே பாதுகாவலாகவுள்ள பல கூடாரங்களின் நடுவில் அரசனுக்குத் தனியே ஒரு கோயிலிருக்கிறது.

அங்கு ஆண்மை மிகுந்த ஆயிழையார் நெய்யைக் காலுகின்ற திரிக்குழாயைக் கொளுத்திக்கொண்டு, ஏற் கனவே ஏற்றிய விளக்குகள் அவியும்பொழுதெல்லாம் அவற்றைச் சீர்ப்படுத்திக்கொண்டு திரிகின்றனர். அவர்கள் கூந்தல் முதுகில் விரிந்துகிடக்கிறது. அவர்கள் வளைய லணிந்திருக்கின்றனர். இரவையே பகலாக்கும் ஒளி யார்ந்த வாளை இடையில் தொங்கவிட்டிருக்கின்றனர். மோசிமல்லிகைப் புதர் அசைவதுபோல் மெய்காப்பாளர் தூக்கம் நிறைந்த முகத்தோடு திரிந்துகொண்டிருக்கிறார் கள்; ஆனால், அவர்கள் தங்கள் கடமையில் தவறுகின்றவர் அல்லர். உடலில் சட்டையணிந்து தலைப்பாகை தரித்தி ருக்கிறார்கள்.

பொழுதறிந்துரைப்போர் புரவலனிடம் வந்து காலத் தைக் கூறுகின்றார்கள். உடனே யவனர் வெளிச்சங் காட்ட, உள் அறையிலுள்ள பள்ளியறையை அரசன் அடைகின்றான். இந்த யவனர் உடையினுள் குதிரைச்

சம்மட்டி மறைந்து கிடக்கின்றது. அவர்கள் அஞ்சாமையும் இயற்கையான வலிமையும் உடையவர்கள். ஊமையரான மிலேச்சர்கள் புறவறையின் உட்பாகத்தில் காவல் காத்துக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

அரசன் படுக்கையில் படுத்திருக்கின்றான். உறக்கம் உற்றிலது. புரண்டு புரண்டு உறக்கங்கொள்ளானாய் மறுநாட் போரை நினைந்துகிடக்கின்றான். அன்றி, முன்னாட் போரில் புண்பட்ட யானைகளை நினைக்கின்றான். யானைகளை வெட்டி வீழ்த்தி வெற்றிமுரசு கொட்டிய வீரரை நினைந்து நைகின்றான். அம்பு பாய்ந்த வலியால் தீனிதின்னாது காதுகளைக் கவிழ்த்துக்கொண்டு நிற்கும் புரவிகளை எண்ணி எண்ணிப் புண்படுகின்றான். அவனுடைய ஒரு கை படுக்கையிலிருக்கிறது; ஒரு கை தலையிலிருக்கிறது. தன் படை இந்நிலையிலிருக்க நாளைப் போர்தொடுக்கும் வகையை வகுத்துக்கொண்டே கண்வளர்கின்றான் காவலன்.

தலைவியின் தனிமைத்துயரம்: பாசறையில் பார்த்திபன் பள்ளிகொண்டிருக்க அவனைத் தன் பக்கத்திலே காணாது தலைமகள் தன் நெஞ்சினை அவனிடம் விடுத்து, நற்சொல் கேட்டுவந்த நங்கையர் ஆற்றியும் ஆற்றாது நைகின்றாள். எனினும் பிரிவுத்துன்பத்தால் ஆற்றாது வருந்தினால் காதலன் கற்பித்த சொல்லுக்கு மாறாக முடியுமென்று கருதித் தன்னைத் தேற்றிக்கொண்டு வாளாவிருக்கின்றாள். பிரிவுத்துன்பத்தால் மெலிந்து இளைத்துவிட்டாளாதலால் வளையல் கழன்று வீழ்கின்றது. அதை மீட்டும் அணிகின்றாள். ஒருபால் பிரிவாற்றாமையும், ஒருபால் தன்னைத் தேற்றிக்கொள்ளுதலுமாயிருப்பதால், அறிவு மயங்கி மஞ்ஞைபோல் கிடக்கின்றாள்; பெருமூச்செறிந்து நடுக்குறுகின்றாள். நடுக்கத்தால் அணிந்த அணிகள் துடுக்கெனக் குலைகின்றன. துன்பத்தோடும் துயரத்தோடும் ஆற்றொணாக் கடலில் மூழ்கியிருக்கும் ஆரணங்கின் அருகில் பொற்பதுமை ஏந்திய அகலிலே விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது. எழுநிலைமாடத்தில் தலைவி

இருக்கின்றாள். சோவென்று பெய்துகொண்டிருக்கின்ற மழையால் அம்மாடத்தின் மேலுள்ள கூடுவாய்களினின்றும் நீர்த்தாரைகள் வழிந்துகொண்டிருக்கின்றன. தனிமையாகப் படுத்திருக்கும் தலைவி, தன்னளிசெய்யத் தலைவன் தவறான் என்ற உறுதியோடு இருக்கின்றாள்.

தலைவன் மீண்டுவரும் முழக்கம்: நன்னுரை நசுக்கி, என்னுரை எற்றிப் பகைவர் நாட்டைப் பொசுக்கிப் பற்றிக் கவர்ந்து படையோடு வருகின்றான் வேந்தன். வெற்றிக் கொடி வேகமாக ஆடுகின்றது; கொம்பும் சங்கும் முழங்குகின்றன. வழியில் காசாஞ்செடிகள் நீலமலரைப் பூத்திருக்கின்றன. கொன்றை மலர்கள் பொன்போல் மிளிர்கின்றன. காந்தட் பூக்கள் கைபோல் விரிந்திருக்கின்றன. சிவந்த தோன்றிப்பூ சில்லென்று பூத்துக்கிடக்கின்றது. வரகங்கொல்லையில் இளமான்கள் துள்ளி விளையாடுகின்றன. வள்ளிக்காடுகள் பின்னேபோகத் தலைவன் முல்லை நிலத்திற்கு வருகின்றான். அவன் வருகின்ற தேரின் ஆரவாரம், ஆற்றாமையால் அமளிமிசை யமர்ந்திருந்த தலைவியின் காதில் வீழ்ந்து அவளை மகிழ்விக்கின்றது.

உவமைப் பொருத்தங்கள்: இம் முல்லைப்பாட்டில் காணக்கிடக்கின்ற உவமைகள் பொருத்தமாகவும் படிப்போர் மனத்தில் பதிந்து இன்பம் ஊட்டுவனவாகவும் உள்ளன. கடலிடத்துள்ள நீரைப் பருகி எழுந்த கார்முகிலுக்கு, மாவலி வார்த்த நீரை வாங்கி வானளாவ வளர்ந்த கரியதிருமாலை ஒப்புமைகூறிச் செல்லும் ஆசிரியர் திறன் வியக்கற்பாலது. பாசறை அமைப்பைச் சொல்லும் பொழுது தரையில் ஊன்றியிருக்கின்ற வில்தடிகளில் அம்பறாத் தூணிகளைத் தொங்கவிட்டிருப்பது துறவிகள் தங்கள் காவியாடையைத் தம் முக்கோலில் தொங்கவிட்டிருப்பதுபோன்றிருந்தது என்று சொல்லும் ஏற்றமும் பொருத்தமுமான உவமை கண்முன் பார்ப்பதுபோன்று காட்சியளிக்கின்றது.

இயற்கை நுட்பம்: பாசறையிலுள்ள மெய்காப்பாளர்கள் மெய்ப்பை பணிந்து, தலைப்பாகை தரித்து, தூக்கத்

தோடு இரவில் காவல் காத்துக்கொண்டு அலைவது மோசி மல்லிகைப் புதர்கள் காற்றிலசைந்தாற் போன்றிருந்தது என்று கூறுவதாலும், முல்லைநிலப் பூக்களை அழகுபட எடுத்துரைக்கும் ஆற்றலாலும், வரகங்கொல்லையில் இள மான்கள் துள்ளும் காட்சியை இயம்புவதாலும் வள்ளிக் கிழங்கின் பருவத்தைப் பகருவதாலும் இவ்வாசிரியர் இயற்கை நுட்பங்களை நுனித்தறிந்தவர் என்பது புலப் படும்.

அன்றி, எடுத்துக்கொண்ட கருத்தைச் சித்திரம் போல் படிப்போர் மனத்தைப் பிணிக்குந்தகையவாய்க் கூறும் ஆற்றல் ஆசிரியருக்கு அமைந்திருந்தது என்பது பின்வருபவற்றால் தெற்றெனத் தோன்றும். பெருமுது பெண்டிர் ஊர்க்கருகிலிருக்கும் திருமால் கோயிற்குச் சென்று நெல்லும் முல்லை மலருந் தூவி நல்வரங்கேட்டு வணங்குகிறதும், இடைக்குல நங்கை குளிர்மிகுதியால் தோளில் கட்டிய கையினளாய் நின்று கன்றுகளைப் பார்த் துக் கூறுவதும், பார்த்திபன் பாடிவீடு அமைப்பதும், யானை ஆடி ஆடி அசைந்து கவளம் உண்பதும், அரசனுக் குத் தனியறை காண்பதும், பெண்டிர் கைவிளக்கேந்தி நிற் பதும், நள்ளிரவின் வருணனையும், காவலர் சுற்றிவருத லும், பொழுதறிவோர் நாழிகை வட்டிலால் காலமறிந்து கூறுதலும், அரசன் பள்ளிகொள்ளுதலும், அவன் மனநிலை யும், அவன் நினைந்து வருந்திய வரலாறும், தலைவி ஏழ டுக்கு மெத்தையில் காதலனை நினைந்து வருந்தி ஆற்றிக் கொண்டிருப்பதும், மழைத்தண்ணீர் இழுமென்னோசை யோடு வீழ்ந்துகொண்டிருப்பதும், வினைமுடித்துவந்த வேந் தன் தேர் ஒலி கேட்டுத் தலைவி அகமகிழ்தலும், தூய இரட் டுத் துணியில் தீட்டிய ஓவியம் போன்று கருத்தைத் தம் பால் இழுத்துச்செல்கின்றன.

முல்லைப்பாட்டில் காணப்படும் பண்டைத் தமிழ்மக்களின் பழக்க வழக்கங்கள் : 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்மக்களுடைய வாழ்க்கைவரலாற்றில் சிற்சில வற்றைக் காண்பதற்கு இம் முல்லைப்பாட்டுத் தொலைப்

பார்வையாடியாகப் (Television) பயன்படுகின்றது. இன்று தமிழ்மக்களிடம் காணப்படும் வழக்கம்போல் பண்டைக்காலத்தும் நன்னிமித்தமான நற்சொல் கேட்டல் மரபென்பது 'பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப' என்ற அடியால் தெரிகின்றது. விரிச்சி என்ற சொல்லின் பொருள் 'வருங் காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பது' என்ற பொருளில் கூறப்படுகிறதோ என்று ஐயுறற்கு இடம் இருக்கின்றது. இதற்கு இப்பொருள்தான் என்பது,

> வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு
> ஈண்டிருள் மாலைச் சொல்லோர்த் தன்று

என்னுமடியால் உறுதியாகின்றது. எனவே விரிச்சி என்ற சொல் விரி என்ற சொல்லடியாகத் தோன்றியது என்று உணர்க. இவ்வாறு கோயில் சென்று நல்வரங் கேட்கப்போகும் பெண்டிர் நெல்லும் மலரும் கொண்டு போவது வழக்கம். போருக்கு முன்னர்ப் பாளையம் இறங்கித் தங்கிப் பின் போர்தொடுக்கும் இக்காலத்தைப் போலவே, அக்காலத்திலும் அரசன் பாசறை அமைத்துப் போர்தொடுத்துப் பகைவரை யழிப்பதும் வழக்கமாம். அக்காலத்தில் மகளிரும் போருடை தரித்துப் போர்க் களம் புகுதல் மரபாம் என்பது,

> இரவுபகற் செய்யும் திண்பிடி ஒள்வாள்
> விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்

என்று சொல்வதால் தெளிவுறும். இக்காலத்தில் பொழுதறியும் கருவியாகிய 'கடிகாரம்' மிக நுட்பமாக செய்யப் பட்டிருக்கிறதேனும் பழங்காலத்திலும் நாழிகை அறிவதற்குக் கருவிகள் கையாளப்படாமல் இல்லை. சிற்பத்திலும், தொழிலிலும் கைதேர்ந்த அயல்நாட்டு வல்லுநரைத் தமிழ்மக்கள் அழைத்துப் போற்றிப் புரந்தனர் என்பது யவனர் என்ற சொல்லால் அறியலாகும். இந்த யவனர் கிரேக்கத் தீவுகளில் ஒன்றான அயோனு (Iona) என்ற தீவினர் எனத் தெரிகின்றது. அன்றிச் சுராஸ்திரத்திலுள்ளார் நூல்நூற்பதிலும், நெய்வதிலும் ஆற்றல் மிக்கவராக இருந்ததனால் பண்டைத் தமிழ்அரசர் அவர்களை

அழைத்துக் குடியேற்றித் தொழில்வளம் படுத்தினார்கள். சௌராஸ்திரர் என்னும் ஒரு வகுப்பார் பாளையங்கோட்டை, மதுரை, திரிசிரபுரம் முதலிய நகரங்களில் பெரும்பான்மையாக வாழ்வதை இன்றும் பார்க்கலாம். சுராஸ்திரர் - சௌராஸ்திரர் - புத்தர் - பௌத்தர் என்பது போல் இச் சொல்லாயிற்று எனக் கொள்க. கைத்தொழில் வினைஞரையும், அறிவாளிகளையும் தமிழ் உலகம் அக்காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் சாதி, சமயம், நாடு முதலிய வேறுபாடு கருதாமல் போற்றிவருகிறது என்பது விளங்குகின்றதன்றோ?

ஏனைய தேசத்து மக்கள் தங்கள் நாட்டினரல்லாத பிற நாட்டினரை மிலேச்சர் என்றழைத்ததுபோலத் தமிழரும் தமிழரல்லாத பிற மக்களை மிலேச்சர் என்றே அழைத்து வந்தனர். மிலேச்சநாட்டிலுள்ள ஊமரை வருவித்து அவர்களை அரசர் தமது பள்ளியறைக்குக் காவலாக அமர்த்திக்கொள்ளும் பழக்கம் இருந்தது. ஊமரையும், அயல்நாட்டினரையும் படுக்கையறைக்குக் காவலாக வைக்கும் கருத்து, அரசனுடைய அறையில் நடக்கும் மறை பொருள்களைப் பிறருக்கு எடுத்தோதாதிருப்பதற்கே என்று தோன்றுகிறது.

அரண்மனை பல அடுக்குகள் உள்ளதாயிருந்ததென்றும், அரசனுக்கு நான்குவகைப் படைகள் இருந்தன வென்றும் யானைகளை வடசொல்லால் பழக்குவது வழக்கமாக இருந்ததென்றும் அறிகின்றோம்.

உரையாசிரியர்: பத்துப்பாட்டு முழுவதிற்கும் நச்சினார்க்கினியர் உரை இயற்றியுள்ளார். இவர் உரை இன்றேல் பல பழம்பாடல்களை நாம் சுவைத்து நுகருவது அருமை. எனினும் தமிழ்மொழி மரபைச் சிற்சில இடங்களில் கைவிட்டுப் பாட்டுக்களின் வினைமுடிவை அலைத்தும் குலைத்தும், வேண்டாத இடங்களில் பொருளை வற்புறுத்தி வருவித்தும் இனிமையைக் கெடுத்துவிடுவார். எடுத்துக்காட்டாக முல்லைப்பாட்டின் 18-வது வரியிலுள்ள நல்லோர் என்பதனை 7-வது அடியிலுள்ள 'போகி' என்பத

னோடு கூட்டிப் பொருள்கூற முயன்றதால் தாம் சொல்ல வேண்டிய 'பெருமுது பெண்டிர்' என்னும் எழுவாய்க்கு இடம் இன்மையால் அறவே விட்டுவிட்டார். சிறுபாணாற்றுப்படையிலுள்ள 59—60 அடிகளை,

> **உளரியல் ஐம்பால் தோட்புற மறைக்கும்**
> **நல்கூர் நுசுப்பின் உமட்டிய ரீன்ற**

என்று பிரித்து எளிதில் பொருள் கொள்வதை விட்டுவிட்டு, 'நுசுப்பின் நல்கூர் புறம்தோள் மறைக்கும் உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற'—என்று சேர்த்துப் பொருள்கூறி இடர்ப்படுகின்றார். நச்சினார்க்கினியார் இவ்வாறு உரைகூறிப் போந்தாரோ, அன்றி, பிற்காலத்துப் பார்த்து எழுதினோர் தவறாய் எழுதிவிட்டாரோ நாம் அறியோம்.

முடிவுரை: பத்துப்பாட்டுகளைப் படிக்கும்பொழுது, பேராசியர் உயர்திரு. இராவ் பகதூர் பி. சுந்தரம் பிள்ளையவர்களை நினையாமலிருக்க முடியவில்லை. அவர்கள் பாடிய,

> **பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ**
> **எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே.**

என்னும் அடிகள் என்றென்றும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும். தமிழ்மக்கள் சுவைத்து நுகரும்பொருட்டு ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் 103 அடிகளில் முல்லைப்பாட்டை ஆசிரியப்பாவில் வகுத்துரைத்த திறத்தைச் செய்யுளைப் படித்து இன்புறுக.

---

௯௨. மதுரைக் காஞ்சி

[வித்துவான். ஆ. ஜெபரத்னம், எம். ஏ.]
(தூயயோவான் கல்லூரி, பாளையங்கோட்டை)

பன்மொழிப்புலவரும் தமிழறிஞருமாகிய டாக்டர் போப் ஐயர் தாம் எழுதிய நாலடியார் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலின் முகவுரையில், "நாலடியாரைப் படிக்கும் போது பல அரிய உண்மைகள் வெளிப்படுகின்றன. தமிழ் மக்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்னும் ஊக்கமுள்ளவர்கள், நன்னெறி பற்றி யொழுகவேண்டு மென்ற விருப்பமுள்ளவர்கள், தன்னலமற்ற உண்மையான அன்புள்ளவர்கள், உயர்ந்த நோக்கமுள்ளவர்கள், ஒழுக்க நெறி காட்டும் நூல்கள் யாத்தலையே தமது இன்பப் பொழுதுபோக்காகக் கொண்டவர்கள். இத்தகைய மக்க ளுக்கு நற்காலம் தோன்றுமென்று நான் நம்புகிறேன்;" என்று கூறியுள்ளார். இங்ஙனம் அவர் முன்னுரைத்த அந் நற்காலம் இவ்வளவு அண்மையில் தோன்றுமென்று அன்று யார் எண்ணியிருக்கக்கூடும்?

ஆங்கிலம் கற்று, ஆங்கிலரைப்போல நடித்தலே நாகரிகம் என்று நம்மவர் கொண்டிருந்த மயக்கம் நீங்கி, கற்பனவெல்லாங் கற்று முடித்தாலும், இந்தியராய் தமிழ ராய் வாழ்தலே தகுதி என்னும் மெய்யுணர்ச்சி இப்போது பூத்திருக்கின்றது. பட்டம் பெற்ற கல்விமான்களும், கல் லூரி ஆசிரியரும் மாணவரும் ஆர்வமுடன் தமிழ் படிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். எல்லாரும் தமிழைப் புறக் கணித்து, அயல்மொழியைக் கற்றுவந்த முன்னை இருட் காலத்தில் சான்றோர் சிலர் போற்றிக் காத்த தமிழ்ச்சுடர், இன்று பேரொளிப்பிழம்பாய் விரிந்து விளங்குவதைக் காண்கிறோம். அறிஞர்கள் முயற்சியாலும், வள்ளல்க ளுடைய ஆதரவாலும் பழந்தமிழ் நூல்கள் ஒவ்வொன்றாய்ச் சிறைவீடு பெற்று அச்சாகி வெளிவருகின்றன. புதிய நூல் கள் ஆக்கப்படுகின்றன. தமிழ்ப் புதினங்களும், வார வெளி யீடுகளும், திங்கள் வெளியீடுகளும் தமிழர் இல்லங்களை அணி செய்கின்றன. தமிழ்க் கல்லூரிகள் தோன்றியுள்ளன.

ளோடு கூட்டிப் பொருள்கூற முயன்றதால் தாம் சொல்ல வேண்டிய 'பெருமுது பெண்டிர்' என்னும் எழுவாய்க்கு இடம் இன்மையால் அறவே விட்டுவிட்டார். சிறுபாணாற் றுப்படையிலுள்ள 59—60 அடிகளை,

> உளரியல் ஐம்பால் தோட்புற மறைக்கும்
> நல்கூர் நுசுப்பின் உமட்டிய ரீன்ற

என்று பிரித்து எளிதில் பொருள் கொள்வதை விட்டு விட்டு, 'நுசுப்பின் நல்கூர் புறம்தோள் மறைக்கும் உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற'—என்று சேர்த்துப் பொருள்கூறி இடர்ப்படுகின்றார். நச்சினார்க்கினியர் இவ் வாறு உரைகூறிப் போந்தாரோ, அன்றி, பிற்காலத்துப் பார்த்து எழுதினோர் தவறாய் எழுதிவிட்டாரோ நாம் அறியோம்.

முடிவுரை: பத்துப்பாட்டுகளைப் படிக்கும்பொழுது, பேராசியர் உயர்திரு. இராவ் பகதூர் பி. சுந்தரம் பிள்ளை யவர்களை நினையாமலிருக்க முடியவில்லை. அவர்கள் பாடிய,

> பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
> எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே.

என்னும் அடிகள் என்றென்றும் காதில் ஒலித்துக்கொண் டிருக்கும். தமிழ்மக்கள் சுவைத்து நுகரும்பொருட்டு ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மக னார் நப்பூதனார் 103 அடிகளில் முல்லைப்பாட்டை ஆசிரியப் பாவில் வகுத்துரைத்த திறத்தைச் செய்யுளைப் படித்து இன்புறுக.

டொப்பப் போற்றுவதாகிய தனித்தமிழ் நெறிக்கு மாருக அவற்றைக் கடிந்துரைக்கும் அமண்சமயக் கருத்துடைய நீதிநூற்களை அவ்வாறு கொள்வதில்லை. எனவே, இன்று நாம் ஐயத்துக்கிடமின்றித் தனித்தமிழ்ச் சங்கநூல்களாகக் கொள்ளத்தக்கவை தொல்காப்பியமும், பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், திருக்குறளும், நாலேந்திணைகளுமே. காலமென்னும் கன்மனக் கூற்றுவன் கையிற் சிக்கி மறைந்த மற்றைய இலக்கிய இலக்கணங்களையும், இசை நாடகங்களையும் போன்று, இந்தச் சங்கநூற்களும் தமிழகத்தினின்றும் மறைந்திருப்பின், இன்று தமிழராகிய நமது கதி யாது? பிற்காலத்தெழுந்த புராணங்கள், பிரபந்தங்கள், இதிகாசங்களாகிய நூல்களும்தாம் தோன்றியிருக்குமா? நாம் ஆரியமோ, அராபியோ, ஆங்கிலமோ கற்று, 'சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்து துஞ்சியிருப்போம்.' அத்தகைய இழிநிலைமை எய்த வொட்டாமல் நம்மைக் காத்த இலக்கியங்களில் முதன்மைக்கண் வைத்து வழங்கப்படும் சிறப்புடையது **பத்துப்பாட்டு**.

இவ்வருமை நூலில் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படை முதல், பெருங்கௌசிகனுர் பாடிய மலைபடுகடாம் ஈருகப் பத்துப்பாட்டுக்கள் இருக்கின்றன. இப் பத்துப் பாட்டுக்களையும் ஒரு நூலாகவே கருதிப் படித்தலும், ஏடெழுதிக் கொள்ளுதலும் அக்கால முதலே வழக்கமென்று தெரிகிறது. அதனுல்தான் போலும் பத்துப்பாட்டிலுள்ள பத்துப்பாட்டுக்களிலும் ஒன்றுகூடக் கெட்டு விடாமல், எல்லாப்பாட்டுக்களும் இப்போது நமக்குக் கிடைத்துள்ளன. அவை தனித்தனியே வழங்கி வந்திருந்தால், ஒருவேளை ஒருசில பாட்டுக்கள் மறைந்துபோயிருக்கக் கூடுமன்ருே?

கன்னித் தமிழன்னை வீற்றிருக்கும் கவின்பெறு கவிக் கோவிலாகிய பத்துப்பாட்டை இயற்றிய செஞ்சொற் சிற்பிகள் எண்மர். அவருள் நக்கீரர் என்னும் புலவர் தலைவர் திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும் இயற்றியிருக்கிருர். கடியலூர் உருத்திரங்கண்ணனுர் பெரும்

பாணாற்றுப்படையும், பட்டினப்பாலையும் பாடியிருக்கிறார். கபிலர் முதலிய அறுவர் தலைக்கொரு பாட்டாக மற்றைய ஆறு பாட்டுக்களும் செய்துள்ளார்கள்.

பத்துப்பாட்டுக்கு உரை கண்டவர் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் ஆவர். இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கட் கெல்லாம் பின்னர்த்தோன்றி, அவர்களது அரிய உரை நுட்பங்களையெல்லாம் ஆய்ந்து தெளிந்து தேர்ந்தவராகிய நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டுக்கு உரை செய்யக் கூட்டிய ஊழை நாம் வாழ்த்தல் வேண்டும். அவரை நமக்குத் தந்த அந்நல் ஊழ் தமிழ்நூல்களைப் பதித்துத் தமிழைக் காப்பதற்கென்றே பிறந்த உ. வே. சாமிநாதையரையும் நமக்கு நல்கியிராவிட்டால் பத்துப்பாட்டின் கதி யாதாகி யிருக்குமோ அறியோம். ஊர்ஊராகச் சென்று, ஏடுஏடாகத் தேடிச்சேர்த்துப் பத்துப்பாட்டைப் பதித்துத் தந்த ஐயரைத் தமிழுலகம் என்றும் மறவாது. தமிழ்மக்கள் செய்த தவம், இன்று பத்துப்பாட்டு எல்லா இடையூற்றையும் கடந்து வந்து அவர்கள் கையில் இருக்கின்றது.

மதுரைக் காஞ்சி பத்துப்பாட்டில் ஆறாவது பாட்டு, எல்லாப் பாட்டுக்களினும் அடியளவால் பெருமையுடையது இதுவே. இதன்கண் எழுநூற்றெண்பத்திரண் டடிகள் இருக்கின்றன. இப்பாட்டு, முதலினும், இடையிடையே சிலவிடத்தும் வஞ்சியடிகள் வந்த ஆசிரியப்பா.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது அவைக்களத்திலே புலவர் பலர் இருந்தனர். ஒங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்விப் புலவராய், அப்புலவர் தலைவராய் விளங்கியவர் மாங்குடி மருதனார். அவரே மதுரைக் காஞ்சியைப் பாடியவர். காஞ்சி பாடிய காரணத்தால் அவர் காஞ்சிப்புலவர் என்றும் அழைக்கப்பட்டார். அவர் இயற்றிய செய்யுட்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்கநூல்களிலும் வருகின்றன.

பத்துப்பாட்டிலே மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய இரண்டு பாட்டுக்களுக்கும் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனேயாவன். அவன் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்பானோடு தலையாலங்கானத்திலே போர்செய்து வென்று அவனைச் சிறைப்படுத்தினான். அதனால்தான் அவன் அப்பெயரால் அழைக்கப்பட்டான். படை வன்மை படைத்த இராவணனைத் தன் இசைவன்மையால் வென்று துரத்திய அகத்தியனைப் போன்று, செழியனும் போர்க்கலையில் மட்டுமன்றி நூற்கலையிலும் தேர்ச்சிபெற்றவன். அவன் புலவரோடொப்பக் கவிசெய்யும் புலவனாகவும், புலவர்களை ஆதரித்த புரவலனாகவும் விளங்கியிருக்கின்றான். அமராபரணன், அருங்கலை விநோதன் என்று பாராட்டத் தக்கவன் அவன்.

அவன் உலகத்து இன்பமாகிய மனையாள் தோள் மருவுதலையும் மறந்து, போர் ஒன்றே இன்பப் பொருளென்று கருதி வாழ்ந்தான் என்று நெடுநல் வாடையில் கூறப்பட்டுள்ளது. மாதரைக் கூடிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்ததாகிய கூதிர்க்காலத்திலே, அவன் மனைவி அரண்மனையிலிருந்து, அவனது பிரிவை ஆற்றாளாய், ஒரு போதை ஒரூழியாகக் கழித்து வந்தாள். அவளுக்கு அது நெடிதாகிய வாடைக்காலமாகத் துன்பம் செய்தது. அவனோ பகைமேற் சென்று, பாசறையிலே நள்ளென்னும் யாமத்தும் பள்ளி கொள்ளானாய், வாட்புண்பட்ட வீரரைத் தேற்றிக்கொண்டிருந்தான். பகைமுடித்துச் செல்தற்கு உதவியாகவிருந்த வாடைக்காலம் அவனுக்கு நல்வாடைக் காலமாயிற்று. காதலும் வீரமும் தமிழர்வாழ்க்கையின் இரண்டு கூறுகள். எனவே, வீரனாக விளங்கிய அந்நெடுஞ்செழியன், காதலையும் நுகர்ந்து வாழும்படி நக்கீரர் நெடுநல்வாடையில் அவனுக்கு அறிவுரைக்கின்றார்.

இங்ஙனம், காமத்தையும் துறந்து, போரின்பத்தையே பேரின்பமாகக் கருதி வாழ்ந்த அவன் வீடு பேற்றைப்

பற்றி எண்ணுவதென்னை? எனவே, ஆசிரியர் மாங்குடி மருதனார் தாம் பாடிய மதுரைக் காஞ்சியில், அவன், உலகம் நிலையாமை முதலிய மெய்ப்பொருளுணர்ந்து, வீட்டின்பம் எய்தும்படி அவனைத் தூண்டுகின்றார். மதுரையிடத்து வைத்து, அவர் அரசனுக்குக் கூறிய காஞ்சி யாதலின், இது மதுரைக் காஞ்சி எனப்பட்டது. தனக்கோர் இணை யில்லாத வீட்டின்பம் ஏதுவாக, அறம் பொருள் இன்பங் களும், யாக்கையும், செல்வமும், இளமை முதலியனவும் நிலைபேறில்லாதவை எனச் சான்றோர் எடுத்துரைப்பது காஞ்சியாகும்.

" பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே "

புலவர் ஒருவர், ஓரரசற்கு உலகநிலையாமை உரைப் பதற்கு ஒரு பத்து, அன்றிப் பதினைந்து அடிச் செய்யுளே சாலும். எனின், மதுரைக்காஞ்சி எழுநூற்றெண்பதடி களின் நீண்டு கிடப்பதென்? பாட்டுடைத் தலைவனாக விருந்து, காஞ்சி கேட்பவன் தமிழ் நாட்டைப் பொதுமை நீக்கித் தனியுரிமையாக்கி ஆண்ட பேரரசன். அவற்குக் காஞ்சியுரைப்பவர் புலவர் தலைவராய் அவனவையில் விளங்கிய மாங்குடி மருதனார். இவர் இருவருடைய பெருமைக்கும் பொருந்துவதாக மதுரைக்காஞ்சி நெடும் பாட்டாக அமைந்திருக்கின்றது. மருதனார் முதற்கண், அரசனுடைய படைத்திறனையும் கொடைத்திறனையும் பாராட்டி,

" அரியதந்து குடிஅகற்றி
பெரியகற்று இசைவிளக்கி,
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பல்மீன் நடுவண் திங்கள் போலவும்,
பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி,
கடந்தடு வாள்வாய் இளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்ப,
மறமிகு சிறப்பின் குறுநில மன்ன
ரவரும் பிறரும் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த,

விலங்கிழை மகளிர் பொற்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும !"

என, அவனை வாழ்த்துகிறார். அங்ஙனம் அவர் அவனைப் பாராட்டிக் கூறுமுகத்தான், அவன் செய்த போர்கள், அக்காலத்துப் போர்முறைகள், அவன் அடைந்த வெற்றிகள், ஈட்டிய பொருள்கள், அவனது ஆட்சிமுறை முதலியன விரிவாய்ச் சொல்லப்படுகின்றன. பின்னர்ப் புலவர், அவன் ஆண்ட தமிழ்நாட்டின்கண்ணுள்ள ஐவகைநிலங்களின் வளங்களையும், இவ் ஐவகைநிலங்களின் நடுவண் அமைந்திருப்பதாகிய மதுரைமாநகரின் சிறப்பையும், மதுரைவாசிகளது வாழ்க்கை இயல்களையும் இன்று நம் கண்ணெதிரே நாம் காண்பது போலப் படம்பிடித்துக் காட்டுகின்றார். நாட்டுவளம், நகர்வளமெல்லாம் செவ்விதினுரைத்து, அரசனை மகிழ்வித்துப், பின்னர், 'இச்செல்வங்கள் யாவும் நிலையில்லாதன. அவற்றொடு மனிதர்க்குள்ள தொடர்பு அறும் நாள் ஒன்றுண்டு' என்று அரசனுள்ளம் எளிதினேற்குமாறு இனிதாகக் காஞ்சியுரைக்கும் புலவர் மருதனாரது மதிச்சிறப்பை என்னென்பேம்!

தென்னாடு ஆண்ட பாண்டியர் முறை வழுவாது அரசு புரிந்து வந்தனர். அதனால் வளி வானில் வலமாகச் சுழன்றது. நாண்மீன்கள் நெறிதவறாது ஒழுகின. பகல்செய்யும் செஞ்ஞாயிறும், இரவுச் செய்யும் வெண்திங்களும் குற்றமற்றுத் தோன்றிவிளங்கின. மழை தொழில் உதவியது. மாதிரம் கொழுத்தது. நிலனும் மரனும் பல்லுயிர்க்கும் தம் பயன் கொடுத்தன. மக்கள் பசியும் பிணியும் அறியாராய்ப் பொலிந்து விளங்கினர். அவ்வரசர் சென்ற சென்ற திசையெல்லாம் வெற்றித்திரு அவர்கட்கே உரிமையாயிற்று. அப்பாண்டியர் குலத் தோன்றலாகிய இந் நெடுஞ்செழியனும் சேரன், சோழன் ஆகிய இருபேரரசரையும் திதியன் முதலிய குறுநில மன்னரையும், ஏனைக் குறிஞ்சிநில மன்னரையும் பிறரையும் வென்று,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லைத்

தோன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்தொழுகிய
கொற்றவர்தம் கோனாக'

விளங்கினன்.

அவன், போர்க்குச் சென்று விழுப்புண்படாத நாளை யெல்லாம் தம் வாளுளொடு வைத்து எண்ணாத பெருமிதம் படைத்த மறவர் இனத்தைச் சேர்ந்த மாறன். தன்னொடு மாறுபட்டார் யாவராயினும், அவரது நாட்டில் அவன் புகுந்து, நாடெனும் பேர் காடாகும்படி அவர்களுடைய பசுத்திரள் தங்கின இடமெல்லாம் புலி முதலிய விலங்குகள் தங்கவும், ஊர் இருந்தவழி பாழாகவும் அதனை அழிப்பான். நாட்டை அழித்துப் பகையடக்கிய பின்னர், அந்நாட்டில்தானே அவன் யாண்டுபல கழிய இறுத்து, அது, முன்னையினும் பன்மடங்கு மேம்பட்டு அந்நாட்டு மக்கட்கு நலம்பல பயக்குமாறு புதிய புதிய துறைகளை வகுப்பான். அஃதன்றியும், அவன் அந்நாட்டுக் குடிகளையும் தன் உரிமைக் குடிகளாகவே கருதி, தன் குலத்துப் பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது அவர்களை ஆண்டு வருவான். இக்காலத்துப் போர் வெல்லும் வல்லரசுகளின் செயலையும், ஒருநாட்டுக் கொருநீதி வகுக்கும் அவர்தம் புன்மையையும், முற்காலத்து நம் செழியனது செயலொடு ஒப்புநோக்குமிடத்து, இவர்கள் இழிவு எத்துணைத் தெள்ளிதிற் புலனாகின்றது! மண்ணாசையால் இவர்கள் செய்யும் வஞ்சச் சூழ்ச்சிகட்கும், சொல்லும் பொய்கட்கும் கணக்குண்டோ? தாம் போரில் வென்ற நாட்டு மக்களது உரிமைகளைக் கவர்ந்துகொண்டு, அவர்களது தொழில், வணிகம், செல்வமனைத்தையும் தம்முடையவாக்கி, கோல்நோக்கி வாழும் அக்குடிகள் வான்நோக்கி அழுமாறு அவர்களைத் தவிக்கவிடும் இவர்கள் வல்லரசர்களா, அன்றி வல்லசுரர்களா, கூறுமின்!

தமிழ்மன்னனாகிய நெடுஞ்செழியனோவெனின், தான் ஒரு பொய் சொல்வதால் தனக்கு உயர்ந்த தேவருலகத்து ஆட்சியும், சாவாமை தரும் மருந்தாகிய அமிர்தமும் கிட்டு

வனவாயிருப்பினும், அப்பொய்யினைச் சொல்லான். தென் திசையிலுள்ள மலைகளெல்லாம் நிறையும்படி வாணன் வைத்த விழுநிதி பெறுவானாயினும் தனக்குப் பழியாகும் இழிசெயலெதுவும் செய்யான். தன்பாலுள்ள பொருளைத் தனக்கென வைத்துக்கொள்ளாது பிறர்க்குக் கொடுத்து, அக்கொடையால் வரும் புகழையே விரும்புவான்.

ஆயினும், இவ்வாறு கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய நாற்றிறத்தும் பெருமிதம்படைத்து விளங்கிய அப் பேரரசனாகிய நெடுஞ்செழியன், இம்மை நீங்கித் தான் செல்லக்கடவதாகிய வீடுபேற்றுக்குரிய நெறியில் முயலாது இருந்தனன்.

'குலம்தவம் கல்வி குடிமைமூப்பு ஐந்தும்
விலங்காமல் எய்தியக் கண்ணும்—நலம்சான்ற
மையறு தொல்சீர் உலகம் அறியாமை
நெய்இலாப் பால்சோற்றின் நேர்'

அன்றோ? எண்வகைத் திருவும் எஞ்சாதெய்தி வாழ்ந்திருந்த அவன் வீட்டுத் திருவுக்கு விலக்காய் இருந்த எளிய நிலையைக் கண்டு, அவன்பால் இரக்கம்கொண்டு மாங்குடிமருதனார் அவனுக்கு உலகநிலையாமையை எடுத்து ஓதுகின்றார்: 'அரசனே, உன்னைப்போலவே தம் பகைவரை வென்று, பெரும்பொருள் ஈட்டித், தம் புகழ் பாடும் பாணர்க்கும் சூதர்க்கும் தேரோடு மா சிதறி வாழ்ந்திருந்த திறல்மன்னர் திரையிடும் மணலினும் பலராவர். அவரெல்லாம் மெய்ப்பொருளறியாது வாழ்ந்து வறிதே மாய்ந்தார். உனக்கும், ஐம்பொறிகளாலும் நுகரப்படுவனவாகிய இப்பொருள்களோடுள்ள தொடர்பு அறுங் காலம் வரும். அவற்றோடுனக்குள்ள இத் தொடர்பு நிலைத்துநிற்பதொன் றென்று நீ எண்ணிக்கொண்டிருக்கும் உனது மாயை கெடுக. இவ்வுலக வாழ்வினும் இன்பம் செய்வதாய், நிலைபேறுடையதாய் விளங்கும் பொருளொன்றுண்டு. அதனைக் காட்டுதற்கு எனக்குத் தகுதி இல்லை. நீ நல்லாசிரியரிடம் சென்று, அதனை அவர்கள் பால் கேட்டுத் தெளிவாயாக.' இதுவே, மாங்குடிமருத

ஞர், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உரைத்த காஞ்சி.

மதுரைக்காஞ்சியில், ஆசிரியர் ஐவகைநிலங்களின் இயல்புகளையும் தெளிவாக எடுத்துரைக்கும் முறை, நூற்கண் ஆசிரியர் வாக்காகவே படித்து இன்புறுதற்குரியது. ஒரு நூலின் தன்மையை அறிதற்குரிய நன்முறை அந்நூலை நேரில் படித்தலேயாகும். இத்தகைய கட்டுரைகளெல்லாம் நூல்களைப் படித்தற்கு உதவும் தோற்றுவாய்களேயாம். இக்கட்டுரைகளையும், காப்பியங்களின் சாரமாக உரைநடையில் எழுதப்படும் சிறிய நூல்களையும் படித்த மாத்திரத்தில், மூலநூல்களையே ஆராய்ந்து தேர்ந்துவிட்டதாக மயங்குதல் கூடாது. எல்லாவற்றையும் எளிதாகவும் விரைவாகவும் அடைந்துவிட வேண்டுமென்ற விருப்பு இக்காலத்தில் எங்கும் பரவி இருக்கின்றது. வானவூர்தியிலேறி அமர்ந்து, மணிக்கு நூறு இருநூறு கல் விரைவில் பல்லாயிரங்கல்களுக்கப்பாலுள்ள வேறிடங்களுக்குச்செல்லலாம். இது விஞ்ஞானம் அளித்த நலன். ஆனால் வானவூர்தி வேகத்தில் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களையும், இருபத்தேழு இயல்களையும் படித்து முடித்தல் ஒல்லுமோ? நம் முன்னோர் எங்ஙனம் முயன்று முறையாக நூல்களைக் கற்றனரோ அங்ஙனமேதான் நாமும் கற்றல் வேண்டும். ஆதலின், தமிழ்ப்பற்றுக்கொண்டு அதனைக் கற்கப் புகும் இளந் தமிழன்பர்கள் சிறிய உரைநடைநூல்களையும், கட்டுரைகளையும் படித்தனராயின், அதன் பின்னர் முதல் நூல்களையும் அவற்றின் உரைகளோடு படித்தல்வேண்டும். நிற்க, இனிக் காஞ்சிப்பாட்டில் பாண்டிநாட்டின் ஐவகை நில வளங்களையும், மதுரைநகரையும், மதுரைவாழ் மக்கள் வாழ்க்கையினையும் காண்பாம்.

மருதம்: ஆறுகள் கொள்ள அமையாமல் பெருகி வருகின்ற வெள்ளத்தால் குளங்கள் நிறைந்தன. குளங்களிலிருந்து வாய்க்கால் வழியாகப் பாய்ந்த நீரால், வயல்களில் வாளைகள் நின்றால் அவற்றை மறைக்கும்படி கதிர்கள் விளைந்தன, தாமரை, நெய்தல், நீலம், ஆம்பல் முத

லிய பூக்கள் செறிந்து பின்னிக்கிடக்கும் பொய்கைகளில் கம்புட்கோழிகள் தத்தம் துணையொடு படுத்துறங்கின. வலைஞர் இக் கோழிகளின் தூக்கம் கலையும்படி, பொய்கை களில் இறங்கி வலைவீசி மீன் பிடிப்பர். கரும்பு ஆலையி னிடத்துப் பிறக்கும் ஓசையும், அள்ளலில் வலியற்றுத் தங் கிய எருதுகளை எழுப்பும் களமர் செய்யும் ஆரவாரமும், திருப்பரங்குன்றத்தில் நடக்கும் திருவிழாவின் ஆரவார மும், புதுநீர் வரவால் மகிழ்ந்து, மைந்தரும் மாதரும் நீராடும் ஆரவாரமும் விண்ணிலுறை தேவர் செவிக்கு இன்பமாக இருக்கும்படி அங்குச் சென்றொலித்தன.

'களிறுமாய்க்கும் கதிர்' என்று புலவர் கூறுவது இக்காலத்து நமக்கு நம்பத்தகுவதாய் இல்லை. பெரியரும், சிறியரும், கற்றாரும், கல்லாதாரும், அற்றம் நோக்கி ஒரு வரையொருவர் பொருள்பறித் துண்ணும் வாழ்க்கைப் போட்டி மலிந்த இக்காலத்தில், கடவுட்பற்று அறப்பற் றுக்கள் இல்லாத இக் கலியூழியில், நன்செய் நிலங்களில் நெல் புல்லாகிக் கால்வரிசை விளைகின்றது. இதனைக் கண் ணுறும் நமக்கு அந்நாளில் களிறுமாய்க்கும் அளவுக்குக் கதிர்கள் ஓங்கி வளர்ந்தனவென்பது உயர்வுநவிற்சியாகத் தோற்றுமேயன்றி, உண்மை நவிற்சி எனத் தோன்றாது.

'முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்'.

முறை தவறி ஆட்சிசெய்யும் கொடுங்கோல் மன்னன் நாட் டில் பருவங்கள் உரியகாலத்தே வாரா. வானமும் மழை பெய்யாது. இது வள்ளுவர் கூற்று. அறத்தாலேயே உலகம் நடக்கின்றது என்ற தமிழர் தனிக்கொள்கையி னையே வள்ளுவரின் இக்குறள் கூறுகின்றது. அறம் தழைக்கப் பயிர் தழைக்கும்; அறம் கருகப் பயிர் கருகும் அன்றோ? மருதனார் வாழ்ந்த முற்காலத்தில் மக்கள் முற்றிய நெற்கதிரை அறுக்கும் நாளிலே தம் வயலில் பறை முழக்கி விழவயர்வர். அறுவடைநாள் அனைவரும் கூடி மகிழ்வதோர் திருநாளாகக் கொண்டாடப்பட்டது.

இன்று மருதனர் தமிழ்நாட்டுக்கு வந்து, தாம் முன்கண்ட அதே வயல் நிலங்களில், நெற்பயிர் புற்பயிராகி இரண்டொரு நென்மணிகளை ஏந்திக் கால்வரிசை விளைவதனையும், அதனை அறுப்பார் அரசியலதிகாரிகட்குத் தெரியாமலிருக்கும்படி அரவஞ் செய்யாமல் இரவோடிரவாய் அறுத்து அடித்து, நெல்லைப் பிறர் வீடுகளில் பதுக்கி வைப்பதனையும், மக்கள் நோய்இகந்து நோக்கு விளங்க வாழ்ந்த பண்டை நிலை மறைந்து, இன்று விடைச்சீட்டுக்களில் நெல்லும் சோளமும் வாங்கி அரைவயிறுண்டு, பசியும் பிணியும் வருத்த, ஊருக்கொரு மருத்துச்சாலை வேண்டுமென்று கூவுவதனையும் கண்டால், அவர், தம் கண்களை நம்புவாரோ? சாதி சமய வேற்றுமைகளும், வறுமையும், நோயும், அறியாமையும் மலிந்த, அவற்றால், மக்கள், மன வாக்கு காயங்களில் உண்மையின்றிப் பொய் பயிலும் இக்காலத்தில், முன்னோர்கண்ட வாழ்வெல்லாம் நமக்கு நம்பத் தகுவதாய் இராது. ஆனல் அவர்களைப்போன்று நாமும் அன்பும் அறனும் உடையோராய், உண்மையே பயிலும் உயர்மக்களாய் வாழ்வோமாயின் நாம் இழந்த பெரும் வாழ்வை மீண்டும் அடைவோம்; 'களிறுமாய்க்கும் கதிர்' நமக்குக் கற்பனையாகத் தோன்றாது.

முல்லை: காடாகிய முல்லைநிலத்திலே, தினையும், எள்ளும் வரகும் விளைந்தன. ஆழ்ந்த குழியிலே அழகிய மணிகள் கிடந்து விளங்கின. அழகிய மான்குட்டி துள்ளித் திரிவதனல் புதைந்து கிடந்த பொன், குப்பைத் தரைமேல் எழுந்து ஒளிர்ந்தது. நீலமணியை யொத்த பசிய பயிர்கள் மேல், வெள்ளியை நிகர்க்கும் முல்லைமலர்கள் உதிர்ந்து கிடந்தன. வெறிக்கூத்தாடிய களம்போல, பலநிற மலர்கள் செறிந்த நீர்நிலைகளில் நெய்தலும் தொய்யிலும் மலர்ந்து விளங்கின.

குறிஞ்சி: மலையிடமாகிய குறிஞ்சி நிலத்திலே, அகிலையும், சந்தனத்தையும் வெட்டி வெளிசெய்த மேட்டு நிலங்களிலே, தோரையும், வெண் சிறுகடுகும், ஐவனமும், இஞ்சியும், மஞ்சளும், மிளகும் பயிரிடப்பட்டன. விளைந்த

பல பண்டங்களும் பாறைகளில் குவிக்கப்பட்டுக் கிடந்தன. மகளிர் தினையிற்படியும் கிளியைக் கடியும் ஆரவாரமும், அவரையினது தளிரைத் தின்னும் ஆவையோட்டும் ஆரவாரமும், பொய்க்குழியில் வீழ்ந்த பன்றியைக் குறவர் கூடிக் கொல்லும் ஆரவாரமும், வேங்கைமரத்தின் கொம்புகளிற் பூத்த நறிய பூவைப்பறிக்கும் மகளிர், அக்கொம்புகள் தமக்குத் தாழ்ந்து கொடுக்கும்படி 'புலி, புலி' என்று கூவும் ஆரவாரமும், புலி முதலிய விலங்குகள் செய்யும் ஆரவாரமும் அம்மலையிடத்தே மாறி மாறி ஒலித்தன. இவ்வொலிகளின் தடிப்பால் தடைப்படாதது போல, ஆங்காங்கே அருவிகள் இடையறாது வீழ்ந்துகொண்டிருந்தன. கரிய நீர்க்கால்கள் பள்ளங்களின் வழியே பாய்ந்தோடின.

பாலை: சுரமாகிய பாலைநிலத்திலே, மூங்கிற் பண்ணைகளிற் பிறந்த தீ சுற்றிலுமுள்ள பசிய தூறுகளைச் சுட்டெரித்தது. அதனால், யானைகள், மேய்வதற்கு மூங்கிலின்றி, வெவ்வேறிடங்களுக்குப் பெயர்ந்து சென்றன. மலைகள், அருவிகளற்று வறண்டு கிடந்தன. ஊகம்புல் வைக்கோல் போல் உலர்ந்துவிட்ட அக்காட்டிலே, கடுங்காற்று வீசிக் கடல்போல் ஒலித்தது. தழையும் பூவும் கலந்து கட்டிய கண்ணியை அணிந்தவராய், இளைஞர் வில்லும் அம்பு மேந்திய கையுடன் ஆறலைகள்வர் வாராமல் காவல் புரிந்து வந்தனர். ஞாயிற்றின் வெவ்வெயிலுக்காற்றாது, மரங்கள் யாவும் கரிந்துவிட்டமையால், அக்காட்டகத்தே நிழல் என்பதே இல்லை.

நெய்தல்: கடல் சார்ந்த இடமாகிய நெய்தல்நிலத்திலே, கடலிற் பிறந்த சங்கும் முத்தும், செட்டிகள் கலமூர்ந்து சென்று பிற நாடுகளினின்றுங் கொண்டுவந்த பலவகைப் பண்டங்களும் ஆங்காங்குக் குவிந்து கிடந்தன. நன்னாட்டு அணிகலன்களைப் பெற்றுச் செல்லும்படி, யவனர் தம் நாட்டுக் குதிரைகளை மரக்கலங்களிற் கொண்டு வந்து இங்கு இறக்கினர். முத்து, சங்கு, உப்பு, தீம்புளி, மீன் துணியல் ஆகிய பல பொருட்களை ஏற்றிய கலங்கள் துறைமுகத்தில் கூட்டங்கூட்டமாக நின்றன.

இவ்வாறு பல்வளமிக்க நால்வகை நிலங்கள் சூழ்ந்த நடுவிடத்தே அந்நிலங்களின் வருவாய்களையெல்லாம் பெற்று மதுரை என்னும் மாநகர், செந்தமிழ்நாட்டின் தனித்தலைமைப் பெருநகராய் விளங்கியிருந்தது. தமிழ்கண்ட வையை தன் அலைநெடுங் கரங்களால் அந்நகரைத் தழுவி அதன் வடபால் நடந்தது. பரிபாடல், கலித்தொகை முதலிய சங்க நூற்களின் பாடல்கள் பல, வையை மாநதியின் இனிய பெருக்காலேயே அமைந்திருக்கின்றன வென்று கூறலாம். வையைப் பெருக்கையும் மதுரை மக்கள் அதில் நீராடிக் களிப்பதையும், அதன் இருகரைத் திட்டுக்களிலும் நிற்கும் மரங்கள் சொரியும் மலர்களின் மணச்சிறப்பையும் பொருளாக வைத்துப் புலவர்கள் கவிகள் செய்திருக்கின்றார்கள். மருதனாரும் வையையை 'விரிநீர் நல்வரல் வையை' என்றே கூறுகின்றார். மிகுதியான நீர் நன்றாய்ப் பெருகி வருதலையுடையவையை என்றும், அது காவும் பொழிலும் சூழ்ந்த நீர் அடையும் கரைகளையுடையது என்றும் அதன் நீர்வளத்தை எடுத்துரைக்கின்றார். ஆனால், இன்று மதுரையில் வையையைப் பார்க்கும் நாம், அது நீர் அற்று மணற்பெருக்கால் பொலிவதைக் காணுமிடத்துப் புலவர்களெல்லாரும் பொய்யுரைக்க அஞ்சாரோவென்று எண்ணுகின்றோம். காலப் போக்கில் தமிழ்மக்களுடைய அறிவொழுக்கங்களும், நாகரிக மேம்பாடுகளும் வறட்சியுற்றதைப்போல, மதுரைநதியும் தன் வளம் இழந்து மணற்காடாகிவிட்டதென்றே சொல்லத் தோன்றுகிறது. என்னையெனின், பெருமை வாய்ந்த தமிழ்நாட்டின் தலைநகர், நீர்ப்பெருக்கில்லாத ஒரு காட்டியாற்றின் கரையில் கட்டப்பட்டிருக்குமென்று நாம் கருதமுடியாது. 'ஆறில்லா வூருக்கு அழகு பாழ்' என்று அறிந்த தமிழர், நீர் இல்லாத ஓர் போலியாற்றின் கரையில் தம் தலைநகரை அமைத்து நாகரிகத்தை வளர்த்திருக்கக் கூடுமென்று அறிந்தோர் கூறார். தமிழ்மக்கள் தாம் இழந்த செல்வங்களில் வையை நீரையும் ஒன்றாகக் கருதி, அவர்கள் தாம் உரிமை எய்திய இக்காலத்தில், மலை காடுகளைத்

தொட்டு நீர்க்கால்களை உண்டாக்கி வையையைப் பாண்டி நாட்டின் பொய்யாக் குலக்கொடியாக்குதல் வேண்டும்.

இனிய நீர்ப்பெருக்கும் இன்கவிவளமுமுடைய வையை யைக்கடத்தி, மருதனர் நம்மை மதுரை நகர்ப்புறத்தே அழைத்து வருகிறுர். வையைத் துறைகளில் பூந்தோட்டங் களின் நடுவே பாணர் சேரிகள் இருக்கின்றன. இளம்பாணர் அங்கே யாழ் பயிலும் இன்னிசையைக் கேட்டுக்கொண்டே மதுரை நகரைச் சூழ்ந்து கிடக்கும் அகழியண்டை வருகின் ருேம். அண்ணல் யானை அடுபோர் வேந்தர் பலர் அவ்வக ழியைக் கடந்து உட்புக முயன்ற காலத்து, அவர்கள் புறங் காட்டி யோடுவதற்குக் காரணமாக விளங்கிய, கடத்தற் கரிய அப்பேரகழியை ஆசிரியர் நமக்கு,

'மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கு'

என்று சொல்கிருர். அகழியைவிட்டு நீங்கிய மாத்திரத்தில் நம் கண்ணெதிரே 'விண்ணுற ஓங்கிய பல்படைப் புரி சையை'ப் பார்க்கின்ருேம். அகழியின் அடியிலே பாதல மும், புரிசையின் உச்சியிலே விண்ணுலகமும், நடுவிடத்தே மதுரையையும் காண்கின்ருேம். இவ்வகை நீரரண், மதி லரண்களால் காக்கப்பட்டு, அந்நகர்க்கண் வாழும் பேறு படைத்த மதுரைவாசிகளேயும், அவர்களுடைய வாழ்க்கை இயல்புகளையும் இனிச்சென்று காண்டல் வேண்டும். மேகங்கள் வந்து படிவதாய் உயர்ந்து விளங்கிய மாடத் திணையுடைய நகரவாயில் வழியாக, மருதனர் நம்மை நகர்க் குள் அழைத்துச் செல்கிருர். வையையாற்று நிறைநீர் ஓட்டம்போல, அவ்வாயில் வழியாக மாவும் மக்களுமே இடையருது சென்று கொண்டிருக்கின்றனர்.

நாமும் நகரவாயிலைக் கடந்து நகர்க்குள் வந்து விட்டோம். மண்டபம், கூடம், தாய்க்கட்டு, அடுக்களை முதலிய கூறுபாடுகளை யுடையனவாய், வீடுகள் யாவும் சிற்பவிதிப்படி கட்டப்பட்டு, வானமண்டலம்வரை வளர்ந்து காட்சியளிக்கின்றன. இத்தகைய பேரில்லங்களை இரு சிறையிலுமுடையனவாய்த் தெருக்கள் ஆறுபோன்று

அகன்று கிடக்கின்றன. தமிழ்நாட்டின் தலைநகராகிய மதுரையின் அகழியையும் மதிலையும் தெருக்களையும் வீடுகளையும் கண்டு, வியப்பில் மூழ்கியிருக்கும் நம் செவிகளில், காற்றலைக்கும் கடல் ஒலிபோலப் பேரொலிவந்து தாக்குகின்றது. கடைகளில் பண்டங்களை விற்பாரும் கொள்வாருமாகிய பலவேறு மொழியினரது பேச்சொலியும், விழா நிகழ்ச்சிகளை அறிவிப்பாரது முரசொலியும், பிற ஒலிகளும் நம் காதுகளைச் செவிடுபடுத்துகின்றன. கடைகளும், கடைத்தெருக்களும் பலவகைப் பண்டங்கள் நிறைந்து அழகுபெற அமைந்திருப்பதால் நமக்கு அவையெல்லாம் சித்திரத்தைக் கண்டாற்போலிருக்கின்றன. கடைகளிலும் வீடுகளிலும் கோவில் முதலிய பொதுவிடங்களிலும் பலவகைக் கொடிகள் பறந்தாடுவதைக் காண்கிறோம். இக்காலத்தில் விழாநாட்களில் நாம் கொடிகள் கட்டி, நமது கோவில், வீடு முதலியவற்றை அணிசெய்கின்றோம். இது, இந்நாள்வரை நாம் மறந்துவிடாமற் கையாண்டுவரும் நமது பண்டை வழக்கமேயன்றிப், பிற நாட்டவரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட புதுமையன்று. தற்காலத்தில், துவசம், சண்டா முதலிய பிறசொற்கள் நம்மிடையே வழக்கில் இருப்பினும், கொடி, பதாகை முதலிய தனித்தமிழ்ச் சொற்களும் பழந்தமிழ் நூற்களிற் பயின்று வருவதைக் காண்கின்றோம். 'கோவிலில் கொடியேற்றம்', 'கொடிகட்டிச் சண்டை செய்தல்' முதலிய வழக்குகள் இன்றும் நமக்குள், நமது சிற்றூர்களிலும்கூட இருக்கின்றனவன்றோ? மருதனார் மதுரையிலே, விழாக்கள், போர்கள், வெற்றிகள் இவைகளைக் குறிப்பதற்கும், கல்வி, கொடை, தவம் முதலியன நிகழ்வதைக் குறிப்பதற்கும் கொடிகளும், பதாகைகளும் கட்டப்பட்டிருந்தனவென்று கூறியுள்ளார். அக்கொடிகள் பெரும்பாலும் வெண்ணிறக் கொடிகள் என்றே நாம் எண்ணவேண்டியிருக்கின்றது. என்னை? ஆசிரியர்,

> 'பல்வேறு குழூஉக் கொடி பதாகை நிலைஇப்
> பெருவரை மருங்கி னருவியி னுடங்க'

என்று கூறியிருக்கின்றார்.

இங்ஙனம் கொடியினம் மிகுந்த கோலத்துடன் விளங்கிய நகரின் தெருக்களில் நால்வகைப் படைகள் செல்வதைக் காண்கின்றோம். கடல்நடுவண் கடுங்காற்றி லகப்பட்டுப் பேய்க்கூத்தாடுகின்ற மரக்கலம்போல,

‘இருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக்
கந்துநீத் துழிதருங் கடாயானை’

களடங்கிய யானைப் படையும், கால்எனக் கடுகிச்செல்லும் கவின்பெறு தேர்ப்படையும், ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியும் பயின்று நடக்கும் குதிரைப்படையும், களிறு போல் கொலையஞ்சாக் காலாட்படையும் தெருவழியே செல்கின்றன. மதுரையிலேயே வாழ்ந்திருந்து, நாடோறும் அப்படைகளின் போக்குவரவினைக் கண்டிருந்த மதுரை மக்களும்கூட அவற்றைக்கண்டு, இன்னுயிரஞ்சி வெய்து யிர்த்து ஏங்குகின்றனர்? பகைவெல் படையே வேந்த னது வெறுக்கையுளெலாந் தலை யன்றோ?

‘படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசருள் ஏறு’

திருக்குறளில், அரசியல் கூறும் இருபானைந்து அதிகாரங் களுள் முதலதாகிய இறைமாட்சியில், முதற் குறளா யமைந்த இதில், அரசற்குரியனவாகக் கூறப்படும் அங்கங் கள் ஆறனுள்ளும் படையே முதற்கண் நிறுத்தப்பட்டுள் ளது! எனினும், பாதுகாப்புக்கென அமைக்கப்படும் படைகளை மேலுமேலும் பெருக்கி, இக்காலத்து மேனாட் டரசுகளைப் போன்று செருக்கி, தமக்குள்ளேயே வஞ்சிப் போர், தும்பைப்போர் தொடுத்து இறுதியில் பலங்குன்றி மறைந்த தமிழரசர் மூவரையும் நினைக்குந்தொறும் நெஞ் சுருகாதார் யாரே?

இனி, மருதனார் நம்மை மதுரைமாநகரத்தின் மாலைக்காலத்துக் காட்சிகளைக் காண்பதற்கு அழைத்துச் செல்கிறார். தமிழ்மக்கள் ஒருநாளின் காலைப்பொழுதை அறத்துக்கும், நண்பகற்பொழுதைப் பொருளுக்கும்,

மாலைப்பொழுதை இன்பத்துக்கும் சிறந்தனவாக வகுத்து, அம்முறைப்படி வாழ்க்கை செய்துவந்தனர். மதுரை மக்களும் இத் தமிழ்விதிக்கு விலக்கு அல்லர். எனவே, மாலையில் அவர்களுடைய வீடுகளுக்கும், அவர்கள் செல்லு மிடங்களுக்கும் நாம் சென்று, அவர்கள் அம் மாலைப் பொழுதில் எவ்வாறு இன்பம் துய்க்கின்றனர் என்று காண்பாம். மாலைப்போதில் மக்கள் இன்பம் நுகர்ந்த வரலாற்றை மருதனர் கூறக் கேட்பதே நமக்கு இன்பம் செய்வதாய் இருக்கின்றது!

மாலைக்காலம் வந்துவிட்டது என்பதற்குக் குறிப்பாக, தம் வாழ்நாளின் மாலைக்காலத்தை எய்திவிட்ட நரைமுது பெண்டிர், அழகிய வேலைப்பாடமைந்த பெட்டிகளிலும் தட்டுக்களிலும், காதலர்கள் நுகர்ந்து இன்புறுதற்குரிய பலவகைப் பண்டங்களையும் நறிய பூக்களையும் ஏந்திக் கொண்டு, வீடுவீடாய்த் திரிந்து விற்கத் தொடங்குகின் றனர். கண்டோர் கலங்குதற்குக் காரணமான மாமை நிறமும், நேரியவாகிய கூரிய எயிறும், வளைந்த சந்தினை யுடைய மூங்கில்போன்ற தோளும், சுணங்கு தோற்றிய இளமுலையும், மை ஒழுகினாற்போன்ற கரிய கூந்தலு முடைய ‘மயிலியலோரும் மடமொழியோரும்’ காம நுகர்ச்சிக்குரிய அப்பண்டங்களை வாங்குகின்றனர். மாலைக் காலத்து ஞாயிற்றின்கதிர் அவர்கள்மீது படுவதால், சிவந்த கிளிச்சிறை யென்னும் பொன்னாற் செய்த பாவை வெயில்பட்டு விளங்குவதுபோல, அவர்கள் அழகாற் பொலிகின்றனர். இவ்வழகிய மாதர்நல்லார் இனித் தம்மை அணி செய்துகொள்ளும்படி விட்டுவிட்டு, மருத னர், நம்மை மதுரைநகர் அங்காடித்தெருக்களுக்கு அழைத்துப்போகிறார். கடைகளைப் பார்த்துக்கொண்டு செல்லும்பொழுதே, ஆங்காங்குள்ள கோவில் பள்ளிகளை யும், அறங்கூறு மவையத்தார் வாழுமிடங்களையும், அரச னாற் சிறப்புப்பெற்ற அமைச்சர், செல்வர் முதலிய பெரி யோருடைய இல்லங்களையும் நமக்குக்காட்டுகின்றார். இதற் குள் மாலை சுருங்கி விளக்கேற்றும் நேரம் வந்துவிடுகின்

றது. அப்போது தெருவிலே நடந்தும், தேரூர்ந்தும் குடும்பம் குடும்பமாய்க் கோவில் குளங்களுக்கும், அங் காடிகளுக்கும் செல்வோரைக் காண்கின்றோம்.

முதன்முதல், தத்தம் வீடுகளிலே வேலையின்றிப் படுத் திருந்த செல்வர்கள் எழுந்து வெளிக்கிளம்புவதைக் காண் கிறோம். அவர்கள் தம் தகுதிக்கு ஏற்ப, முதற்கண் தம்மை அணிசெய்து கொள்ளத் தொடங்குகின்றார்கள். செக்கர் வானத்தையொக்கச் சிவந்து, மிக மெல்லியதாய், சிந்தி விழுவதுபோன்ற கனிந்த பூத்தொழிலையுடைய ஆடையை அரையில் உடுத்தி, அதன்மீது பொன்னிட்ட உடை வாளைத் தொங்கவிடுகிறார்கள். அவர்களுடைய தோளிலே மேலாடை கிடந்து அசைகின்றது. மார்பிலே மணிமாலை களுடன் வேப்பமாலையும் செங்கழுநீர்மாலையும் தொங்கு கின்றன. காலில் வீரத்தண்டை அணிந்திருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் தம்மை அணிசெய்துகொண்ட பின் னர், குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி, காலாட்கள் சூழ்ந்து காவல் செய்துவரத் தெருவழியே செல்கின்றார்கள்.

மற்ற மக்களும் வெளியே செல்லும் பொருட்டுத் தம்மை அணிசெய்து கொள்கிறார்கள். மாதர்கள், வானுற வளர்ந்த மாடி வீடுகளின் நிலாமுற்றங்களில் நின்று இடை யிடையே தெருவிலும் தம் சேல்கண் பார்வையைச் செலுத்திக்கொண்டு, தம்மை அணிசெய்துகொண்டிருக் கிறார்கள். அவர்கள் பூசிக்கொள்ளும் புழுகு முதலிய நறு மணப் பொருட்கள் தெருவெல்லாம் மண்டிக்கமழ்கின்றன. அவர்களுடைய பேரழகாலும், அவர்களுடைய காலடி கள் தரையில் படிந்திருப்பது கீழ்நின்று நோக்குவார்க்குப் புலப்படாமையாலும், அவர்களை மதுரைமாநகர்க்கு இறங்கி வந்துவிட்ட வானுறை மாதர்களோ வென்று எண்ணி மயங்க வேண்டியதிருக்கின்றது. இப்படி நாம் மயங்கி நிற்கும் பொழுதிலே, அவர்கள், தாம் மானிட மாதர்கள்தாம என்று நம்மைத் தெளிவிப்பார்போல, கீழிறங்கி வெளியே வருகின்றார்கள். அப்போது, கோவில் களில் அந்திக்காலத்துப் பூசைக்குமுன் வாச்சியங்கள்

ஒலிப்பது கேட்கிறது. எனவே, அம்மாதர் நல்லார் விரைந்து, தத்தம் கணவரையும் பிள்ளைகளையும் உட னழைத்துக்கொண்டு, பூசைக்கு வேண்டும் பூவுடனும், புகையுடனும் கோவில்களுக்கும், பள்ளிகளுக்கும் செல் கிறார்கள்.

இக்காலத்திலே நம் நாட்டிலே சமயவேறுபாட்டால், சிறுமதி படைத்தோர் தமக்குள் முரண்பட்டுக் கொலை, கொள்ளை முதலிய கொடுமைகள் புரிவதைப் பார்க்கின் றோம். 'எச்சமயத்தவராயினும் மக்களெல்லாம் ஓரினத் தவரே. எல்லாச் சமயங்களும் ஒரே இறைவனையும், அவனை அடைதற்குரிய அன்புவழி ஒன்றனையுமே அறைகின்றன' என்பதை நாம் அறிவோம். ஆனால், நம்மைப் பிரித்து வைத்து ஆண்ட அசுரர், நம்மிடையே நச்சுவித்துக் களைத் தூவி, நாட்டைச் சீரழித்துச் சென்றார்கள். நம் நினைவின் உருவாய், நம்மிடையே தோன்றிய நம்மவர் சிலர் இன்னமும சமய வேறுபாடென்னும் இன்னா இசை பாடிப் போர்முரசு கொட்டுகின்றார்கள். அண்ணல் காந்தி யின் அன்புரை கடலிற் கரைத்த காயமாகிவிட்டது.

இத்தகைய பித்தர் செயலைப் பண்டைத்தமிழர் அறி யார். பல நாட்டவரும், பல மொழியினரும், பல சமயத் தினரும் கூடிக் குலவி நட்பாக வாழ்ந்து வந்தார்கள். அன்புடன் கூடி வாழ்தலே நம் முன்னோரது அறமாக இருந்தது. அதனாற்றான்போலும், இன்று வடநாட்டைச் சுடுகாடாக்கும் சமயப்பூசல்கள் நம் தமிழகத்தில் பரவ வில்லை! நெடுஞ்செழியன் ஆண்ட மதுரையில் பௌத்தப் பள்ளியும், அமணப்பள்ளியும், நெடியோன்கோவிலும், முருகன்கோவிலும், சிவன்கோவிலும், சிவனடியார் கோவிலும் இருந்தன; மக்கள் ஆங்குச் சென்று வழி பாடியற்றி, தேவர்கட்குப் பலிகொடுத்து அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

'அந்தணர் பள்ளி' என்பதொன்றைப் பற்றி மருத னார் தமது மதுரைக்காஞ்சியில் குறிப்பிடுகின்றார். வேத நூல்களை விளங்கக் கற்று, விழுச் சீரெய்திய ஒழுக்கமொடு

புணர்ந்து, இவ்வுலகில் இவ்வுடலோடு வாழுங் காலத்தே கடவுட்டன்மை எய்தி வீட்டின்பம் பெற்றவர்களே அந்தணர்கள். அவர்கள் வாழ்ந்த பள்ளிகள் அந்தணர் பள்ளிகள். கடவுட் படைப்பாகிய விலங்கினத்திலே, முதலினமாகக் கருதப்படும் மனிதன் தன் அறிவாற்றலாலும், புலன் அடக்கத்தாலும், அறநெறி பிழையா அன்புடைய ஒழுக்கத்தாலும், தன்னுள்ளிருக்கும் விலங்கியல்பைக் கொன்று, கடவுட்டன்மையாகிய முற்றுநிலை எய்துதலே பிறவிப்பயன் என உணர்ந்த அத்தமிழந்தணர் வாழ்ந்த தமிழ்நாட்டிலே, இன்று, செல்வச் செருக்காலும், இன்ப வாழ்க்கை எய்துவதனுலும், மக்கள், அறம் பிழைத்து, அன்பு இன்றி, வறிதே வாழ்ந்து விலங்குகளாக மாள்வதைக் காண்கின்றோம். உரிமை இழந்து, பிறர் நாகரிகததை மேற்கொண்டு வாழ்க்கை செய்யும் இழிவை இனியேனும் தமிழர் விடுவரோ? மனிதனைக் கடவுளாக்கும் பண்டைத் தமிழ்நெறி தமிழ்நாட்டில் மீண்டும் தழைக்குமோ?

'அரசியல் உரிமை எய்தியபின், நம் நாட்டிலே பிற நாட்டவர்களையே நீதிபதிகளாக நியமித்தல் வேண்டும். வேற்றுமை கருதாது, நீதிசெய்யத் தக்கவர்கள் அவர்களே,' என்று, நம்மிற் சிலர் கூறிவந்தனர். 'நாம், இனி, எக்காலத்தினும் சாதி சமய வேற்றுமையுடன்தான் வாழப் போகின்றோம். நமது புன்மதி நம்மை விட்டொழியாது,' என்பதே இக்கூற்றின் பொருளாகும். பண்டை நாளில், மதுரையில்,

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூறு அவையம்'

இருந்ததாக மருதனர் கூறுகின்றார். இவ் அறங்கூறவையத்தையொப்ப நாகரிகத்தின் சிகரத்தை எட்டிப்பிடித்து விட்டதாக எண்ணியிருக்கும் இக்காலத்திலுள்ள நீதிபதி

களும் இருக்கின்றனர். வழக்குரைப்பார் கொடுக்கும் பொருளுக்கே அடிமையாய் நீதிக்குக் கேடு சூழாமலும், பாலைநிலங்களில் கையில் வில்லும் அம்பும் ஏந்தி, ஆறு செல்வாரை அலைக்கும் கருத்துடன் கல் குவியல்களின் பின் பதுங்கியிருக்கும் கள்வரைப்போல் இல்லாமலும், அரசியலகங்களில் நாற்காலிகளில் அமர்ந்து, தம்பால் வருவோரிடம் பொருள் பறித்தற்குக் காத்திருக்கும் தகா நோக்கில்லாமலும் செப்பமுடன் முறைசெய்வார்க்கே படிப்பும் பட்டமும் பயிற்சியும் பாங்குறப் பொருந்தி, பலர் புகழ் பயன் பெரிதுண்டாகும்.

இனி, அங்காடிக்குச் செல்வோம். செல்லும் வழியில் ஒரு காட்சி: செல்வ மிகப் படைத்தவரே விலை கொடுத்து வாங்கத்தக்க சிறந்த பொருட்களைச் சில வணிகர் பெட்டிகளிலும் மூட்டைகளிலும் சுமந்து சென்று வீடுகளில் விற்கின்றார்கள். அவற்றை அவர்கள் அங்காடிக்குக் கொண்டு வருவதில்லை. அமைச்சர், சேனாபதியர் முதலிய அரசியற் பெரியோரும் அரசனாற் சிறப்புப் பெற்ற பிற பெருஞ் செல்வர்களும் அங்காடியில் பொதுமக்கள் கூடுமிடங்களுக்கு எளிதாக வரமாட்டார்களன்றோ? எனவே, அவர்கள் வாங்கத்தக்க அரிய பொருட்களை வணிகர் அவர்கள் வீடுகளிலேயே கொண்டு கொடுப்பர்.

அச்செல்வர் நம் செல்வர்களைப் போன்று திருட்டு வணிகத்திலேனும், பிறர் கழுத்தை நெரித்தேனும் பொருள் ஈட்டுவோர் அல்லர். அவர்கள்,

'நன்றுந் தீதும் கண்டாய்ந் தடக்கி
அன்பும் அறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்ந்து புகழ்நிறைந்த
செம்மை சான்றவர்கள்'

என்றும், 'அறநெறி பிழையாது ஆற்றினொழுகிய'வர்கள் என்றும் மருதனார் கூறுகின்றார். குன்றுகளைக் கண்டாற் போன்ற பெரிய வீடுகளில் அவர்கள் குடியிருந்தார்கள்.

பலவேறு பண்டங்களும், உணவுப் பொருட்களும் அவர்கள் வீட்டில் மலிந்து கிடந்தன.

இத்தகைய பெருஞ் செல்வரை, தெய்வநகர் போன்ற பேரில்லங்களில் வாழ்ந்திருப்போரை, இன்றும் நாம் மதுரை முதலிய நகரங்களிலும், சிறு கிராமங்களிலும் காணலாம். அவர்கள் வீட்டின் முன்னுள்ள பெருவழியோரங்களில், உண்டியும், உடையும், உறையுளுமின்றி வறிஞராய் வாழும் மக்கள் கூட்டத்தையும் காண்கின்றோம். நாகரிக ஆட்சியில் நமது சமூகத்தின் நிலை இது!

அங்காடித் தெருவிலே, சேர அரசனுடைய சபையிலே பல்வேறு சமயத்தினரும் தத்தம் சமய உண்மைகளைக் கூறி வாதிப்பதாலுண்டாகும் ஆரவாரத்தையொப்பப் பேரொலி கேட்கின்றது. இரையை நிறைய உண்டு, அந்திக்காலத்திலே தம் பார்ப்பிற்கு இரை கொண்டு செல்லும் பலவகைப் பறவைகளின் வெவ்வேறு ஒலிபோல, பற்பல மொழியினரும் பேசும் பலவகைப் பேச்சுக்களைக் கேட்கின்றோம். மதுரைநகரில் வாழ்ந்திருக்கும் பற்பல நாட்டினரும் அங்காடிக்கு வந்திருக்கின்றார்கள். அங்காடியிலே,

'கோடுபோழ் கடைநரும் திருமணி குயினரும்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மரும் கலிங்கம் பகர்நரும்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையும் ஆயு மாக்களும்
எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறரும் கூடித்
தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்
குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினும்'

நிற்கின்றனர். இவர்களையன்றி,

'சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்

பல்வே றுருவிற் காயும் பழனும்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகும்
அமிர்தியன் றன்னதீஞ் சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேருன் சோறும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்'

விற்பாரும் ஆங்கே இருக்கின்றனர்.

இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னே, தமிழ் நாட்டிலே என்ன படைவகுப்பு, என்ன பேராட்சி, என்ன பெரிய வீடுகள், பல சமயப் பள்ளிகள், கடவுள் தன்மை எய்திய அந்தணர்கள், தேவருலகத்து மாதர் போன்று செம்பொற் பாவையினையும் வெல்லும் பேரழகு வாய்ந்த மாதர்கள், அறநெறி சான்ற வாழ்க்கை இயல், பலநாட்டு வணிகம், சித்திரம் போலமைந்த நாளங்காடி, அல்லங் காடிகள் !!

ஞாயிறு குடமுதற்குன்றஞ் சேர்ந்துவிட்டான். கீழ்த்திசையிடத்தே நாள்முதிர் மதியம் தோன்றி நிலா விரிக்கின்றது. தென்றல் தேர் ஏறி, மன்மதன் மதுரைத் தெருக்களிற் சுற்றிவந்து, தன் மலரம்புகளைத் தொடுக்கும் இனியவேளை வந்துவிட்டது. தத்தம் காதலரைக் கூடிக் களிக்கும்படி, மாலைக்காலத்திலே தம்மை அணி செய்யத் தொடங்கிய ஆயிழையாரை இனிச்சென்று நோக்குவோம். அவர்கள், பெண்களும் தம்மை நயக்கும்படியான இயற் கைப்பேரழகு வாய்ந்தவர்கள். எனவே, மேலும் அவர்கள் தம்மை அழகு செய்துகொள்ள வேண்டுவதில்லை. எனி னும், இன்பத்துக்குரிய மாலைக்காலத்திலே, மாதர்கள் தம்மை அணி செய்துகொள்வது என்பது தமிழ்நாட்டில் ஒரு வழக்கமாகிவிட்டது. அவ்வழக்கத்துக் கிசையத்தான் இவ்வாறு அம்மாதர் தம்மை அணிசெய்யத் தொடங்கி னரேயன்றித், தமக்கு அழகு இல்லாமையினாலன்று என்று சொல்லி, நமது மனத்தெழும் ஐயத்தைப் போக்கியபின் னரே மருதனார், அம்மாதர்கள் தம்மை அணிசெய்த வகையை நமக்குக் கூறுகின்றார்.

முதன்முதல், அவர்கள், ஆராய்ந்த இதழ்களையுடைய குளிர்ந்த நறிய செங்கழுநீர் மலர்களை மாலையாகக் கட்டி வைத்தனர். பின்னர், தமது நெடிய கூந்தலில் மயிர்ச்சாந்தினைப் பூசி, அச்சாந்து போகும்படி கூந்தலை அலைத்துக் கழுவிக் குளித்தார்கள். மெல்லிய நூலாடை கமழும்படி, அதற்கு நறிய புகையை ஊட்டிக் கட்டிக்கொண்டார்கள். தேர்ந்தெடுத்த அணிகளைப் புனைந்தார்கள். கத்தூரி சந்தனம் முதலியவற்றை அரைத்துப் பூசிக்கொண்டார்கள். இனிய பண்டங்களை உண்டனர். இசைக்கருவிகளிற் சிறந்த யாழினை எடுத்துப் பல பண்களையும் மாறிமாறி வாசித்தார்கள். இவ்வாறு, அவர்கள் இன்ப உலகிலே தனியரசு செய்யும் பெண்ணரசிகளாக விளங்கினார்கள்.

ஒழுக்கம்சிறந்த தமிழ்நாட்டிலே பண்டைக்கால முதலே விலைமாதரும் இருந்து வந்திருக்கின்றார்கள்.

'வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு'

என்னும் குறளில், விலைமாதரது இழிபும் அவர்கள் தோளை நயப்பாரது கேடும் சொல்லப்படுகின்றன. சமூகத்தின் மாசாக விளங்கும் இவர்களை வள்ளுவர் முதலிய சான்றோர் அனைவரும் பழித்தே வந்திருக்கின்றனர். எனினும், இம் மாதர் கூட்டம் இன்றுவரை நிலைத்து நிற்கிறது! ஆசிரியர் மருதனார், மாயப்பொய் பல கூட்டித் தம் நலம் நயந்து வரும் இளைஞரான செல்வருடைய வளங்களைக் கவரும் விலைமாதரை, 'மதுவை அருந்தியபின் வறும்பூவைத் துறக்கும் வண்டு போன்றவர்கள்' என்றும், 'பழம்தேர் வாழ்க்கைப் பறவை போன்றவர்' என்றும், 'நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்' என்றும் கூறுகிறார்.

ஞாயிறு மறைந்தபின் முதல் யாமத்திலே, இல்லங்களிலிருந்து இன்பம் நுகர்வார் செய்தி இங்ஙனமிருப்ப, தெருக்களில் நின்று ஆடிப்பாடிக் களிப்பாரைக் காண்போம். போர்முனைகளுக்குச் சென்று கொலை பழகிய யானை, தம்மைத் தொடர்ந்து வந்து பிடிக்கும்படி அதனை ஏவிவிட்டு, அதன்முன் ஓடுகின்றார் சில வீரர். யானை

எட்டி நடந்துவந்து தம்மைப் பிடித்துக்கொள்ளாமல் தடுத்தற்கு, அவர்கள், தம் மடியிலிருக்கும் கப்பணத்தைத் தரையில் சிதறிவிடுகிறார்கள். யானை அதன்மீது மிதித்து நடத்தற்கு அஞ்சி நின்றுவிடுகிறது. இது ஒரு விளையாட்டு. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த களியர் சிலர், தம்முள் ஒருவன் 'யானை'யாகத் தொடர்ந்துவர, அவன்முன் ஒடுகின்றனர். ஆனால் இந்த 'யானை'க்கும் 'வீரர்'க்குமோ கப்பணத்தைப்பற்றிய அச்சம் இல்லை. அது தம் கால்களில் குத்திக் குருதி வடிந்தாலும், அவர்கள் களைத்துப்போகும் வரை ஓடிவிளையாடுகின்றனர். அவ்வளவு களிமயக்கம் அவர்களுக்கு! இங்ஙனம் ஒருசார் இது நடக்க, மற்றொருசார் முருகனை வழிபடும் மாதர்கள், சல்லி, கரடி முதலிய இனிய வாச்சியங்கள் ஒலிக்க மன்றுகள்தோறும் நின்று குரவைக் கூத்தாடுகின்றனர். சேரிமாதர்கள் ஆங்காங்கே நின்று பாடுகின்றனர். இங்ஙனம் மக்களுடைய இன்ப நுகர்ச்சியிலும், ஆட்டம் பாட்டுக்களிலும் முதற்சாமம் கழிந்து, இரண்டாஞ் சாமம் வரும். அதிலே,

> 'பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து
> நொடைநவில் நெடுங்கடை யடைத்து மடமத
> ரொள்ளிழை மகளிர் பள்ளி அயர'

அடை, அப்பம் முதலிய தின்பண்டங்களை விற்பாரும், பிறரும், படுக்கையில் சேர்ந்து கண்வளரத் தொடங்குவர். அதனால் நகர் ஒலியடங்கி, பாடு ஆன்று அவிந்த பனிக்கடல் போல அமைதி அடையும்.

மூன்றும் சாமத்திலே, பேய்களும், வருத்தும் தெய்வங்களும், கழுகுகளும் திரியத் தொடங்கும். அப்பேய் முதலியனபோல், திக்குணம் படைத்த கள்வரும் தம் தொழில்மேல் வெளிப்படுவர். அவர்கள் களவுநூல் கற்றுக் களவில் வல்லுநராக விளங்குபவர்கள். கருஞ்சட்டை முதலிய கருப்பு உடைகளை அணிந்து, கத்தி, வாள், உளி, கயிற்று ஏணி முதலிய களவுக்குதவும் கருவிகளுடன் வெளிப்படுவர். விழித்த கண் இமைக்கும் அளவிலே மறைந்துவிடு மியல்புடைய இக்கள்வரை விடாது ஒற்றி,

நகர்காவலரும் தெருக்களிற் சுற்றிவருவர். அவர்கள் துஞ்சாக் கண்ணர், அஞ்சாக் கொள்கையர், அறிந்தோர் புகழும் ஆண்மையர், களவு காண்டற்கும் காத்தற்கும் கூறும் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். தேரோடும் தெருவில் திரண்டு நீரோடும்படி பெருமழை பெய்யும் பேரிருளாயினும், அவர்கள் தம் தொழில் வழுவாது,

'வயக்களிறு பார்க்கும் வயப்புலி போல'

கள்வரைத் தொடர்ந்து பிடிப்பர். கற்றோர் மேவிய மதுரையில் கள்வரும் வாழ்ந்தனர். நென்மணியொடு பதர் விளைவது இயற்கையன்றே.

இனி நான்காம் சாமம். அச்சாமத்தின் இறுதியிலே, நல்லோர்க்கு வரும் துன்பம் நீங்குதல் போல, மதுரையை மூடியிருந்த இருள் நீங்கத் தொடங்குகிறது. மலர்கள் தளையவிழ்ந்து மதுவை ஏந்திநிற்க, வண்டுகள் காலைப் பண் பாடி அதனை அருந்தி மகிழ்கின்றன. அந்தணர் எழுந்து கடன்களை முடித்துக்கொண்டு அமர்ந்து, வேதம் ஓதுகின்றனர். பரிக்காரர் யானை குதிரைகட்கு உணவளிக்கின்றனர். பின் தூங்கி முன் எழும் பெண்டிர் இல்லங்களையும் கடைகளையும் பெருக்கித் தெளித்து, மெழுகுகின்றார்கள். கோவிலில் பள்ளியெழுச்சி முரசு முழங்குகின்றது. இடையிடையே சேவல் கூவுவதைக் கேட்கின்றோம். குணபால் ஞாயிறு தோன்றுகின்றான். இவ்வாறு இரவின் நாற்சாமங்களும் சென்று, பகல் வருகின்றது.

இவ்வளவோடு காஞ்சியுரைக்கும் பொருள் முற்றும்.

இதுவரை மாங்குடிகிழார் உரைத்த மதுரைக்காஞ்சியினைக் கேட்டோம். இனி, அவர் தம் நிறைபுலமைப் பெருங் கடலில் சிறிதுபோது திளைத்துத் தமிழ்ச்சுவை ஆர்ந்து, அவரை வாழ்த்தி வணங்கி அவர்பால் விடைபெற்றுக் கொள்வோம்.

நமது பண்டைத் தமிழ்மன்னர்கள், தம் நாட்டு மககளை ஐவகைப் பயம் நீக்கிப் புரந்துவந்தது போலவே,

அம்மக்கள் தம் மனத்தகத்தே மலர்ந்த கலைகளையும் ஓம்பி, அக் கலைவல்ல பாணர் முதலியோர்க்குப் பொற்கலங்களில் பூக்கமழ் தேறலை மழையெனப் பொழிந்து பெட்டாங்குண்கெனக் கொடுத்து அவரை மகிழ்வித்தனர். இன்று அம்மன்னர்தம் புகமொழிய, அவரும் அவரால் சிறப்புச் செய்யப்பட்ட கலைஞரும், அவர் அருந்திக் களித்த மதுவும் பிறவும் இல்லை. ஆனால் தமிழ்வள்ளலாகிய மருதனார், அன்று, மதுரைக்காஞ்சி யென்னும் செந்தமிழ்க் கலத்தில் மழையும் நாணப் பெய்தளித்த பழந் தமிழமுதம் இம்மண்ணும் விண்ணும் உள்ளவரை தமிழ்மக்களெல்லாம் மாந்திக்களிக்கும் பெருவெள்ளமாகப் பெருகிக்கொண்டே இருக்கின்றது. ஆம், நாம் பெற்ற அமுதசுரபி அது.

சங்கநூற்களிற் றக்க பயிற்சியின்றிப் பிற்கால நூல்கள் ஒன்றிரண்டில் தேர்ச்சிபெற்ற அன்பர் சிலர், சங்கத் தமிழ்நடை இக்கால மக்கள் உச்சரித்துப் படித்தற்கும் உதவாத சாத்தமிழ் எனச் சாற்றி நகைத்துத் தம் வெண்மையைப் புலப்படுக்கின்றனர். நூல்நயமெல்லாம், அகவின்பம் போல்வதோர் அருமைப்பாடாக, ஒருவன் தானே பயின்று காண்பதன்றிப் பிறர் காட்டுவதால் எய்தப்படுவதன்று. எனினும் சிலநூற் பயிற்சியேனுமுடைய அன்னார்க்குச் சங்கத்தமிழின் அருமைக்கும் பெருமைக்கும் ஒன்று காட்டுவாம்.

அரிச்சந்திர புராணத்தில், கௌசிகன் இறுதியாக வந்து அரிச்சந்திரனிடமும் சந்திரமதியினிடமும் பொய்யுரைத்துப் பிழைத்துப்போம்படி கற்பிக்கின்றான். அப்போது, அவ் வீரவேந்தனும் மங்கையும் அவனடி வீழ்ந்து உரைக்கும் பதிலில் ஒரு செய்யுள்:

> 'பதியி ழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த
> நிதியி ழந்தன, மினியெமக் குளதென நினைக்கும்
> கதியி ழக்கினுங் கட்டுரை இழக்கிலே மென்றார்,
> மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.'

இனி, கவிச்சக்கரவர்த்தியின் வாக்கில், மாயாசனகப் படலத்தில் சிதை கூற்று:

'வழிகெட வரினும் தத்தம் வாழ்க்கைதேய்ந் திறினும் மார்பம்
கிழிபட அயில்வேல் வந்து கிழிப்பினும் ஆன்றோர் கூறும்
மொழிகொடு வாழ்வ தல்லால் மொழிகெடப் புறநின் றோர்க்கும்
பழிபட வாழ்கிற் பாரும் பார்த்திவ ருளரோ பாவம்.'

'நீயுநின் கிளையு மற்றிந் நெடுநில வரைப்பு நேரே
மாயினு முறைமை குன்ற வாழ்வெனோ வயிரத் திண்டோள்
ஆயிர நாமத் தாழி யரியினுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனோ நாண்துறந் தாவி நச்சி.'

குகையிலிருந்து வெந்துருகும் பொன்போல், சோதனைத் தீயின் ஆற்று வெம்மையால உள்ளங்கனன்று தம் மனக் கோள் உரைக்கும் மாற்றங்கள் இவை. கதையில்வரும் தன்மைக் கூற்றுகலின் இவற்றினும் விஞ்சிய வேகத்தில் அவற்றைக் கூறுத லொண்ணுது. இனி முன்னிலையில் வைத்து, தமிழ்மன்னன் ஒருவனது பூட்கையினை மருதனர் உரைப்பதைக் கேண்மின்.

'உயர்நிலை யுலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே,
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே,
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வானன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னுய், விழுநிதி
ஈத லுள்ளமொடு இசைவேட் குவையே.'

இவை செய்யுளடிகள்தாமா, அல்லது மழைக்காலத்தில் காட்டியாற்றில் நுங்கு நுரையுமாகப் பொங்கிவரும் பெரு வெள்ளப் போக்கா? மீண்டும் ஓர் முறை படித்துப் பாருங்கள். எதுகை மோனை முதலிய சொல்லணிச் சிறப் புக்களின்றிச் செந்தொடையி லமைந்து கிடப்பன இவ்வடி கள். எனினும், தனித்தமிழ்க் காலத்தில் வாழ்ந்த நம் தமிழ் முன்னோருடைய வாய்மையும் தூய்மையும், வண் மையும் திண்மையும், எளிமையும் பெருமையும் இவ்வடி களில் மிளிர்வதையும்; இப்பண்புகளையுடைய நெடுஞ்செழி யனைப் போன்று இவை பெருமிதப்பீடு நடையுடன் கலித் துச் செல்வதையும் சொல்தோறும் உணர்கின்று மன்றே.

இப்பொருள் பற்றியதோர் கவியினை இன்று செய்து முடிப்பல் என்று மூச்சடக்கி இருந்து, தமிழினை வலிந்து கட்டியிழுத்துக் காரிகை வகுக்கும் கவிச் சட்டத்தில் செறிக்கும் பொய்ந்நாப் புலவர்க்கும், இராக்கத மணம் புணர்ந்து காமச்சுவை நுகர்ந்தேமெனக் களிப்புறுங் கயவர்க்கும் வேறுபாடு இல்லை. இவர் எதுகை மோனை, யமகம் திரிபு அமைத்து ஆக்குவனவும் பலப்பல, அவற்றைப் போற்று வாரு மிகப்பலர். உண்மை நூல்களைத் தேர்ந்து ஊன்றிப் படிப்பார் மிகச் சிலர். இது இற்றைப் போக்கு. ஆனால் இலக்கணப் போலியன்றி, வேறு போலி இல்லாத சங்க காலத்தில், தாம் வேறு தமிழ் வேறு என்ற துவிதநிலையற்று, நுவலப்படும் நிகழ்ச்சிகளினும் பாத்திரங்களின் உள்ளத்தினும் உயிரினும் சென்று கலந்து, மூச்சுவிடுவதுபோல எளிதாகப் பாடுவோரே புலவர் என மதிக்கப்பட்டனர். அவரைப் பொய்யில் புலவரென்றும், செந்நாப் புலவரென்றும் கூறுப. அந்நல்லினத்தைச் சேர்ந்த நம் மருதனாரது பொய்யில் புலமைக் கூற்றுக்கு இரண்டு எடுத்துக்காட்டுக்கள் காட்டி இக்கட்டுரையினை முடிப்பாம்.

பாண்டிய மன்னனது போர்க்களம். அவனுடைய நால்வகைப் படைகளும் போரிலே முனைகின்றன. தாமும் அப்போர்க்களத்திற்குச் சென்று, அப்படைகளிலுள்ள யானை, குதிரை, வீரர் முதலிய யாவர் உள்ளத்தினும் புக்குப் புலவர் மருதனார் ஆற்றும் கவிப்போரைப் பாருங்கள் :

'விழூச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்து
அளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளு முயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவும்
மாவெடுத்த மலிகுரூஉத்துகள்
அகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னக் கடிதுகொட்பவும்

வான்மிகு மறமைந்தர்
தோன் முறையான் விறுமுற்றவும்
* * *
பொலந்தார் மார்பின் நெடியோன்'

தண்டமிழ்ச் சொற்களிற் கடும்போர் முழக்கம் கேட்கின்றது! வேல் வாள் வீரரேயன்றி நால்வாய்க் கரிகளும் பாய்மாப் பரிகளும் மதங்கொண்டு தாக்கி அழிக்கின்றன. அச்சமும் ஆர்வமும் கலந்த உணர்ச்சியுடன் நாமும் அப்போரைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, பாண்டியன் வெற்றிமாலே புனைந்து வெல்படை நாப்பண் நெடியோனுகை நிமிர்ந்து நிற்கின்ருன். எல்லாம் எட்டுப்பத்து அடிகளில்! மருதனரின் பொய்யா வாக்கின் திறம் அது.

அடுத்த எடுத்துக்காட்டு: மதுரைமாநகரத்தில் மாலைக் காலம் வருகின்றது. ஞாயிறு மேற்றிசையில் மூழ்கி விட்டான். கணவரைப் பிரிந்து, கூட்டத்தை நயந்திருக்கும் கோதைநல்லார்க்கெல்லாம் நோய் கைம்மிகுகின்றது. பதினறு கலேகளும் நிரம்பியவனய், பாண்டியர்தம் குல முதல்வனகிய திங்கள் குணக்கில் எழுந்து இரவைப் பகலாக்குவது போன்று நிலாவிரிக்கின்ருன். இனியும் மதுரை நகரத்து அம்மங்கையர் நிலாமாடத்தே தனித்து நின்று தவிப்பது இளகிய மனமுடைய மருதனர்க்குப் பெருந் துன்பம் செய்கின்றது. எனவே, அம்மங்கையர்தம் காதலர்கள் நாமும் அறியாமல் அம்மங்கையர்கள் தாமும் அறியாமல் தத்தம் இல்லங்களுக்கு வந்து விடுகின்றனர். உடனே அம்மங்கையர்கள் மனங்கிளர்ந்து எத்துணை ஆத்திரம் ஆத்திரமாகத் தம்மை அணிசெய்து கொள்கிருர்கள்!

'நான்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற இரவுவர, நயந்தோர்
காத லின்றுணே புணர்மா ராயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப, இழைபுனேயூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய,
நரந்த மரைப்ப, நறுஞ்சாந்து மறுக,
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்ப
* * . .

தம் காதலரைக் கூடி இன்பம் நுகர்தல் வேண்டுமென்று அவ்விளம்பெண்களது மனத்தில் துடித்த துடிப்பு, மருதனார் மனத்திலும் சென்று துடிக்க, அத்துடிப்பின் எதிரொலியாக இவ்வடிகளின் ஒவ்வொரு தொடரும் துடிப்பதைக் காண்க.

பொய்யில் புலவர் கிடைப்பது அருமையா யிருப்பது போன்று, அன்னார் புலமையை அறிந்து அவரைப் போற்றுவார் கிடைப்பதும் அருமையே. 'மீண்டும் நான் ஓர் கவியாகவே பிறக்க நேர்ந்தால், கவிச்சுவை யுணரா மூழுமக்களிடம் சென்று கவிசொல்லும் சிறுமையை என் தலையில் எழுதாதே, இறைவா' என்று வரம் கேட்டான் காளிதாசன். மாங்குடி மருதனார்க்கு அச்சிறுமை நேர்ந்ததில்லை. குடபுலவியனார், கல்லாடனார், இடைக்குன்றூர் கிழார் ஆகிய வேறு புலவர்பெருமக்களும் தன்னைப் பாடியிருப்பினுங்கூட, அவருள் முதலிடத்துவைத்துப் பாராட்டத் தக்கவர் நம் மாங்குடிகிழாரே என்று நெடுஞ்செழியன் நன்குணர்ந்திருந்தான். ஆதலின், அவன் தான் கூறிய வஞ்சினக்காஞ்சியில்,

> 'ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் தலைவ னாக
> உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
> புலவர் பாடாது வரைகவென் நிலவரை.'

என்று அவரைப் பாராட்டிப் போந்தான்.

உலகும் தமிழும் உள்ளளவும் மருதனாரும் உளராவர். மதுரைக்காஞ்சியால் மதுரத்தமிழ் தந்த மருதனாரை அன்று அந்நெடுஞ்செழியன் வாழ்த்தினன். இன்றும் என்றும் தமிழுலகம் அவரை வாழ்த்தாநிற்கும் என்பது ஒருதலை.

தமிழ் வெல்க !

எ. நெடுநல் வாடை

[வித்துவான் அ. நவநீதகிருஷ்ணன், நெல்லை]

பழந்தமிழ்ப் பத்துப்பாட்டுள் ஏழாவதாக இலங்கும் இனிமைமிக்க 'நெடுநல் வாடை' யென்னும் நீடிய புகழ் மணம் பரப்பும் பொற்புடைய பாடலைப் புகன்றருளிய புலவர்பெருமான், முருகன் அருள்பெற்ற முத்தமிழ்க் கவிஞராகிய நக்கீரர். இக்கவிஞர், தமிழ்ப்பெருங் கடவுளாகிய தண்ணருள் முருகன் இன்னருளைப் பெற்ற பெருமையர் என்பது இவர் அருளிச்செய்த திருமுருகாற்றுப் படையென்னும் தெய்வநூலாற் புலனாகும். அந்நூல், பத்துப்பாட்டுள் தலைமைப்பாவாக வொளிரும் தகைமை யொன்றனாலேயே இந் நல்லிசைப் புலவரின் எல்லையற்ற புலமைத்திறனும் புலனாகும். செந்தண்மை மிக்க அந்தணராய்ச் சீரிய தமிழ் வீரியத்துடன் விளங்கிய பேரறிவாளர் நக்கீரர் என்பது, செக்கர் வார்சடைப் பெம்மான் சிவனொடு வாதித்து 'நெற்றிக்கண்ணும் கற்றைச்சடையும் காட்டினும் குற்றம் குற்றமே' யெனச் சாதித்த வெற்றித் திறனால் புலனாமன்றோ! முருகினை யுணர்ந்து உள்ளம் உருகி யுருகி ஆற்றுப்படை பாடிப் போற்றிய திறத்தான், இப்புலவர் பெருமானது நலங்கள் பலவற்றுள் தலைசிறந்த பிறர் நலம் பேணும் பெருந்தகைமை — தனக்கென வாழாத் தகையுடைமை புலனாகுமன்றோ!

பல்லாற்றானும் தலைசிறந்த நல்லாற்றல் படைத்த இந் நாவலர் கோமானாகிய நக்கீரர், நெடுநல்வாடை யென்னும் இத்தனி நெடும் பாட்டால் முடியுடைத் தமிழ்ப்பேரரசன் ஒருவனைப் பரவுகின்றார். அவ்வரசனால் பெரிதும் ஆதரிக்கப் பெற்ற கவிஞராகிய நக்கீரர், அவனது பேராற்றலைத் தம் சொல்லாற்றலால் இவ்வுலகினுக்கு எடுத்துக் காட்டுகின்றார். இப்பாட்டால் புலவர், தம் புகழையும் தம்மைப் போற்றிய புரவலன் புகழையும் நிலவுலகில் நிலைபெறுமாறு செய்துவிட்டார். நெடுநல்வாடையை நினைந்துவிட்டால்

நக்கீரர், நம்கண்முன் — கருத்தின்முன் காட்சியளிக்கிறார். மாட்சிமிக்க பாட்டுடைத் தலைவனாகிய மன்னர் பெருமானும் உடனே தோன்றிவிடுகிறான்.

அந்த அரசன் யாவன்? நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் யாவன்? மாங்குடி மருதனார் பாடிய மதுரைக்காஞ்சிக்குரிய மன்னர்பெருமான். இளமைப்பருவத்தில் தலையாலங்கானத்திற் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையோடு போர்செய்து, அவனைச் சிறைப்படுத்தியவன். அன்றிச் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்பார் எழுவரையும் வென்ற திண்டிறல் வீர வேந்தன். வேள் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும் பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றத்தையும் வென்று கைக்கொண்டவன். மறக்கள வேள்வியும் அறக்கள வேள்வியும் ஆற்றியவன். புலவர்களிடத்துப் பொன்றாத பேரன்பு கொண்டவன். தலைமைக் குணங்கள் பலவுமுடையோன். நல்லிசைப்புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க திண்ணிய புலமையாளன். தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் எனவும், பாண்டியன் நெடுஞ் செழியன் எனவும் பாராட்டும் சீர்மிக்க பேர்களை யுடையவன். குறுங்கோழியூர் கிழார், குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடி கிழார், இடைக்குன்றூர் கிழார் முதலிய புலவர்கள் பல்லோரால் போற்றிப் பாடப்பெற்ற புரவலன்.

இத்தகைய பேரரசன், புவிச் செல்வத்துடன் கவிச் செல்வமும் பெற்ற பெரும் பேற்றையுடையவன்; சொல் வன்மை மிக்க நல்லிசைப் புலவன் என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று — இவன் பாடிய பழந்தமிழ்ப் பாடல் ஒன்று இனிது காட்டுகின்றது.

வாழ்வார்க்கு வாட்டமின்றி நாட்டையாளும் மன்னனாகிய இச்செழியன், தனது கொழிதமிழ்ப்பாட்டில் தன் வாழ்க்கையின் உயரிய மூன்று குறிக்கோள்களைக் குறிப்பிடுகின்றான். ஒன்று: பகைவர்க்கு இடங்கொடாமல் வாழ்வது. மற்றொன்று: தன்கீழ் வாழ்வார்க்கு இடருண்டா

காத முறையில் ஒழுகுவது. இன்னொன்று: சான்றோர் பாராட்டி மகிழத்தக்க மாண்புடை நிலையில் நிற்பது.

'இம்மூன்று உயரிய கொள்கைகளில், முதல் கொள்கையுணர்வு, என்பால் இல்லாது ஒழியுமானால், பின் இரண்டனையும் யான் இழந்தேன் ஆகுக' என்று வஞ்சினம் கூறும் வகையில் அப்பாட்டு அமைந்திருக்கிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடிய பாட்டுத்தான். பாட்டின் முழுக்கருத்தையும் பார்ப்போம்.

அவன் தனது நெஞ்சில் நிமிர்ந்த வீரஉணர்ச்சியோடு வஞ்சினம் கூறுகிறான். "என்னை நோக்கி, 'இவனது நாட்டைப் பெருமையாகப் பேசுவோர், எங்களால் எள்ளி நகையாடத் தக்கவர்; 'இவன் ஒன்றும் அறியாத சிறுவன்' என்று யான் உளம் வருந்தச்சொல்லி, நால்வகைப் படையும் உடையேம் யாம் என்று மிகுந்த வலிமைக்கு அஞ்சாமல், என்னோடு மாறுபடுகின்ற சினம் பெருகி என்னைப் புன்சொல் சொல்லி யிகழ்ந்த இவ்வரசரைப் போரில் அழியத் தாக்கி, அவரை முரசோடு ஒருங்கு கைப்பற்றுமற் போனேனானால், என் குடைநிழலில் வாழ்கின்றவர்கள் வேறு செல்லக்கூடிய நல்ல நிழல் காணமாட்டாமல், கொடியன் எம் அரசன் என்று கருதிக் கண்ணீர் பெருக்கிப் பழி தூற்றக்கூடிய கொடுங்கோல் மன்னனாக யான் ஆகுக; மாங்குடி மருதன் என்னும் சான்றோனை முதல்வனாகவுடைய புலவர்கள் எனது நிலப்பகுதியைப் புகழ்ந்து பாடாமல் நிறுத்திக்கொள்ளும்படி எனது நிலைமை கெடுவதாக!" என்பது அவ்வரசனது ஆண்மை நிறைந்த நெஞ்சத்தெழுந்த வஞ்சினமொழி.

இதனால் இச்செழியர் பெருமானது சீரிய கொள்கைகள் பெருமிதத்தோடு விளங்குதல் காணலாம். பகைவர்க்கு இடங்கொடாது வாழும் வாழ்வைவிட, பின்னர்ப் பேசப் படும் இரு கொள்கைகளையும் மிகவும் மேன்மையனவாகக் கருதிக் காத்த காவலர் தலைவன் என்பது அவற்றின்மேல் வைத்து அவன் வஞ்சினம் கூறினமையால் தெரிகின்றதன்றோ!

அத்தகைய உயர்ந்த நோக்கங்களில், புலவர் போற்றும் பொற்புடைய — அற்புடைய நிலைமையில் ஒழுகுதல் பின்னும் உயர்ந்ததொன்றாகக் கருதினான் இத் திருவுடை மன்னன் என்றால், பண்டைநாளில் தண்டமிழ்ப் புலவர்க்கிருந்த சிறப்பும் செல்வாக்கும் எத்துணை யுயர்ந்தனவென்பது வெள்ளிடைமலை.

> 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் தலைவ னாக
> உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
> புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'

என்பது அப்புவியரசனது வீரப் பொன்மொழி.

புலவர் பெருமக்கள், தன்னையும் தன் நாட்டையும் புகழ்ந்து பாடும் வகையில் ஒழுகுதலே உயரிய வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு, நாட்டைக்காத்த காவலனும் நல்லிசைப் பாவலனும் ஆகிய பாண்டியன் நெடுஞ்செழியனது சிறப்பைக் குறிப்பிடும் — பேராண்மையைப் புலப்படுத்தும்பாட்டு நெடுநல்வாடை. புலவர் தலைவராகிய நக்கீரரது நாவன்மையையும் பாவன்மையையும் விளக்கி நிற்பது நெடுநல்வாடை. செழியன், தான் பாடிய சிரிய செந்தமிழ்ப் பாட்டில் காட்டியுள்ள கவினுறு நோக்கங்களைக் கவியரசர் நக்கீரர், அப் புவியரசன்பால் பொய்ம்மையல்ல—உண்மையாகவேயுள்ளன வென்பதைக் கண்டு, தமது கூரிய அறிவுத்திறன் விளங்கக் கூறுகின்ற — மாறிலா நீடிய மகிழ்ச்சி தரும் பாட்டு நெடுநல்வாடை.

நாற்றிசைக் காற்றையும் வெவ்வேறு பெயரான் வழங்கும் நாம், வடதிசையினின்று வீசும் காற்றை வாடையென்று வழங்குகின்றோம். நக்கீரர், தம் பாட்டினிடையில் இதனை 'வடந்தைத் தண் வளி' என்றே வாயாரக் கூறி மகிழ்கின்றார். 'வடந்தைத் தண் வளி' என்னும் இச் சொற்றொடர்தான் நெடுநல்வாடைப் பாட்டிற்கே உயிர்நிலையான இடம் என்று அறிஞர் கருதுவர்.

பொதியிலில் பிறந்து தமிழொடு சிறந்து மெல்லென வீசும் தென்றலை, இனிய தென்றல்—நல்ல தென்றல் என்

றெல்லாம் சொல்லி எல்லோரும் மகிழ்வர்; நாமும் மகிழ்வோம். ஆனால், வாடையென்றால் மூடுதற்குத் தடித்த ஆடையையும் காய்தற்கு அழல் நெருப்பையும் ஆத்திரத்தோடு தேடும் இயல்புடைய நாம், அந்த வாடையை நல்வாடையென்றோ—நெடுநல்வாடையென்றோ சொல்லிமகிழ எள்ளளவும் உள்ளங்கொள்ளமாட்டோம். வாடையால் வாடிய வண்டமிழ்ப் புலவர் ஒருவரைப்பற்றி நாம் நன்கு அறிந்திருக்கிறோமல்லவா ?

சத்திமுற்றப் புலவர், 'எங்கோன் மாறன் வழுதி கூடலில், ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையது கொண்டு மெய்யது பொத்திக், காலது கொண்டு மேலது தழீஇப், பேழையுள் இருக்கும் பாம்பென வுயிர்த்த ஏழையாள'னைப் பீழையுற்றதை அவர் வாயிலாகவே தமிழுலகம் அறிந்துள்ளதன்றோ ! அங்ஙனமிருக்க, வாடைக்கு நம் புலவர்திலகமாகிய நக்கீரர், நல்வாடையென்றும், நெடுவாடையென்றும் அடைமொழிகள் கொடுத்துக் கூறியது பொருத்தமாகுமாவென்பதைச் சிறிது நோக்குதல் வேண்டும்.

இப்பெயர் பண்புத்தொகையாய் நெடிதாகிய நல்ல வாடையென விரியும். தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது ஒரூழிபோல நெடிதாகிய வாடையாயிற்று. அகத்தொடுங்கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும், அரசன் போகம்வேண்டிப் பொதுச் சொற்பொருளைய் அப்போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று. இங்ஙனம் அரசனைப் பிரிந்து வருந்தும் அரசிக்கு நெடிதாகவும், பகைப்புலத்து வெற்றி கருதிச்சென்ற வீர மன்னனுக்கு நல்லதாகவும் விளங்கும் இயல்பையுற்றது அவ்வாடையாதலினாலே, புலவர் அதனை 'நெடுநல்வாடை' யெனப் பெயர்தந்து போற்றினர்.

புலவர், இப்பாட்டைக் கொற்றவையை நோக்கிப் பரவுகின்ற கோதை மாதினள் ஒருத்தியின் கூற்றாக வைத்துப்பாடி மகிழ்கின்றார். தாமே உள்ளத்தால் அப்பெண்

ளுக மாறிநின்று பெருந்தமிழ்ப்புலவர் பேசத் துவங்குகிறார். அம்ம! கேட்பாயாக! என்றார், கொற்றவையை நோக்கி.

'புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு
இன்று அரும்படர் நீர விறல்தந்து
இன்னே முடிக ! இல் அம்ம !'

என்று பெண்மையுள்ளம் பேசுகிறது.

தன்னைப்போன்ற பெண்ணொருத்தி—தனது தலைவி, இன்னுயிர்க் கணவனைப் பிரிந்து பெரிதும் வருந்துகிறாளே என்ற எண்ணத்தால், "அவள் வருத்தம்தீரப் போர் கருதிச்சென்ற புரவலன், பெருத்த வீரவெற்றியுடன் இனிது போர்முடித்து மீள்வானாக! அதற்கு, இறைவியே! நீ அருள்புரிதல் வேண்டும்" என்று போர்த்தெய்வமாகிய கொற்றவைபால் வெற்றிவரம் வேண்டுகின்றாள்.

பாண்டியன் நெடுஞ்செழியன், தன்னை இகழ்ந்து கூறிய இகலரசர் எழுவரைப் போரில் எதிர்த்து முறியடித்து வெற்றிபெறுதற்குப் பெரும்படையுடன் தலையாலங்கானம் என்ற இடத்தையடைந்தான். படைகள் தங்குதற்குப் பாசறை—பாடிவீடுகளையமைத்தான். போர் நடந்துகொண்டிருக்கிறது. வெற்றியின் எல்லையை இன்னும் அரசன் காணவில்லை. அறப்போர் ஆற்றிய ஆற்றல் மிக்க தமிழரசருள்ளே இராப்போர் இராப்போராயிற்றுப் போலும்.

'பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுஉற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு'

என்பதன்றோ பழந்தமிழர் கண்ட படைவீரம்! அதனால் நள்ளென்யாமத்தும் பள்ளிகொள்ளானாய்ப் பலரொடு முரணிய பாசறைக்கண் சிலரொடு திரிதருகின்றான் அந் நெடுஞ்செழியன்.

இங்ஙனம் செழியன் போர்த்தொழிலை மேற்கொண்ட காலம் எத்தகையது? அதுபோழ்து அவ்வரசர்பெருமானாகிய தலைவனைப் பிரிந்த கோப்பெருந்தேவி எங்ஙிலையுற்ற

னள்? அவளது பிரிவாற்றுமையைத் தணிக்க முயன்றுராகிய தாயரும் தோழியரும் செய்தன யாவை? என்பன போன்ற செய்திகளையெல்லாம் தெரிவிக்கின்ற முறையில் செல்லுகின்றது இத் தீந்தமிழ்ப் பாட்டாகிய நெடுநல் வாடை.

கூதிர்க்காலம்:—பருவம் பொய்யாது மழையைப் பொழியும் மேகம் உலகெல்லாம் குளிரும்படியாகத் தான் கிடந்த மலையை வலமாகச் சுற்றி எழுந்து கார்காலத்து மழையைப் பெய்தது. அம்மழை வெள்ளத்தை வெறுத்த இடையர், தாம் மேய்த்த எருமைகளையும் ஆடுகளையும் பசுக்களையும் மேட்டுநிலமாகிய முல்லைநிலத்தே மேயவிட்டனர். ஊர்க்கு அண்மையில் மேய்த்து ஊரில் தங்கிய இடையர், தாம் பழகிய நிலத்தைக் கைவிட்டுப்போம் தனிமையினுலே—ஊரில் தங்காமையினுலே வருத்தமடைந்தனர். தம் உடம்பிடத்தே கொண்ட பெரிய குளிர்ச்சி வருத்துகையினுலே பலருங்கூடிக் கையை நெருப்பிலே காய்த்தி, அக் கையிடத்திலே கொண்ட வெம்மையைக் கவுளிலே (கன்னம்) சேர்த்தலையுடையராய்ப் பற்பறைகொட்டி நடுங்கினர். விலங்குகள் மேய்தற்றெழிலை மறந்து ஒடுங்கின. குரங்குகள் குளிர்ச்சி மிகுதியால் கூம்பியிருந்தன. மரங்களிலே தங்கும் பறவைகள், காற்று மிகுதியால் நிலத்தே வீழ்ந்தன. பசுக்கள் குளிரின் மிகுதியால் கடியவாய் உதைத்துக் கன்றை ஏற்றுக்கொள்ளாது தவிர்த்தன. இத்தகைய கூதிர்க்காலம் மலையைக் குளிர்ச்சி செய்யுமாறு போன்று விளங்கிற்று.

சிறிய கொடியினையுடைய முசுட்டையில் திரண்ட புறத்தையுடைய வெண்மையான பூக்களும், பொன் போன்ற நிறத்தையுடைய பீர்க்கம் பூக்களும் சிறுதூறுகள் தோறும் மலர்ந்து விரிந்தன. வேகமாய் ஓடின நீரினின்றும் ஒரு கால்பற்றிக் கயல்மீன்கள் அற்ற நீர்க்கு எதிரே வந்தன. மழையாலே வருந்தி, அது சிறிது விட்டவளவிலே வெளிப்போந்த பசிய காலையுடைய—மெல்லிய சிறகுகளையுடைய கொக்குத் திரளும், சிவந்த வரியினை

யுடைய நாரைகளும், கரிய வண்டலிட்ட சேறு பரந்த ஈரத்தினையுடைய வெள்ளிய மணலையுடைய எவ்விடங்களிலு மிருந்து அக்கயல்மீன்களைத் தின்றன. மிகப்பெய்தலே தனக்கு இயல்பாகவுடைய மிகுதியாக எழும் வெள்ளிய மேகம், அகன்ற பெரிய ஆகாயத்தே சிறு துவலையாகத் தூவ, மேற்கற்கும் முறைமையில் சிறு துளிகளைத் தூற்றிக் கொண்டிருந்தது. இங்ஙனம் கூதிர்க்காலம் விளங்கிற்று.

அழகிய இடத்தையுடைய அகன்றவயற்கண் நிறைந்த நீராலே மிக்கெழுந்த வளவிய இலையினையுடைய நெல்லி னின்றும் புறப்பட்ட கதிர்கள் முற்றி வளைந்தன. பெரிய அடியினையுடைய கமுகினது நீலமணியையொத்த கழுத்திற். கொழுவிய மடலிடத்துப் பாளைவிரிந்த திரட்சியைக் கொண்ட தாறுகளில், தெளிந்த நீரை உள்ளேயுடைய பசிய காய்கள், நுண்ணிய நீர்தான் திரளும்படியாக வீங் கிப் பக்கந்திரண்டு இனிமை கொள்ளும்படி முற்றின. முன்பு விரவினபூக்கள் செறிதலைத் தன்னிடத்தேகொண்ட உச்சியினையுடையவாகிய அகன்ற பொழில்களில், குளிர்ச் சியைத் தம்மிடத்தேகொண்ட கொம்புகள் ஏற்றுநின்ற நிறத்தையுடைய மழைத்துளிகள் இடையறுமல் வீழ்ந்து கொண்டிருந்தன. இத்தகைய பொழில்கள் சூழ்ந்த உயர்ந்த மாடங்களையுடைய வளப்பம் வாய்ந்த பழைய வூரில், யாறுகிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக் கள் திகழ்கின்றன.

அத்தெருக்களிலே, தழைவிரவின மாலையினையும், பருத்த அழகிய வலியினையுடைய இறுகின தோளினையும், முறுக்குண்ட உடம்பினையும், நிரம்பின மெய்வலியினையு முடைய மிலேச்சர், வண்டுகள் மொய்க்கும் கள்ளையுண்ட மகிழ்ச்சிமிக்குச், சிறுதுவலையாகிய தண்ணிய துளிகட்கு அஞ்சாராய், முன்னும் பின்னும் தொங்கலாகவிட்ட துகி லினையுடையராய்த், தாம் விரும்பிய இடமெல்லாம் திரிந்து கொண்டிருக்கின்றனர்.

வெண்மையான சங்குவளை இறுகின முன்கையினை யுடைய மெத்தென்ற பணை (மூங்கில்) போலும் தோளினை

யும், மெய்ம்முழுதும் கட்புலனாய்த் தோன்றுகின்ற மெத்தென்ற சாயலினையும், முத்தையொத்த பல்லினையும், பொலிவுமிக்க மகரக்குழையணிந்த அழகிற்குப் பொருந்தின உயர்ந்து தோன்றும் அழகும் குளிர்ச்சியுமுடைய கண்ணினையும், சிறந்து விளங்கும் மடப்பத்தினையுமுடைய மகளிர், பூந்தட்டிலேயிட்டு வைத்த பசிய காம்பினையுடைய பிச்சியினுடைய அலரும் செவ்வியையுடைய அரும்பினது அழகிய இதழ்கள், பகற்பொழுதைக் கடந்து விரியும் பருவம் விளக்கி மணக்கையினாலே, அந்திக்காலம் வந்துற்றதை யறிந்தனர். இரும்பாற் செய்த தகளியிலே நெய்தோய்ந்த திரியைக் கொளுத்தி விளக்கேற்றினர். நெல்லையும் மலரையும் தூவி, இல்லுறை தெய்வத்தை வணங்கினர். இங்ஙனம் வளப்பம் வாய்ந்த அங்காடித் தெருவெல்லாம் மாலைக்காலத்தை மகிழ்ந்துகொண்டாடினர்.

இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங்குகையினாலே, மனையின்கண்ணே யிருக்கும் புறவினுடைய செங்காற்சேவல், தான் இன்பநுகரும் பெடையோடு மன்றிலே சென்று இரைதேடி யுண்ணுமல் செயலற்றுக், கொடுங்கையைத் தாங்கும் பலகைகளிலே பறவாதிருந்து, கடுத்த கால் ஆறும் படி மாறி மாறி யிருந்தன. காவலையுடைய அகன்ற மனைகளில் சிறியராகிய குற்றேவல் வினைஞர், கருங்கொள்ளின் நிறத்தையொத்த நறிய சாந்தரைக்கும் அம்மியிலே, கத்தூரி முதலிய பசுங்கூட்டரைத்தனர். வடநாட்டினுள்ளார் கொண்டுவந்த வெண்ணிறத்தையுடைய சந்தனக்கல், தென்றிசைச் சந்தனத்தோடே பயன்படாமல் கிடந்தது.

மகளிர் குளிர்ச்சி மிகுதியால் தம் கூந்தலிடத்து மாலையிட்டு முடியாராய், மங்கலமாகச் சில மலரிட்டு முடிக்க விரும்பினர். அதன்பொருட்டுத் தண்ணிய நறிய மயிர்ச்சந்தனமாகிய விறகிலே நெருப்பையுண்டாக்கி, அதிலே கரிதாகிய வயிரத்தையுடைய அகிலையும், வெள்ளிய கண்டசருக்கரையையும் கூட்டிப் புகைத்துக் கூந்தலுக்கு ஊட்டினர். கையால் புனைதல் வல்லவனாலே அழகுபெறப் பண்

ணின சிவந்த நிறத்தையுடைய விசிறிகள் உறையிடப் பட்டுச் சிலந்தியினது நூலாற் சூழப்பட்டனவாய் வளைந்த முளைக்கோலிலே தொங்கின. வானளாவிய மாளிகையின் மேலிடத்து, இளவேனிற்காலத்துத் துயிலும் படுக்கைக்குத் தென்றற்காற்றைத் தரும் பலகணியிலே நின்று உலாவல் ஒழிய, சிக்கென்ற நிலையினையுடைய இரண்டு கதவும் தம்முட்பொருந்தித் தாழிட்டுக் கிடந்தன.

கல்லென்னும் ஓசையினையுடைய மழைத்துளிகளை வாடைக்காற்று எங்கும் பரப்புகையினாலே, இளையோரும் முதியோரும் குவிந்த வாயையுடைய கரகத்தில் உள்ள தண்ணீரைக் குடியாராய்ப், பகுத்தாற்போன்ற வாயை யுடைய இந்தளத்தில் (தூபமுட்டி) இட்ட செந்நெருப்பின் வெம்மையை நுகர்ந்தனர். ஆடற்றொழிலையுடைய மகளிர் தாம் பாடுகின்ற பாட்டு, யாழிசைக்கு இயையுமாறு நரம் பைக் கூட்டுதற்கு விரும்பினர். குளிர்ச்சியாலே தன் நிலை குலைந்த இனிய குரலாகிய நரம்பைப், பெரிய எழுகின்ற முலையின் வெப்பத்தே தடவிக், கரிய தண்டினையுடைய சிறிய யாழைப் பண்ணிற்கு முறையிலே நிறுத்தினர். கண வரைப் பிரிந்த மகளிர், பிரிவாற்றாமையால் கலங்கிவருந்தக், காலமழை செறிந்து கூதிர்க்காலமாய் நிலைபெற்றது.

மன்னவன் மாளிகை:—திசைகளிலே விரிந்த கதிர்களைத் திகழப் பரப்பின அகன்ற இடத்தையுடைய ஞாயிறு, மேல் திசைக்கட் செல்லுதற்கெழுந்து. இரண்டிடத்து நாட்டின இரண்டு கோலிடத்தும் சாயாநிழலால் தாரைபோக ஓடு கின்ற நிலையைக் குறித்துக்கொள்ளுந் தன்மை தப்பாதபடி தான் ஒரு பக்கத்தைச் சாரப்போகாத சித்திரைத் திங்க ளின் மத்தியில் நின்ற பத்து நாட்களுள், யாதோர் நாளில் பதினைந்தா நாழிகையிலே—நண்பகலிலே கால்கோள் சிறப் புச் (அங்குரார்ப்பணம்) செய்தனர். சிற்பநூலை ,யறிந்த தச்சர் நட்பமாக நூலை நேரே பிடித்துத் திசைகளைக் குறித்துக் கொண்டனர். அத்திசைகளில் நிற்கும் தெய் வங்களையும் வழிபட்டுப், பெரிய பெயரினையுடைய அரசர்க் கொப்ப மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலிய

வற்றையும் வகுத்தமைத்தனர். இவ்விடங்களையெல்லாம் சேர வளைத்துக் கட்டிய உயர்ந்த மதில் விளங்கிற்று.

அம்மதிற்கண் அமைந்த வாயில், ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும்பாலே கட்டிச் சாதிலிங்கம் வழித்துப் பூசப்பெற்றது. தாழோடு அமைத்த சிறந்த இரு கதவங்களையுடையது. கைத்தொழில்வல்ல தச்சன் திறம்பட அமைத்தலினாலே, வெளியற்றுப் பல மரங்களும் தம்மில் இறுகச் சேர்ந்து உத்தரக் கற்கவியிலே செருகிய நெடிய நிலைகளையுடையது. உத்தரக் கற்கவி, நடுவே புதிய போதாய்ப்பூத்த குவளைப்பூவோடு திருமகள் குலவும் பிடிகளையும் தன்னிடத்தே அமைக்கப்பெற்றது. நிலைகள் வெண்சிறு கடுகப்பி நெய்யணியப் பெற்றன. மேலும் வெற்றிக்கொடிகளுடன் யானைகள் சென்று புகுதும்படி உயர்ந்த மலையை நடுவே வெளியாகத் திறந்தாற்போன்ற, கோபுரத்தையுடைய அகன்ற வாயில் ஆகும். கவரிமான்களும் குறுகிய கால்களையுடைய அன்னங்களும் தாவித் திரியும் வெண்மணல் பரப்பிய முற்றத்தினையுடையது அம் மன்னன் மாளிகை. திருமகள் நிலைபெற்ற குற்றமற்ற தலைமையினையுடையது.

பந்தியிலே நிற்றலை வெறுத்த அடர்ந்த பிடரி மயிரினையுடைய குதிரைகள் புல்லைக் குதட்டும் தனிமையை விளக்கும் குரல் மாளிகையின் ஓர்பால் எழுந்தது. அரசன், நிலாப்பயன் கொள்ளும் நெடிய வெள்ளிய நிலாமுற்றத்தினுள்ள நீர்வந்து வீழும், மீனின் அங்காந்த வாய்போன்ற வாயினையுடைய தூம்பு நிறைகையினாலே கலங்கி விழுகின்ற அருவியினோசை செறிந்து பெருகியது. மற்றொருபால் தழைத்த நெடிய பீலியொதுங்க மெல்லிய இயல்பினையுடைய செருக்கின மயில்கள், ஊதுகொம்பின் முழக்கமோவென மருளுமாறு இனியவோசையோடு ஆரவாரித்தன. செறிந்தமலையின் ஆரவாரம்போல இங்ஙனம் பலவொலிகள் பேராரவாரத்துடன் மன்னன் மாளிகையில் எழுந்தன.

அரசி த்ங்கும் அந்தப்புர மாளிகை:—சோனகர் பண்ணின சிறந்த வேலைப்பாடமைந்த பாவை, தன் கையிலே

ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளி நிறையும்படி நெய் வார்க்கப்பட்டுள்ளது. தகளிக்கண் உள்ள பருந்திரிகளைப் பந்தங்களிலே கொளுத்திவைத்த விளக்குகள் விளக்கமான நிறத்துடன் மேனோக்கி யெரிகின்றன. தகளிக்கண் நெய்வற்றின காலந்தோறும்—விளக்கு ஒளி மழுங்கின காலந்தோறும், பலவாய் வேறுபட்ட இடமெல்லாம் பரந்த இருள் நீங்குமாறு பாண்டியன் தான் நெய்வார்த்துத் தூண்ட வேண்டும். அவனையன்றிக் குற்றேவல் புரியும் ஆண்மக்கள் அணுகவாராத அரியகாவலையுடையது; பல கட்டுக்களை யுடையது.

அக்கட்டுக்களின் நெடியசுவர்கள் மலைகளைக் கண்டாற் போன்ற உயர்ச்சியை யுடையன; மலைகளைச் சேர்ந்து இந்திரவில் கிடந்தாற்போன்று பல நிறமாய் வீழ்ந்துகிடந்த கொடிகளையுடையன; வெண்மையாக விளங்கும் சாந்து பூசப்பெற்றுப் பொலிவன. செம்பினாலே பண்ணினாலொத்த சிறந்த வேலைப்பாடுகள் அமைந்தன. நீலமணியைக் கண்டாற்போன்ற கருமையினையும் திரட்சியினையுமுடைய திண்ணிய தூண்களையுடையன. இத்தகைய வடிவழகினை யுடைத்தாகிய பல பூக்களையுடைய கொடியையெழுதிப், புதைத்த கருவோடே, பெயர்பெற்ற காட்சிக்கினிய நன்மைவாய்ந்த இல்லம்; கருப்பவில் (கருப்பக் கிருகம்)

அரசியின் கட்டில் அமைப்பு:—யானைத் தந்தத்தாற் செய்த கட்டில். நாற்பதியாண்டு முதிர்ந்த, முரசென்று மருளும் வலிய கால்களையும் உயர்ந்த அழகினையும், புகர் நிறைந்த மத்தகத்தினையுமுடைய, போரில் பொருதுபட்ட யானையினுடைய, தானே வீழ்ந்த கொம்பைக், கனமும் செம்மையுமொப்ப இருபுறத்தையும் செத்தித், தச்சன் கூரிய சிற்றுளியாலே செய்த, பெரிய இலைத்தொழிலை இடையே இட்டமைத்த கட்டில். பல நிறம் பிடித்த மயிர்களைப் புலி முதலியவற்றின் வரிகள் தோன்ற உள்ளே வைத்து, அதன்மேலே சிங்கம் முதலியவற்றை வேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகளைவைத்து,

முல்லைப்பூக்களையும் பிறபூக்களையும் நிறைத்துச் சாளரங்களாகத் திரிந்த தகடுகளை ஆணிகளாலே தைத்து, மூட்டுவாய் சிறந்த வட்டக்கட்டில். மெல்லிய நூல் அழகுபெறும்படி கோத்த முத்துவடத்தைக், கட்டிலின் நாலுபுறமும் கீழே விழத் தொங்கவிட்டுத், தன்னிடத்தே கட்டப்பெற்ற சிறந்த அகன்ற கட்டில். புலியினது வரியெழுதிய பொலிவு பெற்ற நிறத்தையுடைய கச்சாலே, நடுவுவெளியான இடமறையும்படி கோக்கப்பட்டுக், குற்றமற்ற கச்சுக்கட்டில் என்னும் பெரிய பெயரையுடைய கட்டில்.

அக்கட்டிலின் கால்கள், சூல் முற்றியசைந்த இயல்பினையுடையராகிய மகளிரது பால்கட்டி வீங்கின முலையையொப்பப், பக்கமுருண்டு திரண்ட குடத்தையுடையன. குடத்திற்கும் கட்டிலுக்கும் நடுவாகிய இடம் ஒழுக மெல்லிதாய்த் திரண்டு உள்ளிமுதல்போலும் வலியினையுடைய கால்கள். அத்தகைய கால்களைத் தன்னிடத்தே தைத்துச் சமைத்துப் பேரளவெய்திய கட்டில்.

அதன்மேல், சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம் உறுதூவி யென்ற ஐந்தும் தன்னுள் இணைதலணைந்த படுக்கை மெல்லிதாக விரிந்து கிடக்கிறது. அப்படுக்கைக்கு மேலாகத் தம் பேட்டைப் புணர்ந்த அன்னச்சேவலின் தூயநிறத்தையுடைய சூட்டாகிய மயிர் பரப்பப்பட்டுள்ளது. அத்தூவிக்கு மேலாக அணைகளும் இட்டு வைத்துக், கஞ்சிமுறுக்கிய கழுவுதலுற்ற தூய் மடித்த ஆடை விரித்துத்துலங்குகிறது. செங்கழுநீர் முதலியவற்றின் இதழ்கள் அப்படுக்கையின்மேல் விரிக்கப்பட்டுள்ளன.

அரசனைப் பிரிந்த அரசியின் நிலை :—முன்பு முத்தால் செய்த கச்சுச்சுமந்த பருத்த முலையினையுடைய பேரரசியின் மார்பிடத்தே, குத்துதலமைந்த நெடிய தாலிநாண் ஒன்று மட்டுமே கிடந்தது. அழகிய நுதலிடத்துச் சிலவாகிய மெத்தென்ற மயிர் ஒழுங்குசெய்யாமல் உலறிக் கிடந்தன. சிறிய இடத்தையுடைய தாளுருவியழுத்திய காதுகள், பெரிய ஒளியொழுகிய மகரக்குழையைக் கழற்றியமையால்

சிறிதே தாழ்ந்துள்ளன. முன்பு பொன்னாற் செய்த வளையல் கிடந்த தழும்பிருந்த, மயிர் ஒழுங்குபட்டுக் கிடந்த முன்கையிலே, வலம்புரிச்சங்கை யறுத்துப் பண்ணின வளையை அணிந்து, காப்புநாணைக் கட்டியிருந்தாள். வாளையினது பிளந்த வாயைப்போன்று முடக்கத்தை யுண்டாக்கிச் சிவந்த நிறத்தையுடைய முடக்கென்னும் மோதிரத்தைச் சிவந்த தனது விரலிடத்தே யிட்டிருந்தாள். முன்பு பூத்தொழிலையுடைய துகில்—பட்டாடை, கிடந்த உயர்ந்த வளைவினையுடைய அவளது அல்குலில், அழகிய மாசுபடிந்த நூலாற்செய்த புடைவையை உடுத்திருந்தாள். வண்ணங்களைக் கொண்டெழுதாத, வடிவைக்கோட்டின சித்திரத்தை யொப்ப விளங்கினள்.

சேடியர் செயல்:—பிரிவாற்றுமையால் வருந்தும் பெருந்தேவிக்கு அருந்துயிலுண்டாகுமோவென்று தோழியர், அவ்வரசியின் கழுவிச் செம்பஞ்சிட்டுப் பூண்களணியாத அழகிய அடியைத் தடவினர். அச்சேடியர் மாந்தளிர்போன்ற நிறத்தினையுடையர்; பரந்த சுணங்கினையுடையர்; அழகிய மூங்கில்போல் திரண்ட மெல்லிய தோளினையுடையர்; கச்சை வலித்துக் கட்டின, தாமரையரும்பு போலும் முலையினையுடையர்; வளைந்து நுடங்கும் இடையினையுடையர்; மெத்தென்ற தன்மையினையுடையர்.

செவிலியர் செயல்:—நரைகலந்த நறிய மெல்லிய மயிரினையும் சிவந்த முகத்தையுமுடைய செவிலித்தாயர், இவள் ஆற்றுவொழுக்கம் மிகுகையினாலே திரண்டுநின்று, பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள் பலவற்றையும் பலகாற் சொல்லினர். 'இப்பொழுதே நினக்கினிய துணைவர் வருகுவர்' என்று அவள் மனதுக்கினிய சொற்களைச் சொல்லினர். அங்ஙனம் கூறவும் அதற்குப் பொருந்தாளாய்க் கோப்பெருந்தேவி பெரிதும் கலங்கினள்.

திங்கள் மண்டிலங்கண்ட தேவி:—குடங்களைக் கடைந்து தைத்த சாதிலிங்கம் பூசின வலிய நிலையினையுடைய மேற்கட்டியிற் சேர்த்த திரண்ட கால்கள், கட்டிற்கால்களோடு

இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. மெழுகுவழித்த அம் மேற்கட்டியின் மேலே புதிதாக எழுதின உரோகிணியுடன் ஒளிரும் திங்கள்மண்டிலம் திகழ்ந்தது. அதனை அரசி உற்றுநோக்கினாள். திங்களோடு திரியாமல் நின்ற உரோகிணியைப்போல, யாமும் பிரிவின்றியிருத்தலைப் பெற்றிலேமேயென்று நினைந்து நெட்டுயிர்ப்புக்கொண்டாள். நீலப்பூப்போன்ற, தன் கண்களில் மல்கின நீர்த்துளிகளைச், சிவந்த விரலால் தெறித்து வருந்துகிறாள்.

கொற்றவையைப் பரவுவாள் விழைவு:—இங்ஙனம் தனிமையோடு துன்புற்றுக்கிடக்கும் அன்புமிக்க அரிவைக்குத் தீதாயிருக்கின்ற ஆற்றுதற்கரிய நினைவு தீருமாறு, வேந்தன் பாசறையிடத்திருந்து பொருகின்ற போர்த்தொழில், அவனுக்கு இனிதே வெற்றியைத் தந்து இப்பொழுதே முடிவதாக! இஃது எனக்கு விருப்பம்.

செழியனது பாசறைத் தொழில்:—ஒளிவிளங்கும் பட்டத்துடன் பொலிவுபெற்ற, போர்த்தொழிலைப் பயின்ற யானையின் நீண்டு திரண்ட பெரிய கை அற்று நிலத்தே புரளுமாறு, யானையை முன்னர்க்கொன்ற அருஞ்செயற் பெருவீரருடைய வாளினாற் போழ்ந்த சிரிய புண்ணைக் கண்டு பரிகரித்தற்குத் தான் இருக்கின்ற இடத்திற்குப் புறம்பே போந்து புரவலன் திரிதருகின்றான். உடன் வரும் வீரன் கையில் தாங்கிய விளக்கில் எரிகின்ற பருத்த கொழுந்து, வடதிசைக் கண்ணதாகிய குளிர்ந்தகாற்று (வாடை) அடிக்குந்தோறும் அசைந்து, தெற்கு நோக்கியெழுந்து சாய்ந்த தலையினையுடையதாய் எரிந்தது.

வேப்பமாலையைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலைத்தாங்கிய படைத்தலைவன், வேந்தன் முன்னர்ச் செல்கின்றான். அப்படைத்தலைவன் புண்பட்ட வீரரைப் புரவலற்கு முறைமுறையே காட்டுகின்றான். பின்னாக, மணிகளைத் தன்னிடத்தேயிட்ட பெரிய தாளினையுடைய குசையுடன் (கடிவாளம்) சேணம் அணிந்த பாய்ந்துசெல்லும் செலவினையுடைய செருக்குற்ற குதிரை

கள், கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலே படும் துளிகளை யுதறுகின்றன.

செழியன், தனது இடத்தோளினின்றும் நழுவி விழ்ந்த அழகிய ஒலியலை—மேலாடையை இடப்பக்கத்தே யணைத்துக்கொள்கிறான்; வாளைத் தோளிலே கோத்த தறு கண்மையுடைய வீரன் ஒருவனது, தோளிலே வைத்த வலக் கையனாய் நடந்துசெல்கிறான். விழுப்புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சி தோன்ற முகமலர்ச்சியுடன் ஆறுதலளிக்கும் கனிந்த அன்பு குழைந்த கண்ணோட்டத்தைச் செய்கிறான். நூலாலே சட்டத்தைக் கட்டின முத்தமாலையினையுடைய கொற்றக்குடை, தவ்வென்னு மோசையுடன் அசைந்து பரக்கின்ற நீர்த்துளிகளைக் கரக்கின்றது. இங்ஙனம் பேராண்மை மிக்க பேரரசன் நள்ளென்னும் ஓசையை யுடைய நடுவியாமத்தும் பள்ளிகொள்ளாமல் சில வீரரு டன் பாசறையிடத்துப் புண்பட்ட வீரரைப் பரிகரித்துத் திரிதருகின்றான்.

'கூதிர்க்காலம்' என்ற தலைப்புத் துவங்கி இதுகாறும் கூறியனவெல்லாம், நச்சினார்க்கு இனிமையளிக்கும் உரை யாசிரியராகிய நச்சினார்க்கினியர் நவின்ற உரையைத் தழுவிய உரைநடையாகும்.

புலவரின் இயற்கைப் பொருள் அறிவு :—தலைவனாகிய பேரரசனைப் பிரிந்து, கோப்பெருந்தேவி உள்ளங் குலைந்து வருந்துதற்குக் காரணமான கூதிர்க்காலத்தைப்பற்றிக் கூறப்புகுந்த கீரர்தம் பேரறிவுத் திறனை என்னென்று புகழ்வது! கூதிர்க்காலமல்லாத காலத்தே இக்கவிஞர் அருளிய நெடுநல்வாடைப் பாட்டை நினைந்தால்போதும். அக்கூதிர்க்காலக் காட்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன் றாக நம் உள்ளக்கண்ணின் முன்னால் காட்சியளித்துக் கொண்டேயிருக்கும். அத்துணையழகிய முறையில் எத்த னையோ சொல்லோவியங்களைத் தீட்டிச் செல்கிறார் இத் தெய்வக் கவிஞர். இயற்கை வாழ்வு வாழ்ந்து, இயற்கை யின்பந் துய்த்து, இயற்கையிலேயே பெரிதும் ஈடுபட்டுக் 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்'பைக்கண்டு கூறிய

இவ்வியற்கைப் புலவர் அமைக்கின்ற அரிய தமிழ்ச்சொல் லோவியங்கள், அவரது இயற்கைப்பொருள் அறிவுத் திறனை இனிது காட்டுகின்றன.

பருவமழை பொழிதல், இடையர் மேட்டுநிலத்தை யடைதல், அவர்கள் குளிர்ச்சியால் நெருப்பிலே கையைக் காய்த்திக் கவுளிலே—கன்னத்திலே வைத்தல், பற்பறை கொட்டி நடுங்குதல், விலங்குகள் மேயாது ஒடுங்குதல், குரங்குகள் கூம்பியிருத்தல், பறவைகள் காற்றால் நிலத்தில் வீழ்தல், பசுக்கள் கன்றுகளை ஏற்காது காலால் உதைத் தல், முசுட்டை பீர்க்கு முதலிய கொடிகள் பூத்தல், கயல் மீன்கள் அற்றநீர்க்கு எதிரே வருதல், மழை சிறிது விட்ட தும் வெளிவந்த கொக்கும் நாரையும் அம்மீன்களைப்பற்றி யருந்துதல், மேகம் சிறு துளிகளைத் தூற்றிக்கொண்டே யிருத்தல், நெற்கதிர்கள் முற்றிவளைதல், கமுகின் தாறுக ளில் காய்கள் முற்றியிருத்தல், பொழில்களில் மழைத் துளிகள் வீழ்ந்துகொண்டிருத்தல், ஆறு கிடந்தாற்போன்ற அகன்ற தெருக்களில் மிலேச்சர் கள்ளையுண்டு களித்துத் திரிதல், பிச்சியின் இதழ்கள் விரிந்து மணத்தலால் அந்திப் பொழுது வந்ததறிதல், அங்ஙனம் பொழுதறிந்து மகளிர் இல்லுறை தெய்வத்தை வணங்குதல், மனைகளில் உள்ள புறாக்கள் பெடையொடு செயலற்றுக் கபோதகத்தலை யிலே—பலகைகளிலே கடுத்தகால் ஆறும்படி மாறிமாறி யிருத்தல், குற்றேவல் வினைஞர் சாததம்மியில் கத்தூரிக் கூட்டரைத்தல், சந்தனக்கல் பயனின்றிக்கிடத்தல், மகளிர் கூந்தலில் மங்கலமாகச் சில மலரேயிட்டு முடித்தல், கூந்த லுக்கு நறும்புகையூட்டுதல், விசிறிகள் முளைக்கோலிலே உறையிடப்பட்டுக் கிடத்தல், மாளிகைகளில் பலகணிக் கதவங்கள் தாழிட்டுக் கிடத்தல், இளையரும் முதியரும் நெருப்பின் வெம்மையை நுகர்தல், ஆடல்மகளிர், யாழ் நரம்பைத் தம் முலைவெப்பத்தே தடவிப் பண்ணிற்கு முறை யிலே நிறுத்தல், கணவரைப் பிரிந்த மகளிர் வருந்துதல் ஆகிய இத்தனை கூதிர்க்காலக் காட்சிகளையெல்லாம் நேரில் கண்டு மகிழ்ந்து ஒன்றுவிடாது நின்றுகூறும் கீரரது சீரிய

புலமைத்திறன் நினைந்து நினைந்து மகிழ்ந்து இன்புறுதற்குரியதாகும்.

பாட்டிற் காணும் பழந்தமிழர் இயல்புகள் :—நக்கீரர், தம்மைக்காத்த தமிழரசன் பெருமையை வியந்து பாடும் இப் பழந்தமிழ்ப் பாட்டிலே தமிழரின் சிறந்த இயல்புகள் பலவற்றை வலியுறுத்துகின்றார். அவர் காட்டும் பழந்தமிழர் பண்புகள் சிலவற்றை நோக்குவோம்.

கூதிர்க்காலத்திலே மலர்கள் விரிதலைக்கண்டு பொழுதறிந்தனர்; அந்திப்பொழுது வந்ததும் அணிவிளக்கேற்றி நெல்லையும் மலரையும் தூவி, இல்லுறை தெய்வத்தை வணங்கினர்; கூதிர்நாளில் கத்தூரி முதலிய நறுமணப் பொருளைப் பயன்படுத்தினர். மகளிர் கூந்தலுக்கு நறும் புகையூட்டிக் குளிர்ச்சியைப் போக்கினர்; மங்கலமாகச் சிலமலரே கூந்தலில் அணிய விழைந்தனர்; ஆடல்மகளிர் குளிர்ச்சியால் நிலைகுலைந்த யாழ்நரம்பைத் தம் முலைவெப்பத்தே தடவிப் பண்ணுற நிறுத்தினர். புதிதாக மனையமைப்பார் நல்வேளையில் கால்கோள் சிறப்புச்செய்தனர்; சித்திரைத் திங்களின் மத்தியில் நின்ற பத்துநாட்களில் ஏதேனும் ஓர் நாளில் பதினைந்து நாழிகையளவில்—நண்பகலில், கட்டும் மனைக்குக் கால்கோள் செய்தனர். உத்தரக்கற்கவியின் நடுவே இருபாற்பிடியொடு மிளிரும் திருமகள் வடிவை (சயலக்குமியுரு) யமைத்தனர். தமிழரசர், தம் மாளிகைகளில் கவரிமான்களையும் அன்னங்களையும் மயில்களையும் மிகுதியாக வைத்து வளர்த்தனர். யவனர் செய்த பாவைவிளக்குகள் அரசன் மாளிகையை அணி செய்தன. அரசியின் அந்தப்புர மாளிகை அரிய காவலையுடையதாயிருந்தது; இராப்பொழுதில் அவ்வந்தப்புரத்து, அரசனைத் தவிர வேறு எவரும் செல்லுதல் கூடாது. அந்தப்புர மாளிகையின் சுவர்கள் சிறந்த ஓவியங்களால் சித்திரிக்கப்பட்டிருக்கும். அரசர் துயிலும் பள்ளியங்கட்டிலை நாற்பதியாண்டு முதிர்ந்த, பொருதுபட்ட களிற்றின், தானே வீழ்ந்த கொம்பைச் செத்தியமைப்பர்; அரசாது பெருவீரத்தை விளக்கும் அரிய ஓவியங்களுடன் அக்கட்

டிலேயமைப்பர். அரசர் துயிலும் படுக்கையின்மேல் பேட்டைப் புணர்ந்த அன்னச்சேவலின் மெல்லிய தூவி யைப் பரப்புவர். தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிர் தம்மை அணிசெய்துகொள்ளார். கட்டிலின்மேல் கட்டப்பட்டிருக்கும் விதானத்தில் உரோகிணியுடன் ஒளி ரும் திங்கள்மண்டிலம் ஓவியமாகத் திகழும். போர்கருதிச் சென்ற அரசர் வெற்றியுற்றுவருமாறு மகளிர் கொற்ற வையைப் பரவுவர். பாசறைக்கண் தங்கிய அரசன் இராப்பொழுதில் பள்ளிகொள்ளானாய் விழுப்புண்பட்ட வீரர்களை முகமலர்ச்சியுடன் பார்வையிடுவான். அங்ஙனம் பார்த்துப் பரிகரித்தற்குச் செல்லும் அரசன் நடந்தே செல்வான். படைவீரர்களை அடிமையென எண்ணும் மடமையுள்ளம் கொண்டவனாக மன்னன் விளங்கவில்லை.

அரசியின் நெட்டுயிர்ப்பு :—புலம்பொடு வதியும் நலங் கிளர் அரிவையாகிய கோப்பெருந்தேவி, தான் பள்ளி கொள்ளும் கட்டிலின் மேற்காணும் விதானததில் எழுதி யுள்ள ஓவியத்தை நோக்கினாள். அவ்வோவியத்தில் திக ழும் 'திங்களோடு திரியாமல் நின்ற உரோகிணியைப் போல யாமும் பிரிவின்றியிருததலைப் பெற்றிலேமே!' என்று நினைத்து அவற்றைப் பார்த்தாள்; நெட்டுயிர்ப்புக் கொண்டாள்.

> **'முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய**
> **உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா'**

என்பன நக்கீரரின் சொற்கள்.

உரோகிணியுடன் ஒளிரும் திங்கள்மண்டிலத்தைக் கண்ட தேவி உள்ளக்கவலையொழிந்தாள்; ஆறுதல் அடைந் தாள். கலைச்சுவை யுணரவல்ல அக் கற்பரசி, ஓவியக்கலை யின் உயர்வைக்கண்டு உள்ளங் களித்தாள். தலைவன் மேற் கொண்ட வினைபற்றி விளைந்த அச்சமெல்லாம் அடியோ டொழிந்தது என்று, நெடுநல்வாடைத்திறனை ஆய்ந்து தெளிந்த அறிஞர்கூறும் கருத்து, நக்கீரர் கருத்துக்குப் பொருத்தமாகுமோ ?

மேலும், அத்திறன் ஆய்ந்து தெளிந்தார், "அந்தோ! உரோகிணியால் திங்கட்செல்வன் அருங்கேடு உற்ருன்; உடலின் உறுப்பழிதொழுநோய் பெற்ருன். "பூவலர் கொடியனுர்கள் போகமே கழுமி, மேலும் பாவமும் பழியு முற்ருர் பற்பலர்!" என்றன்ருே எண்ணுதல் இயல்பு. "யான், அவ்வுரோகிணியைப் போலன்றி, வினைவிழைந்து சென்ற வேந்தனுகிய தலைவற்குத் துணையாக நின்றேன்; என் கணவன், திங்களைப்போன்று இன்பம் விழைந்தவ னில்லை" என்று நினைந்த பெருமிதத்தால் அன்ருே கோப் பெருந்தேவி நெட்டுயிர்ப்புக்கொண்டாள்" என்பர்.

கணவனைப் பிரிந்த காரிகையர், தாம் பிரிவாற்ருது பெரிதும் வருந்தும் வேளையில் காணுகின்ற இன்பக் காட் சிகளெல்லாம் அவர் துன்பத்தையே பெருக்குவன என் பது யாவரும் அறிந்ததே.

தயங்கிணர்க் கோதையாகிய பதுமை, தன்மேல் தண் ணைவைத்த மென்ருேளைச் சிவகன், அவள் வருந்துரு வகையில் நீக்கினன். 'நயங்கிளர் உடம்பு நீங்கி நல்லுயிர் போவதேபோல், இயங்கிடை யறுத்த கங்குல் இருளிடை யேகினன்.' அவனது பிரிவால் ஆற்ருது வருந்திய பதுமை, சேவலோடுகூடி மகிழும் அன்னப்பேடையைக் கண்டாள்; மிக்க சீற்றம் கொண்டாள். அவ்வன்னப் பெடையொடு ஆற்றக் கழறினுள். அன்னத்தின் இன் புற்ற காட்சி, பதுமைக்குத் துன்பத்தை விளைத்தது; வெகு ளியைக் கிளைத்தது.

சந்தனப் பொதியிலினின்று வந்து தவழும் நறுந் தென்றல் எத்துணை யின்பத்தைப் பயப்பது. அவ்வின்பத் தென்றலும் துன்பத்தை விளைப்பதாயிற்று ஒருகால் சுந் தரர்க்கு. பரவையாரை ஆரூர்த் திருக்கோயிலில் நேரில் கண்டு பேராவுள்ளத்தால் இன்புற்றுப் பிரிந்த இறையன்ப ராகிய நம்பியாரூரர், அத்தென்றலால் அருந்துயருற்ற னர். 'தமிழ் மாருதம் பொங்கழலை வீசுகின்றதே, இத்த கைய மறத்தைப் பயின்ற தெங்கோ?' என்று வியக்கிருர்.

'மறம் பயின்றதெங்கோ தமிழ் மாருதம்' என்பது அவ்வன்றொண்டர் வாயிலாக வெளிப்படுத்தும் சேக்கிழார் வாக்கு.

செழியனைப் பிரிந்து வருந்தும் செல்வியாய அரசியும் விதானத்தில் விளங்கிய இன்ப ஓவியங்கண்டு துன்புற்றாள். உரோகிணியாய காதற்கிழத்தியோடு பிரியாது திகழும் திங்களோனை அவ்வோவியத்தே ஒவ்வொருநாளும் கண்டவளே அவ்வரசி. ஆதலின் அவ்விருவரைப் பற்றியும் நினைந்த பின்னரே கண்ணுற்றாள். கண்டதும், பண்டை இன்ப நினைவுகளெல்லாம் அவள் உள்ளத்தில் எழுந்தன. இவர்களைப்போல் இருக்கப் பெற்றிலமே என்று ஏங்கிப் பெருமூச்சுவிடுகின்றாள். கணவனை யிழந்தோ, அன்றிப் பிரிந்தோ தனித்துத் துயருறும் மாதொருத்தி, மகிழ்வுடன் இன்புற்றுக் கூடிச்செல்லும் தலைவன் தலைவியரைக் கண்டவிடத்து நெட்டுயிர்ப்புக்கொள்ளுதலை நிலவுலகில் பலவிடத்தும் பார்க்கலாம் அன்றோ!

அவ்வாறே உரோகிணியுடன் ஒளிரும் திங்களஞ் செல்வனைக் கண்டவிடத்தும் அரசிக்கு நெட்டுயிர்ப்புத் தோன்றல் இயல்பு. அங்ஙனமிருக்க, 'இலங்கைமாநகரில் சிறையிருந்த செல்வியின் உயிர்ப்புப்போன்றதன்று தமிழரசியின் நெட்டுயிர்ப்பு' என்று சிவனோடு மாறுபட்ட செந்தமிழ்ப் புலவரையும் மறுக்கும் மாணறிவை என்னென்பது!

பாசறைத் தொழில்:—பாசறைக்கண் தங்கிய தமிழரசன் நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளானாய்ச் சில வீரருடன் வெளிப்போந்து, விழுப்புண்பட்ட வீரரைக் காண வருகின்றான். அவனது பாசறைத்தொழிலை நெடுநல்வாடைப்பாட்டின் இறுதி யிருபது அடிகளிலே நக்கீரர் பேசுகின்றார். அப்பகுதிதான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்பால் நக்கீரர் உண்மையாகக் கண்ட உயரிய இயல்புகளை எடுத்துரைக்கும் இடம் ஆகும்.

பகைவர்க்கு இடங்கொடாமல் வாழ்வதற்காகவே பகைப்புலத்துப் போர்கருதிச் சென்றான். தன்கீழ் வாழ்

வார்க்கு இடருண்டாகாதமுறையில் ஒழுகுதற்பொருட்டே பகைப்புலத்துப் படையொடு சென்றதன்றிப் பாசறைத் தொழிலையும் மேற்கொண்டான். புலவர் போற்றும் நிலையில் நிற்பதற்காகவே தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணிக் காத்தான்.

அரசன் ஆற்றும் பாசறைத்தொழிலைப் பார்ப்போம். நெருப்புப் பந்தங்களைத் தாங்கிய வீரர், அரசன் முன்னும் பின்னும் பக்கமும் விருப்பொடு செல்கின்றனர். வேப்ப மாலையை அணிந்த வேலுடன் முன் நடந்து செல்கின்ற படைத்தலைவன், புண்பட்ட வீரரை முறைமுறையே காட்டுகிறான். அரசன், வீரர் அகங்குளிருமாறு முகமலர்ந்து இன்னுரை மொழிகிறான். மன்னன் பின்னர் வரும் பிடிகளும் பரிகளும் தம்மேல் வீழ்கின்ற மழைத்துளிகளை உதறுகின்றன. அரசன் தனக்கு அண்மையில் வரும் வீரன் ஒருவன் தோளிலே வலக்கையை வைத்துக்கொண்டு நடக்கிறான். இடத்தோளினின்றும் நழுவி வீழ்கின்ற மேலாடையை இடப்பக்கத்தே யணைத்துக்கொள்கிறான். முத்துமாலைகள் சுற்றிக் கட்டப்பெற்ற வெற்றிக்குடை, மன்னன்மீது விழும் மழைத்துளிகளை மறைக்கின்றது. இங்ஙனம் தன் படைவீரருடைய, வாளால் போழ்ந்த புண்ணைக்கண்டு பரிகரித்தற்கு, நடுயாமத்தே துயில்கொள்ளாளுய் வீரர்தங்கிய பாசறைகளில் சுற்றித்திரிகின்றான்.

> 'விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
> வைக்குந்தன் னாளை யெடுத்து'

என்பதுதான் மறக்குடியிற் பிறந்த பெருவீரனது இயல்பு என்பர் தமிழ்மறையருளிய பேரறிவாளர். ஆதலின் உண்மைவீரர் விழுப்புண் பட்டதற்கு உள்ளந்தளரார்; கொள்ளை மகிழ்ச்சியன்றோ கொள்ளுவர். அவ்விழுப்புண்கள் எல்லாம், தாம் போரில் வெற்றியின் சின்னமாகப் பெற்ற முத்துப்பவளம் முழுவயிரம் மாணிக்கம் பத்தியொளிவீசும் பதக்கம் என்றல்லவோ எண்ணிக்களிப்பர். வீரத் திருமகள் விரும்பி மகிழ்ந்து அளித்த முத்தங்கள் என்றல்லவோ எண்ணி மொய்ம்பு கொள்வர். அவர்கள்

விழுப்புண் கண்டு பரிகரித்தற்கு வேந்தன் செல்லவேண்டுமோ? வேண்டாவே. மேலும், வாணாள்முழுதும் அரசன் அளித்த அறுசுவையுண்டி—மறந்தரு பேருண்டியெல்லாம் அயின்று பயின்ற வீரர், தாம் ஆற்றவேண்டிய செஞ்சோற்றுக்கடனைத்தாமே யாற்றினர். அவர்கள் மனமலர மகிழுரை பகரவேண்டுமா? ஆறுதல் கூறவேண்டுமா? வேண்டாவே. அரசற்கு இச்செயல்கள் வேண்டாவாயினும், அவற்றை வேண்டிச்செய்யும் மாண்டவியல்பிற்றான் மன்னரெல்லாம் துன்னுதற்கரிய பெருவீரம்—வீரர்பால் செலுத்தும் பேரன்பு—தமிழரசின் மாண்பு, தலைசிறந்து விளங்குகின்றது.

செழியன் படைச் செருக்கொடு நின்றானாயினும், உள்ளச்செருக்குடன் தலைநிமிர்ந்து நடந்தானில்லையென்பதை அழகியமுறையில் அறிவுடையார்க்குக் காட்டும் கவிஞர் நக்கீரரது நுண்மாண் நுழைபுலத்தை என்னென்று நுவல்வது! 'வாள்தோட் கோத்த வன்கட்காளையொருவனது சுவல்மிசையமைத்த கையனாய்ப் பையநடந்து செல்கிறான்' என்கிறார். அங்ஙனம் செல்லும் பேரரசனது செயலில்—தனது ஆணைக்குட்பட்ட வீரனை அன்பு கொண்ட நண்பன்போல் கருதித் தோள்மிசை வைத்த வலக்கையுடன் நடக்கும் அரசனது செயலில்—எத்துணைப் பெருமைக்குணம் ஒளிர்கிறது!

அரசன் நடந்துவருங்கால் அவன்மேல் வீழும் மழைத்துளிகளை மறைத்தற்குப் பிடித்த,

'நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்பின்றது.'

அவ்வெண்குடை, வேந்தன்மேல் ஒரு துளியும் விழாவண்ணம் தவ்வென்னும் ஓசையுடன், தாவிவரும் துளிகளையெல்லாம் மறைத்துக்கொண்டு வருகிறது. அங்ஙனம் வர அஃது இயந்திரக் குடையுமன்று, மந்திரக்குடையுமன்று. வீரன் ஒருவன் தாங்கிய குடையாகத்தான் இருக்கவேண்டும். அவ்வீரன் அரசன்பால் கொண்ட அளவற்ற அன்பி

ளுலே மிக்க திறமையுடனும் விரைவுடனும் பணியையாற்றுகிறான். பிறருக்குக் குடை பிடிப்பதென்றாலே அதற்குத் திறமை வேண்டும். அதனினும் அரசற்குக் குடை பிடிக்கவேண்டுமாயின், நன்கு தேர்ச்சியுற்ற திறமையிருந்தால்தான் இயலும்போலும்!

ஆறறிவு படைத்த வீரர்தாம் அரசன்பால் அத்துணையன்பு செலுத்தினரோ என்றால், அறிவிற் குறைந்த விலங்குகளும் அளவு கடந்த அன்பு கொண்டு விளங்கின என்று செழியனது செங்கோன்மையையும், மன்னுயிர் போற்றும் பொன்னனைய மாண்பினையும் புலப்படுத்தும் புலவர்பெருமானது நலங்கிளர் அறிவுத்திறனை என்னென்று போற்றுவது!

"மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பச்"

சென்றன என்று கீரர் கூறுகிறார்.

பிடியும் பரியும் பேரரசனை அந்நள்ளென் யாமத்தும் பிரியாது பின்தொடர்ந்து சென்றன வென்றால், அவ்வரசன் அவைகளிடத்துக் காட்டிய கனிந்த அன்பு அளந்தறியும் தன்மையுடையதன்று என்பதல்லவோ தெரிகின்றது!

இவ்விடத்து நச்சினார்க்கினியர் தரும் உரை இனிமை பயப்பதாகவில்லை. 'மணிபுறத்திட்ட மாத்தாட் பிடியொடு' என்னும் அடியைப், பரிக்குக் கொடுத்த அடைமொழிகளாகவே கருதிப் பொருள் கொள்கின்றார். போர்க்களத்தே களிற்றைப்பற்றிய பேச்சையன்றிப் பிடியைப்பற்றிய பேச்சில்லையென்று அங்ஙனம் பொருளுரைத்தனர் போலும். பொருதற்குக் களிறுகளே சென்றன வாயினும், பிடிகளும் உடன் சென்றன என்று சொல்வதில் விளையும் கேடொன்றுமில்லை. இவ்வடியைப் பரிக்கு அடையாக்குங்கால் நச்சினார்க்கினியர் வலிந்து கொள்ளும் பொருள் பொருத்தமற்றதாகவே இருக்கின்றது. அவ்வடி, பிடியைக் குறிப்பதாகவே கொண்டு பொருள் செய்தால் அப்பொருள் அழகுற அமைவதைக் காணலாம்.

மழைபெய்துகொண்டேயிருத்தலால்தெருவெல்லாம் சேறு பரந்து கிடக்கிறது. அத்தெருவில் அரசன் முன் நடந்து செல்லப், பிடியும் பரியும் பின்தொடர்ந்து வருகின் றன. அவைகளின்மேல் படும் மழைத்துளி வேறு, நிலத்தி னின்றெழும் சேற்றுத்துளி வேறு. இத்துளிகள் தம் உடம்பில் பட்டதும் அவ் யானைகளும் குதிரைகளும் அவை களை உதறுகின்றன. அங்ஙனம் உதறும் துளிகள் எல்லாம் முன்னர் நடந்து செல்லும் மன்னன் செழியன்மேல் படு கின்றன. அதற்காக அவன், அவ்விலங்குகளை வெறுத்து வெருட்டி விரட்டினனா? சிறிதேனும் வெறுப்பு நோக்கா வது அருகில் வரும் வீரரிடம் காட்டினனா? அரசன் சிறிது பார்த்தால் போதுமே; ஆர்த்தெழுந்து அவற்றை ஓட்டிவிடுவரே! ஏன் அங்ஙனம் செய்தானில்லை? மன்னுயிர் மாட்டுத் தலையளி காட்டும் வேட்கையையுடைய வேந்தன் அங்ஙனம் வெறுத்தொதுக்கக் கனவிலும் கருதுவானோ? கருதான்! கருதான்!! என்னே தமிழரசன் காட்டும் தலையளி! கண்கண்ட தெய்வம் அன்றோ காவலன்! தெய்வத்திருமுன்பு திணைவேறுபாடும் உளதோ! பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும் அன்றோ!

> "வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு
> முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்"

மன்னன், வீரரை முகனமர்ந்து நோக்கி இன்னுரை பகர்ந்து செல்கிறான். படைத்தலைவனாகிய முன்னோன் இங்கும் அரசர்க்கு முன்பு முதல்வனாகவே வேலைத்தாங்கி மிடுக்குடன் செல்கின்றான். 'முன்னோன்' என்று, படைத் தலைவனாகிய வீரனைக் கீரர் கூறியதில் எத்துணைக் கருத்துக் கள் பொதிந்து கிடக்கின்றன. அந்த ஒரு சொல்லில் பொதிந்த உறுசுவை நினைக்குந்தோறும் இனிக்கும் இயல் புடையதன்றோ! அவ்வீரன் உள்ளத்திலும், உடல் வடிவி லும், உயரிய வீரத்திலும் முன்னோன்; படைகள் அனைத் திற்கும் முன்னோன்; போர்க்களத்திலும் முன்னின்று போர்புரியும் மொய்ம்புடையோன்; அறிவில்—ஆராய்ச்சி யில்—ஆண்மையில்—அன்பில்—அழகில் அனைத்திலும்

முன்னேனாக ஒளிர்கின்றான்; இங்கும் அரசர்க்கு முன் சென்று முன்னின்று புண்பட்ட வீரரைக் கண்பட்டு விடாது எடுத்து மொழிகிறான். ஏன்? அரசர் கண்திருட்டு, அழகிய உடற்கட்டைக் குலைத்துவிடுமன்றோ!

பலரொடு முரணிய பாசறைத் தொழில்:— 'வேந்தன், பலரொடு முரணிய பாசறைத் தொழில்' என்பதற்குச் சேரன் முதலிய எழுவரோடு மாறுபட்டுப் பொருகின்ற பாசறையிடத்துப் போர்த் தொழில் என்று நவின்று போந்தனர் நச்சினார்க்கினியர். இக்கருத்தை மறுத்துரைத் தாருமுண்டு. நக்கீரர் கருத்து அதுவாயின், எழுவரொடு முரணிய பாசறைத் தொழில் என்றே பகர்ந்திருப்பார்; அவர் கருத்து அஃதன்மையின் 'பலரொடு முரணிய பாசறைத் தொழில்' என்று கூறினர்; மேலும் பாசறைத் தொழில் என்பது போர்த்தொழில் அன்று; போர்த் தொழில் வேறு, பாசறைத் தொழில் வேறு என்பர். அங்ஙனம் மறுத்துரைப்பார் விரித்துரைக்கும் பொருள் யாதென அறிதல் வேண்டுமன்றோ!

பத்துப்பாட்டுள் ஐந்தாவதாக விளங்கும் முல்லைப் பாட்டில் ஆசிரியர் நப்பூதனர் எடுத்துப் பேசுகின்ற தமிழ்ப் பேரரசன் ஒருவனைச் சான்றாக வைத்துக்கொண்டு, தமது விரிவுரையைத் துவங்குகின்றார். நப்பூதனர் முல்லைப் பாட்டிலே காட்டும் ஒப்பரிய தமிழரசனும் தனது பெருந் தேவியைப் பிரிந்து அரும் போர் காரணமாகச் சென்ற வன். அவன் போர்க்களத்தே இராப்பொழுதில் பாசறைக் கண் நெடுநேரம் உறக்கமின்றியிருக்கின்றான்; ஒருகையைப் படுக்கையின்மேல் வைத்து, மற்றொரு கையை முடியொடு சேர்த்தி நெடிது நினைந்திருக்கின்றான்; போர்க்களத்திலே யானையை எறிந்து மடிந்த வீரரை நினைக்கிறான்; அம்பு தைத்த வருத்தத்தால் செவிசாய்த்துப் புல்லுண்ணாமல் நிற்கும் புரவிகளை நினைக்கிறான்; தனது படை நொந்திருக் கும் நிலையில் நாளை எவ்வாறு பொருதும் எனச் சிந்தனை செய்கிறான்.

போர்குறித்து வந்து பாசறைக்கண் தங்கியுள்ள எந்த அரசனுக்கும் இந்தச் சிந்தனை இருந்தே தீரும். நக்கீரர் நெடுநல்வாடையில் பேசும் பேரரசன் உள்ளத்திலும் இத்தகைய எண்ணங்கள் தோன்றித்தான் இருக்கும். அங்ஙனம் தோன்றிய காரணத்தால்தான் விழுப்புண்பட்ட வீரர்க்கு, மேலும் ஊக்கம் அளிக்கும் உயரிய நோக்குடன் நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளானாய் அவர்களைக் காண—அவர்கட்கு முகனமர்ந்து ஆறுதல் கூற, உள்ள வமைதியுடன் உவந்து செல்கின்றான்.

அங்ஙனமிருக்கப், பிறவரசர்கள் ஆற்றாத பெருஞ் செயலை—அவர்கள் செயல்களுக்கெல்லாம் மாறுபட்ட அருஞ்செயலை, நெடுநல்வாடைத் தலைவன் செய்தான் என்பதை அறிவிக்கவே, 'பலரொடு முரணிய பாசறைத் தொழில்' என்று நக்கீரர் நவின்றருளினார் என்பர். முல்லைப் பாட்டில் நப்பூதனார் காட்டும் நல்லரசனும், நெடுநல்வாடையில் நீடு போற்றும் பீடுடைப் பேரரசனும் ஒருவனே—இரண்டற்கும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனே தலைவன் என்று ஆய்ந்து கூறும் பேரறிவாளர் கூற்றுக்கு, இம்மறுப்பாளர் விருப்புடைய கூற்றுவரோ என ஐயுறுகின்றேன்.

தெய்வப் புலவர் நக்கீரரது ஆற்றொழுக்குப் போன்ற அரிய பாட்டை மீண்டும் மீண்டும் வேண்டிப் பயில்வார், அதன் ஓசையின்பத்திலே—தாமே வந்தமையும் எதுகை மோனைச் சுவைகளிலே ஈடுபட்டார்,

> 'சிலரொடு திரிதரும் வேந்தன்
> பலரொடு முரணிய பாசறைத் தொழிலே'

என்ற அடிகளில் அமைந்த சொல்லமைதிகளையும், சுவையமைந்த பாடல் ஒழுக்கையும் பாராட்டுவர். மறுத்துரைப்பார் கருத்துக்கியைய "எழுவரொடு முரணிய போர்த் தொழிலே" என்று நக்கீரர் அடியை அமைத்திருப்பாராயின் அவரை நாவலர் என்றோ, பாவலர் என்றோ தமிழ் உலகம் பாராட்டாது.

ஒருவற்கு மேற்பட்ட இருவரோ, மூவரோ, எழுவரோ எத்துணையராயினும் அவரைப் பலர் என்றே பகர்தல் முறைமையன்றோ! மேலும், அரசன் விழுப்புண் பட்ட வீரரைப் பார்வையிடுதலாகிய பாசறைத் தொழிலும் போருக்குத் தொடர்புடைய தொழில்—போர்த் தொழில் என்றே பேசுதல் பொருத்தமற்ற கருத்தாகுமோ?

செழியன் தோல்வியுற்றவிடத்தும் தனது செழித்த உள்ளப்பாங்கால், அத்தோல்விக்குத் தளராணாய்ப் பாசறைக்கண் அமைதியுடன் உலவுகின்றான் என்று சொல்லும் மறுப்பாளரது கூற்றுக்கு, நக்கீரர் தமது பாட்டில் சிறிதும் இடங்காட்டினரில்லை. நாளும் போர் நிகழ்கின்ற நிலையில், வெற்றி எப்பக்கம்? தோல்வி எப்பக்கம்? என்பது அறுதியிட்டு உறுதி சொல்லமுடியாத நிலையில், 'தோல்வியுற்றான் செழியன்' என்று கருதும் கருத்து, நக்கீரர்தம் பாட்டுக்கு எதிரே தோற்றுவிடும் அன்றோ!

போது:—பூந்தட்டிலே யிட்டுவைத்த பிச்சியரும்பு மணங்கமழ விரிதலைக்கண்டு, பொழுதறிந்தனர் பழந் தமிழர்.

> 'மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
> செவ்வியரும்பின் பைங்காற் பித்திகத்து
> அவ்விதழ் அவிழ்பதங் கமழப் பொழுதறிந்து'

என்பது நெடுநல்வாடை.

மலரும் பருவத்திலிருக்கும் பேரரும்பு 'போது' என்று தமிழிற் புகலப்படும். காட்டில்வாழ் முனிவரும் பிறரும் சிற்சில போதுகள் மலர்தலாற் பொழுதையறிந்து வந்தனர். 'நள்ளிருள் நாறி' யென்றொரு மலர் உளது. அது நடுவியாமத்திற்றான் மலரும். கதிரவன் மறைந்திருப்பினும் அவை மலர்தலாலும் குவிதலாலும் போதினைப் புலப்படுத்தலின், போதெனப் பெயர்பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் சென்றமர்ந்து இன்னிசை பாட இதழ் விரிந்து மலரும். "முல்லை, வரிவண்டூதே வாய் நெகிழ்ந்தனவே!" என்பது குறுந்தொகை.

இல்லுறை தெய்வம் :—அந்திப்பொழுதில் அணிவிளக் கேற்றி அரிவையர் இல்லுறை தெய்வத்தை நெல்லும் மல ரும் தூவி வழிபட்டனர்.

> ‘ இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
> நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது ’

என்பது நெடுநல்வாடை.

பழந்தமிழ் நாட்டுப் பாவையரின் இவ்வியல்பைச் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ் நூலும் வலியுறுத்து கின்றது.

> ‘ அகனகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
> நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த
> மாலை மணிவிளக்கங் காட்டி ’

என்பது சிலப்பதிகாரம்.

இல்லுறை தெய்வமாவாள் திருமகள். பொருளில் லார்க்கு இவ்வுலக வின்பமில்லையாதலினாலே, இல்லறத்தி லிருப்பார்க்குத் திருமகள் அருள் பெரிதும் வேண்டற் பாலது. ஆதலின், மகளிர் விளக்கேற்றியதும் அவ்விளக் குத் திருவை—தீபலக்குமியை நெல்லும்மலரும் தூவி வழி படுதலை, இன்றும் காண்கிறோம். பெண்கள், தமக்குத் தனியழகுதரும் திருமங்கலநாண் நிலைத்திருத்தற்பொருட் டும், தாம் வாழும் இல்லம் எல்லாவகையிலும் விளக்கமுறு தற்பொருட்டும், நாடு செழித்தற்பொருட்டும் அப்பீடு டைய விளக்குத்திருவை நாளும் வழக்கமாகப் பேணி வழி படுதல் இயல்பு.

மனைவகுக்கும் மங்கல வேலை :—மன்னர்க்கொப்ப மனை வகுக்கத் தொடங்கும் காலம் சித்திரைத் திங்களின் மத்தியில் நின்ற பத்துநாட்களில் யாதானும் ஓர் நாளில் நண்பகல் வேளை யென்பர் நச்சினார்க்கினியர். இதனை நக்கீரர், தம் பாடலில்,

> “ விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
> இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
> ஒருதிறஞ் சாரா அரைநாள் அமயத்து

நூலறி புலவர் நுண்ணிதில் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து ''

என்கிறார்.

கதிரவன் தனக்குரிய ஆற்றல் முழுதும் காட்டும் ஆட்சிக்காலம் சித்திரைத்திங்கள் ஆகுமன்றோ? அத்தகைய சித்திரையில் கதிரவன் வானின் உச்சியில் ஒளிரும் வேளை—நிலத்தில் நாட்டிய கோலின் நிழல் நிலத்துச் சிறிதும் வீழாத வேளை—அத்தகைய நன்பகல் வேளையில் தான் மனைக்குக் கால்கோள் செய்தல் சிறப்புடைத்தென்பர் சோதிடவல்லார். கதிரவன் உதிக்கும் வேளையும் நண்பகல் வேளையும் நல்வேளைகள் என்றே சோதிடவல்லார் சொல்லுவர். 'உதயமும் மதியமும் விதியையும் வெல்லும்' என்பது நம்மவர் பழமொழி. மதியம் என்பது நண்பகலைக் குறிக்கும்.

யவனர்:—சங்கநூல்களில் பலவிடத்தும் யவனரைப் பற்றிப் பரக்கக் காணலாம். யவனர் செய்த பாவை விளக்குகள் மன்னன் மாளிகையை அணிசெய்தன என்கிறார் நக்கீரர்.

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை' யென்பது நெடுநல்வாடை.

யவனர் என்ற சொல்லுக்குச் சோனகர், துருக்கர், மிலேச்சர் என்று பொருள்கொண்டுள்ளனர். கிரேக்கம், உரோம், துருக்கம் முதலிய நாடுகளினின்று வணிகத்தின் பொருட்டும் பிறதொழில் காரணமாகவும் இந்தியாவுக்கு வந்து போனவர்களையெல்லாம் யவனர் என்ற ஒரே சொல்லால் பழந்தமிழர் வழங்கினர் எனத் தெரிகிறது.

யவனர்கள் மிளகின்பொருட்டே நம் நாட்டுடன் வணிகம் நடத்திவந்தனர் என்று அகநானூற்றுப் பாடல் ஒன்றால் அறிகின்றோம்.

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்'

என்பது அகநானூறு.

மகளிர் தம் கூந்தலுக்கு மணப்புகையூட்டப் பயன் பட்டுவந்த 'வெள்ளயிர்' என்ற பொருள், யவனர் கொண்டு வந்ததேயாம். அது 'துருக்கம்' என்ற பெயராலும் வழங் கும். அதனுல் துருக்கநாட்டு யவனர் இதனைக் கொணர்ந் திருத்தல்வேண்டும் எனக் கருதுகின்றனர்.

கோயில்:—கோயில் என்ற சொல் பழங்காலந் தொட்டு இறைவன் உறையும் இடத்தையும், மன்னன் மாளிகையையும் குறிக்கும் பொதுச்சொல்லாகவே வழங்கி வருகிறது. அதுபோலவே இறைவன் என்ற சொல்லும், கடவுளையும் காத்தல்வல்ல மன்னனையும் குறிக்கும் பொதுச் சொல்லாகவே இருந்துவருகிறது. இங்ஙனம் வழங்கும் இறைவன், கோயில் என்ற சொற்களைச் சற்று உற்று நோக்கினல், மன்னனை மக்கள் எந்நிலையில் மதித்தனர்? மன்னன் எந்நிலையில் மாண்புறச் செங்கோல் செலுத்தி னன்? என்பன போன்ற வினக்களுக்கு அழகிய விடை கள் கிடைக்கும்.

'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண் டேனே யென்னும்' என்ற நம்மாழ்வாரின் ஆழ்ந்தவுள் ளத்தை என்னென்பது! அரசனன்றோ உலகத்துயிர்!

'நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்'

என்ற புலவர் மோசிகீரனரின் பொன்மொழிகள் பொய்த்து விடுமா?

நெடுநல்வாடைப் பாட்டிலே நெடுஞ்செழியன் மாளிகை 'கோயில்' என்ற சொல்லால் குறிக்கப்படு கிறது. அது 'நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்'— செறிந்த மலையின் ஆரவாரம் போல ஆரவாரிக்கும் கோயில் என்கிறர். மன்னன் மாளிகையை மலைக்கு ஒப்பிடுகின்றார் புலவர். மலைக்கண் மழை மெத்தென முழங்கும்; அருவி

யின் ஓசை செறிந்தொலிக்கும்; மயில்கள் அகவும் ஒலி தகவுற எழும்; இச்செயல்கள் எல்லாம் கூதிர்க்காலத்தில் நிகழ்வன. அரசனது பெருமனைக் கண்ணும் மூவகை முழக்கங்கள் மேவி எழுகின்றன. மலைக்கண் மழை மெத்தென முழங்கினாற் போன்று குதிரைகள் புல்லைக் குதட்டும் குரல் மாளிகையில் எழுகின்றது. மாளிகையின் மேன் மாடத்து நிலாமுற்றத்தில் நிறைந்த மழைநீர், குழாய் வழியாக மலைஅருவியைப் போன்று விழுகின்றது. மன்னன் மனையில் வளர்க்கப்பெறும் மயில்கள் வானில் கார் மேகம் கண்டு களித்து அகவுகின்றன.

அருவியும் மயிலும், மலைக்கு உள்ளனவாதலாலும், புரவியின் புலம்புவிடுகுரல், மலைக்கண் மழை மெத்தென முழங்கினாற் போன்றிருத்தலாலும், மலையொடு மன்னன் மாளிகையை ஒப்புமைப்படுத்தினார்.

மலையில் ஓர்பால் ஒலி எழுமாயின் அதற்கு எதிரொலி பெழுதல்இயல்பு. மலைபோன்ற பெரு மாளிகையினிடத்தும் எதிரொலி தோன்றும். எதிரொலி எழுகின்ற தன்மையிலும் ஒப்புமையுடையன மலையும் மாளிகையும். இங்ஙனம் காட்டிடையமைந்த மலைக்கும் நாட்டிடையமைந்த நன் மாளிகைக்கும் ஒப்புமை கண்டு அழகுற நவின்ற நக்கீரர் உவமைத்திறன் ஓர்ந்து இன்புறற்பாலதாகும்.

புனையா ஓவியம்: இம் மாபெரும் புலவர் காட்டும் மற்றோர் உவமைத் திறனைக் காணலாம். போர் கருதிப் பிரிந்து சென்ற பேரரசனை நினைந்து வருந்தும் பெருந் தேவியின் நிலையை முதற்கண் நோக்குவோம்.

அரசனொடு கூடியிருந்த நாளில் அணிகள் பலவற்றை யணிந்து அழகுற விளங்கினாள். அப்பேரரசியின் மார்பிடத்தே சிரணிகள் பல சிறந்து திகழ்ந்தன; கூந்தல் எண்ணெய் பூசி எழிலுற ஒப்பனை செய்யப்பெற்றிருந்தது; காதுகள் குழையணிந்து கவினுற்று விளங்கின; முன் கையிலே பொன்வளைகள் பொலிந்து பொற்புச் செய்தன; விரல்களும் அணிகள் பலவுடன் விளங்கின; பூத்தொழி

லமைந்த பொன்னுடையுடுத்து மின்னனையாளாய் மிளிர்ந்தாள்; புனைவுற்ற தனியோவியம்போல் பொலிந்தாள்.

இத்தகைய பேரெழில் படைத்த பெண்ணரசி, மன்னனைப் பிரிந்த இந்நாளில் புனையா ஓவியம் போல் உள்ளாள் என்கிறார் நக்கீரர். பிரிவாற்றாமையால் பெண்களின் எத்துணைப் பேரழகும் குன்றிவிடுமன்றோ! செயற்கையழகு தரும் செல்வச் சிரணிகளும் வெறுத்தொதுக்கப் பெறுமாயின், இயற்கை எழில் மறைந்த உடம்பில் என்ன அழகைக் காணவியலும்! காதலரைப் பிரிவுற்ற நிலையில் காரிகையர் அளவற்ற அல்லலையெய்துவர். 'பிரிவுத் துன்பம் பெருந்துன்பம்' என்றே பேசுகிறார் பெருநாவலர்.

" இன்னாது இனனில்லூர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு "

என்பது அப் பெருநாவலர் அருளிய திருமொழி.

அரசியின் ஆரந்தாங்கிய அலர்முலையாகத்து மங்கல நாண் ஒன்று மட்டுமே மங்காது ஒளிர்கின்றது. பிறவணிகள் எல்லாம் வெறுத்தொதுக்கப்பட்டன.

" பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி "

என்கிறார் நக்கீரர்.

'துணை துறந்து' என்பதற்கு, 'அரசன் பிரிகையினாலே' என்று பொருள் கொள்கின்றார் நச்சினார்க்கினியர். 'துணை துறந்து' என்ற தொடரை அங்ஙனம் பொருள் கொள்ளாது, சிங்க நோக்காகவோ, அன்றி நடுநிலை விளக்கணியாகவோ வைத்துப் பொருள் கொண்டால் அப்பொருள் நயமுற வமைதலைக் காணலாம். அது நக்கீரரது நாவன்மையைக் காட்டவல்லதாகும்.

அரசி, துணைவனொடு கூடியிருந்த நாளில் தனிமையின்றிக் கூடிக் கூடியே உடலில் ஒளிர்ந்த அணிகளும் பிறவும், தமக்கு இடனாக வமைந்த தலைவி தனிமையுற்றதும் தாமும் தனிமையுற்றன; அவளது துன்பத்தில் தாமும் பங்கு கொண்டன என்று சொல்லத்தக்க முறை

யில் பாடலையமைக்கும் பாவாணரின் மாறுபாடு திறனை என்னென்பது!

மாதேவியின் மார்பில் திகழ்ந்த மங்கல நாண், தனக்குத் துணையாகக் கொண்டிருந்த அணிகலன்களையெல்லாம் விட்டுப் பிரிந்தது; தானொன்று மட்டுமே தனிநின்று நனி வருந்திற்று. கூடிக்கிடந்த கூந்தன்மயிரெல்லாம் கைசெய்யாமல் தனிமையுற்று வாடிக்கிடந்தன. காதுகள், தமக்குத் துணைநின்று அணிசெய்த குழையை இழந்து வறிதே வீழ்ந்துள்ளன. பொன்வளைகள் பல விளங்கிய முன் கையிலே சங்குவளை ஒன்றே கிடக்கின்றது. பலவாய்த் திகழ்ந்த விரலணிகளும் கழற்றப்பெற்று முடக்கு மோதிரம் ஒன்றே கிடக்கின்றது. மாசேறிய நூற்புடவையே அவள் உடலை மறைத்து நிற்கின்றது. கையிலே காப்பு நாண் ஒன்றைக் கட்டியிருந்தாள். பிரிந்து சென்ற தலைவன் விரைந்து வந்து தன்னைக் கூடுதல் வேண்டும் என்ற விழைவால் நோன்பு நோற்கும் அரசி, கையில் காப்புநாண் கட்டியுள்ளாள். அந்நாண், அவளது உயிரினும் சிறந்த நாணையும், அதனினும் சிறந்த கற்பையும் காக்கும் கடியுடைநாண் போலும்!

இங்ஙனம் விளங்கும் அரசி, புனையா ஓவியத்தைப் போல் இருக்கிறாள். வண்ணங்களைக்கொண் டெழுதாத, வடிவை மட்டும் கோட்டின சித்திரத்தைப் போன்று விளங்குகிறாள். புனையா ஓவியமொப்ப விளங்கிய புரவலன் மனைவி, கட்டில் விதானத்தில் புனைந்த ஓவியங்கண்டு உள்ளம் இனைந்தாள்; நெட்டுயிர்ப்புக் கொண்டாள் என்று கூறும் கீரரின் சீரிய கவித்திறனை என்னென்றியம்புவது!

கல்வியிற் பெரியராய கம்பரும் தமது இராமகாவியத்தில், காப்பியத் தலைவியாகிய சீதை, தன் காதலனைப் பிரிந்து இலங்கைமாநகர் அசோகவனத்தில் சோகமுற்றுக் கலங்கி நிற்கின்ற நிலையை ஓர் ஓவியத்திற்கு ஒப்பிடுகிறார்.

நஞ்சனைய இலங்கைநாதன், சீதையை வஞ்சனையாற் கவர்ந்து அசோகவனத்திலே சிறைவைத்தான். சோக

மறுக்கும் வனத்தே சோகமுற்று வாடும் சீதை, திரிசடை யருகிருக்க ஒருசடையளாய் இருந்தாள். தன்னை இலங்கை மன்னன் சிறை கவர்ந்த அந்நாளில் உடுத்த ஆடை யொன்றையன்றிப் பிறிதொன்றைக் கண்டாளில்லை; நீராடி னாளில்லை. உடலும் உடையும் அழுக்குப்படிந்துள்ளன. புலிக்குழாத்தின் நடுவே யகப்பட்ட புல்வாய் (மான்) போன்று அரக்கியர் நடுவே சிதை சிந்தை நொந்து வாடு கின்றாள். புனையா ஓவியம் போன்றுதான் விளங்குகின்றாள்.

அச் சீதைக்குக் கணவனைப் பிரிந்த கடுந்துயரத் தோடு, இலங்கை மன்னன் சிறையிலகப்பட்ட துயரமும் சேர்ந்து வாட்டுகின்றது. இரு பெருந் துயரமும் ஒருங்கே வாட்டுதலால் பெரிதும் துன்புற்ற சீதை, புனையா ஓவியத்தையொப்ப விளங்கினாள் என்று கூறுதல் பொருந் தாது என்றெண்ணிய புலவர், "அவ்வோவியம் புகையுண் டதே யொக்கின்ற வுருவாள்" என்று சொல்லிப் போந்த னர். கணவனைப் பிரிந்து வருந்தும் ஒரு துயரையே சீதை யுற்றிருப்பாளாயின் கீரரைப்போன்று 'புனையா ஓவியம் கடுப்ப' விளங்கினாள் என்று சொல்லியிருப்பார். அங்ஙன மன்றி, அரக்கர் நடுவே வாழ்ந்த, பொறுக்கமுடியாத சிறைத்துயரும் அச் செல்வியைச் சேர்ந்ததாதலின், அவள் புகையுண்ட புனையாவோவியமாயினாள் என்று கூறும் புலவரது புலமை நயம் புகழ்ந்து கொண்டாடத் தக்க தாகும்.

> 'ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
> தாவி யன்னமென் புனவிடைத் தோய்கிலாமெய்யாள்
> தேவு தென்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
> ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்'

என்பது அக் கவியரசரின் அழகிய கவியாகும்.

குறியவும் நெடியவும்:—பிரிவாற்றாது வருந்தும் பெருந் தேவிக்கு அருந்துயிலுண்டாகுமோ வென்றெண்ணி மெல் லியல்மகளிர் அவளது நல்லடி வருடினர். நரை கலந்த நறுமென் கூந்தற் செவிலியர் குறியவும் நெடியவுமாய உரைபல பகர்ந்தனர். தலைவனைப் பிரிந்து நலியும் நங்கை யர்க்குச் செவிலியர், பொருளொடுபுணராப் பொய்ம்

மொழியும் மெய்ம்மொழியும் பகர்தல் இயல்பு. 'ஒன்றே மற்றுஞ் செவிலிக்குரித்தே' என்பது இலக்கணம்.

பொருளொடு புணராப் பொய்ம்மொழியைக் குறிய வென்றும், மெய்ம்மொழியை நெடியவென்றும் நினைந் தாய்ந்து கூறும் கீரர்தம் கிளர்ந்த அறிவை என்னென்பது! பிரிவால் வருந்துவாட்குப் பொய்ம்மொழிகள் பெரிதும் இன்பம் விளைப்பனவாயினும், இழிந்தன என்றும் இழிந்த னவே யென்பார், அப்பொய்ம்மொழிகளைக் குறியவென் றும், நீடிய புகழையும் நிலைத்த பேரின்பத்தையும் தரும் பெருமைமிக்க மெய்ம்மொழிகளை நெடியவென்றும் கூறி யது மிகவும் சிறியதேயாகும்.

ஊறு வறுமுலை :—கட்டிலின்மேல் விளங்கும் விதானத் தோடிணைத்து நிறுத்திய நான்கு கால்களிலும் குடங்களைக் கடைந்து சேர்த்துள்ளனர். அக்காலிடை யமைத்த குடத்தை 'ஊறு வறுமுலை' யென்கிறார் நக்கீரர். பாலூறுத வெறுமுலை போன்று விளங்குவனபோலும் அக்குடங்கள்.

பள்ளியங்கட்டிலின் கால்களிற் கடைந்துள்ள குடங் களைத் 'தூங்கியல் மகளிர் வீங்குமுலை'க்கு ஒப்பிடுகின்றார். பால்கட்டி வீங்கின முலையையொப்பப் பக்கமுருண்டு திரண்ட குடம் என்கிறார். இக்குடங்களைக் காட்டினும் திரட்சியிற் குறைந்தனபோலும் மேற்கட்டியிலிணைத்த கால்களின் குடங்கள். அதனாற்றான் அக்கால்களிற் குடங் களை, 'ஊறு வறுமுலை' யென்கிறார். குடம் என்ற சொல் லையே சொல்லாமல் 'ஊறு வறுமுலை கொளீஇய கால் திருத்தி' என்கிறார். ஆகவே, 'ஊறு வறுமுலை' யென்ற தொடர், குறிப்பாகக் கால்களிற் கடைந்த குடத்தைக் குறித்தது.

'பாயா வேங்கை' என்பது வேங்கை மரத்தையும், 'பறவாக் கொக்கு' என்பது மாமரத்தையும் குறித்தமை போன்று 'ஊறு வறுமுலை' யென்பது குறிப்பால் பொரு ளுணர்த்தும் மொழியாக நின்று, குடத்தைக் குறித்தது. மாணிக்கவாசகரும் திருக்கோவையாரில், இடமணித்தென்

றல் என்ற துறைக்கண் அமைத்த பாட்டில் 'வருங்குன்றம்' என்று யானையைக் குறிப்பிடுகின்றார்.

' வருங்குன்றம் ஒன்றுரித் தோன் றில்லை யம்பல வன்மலயத்(து)
இருங்குன்ற வாணர் இளங்கொடியே ! இட றெய்தல்எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்களபத் தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்கும் கனங்குழையே!'

என்பது அப்பாட்டு.

இப்பாடல், பாட்டுக்கே எடுத்துக்காட்டாக அறிஞர் காட்டும் அழகிய பாட்டாகும். கல்லைப் பிசைந்து கனி யாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்துத் தொல்லுலகிற்கு வழங்கியருளிய நல்லிசைப்புலமைப் பேர ருள் வள்ளல் வாதவூரரின், மனநின்றுருக்கும் மதுரவாசக மும் மாண்புறு திருக்கோவையும் தமிழர்க்கு வீட்டுநெறி காட்டும் வியத்தகு பெருநூல்கள் ஆகும்.

பாட்டின் இயல்பெல்லாம் இனிதமையப்பெற்ற மணி மொழியாரின் அணிதரு கோவைப்பாட்டைப்போன்றே, தெய்வக்கவிஞராகிய நக்கீரரின் நெடுநல்வாடைப் பாட்டும் எல்லா வியல்புகளும் இனிதின் அமையப்பெற்றதாகும்.

முடிபு :—நக்கீரர், இப்பாட்டை முடிக்குந் திறன் வியந்து பாராட்டுதற்குரியதாகும். "வேந்தன்—பலரொடு முரணிய பாசறைத்தொழில், புலம்பொடு வதியும் நலங் கிளர் அரிவைக்கு, இன்னா அரும்படர் தீர விறல்தந்து, இன்னே முடிகதில் லம்ம" என்று பாட்டை முடிக்கின்றார்.

அரசன் போரில் வென்று வெற்றி முழக்கொடு, தன் னகர்ப்புகுந்து இன்னுயிர்த் தலைவிக்கு இன்பம் அளித் தான் என்று, தம் வாயால் சொல்லாமலேயே, பாட்டைப் படிப்பார், தாமே உய்த்துணர்ந்து கொள்ளுமாறு, வெற்றி பெற்றுத் திரும்புதற்குரிய விரும்புறு நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ்ந்தன என்பதைமட்டும் கூறி, இறுதி வெற்றியை உறுதிப்படுத்திய உயர்தமிழ்ப் புலவரின் பேரறிவை என் னென்பது !

பத்துப்பாட்டுள் முத்துப்பாட்டாக—முதற்பாட்டா கத்திகழும் திருமுருகாற்றுப்படையும், தமிழ்ப் பேரரச

னது இனிய புகழ்வாடையைப் பரப்பும் நெடுநல்வாடையும் தெய்வப்புலவர் நக்கீரரது நல்லிசைப்புலமையை—எல்லை யற்ற பெருமைவாய்ந்த தெய்வக் கவித்திறனை, நன்கு காட்டி மிளிர்கின்றன. இப்பெருந் தமிழ்ப்புலவர் அரு ளிய பாடல்கள் பிற எத்தனையோ உளவாயினும், ஆற் றுப்படையும் நெடுநல்வாடையுமே அவரது பேராற்றலை நிலவுலகிற்குக் காட்டி நிற்கின்றன. இவ்விரண்டு பாட்டுக் களே, இவர் கருவில் திருவுடைய தெய்வக்கவிஞரெனக் கொண்டாடக் காரணமாயின எனக்கூறினால் அது மிகை யாகாது. தமிழ்ப் பெருமக்கள், தமிழ்ப் பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரைத் திருநகரில் இத்தெய்வக் கவிஞர்க் குத் திருக்கோயில் எடுத்து வழிபட்டனர், வழிபடுகின்ற னர் என்றால், இவரது தெய்வததன்மைவாய்ந்த நுண்ணறி வுத்திறனை என்னென்று புகழ்வது! நக்கீரர் வாழ்க! அவரது புலமைக் கருவூலங்கள் என்றும் பொன்றாது வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துவோம். அவரது திரு வடிகட்கு முடி தாழ்த்துவோம்!

மதுரை மேலைமாசித்தெருவில் இன்றும் நம் இன் றமிழ்த் தெய்வப்புலவர் நக்கீரரது திருக்கோயில் நின்று நிலவுகின்றது. அதனைச் சங்கத்தார் கோயில் என்று சாற்றுகின்றனர்.

நக்கீரர் என்னும் பெயர்தாங்கிய நற்றமிழ்ப்புலவர் இருவர் விளங்கினர் என்பர் இற்றைநாள் ஆராய்ச்சியாளர். சங்க நூல்களெனச் சாற்றப்படும் பழந்தமிழ் நூல்களில் உள்ள பாடல்களைப்பாடிய நக்கீரர், மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனாரே; பிற்காலத்தில் விளங்கிய நக்கீரர், நக்கீர தேவநாயனார் என வழங்கப்பெற்றனர் என்பர். திருமுரு காற்றுப்படை பாடிய நக்கீரரே, 'கைலைபாதி காளத்திபாதி யந்தாதி' பாடிக், கைலையீசனைக் காளத்தியில் கண்டு வணங்கிய பேற்றால், 'நாயனார்' என்று பெருமையாகப் பேசப்பெற்றார் என்றும் சிலர் கூறுவர்.

தமிழ் வெல்க!

அ. குறிஞ்சிப்பாட்டு

(வித்துவான், க. வெள்ளைவாரணன்)

தமிழின் புலமையூற்றாய் விளங்குவன பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய பழைய செய்யுட்களாம். இவற்றைச் சங்க இலக்கியம் என இக்காலத்தார் வழங்குவர். திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை யீறாகவுள்ள பத்துப்பாடல்களையும் பத்துப்பாட்டு என்ற பெயரால் பழைய உரையாசிரியர்கள் வழங்கியுள்ளார்கள். இயற்கையின் சிறப்புணர்த்திய இவ்விலக்கியங்களைக் கற்றுணர்ந்த பேரறிஞர்கள் இவற்றின் சுவைநலங்களையே யிடைவிடாது எண்ணி மகிழ்வதல்லது உள்ள வியல்புக்கு ஒவ்வாத பிறர் கற்பனைகளை ஒருசிறிதும் விரும்பமாட்டார்கள். ஆங்கில மொழியிலுள்ள பேரிலக்கியங்களின் சுவைநலங்காணும் பெரும் புலமையுடையவரும் தத்துவநூற் பேராசிரியரும் ஆகிய மனோன்மணீய நூலாசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் சங்க இலக்கியங்களின் மேதகவினை நம்மனோர்க்கு அறிவுறுத்து முகமாகப் "பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ, எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே" எனத் தமிழ்த் தெய்வத்தை மனமுருகிப் பாராட்டுகின்றார்கள். இங்ஙனம் மக்களால் மதிக்கத் தகும் பொருளிலக்கண வரம்புகடவாது அமைந்த பத்துப்பாட்டுள் எட்டாவதாக அமைந்தது குறிஞ்சிப்பாட்டாகும். இக் குறிஞ்சிப்பாட்டினைப் பொருளாகக்கொண்டு நிகழ்வதே இச்சிற்றுரையாம். இக் குறிஞ்சிப்பாட்டு பாடப்பெற்ற செவ்வியினை யுணர்ந்துகொள்ளுதல் இதன் பொருளுணர்ச்சிக்குப் பெரிதும் துணைசெய்வதாகும்.

வடநாட்டுக் குறுநில மன்னனொருவன் தென்னாட்டிற்கு வந்து தமிழ்வேந்தருடன் தொடர்புகொண்டு பழகினான். அவன் பெயர் பிரகத்தன் என்பதாகும். இவன் பன்னாட்களாகத் தமிழ்வேந்தர் அவையிற் பழகி இத் தண்டமிழ்நாட்டுப் பெருஞ்செல்வர்களுள் ஒருவனாகித்

தமிழ்வாழ்வு வாழ்ந்தான். தமிழ் மக்களுடைய கல்வி, வீரம், புகழ், கொடை முதலிய பெருமிதப் பண்பாடுகளை நன்குணர்ந்து இவற்றிற்கெல்லாம் நிலைக்களமாகிய தமிழ் மொழியையும் கற்றுணர விரும்பினான். தமிழிலுள்ள அறநூல்களையும் இயல்நூல்களையும் ஓரளவு பயின்று புலமைபெற்றான். எழுத்தும் சொல்லும் பயின்று தெளிந்தான். பெரிதும் முயன்று கற்றற்குரிய ஆரியமொழியிலுள்ள எழுத்துஞ் சொல்லுமாகிய இலக்கணங்களை முன்னரே கற்றுணர்ந்த இம்மன்னன், மக்களது மொழிநடை வரம்பினைச் சிக்கறுத்துணர்த்திய தமிழிலுள்ள எழுத்திலக்கணத்தினையும் சொல்லிலக்கணத்தினையும் மிக எளிதில் உணர்ந்துகொண்டான். எழுத்தும் சொல்லுமாகிய இவ்விருவகை வரம்புகளையுங் கருவியாகக்கொண்டு மக்கள் உணர்ந்துகொள்ளுதற்குரிய பொருள்நெறி மரபினை விளக்கும் பொருளிலக்கணம் தமிழிலன்றி வேறு எம்மொழியிலுங் காணப்படாத அருமையுடையதாகத் தெரிந்துகொண்டான். பிறந்ததுமுதல் தமிழ்வாழ்வு வாழாது இடைக்காலத்தே அதனை விரும்பிய இவ்வேந்தனுக்கு இயல்நூல் வரம்பிலே நின்று தமிழர் வாழ்வின் பொருள்மரபினைப் புலவர் சிலர் முயன்று தெரிவித்தனர். எனினும் இலக்கியத்தினையுணராத இவனுள்ளத்தில் அவ்விலக்கணங்கள் நன்கு பதியாதொழிந்தன. "எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளுணர்ச்சியின் பொருட்டன்றே? அப்பொருள் மரபினை யுணர்ந்துகொள்ளேனாயின் இவை பெற்றும் பெற்றிலேன்" என ஆரிய அரசன் பிரகத்தன் பெரிதும் கவல்வானாயினன். கவன்ற உள்ளத்தினனாகிய அம்மன்னன் கபிலர் என்னும் புலவர்பெருமானது நுண்ணறிவின் திறனையும் எவ்வகை நுண்பொருள்களையும் கேட்டோர் உளங்கொள விரித்துரைக்கும் அவர்தம் புலமை மாண்பினையும் அறிந்தோர் சொல்லக் கேள்வியுற்றான். அவரைக் கண்டு வணங்கி அறியாதன அறிந்து மகிழ வேண்டும் என எண்ணினான். ஆரா விருப்பத்துடன் அப்புலவர்பெருமானை யடைந்து வழிபட்டுத் தனது கருத்தினைத் தெரிவித்துக் குறையிரந்தான். அவனது குறை

யினையுணர்ந்தார் கபிலர். "என்னே பாவம்! இம் மன்னற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் தமிழருமை யுணரும் ஞானத்தின்பாற்பட்டது. ஆதலால் யாம் அதனைத் தீர்த்து ஒண்டீந்தமிழின் பொருட்டுறையினை இவனுக்கு அறிவுறுத்தும் கடமையுடையேம்" எனத் தம் உள்ளத்து எண்ணினர். இங்ஙனம் பொய்யாவாய்மை யந்தணராகிய கபிலரது உள்ளத்திற்றோன்றிய அன்பின் வழிப்பட்ட புலமையுணர்வே இன்ப அன்பின் இயல்பாகிய பொருள் மரபினை யினிதுணர்த்தும் குறிஞ்சிப்பாட்டாக வெளிப் படுவதாயிற்று.

அகவொழுக்கமாகிய இல்வாழ்வினையும் அதற்கு இன்றியமையாத அரணாகிய புறவாழ்வினையும் பொருள் என வழங்குதல் தமிழ் மரபாகும். இப்பொருளியல்பினைத் தான் பிரகத்தன் கபிலரிடம் அறிய விரும்பினன். அவனது விருப்பத்தையுணர்ந்த கபிலர் அவனுக்குப் பொருளிலக்கணத்தை முதலில் கற்பிக்கத் தொடங்கினரல்லர். இலக்கிய வுணர்ச்சியில்லார்க்கு இலக்கண வரம்பினையறிவுறுத்த முயலுதல் கற்கும் மாணவரை அச்சுறுத்துவதாகும் என்பது அவர் கருத்து. தாம் பிரகத்தனுக்கு உணர்த்தக் கருதிய அகப்பொருள் மரபினை யினிது விளக்கும் நாடகக் காட்சியாக உலகியலில் நிகழும் ஓர் அன்பு நிகழ்ச்சியைப் படைத்துக்கொண்டு அதனை இனிய செய்யுளுருவில் புலனெறிவழக்கஞ் செய்துகாட்டினல் இம்மன்னனது உள்ளம் அச்செய்யுளின் பொருளமைதியைப் பற்றுக் கோடாகக்கொண்டு 'தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழ்' மரபினை அறிந்து மகிழமுடியும் என எண்ணினர். அவ்வெண்ணத்தின்வழி யியற்றப்பெற்றதே இக் குறிஞ்சிப் பாட்டாகும். இக் குறிஞ்சிப்பாட்டின் தோற்றத்திற்கு இதுவே காரணம் என்பது, "ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு" எனவரும் முன்னோர் உரைக் குறிப்பால் நன்கு துணியப்படும்.

பிரகத்த மன்னனுக்கு இக் குறிஞ்சிப்பாட்டினல் கபிலர் அறிவுறுத்திய தமிழ் என்பது எழுத்தும் சொல்

னும் ஆகிய மொழிப்பயிற்சியைக் குறித்ததன்றாம். தமிழின் எழுத்தும் சொல்லும் போதிய அளவு பயின்ற திறனுடையார்க்கல்லது இக் குறிஞ்சிப்பாட்டின் பொருள் இனிது விளங்காது. ஆகவே, இப்பாட்டினைக் கேட்டு மகிழ்தற்கு இயைபுடையவனாகிய பிரகத்த மன்னன் தமிழிற் போதிய பயிற்சிபெற்ற பின்னர்த் தமிழ்மொழியின் சிறப்பியல்பினை அறிந்துகொள்ள விரும்பியவனாதல் வேண்டும். தமிழ்நூற் பயிற்சியும் தமிழிற்கேயுரிய சிறப்புடைப் பொருள்நலங்களை யறிந்து மகிழ்தலிற் பேரார்வமும் ஒருங்குடையார்க்கே இக்குறிஞ்சிப்பாட்டின் சுவை நலம் விளங்கித்தோன்றுவதாம்.

இனி, ஆரியஅரசன் பிரகத்தன் என்பான் தமிழ் நாட்டிற்போந்து சிறிது தமிழ் பயின்ற துணையானே தமிழின் பெருமையில் ஐயுறவு கொண்டிருந்தான் எனவும் அதனையறிந்த நல்லிசைப் புலவராகிய கபிலர் அவனுக்குத் தமிழின் ஒப்புயர்வில்லா மாட்சியைத் தெரிவிக்க எண்ணி இக்குறிஞ்சிப் பாட்டினை இயற்றிக் கற்பித்தாரெனவும் இப் பாட்டின் தோற்றத்திற்குக் காரணங் கற்பித்தலும் உண்டு. இக்கருத்து பொருத்தமுடையதன்றாம். தமிழிற் போதிய பயிற்சியும் தமிழ்ப்பாடலின் சுவைநலங் கண்டு மகிழ்தலில் ஈடுபாடும் உடையவர்களே இப்பெருங்குறிஞ்சியின் தேனினுமினிய சுவைநலத்தில் திளைத்து மகிழவல்லவர். ஆரியம் தமிழ் என்னும் வேற்றுமையாற் பிறந்த இகலின்றி நண்ணிய அறிவுடன் செய்யுட் பொருள்தேர்ந்து மகிழ வெண்ணும் அமைதியும் ஆர்வமும் உடையார்க்கே இப் பாட்டின் பொருள்நலங்கள் சிறந்து தோன்றித் தமிழமுதின் இன்சுவையினைத் தெளிவுபடுத்துவனவாம். நவிலுந் தோறும் சுவைதரும் இக்குறிஞ்சிப் பாட்டினைக் கேட்டு மகிழும் அறிவுமதுகையுடைய பிரகத்தனைத் தமிழில் ஐயுறவுகொண்ட சிறுமதியாளனாகக் கூறுதல் ஏற்புடையதன்றாம். தமிழ்மொழியினை ஓரளவு பயின்ற துணையானே தன்னால் தெளிய அறிந்துகொள்ள முடியாததும் வேறு எம்மொழியினும் விளக்கியுரைக்கப் பெறாததும் ஆகிய

தமிழியல் வழக்கமென்னும் அகனைந்திணை மரபினை இலக்கியத்துடன் விளங்க அறிவுறுத்தல்வேண்டும் எனப் பிரகத்த மன்னன் வேண்டினானெனவும் ஞானத்திடை வைத்த அவனது ஆர்வத்தை மதித்து நுண்ணுணர்வினால் நலங்கண்டு மகிழும் இக்குறிஞ்சிப் பாட்டினைக் கபிலர் இயற்றித் தமிழறிவுறுத்தினர் எனவுங் கொள்ளுதலே இகல்கருதாப் புலமையூற்றுக்கு இயைந்த நிகழ்ச்சியாகும். ஈண்டுக் கபிலர் அறிவுறுத்திய தமிழென்பது பிறமொழிக்கில்லாத அன்பினைந்திணை யொழுகலாற்றையே குறித்து வழங்கியதாகும். தமிழ் என்னுஞ் சொல்லால் தமிழுக்கேயுரிய அகப்பொருளைக் குறித்து வழங்குதல் தொல்லோர் மரபாகும். "தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழ் ஆய்வந்திலார், கொள்ளார் இக்குன்று பயன்" எனவரும் குன்றம்பூதனார் பரிபாடற் குறிப்பினாலும், இறையனார் களவியல் நுதலிய பொருள் இதுவெனக் குறிப்பிடவந்த உரையாசிரியர் "இந்நூல் என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலியதென்பது" என விளக்கிய உரைக் குறிப்பினாலும் இம் மரபு புலனாதல் காணலாம்.

இதுகாறும் இக்குறிஞ்சிப் பாட்டு இயற்றப் பெறுதற்குரிய சூழல் நிலையினையும் நோக்கத்தினையும் ஒருவாறு உணர்ந்துகொண்டோம். இனி இவ்வாறு செய்யுளாற் பாடுதற்கு அமைந்த செய்யுள்வழக்கின் இயல்பினை ஒரு சிறிது ஆராய்வோம்.

மக்கள் வாழ்க்கையின் சிறப்பியல்பாகவுள்ள அகம் புறவொழுகலாறுகளைச் சொல்லோவியமாகப் புனைந்துரைக்கும் வாயிலாக உலக வாழ்விற் காணப்படும் நலந்தீங்குகளை யறிவுறுத்தி மக்கள் மனத்தினைத் தீதொரீஇ நன்றின்பாற் செலுத்தும் செம்மையுடையதே செய்யுள் எனப்படும். உழைத்து அலுத்த உள்ளத்தின் அயர்வினைப் போக்கி இன்பமளிப்பதே செய்யுளின் பயனாதல் வேண்டுமென இக்காலத்தார் எண்ணுவர். தன்னைப் பயில்வோருள்ளத்தின் அயர்ச்சியைப் போக்குமியல்பும் செய்யுளுக்கு உண்டு. ஆனால் அஃதொன்றே செய்யுளின் முடிந்த பயன்

அன்றும், படிப்போர் மனத்தின் அயர்ச்சியைப் போக்கிப் படிக்குந்தோறும் சுவைமிகப் பயக்கும் சொற்பொருள் நலங்களால் மக்கள் மனத்தைக் கிளர்ந்தெழச் செய்து பொருளாக்க முயற்சியில் ஈடுபடுத்தி வாழ்க்கையின் உயிர் நாடியாகிய நல்லறத்தின் வழியொழுகி யின்புறத் தூண்டுதலே செய்யுளின் சிறந்த நோக்கமாதல் வேண்டுமெனப் பண்டைத்தமிழாசிரியர்கள் வரம்பு செய்வாராயினர். "அந்நிலை மருங்கின் அறமுதலாகிய, மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (செய். 1) என்பது தொல்காப்பியம். ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என்னும் நால்வகையுட்பட்டு அடங்கும் பாக்கள் யாவும் அறம் பொருள் இன்பம் என்னும் முதற்பொருள் (மக்களடைதற்குரிய உறுதிப்பொருள்) மூன்றற்கும் பொதுவகையான் உரிய என்பது மேற்காட்டிய நூற்பாவின் பொருளாம். எனவே அறமுதலிய இவ்வுறுதிப் பொருள் மூன்றினோடும் தொடர்பில்லாதன செய்யுளாகா எனத் தொல்காப்பியனார் விலக்கினாராயிற்று.

செய்யுளிற் சொல்லக் கருதிய எல்லாப் பொருளையும் உள்ளபடியே சொல்லிவிடுதல் சிறந்த புலமையாகாது. வாழ்க்கையிற் காணப்படும் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் கேட்போர்க்குத் தெளிவாகத் தெரியும்படி அவற்றிற்கு வண்ணந்தீட்டிப் புனைந்துரைத்தல் படிப்போருள்ளத்தினைக் கவரும் திறனாகும். கணவனும் மனைவியுமாகிய ஒருவனையும் ஒருத்தியையும் ஓவியத்தில் எழுதிக் காட்ட எண்ணிய கைத்திறனுடையான், அவ்விருவர் உருவத்தைமட்டும் எழுதிவிட்டு ஓவியத்தை முடிக்கமாட்டான். அவ்விருவரும் அன்புமீதூர்ந்து ஒன்றி வாழ்தற்கு நிலைக்களனாகிய மலை, காடு, வயல், கடல் என்னும் புறச்சூழல்களையும் அச்சூழல்களிற் கருக்கொண்டு தோன்றிய தாவரம், விலங்கு, பறவை முதலிய கருப்பொருள்களையும் உருவாகத் தீட்டி அவற்றின் சார்பால் தான் கருதிய இருவர் வாழ்வும் சிறந்து தோற்றுமாறு செய்வதே அவனது கைத்திறமாகும். அதுபோலவே உலகியலில்

இன்பதுன்ப வுணர்வுகளைச் சொல்லோவியமாகப் புனைந்து காட்டவல்ல நல்லிசைப்புலவர்களும் அவ்வுணர்வுகளை மட்டும் தனியே சொல்லிவிடாமல் அவ்வுணர்வு மக்களுள்ளத்தே தோன்றுதற்குரிய சார்பாகப் புறத்தேதோன்றும் மரம் செடி கொடி விலங்கு பறவை முதலிய கருப்பொருள்களையும் இவற்றுக்கு நிலைக்களனாய் விளங்கும் நானிலங்களாகிய நிலமுதற்பொருள்களையும் பெரும்பொழுது சிறுபொழுது ஆகிய காலமுதற்பொருள்களையும் புனைந்துகாட்டி, அவை சார்பாகத் தாம் அறிவுறுத்த எண்ணிய இன்பதுன்ப வுணர்வுகளைத் தெளிய விளக்குவர். மனத்தால் எண்ணியுணர்தற்குரிய வாழ்க்கையுணர்வுகளைச் சொல்லாற் புனைந்து ஐம்பொறி வாயிலாகக் காணும் உருவாக்கிக் காட்டுதல் நாடக வழக்கின்பாற் பட்டதாம். பல்வேறிடங்களிலும் பல்வேறு காலத்தும் நிகழ்பவற்றையெல்லாம் ஓரிடத்து ஒரு காலத்துத் தொகுத்து ஒரு தொடர்புபட்ட கதையாக நிகழ்த்திக் காட்டுதல் நாடகத்தின் தனிச் சிறப்பாகும். இதன்கண் புனைந்து காட்டப்படுவனவும் நிகழாதன அல்ல, உலகியலில் நிகழும் உண்மை நிகழ்ச்சிகளே என்பது உணர்த்துதல் கருதியே நாடகம் என்னது ‘நாடக வழக்கம்’ எனத் தொல்லாசிரியர் வழங்குவாராயினர். வழக்கம்—உலகில் வழங்கும் உண்மை நிகழ்ச்சி. செய்யுள் செய்யும் புலவன் உலகியலில் இயல்பாக வழங்கும் வழக்கினையே தான் கூறக் கருதினன் ஆயினும் அதனை இனிது விளக்குதற்குரிய இடமும் காலமுந் தந்து புனைந்துரைத்தால்தான் அப்பொருள் கேட்போருணர்வில் நன்கு பதியும். இவ்வுண்மை கருதியே “நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்” எனத் தொல்காப்பியனார் இச்செய்யுள் வழக்கிற்கு இலக்கணங் கூறுவாராயினர். சொல்லாலும் செயலாலும் விளங்கித் தோன்றுதற்குரிய புறப்பொருட்பாடலைக் காட்டிலும் மனத்தாலுணர்தல் ஒன்றேயுடைய அகப்பொருட்பாடலுக்கே இப்புனைந்துரை மரபு பெரிதும் இன்றியமையாததாகும்.

உயிர்வாழ்க்கையின் பயன் அன்பு வளர்ச்சியாகும் என்பதனைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் தம் நுண்ணறிவாற் கண்டுணர்ந்தார்கள். அன்பென்னும் உயிர்ப்பண்பே உலக நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும். நிலைபெற்ற உயிர்களுக்கு உடம்போடு கூடிய தொடர்பு அன்பினை வளர்த்தற் பொருட்டு அமைந்ததேயென்பதனை ஆசிரியர் திருவள்ளுவனார் வற்புறுத்துகின்றார். "அன்போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு, என்போடியைந்த தொடர்பு" என்பது அத்தெய்வப்புலவர் அருளிய செம்மொழியாகும். இவ்வுலகில் வாழ்வார் யாவரும் அன்பென்னும்உயிர்ப்பண்பினைப் பொதுவகையாற் பெற்றவரே. எனினும் இவர்களது அன்பு இயற்கை நீரூற்றெனத் தன்னியல்பில் தோன்றிக் காந்தமும் இரும்பும் போல ஒன்றுபட்டு ஈர்க்கும் ஆற்றலைப் பெற்றதன்றாம். பொன்னும் பொருளும் பிற வளங்களும் எண்ணி ஒருவரையொருவர் நண்பு செய்தொழுகுதல் இப் பொதுமக்களது வாழ்க்கை முறையாகும். இப்பொதுவாழ்வில் கணவன் மனைவி என்னும் இருவர்பாலும் தோன்றும் அன்பே பின்னர் மக்கள் சுற்றத்தார் முதலியோர்கண் உளதாகும் அன்பு முறைக்கும் காரணமாம் என்பது அறிஞர் கருத்து. தோண்டத் தோண்டக் கிணற்றில் நீரூறுவதுபோல, கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய்ப் பல்லாண்டுகள் பழகப்பழகச் சிறப்புடைய அன்பு தோன்றிப் பெருகுதல் இப்பொதுவாழ்வின் பயனாகும். இங்ஙனம் பிறவிகள்தோறும் கணவனும் மனைவியுமாய் ஒன்றி வாழ்ந்தமையால் நிரம்பிய அன்புடையார் இருவர், வேறுவேறு இடங்களிற் பிறந்து வளர்ந்தனராயினும் இருவரையுங் கூட்டியியைவித்தற்குரிய நல்லூழின் செயலால் ஓரிடத்து எதிர்ப்படுவாராயின் அவ்விருவருடைய நெஞ்சமும் அன்பு மீதூர்ந்து செம்மண்ணிலத்தில் பெய்த மழைநீர் செம்மண் அணுக்களும் நீரும் உடையதாய் ஒன்றுனொற் போலக் கலந்து ஒன்றாகும் இயல்புடையதாகும் என்பர்.

"யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"
(குறுந்தொகை—௪0)

எனத் தலைமகன் தலைவியை நோக்கிக் கூறியதாகச் சான்றோர் கூறுதல் அறிக. இவ்வாறு ஒருவரையொருவர் முன்னர்க் காணாத நிலையிலேயும் அவர்கள் உள்ளத்தில் முற்பிறவிகளிற் பெருகித் தேங்கியிருந்த அன்புவெள்ளம், அவ்விருவரும் தாம் எதிர்ப்பட்ட காட்சியினால் திங்களைக்கண்ட கடல்போலப் பொங்கி வழிந்து, நாணமும் நிறையும் என்னும் அணைகளைக் கடந்து, நிலமுங் குலமும் முதலிய தடைகளை விலக்கி ஒன்றுகும் பெற்றிமையே காமக்கூட்டம் எனத் தொல்லாசிரியராற் சிறப்பிக்கப் பெறுவதாகும்.

இங்ஙனம் முதற்காட்சியிலேயே தொன்மையன்பின் தொடர்புணர்ந்து ஒருவரை யொருவர் இன்றியமையாதொழுகும் இயல்புடையார், உலகத்து மிகவும் அரியராகலின் உலகில் அருகித் தோன்றும் சிறப்புடைய அவர்களை நல்வாழ்விற் சிறந்த தலைமக்கள் எனப் பண்டைத் தமிழியல் நூலார் பாராட்டிப் போற்றியதுடன் அத்தலைமக்கள வாழ்வில் மிக்குத் தோன்றும் பேரன்பின் செயலை வெளிப்படுத்து உணர்த்துமுகத்தால் ஏனைப் பொதுமக்கள் வாழ்க்கையினையும் அப் பேரன்பின் நெறியிற் பயிற்றுதல் கூடும் எனக்கருதி மேற்காட்டிய தலைமக்கள் வாழ்க்கையினைப் பொருளாகக்கொண்டு செய்யுள் செய்வாராயினர். தலைமக்களாதற்குரிய முழுப்பெற்றியும் அமைந்தார் சிலரைக் கண்டபிறகே இத்தகைய செய்யுளைப் பாடுதல்வேண்டுமென்னும் வரையறையில்லை. அவ்வியல்புடையார் தம் காலத்திற் காணப்படாது போயினும் பொதுமக்கள் வாழ்க்கையில் தலைமக்களுக்குரிய இயல்புகளாக ஒவ்வொருவர்பால் தனித்தனியமைந்து விளங்கும் தலைமைப் பண்புகளெல்லாம் தாம் சொல்லக் கருதிய தலைமக்களிடத்து உள்ளனவாக ஒருங்கு தொகுத்து, இவ்வியல்புடையார் இத்தலைவனும் தலைவியும் என இவ்வாறு செய்யுள் செய்தலும் இல்லதெனப் படாது உண்மையான் நிகழும் உலகியல்

வழக்கேயாம் என்பது பண்டைத் தமிழாசிரியர் துணிபா கும். இக்கருத்திற்கு மாறாக இவ்வகத்திணை யொழுக லாற்றை "இல்லது இனியது நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டது" எனக் களவியலுரை யாசிரியர் சுட்டிய வழக்கமாகக் கூறியுள்ளாரன்றோ என ஐயம் நிகழ்தல் கூடும். இவ்வாறு களவியலுரையாசிரியர் தொல்லோர் கருத்திற்கு மாறுபடக் கருதியதற்கு, இவர் காலத்தில் துற வொழுக்கமே நன்றென்னும் போலிக் கொள்கையுடைய பிற சமயத்தார் பலர் இத் தமிழ்நாட்டிற் புகுந்து மெல்ல மெல்லப் பரப்பிய பொருந்தா வுரைகளே காரணமாகும். இல்லாத ஒன்றினை நாட்டிச் செய்யுள் செய்தல் ஆகாயப்பூ நாறிற்று என்பதுபோல மயங்கக் கூறியதாக இகழப்படு மாதலானும், இல்லாத ஒரு நிகழ்ச்சி கேட்டோர்க்கு மெய்ப்பாடு தோன்ற இன்பம் செய்யாதாதலானும் பண் டைத் தமிழ்ச்சான்றோர் செய்யுள் வழக்கத்தினைப் பய னில் கூற்றுக்குதல் முறையாகாதெனவும் அகப்பொரு ளாகிய இவ்வைந்திணை யொழுகலாறு மக்கள் வாழ்க்கை நெறியாகிய உலகியல் வழக்கத்தினையே உயிர்நிலையாகக் கொண்டதென்பதனை 'மக்கள் நுதலிய அகனைந்திணையும்' என்ற தொடரால் ஆசிரியர் தொல்காப்பியனார் அறிவுறுத் தினாராதலின் இவ்வுண்மை நெறியாகிய அகப்பொருள் ஒழுகலாற்றை இல்லதெனக் கூறுதல் தொல்லாசிரியர் தமிழ் வழக்கு அன்று எனவும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் அகத்திணையியல் உரையில் நன்கு விளக்கியுள்ளார். உல கியலில் ஒருசார் தலைமக்கள்பால் உண்மையான் நிகழும் அன்புநெறியினைப் பொருளாகக் கொண்டு புலவர் பலரும் புலனெறி வழக்கஞ் செய்தற்குப் பொதுமக்கள் வாழ்வு அன்பினால் மேம்பட்டு உயர்தல் வேண்டும் என்னும் நன் னோக்கமே காரணமாகும்.

மேற்கூறிய செய்யுள்வழக்கினை நிலைக்களமாகக் கொண்டு பாடப்பட்டதே இங்குப் பேச எடுத்துக்கொண்ட குறிஞ்சிப் பாட்டாகும். இப்பாட்டு 261 அடிகளால் இயன்ற அகவற்பா ஆகும். மயில் அகவுவது போன்ற

ஓசையினை அகவல் என்பர். அகவலோசையாவது ஒருவர் தாம் சொல்லக் கருதிய பொருளைத் தங்குதடையின்றித் தொடர்புபடச் சொல்லுதற்கு வாய்ப்பாகிய இயற்கை யோசையாகும். குறிஞ்சித் திணைக்குரிய பொருள் கூறுத லின் இது குறிஞ்சிப்பாட்டு எனப் பெயர் பெறுவதாயிற்று. இக்குறிஞ்சிப் பாட்டினை இயற்றியவர் கபிலர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. பொய்யா வாய்மொழிப்புலவர் பெருமானாகிய கபிலர் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முன் இத்தமிழ் நாட்டில் தோன்றிச் செந் தமிழ் வளர்த்த அந்தணராவர். இப்பெருந்தகையார் தென் பறம்பு நாட்டிலுள்ள திருவாதவூரிற் பிறந்தவர் எனப் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறுவர். கபிலரை யாதரித்த அருள்வள்ளலாகிய பறம்பிற்கோமான் பாரியும் அவ னையே யுயிர்த் தோழனாகக்கொண்டு அவன் நாட்டிற்கு வேண்டும் உதவிகளை உடனிருந்து செய்து மூவேந்தர் வஞ் சனையால் அவன் உயிரிழந்தமைக்கு வருந்தி அவன் மகளிரை வாழ்க்கைப்படுத்திப் பின்னர் அவனது பிரிவாற் ருது வடக்கிருந்து உயிர் துறந்த பெருங்கேண்மையராகிய கபிலரும் ஒரு நாட்டினராதல் பெரிதும் பொருந்துவதே யாம். இவ்வாசிரியரது புலமைநலத்தையும் பிற மாண்புகளை யும் இவர் காலத்தும் இவர்க்குப் பின்னரும் வாழ்ந்த பெரும்புலவர் பலர் வியந்து பாராட்டியுள்ளார்கள்.

" உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் " (அகம்—78)

என நக்கீரனாரும்,

" அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்கு செந்நாவின்
உவலை கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன் " (பதிற்—85)

எனப் பெருங்குன்றூர்கிழாரும்,

" தாழாது
செறுத்த செய்யுட் செய் செந்நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் " (புறம்—53)

எனப் பொருந்திலிளங்கீரனாரும்,

" நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக்கற்ற அந்தணாளன்
இரந்துசெல் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன் " (புறம் - 127.)

" பொய்யா நாவிற் கபிலன் " (புறம் - 174.)

என மாறோக்கத்து நப்பசலையாரும் கபிலரை மனமுருகிப் பாராட்டியுள்ளனர். புலவர் பாடும் புகழமைந்த இவர்தம் பெரும்புலமையினையும் வாய்மையொடு பொருந்திய அருளற வாழ்வினையும் இனிது உணரலாம். சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் அரசன் பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தால் தன்னைப் பாடிய கபிலர்க்கு நூறாயிரங்காணம் பொன்னையும் நன்றா என்னுங் குன்றின் மீதேறிநின்று தன் கண்ணிற்கண்ட நிலங்களையும் பரிசிலாகக் கொடுத்தான் எனப் பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தின் பதிகம் கூறும். இப் புலவர்பெருமானை யாதரித்து இவராற் பாராட்டப்பெறும் புகழ்பெற்றோர் பாரி, பேகன், மலையமான் திருமுடிக்காரி, ஓரி, நள்ளி என்னும் வள்ளல்களும் சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனும் ஆவர். கபிலர் தம் வாழ்நாள் முழுவதும் தன் ஆருயிர்த் துணைவனாகிய பாரியின் ஆதரவிலேயே வாழ்ந்திருந்து செல்வக்காலத்தும் அல்லற்காலத்தும் அவனை நீங்காது அன்புகொண்டொழுகிய சான்றாண்மையுடையார் என்பதனை இவர் பாடிய பாடல்களால் நன்குணரலாம். சங்க இலக்கியங்களில் இவர் இயற்றியனவாக இருநூற்றுமுப்பத்தைந்து பாடல்கள் காணப்படுகின்றன. குறிஞ்சிநிலமாகிய மலைநாட்டிலேயே நெடுங்காலம் வாழ்ந்த கபிலர், ஏனைய திணைகளினும் குறிஞ்சிக்கு உரிய மலைநிலத்தியல்புகளையே சிறப்பாக வுணர்ந்து தெளிந்தாராதலின் இவர் பாடிய அகத்திணைப் பாடல்களிற்பெரும்பாலன குறிஞ்சித்திணையையே விளக்குவனவாக அமைந்துள்ளன. குறிஞ்சித்திணைப் பாடல்கள் எல்லாவற்றுள்ளும் அளவாலும் பொருட்செறிவாலும் ஏனையணிகலங்களாலும் சிறந்த முடிமணியாய் விளங்குவது, இப்புலவர் பாடிய குறிஞ்சிப்பாட்டொன்றேயாகும். இக் குறிஞ்சிப்பாட்டின் சுவைநயங்களை நன்குணர்ந்து

இதற்கு விரிவுரையெழுதிய செந்தமிழாசான் ஆகிய நச்சினார்க்கினியர் இதனைப் பெருங்குறிஞ்சியென வழங்குகின்றார். மலைதோன்றி மண்தோன்றாப் பழங்காலத்தே முன்னர்த் தோன்றி மக்கட் பண்பாடுகளால் மூத்த மக்கள் குறிஞ்சி நிலத்தில் வாழும் மலைவாணராவர். அவர்களது வாழ்வு உலக நாகரிகங்களுக்கு முற்பட்ட தொன்மையுடையதாதலாலும் அந்நில முதற்பொருளாலும் கருப்பொருளாலும் ஒருவனும் ஒருத்தியுமாகிய இருவருள்ளத்தும் தோன்றிய அன்பின் பயனாகிய இன்பவுணர்வு, வாழ்க்கையிற்றோன்றும் எல்லா வுணர்வுகளுக்கும் முதற்காரணமாய் மக்கள் உள்ளத்தை யீர்க்கவல்ல பேராற்றலுடையதாகலாலும் இத்தகைய வுணர்வின் நிலைக்களமாகிய குறிஞ்சித்திணையினை அறனும் பொருளும் பிழையாதபடி உருப்படுத்திக் காட்டுதல் கபிலரது முதற் கடமையாயிற்று.

இனி இக் குறிஞ்சிப்பாட்டிற்குரிய திணை கைகோள் பொருள்வகை முதலிய அகப்பாட்டமைதிகளைச் சுருக்கமாக அறிந்துகொள்ளுதல் இப்பாட்டின் பொருளாராய்ச்சிக்குத் துணைபுரிவதாதலின் அப்பொருள்வகைபற்றி ஒரு சிறிது ஆராய்வோமாக.

கணவனும் மனைவியுமென ஒருவரையொருவர் இன்றியமையாதொழுகும் அன்புடையாரிருவர் நெஞ்சுகலந்து அன்பினால் அளவளாவுதலும், அவ்விருவருள் தலைவன் உலகியற்கடமை நோக்கித் தலைவியைச் சிலநாள் பிரிந்து செல்லுதலும், பின்னர்த் தலைவி அப் பிரிவுத்துன்பத்தைப் பொறுத்து ஆற்றியிருத்தலும், பிரிந்த தலைவன் குறித்த நாளில் வராது தாமதிப்பின் தலைவி ஆற்றாமைமிக்கு இரங்குதலும், பின் அவன் வந்தபோது அன்பினாற் பிணங்குதலும் என ஐந்து பகுதியாக அகத்திணையை விரித்து விளக்குவர். இவ்வைந்து ஒழுகலாறுகளையும் முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என முதற் பொருளோடும் கருப்பொருளோடுந் தொடர்புபடுத்திப் பெயரிட்டு வழங்குவர் தமிழாசிரியர். இவ்வைந்திணை யொழுகலாறுகள் எல்லா நிலத்தும் எல்லாக் காலத்தும்

பொதுவாக நிகழ்தற்குரியனவே. எனினும் இவை ஒவ்வொன்றிற்கும் சிறப்புரிமையுடைய நிலமும் பொழுதும் இவையென உரிமைசெய்து வழங்குதல் தமிழர்கண்ட பொருளிலக்கண மரபாகும். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சியாகும். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலமாகும். ஐப்பசியும் கார்த்திகையுமாகிய கூதிர்ப்பருவமும் மார்கழியுந் தையுமாகிய முன்பனிப் பருவமும் இவற்றின் நள்ளிரவும் இதற்குரிய காலமாகும். இந்நிலமுங் காலமும் ஆகிய முதற்பொருள் காரணமாக இம் முதற்பொருளிற் கருக்கொண்டு தோன்றிய கருப்பொருள் நிகழ்ச்சிகள் துணையாக ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியுமாகிய இருவருள்ளத்திலும் புணர்தலுணர்வு தோன்றும். இவ்வாறே காடும் கார்காலம் மாலைப்பொழுதும் அவற்றின்கண் தோன்றிய கருப்பொருள்களும் ஏதுவாக இருத்தலுணர்வும், கடலும் எற்பாடும் அங்குத்தோன்றும் கருப்பொருளும் ஏதுவாக இரங்கல் உணர்வும், வயல்சார்ந்த மருதநிலமும் வைகறை விடியலும் அங்குள்ள கருப்பொருள்களும் காரணமாக ஊடலுணர்வும், வேனிற்காலத்து நண்பகற்பொழுதில் ஞாயிற்றின் வெப்பத்தால் நல்லியல்பிழந்து பாலையாய் மாறிய நடத்தற்கரிய வழிகளும் அங்குள்ள கருப்பொருள்களும் துணையாகப் பிரிதலுணர்வும் மிகுந்துதோன்றும் எனத் தமிழ்ப் பொருளிலக்கண ஆசிரியர்கள் முன்னரே வரம்புசெய்து அறிவுறுத்தியுள்ளார்கள். நிலம்பொழுதுகளாகிய முதற்பொருளின் துணையாலும் அச்சூழலிற் றோன்றிய கருப்பொருள்களின் சார்பாலும் மக்கள் மனவுணர்வு மாண்புபெறுதல் இயற்கை நிகழ்ச்சியேயாகும். இத்தகைய இயற்கை நிகழ்ச்சியினை இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நம் தமிழாசிரியர்கள் தமது கூர்த்த நுண்ணுணர்வாற் கண்டுணர்ந்து வெளியிட்டுள்ளார்கள். இவ்வுண்மை "முதல்கரு வுரிப்பொருள் என்ற மூன்றே, நுவலுங் காலை முறைசிறந் தனவே" என வருந் தொல்காப்பியத்தொடரால் இனிது புலனும். இங்ஙனம் தொல்லாசிரியர் கண்டுணர்த்திய முதற்பொருள்—கருப்

பொருள்—உரிப்பொருள் என்பவற்றின் இயல்பு நிலவியல்புக்கும் மக்கள் மனவியல்புக்கும் உள்ள தொடர்பினை நன்கு வெளிப்படுத்துவதாகும். மக்களது உணர்வு அவர்கள் வாழும் இடத்தின் வன்மை மென்மை வெப்ப தட்பம் முதலிய நிலத்தின் இயல்புக்கேற்ப வேறுபடும் நீர்மையதென்பதனை இக்கால ஆராய்ச்சியாளரும் ஏற்று வற்புறுத்துகின்றார்கள். நிலத்தியல்பால் நீர்திரிவது நாம் வெளிப்படையாக அறிந்த செய்தி. நீரேயன்றி மக்களின் மனநீர்மையும் நிலத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுபடும் என்பதனைப் பண்டைத் தமிழ்ச்சான்றோர் மனநூற் பயிற்சியால் நன்கு தெளிந்தார்கள் என உய்த்துணரலாம். நிலத்தியல்பால் மக்கள் மனநீர்மை திரிதலும் மக்கள் மனத்தியல்பால் நிலத்தியல்பு மாறுபடுதலும் வித்தும் மரமும் போல ஒன்றற்கொன்று காரண காரியங்களாம். இவ்வியல்பு உலக வாழ்விற் காணப்படும் பொதுத்தன்மையாகும்.

நிலம் முதலாகப் புறத்தேயுள்ள பொருள்களின் தொடர்பால் மக்களது மனநீர்மை வளர்ந்து சிறத்தல் அகத்திணை வளர்ச்சியெனவும், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் வாய்மொழிக்கு ஏற்பவமைந்த மக்களது மனத்தின் ஆற்றலால் புறப்பொருளாகிய நிலத்தியல்பு வளர்ந்து சிறத்தல் புறத்திணை வளர்ச்சியெனவும் கருதுதல் தொல்லோர் கருத்திற்கு ஒத்ததேயாகும். பொருண்மொழிக்காஞ்சியென்னுந் துறையமைய நிலத்தைநோக்கி ஔவையார் பாடிய புறநானூற்றுச் செய்யுளொன்று, மக்கள் மனத்தியல்பால் நிலத்தியல்பு மாறுபடுமென்பதனைத் தெளிவாக அறிவுறுத்துவதாகும்.

> **நாடா கொன்றோ காடா கொன்றோ**
> **அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
> **எவ்வழி நல்லவர் ஆடவர்**
> **அவ்வழி நல்லை வாழிய நிலனே**

என்பது அச்செய்யுளாகும். 'நிலமே நீ நாடாக இருந்தாலும் அன்றிக் காடாகவிருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் அன்றி மேடாகவிருந்தாலும் நின்பால் வாழும் ஆடவர்

எங்கு நல்ல நினைவும் நல்ல முயற்சியும் உடையவராக வாழ்கின்றார்களோ அங்கு நீயும் நல்ல பயனைத் தருகின்றாய், ஆதலின் நீ வாழ்வாயாக' என்பது இப்பாடலின் பொருளாகும். வளமில்லாத நிலமேயாயினும் நல்லோர் வாழும் நிலம் நல்ல பயனுடையதாகும் எனவும், வளம் நிறைந்த நிலமாயினும் தீயோர் வாழும் பகுதி நற்பயனைத் தருதலிய லாதெனவும் ஔவையார் விளக்கிய திறம், மக்கள் மனத்தியல்பால் நிலத்தியல்பு மாறுபடும் புறத்திணை வளர்ச்சியைக் குறிப்பாக அறிவுறுத்தல் காணலாம்.

முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் என முறையே ஒன்றற்கொன்று சிறந்து தோற்றும் அன்பினைந்திணையாகிய அகவொழுக்கம் களவும் கற்பும் என இருதிறப்படும். அவற்றுள் களவாவது உருவும் திருவும் அன்பும் அருளும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையாராய தலைவனும் தலைவியும் நல்லூழினால் தாமே எதிர்ப்பட்டு அன்பினால் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் உலகத்தாரறியாது மறைந்தொழுகுதல். இவ்வாறு மறைந்து ஒழுகுதலைத் தவிர்ந்து மணந்து வாழும் வாழ்வே கற்பெனப்படும். களவு என்னும் சொல்லுக்கு உலகத்தாரறியாது மறைவில் நிகழும் ஒழுகலாறு என்பதே நேர் பொருளாகும். அன்புடையாரிருவர் முற்பிறப்பின் நல்வினையால் எதிர்ப்பட்டு அன்பினால் உள்ளமொத்து நெஞ்சு கலத்தலே இயற்கைப் புணர்ச்சி யெனப்படும். இக் கூட்டுறவு தலைவன் தலைவி யென்னும் இருவருடைய உள்ளக் குறிப்பும் முயற்சியும் ஆகிய காரணமின்றித் தன்னியல்பில் நிகழ்ந்ததாதலால் இதனை இயற்கைப் புணர்ச்சி யென முன்னோர் வழங்குவாராயினர். ஒருவர்க்கு ஒரு காரியம் எதிர்பாராது கைகூடியவிடத்து அதனைத் தெய்வத்தால் ஆகியதெனக் கருதுதல் உலகவழக்கு. அவ்வாறே அன்புடையாரிருவரும் எதிர்பாராத முறையில் ஒருவரையொருவர் நல்வினையால் எதிர்ப்பட்டு அன்பினால் உறவுகொண்டாராதலின் இவ்வுறவினைத் தெய்வப்புணர்ச்சி என்று கூறுதலும் உண்டு.

இவ்வியற்கைப் புணர்ச்சியில் தலைவனைக் கண்டு அன்பினால் நெஞ்சு கலந்த தலைமகள் வீட்டைவிட்டு வெளியே செல்லாதபடி பெற்றோரால் காக்கப் பெறுகின்றாள். இந்நிலையில் தலைமகளைக் காணப்பெறாது வருந்திய தலைவன் அவள்பால் வைத்த அன்பினால் அவளைக்காண விரும்பி நள்ளிரவில் ஒருவரும் அறியாதபடி வருகின்றான். ஊர் காவலர் வரவினாலும் நாய் குரைத்தலானும் தாய் முதலியோர் உறக்கம் நீங்கி விழித்துக் கொண்டமையினாலும் தலைவியைக் காணும் வாய்ப்பின்றி வறிதே மீள்கின்றான்.

இவ்வாறு நாள் தவறாது நள்ளிரவில் வந்தொழுகும் தலைவனை நினைந்து தலைவி வருந்துகின்றாள். தலைவன் தன்னை மணந்து கொள்ளாது இரவின் வந்து போதலாகிய களவொழுக்கத்தின் துயரத்தையும் அவன் வரும் வழியில் இருளில் உளவாகும் பலவகை யிடையூறுகளையும் எண்ணிக் கலக்கமடைகின்றாள். அதனால் அவளது எழில் மிக்க மேனி பெரிதும் வாட்டமுறுகின்றது. தலைவியின் வாட்டத்தை அவளை வளர்த்த தாயாகிய செவிலி காண்கின்றாள். இவ்வாறு திடீரென இவளுடல் மெலிவதற்குரிய காரணம் யாது என எண்ணுகின்றாள். குறி முதலியன சொல்வோரை யழைத்து அவர் சொல்லியபடி முருகக் கடவுளை வழிபட்டு வெறியாடல் முதலிய பூசைகளை நிகழ்த்தித் தலைவியின் நோய்க்குச் சாந்தி செய்தும் நோய் தணிந்திலது. அதனையறிந்த செவிலி தலைவியின் நோய்க்குரிய காரணம் இதுவென அறிந்திலேனே எனப் பெரிதும் கவலைகொள்வாளாயினள். இந்நிலையில் செவிலியின் மகளாகிய தோழி தான் செய்யத்தகுவதனை யெண்ணித் தலைவியின் உள்ளக் குறிப்பினை யுய்த்துணர்ந்து, அறிவு திரு ஆற்றல்களாற் சிறந்து விளங்கும் தலைமகன் ஒருவனோடு தலைமகளுக்கு நல்லூழினால் ஏற்பட்ட நட்பினையும் அதன்பயனாகத் தலைவியின் உள்ளத்தில் உயிரினுஞ் சிறந்த ஒழுக்கமாகிய கற்பு என்னுந் திண்மை அழியாநிலை பெற்றதனையும் தன் தாய்க்குக் குறிப்பினால் வெளிப்படுத்துகின்றாள். தலைவன் தலைவியிருவரும் ஒருவரையொருவர் சந்தித்த முறைமை அவ்

விருவருள்ளத்தும் குற்றந்தீர்ந்த அறத்தின் வழிப்பட்ட நற்செயலே என்னும் உண்மையினை அறிவுறுத்துதல் களவு வெளிப்படுத்தலின் கருத்தாகலின் அதனை அறத்தொடு நிற்றல் என்ற சொல்லாற் பண்டைத் தமிழாசிரியர் குறிப்பிடுவர்.

இவ்வாறு அறத்தொடு நிற்குங்கால் தலைவியின் குடிப் பிறப்பிற்கும் செவிலியின் அறிவிற்கும் தலைவியின் நாணம் கற்பு முதலிய பெருமைக்கும் தனது காவலுக்கும் தலைவனுக்குரிய அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்னும் பெருந்தன்மைக்கும் தவறு நேராதபடி இக்களவொழுக்கம் நிகழ்ந்த முறையினை முரண்பாடில்லா மொழிகளால் தோழி செவிலிக்கு அறிவுறுத்தல் மரபாகும். இவ்வாறு முரண் பாடில்லாத சொற்களால் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பதாக அமைந்ததே இக்குறிஞ்சிப் பாட்டாகும். தோழி இம்மறையினைச் செவிலிக்குத் தெரிவிக்கும்பொழுது தன் னிகரற்ற தலைவன் எங்கள்பால் எளியனாக நடந்துகொண் டான் என்று கூறுதலும், இத்தகைய அருளும் சிறப்பு முடையான் அத்தோன்றல் எனத் தலைவனை உயர்த்துப் புகழ்தலும், தலைவன் தலைவியாகிய இருவரும் அன்பினால் நிரம்பிய வேட்கையுடையார் எனக் கூறுதலும், அத்தகைய தலைவனுக்கே நம் தலைவியை மணஞ்செய்து கொடுத்தல் வேண்டும் என்னும் குறிப்புத் தோன்றக் கூறுதலும், தலைவியின் நோயினைத் தணித்தல் வேண்டி வேலன் முதலி யோர் வெறியாடல் முதலியன நிகழ்த்தியபொழுது அவை தலைவியின் நோயைத் தணிவித்தற்குரியன அல்ல எனத் தெரிவித்துத் தடுக்கும் முகமாக அவர்கள்பால் சில கேள்வி களைக் கேட்டலும், தலைவன் யாதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு வருங்கால் தன் கருத்தின்றித் தலைவியை யெதிர்ப்பட்டமை கூறுதலும், தலைவன் தலைவி யிருவரும் ஒருவரையொருவர் சந்தித்தபொழுது நிகழ்ந்த நிகழ்ச்சி களை உள்ளபடியே எடுத்துரைத்தலும் என இவ்வேழு திறத்தானும் வெளிப்படுத்தல் முறையென்பர் தொல்காப் பியர். இவற்றுள் கூறுதல் உசாதல் நீங்க ஏனைய கூறி அறத்தொடு நிற்கும் முறையில் இக்குறிஞ்சிப் பாட்டினை

ஆசிரியர் இயற்றியுள்ளார். இயற்கைப் புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தமுமாகிய குறிஞ்சித் திணையுரிப்பொருள் கூறுதலின் இப்பாட்டிற்குக் குறிஞ்சி யென்று பெயர் கூறினர். இப்பாட்டிற் குறிஞ்சித் திணைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் சிறந்த முறையிற் கூறப்பட்டுள்ளமை அறிந்து இன்புறத்தகுவ தாம். இனி இக்குறிஞ்சிப் பாட்டின் பொருளை ஒருவாறு தொகுத்து நோக்குவோமாக.

"தாயே வாழ்வாயாக. அன்னாய்! யான் கூறுவதனை விரும்பிக் கேட்டருளுக. ஒளிதங்கிய நெற்றியினையும் தழைத்த கூந்தலினையுமுடைய என் தோழி மேனியின் அணிகலன்களை நெகிழப் பண்ணின பொறுத்தற்கரிய நோயினைக் கண்டு அந்நோயின் காரணத்தைக் கட்டினாலும் கழங்கினாலும் அறிந்து குறி சொல்லுவாரை வினவியும் அடியார்கள் தம்முள்ளெத்தெண்ணிய வேறு வேறு உருவங்களால் தோன்றியருள் செய்யும் முழுமுதற்கடவுளை நறும்புகையும் சாந்தமுந் தந்து மலர்தூவி வழிபட்டும் சுழற்சி மிக்கு இவள் நோயை யறியாத மயக்கத்தையுடையாய் நீயும் வருந்துகின்றாய். இவளோ, தன்னுடைய நன்றாகிய அழகு கெடவும தோள்மெலிதலால வளையல்கள் கழலுதலைப் பிறர் அறியவும் தனிமை மேன்மேலே வருத்தவும் தன் மனத்துள்ளே மறைந்துறையும் பொறுத்தற்கரிய வருத்தத்தை வெளியிட்டுச் சொல்லுதற்கு இயலாமையினாலே தன்னுள்ளத்திலே யடக்கிக்கொண்டு தன்னை யான் நெருக்கிக் கேட்கலுற்றபொழுது என்னை நோக்கி, "முத்தாலும் மாணிக்கத்தாலும் பொன்னாலும் இயன்று ஒப்புக் கூறுதற்கரிய அணிகலன்கள் சிதைந்துகெடுமானால் அவை தொழில் வல்லாரால் பின்னும் உருவாகி வந்துகூடும். மாந்தர்க்குரிய நற்பண்புகளின் அமைதியும் மேம்பாடும் ஒழுக்கமும் சிதைந்து கெடுமானால் அச் சிதைவாற் பிறந்த அழுக்கைக் கழுவி விளங்கத்தக்க புகழொளியை முன் போலவே நிலைபெற நிறுத்தல் குற்றமற்ற அறிவினையுடைய முனிவர்களுக்கும் எளிய செயலென்று சொல்லமாட்டார்

கள் பழைய மரபினையறிந்தோர். தம்மால் நன்கு மதிக்கப்பட்டார்க்கு மகட்கொடுக்கவேண்டுமென என்னும் பெற்றோரது காதலும் அவர்கள் அறிவுறுத்ததனை ஏற்றுக் கொள்ளும் எனது மடனும் ஒருசேரநீங்க நெடிய தேரை யுடைய என் தந்தையின் அரியகாவலைக்கடந்து தலைவனும் யானும் பெருமையும் உரனும் அச்சமும் மடனும் சுருங்கிய நிலையாற் பிறந்த காதல்மணம் இதுவாகுமென்று நாம் தாய்க்குத் தெரிவிப்பதனால் நம் குடிக்குப் பழியேதேனும் உளதாகுமோ? நாம் அறத்தின் வழிநின்று வேண்டும் முறையில் ;நம் குரவர் தலைவர்க்குக் கொடுக்க உடன்படாதுபோயினும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க மறுபிறப்பினும் இக்கூட்டம் நமக்கு இயைவதாயிருந்தது" என்று கூறி மான்போலும் அமர்த்தநோக்கம் கலங்கிச் செயலற்று ஆற்றாத நோயினையுடையவளாய் இவளும் அயர்ந்து மெலிகின்றாள். மாறுபாட்டினை மேன்மேலும் செலுத்தும் பேராற்றல் மிக்க அரசரிருவரை ஒற்றுமைப் படுத்துந் தொழிலில் ஈடுபட்டு முயலும் அறிவுடையோர் இருவருடைய வெறுப்பிற்கும் ஆளாகாது அஞ்சியொழுகு மாறுபோல நினக்கும் இவள் வருத்தத்திற்கும் அஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தினாலே யானும் ஒருபாற்படாது வருந்துகின்றேன். மகட்கொடுத்தபின்பு எல்லாவற்றாலும் நன்றாகிமுடியும் எதிர்கால நலங்களையும் பெண்ணும் பிள்ளையுமாகிய இருவருடைய குடும்பமும் ஒத்த தகுதி யுடையவாதலையும் இருவருடைய இயல்புகளையும் சுற்றத்து உதவிகளையும் ஒப்பநோக்கிப் பொருத்தம் பார்த்துப் பலருடனும் ஆராயாது பெற்றோர்களாகிய நும்முடைய உடன்பாடின்றிச் சிற்றறிவினேமாகிய யாங்களே தனித்து உறுதி செய்ததும் எம் உயிர்க்குப் பாதுகாவலாகியதும் ஆகிய இவ்வரிய செயல் முன்பு நிகழ்ந்த முறையினை நீ தெளிய அறிந்துகொள்ளுதல் வேண்டிச் சொல்லத்தலைப்பட்டேன். அதுகேட்டு எங்களை வெகுளாது பொறுத்தருள்வாயாக.

விளைந்த தினையிலே வீழ்கின்ற கிளி முதலிய பறவைகளையோட்டி ஞாயிறு மறையும் அந்திப்பொழுதிலே வீட்

டிற்குத் திரும்பிவருவீராக என்று சொல்லி நீ எங்களைத் தினைப்புனத்திற்கு அனுப்பிவைத்தாயல்லவா? யாங்களும் நீ பணித்தபடியே தினைப்புனத்தையடைந்து புலியஞ்சு தற்குக் காரணமான பரணின்மீது ஏறிப் பிரம்பாலே பின்னிய தழல், தட்டை, குளிர் என்னும் பெயர்களையுடைய கருவிகளை முறைமுறையாகச் சுழற்றிவீசிக் கிளி முதலிய பறவைகளை யோட்டிநின்றோம். ஞாயிற்றின் வெம்மை விளங்குகின்ற உச்சிப்பொழுதிலே பறவைகள் எல்லாம் தாம் விரும்பும் சேக்கைகளிலே சென்று தங்க, கருக்கொண்டு உயர்ந்த மேகங்கள் வானத்தே வீசுகின்ற குளிர்ந்த காற்றுப் படுதலாற் கலங்கி மலைமேலே பெய்தமையால் நெடிய மலைச்சிகரத்தினின்றும் குதிக்கின்ற தெளிந்த நீரையுடைய அருவியிலே நீங்காத விருப்பத்துடன் நெடு நேரம் விளையாடினோம். பின்னர்ப் பளிங்கைக் கரைத்துச் சொரிந்துவைத்தாற்போன்ற பரந்த சுனையைக் குடைந்து விளையாடுகின்ற இடத்தே செறிவுண்டான மலைச்சாரலில் எங்கள் மனத்திற்கு விருப்பமானவற்றைப் பாடினோம். பொன்னிலேயழுத்தின நீலமணியைப் போன்று சிறிய முதுகிடத்தே தாழ்ந்துகிடந்த எம்முடைய பின்னுதலையுடைய கரிய கூந்தலின் நீரைப்பிழிந்து துவட்டி உள்ளிடமெல்லாம் சிவந்த கண்களையுடையேமாய்ச் செங்காந்தள் மலர் முதலாக மலையெருக்கம்பூ வீறாகவுள்ள பிற பூக்களையும் மலைச்சாரலெங்குந் திரிந்து பறித்தோம். மழைபெய்து கழுவித் தூய்தாக்கப்பெற்ற அகன்ற பாறையிலே அப்பூக்களையெல்லாம் ஒருங்கு குவித்தோம். தினைப்புனத்தே பெரிய ஓசையினையுடைய தெளிந்த சொற்களை இடையிடையே சொல்லிக் கிளிகளை யோட்டியும் பூக்களிலுள்ள புறவிதழ்களைக் களைந்து நீக்கி எங்களால் தொடுக்கப்பட்ட தழையுடையை இடையிலுடுத்தும் பல்வேறு நிறமமைந்த பூக்களாற்றொடுக்கப்பட்ட அழகிய மாலைகளை எம்முடைய மெல்லிய கரிய கூந்தலிலே அழகுபெறச் சுற்றியும் நெருப்புப்போன்று ஒளிரும் அழகிய தளிர்களையுடைய அசோக மரத்தினது குளிர்ந்த நிழலிலே தங்கியிருந்தோம். அந்நிலையிலே எண்ணெய் பூசப்பெற்று நீலமணியினது நிறத்

தையுடைய முடியின்கண்ணே மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் கொம்புகளிற் பூத்தனவும் சுனைகளிற் பூத்தனவுமாகிய பலநிற மலர்களையும் ஆராய்ந்து கட்டிய மாலையினையும் தாழைமடலாற் புனையப்பெற்ற கண்ணியினையும் கண்டோர் முருகன் என்று அச்சமுறும்படி தலையிற்சூடி, பிச்சிமலரால் தொடுக்கப்பட்ட ஒரு சரமாகிய மாலையை அவற்றின்மேல் வளைத்துச் சுற்றி, அசோகினது தளிரை ஒரு காதிலே செருகி, சந்தனம் பூசப்பெற்று அகன்று உயர்ந்துவிளங்கும் மார்பின்கண்ணே அணிகலன்களோடே நறியமாலை பொலிவுபெற்று விளங்க, அம்மார்பிடத்தே அமைந்துவிளங்கும் மூன்று வரியாகிய உத்தம இலக்கணத்திற்குப் பொருந்தின மிக்க தோள் வரிகளையுடைய பெரிய கையிலே வரிந்து நாணேற்றிய வில்லையெடுத்து அம்புகளை ஆராய்ந்து பிடித்துக் கச்சுடன் விளங்கும் உடையினை இறுக்கட்டிப் போர்முனையிற் பின்வைக்காத தன் கால்களைப் பெயர்த்து நடக்கும்பொழுதெல்லாம் காலில்கட்டிய வீரக்கழல் எற்றிழிவுசெய்து ஒலிக்க வீரம்மிக்க இளைஞனொருவன் அவ்வழியே வந்தான். வேல்வீரரைப்போலே சினம் மிக்கு ஒன்றன்மேலொன்று நெருங்குந்தோறும் வெகுளுமியல்புடைய மூங்கில்முளை போன்ற பல்லினையும் கூரிய நகத்தினையுமுடைய வேட்டை நாய்கள் அவனைச் சூழ்ந்து வந்தவை இமையாத கண்களையுடையவாய்ப் புதியவராகிய எங்களை வளைத்துக்கொண்டு மேன்மேல் நெருங்கிவந்தன. அந்நிலையில் நாங்கள் அஞ்சி இருந்த இடத்தைவிட்டுத் துணுக்குற்றெழுந்து வருத்தமிக்க மனத்தையுடையேமாய் மயக்கமுற்று வேற்றிடத்தை நோக்கி விரைந்து செல்லத் தொடங்கினேம். எங்களது கலக்கத்தையுணர்ந்த அத்தோன்றல், யாங்கள் போகின்றபொழுது எம் மனத்திற் சுழற்சிமிக்கு வருந்தியதற்குத் தான் பெரிதும் அஞ்சியவனாகி, மெல்லிய இனிய சொற்களை எமக்கு உள்ளம் பொருந்தச் சொல்லி எங்களையழைத்து நிறுத்தினான். பின்பு எம் ஐவகைப்பட்ட கூந்தலின் ஆராய்ந்த அழகைப் புகழ்ந்து 'அசைகின்ற ஒளிதங்கிய வளையலினையும் மெல்லிய சாயலினையும் குளிர்ந்த கண்ணினையுமுடைய இளை

யீரே! இவ்விடத்தே போக்கிய கெடுதியும் உடையேன்' எனத் தான் இழந்ததொரு பொருளைப்பற்றி எங்களை வினவினான். அவன் இழந்த கெடுதிப்பொருள் இதுவென வுணராத நாங்கள் அவன் வினவிற்கு மறுமொழி சொல்ல வியலாது நின்றோம். அதனால் அவன் மனம் வருந்தி, 'மெல்லிய இயல்பினையுடையீர்! கெட்டனவும் காட்டித் தாரீராயின் எம்முடன் ஒரு வார்த்தை சொல்லுதலும் நுமக்குப் பழியாகுமோ?' என்று சொல்லி வண்டுகள் மொய்த்த பூங்கொம்பொன்றை ஒடித்துக் கல்லென்னும் ஓசைபடக் குரைக்கும் வேட்டைநாய்களை யடித்து அவற்றின் கடிய குரல்களை மாற்றி, நாங்கள் வார்த்தை சொல்வதோர் காலத்தை எதிர்நோக்கி நின்றான். இந்நிலையில் சிறிய குடிலிலிருக்கும் கானவர்கள் மனைவி தந்த கள் தெளிவையுண்டு மகிழ்ந்து தமது காவற்றொழிலை மறந்து விடவே மதமிக்க யானையொன்று புகுந்து பெரிய புனத்தை யழிக்கத் தொடங்கியது. அதுகண்டு வருந்திய கானவர்கள் சினமிக்கு வில்லை வளைத்து அம்பை எய்து தட்டை முதலியனவற்றைப் புடைத்துக் காடெல்லாம் கல்லென்னும் ஆரவாரம் உண்டாகும்படி வாயை மடித்து விடுகின்ற சீழ்க்கை யொலியினராய் அக் களிற்றைப்புனத்தினின்றும் அலைத்துத் துரத்தினார்கள். அவர்களால் அலைக்கப் பட்ட யானை தனது பெரிய கையைச் சுருட்டி நிலத்திலே யறைந்து சின மிகுதற்குக் காரணமாகிய மதத்தாலே மனஞ்செருக்கி மரங்களை முறித்து உயிருண்ணுங் கூற்றுவனைப்போல எங்கள்மேலே கடுக வந்தது. அதுகண்டு அஞ்சிய யாங்கள் அவ்விடத்தில் எம் உயிர்கொண்டு பிழைத்தற்கு வேறொரு சார்பினையும் உணரப் பெறாது உயிரினுஞ் சிறந்த நாணைக் காத்தலை மறந்து விரைந்து சென்று எம்மீது அருளுடையவனாய் முன்னின்ற தலைவனைச் சார்ந்து தெய்வம் ஏறின மயில்போலே நடுங்கி நின்றோம். எம் இடர்நிலைக் கிரங்கிய தலைவன் விரைந்து வில்லில் நாணேற்றி அம்பைத் தொடுத்து எதிர்வந்த மதயானையின் அழகிய முகத்திலே எய்கையினாலே புள்ளியினையும் புகரினையுமுடைய மத்தகம் அழகழியும்படி அம்புபட்டு

உருவின புண்களால் உமிழப்படுங் குருதி முகத்தே பரந்து வழிய, யானையும் தன்னுணர்விழந்து அங்கு நிற்றற்குரிய வலியின்றி முதுகிட்டு ஓடியது. குருதி படிந்த அவ்விடம் முருகனால் வருத்தலுற்ற மகளிர்க்கு மறியறுத்து வெறியாடல் நிகழ்த்தும் களத்தையொப்பத் தோன்றியது. திண்ணிய வயிரம் அமைந்த கடம்பமரத்தின் அடியில் நெருங்கச் சுற்றிய மாலைபோல அத்தலைவனைச் சூழ்ந்து நெருங்கிநின்ற யாங்கள், நுரையோடு கூடிய புதுவெள்ளம் விரைந்து பாய்தலால் அதனிடத்துப் பரக்கின்ற அலைகள் கரையைக் குத்திமோத அங்குநின்ற வாழை பிடிப்பின்றித் தளர்ந்து சாய்வதுபோன்று நிலையின்றி நடுங்கினேமாக, அதனையுணர்ந்த பெரிய தகுதிப்பாடுடைய அத்தலைவன் தலைவியை நோக்கி "அழகிய கூந்தலையுடையாய், நீ சிறிதும் அஞ்சுதலைத் தவிர்வாயாக. யான் நினது அழகிய நலத்தை நுகர்வேன்" எனச் சொல்லி இவளது குற்றமற்ற ஒளிதங்கிய நெற்றியைத் துடைத்து நெடுநேரம் சிந்தித்து நின்றான். பின்னர் என் முகத்தை நோக்கிச் சிரித்தான். இவ்வாறு தலைவன் எங்களை இடரினின்றும் நீக்கி ஆறுதல் கூறித் தன் மகிழ்வைப் புலப்படுத்திய அந்நிலையிலேயே எங்களை விட்டு முன்னர் நீங்கிய எம்முயிரினுஞ் சிறந்த நாணமும் அதனை யிழத்தலாலுளதாகிய அச்சமும் முன் சென்ற முறையே மீண்டும் எம்பால் தோன்றுதலினாலே விரைந்து நீங்கவும் விடானாய்த் தலைமகளாகிய இவளைக் கையாலே யணைத்து இவள் மார்பு தன் மார்பிலே யொடுங்கும்படி தழுவிக்கொண்டான். அவனே மலைபொருந்திய பெரிய நாட்டிற்குத் தலைவன். எங்களால் எப்பொழுதும் விரும்புதலைத் தருகின்ற பெரிய வெற்றியையுடையவன். தான் முயங்குகையினாலே அவளுள்ளத்து நிகழுந்தன்மை மேல் மணந்துகொண்டு மனையறம் நிகழ்த்தலா யிருக்குமென்பதனை யுளத்துட் கொண்டான். "பலரும் வந்து உண்ணும்படி அகலக் கதவு திறந்துள்ள வாயிலையுடையதும், மிடாவிலுள்ள சோற்றை வருவார்க்கெல்லாம் வரையாமலிடுகின்ற விழாக் கொண்டாடினாற் போன்ற செல்வத்தையுடையதும் ஆகிய மனை பொலிவுபெறும்படி பசுத்தரிணமொழுகிய

நெய்மிக்க அடிசிலைக் குற்றமில்லாத உயர்ந்த குடியிற் பிறந்த பெரியோர் சுற்றத்தாருடனும் விருந்தினருடனும் உண்டு எஞ்சியதனை நீ முன்னின்று இட யான் உண்ணுதலும் உயர்வுடையதாகும்" என்று தலைவியை நோக்கிக் கூறி இனி மேற்கொள்ளவிருக்கும் மனையறமே தங்களை இன்னலின் நீக்கி இன்பக்கரையேற்றுந் தெப்பமாதலை வலியுறுத்திப் பெரிய மலையில் மிகவுயர்ந்த இடத்தே யுறைகின்ற முருகக் கடவுளை வாழ்த்தி வணங்கி, 'நின்னைப் பிரியின் அறனல்லது செய்தேனாவேன்' என்று சொல்லி, பிரிவென்ப தொன்றுண்டு போலும் எனக்கருதி இவள் மயக்கமுறுதற்குக் காரணமான வஞ்சினத்தை மெய்ம்மையால் தெளிவித்து அம்மலையில் இடையறாது சொரியும் அழகிய இனிய தெளிந்த அருவிநீரைக் குடித்துச் சூளுறவு செய்தான். இவ்வாறு கடவுள்சான்றாக உறுதி கூறும் முன்தேற்றினால் தலைவியின் நெஞ்சு அச் சூளுறவிலே பொருந்தியது. அரியமலை முழைஞ்சுகளிலே பொருந்தின களிறு கூட்டின உள்ளப்புணர்ச்சி இவ்வாறு அன்றைப் பகற் பொழுதிலே நிகழ்ந்தது. ஞாயிறும் அந்த மலையைச் சேர்ந்து மறைந்தது. மானினம் மரத்தடிகளிலே கூடி அசையிடவும், பசுக்கூட்டங்கள் கன்றுகளை யழைக்குங் குரலுடன் தொழுவத்திற் புகவும், அன்றிற் பறவைகள் பனையின் உள்மடலிலே யிருந்து பேட்டையழைக்கவும், பாம்பு தான் இரைதேடுதல் கருதித் தன்னிடத்துள்ள மாணிக்க மணியை உமிழ்ந்து வெளிப்படுத்தவும், ஆயர்கள் வேய்ங்குழலூதவும், அல்லியரும்புகள் கட்டவிழ்ந்து மலரவும், செல்வ மனைகளில் நல்ல வளையணிந்த மகளிர் நல் விளக்கேற்றி வழிபடவும், பார்ப்பார் அந்திக்காலத்துச் செய்யும் கடமைகளை நிகழ்த்தவும், காட்டில் வாழ்வார் வானளாவ வுயர்ந்த பரண்மீதேறித் தீக்கடை கோலினாலே நெருப்பை யுண்டாக்கி எரிக்கவும், மேகம் மலையிடமெல்லாஞ் சூழ்ந்து கறுக்கவும், காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னும் ஓசையுடையனவாய் ஒன்றற்கொன்று மாறிமாறிக் கூப்பிடவும், பறவைகள் கூட்டின்கண்ணே சென்று ஒலிக்கவும் பகைவர்மேற் சினங்கொண்டெழுந்த

பெருவேந்தனொருவனது போர்ப்படை யெழுச்சியை யொப்ப மாலைப்பொழுது விரைந்து நெருங்கியது. வருத்த மிருதற்குக் காரணமான மாலைப்பொழுதினைக் கண்ட தலைவன், "ஒளி விளங்கும் அணிகலங்களையுடையீர், நம் சுற்றத்தார் நமது நேரிய இரேகைகளையுடைய முன்கை யைப் பிடித்து எமக்குத் தர நாட்டிலுள்ளா ரெல்லாரும் அறியும் நன்றாகிய திருமணத்தினைப் பின்பு நிகழ்த்து வோம். அது நிகழ்தற் கிடையேயுள்ள சிலநாள் வரையும் நும் நெஞ்சு கலங்குதலைப் பாதுகாப்பீராக" என அன்பு மீதூர்ந்த நல்ல வார்த்தையைத் தலைவியின் உள்ளம் ஏற்றுக் கொள்ளும்படி வருத்தந்தீரச் சொல்லித், தன் துணையாகிய பசுவுடனே பெருமிதம் மிக்க ஆனேறு இணைந்து வருமாறு போல எம்முடனே கூடவந்து, ஓசையறாத முழங்கும் முழவினையுடைய பழைய நம் ஊரின் வாயிலில் மக்கள் பலரும் உண்ணுதற்குரிய நன்னீரமைந்த ஊருணித்துறை யின் அருகே எங்களை ஏதமின்றி அழைத்துவந்து நிறுத்தி விட்டுத் தான் மீண்டு போனான். அதுமுதலாக அம்முதல் நாள் போன்ற விருப்பத்தோடே எந்நாளும் இரவுப்பொழு திலே வந்துபோதலைத் தனக்கு இயல்பாக வுடையான், அங் ஙனம் நள்ளிரவில் வரும்போதெல்லாம் ஊர்காவலர் எதிர்ப்பட்டாராயினும் சினமிக்க நாய் குரைத்ததாயினும் நீ உறக்கம் நீங்கினையாயினும் நிலவுவெளியாக எறித்ததா யினும் தலைவியின் மூங்கிலையொத்த தோளிற் பெறும் இனிய துயிலை என்றும் பெற்றானல்லன். அவ்வாறு வறிதே திரும்பினும் இவள்மேல் வைத்த ஆர்வத்தால் இருளில் வந்து செல்லும் தன் செய்கையினை வெறுத்த லுஞ் செய்யான். அவன்தான் தன் இளமைப்பருவம் காரணமாக அறத்தின் வரம்பு நீங்கி யொழுகியதுமிலன். நற்குணங்களை மாறுபடுத்திச் சிதைத்தற்குரிய செல்வச் செருக்கால் எந்நாளும் தன் குடிக்குரிய நல்லொழுக்கத்தி னின்றும் நீங்கியதுமிலன். பகைவர் அஞ்சுதற்கு ஏதுவா கிய இவ்வூரின்கண்ணே, பொய்யாயிருக்கின்ற இரவுக்குறி யிலே தலைவன் தன்னைக் காணுதற்கு வருகின்ற வரவினது தன்மையை இஃது ஒழுக்கமன்று என நினைத்து அவன்

மணந்துகொண்டு மனையறம் நிகழ்த்தலே நல்லொழுக்க மென்று துணிகையினாலே இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள் பெருமழை பெய்தமையாற் சிதைந்து தோற்றும் மலர்போலே அழகு கெட்டு இமை சோர்ந்த ஈரத்தினை யுடையவாய்க் கலங்கா நிற்கும். இரவில் மலை முழைகளிலே செறியும் புலிகளும் யாளிகளும் கரடியும் யானையும் இடியேறும் கொடுந்தெய்வமும் இரைதேடித் திரியும் பாம்பும் கரிய ஆழத்திடத்துப் போதற்கு அரிய நீர்ச்சுழியின்கண்ணே திரியும் வளைந்த தாள்களையுடைய முதலையும் இடங்கரும் கராமும், கொடிப்பிணக்கும், வழுக்கு நிலமும், நடத்தற்குரிய வழிபோல் தோன்றிப் பின்பு வழி யின்றி மறையும் வழிமுட்டான இடங்களும், பிசாசும், பெரும்பாம்பும் இவையெல்லாம் உட்படப் பிறவாற்றானும் தப்பிப் பிழைத்தற்கரிய துன்பம் தருவனவாகிய இடை யூறுகளைத் தலைவர் வரும் வழியிலமைந்த கூட்டமாகிய மலையின் முழைகள் உடையவாயிருக்குமென இவள் நினைக் குந்தோறும் வலையில் அகப்பட்டு வருந்தும் மயில்போலே தன் அழகெல்லாம் சிதைந்து கெடும்படி நடுங்கிக் கண் களில் அருவிபோன்று அரித்து வீழ்கின்ற நீர் மார்பில் துளிப்ப அழா நின்றாள். இதுகாண் இவள் நோயின் காரணம்'' எனத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள் என்பதே இக்குறிஞ்சிப் பாட்டிற் கூறப்பட்ட பொருள் நிகழ்ச்சியாகும்.

அறமும் பொருளும் பற்றிய உலகியல் நிகழ்ச்சிகளை ஒருவரே வரலாற்று முறையில் தொடர்ந்து கூறி விளக்கு தல் கூடும். இவ்வாறன்றி அன்புடையிருவர் நெஞ்சு கலந் தின்புறும் உள்ளக்குறிப்பாகிய அகவொழுக்கத்தின் இயல்பினைக் களவொழுக்கத்தில் கூற்று நிகழ்த்தற்குரிய தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலியோர் பேச்சுக் களாற் குறிப்பாக அறிவுறுத்தலைத் தவிர வேறு எம்முறை யானும் விளக்குதல் இயலாதெனத் தோன்றும். அகவொழுக்கத் திற்கு இன்றியமையாத தலைமக்களாகிய தலைவன் தலைவி என்னுமிருவர் கூற்றினும் இவ்விருவரன்பினையும் இடையூ

றின்றி வளர்க்கும் நன்மதி நாட்டம் அமைந்த தோழியின் கூற்றே இக்களவொழுக்கத்தின் இயல்பினை இனிது விளக்குவதாம். பண்டைத் தமிழ்ப்புலவர்களாற் புலனெறி வழக்கஞ் செய்யப்பெற்ற அன்பினைந்திணை யொழுகலாற்றில் புலவர் நிலையில் நின்று பேசும் வாயிலாவார் யாரேனுமுளரோ வென்றால் அத்தகைய அறிவு நிரம்பிய வாயில் தோழியே என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம். அகத்திணை மரபிற்கு உயிரென விளங்கும் வாயிலாகிய தோழியின் கூற்றாக இக்குறிஞ்சிப் பாட்டினைக் கபிலர் இயற்றியதன் கருத்தும் இதுவேயாம். அன்பினைந்திணைக் களவு இத்தகையது என அறிந்துகொள்ள விரும்பிய ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அப்பொருளை யினிது விளக்கும் இலக்கியமாக இக்குறிஞ்சிப் பாட்டியற்றப் பெற்றதென்பதனை முன்னர் ஆராய்ந்தறிந்தோம். கபிலர் தாம் உணர்த்த எடுத்துக்கொண்ட கருத்தினைத் தலைவன் தலைவி என்னுமிருவருள் ஒருவர் கூற்றாகவோ அன்றி அதற்குப் புறம்பாகிய செவிலி, அறிவர் முதலிய பிறருள் ஒருவர் கூற்றாகவோ தெரிவிக்கத் தொடங்கின் இவ்வொழுகலாற்றின் புறச் சூழலும் உள்ளுணர்வுமாகிய இயல்பனைத்துந் தோன்றுவாம். தலைவன் தலைவியாகிய இவ்விருவரது உள்ளுணர்வும் இவ்விருவரையும் பற்றிப் புறத்தே உலகத்தார் கருதுதற்கு உரியனவும் ஒருங்கே எண்ணியறியும் வாய்ப்பு தோழி யொருத்திக்கே யுரியதாகலின் அவளது வாய்மொழியாலன்றிப் பிறர் கூற்றினால் இப்பொருள் மரபினையுணர்ந்து கொள்ளுதல் இயலாதததொன்றாம். இந்நுட்பத்தினைக் கபிலர் தம் புலமையுணர்வால் உய்த்துணர்ந்த ஒண்மை பெரிதும் பாராட்டுதற்குரியதாம். தாம் சொல்லக் கருதிய இப்பொருளினைத் தோழி கூற்றாகிய அறத்தொடு நிலைவாயிலாக வன்றிப் பிறவாறு கூறியிருப்பின் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்தலாகிய பயன் முழுதும் நிறைவேறியிராது.

இவ்வகப்பொருள் ஒழுகலாற்றிற்கு இன்றியமையாதவராகிய தோழியையும் செவிலியையும் அடிமை வாழ்

வுடைய தாழ்ந்த குடியினராகப் பிற்காலத்தார் பிழைபடக் கருதுவாராயினர். இப்பிழைபாடு தமிழியல் வழக்கமாகிய பொருளிலக்கணத்தின் செம்மையினையே அடியோடு சிதைத்து விட்டது. தோழியர் என்பார் ஒரு கூட்டம், பாங்கர் என்பார் ஒரு கூட்டம் என்ற எண்ணம் அகப்பொருள் மரபறியாதார் உள்ளத்தில் மெல்ல மெல்லப் பதியத் தொடங்கியது. அதனால் பண்டைத் தமிழர் களவொழுக்கத்தின் தூய்மை அறவே மறைந்தொழிந்தது. தொல்காப்பியத்திலும் சங்கச் சான்றோர் புலனெறி வழக்கத்திலும் குறிக்கப்படுந் தோழியாவாள், அறிவு திரு ஆற்றல் முதலியவற்றால் தலைமகளோடு ஒத்த பெருஞ்சிறப்புடையவளாய்த் தலைவிக்கு உற்றுழியுதவும் கெழுதகை நட்பினளாய் அவளுக்குற்ற துன்பந் துடைத்துத் துணை செய்யும் பேரறிவினள் என்பார், 'தாங்கருஞ் சிறப்பின் தோழி' எனவும் 'உறுகண் ஓம்பல் தன்னியல்பாகலின், உரியதாகுந் தோழிகண் உரனே' எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் அறிவுறுத்துவாராயினர். பிறப்பு முதலியவற்றால் ஒப்புடையார் இருவர் அன்பினால் ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொள்வது தோழமை நெறியாகும். தன்னைவிட உயர்ந்தாரொருவர்க்குத் தான் அடங்கி அச்சத்துடன் பணிசெய்தல் அடிமை நெறியாகும். தோழமை நெறியில் நின்று தலைவிக்கு நல்லறிவு கொளுத்திய பெருஞ்சிறப்புடைய தோழியை அடித்தொண்டு புரியும் பணிமகள் எனக் கருதுதல் அறிவுடையோர் செயலன்றாம். இவ்வாறே தலைமகளைப் பெற்ற தாயாகிய நற்றாயுடன் ஒத்த தோழமையுடைய பெருமாட்டியாகிய செவிலியை இழிந்த குடும்பத்தவள் என எண்ணியதும் பிழை வழக்காம். அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையினை வற்புறுத்தும் சொல்வன்மை, தீதொரீஇ நன்றின்பாலுய்க்கும் நல்லறிவு, பிறர்பாற் காணப்படாத அருமை என்பன பெண்டிர்க்குரிய சிறப்பியல்புகளாகும் எனத் தொல்காப்பியனார் அறிவுறுத்துவர். இத்தகைய பெறற்கருஞ் சிறப்புக்களைப் பெற்றவளே தோழியாதலின் அவள் கூற்றாக அமைந்த இக்குறிஞ்சிப் பாடலில் அப்பண்புகள் பலவும் ஆங்காங்கே

விளங்குதல் காணலாம். இப்பாட்டின் சுவை நலங்களை ஒரு சிறிது நோக்குவோமாக.

அறத்தொடு நிற்குந் தோழி 'அன்னாய் வாழிவேண்டு அன்னை' என இருமுறை தன் தாயாகிய செவிலியை அழைக்கின்றாள். இவ்வாறு இருமுறை அழைக்கவேண்டிய இன்றியமையாமை என்ன என்பதே நம் உள்ளத்திலெழும் வினவாகும். தன் தாய்க்கு முன்னமே தெரிவித்திருக்க வேண்டிய இம்மறையினை இந்நாள் வரையினும் அவள் அறியாதபடி மறைத்தமைக்குக் காரணம் கூறவேண்டுமல்லவா? தம் உயிரினுஞ் சிறந்த நாணமே இவ்வொழுக்கத்தினை வெளியிடாதபடி தடைப்படுத்தி நின்றது என்பதனை அன்புரிமையால் தாய்க்குத் தெரிவிக்கும் உணர்வுடன் இங்ஙனம் முகமனாக இருமுறை அழைத்தாள் என உய்த்துணர்தல் வேண்டும். தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் இடங்களிலெல்லாம் இவ்வாறு முகமனாகப் பலமுறையழைக்கும் வழக்கத்தினை ஐங்குறு நூற்றில் கபிலர் பாடிய குறிஞ்சிப் பகுதியில் அன்னாய் வாழிப்பத்தில் 1, 5, 10ஆம் பாடல்களினும், ஒதலாந்தையார் பாடிய பாலைப்பகுதியில் 66-ஆம் பாடலினும் அகநானூற்றில் தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் பாடிய48-ஆம் பாடலினும் காணலாம். ஏதேனும் ஒரு நினைவில் அழுந்தியிருப்பவர்களைத் தம் சொல்லை யேற்றுக்கொள்ளும்படி முன்னிலைப்படுத்தும் பொழுது ஒருமுறைக்கிருமுறை யழைக்கும் வழக்கம் சொலவன்மையுடன் உரையாடுவார்க்கு அமைந்த இயல்பாகும். இவ்வியல்பு ஏனைய அகத்துறைப் பாடல்களினும் காணப்படுவதாகும்.

ஒருவர்பால் தம் துயரத்தைத் தெரிவித்து அமைதி பெற முயல்வோர், தாம் யாரிடம் தெரிவிக்க விரும்புகின்றார்களோ அவர்களது உள்ளத்தியல்பினை முதற்கண் தாம் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். ஒருகால் அவர்களும் தம்மைப்போன்று ஏதேனும் கவலையுடையவர்களானால் அவர்கள் கவலையினையும் தாம் உணர்ந்துகொண்டு உளம் வருந்துவதாகச் சொல்லித் தமது கவலையினைத் தெரிவிக்க

முயலுதல் உலகியல்பாகும். இம்மனவியல்பினை நன்குணர்ந்த தோழி தன் தாயிடம் அறத்தொடு நிலையாகிய உரையாடலைத் தொடங்குதற்குமுன் தலைவியின் நோய் காரணமாக அவள் அடைந்த துயரத்தில் தானும் ஈடுபட்டு உளம் வருந்துகின்றாள்.

> '..............................ஒண்ணுதல்,
> ஒலிமென் கூந்தலென் தோழி மேனி
> விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்
> அகலு ளாங்கன் அறியுநர் வினையும்
> பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
> வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
> நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
> எய்யா மையலை நீயும் வருந்துதி'

எனவரும் தொடர்களால் செவிலித்தாயின் வருத்தத்தினைத் தானும் உணர்ந்து வருந்துவதாகத் தோழி கூறுதல் காணலாம். இவ்வாறு செவிலி வருந்துதற்குக் காரணமாயது தலைவியின் மனக்கவலையாலுளதாகிய நோயென்றும் அக்கவலை தானும் தலைமகளாற் சொல்லுதற்கரிய நிலையினதாய் அவள் உள்ளத்தே மறைக்கப்படுவதென்றும் சொல்லக்கருதிய தோழி,

> ' நற்கவின் தொலையவும் நறுந்தோள் நெகிழவும்
> புட்பிறர் அறியவும் புலம்புவந் தலைப்பவும்
> உட்கரந் துறையும் உய்யா அரும்படர்
> செப்பல் வன்மையின் செறித்து'

எனக்கூறித் தன் தாயின் கருத்தினைத் தன்பால் ஈர்த்துக் கொள்ள முயல்கின்றாள். அவ்வுண்மையினை நீ உடன் பழகியும் உணர்ந்துகொள்ள முயலாதது என் என வினவுவது போன்ற முகக்குறிப்பு செவிலியின்பாற் காணப்பட்டது. அக் குறிப்புணர்ந்த தோழி, தலைமகள் நாணத்தால் மறைக்கவும் யான் அவளை நெருக்கிக்கேட்டேன் என்பாள் "யான் கடவலின்," என விரைந்து கூறினாள். தான் நெருக்கிக் கேட்டபொழுது தன்னிடம் தலைமகள் கூறிய மறையினையும் அதுபற்றி அவளுள்ளம் எண்ணிய அறவுணர்வையும் தோழி முறையே தெரிவிக்கின்றாள். எல்லோருடைய உள்ளமும் சென்று பற்றுதற்குரிய அறவுணர்வை முன்

னர்க்கூறி அவ்வரம்பிற் பிழையாது நிகழ்ந்த களவொழுக்கத்தினைப் பின்னர்க் கூறுவதாக அமைந்தது,

'முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலம்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரும் மடனும் ஓராங்குத் தனப்ப
நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாம்அறி வுறுவிற் பழியு முண்டோ
ஆற்றின் வாரா ராயினும் ஆற்ற
ஏனையுல கத்தும் இயைவதால் நமக்கென
மானமர் நோக்கம் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்'

எனவரும் பகுதியாகும்.

இதன்கண் தலைவியினுள்ளத்தேயுள்ள வருத்தத்தைப் புலப்படுத்தியதன்றி அவ் வருத்தத்திற்குரிய காரணம் இதுவெனத் தோழி சொல்லவில்லை. அவள் வெளிப்படச் சொல்லாமைக்குத் தலைமகள் நாணழிய மறை வெளிப்படின் உயிர்வாழாளாதலின் அவளது நாணழியாமற் காக்கவேண்டுமென்னும் அச்சமும, செவிலி இம்மறையினை யறிந்தால் என்ன ஆகுமோ என்னும் அச்சமுமே காரணங்களாம். இவ்விரு பேரச்சத்தினால் இன்னது செய்வதென்று தோற்றாது கவல்கின்றேனென்பாள்,

'இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இருபே ரச்சமொடு யானும் ஆற்றலேன்'

எனத் தன்னிலையைத் தாய்க்குப் புலப்படுத்தினாள். இவ்வாறு தோழி சொல்லியபொழுது தாய்க்குச் சூழ்ச்சி பிறந்தது. இவர்களுக்குள் நிகழ்ந்த களவினைச் செவிலியின் உள்ளம் ஒருவாறு உய்த்துணர்ந்துகொண்டது. இருமுதுகுரவர் பாதுகாவலைக் கடந்து நீங்களே ஒருவரை மணந்து

கொள்ள உறுதிசெய்தல் முறையோ என எண்ணியவ ளாய்க் கடுகடுத்த முகத்துடன் காணப்பட்டாள் செவிலி. அச் சினக்குறிப்பினைத் தோழி யுணர்ந்துகொண்டாள். தம்மேல் செவிலிகொண்ட கோபம் பொருந்துவதே என்ப தனை ஒப்புக்கொண்ட முறையில் பின்வருமாறு கூறு கின்றாள் :

'கொடுப்பின் நன்குடைமையும் குடிநிர லுடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ யெண்ணாது
எமியேம் துணிந்த ஏமஞ்சால் அருவினை
நிகழ்ந்த வண்ணம் நீநனி யுணரச்
செப்பல் ஆன்றிசின் சினவா தீமோ'

என்பது தோழி கூற்றாகும். திருமணத்தின்பின் எல்லாம் நன்றாகிமுடியும் எதிர்கால நலங்களையும் இருவர் குடியும் ஒத்த தகுதியுடையவாதலையும் மணமக்களிருவரியல்பை யும் இருவருடைய சுற்றத்து உதவிகளையும் ஒப்ப எண்ணிப் பொருத்தம் பார்த்தபின்னரே பெற்றோர் மகட்கொடை யுடன்படுவர். இம்முறையினை யெண்ணாது நமக்கு மாறாகச் சிற்றறிவினேமாகிய நாங்களே உறுதி செய்துகொண்ட காரியம் இதுவாகும். பெற்றோராகிய உங்களது பாதுகாவ லைக்கடந்து நாங்களே உறுதிசெய்தல் முறையன்றாயினும் அவ்வாறு உறுதிசெய்யாதொழியின் தலைவியின் உயிர்க்கு வேறு பாதுகாவல் இல்லாதொழியும் என்பாள், "எமியேம் துணிந்த ஏமம்சால் அருவினை," என்றாள். எமியேம் துணிந்த அருவினை ஏமம்சால் அருவினை எனத் தனித்தனி இயைத்துரைத்தல் வேண்டும். இக்காரியத்தில் நாங்கள் தலைமை செய்தொழுகுதல் கருதி எங்களைக் கோபியாது பொறுத்தருளவேண்டுமென்பாள், "செப்பல் ஆன்றிசின் சினவாதீமோ," என்றாள். என்றது, நீ சினக்கும்படி இதனை உனக்குச் சொல்லுதலைத்தவிர என்னாற் செய்யத் தக்கது வேறொன்றுமில்லை எனத் தோழி செவிலிக்கு அறி வுறுத்தபடியாம்.

எனது காவலுக்குட்பட்ட நீங்கள் பெருமையும் நாணமும் ஆகிய வரம்புகெட இச் சூழலிற்பட்டது எவ்வாறு என்னுங் கருத்து செவிலியின் முகக்குறிப்பால்

தோற்றியது. அதனைக் குறிப்பாலுணர்ந்ததோழி, தாயறிவி னொடு மாறுகொள்ளாமையும் தலைமகள் பெருமையொடு மாறுகொள்ளாமையும் தனது காவலொடு மாறுகொள்ளா மையும் நாணினொடு மாறுகொள்ளாமையும் உலகினொடு மாறுகொள்ளாமையும் விளங்கத் தருவதனைச் செவிலிக்கு அறிவுறுத்துகின்றாள்.

"விளைந்த தினையின்கண் வீழும் கிளிகளை யோட்டி மாலைப்பொழுதில் வருவிராக," எனச் சொல்லி எங்களைத் தினைப்புனத்திற்கு அனுப்பிவைத்தாய். அத்தொழில் மேற்கொண்டு தினைப்புனத்திற் புக்குக் கிளி முதலிய வற்றையோட்டினேம். உச்சிப்பொழுதில் திடீரென மழை பெய்துநின்றது. பறவைகள் தத்தம் சேக்கைகளிற் புகுந் தன. இந்நிலையில் அருவியில் நீராடி வந்துவிடலாம் என்ற எண்ணத்தால் அருவியில் நீராடிப் பின்பு சுனையில் மூழ்கிக் கரையேறிக் கூந்தலைப் பிழிந்து ஈரம் புலரத் துவட்டினேம். பின்னர்ப் பலவிடங்களிலுந் திரிந்து பலநிறப் பூக்களையும் கொய்தோம். அவற்றை மழைநீராற் கழுவப்பட்ட தூய பாறையிற் குவித்தோம். இடையிடையே தினையுண்ண வரும் பறவைகளை யோட்டிக்கொண்டே அம்மலர்களைத் தொடுத் தணிந்துகொண்டு அசோகமரத்தின் நீழலில் அமர்ந்திருந்தோம் எனத் தோழி கூறுகின்றாள். இவ் வாறு தாயே தங்களை விளையாடிவரும்படி பணித்தமையி னால் செவிலி அறிவினொடு மாறுபடாத செய்கையை இத னால் தோழி எடுத்துரைத்தமை புலனும். தலைவியும் ஆயத்து மகளிரும் புனலாடிப் பூக்கொய்து விளையாடிய திறத்தைத் தோழி ஒரு சொல்லோவியமாக எடுத்துரைக் கும் முறை பெரிதும் பாராட்டுதற்குரிய தொன்றும். ஞாயிறு மேல்நின்று காயும் நண்பகலிலே திடீரென்று புழுக்கம் உண்டாதலும் மேகங்கள் திரளுதலும் குளிர் காற்று வீசச் சிறிதுநேரத்தில் ஒரு மழைபெய்துநின்றதும், அந்நிலையிற் பறவைகளெல்லாம் புனத்தைவிட்டோடித் தம் கூடுகளிற் சென்றடைதலும் ஆகிய தோற்றம் இக் குறிஞ்சிப்பாட்டின் 45 முதல் 53 வரையுள்ள அடிகளால்

வரையப்பெறுகிறது. புனங்காக்கும் கடமை மேற்கொண்ட நீங்கள் அதனைவிட்டு விளையாடச்சென்றது எவ்வாறு என ஒருகாற் செவிலி வினவத்தொடங்கின் அவ்வினமாற்றத்திற்குரிய இயற்கைக் காரணமாக இந்நிகழ்ச்சி தோழியாற் குறிப்பிடப்பட்டமையறியலாம். மழை பெய்தமையால் மலையின் சிகரத்தினின்றும் ஒழுகும் அருவி நீரினை 'அவிர் துகில் புரையும் அவ்வெள் ளருவி,' எனத் தோழி செவிலிக்குக் கூறியதன் குறிப்பு அது கேட்ட செவிலியின் உள்ளத்தில் ஒளிவிளங்கும் வெள்ளைத்துகிலைப் போல அசைந்து வீழும் அவ் அருவியில் ஆடுதல் நலமே என்னும் ஆர்வத்தினைத் தோற்றுவித்தற் பொருட்டேயாகும். பளிங்கினைக் கரைத்து வைத்தால்ஒத்த சுனைநீர் என்றதும் இக்கருத்தினாலேயாம். தாங்கள் பறித்த பூக்களைக் குறிப்பிடும்பொழுது செங்காந்தட்பூ முதல் புழகு (மலை யெருக்கு) என்னும் பூவீறுகத் தொண்ணூற்றென்பது பூக்களை அவற்றின் நிறமும் அழகும் விளங்கத் தொகுத்துரைக்கின்றாள். இப்பூக்களையெல்லாம் நிரல்படச் சொல்லி அம்மலைச்சாரலை மணமிக்க இடமாக வரைந்து காட்டியதன் கருத்து, குறிஞ்சி நிலமாகிய மலைநிலத்திலே தோன்றிவிளங்கும் இக்கருப்பொருளின் சார்பாகத் தலைவன் தலைவி யிருவருள்ளத்தும் உள்நின்றெழுந்த அன்பு தோன்றி மணந்த இயல்பினை உய்த்துணரத் தூண்டியபடியாம்.

தலைவியும் ஏனைய மகளிரும் மலர்கொய்து தொடுத்தணிந்து அசோகமரத்தின் நீழலில் அமர்ந்திருக்கும் பொழுது வேட்டைவிருப்பால் அங்குவந்த விறலமிக்க தலைவனது விரும்பத்தக்க பெருமிதத் தோற்றத்தினையும் அவனது வேட்டைத் தொழிலுக்கு உதவியாக அவனைச் சூழ்ந்துவந்த சினமிக்க வேட்டைநாய்கள் புதியராகிய தங்களைக்கண்டு தொடர்ந்து வளைந்துகொண்ட அச்சநிலையினையும் தோழி செவிலிக்கு அறிவிக்கும் பாடற்பகுதி 107 முதல் 132 வரையுள்ள அடிகளாகும். தங்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்ச்சியிற் படிந்த செவிலி

யின் மனத்தை எதிர்பாராததொன்றனைக் கேட்க என்னும் ஆராய்ச்சியிலும் அச்சத்திலும் ஒருகணம்படியச் செய்த தோழியின் சொல்வன்மையை என்னென்பேம். செவிலியின் மனத்தை மருட்சியிலும் அச்சத்திலும் ஈடுபடுத்த எண்ணிய தோழி தானும் அவ்வெண்ணங்களிலே மூழ்கிப் பேசும் முறை பெரிதும் வியந்து பாராட்டத் தகுவதாம்.

புதியனாகிய தலைவனுடன் வந்த வேட்டைநாய்கள் எங்களைத் தொடர்ந்து வளைந்துகொள்ளவே அதுகண்டு அஞ்சி உளம் தளர்ந்து ஓடத் தொடங்கினேம். அச்சத்தால் எம்முடைய கால்கள் தளர்ந்து ஓய்ந்தன. நாங்கள் இவ்வாறு நடுங்கி வருந்துதற்குக் காரணம் தன்னுடன்வந்த நாய்களே என எண்ணிய அத்தலைவன் விரைந்து வந்து எம்மெய் நடுக்கத்தையும் மனத்தடுமாற்றத்தையும் நீக்குங் கருத்துடன் அன்புகலந்த இன்சொற்களால் எங்களையழைத்து நிறுத்தி எங்களது அச்சத்தை யகற்றினன். பின்னர்த் தன் வேட்டையில் தப்பியோடிய கெடுதியை வினவி நின்றான். அவன் கேட்கும் பொருள்பற்றி மறுமொழி கூறும் ஆற்றலற்ற நாங்கள் நாணத்தால் ஒன்றும் பேசாது நின்றேம். இதற்கிடையில் அங்குவந்த வேட்டைநாய்கள் எங்களை நோக்கிப் பெருஞ்சத்தமிடவே ஒரு பூங்கொம்பினை யொடித்து அந்நாய்களை அடித்து அடக்கிவிட்டு நாங்கள் மறுமொழி கூறும் செவ்வியினை எதிர்பார்த்து நின்றான் எனத் தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்ட முதற்காட்சியை 133 முதல் 152 வரையுள்ள இப்பாட்டின் அடிகளால் தோழி செவிலிக்கு அறிவுறுத்துகின்றாள். தலைவன் தலைவியை எதிர்ப்பட்ட சந்திப்பு தன்னுடைய வேட்டைநாய்களாலுண்டாகிய அச்சத்தை நீக்குதற்பொருட்டு ஏற்பட்டதாம். காரணமின்றி ஒருவரொருவரைச் சந்தித்தல் உலகியலில் இல்லை. அறிவும் பெருமையுமுடைய தலைவன் நாண முதலிய குணங்களாற் சிறந்த தலைவி முதலிய மகளிரைக்கண்டு உரையாடியது, அவருள்ளத்தெழுந்த அச்சத்தை நீக்குதற்பொருட்டே என்பதனைத் தோழி செவிலிக்கு நன்கு விளக்கினள். இவ்வாறு பழியொடுபடாத

காரணத்தால் தலைவன் தலைவியை எதிர்ப்பட்ட செயலை 'ஏதீடு தலைப்பாடு' எனத் தொல்காப்பியம் கூறும். தாங்கள் தலைவனைக் கண்டது அவனுடைய அழகும் வீரமும் விளங்கும் பெருமித நிலையிலே யெனவும், தலைவன் தங்களைக் கண்டது, தாம் அஞ்சித் தளர்ந்து இடம்பெயர்ந்தோடும் இடுக்கட்பொழுதிலே யெனவும் தோழி செவிலிக்கு அறிவுறுத்தினாள். தமக்கு அச்சந் தோன்றாத நிலையில் தலைவனைத் தலைவி விரும்புதற்குரிய அன்புணர்வும் தம்முடைய அச்சத்தைத் தலைவன் கண்ட நிலையில் அவன் உள்ளத்தெழுந்த அருளுணர்வும் விளங்கிய இயல்பினைத் தோழி குறிப்பால் அறிவுறுத்திய திறம் வியக்கத்தக்கதாம்.

தலைவன் வினவிய வினா தவறாக வேறொன்றினை நினைத்துக் கேட்டதன்று, உண்மையாகவே தன்னைவிட்டுத் தப்பிய பொருளையே வினவியதாகும் எனச் செவிலிக்கு அறிவுறுத்துவாள் "மையல் வேழம் மடங்கலின் எதிர்தர," என்றாள். எனவே தலைவனது வேட்டையில் தப்பியோடிய யானை அம்மலைச்சாரலிலுள்ள வேறொரு புனத்திற்புகுந்து உழக்கிற்றெனவும் அதுகண்ட கானவர் புடைத்து அலைத்தலினால் மீண்டும் திரும்பியதெனவும் குறிப்பாக உய்த்துணரக் கூறினமை புலனாம்.

எம்மை நோக்கிவந்த யானையோ மதம்பிடித்த யானை. அது வருகின்ற தோற்றமோ உயிர்கொள்ள வரும் கூற்றுவனை யொத்துத் தோன்றியது. இந்நிலையில் உயிர்பிழைத்தற்குரிய வேறு சார்பின்றிச் செய்வதறியாது எம்முயிரினும் சிறந்த நாணையும் மறந்து எம்பால் வைத்த அருள் மிகுதியால் எம்முன் நிற்குந் தலைவனையே பாதுகாவலாகச் சார்ந்து தெய்வம் ஏறின மயில்போல நடுங்கி நின்றோம் என்பாள்,

'மையல் வேழம் மடங்கலின் எதிர்தர
உய்விடம் அறியே மாகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையின் நடுங்க'

என்றாள்.

இவ்விடர்நிலையினை யுணர்ந்த தலைவன் விரைந்து விசையினையுடைய அம்பினை வில்நாணிற் பொருத்திச் சினமிக்க யானையின் முகத்திலே எய்தான். யானையின் மென்மையுடைய மத்தகம் அழகழியும்படி அம்பு பட்டுருவிய புண்களில் பிறிட்டுப் பாயும் குருதிநீர் முகமெல்லாம் வழியப் பொறிகலங்கிய யானை உணர்ச்சி யிழந்து சோர்ந்து அவ்விடத்தில் நிற்றலாற்றாது புறங்காட்டியோடியது. அந்நிலம் முருகனுக்கு மறியறுத்தாடும் வெறியாட்டிடம்போலக் குருதிக் கறையுடன் தோன்றியது என்பாள்,

'...........................வார்கோல்
உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
அண்ணல் யானை அணிமுகத் தழுத்தலின்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லாது
அயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவேள்
அணங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்ப'

என்ற தொடர்களால் தங்களைக் காப்பாற்றிய தலைவனது தறுகண்மையினைத் தோழி செவிலிக்குப் புலப்படுத்தினாள்.

தலைவன் மதயானையினின்றும் மகளிரைக் காத்த செயல் அவனுடைய தறுகண்மையாகிய வீரத்தையும் அருளுணர்வையும் புலப்படுத்தி ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் சந்தித்தற்குக் காரணமாயினமை உணர்தற்பாலதாம். மதயானையின்மீது பல அம்புகளை எய்து அதனை வருத்தாமல் தலைவன் ஓரம்பினாலெய்து அதன் மதங்கெடுத்துப் புறங்காட்டியோடச் செய்தமை, அன்புடைக் காதலர் இருவர்பாலும் இருத்தற்குரிய பத்துவகை ஒப்புமையுள் ஒன்றாகிய அருளின்பாற் பட்ட செயலாம்.

தலைவன் தலைவியைத் தலைப்பட்டமைக்கு இருவகையான ஏதுக்கள் இப்பாட்டிற் கூறப்பட்டன. முதலாவது, தன்னுடன் வந்த வேட்டைநாய்களால் உளதாகிய அச்சத்தைத் தலைவன் நீக்கினமையாகும். இரண்டாவது, தலைவி முதலியோரைக் கொல்லவந்த யானையை அம்பினாற்

பொருதுவிலக்கி அம்மகளிரை உய்வித்த நற்செயலாம்.
இவ்விரண்டனுள் சிறப்புடைய நிகழ்ச்சி யானையைக் காத்த
செயலொன்றே. அங்ஙனமாகவும் இப்பாட்டில் நாய்காத்த
செயலைச் சொல்லாமலே இருந்திருக்கலாமல்லவா என்
றொரு தடை நிகழலாம். அன்பினால் மென்னீர்மையளா
கிய தலைவி, தம்மைக் கொல்லவரும் கூற்றுவனையொத்த
யானையை முதற்கண் காணநேரின் அதனால் வரும் பெரிய
அச்சத்தைப் பொறுக்கும் ஆற்றல் பெறாள் என்பது கருதி
முதலில் வேட்டை நாய்களால் விளைத்துக்கொள்ளப்படும்
சிறிய அச்சத்தை அவளுள்ளத் தெழுப்பி, அதனைத்
தலைவன் நீக்கிக் காத்த செயலால் மேலும் அத்தகைய
இடையூறு நேரின் அதனை நீக்கி யுய்விக்கும் சார்பாவான்
இத்தலைவனே எனத் தலைவியை நினைக்கும்படி தூண்டிப்
பின் கூற்றெனச் சினந்து வரும் மதயானையினாலுளதாம்
பெரிய அச்சத்தை அவளுள்ளத்தில் எழுப்புதலே உள்ள
வியல்புக்கு ஒத்த நிகழ்ச்சியாகும்.

நாய்களால் துரத்தப்பட்ட மகளிர் அவற்றினின்றும்
தப்புதற்கு வேற்றிடம் படர்ந்ததன்றித் தலைவன் உதவி
யைத் தேடாமை, அவர்களது நாண் மீதூர்ந்த பெண்மை
யியல்பைப் புலப்படுத்துவதாகும். மகளிரது அச்சத்தைத்
தலைவன் தன் இன்னுரைகளால் நீக்கினமை அவனது பெரு
மையை விளக்குவதாகும். பின்னர்ச் சினங்கொண்டு வந்த
மத யானையினைக் கண்டு உளங்கலங்கிய தலைவி, தான்
பிழைத்தற்குரிய பற்றுக்கோடு எதுவுமில்லாமையினாலும்
சிறிது நேரத்திற்கு முன் தங்களை அருளாற் பாதுகாத்து
முன்னின்ற தலைவன் இப்பொழுதும் இடர்நீக்கி யுய்விப்
பான் என்ற நம்பிக்கையினாலும் தலைவனையே அரணாக
எண்ணிச் சார்ந்து நாணத்தால் நடுங்கி நின்றாள் எனத்
தோழி கூறியது தலைவியின் மாசற்ற மனவியல்பினை நன்கு
விளக்குவதாம். மக்களுள்ளத்தில் படிப்படியாக இன்ப
துன்ப உணர்வுகளைத் தோற்றுவித்தலே இயற்கையின்
நியதியாகும். இந்நியதி பிழையாதபடி முதலில் நாயினால்
வந்த அச்சத்தையும் பின்னர் மதயானையால் வந்த அச்சத்

தையும் கபிலர் உணர்த்திய திறம் அறிந்து வியத்தற்குரியதாம்.

வெருண்டுவந்த யானைக்குப் பயந்து தலைவனைச் சார்ந்து நின்ற தலைவியின் இயல்பு முன்தொடரிற் சுருக்கமாகவே சொல்லப்பட்டது. யானையால் வந்த துன்பத்தை விலக்கித் தலைவியின் அச்சத்தை நீக்குதலே கபிலரது குறிப்பாகும். அன்றியும் இத் துயரச் செய்தியைத் தோழி வாயிலாகக் கேட்கும் செவிலியின் உள்ளம் துணுக்குற்று நடுங்காதபடியும் அந்நிகழ்ச்சி விரைந்து கூறி முடிக்கப் பெற்றது. இந்நிலையில் தலைவி முதலியோர் தலைவனைச் சார்ந்து நின்ற முறை எவ்வாறென்பதனையும் தலைவனது அறத்தொடு பொருந்திய காவல் தன்மையினையும் அறிந்து கொள்ளும் எண்ணம் செவிலியின் முகத்திற் புலனாகின்றது. எம்மேற் சினங்கொண்டு நெருங்கிய மதயானை அம்புபட்டு ஓடிய பிறகும் அச்சம் நீங்காத நாங்கள், முருகனது வழிபாட்டில் வயிரம் பொருந்திய திண்மைமிக்க கடம்ப மரத்தினைச் சூழ வளைக்கப்பட்ட மலர்மாலைகளைப் போல அத் தலைமகனைச் சூழ்ந்து நிற்றலை விடேமாகி ஆற்றில் பெருவெள்ளம் பாய்தலால் அதன் பேரலைகள் குத்தி மோத இடிந்த கரையில் நின்ற வாழையானது நிலையின்றிச் சாய்ந்து தளர்தல்போலப் பெரிதும் நடுங்கி நின்றோம் என்பாள்,

> 'நிணிநிலைக் கடம்பின் திரளரை வளைஇய
> துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்
> நுரையுடைக் கலுழி பாய்தலின் உரவுத்திரை
> அடுங்கரை வாழையின் நடுங்க'

என்றாள். தலைவனைச் சூழ்ந்து தாங்கள் நின்றமைக்குக் கடம்பமரத்தினைச் சூழ்ந்து மாலைகள் வளைக்கப்பெற்ற இயல்பினையும், தம் நடுவே பெருமையும் உரனும் குன்றாது உள்ளத் திண்மையுடன் நிற்குந் தலைவனுக்குத் திண்மை மிக்க கடம்பினையும் தோழி உவமையாகக் கூறினாள். தலைவியின் நோய் தணித்தல்வேண்டி அண்மையில் முருகனுக்குச் செய்த விழாவில் தான் கண்ட தெய்வமரமாகிய கடம்பினது தோற்றம் தன் உள்ளத்தது ஆகலின் அக்காட்சியினை

உவமையாகக் கூறியது மனவியல்புக்குப் பெரிதும் பொருத்தமுடையதாம். கடம்பினைச் சூழ்ந்து மாலை மணங்கமழ்தல் போன்று நின் மகளாகிய தலைவியும் தலைவனைச் சார்ந்து மணத்தற்கு உரியவளே எனத் தோழி செவிலிக்கு இவ்வுவமையாற் குறிப்பிட்டபடியாம்.

மேற்காட்டிய தொடரில் புனல்தரு புணர்ச்சி கூறப்பட்டதாக ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். 'நுரையுடைக் கலுழி பாய்தலின்' என்பதன்கண் பாய்தற்கு வினைமுதல் ஆற்று வெள்ளமே (கலுழியே) யன்றித் தலைவி முதலியோரல்லர். ஏனென்றால் முன்னர் அருவியாடியும் சுனைகுடைந்தும் தாங்கள் விளையாடியதாகத் தோழி செவிலிக்குக் கூறினாள். அதன்மேல் யானையால் துரத்தப்பட்டு அஞ்சி நடுங்கும் இடர்நிலையிலும் தாம் ஆற்றுவெள்ளத்திற் பாய்ந்து விளையாடியதாகவும் அவ்வெள்ளத்தால் இழுக்கப்பட்டுத் தளர்ந்த தலைவியைத் தலைவன் காப்பாற்றியதாகவும் செவிலியிடம் கூறினளென்றல், மகளிர் விளையாட்டு முறைக்கும் மனவியல்புக்கும் 'அறத்தொடு நிற்றல்' என்னுந் துறையமைதிக்கும் ஒவ்வாதவுரையாம். ஆதலின் அவ்வாறு பொருள் கொள்ளுதல் இப்பாட்டினை யியற்றிய ஆசிரியர் கருத்தன்று என உணர்தல்வேண்டும். தலைவன் தலைவியைத் தலைப்படுதற்குரிய ஏதுக்களுள் புனல்தரு புணர்ச்சியும் ஒன்றும். அதனையும் உடன் கூறுதல் வேண்டும் என்னும் விருப்பத்தால் இத்தொடர்க்கு நச்சினார்க்கினியர் வலிந்து பொருள் கொண்டாராயினும் அவ்வாறு பொருள் கூறுதற்குரிய சொற்கிடக்கை இப்பாட்டில் இல்லையென்று தெளிதல் இப்பாட்டின் பொருளுணர்வார்க்குரிய கடமையாகும். உரையாசிரியர் கருத்துப்படி தலைவன் தலைவியைப் புனலிலிருந்து எடுத்துக் காப்பாற்றினான் என்பது கபிலர் கருத்தாகுமானால் 'அருவிடர் அமைந்த களிறுதரு புணர்ச்சி' என இப்பாட்டில் களிறுதரு புணர்ச்சியை வரைந்து விளக்கினாற்போலப் புனல்தரு புணர்ச்சியையும் விளக்கமாகக் குறித்திருப்பார். அக்குறிப்பெதுவு மின்றிக் களிறுதரு

புணர்ச்சி யொன்றே ஆசிரியராற் சொல்லப்பட்டமையால் மேற்காட்டிய உரை பொருந்தாமை புலனும். அன்றியும் யானையைக்கண்டு அஞ்சித் தலைவனைச் சூழ்ந்துகொண்ட மகளிரின் உடல் நடுக்கத்தினையும் யானை அஞ்சியோடிய பின்னர் அவனை விட்டுப் பிரிய முயன்ற தலைவியின் உள்ளக் கருத்தினையும் தலைவன் அவள் குறிப்பையுணர்ந்து அவள்பாற் கொண்ட வேட்கையினையும் செவிலிக்கு உணர்த்துதல் அறத்தொடு நிலையின் சிறப்பியல்பாகும். அதனை விளக்காது தலைவியை மீண்டும் வேறோர் இடையூறுக்கு ஆளாக்குதல் இயற்கைக்கு மாறுபட்ட செயலாதல் தெளிக.

அஞ்சுதற் கேதுவாகிய யானை அம்புபட்டு வருந்தியோடிய பின்னரும் தலைவியின் மனத்தில் வேறோர் அச்சம் புதுவதாகக் குடிகொண்டது. அவ்வச்சத்தால் அவள் பெரிதும் தளர்ந்து வருந்துங் குறிப்புடையளாயினள். பெருந்தகையாகிய தலைவன் அதனைக் குறிப்பினால் உணர்ந்துகொண்டான். "அழகிய கூந்தலையுடையாய், நீ இவ்வாறு உள்ளந் தளர்ந்து வருந்தாதே. இது கருதிச் சிறிதும் அஞ்சுதலை யொழிக," எனத் தலைவிக்கு ஆறுதல் கூறித் தேற்றுவதாக அமைந்தது,

> '.............................பெருந்தகை
> அஞ்சி லோதி அசையல் யாவதும்
> அஞ்சல் ஓம்பு'

என்பதாகும். இங்கே தலைவியின் உள்ளத்தே தோன்றிய புதிய அச்சமாவது, யானையால் மிதிக்கப்பட்டு இறக்கும் நிலையினேனாகிய என்னை இங்ஙனம் உய்வித்த பேரருளாளன் இப்பெருந்தகையல்லனோ? இவனை வழிபட்டு மணந்து மகிழும் உயிரினுஞ் சிறந்த கற்புநெறியினைக் கடைப்பிடிக்கவொட்டாது என் வாழ்க்கையில் வேறு மாறுதல் நேருமாயின் எனது குடிக்குப் பழியாகுமன்றோ என்னும் அச்சமேயாகும். பழிதீர் சிறப்பாகிய பெருமையும் உயிரும் ஒருங்கு நிலைபெறமுடியாத இடர்நிலையில் உயிரை நீக்கிப் பெருமையை நிலைநிறுத்தலே குடிப்பிறந்தாரியல்பா

கும். இத்தகைய பெருமைக்கு இடையூறு நேருமாயின் யான் என்செய்வேன் எனத் தலைவி அஞ்சி நடுங்கினள். அவளது அச்சத்தின் காரணத்தையுணர்ந்த தலைவன், அவள்பால் முற்பிறப்பிற் பயிலியதுகெழீஇய நட்புடையானாதலின் அவளது உள்ளக்குறிப்பை நன்குணர்ந்து தனது அறம் பிறழாத அன்புணர்வினால் அவளையே மணந்து கொள்வதாக வற்புறுத்தித் தலைவியின் குற்றமற்றொளிரும் நெற்றியின் வியர்வையைத் துடைத்து அவளது அயர்வினைப் போக்கினான் என்பதனை "நின் அணிநலம் நுகர்கு என மாசறு சுடர் நுதல் நீவி," என்னுந்தொடரால் தோழி செவிலிக்குக் கூறினாள்.

தலைவியின் குறிப்பறிந்து "நின்னை யான் மணந்து கொள்வேன்," எனத் தன் வேட்கையினைத் தலைவிக்கு உணர்த்திய தலைவன், அவளுடைய பெற்றோர் உடன்பாடின்றி இதனை எவ்வாறு நிறைவேற்றுவேன் என நெடுநேரஞ் சிந்தித்தவனாய்ப் பின்னர் அதற்கு ஏதோ ஒரு துணை கண்டறிந்தான்போலத் தலைவியின் அன்புக்குரிய தோழியாகிய என் முகத்தைப் பார்த்து மெல்லச் சிரித்தான். அந்நிலையில் எங்களை விட்டுச்சென்ற நாணமும் அச்சமும் முன் போனமுறையே திரும்பத் தோன்றுதலால் அவனைவிட்டுத் திடீரெனப் பிரிந்துசெல்ல விரைந்தோம் என்பாள்,

> '.............................நீடுநினைந்து,
> என்முகம் நோக்கி நக்கனன் அந்நிலை
> நாணும் உட்கும் நண்ணு வழியடைய
> ஒய்யெனப் பிரியவும்'

என்றாள். இந்நிகழ்ச்சியில் தலைவன் பெருமையும் உரனும் கெடாத இயல்புடையனாதலையும், தலைவி அச்சமும் நாணமும் நீங்காத நிலையினளாதலையும் தோழி புலப்படுத்திய முறை இனிதுபுலனாம். இருமுதுகுரவர் காவலைக் கடந்து தலைவனோடு மணத்தொடர்பினை யுறுதிசெய்யும் நிலை நேர்ந்ததே என்ற அச்சமும் இங்ஙனம் பெண்மையழிய இவன் முன் நிற்றல் தகாது என்னும் நாணமும் தனக்கும் தலைவிக்கும் உண்டாயின என்பதனை இத்தொடரால் தோழி செவிலிக்கு எடுத்துரைத்தாள்.

தலைவி விரைந்து பிரியவும் அறம்பிறழா அன்புமுறையில் தான் அவள்பாற்கொண்ட பெருவேட்கையினால் அவளைத் தன் கையாலேயணைத்து அவள் மார்பு தன் மார்பிலே ஒடுங்கும்படி தழுவினன் என்பாள்

'ஒய்யெனப் பிரியவும் விடான் கவைஇ
ஆகம் அடைய முயங்கலின்'

என்பதனாற் புலப்படுத்தித் தலைவன் தலைவியின்பாற் கொண்ட வேட்கையின் சிறப்பினை இனிது விளக்கினாள். இப்பகுதி அறத்தொடு நிலைவகையேழனுள் வேட்கையுரைத்தல் ஆதலோடு உண்மைசெப்புங் கிளவியாகவும் அமைந்தமை கருதற்குரியதாம்.

'..................................அவ்வழிப்
பழுமிளகு உக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் நீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத்து அயின்ற தோகை, வியலூர்ச்
சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட் டின்னியங் கறங்க ஆடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்
தண்கம முளரித் தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடன்'

என்னும் பகுதி தலைவனது மலையின் இயல்பினைப் புனைந்துரைக்குமுகத்தால் அதனைக் கேட்ட செவிலி அப்புனைந்துரையிற் கூறப்படுங் கருப்பொருள் நிகழ்ச்சிகளை உவமையாகக்கொண்டு தான் சொல்லக்கருதிய வேறுபொருள்களை உய்த்துணரும்படி தோழி கூறிய உள்ளுறைகளாம். அகப்பொருளொழுகலாற்றில் சொல்லால் வெளியிட்டுக் கூறுவதற்கு உரியவல்லாத எண்ணங்களை நாகரிகமாக மறைத்துக்கூறுதற்பொருட்டு அமைத்துக்கொண்ட உரையாடல் முறையே உள்ளுறையுவமமாகும். கருப்பொருள்களின் நிகழ்ச்சியினை வெளியிட்டுரைக்குமுகத்தால் அங்

நிகழ்ச்சிகளை உவமையாகக்கொண்டு தலைவன் தலைவி என்பவர்களின் ஒழுகலாறுகளைக் கேட்போர் உய்த்துணர்ந்து கொள்ளச் செய்தல் இவ்வுள்ளுறையின் நோக்கமாகும்.

முற்றிப்பழுத்த மிளகுகள் சிந்திக்கிடக்கின்ற பாறையின் பாங்கர் அழகிய சுனையொன்றுளது, அச்சுனையின் கரையிலேயுள்ள மாவின் பழங்களும் பலாவின் பழங்களும் கனிந்து சாறாய் ஒழுகுகின்றன. அவற்றின் மேலாக மலையுச்சியிற் கட்டப்பட்டுள்ள தேனடை கிழிய அதனுள்ளேயுள்ள தேனனது தன்கட்படியும் தேனீக்களையும் தள்ளிக் கொண்டு முற்கூறிய பழச்சாற்றிற் பாய்ந்து சுனையிற் கலக்கின்றது அவ்வாறு பாய்ந்த தேறலை இயல்பாகிய சுனையின் நீரெனக்கருதி மயில் பருகிவிடுகின்றது. அத்தேறலாற் களிப்புற்ற மயில் மூங்கிலிற் கட்டிய கயிற்றின்மேல் தாளம்தவற ஆடும் கூத்தியைப்போன்று தளர்ந்து ஆடுகின்றது. இத்தகைய சாரல் தலைவனது குன்றின்கண் உள்ளது எனத் தோழி கூறுகின்றாள். இவ்வுள்ளுறையின் பொருளை நோக்குவோம்.

உறைப்புடைய மிளகு சிந்திக்கிடக்கின்ற பாறை, வீரம்மிக்க மலைவாணர் வாழும் நிலமாகவும், அப்பாறையினுள்ள பெரிய சுனை, தலைவன் பிறந்த சிறப்புமிக்க குடும்பமாகவும், மாம்பழத்தாலும் பலாப்பழத்தாலும் விளைந்த தேறல், இனிய நீர்மையராகிய தாய்தந்தையரால் உளனாகிய தலைவனாகவும், தேனடையிலிருந்து ஒழுகிய தேன், இவ்விருவரையுங் கூட்டிய பால்வரை தெய்வமாகவும், அத்தேறலை யுண்கின்றேமென்னும் நினைவின்றி விடாயினாற் பருகிய மயில், தலைவனை யடைகின்றேமென்னும் எண்ணமின்றி அச்சத்தாற் சார்ந்த தலைவியாகவும், அத்தேறலாற் பிறந்த களிப்பு, தலைவன் இவ்வாறு முன் தன் மெய்தொட்டுப் பயின்றறியாத புத்துணர்வால் தலைவியுள்ளத்திற் பிறந்த பேரின்பமாகவும், மயில் களிப்பு மிகுதியால் ஆடமுடியாத தன்மை, தலைவி தான் பெற்ற புத்துணர்வின் மயக்கத்தால் செய்வதறியாது திகைத்து வருந்தும் தன்மையாகவும் செவிலியுய்த்துணரும்படி தோழி உள்ளுறை கூறினள்.

விண்ணுறவோங்கிய சிகரங்களிலே கிளைத்த செங்காந்தளினுடைய குளிர்ந்த மணநாறும் பூக்கள் வரையரமகளிர் பரவி விளையாடுதலால் நலம் சிறிதுகெட்டு விரும்பும் வண்ணம் கீழே பரவி நன்றாகிய பல கச்சுப்பரந்த களம் போலே அழகுபெறப் பொலிந்த குன்றுகெழுநாடு எனத் தலைவனது நாட்டினைத் தோழி சிறப்பித்துரைக்கின்றாள்.

உயர்ந்த நிலத்தே பூத்த செங்காந்தள், உயர்குடியிற் பிறந்த தலைவனாகவும், அத்தகைய காந்தள் மலர் வரையரமகளிர் விளையாட்டால் நலஞ்சிறிது குறையக் கீழ்நிலத்தே உதிர்ந்து பரந்தமை, பால்வரை தெய்வத்தின் விளையாட்டால் தலைவன் தனது பெருமை சிறிது குறைய எளியனாய் வந்த செயலாகவும, காந்தள்தான் வீழ்ந்த இடத்தைப் பொலிவுடையதாக்கி மணங்கமழ்தல், அரியனாகிய தலைவன் எளிவந்து தலைவியை மணந்துகொண்டு அவள் குடிக்கு அழகுதரும் சிறப்பாகவும் செவிலியுய்த்துணர்ந்துகொள்ளத் தோழி உள்ளுறையுவமங்கூறிய திறம், அவளது அறிவு மாட்சியினைத் தெளிவுபடுத்துவதாம். இவ்வுள்ளுறைகளின் நுட்பத்தினை ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரைத்திறத்தால் உணர்ந்து மகிழ்தல் கற்போர்க்குப் பெருவிருந்தாகும்.

இவ்வுள்ளுறைகளால் தலைவனது உயர்குடிப் பிறப்பும், அவனால் தலையளிக்கப்பெற்ற தலைவியின் வேட்கையும், எத்துணையுஞ் சிறந்தானாகிய அவனை இங்ஙனம் தலைவிக்கு எளியனாக்கியது பால்வரை தெய்வமே என்னும் உண்மையும், இவன் தலைவியை யெதிர்ப்பட்டமை அவள் குடிக்கு அழகும் ஆக்கமுமாமென்பதும், ஆகிய எண்ணங்களைத் தோழி செவிலிக்குக் குறிப்பாக அறிவுறுத்திய முறை பெரிதும் பாராட்டுதற்குரியதாம். இவ்வாறு குறிப்பாகச் சொல்லவேண்டிய செய்திகளைத் தோழி செவிலியிடம் வெளிப்படையாகக் கூறுதல் நாகரிகமுறையாகாது. ஆதலால் இவ்வாறு உள்ளுறையுவமங்களாற் புலப்படுத்தல் பொருளிலக்கணமாகத் தமிழ்மக்களால் அமைத்துக்கொள்ளப் பெறுவதாயிற்று.

தலைவியை மணந்து கொள்ளத்தக்க ஒத்த அன்பும் பிற தகுதியும் உடையான் இவனே என்பாள்,

'குன்றுகெழு நாடன் எம்விழைதரு பெருவிறல்'

எனத் தோழி தலைவனைப் பாராட்டினாள். செல்வத்திற் குறைவிலன் என்பாள், 'குன்றுகெழு நாடன்' என்றும், கூற்றென வந்த யானையைத் துரத்தி எம்முயிரளித்த பெரு வீரன் என்பாள் 'பெருவிறல்' என்றும் இங்ஙனம் இறக்கும் நிலையினேமாகிய எம்மை அருளாற் பாதுகாத்த பெருமையும் உரனுமுடைய இவனே தலைவியால் விரும்பத் தக்க தகுதியுடையான் என்பாள் "எம்விழைதரு பெரு விறல்," என்றும் கூறினாள். தலைவிக்கும் தனக்குமுள்ள அன்பின் பிணைப்பால் தலைவியின் நிலையில் நின்று "எம் விழைதரு பெருவிறல்," எனத் தோழி தலைவனைப் போற்றி னாள். அவன் தங்களைக் காத்த அருட்டிறத்தை நினைக்குந் தோறும் அவன்பால் விழைவினைத் தருதலால் "எம்விழை தரு பெருவிறல்," என்றாள். "எம்விழைதரு பெருவிறல்," என்பதனை மற்றொரு முறை சொல்லி "எம்மை எப்பொழு தும் விரும்புதலைத் தருகின்ற பெரிய வெற்றியையுடை யான்," எனத் தலைவியின்பால் வைத்த ஆராக்காதலைத் தோழி குறிப்பிட்டதாகவும் பொருளுரைத்தல் பொருந் தும். இவ்வாறு தலைவன் தலைவியிருவர்க்கும் ஒத்த காம வாயிலாகிய அன்பின் பெற்றியை விளக்குதல் ஆசிரியர் கருத்துக்கு ஒத்ததேயாகும்.

தலைவன் தலைவியிருவர்க்கும் அன்பொத்த வேட்கை நிலைபெற்றதெனத் தோழி கூற்றால் உணர்ந்துகொண்ட செவிலி, அவ்விருவரும், பெருமை உரன் ஆகிய ஆண்மை யும் அச்சம் நாண் மடன் ஆகிய பெண்மையும் புனலோடும் வழிப் புற்சாய்ந்தாற்போல வேட்கையாற்கெட ஒருகாற் பழிபட நடந்திருத்தலுங் கூடுமோ என ஐயமுற்றுக் கவல் வாளாயினாள். அவளது கவற்சியினை யுணர்ந்த தோழி அக் குணங்கள் அழியாநிலைமையைப் பின்வருமாறு வற்புறுத்து கின்றாள்.

எம்மால் விரும்பப்படுந் தலைவன், தலைவியின் உள்ளத்து அச்சம் நீங்க ஒளிபொருந்திய நெற்றியின் வியர்வையைத் துடைத்துத் தலைவியை அணைத்துக்கொண்டானாக அந்நிலையில் அவளுள்ளத்தில் இயல்பாய் நிகழும் அச்சம் நாண் மடன் என்னும் பெண்மைக்குணங்கள் மெய்யுறுதற்குத் தடையாகத் தோன்றி நின்றன. உள்ளப்புணர்ச்சியளவில் நின்று மணந்துகொள்ளுதலையே அவளது உள்ளம் விரும்பியது. அவளோடு என்னிடை வேற்றுமையின்மையின் என்னுடைய நினைவும் அதனையே உறுதி செய்தது; எங்கள் கருத்தினைக் குறிப்பினால் உணர்ந்த தலைவன், பழிபாவங்களுக்கு அஞ்சும் பெருமையும் தீதொரீஇ நன்றின்பாலுய்க்கும் நல்லறிவும் ஒருங்குடையான் ஆதலின் தன் வேட்கைவழி யொழுக விரும்பாது நெடிது சிந்தித்துத் தலைவியை விரைவில் மணந்துகொண்டு இல்லறம் நிகழ்த்தல் வேண்டுமென்னும் எங்கள் கருத்தையேற்றுக்கொண்டான் என்பாள்,

'எம்விழைதரு பெருவிறல் உள்ளத்தன்மை உள்ளினன் கொண்டு'

என்றாள்.

இவ்வாறு தலைவியின் நெஞ்சத்து உயர்வினை மதித்தொழுகவல்ல தலைவன், அவளுள்ளத்தில் கவலைநீங்கச் சொல்லிய உறுதியுரையினைத் தோழி செவிலிக்கு விளக்கியுரைக்கும் பகுதி மிகவும் நயமுடையதாகும்.

> "சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
> வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
> மலரத் திறந்த வாயில், பலருணப்
> பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
> வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
> விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
> நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்கு
> அறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
> மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது
> ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி
> அந்தீந் தெண்ணீர் குடித்தலின்"

என வருவது அப்பகுதியாகும்.

பலரும் வந்து உண்ணும்படி அடையா நெடுங்கதவினை யுடையது தன் மனையென்றும், நாடோறும் மிடாவென்னும் பெயருடைய பெரிய பானையில் சமைக்கின்ற சோற்றை வருவார்க்கெல்லாம் அயர்வின்றிப் படைப்பதனால் திருவிழாக் கொண்டாடினாற்போன்ற ஆரவாரத்தினை என்றுமுடையதென்றும் கூறி அத்தகைய "செல்வமனை பொலிவு பெறும்படி நின்னை மணந்துகொண்டு, உயர்குடிப் பிறந்த பெரியோரும் சுற்றத்தாரும் விருந்தினருடன் உண்டு மிகுந்த நெய்மிக்க அடிசிலை வாழ்க்கைத் துணையாகிய நீ இடுதலால் யான் உண்ணுதலும் நம்மிருவர்க்கும் உரிய உயர்வினைத் தருவதே," என்று தலைமகளுக்குக் கூறி, இங்ஙனம் மனத்தின்கண் மாசற்றவராயொழுகும் தம்முடைய அறநெறியே தங்களை மேம்படுத்துவதாகத் தெளிவித்து அத்தகைய நல்லறவாழ்வினைத் தங்களுக்கு அருளுதல் வேண்டுமென வரையுறை கடவுளாகிய முருகனை வணங்கி, "நின்னைப்பிரியின் அறனல்லது செய்தேனாவேன்," எனத் தலைவி இடைக்காலப் பிரிவுண்மை கருதி மயங்குதற் கேதுவாகிய சூளுறவினை உளம்பொருந்தக் கூறி அம்மலையில் ஒழுகும் அழகிய இனிய தெள்ளிய அருவிநீரைத் தான் குடித்துத் தலைவியைத் தேற்றினான் என்பது மேற்காட்டிய தொடரிற் கூறப்பட்ட நிகழ்ச்சியாகும்.

இதன்கண் தலைவன் தன் செல்வமனையின் இயல்பினைத் தலைவிக்கு எடுத்துரைத்து அம் மனைக்கண் இருந்து நீ நெய்மிக்க அடிசிலைப் படைத்தலினாலே விருந்தினர் முதலியோர் உண்டு எஞ்சிய உணவினை யான் உண்ணுதல் சிறந்தது என அறிவுறுத்தியது, தன் மனையற வுரிமையைத் தலைவிக்கு உரிமை செய்தபடியாம். இதனை 'உரிமை கொடுத்தல்' என்பர் தொல்காப்பியனார். விருந்துண்டு எஞ்சிய மிச்சிலைச் சிறப்பித்தது, "வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சில் மிசைவான் புலம்" எனத் தெய்வப்புலவர் தெளிவித்த இல்வாழ்க்கையின் கடமையினைத் தலைவிக்குக் கற்பித்தவாறும். தலைவன் முருகக் கடவுளை வாழ்த்தி வணங்கியது, தம் உளக்கருத்தை

முடித்தருளுக என அப்பெருமானை வேண்டுதற்பொருட்டும் அப்பெருமான் சான்றாகத் தலைவிக்குச் சூளுறுதற் பொருட்டும் ஆகும். கடவுள் முன்னிலையில் நின்று கூறும் இச்சபதத்தை 'முன்தேற்று' என வழங்குவர் தொல்காப்பியர். இறைவன் திருமுன்னர் நின்று உறுதி கூறினோர் பின்பு அவ்வுறுதியை மறந்து நெகிழவிடுவாராயின் அவ்விறைவனால் அருளின்றி ஒறுக்கப்பட்டுத் துன்புறுவரென்பது எக்காலத்தாரும் ஏற்றுக்கொள்ளுதற்குரிய பேருண்மையாகும். இவ்வாறு தெய்வத்தின் முன்னர் உறுதி செய்வோர் தண்ணீர் குடித்து அச்சூளினை யுறுதிப் படுத்தல் பழைய தமிழ்நாட்டு வழக்கமாதலின், அவ்வழக்கப்படி தலைவன் முருகன் முன்னிலையில் அருவிநீர் குடித்துச் சூள் செய்தான் என அறிதல் வேண்டும். அவனாற் குடிக்கப்பெற்ற நீர் வாய்மையிற் றவறாது ஒளியோடு வாழ்தற்குரிய உடலழகினையும் எல்லாப்பிறப்பினும்தொடர்ந்து இனிமை தருதற்குரிய அன்பினையும் அதன்பயனாக இருவர் பாலும் நிகழும் உள்ளத் தெளிவினையும் வழங்குவதென்பார், 'அம் திம் தெள் நீர்,' என்றார்.

இருவர் நெஞ்சமும் விரும்பிய நிலையில் நேர்ந்த உள்ளப்புணர்ச்சி மலைமுழையில் வாழும் மதயானை யேதுவாக நிகழ்ந்ததென்பாள்,

'அருவிடர் அமைந்த களிறுதரு புணர்ச்சி'

என்றாள். ஈண்டுப் புணர்ச்சியென்றது, தலைவன் தலைவி என்னும் இருவர் நெஞ்சத்தளவில் நிகழ்ந்த நட்பாகிய உள்ளப் புணர்ச்சியையே. புணர்ச்சி என்னும் சொல்லுக்கு நெஞ்சக்கலப்பாகிய நட்பு என்பதே நேர்பொருளாகும். இங்கு இச்சொல்லுக்கு மெய்யுறுபுணர்ச்சி எனப்பொருள் கொள்ளுதல் தோழியின் காவலுக்கும் தலைவியின் நாணத்திற்கும் தலைவனது பெருமைக்கும் ஆசிரியர் கருத்துக்கும் பொருளிலக்கண மரபுக்கும் ஒரு சிறிதும் ஏற்புடையதன்றாம் எனத்தெளிதல் இக்குறிஞ்சிப் பாட்டினைப் பயில்வோர் கடனாகும்.

நல்லூழின் செயலால் எதிர்ப்பட்ட தலைவன் தலைவி யிருவரும் தாம் முன் பயிலியது கெழீஇய பெருங்கேண்மை யால் ஒருவரையொருவர் பிரிதலருமையால் அன்றைப் பகற்பொழுது முழுவதும் வானகத்தே வாழும் தேவரும் விரும்புதற்குரிய அழகுவாய்ந்த அப் பூமிக்க சோலையிலே கழித்தனர் என்பாள்,

'வானூரி யுறையுள் வயங்கியோர் அவாவும்
பூமலி சோலை அப்பகல் கழிப்பி'

என்றாள்.

இன்ப வாழ்வினராகிய வானோரும் நன்றென விரும்பு தற்குரிய பூமிக்க சோலையெனவே 'காம இருவரல்லது தனி மகன் வழங்காப் பனிமலர்ச்சோலை'யாகிய அவ்வழகிய பொழில் இவ்விருவருள்ளத்தையும் பிணித்தது பெருவியப் பன்று. அதன்கண் இவர்கள் அன்புமீதூர்ந்து நின்றது, பிழையுடைய செயலுமன்று என அறிவுறுத்தி, அச்சோலை முதற்பொருளும் கருப்பொருள்களும் இவ்விருவருள்ளத் தும் புணர்தலுணர்வாகிய குறிஞ்சித் திணையுரிப்பொருளைத் தோற்றுவித்தமையினைத் தோழி செவிலிக்குப் புலப்படுத் தினாள். உள்ளத்தளவில் தோன்றிய இப்புணர்தலுணர்வு பின்னர் இவ்விருவரும் உலகத்தாரறிய மணந்துகொண்டு வாழும் கற்பின்கண் நிகழும் மெய்யுறு புணர்ச்சிக்கு நிமித்த மாதலின் இப்பாட்டின் உரிப்பொருள் புணர்தலும் புணர் தல் நிமித்தமுமாகிய குறிஞ்சித் திணையாதல் இனிது புலனாம். இப்பாட்டில் 62 முதல் 93 வரையுள்ள அடிகளால் விரித்துக் கூறப்பட்ட தொண்ணூற்றென்பது பூக்களும் பிற பூக்களும் அடங்கப் 'பூமலிசோலை' எனச் சுருக்கமாக அச்சோலையின் பொலிவினை விளக்கிக் கூறினாள் தோழி.

'எல்லை செல்ல ஏழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய,
மான்கணம் மரமுதல் தெவிட்ட, ஆன்கணம்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர,
ஏங்கு வயிர் இசைய கொடுவாய் அன்றில்
ஓங்கிரும் பெண்ணை அகமடல் அகவப்,

பாம்புமணி யுமிழப், பல்வயிற் கோவலர்
ஆம்பலந் தீங்குழல் தெள்விளி பயிற்ற
ஆம்பல் ஆயிதழ் கூம்புவிட, வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயரக், கானவர்
விண்தோய் பணவை மிசைஞெகிழி பொத்த,
வானமாமலை வாய்சூழ்பு கறுப்ப, கானம்
கல்லென் றிரட்டப், புள்ளினம் ஒலிப்பச்,
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் கானூஉ'

எனவரும் தொடர்களால் ஞாயிறு மறைந்த பின்னர் மாலைப்பொழுது நெருங்கிய தன்மையினை இயற்கைநெறி வழுவாமல் விளக்கிய தோழி, அங்ஙனம் நெருங்கிய மாலைப் பொழுதினைத் தலைவன் கண்ட தன்மையினையும் செவிலிக்கு அறிவித்தாள்.

சினங்கொண்ட வேந்தன் போர்க்கு எழுமாறுபோல மாலை நெருங்கியது எனவே அதன் வரவால் இவ்விருவருள்ளத்தும் தோன்றிய கலக்கம் இத்தகையதென்பதனை நன்கு விளக்கினாள். இந்நிலையில் தலைவியின் மனக்கலக்கத்தையும் அதனையுணர்ந்து தேற்றக் கருதிய தலைவனது உணர்ச்சி மிக்க உரையாடலையும், அவன் தலைவியின்பாற் கொண்ட பேரன்பினால் தலைவியை நாணிறவாமல் இடையூறின்றி ஊரின் எல்லையளவும் கொண்டுவந்து விட்டுப் பிரிந்த பாதுகாவல் முறையினையும்,

'நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மணம் அயர்கம் சின்னாள்
கலங்கல் ஓம்புமின் இலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறித்
துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து
அஞ்சா மூழவின் மூதூர் வாயில்
உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன்'

என்பதனால் தோழி விளக்கினாள். இதனால் அறத்தொடு நிலைவகையுள் வேட்கை யுரைத்தல் கூறப்பட்டது.

அப்பெருங்கேண்மையினை மறவாத தலைவன் தன் நிறை கடவாது இரவுக்குறியில் வந்தொழுகுவதனை,

'.............................அதற்கொண்டு
அன்றை யன்ன விருப்போடு என்றும்
இரவரல் மாலைய னேவரு தோறும்
காவலர் கடுபினுங் கதநாய் குரைப்பினும்
நீதுயி லெழினும் நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்தோள் இன்துயில் என்றும்
பெருஅன், பெயரினும் முனிய லுருஅன்
இளமையின் இகந்தன்று மிலனே, வளமையின்
தன்வரிலை நிர்ந்தன்று மிலனே'

என்பதனல் தோழி எடுத்துரைக்கின்ருள்.

இங்ஙனம் தலைவன் இரவுக்குறியில் வந்தொழுகிய பொழுதும் உள்ளப்புணர்ச்சியளவில் நின்று அளவளாவுத லன்றி மகப்பேற்றிற்குரிய மெய்யுறுபுணர்ச்சியுற்ருனல்லன் என்பதனைத் தோழி செவிலிக்கு விளக்கமாக அறிவுறுத்து கின்ருள்.

'வேய்புரை மென்தோள் இன் துயில் என்றும் பெருன்'

எனக் கூறுவதனல் இரவுக்குறியினும் மெய்யுறுபுணர்ச்சி நிகழாமை தெளிக. இங்ஙனம் பலவகை யிடையூறுகட் கிடையே தலைவன் வந்தொழுகியதன் காரணம் முதற் காட்சியில் தோன்றிய நட்பு அன்றையன்ன நிலைமையிற் குறையாது நிலத்தைவிட அகலத்தாற் பெரிதாகவும் வானை விட உயர்ச்சியால் மிக்கதாகவும் கடலைவிட ஆழத்தால் அரிய அளவினதாகவும் வளர்ந்தமையன்றிப் பிறிதில்லை. இவ்வாறு தலைவன் தன்னுள்ளத்தெழுந்த நட்புக்கருதி இரவுக்குறியில் வந்துபோவதல்லது இழிசினர் போன்று மெய்யுறும் வேட்கையொன்றே கருதி வருவானல்லன் என்பாள்,

'பெருஅன் பெயரினும் முனிய லுருஅன்
இளமையின் இகந்தன்று மிலனே'

என அத்தலைவனது மாசற்ற பேரன்பினை வற்புறுத்தினுள்.

இங்ஙனம் தலைவன் தன்மேல் வைத்த காதலால் இரவுக்குறியில் வந்தொழுகுவதறிந்த தலைவி நள்ளிரவில் தலைவன் வருங்கால் அவனுக்குளவாகும் இடையூறுகளை யெண்ணிக் கலங்கியழும் இயல்பினை,

'........................ . கொன்றூர்
மாய வரவின் இயல்புநினைஇத் தேற்றி
நீரெறி மலரிற் சாயிநம் சோரா
ஈரிய கலுழும்இவள் பெருமதர் மழைக்கண்
ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையின் நலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமால் இவளே, கங்குல்
அளைச்செறி உழுவையும் ஆளியும் உளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்து
உருமும் சூரும் இரைதேர் அரவமும்
ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்
நூழிலும் இழுக்கும் ஊழடி முட்டமும்
பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமம் அவர்
குழுமலை விடரகம் உடையவால் எனவே'

என முடிவாகச்சொல்லித் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள்.

இதுகாறும் இயற்கைப்புணர்ச்சியாகிய காட்சி முதலாக இரவுக்குறியிறுகத் தான் எடுத்துக்கூறிய நிகழ்ச்சிகளுள் தலைவன் தலைவி யிருவருடைய குணங்களுக்கும் மாசுநேராதபடி அவ்விருவருடைய அன்புமிக்க நெஞ்சங்கள் கலந்த மேதகவினைத் தோழி செவிலிக்கு அறிவுறுத்திய முறையினை ஒருவாறு அறிந்துகொண்டோம்.

தலைவன் தலைவி யிருவரும் அறநெறி வழுவாது நண்பு செய்தொழுகும் இயல்பினை அறிவுறுத்து முகமாக அவ்விருவரையும் இடர்நிலையினராக்கித் துன்பியல் நிலையில் இக் குறிஞ்சிப் பாட்டு முடிவுபெறுகின்றது. இவ்வாறு தலைவன் தலைவி என்னும் இருவருள்ளத்தும் தோன்றிய அன்பின் வழிப்பட்ட வேட்கையினையும் அறத்தின் வழியொழுகும் தலைவியின் மனக்கவலையையும் எடுத்துரைத்தாலல்லது அவ்விருவரும் ஒருவரையின்றி ஒருவர் உயிர் வாழார் என்னும் அன்புரிமை நன்கு புலனாகாது. தம்மை நல்வழிப்படுத்தும் செவிலித்தாய் அறமென ஏற்றுக்கொண்டு உளமுருகும்படி

தோழி அறத்தொடு நின்ற இப்பகுதி, தமிழர் களவொழுக்கத்தின் உள்ளத் தூய்மையினையும் நாகரிக உரையாடல் முறையினையும் பிறநாட்டார் அறிந்து மகிழ்தற்குத் துணை செய்வதாகும். ஆரிய அரசனாகிய பிரகத்தன் என்பான் தமிழ்மக்களுடைய அகப்பொருளொழுகலாற்றின் தூய்மையினை யுணர்தற்கு இக்குறிஞ்சிப்பாட்டு துணைசெய்த முறையினை ஒரு சிறிது நோக்குவோமாக.

தமிழியல் வழக்கமாகிய களவொழுக்கத்தின் இயல்பினை அறிய விரும்பிய பிரகத்தனுக்கு அதனையுணர்த்த எண்ணிய தமிழாசிரியர் சிலர் அவனறிந்த ஆரியமணங்கள் எட்டனுள் ஐந்தாவதாகச் சொல்லப்படும் கந்தருவ மணத்தினைச் சுட்டிக்காட்டி அதுபோல்வது தமிழர் கொண்டொழுகிய களவுமணம் என உவமைகூறி விளக்கியிருப்பர். கந்தருவத்தையொத்தது களவு எனத் தமிழாசிரியர் சிலர் உவமைகூறியது கொண்டு கந்தருவமே களவு எனப் பிற்காலத்தார் சிலர் பிழைபட எண்ணுவாராயினர். பொன் போல்வது ஆவிரம்பூ என்றால் அவ்விரண்டும் நிறத்தளவில் ஒத்தனவேயன்றி மற்று ஒவ்வாத குணங்கள் பலவாம். அதுபோலவே கந்தருவமும் களவும் மகட்கொடுப்பாரும் பெறுவாருமின்றி ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்படும் அவ்வளவில் மட்டுமே ஒத்தனவாம். பிறவெல்லாம் ஒவ்வாதனவாம். எதிர்ப்பட்டாரிருவர் வேட்கைவயத்தால் நாணமும் நிறையுமிழந்து மெய்யுறு புணர்ச்சியிற் கூடி மகிழும் இயல்பினையே ஆரிய நூலோர் காந்தருவம் என வழங்குவர். கந்தர்வமுறையிற் கூடினோர் தம் வாழ்நாள் முழுதும் கூடிவாழ்வர் என்னும் உறுதியில்லை. தமிழர் ஒழுகலாறாகிய களவோ இருவருள்ளத்தும் உள்நின்று சுரந்த பேரன்பினால் தான் அவள் என்னும் வேற்றுமையின்றி ஒருவரையொருவர் இன்றியமையாதொழுகும் உள்ளப் புணர்ச்சியாகும். இக்களவொழுக்கத்தில் மகப்பேற்றிற்குரிய மெய்யுறுபுணர்ச்சி நிகழ்வதில்லை. உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தபின் ஒருவரையொருவர் இன்றியமையாதொழுகும் அன்பின் தூண்டுதலால் உலகினரறிய மணந்துவாழும்

கற்புநிலை தமிழர் ஒழுகலாறாகிய களவொழுக்கத்தின் முடிந்த பயனாகும். உலகியலில் உளவாகும் பல்வகை யிடையூறுகளால் ஒருவரையொருவர் மணந்துகொள்ள வியலாமல் உள்ளப்புணர்ச்சியளவே கூடி வாழ்ந்து பின்னர் இறந்த காதலரும் இத்தமிழகத்து இருந்தனர். மணிமேகலை யிற் கூறப்படும் தருமதத்தன் விசாகை என்னுமிருவரும் யாழோர் மணவினையாகிய கந்தர்வமுறையிற் பொருந்திய வர்கள் எனத் தம்மைநோக்கி ஊரார் கூறிய பழிமொழியை விலக்கித் தம் வாழ்நாள் முழுவதும் உள்ளப்புணர்ச்சி யளவில் நின்று உயிர் துறந்த வரலாறு இங்கு நினைத்தற்குரி யதாம். கந்தர்வ வழக்கினர் என்று தம்மை உலகினர் கூறியதன் கருத்து நாணமும் நிறையுங்கடந்து மெய்யுறு புணர்ச்சியிற்கூடிய குற்றமுடையவர் எனத் தம்மை இழித் துரைத்ததாகத் தருமதத்தனும் விசாகையும் எண்ணினமை இவர்தம் வரலாற்றாற் புலனாம். கந்தருவ மணத்தினைத் தமிழ்நாட்டார் சிறப்புடைய நன்மணமாக ஏற்றுக்கொள் ளாமை மேற்காட்டிய வரலாற்றால் நன்கு விளங்கும். கந்தர்வ மணத்தில் மெய்யுறுபுணர்ச்சி முதற்கண் நிகழ்வது. அதன் பயிற்சியால் உள்ளப்புணர்ச்சி நிலைபெற்றுக் கூடி வாழ்தலும் உண்டு. துஷ்யந்தனைப்போலத் தம்மெதிர்ப் பட்டாரைக் கூடிப் பின்னர் மறந்து மாறுதலும் உண்டு. இவையே தமிழியல் வழக்கமாகிய களவுக்கும் ஆரிய மண மாகிய கந்தருவத்துக்குமுள்ள உயிர்நிலையாய வேறுபாடு.

> 'கந்தருவர்க்குக் கற்பின்றியமையவும்பெறும்,
> ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது'

என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

> 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக்கூட்டம்'

எனத் தொல்காப்பியனாரும்,

> 'அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே'

எனச் செம்புலப் பெயல் நீராரும் களவொழுக்கத்தில் உள்ளப்புணர்ச்சி யொன்றினையே சிறப்பாகக் குறிப்பிட்

டுள்ளார்கள். பொய்யாநாவிற் புலவர்பெருமானாகிய கபில ரும் இவ்வுள்ளப் புணர்ச்சியினையே இக்குறிஞ்சிப் பாட்டில் விரித்துரைக்கின்றார். தலைவியைக் கொல்லவந்த யானையைத் தலைவன் தடுத்து நிறுத்திய காலத்து அங்குத் தோழியும் ஆயத்தினரும் அகலாது நின்றனராதலின் இயற்கைப் புணர்ச்சியாகிய இம்முதற்காட்சியில் மெய்யுறுபுணர்ச்சி நிகழாமை துணியப்படும். பின்னர் இரவுக்குறியில் வந் தொழுகுந் தலைவன் இரவில் நிகழும் பல்வகையிடையூறு கட்கிடையே தலைவியைக் காணவந்து வறிதே மீண்டமை யுணர்த்து முகத்தால் அவன் தனது இளமைகாரணமாக நெறியின் நீங்கா உள்ளத்திண்மையுடையனாதலையும் பழி யொடுபடாப்பெருமையுடையனாதலையும் கபிலர் பிரகத்தன் உளங்கொள நன்கு தெரிவித்தார். தலைமகள் தன்னுயிரி னும் மேலாக நாணத்தையும் அதனினுஞ் சிறந்த கற்பினை யும் பாதுகாக்கும் இயல்புடையளாதலை "ஆற்றின் வாரா ராயினும் ஆற்ற, ஏனை யுலகத்தும் இயைவதால் நமக்கு," என வரும் தலைவியின் வாய்மொழியால் அறிவுறுத்தினர். 'நம் சுற்றத்தார் அறத்தின் வழிநின்று என்னைத் தலை வர்க்கு வாழ்க்கைப்படுத்த உடன்படா ராயினும் இவ் வருத்தத்தைப் பொறுத்திருக்க மறு பிறப்பினும் இக்கூட் டம் இயைவதாகும்,' எனத் தலைமகள் கருதினமை மேற் காட்டிய தொடரால் விளங்கும். 'இப்பிறப்பில் தலைவனை மணந்து வாழும்பேறு எனக்குக் கிடைக்காது போயினும் அத்தகைய நற்பேறு அடுத்த பிறவியிலாயினும் எனக்குக் கிடைப்பதாகுக,' எனத் தலைவி ஆறுதல் பெற்றமைக்கு 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே, நாணினும் செயிர் தீர்காட் சிக் கற்புச் சிறந்தன்று,' எனக் கருதும் அவளது உள் ளத் துறுதியே காரணமாகும். நல்லிசைப் புலவராகிய கபிலர் ஆரிய மணமாகிய கந்தருவத்திற்கும் தமிழர் ஒழு கலாறாகிய களவொழுக்கத்திற்கும் உள்ள வேற்றுமையினை யும் தமிழியல் வழக்கமெனச் சிறப்பித் துரைக்கப்படும் களவொழுக்கத்தின் தூய்மையினையும் ஆரிய அரசன் பிர கத்தனுக்கு இக் குறிஞ்சிப்பாட்டினால் தெளிய விளக் கினமை இனிது புலனாம்.

கபிலர் பாடிய ஏனைய அகத்திணைப் பாடல்களின் சொல்லமைதிகளும் கருத்துக்களும் இக் குறிஞ்சிப்பாட்டின்கண்ணே ஒருங்கமைந்துள்ளன. கபிலருடைய புலமையின் உயர்வினைத்தும் விளங்க இப்பாடல் அமைந்திருத்தலால் இதனை ஒருமுறை பயில்வோர் இதன் சுவைநலங்களில் ஈடுபட்டு இக் குறிஞ்சிப்பாட்டினைப் பலகாலும் படித்து இன்புற விழைவர் என்பது திண்ணம். குறிஞ்சி நிலத்தின் இயல்பினையும் அதன்கணுள்ள பூ, மரம், பறவை விலங்கு முதலிய கருப்பொருள்களையும் அங்கு வாழும் கானவர்களுடைய பண்பாடுகளையும் உள்ளவாறு விளக்கிச் செல்வது இக் குறிஞ்சிப்பாட்டாகும். இதன்கண் செங்காந்தட்பூ முதல் மலைபெருக்கம்பூ வீருகவுள்ள தொண்ணூற்றென்பது வகைப் பூக்களையும் நிரமறிந்து யாலை தொடுத்தாற்போல் இன்னேசை பொருந்தச் சொல்லோவியஞ் செய்த ஆசிரியரது புலமைத்திறம் பெரிதும் பாராட்டுதற் குரியதாம். உலகியற்பொருள்களைக் கூறுமிடத்து அவற்றின் தன்மை பிறழாதபடி எடுத்துரைப்பது புலமைத்தன்மையாகும். தலைவி ஆயத்துடன் அருவியாடிச் சுனைகுடைந்து மலர்கொய்து விளையாடிய முறையினையும் வேட்டை மேற்கொண்டு அங்குவந்த தலைவனுடைய மணங்கமழ் தோற்றத்தினையும், புனத்திடையே கூற்றெனச் சினந்துவந்த மதயானையின் வருகையினையும் மாலைப்பொழுதின் தன்மையினையும் இப் பாட்டின்கண் கபிலர் உள்ளவாறு எடுத்துரைக்கும் முறை பெரிதும் சுவை தருவதாகும். முதலையின் வகையினை முதலை, இடங்கர், கராம் என இவ்வாசிரியர் வகைப்படுத்தினமை இக் கால ஆராய்ச்சியாளர்களாலும் ஏற்றுப் போற்றுதற் குரியதாம். புலவன் தான் சொல்லக்கருதிய பொருள்களை விளங்க எடுத்துரைக்கும் கருவி உவமையாகும். இப்பாட்டின்கண் முப்பதுக்கு மேற்பட்ட உவமைகள் எடுத்தாளப் பெறுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை நோக்குவோமாக.

அறத்தொடு நிற்கும் முறையினால் களவினை வெளிப்படுத்தக் கருதிய தோழி, நாணழிய மறை வெளிப்பட்

டால் தலைவி உயிர் வாழமாட்டாள் என்னும் அச்சத்தாலும் செவிலி இதனை யறிந்தால் என்ன நேருமோ என்னும் அச்சத்தாலும் இன்னது சொல்வதென்று தோற்றாமல் வருந்துகின்றாள். அச்சம் மிகுந்த அவளுடைய வருத்தத்திற்குப் பேரரசர் இருவர் ஒருவரோடொருவர் முரண்பட்டுப் போர் நிகழ்த்தும் இடர்க்காலத்தில் அவ்விருவரையும் சமாதானப் படுத்த முயலும் அறிவுடைய சான்றோர் அவ்விருவருள்ளத்தும் வெறுப்புத் தோன்றாதபடி அஞ்சி யொழுகும் முறையினை இவ்வாசிரியர் உவமையாகக் காட்டுகின்றார். "இகல்மீக்கடவும் இருபெரு வேந்தர் வினையிடை நின்ற சான்றோர்போல இருபேரச்சமோடு யானும் ஆற்றலேன்," என வரும் இவ்வுவமை கபிலரது அரசியற்பயிற்சியை யறிவுறுத்துவதாகும். பாரிவேளின் தோழராய் வாழ்ந்த கபிலர் வேந்தர்பலர் மேற்கொண்ட போர்நிகழ்ச்சிகளுக்கிடையே தூதாகச் சென்று பலமுறை சமாதானஞ் செய்திருப்பாராதலின் அவ்வாறு தூது செல்வோர் இருசாரார்க்கும் அஞ்சி யொழுகுமியல்பினைத் தோழியின் அச்சத்திற்கு உவமையாக எடுத்துரைத்தார். நன்றாக விளைந்து முற்றிய தினைக்கதிர் மேனோக்கித் தலை வளைந்து தாழ்தற்கு, யானை மூங்கிலைத் தின்றற்கு மேனோக்கி வளைத்த துதிக்கை பின்னர்க் கொம்பினிடத்தே தாழ்ந்து இறங்குதலை இவ்வாசிரியர் உவமையாகக் காட்டியுள்ளார்.

> 'நெற்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை
> முத்தார் மருப்பின் இறங்குகை கடுப்ப
> துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
> நற்கோட் சிறுதினை'

என இவ்வாசிரியர் கூறிய உவமையால் தினைக்கதிரின் செழுமையும் கதிரின்கண் தினை நெருங்கி நிரம்பியுள்ளமையும் நன்கு புலனும். சுனையில் நீராடிய தலைவியின் பொன்னிற முதுகிலே நனைந்து தாழ்ந்துபடிந்த கருங்கூந்தலுக்குப் பொன்னிலேபதித்து இழைத்த நீலமணியையுவமை கூறிய திறம் வியந்து பாராட்டுதற் குரியதாம். நல்லூழின் செயலால் தலைவியைக் காண விரும்பிய தலைவ

னுக்கு வேறு புலத்துள்ள புதிய பசுவைக்கண்டு அணைய வரும் விடையை உவமையாகக் கூறியது, தலைவனுள்ளத்து அன்பினால் எழுந்த வேட்கையினையும் அவனது பெருமிதத் தோற்றத்தையும் நன்கு புலப்படுத்துவதாம். கூற்றென வந்த மதயானையைக் கண்டு உயிர்பிழைத்தற்குரிய இடத்தையுணராது தலைவனைப் பாதுகாவலாகச் சார்ந்து நடுக்கமுற்ற மகளிர்க்குத் தெய்வம் ஆவேசித்து நடுங்கும் மயிலை யுவமையாகக் கூறியுள்ளார். தெய்வம் ஆவேசித்த மயில் தன்னுணர்வு அறவே நீங்கப்பெறாது தெய்வவுணர்வில் தான் சார்ந்துவிடுதலோ அன்றித் தன்னுணர்வு மீளப் பெற்றுத் தான் தனித்து நிற்றலோ என்னுமிவற்றுள் ஒருபாற்படாது அஞ்சி நடுங்குமாறுபோல இம் மகளிரும் தங்களைக் காப்பாற்றுதற் குரியோன் தலைவனே என அவனை முழுதும் சாராமல் சிறிது நாணி யொதுங்கியும் தாம் தனியே பிழைத்து நிற்றற்கியலாது அவனது பாதுகாவலை வேண்டியணுகியும் ஒருபாற் படாது அஞ்சி நடுங்கினர் என, விளக்கினமை உய்த்துணர்தற் குரியதாம். மலைச்சாரலில் சுனையின்கண் ஒழுகிய தேறலை நீரெனக் கருதிப் பருகிய மயில் களிப்பினால் தளர்வதற்குக் கழாய்க் கயிற்றிலே ஆடுகின்ற பெண் தாளத்திற்கு ஆற்றாது தளர்வதனை உவமையாகக் கூறியது அவ்வழகிய காட்சியினை நம் மனக்கண்முன் நிலைபெறச் செய்கின்றது. இற்செறிக் கப்பட்டுத் தலைவனைக் காணப்பெறாது அவன் வரும் வழியிலுள்ள இடையூறுகளை எண்ணி வருந்தும் தலைவிக்கு வலையிலகப்பட்டு வருந்தும் மயிலை உவமையாகக் காட்டியது, தலைவியின் துன்பமிகுதியை நன்கு புலப்படுத்துவதாம். இவ்வருத்த மிகுதியால் கண்ணீர் மல்க இமை சோர்ந்து கலங்கும் தலைவியின் கண்களுக்குப் பெருந்துளி யெறிந்து பெய்த மழையினாற் சிதைந்து அழகிழந்த மலரை உவமித்தது உள்ளத்தை யுருக்கும் நீர்மையதாம். இவ்வாறே இக் குறிஞ்சிப்பாட்டின்கண் அமைந்த உவமைகளெல்லாம் 'உவமையும் பொருளும் ஒத்தல்வேண்டும்' (உவம-8) எனத் தொல்காப்பியனார் கூறியவாறு உவமானமும் உவமேயமும் ஒத்தமைந்துள்ளன என்று உலகத்தார் மகிழ்ந்து

போற்றும்வண்ணம் அமைந்துள்ளமை கற்போர்க்குப் பெரு விருந்தாகும்.

'வேறு பல்லுருவிற் கடவுள்,' என்ற தொடரால் தமிழர் வழிபட்ட கடவுளின் இயல்பினை இவ்வாசிரியர் அறிவுறுத்துகின்றார். உலகமக்கள் தங்கள் தங்கள் விருப் பத்திற்கேற்ப அமைத்து வழிபடும் எல்லாத் தெய்வவடிவங் களும் முழுமுதற்பொருளாய் விளங்கும் ஒரு கடவுளுக் குரிய பல வடிவங்களே என மேற்காட்டிய தொடரால் கபிலர் அறிவுறுத்தினமை காணலாம். இவ்வுண்மை,

' ஆலமுங் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வமைமேய வேறுவேறு பெயரின்
எவ்வயி னோயும் நீயே ' (பரிபாடல்)

எனக் கடுவனிளவெயினனார் என்னும் புலவர் இறைவனைப் போற்றுதலால் இனிது விளங்கும். அக்காலத் தமிழ்மக்க ளுடைய குடும்ப இயல்பு, வழிபாட்டுமுறை, திருவிழாச் சிறப்பு, போர்முறை, மணமுறை, அணிவகை, வாழ்க்கைக் குரிய பிற சாதனங்கள் என்பவற்றைப் பற்றிய குறிப்புக் களை இக்குறிஞ்சிப்பாட்டில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லும் முறையால் கபிலர் பெருமான் அக்காலத் தமி ழகத்தை உயிரோவியஞ் செய்து காட்டுகின்றார். இப் பாட்டின் சொற்களெல்லாம் சிலவெழுத்துக்களாலான சிறு சிறு சொற்களேயாம். ஏறக்குறைய ஆயிரத்து நானூற்று நாற்பது சொற்களாலியன்ற இக்குறிஞ்சிப்பாட்டில் பிரசம் என்பது போன்ற ஒன்றிரண்டு வடசொற்களைத் தவிர மற்றவையெல்லாம் தூய செந்தமிழ்ச் சொற்களேயாம்.

சொல்லின் இனிமையும் எளிமையும் பொருளாழமும் அமைந்த இக்குறிஞ்சிப்பாட்டிற்கு முதல் முதல் உரை கண்டவர் ஆசிரியர் நச்சினார்க்கினியராவார். பத்துப் பாட்டு, கலித்தொகை என்னும் சங்கவிலக்கியங்களுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையில்லாதிருப்பின் இக் காலத்தார் அவற்றின் பொருள் நலங்களையெல்லாம்

அறிந்து மகிழ்தல் அத்துணை எளிய செயலன்றாம். இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகர், தெய்வச்சிலையார் முதலிய உரையாசிரியர் எல்லாருள்ளும் தாய்மொழியாகிய தமிழ்மொழியில் அளவிலாப் பற்றுவைத்துத் தொண்டுசெய்த பெருமை ஆசிரியர் நச்சினார்க்கினியர்க்கே சிறப்புரிமையுடையதாகும். இவர் சொற்களை மாட்டேற்றிப் பொருள்கூறியவிடங்களிற் சில ஆசிரியர் கருத்தொடு முரணுதல் ஒன்றே கருதி இவ்வாசிரியருடைய உரைத்திறனையும் சுவைநலங்களையும் உணராது நெகிழ்ந்து போதல் தமிழ் பயில்வார்க்கு அடாத செயலாம். செய்யுளினுள்ள தொடர்களை மாட்டேற்றிக்கொண்டு இவர் கூறிய உரைப்பகுதியைச் சொற்கிடக்கை முறையே நாம் இயைத்து நோக்கினால் நூலாசிரியர் கருதிய பொருள் நேரிதிற் புலனாதல் காணலாம். 'இருவேம் ஆய்ந்த மன்றல்' என்னுந் தொடர்க்குத், 'தலைவனும் யானும், பெருமையும் உரனும், அச்சமும் நாணும் சுருங்கிய நிலையாற் பிறந்த மணம்' என்றும் 'அகலிருவானம்' என்பதற்கு 'ஏனைப் பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயம்' என்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றார். இவ்விரு தொடர்க்கும் மற்றவர்கள் பொருள்கூற நேர்ந்தால் 'தலைவனும் யானும் ஆராய்ந்து நிச்சயித்த மணம்' என்றும் 'அகன்று விரிந்த பெரிய ஆகாயம்' என்றும் முறையே பொருள் கூறியிருப்பர். இவ்வாறு எளிதிற் பொருள்படும் இத்தொடர்களுக்கு மேற்காட்டியவாறு நுண்பொருள் கூறியது நச்சினார்க்கினியரது நுண்ணறிவின் மாட்சியினை இனிது விளக்குவதாகும். இங்ஙனம் தம் புலமைத்திறத்தால் நச்சினார்க்கினியர் கூறிய உரைநலங்களையெல்லாம் இடைவிடாது படித்தின்புறுதல் தமிழ்ப்புலவர் கடனாகும்.

இக்குறிஞ்சிப் பாட்டின் இறுதியில் தோழி கூறுவதாக அழகிய வெண்பாவொன்று அமைந்துள்ளது.

> 'நின்குற்றம் இல்லை, நிரைதொடியும் பண்புடையள்
> என்குற்றம் யானும் உணர்கலேன்—பொன்குற்று
> அருவி கொழிக்கும் அணிமலை நாடன்
> தெரியுங்கால் தீய திலன்.'

என்பது அப்பாடலாகும். இளையோர் விளையாடித் தொழில் செய்தால்தான் அவர்களுடைய உள்ளமும் உடலும் உறுதி பெறும் என்ற எண்ணத்தால் தாயாகிய நீ எங்களைத் தினைப் புனங்காத்து விளையாடி வரப் பணித்தாய் ஆதலின் நின் பால் ஒரு சிறிதும் குற்றமில்லை என்பாள், 'நின் குற்றம் இல்லை,' எனச் செவிலியை நோக்கிக் கூறினாள். நின் ஏவல் வழியொழுகும் தகுதியுடையவளாகிய தலைவியும் நின் கருத்தின்படியே தினைப்புனத்திற் கிளிகடிந்து அருவியாடியும் சுனைகுடைந்தும் பூக்கொய்தும் விளையாடினாளாதலின் அவளும் தனக்குரிய பெண்மைக்குணங்களில் ஒரு சிறிதும் குறையுடையாளல்லள் என்பாள், 'நிரைதொடியும் பண்புடையள்,' என்றாள். தலைவியின் நிழல்போன்று அவளைப் பிரியாது யானும் உடனிருந்தேன் ஆதலின் ஏதாவது என்பாற் குற்றமிருக்குமானால் அதுவும் என் நெஞ்சறிய நிகழ்ந்ததன்று என்பாள், 'என் குற்றம் யானும் உணர்கலேன்,' எனப் பணிந்த மொழியாற் பொறுத்தருள வேண்டினாள். எதிர்பாராத வகையில் எங்களுக்கு நேர்ந்த இடையூறகற்றி எங்களை யுய்வித்த அழகிய மலைநாட்டிற்குரியனாகிய தலைவன் வேட்டைத்தொழில் மேற்கொண்டு வரும்வழியில் தலைவியை யெதிர்ப்பட்டானாதலின் ஆராய்ந்து பார்க்குங்கால் அவனும் குற்றமுடையானல்லன் என்பாள், 'பொன்குற்று, அருவிகொழிக்கும் அணிமலை நாடன் தெரியுங்கால் தீயது இலன்,' என்றாள். எனவே நம் அனைவருடைய கருத்தின்றியும் எதிர்பாராது நிகழ்ந்த இவ்விருவருடைய உறவினை அறத்தொடு பொருந்திய நல்லூழின் செயலாகக் கருதியமைதலே தக்கதென்று தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றமை புலனும். பொன்னைப் பொடியாக்கிக் கொழிக்கும் அருவியினையுடைய மலைக்குத் தலைவன் எனவே அவன் செல்வத்தாற் குறைவிலன் என்பதும் தாய்க்கு அறிவித்தவாறாயிற்று.

இவ்வாறு தோழி அறத்தொடுநிற்கக் கேட்ட செவிலியானவள், இம்மறையை நற்றாய்க்குத் தெரிவிப்பாள் என்றும், நற்றாய் தன் கணவனுக்கும் புதல்வர்களுக்கும் குறிப்

பாக வுணர்த்துவாள் என்றும் பின்னர்ப் பெற்றோர் கொடுப்பத் தலைவன் தலைவியை மணந்துகொண்டு இல்லறம் நிகழ்த்துவன் என்றும் பிரகத்த மன்னன் உய்த்துணர்ந்து கொள்ளும்படி இக்குறிஞ்சிப்பாட்டு அமைந்துள்ளமை நினைந்து மகிழ்தற்பாலதாம்.

இதுகாறும் கூறியவாற்றால் ஆரிய அரசன் பிரகத்தன் என்பானுக்கு அருந்தமிழ்க் களவொழுக்கமாகிய அன்பினைந்திணையொழுகலாற்றின் உயர்வினை அறிவுறுத்த முகமாக நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கமாகப் பொய்யா வாய்மொழிக் கபிலர் என்னும் புலவர்பெருமானால் இறைவன் உயர்மதிற் கூடலின் ஆராய்ந்த ஒண்தீந்தமிழின் இலக்கியச் சாயலாக இயற்றப்பெற்றது இக்குறிஞ்சிப் பாட்டென்பது ஒருவாறு புலனாதல் காணலாம்.

கூ. பட்டினப் பாலை

[ஆ. அருளப்பன், பி. ஏ., பாளையங்கோட்டை]

நம் செந்தமிழ்ப் பழம் பெரும் புலவருள் ஒருவராய கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப்பாலை பத்துப்பாட்டுள் ஒன்பதாவது. பண்டுதொட்டு இன்றுகாறும் புலவர் புரவலரைப் பாடுதல் உண்டு. அங்ஙனம் பாடிப் புகழ்தற்கு அவர்கள் பல்வேறு முறைகளைக் கொண்டார்கள். முற்காலப் புலவர்கள் புறப்பொருள் துறைகளிலும் பிற்காலப் புலவர்கள் பரணி முதலிய பிரபந்தங்களிலும் வைத்து ஏற்றுதல் பெரும்பான்மை.

இவர் சோழ மன்னன் திருமாவளவனைப் பாடுதற்குக் கையாண்டுள்ள முறை அருமை வாய்ந்தது. அரசிருக்கை நகராகிய காவிரிப்பூம்பட்டினத்துச் சிறப்பை விளங்கக் கூறி, அவனது வெய்ய வேலின் தன்மையையும் செய்ய கோலின் தண்மையையும் எடுத்தியம்புகிறார்.

செல்வப் பொருள் ஈட்டுதற் பொருட்டுத் தன் தலைவியைப் பிரிய எண்ணிய தலைவன் கூற்றாக இப்புகழுரை அமைந்திருப்பது, அருங்கனிக்கு நறுந்தேன் கூட்டியது போலாயிற்று. பிரிதல் அகப்பொருள் இலக்கியத்தில் பாலைத் திணையாகும்.

'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே............
திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.'

"என்றும் எவ்வகையிலும் முட்டுப்படாமல் பல்வகைச் சிறப்புக்களையும் பெற்றதாய காவிரிப்பூம்பட்டினத்தையே பெறினும், நீண்ட கரிய கூந்தலையும் விளங்கும் அணிகலன்களையும் பூண்ட என் தலைவியைத் தனியாக இருக்கவிட்டு நெஞ்சே! வரமாட்டேன். நீ போய் வாழ்வா

யாக. ஏனெனின், சோழ மன்னனாகிய திருமாவளவன் தன் பகைவரை ஒழிப்பதற்கு ஓங்கிய வேலாயுதத்தினும், வழியில் கடந்து செல்ல வேண்டிய காடு வெப்பமும் தான் பமும் மிகுந்தது. அதற்கு மேலாக, தலைவியின் பெருமையும் மென்மையுமுடைய தோள் அவ்வேந்தனது செங்கோலினுங் குளிர்மை உடையது,” என்று தலைவன் செலவிடை அழுங்கல் பிரிதல் நிமித்தமாகிப் பாலையாயிற்று.

கடற்கரைநகர் பட்டினம் எனப்படும். (பேரூரை நகரமென்றும் உள்நாட்டு நகரைப் பட்டணம் என்றும் கடலோர நகரைப் பட்டினம் என்றுங் கூறுதல் மரபு). எனவே, பாலைத்திணைப் பொருள் கருவாயமைய, சோழ நாட்டுத் தலைநகராய காவிரிப்பூம் பட்டினத்தை விளக்கி விரியப் பாடி, நிரம்பிய உருவாய இப்பாட்டுக்குப் “பட்டினப் பாலை” என்று பெயரிட்டார் புலவர்.

இப்பாட்டு 301 அடிகளுடையதாகவே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அதனுள், 210-ம் அடியாக அமைந்துள்ள

‘கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது’

என்ற அளவடி ஒன்றை இங்ஙனம் குறளடி இரண்டாக அமைப்பது மிகப் பொருந்தும். ஆகவே, குறளடி 167, அளவடி 134, ஈற்றயலாகிய சிந்தடி ஒன்று, என 302 அடிகள் கொண்ட இவ்வஞ்சி நெடும்பாட்டு ஆசிரியவடி விரவி வந்த ஏந்திசைத் தூங்கல் விரவியற் குறளடி வஞ்சிப்பாவாகும். வல்லார்வாய் ஓசைநயங் கேட்டு உணர்ந்து, அகவலிசை கலந்த தூங்கலிசை மிகுந்த இப்பாவைச் சுவைப்போர் தீம்பாகு கலந்த நல்லாவின் பாலின் இன்சுவை பெறுவர்.

‘வசையில்புகழ் வயங்குவெண்மீன்’ என்ற முதலடி தொடங்கி, ‘குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு’ என்ற 28-ம் அடி வரையில் பாட்டுடைத் தலைவனாகிய கரிகாற் பெருவளத்தானது சோழ நாட்டு வளத்தையும், ‘வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி,’ என்ற 29-ம் அடி முதல், ‘புலம்

பெயர் மாக்கள் கலந்தினி துறையும்,' என்ற 218-ம் அடி வரையில் காவிரிப்பூம் பட்டினத்தின் முட்டாச் சிறப்பையும், 'கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு,' என்ற 222-ம் அடி முதல், 'அரிமா வன்ன அணங்குடைத் துப்பின்,' என்ற 299-ம் அடிவரை வெற்றி, கொற்றங்களின் ஏற்றத்தையும் விளக்கிப் பாடுகின்றார் உருத்திரங் கண்ணனார்.

நாட்டுவளம் :—வான் பொய்த்து வறள் காலத்தும் தான் பொய்க்காது நீர் ஒழுக்குடையதாய் பொன்போலும் வளத்தைக் கொழிக்கும் காவிரியாறு பாயப்பெற்றது சோழநாடு. இது பாக்கம் எனப்படும் நெய்தல நிலத்துச் சிற்றூர் பலவற்றையும், ஒன்றுக்கொன்று அணித்தாய மருதநிலச் சிற்றூர் பலவற்றையுங் கொண்டது. என்றும் விளைவு அறாத நிலங்கள் தந்த பயனாய கருங் கரும்பு சாறு பிழியப் பெற்றுக் காய்ச்சப்படும் ஆலைகள் ஆங்கு உள. கொழுத்த எருமைக் கன்றுகள் காய்ப்பருவததுச் செந்நெற் கதிரை யருந்திவிட்டு நெற்களஞ்சியங்களின் நிழலில் படுத்து உறங்கும்

நூற்றுக்கணக்காய்த் தேங்காய்கள் கொண்ட குலைகளைத் தாங்கும் தெங்குகளும், குலையீன்றுள்ள வாழைகளும், பாக்காம் காய்கள் நிறைந்த கமுகுகளும், மணங் கமழும் மஞ்சட் செடிகளும், மாமரங்களின் தொகுதியும், நுங்குக் குலைகள் செறிந்த பனைகளும், அடிபரந்த சேம்புச் செடிகளும், முளை முளையா அடுக்கிய இஞ்சிச் செடிகளும் செழித்து நிற்கும்.

பெரிய வீடுகளின் அகன்ற முற்றங்களில் உணங்குதற்குப் பரப்பப்பட்டுள்ள நெல்லைக் கவர்தற்கு வருங் கோழிகளை அழகிய மகளிர் பொன்னாலாய கொடுங்கால் மகரக்குழைகள் கொண்டு எறிவர். அக் கனங்குழைகள், சிறுவர் உருட்டி விளையாடுகின்ற மூன்று உருளைகளுடைய சிறு தேர்கள் முன்செல்வதை விலக்குகின்றன. இங்ஙனம் விலக்க விலகிச் செல்லத்தக்க பகையேயன்றி, நிலை கலங்குதற்கு ஏதுவாம் பகையை அறியாத பல கொழுமை

பெற்ற குடிகளைக் கொண்டன அப்பாக்கங்களும் ஊர்களும்.

நகரச் சிறப்பு :—உப்பை ஏற்றிச் சென்று விலை கூறி விற்றுவிட்டு நெல்லோடு திரும்ப வந்த பஃறிகள் கரையிலுள்ள தறிகளில் கட்டப்பட்டுக் கிடக்கப்பெற்ற உப்பங்கழி நகர்ப்புறத்தைச் சூழ்ந்திருக்கும்! உள்ளங் களித்தற்கு ஏதுவாம் தண்பூஞ்சோலைகள் அங்கு அமைந்திருக்கும். உரனும் உயரமுங்கொண்ட கரையுடையதாய் நறு மலர்கள் நிறைந்த பெரிய பொய்கையும், இம்மை மறுமையாம் இருமை இன்பத்தையுந் தரும் சோமகுண்டஞ் சூரியகுண்டம் எனப் பெற்ற இணைந்த ஏரிகளும் நகரில் உள்ளன.

அரசனது புலிமுத்திரை பொறிக்கப்பெற்ற கதவினைக் கொண்ட செல்வம் பொலியும் மதிலையுடையதாய் இம்மைப் புகழை நிலை நிறுத்துமாறு அற்றூரழி பசிதீர்த்தலாகிய அறத்தை நிலைநாட்டிய அகன்ற சமையற்கூடம் அமைந்துள்ளது. (திருவிதாங்கூரிலுள்ள ஊட்டுப்புரை இவ்வட்டில் வகைப்பட்ட தென்னலாம்) தண்ணிய கேணியைக் கொண்ட முற்றம் அமைந்ததாய், பெரிய காளைகள் கட்டப்படுந் தொழுவம் உண்டு. சமண பௌத்த முனிவர்கள் தங்கும் பள்ளிகளும், விளங்குஞ் சடையுடைய சைவத் துறவிகள் தங்கும் பொழில்களும அங்குள. பூதங் காப்பதால் புகுதற்கரிய காளி கோட்டமும் உண்டு.

குட்டிகளோடு திரியும் பன்றிகளையும் பலவகைக் கோழிகளையும், மணல் சரியாதிருக்க உறை வைத்தமைத்த கிணறுகளையும் கொண்டது புறச்சேரி. அங்கு, பரந்த மணல் திட்டைமேலிருந்து, கடுந்தொழில் செய்பவரும் உளக்கிளர்ச்சியுடையருமாய மக்கள், கடலிலுள்ள இறால் மீனைச் சுட்டுத்தின்றும், வயலாமை இறைச்சியை அவித்து உண்டும், வறண்ட மணலிடத்துப் படர்ந்த அடப்பங் கொடிப் பூவை அணிந்தும், நீரில் வளர்ந்த ஆம்பல் மலரை அணிந்தும், விரிந்த இடத்தையுடைய ஊர் வெளியில் பலர் ஒன்றுகூடி, ஒருவரொருவரைப் பற்றிப் பிடித்து, மிகுந்த சினங்கொண்டு, எளிதில் யாருந் தோல்வி பெறுதவராய்

கையாலும் கோலாலும் பெரும்போர் செய்யும் வலிமை விளங்கப் பொழுது போக்குவார்.

பூமலி பெருந்துறையில், ஆட்டுக்கிடாய்கள் ஒன்றோடொன்றும், சிவல் பறவைகள் ஒன்றோடொன்றும போர் செய்து விளையாடித் திரியும். நெடிய தூண்டிற்கோல் சார்த்தப்பட்ட கூரைகளமைந்த குடிசைகளின் முற்றங்களில் மீன் வலைகள் உலர்ந்து கிடக்கும். பரதவர் முழுமதி நாளில் மீன்வேட்டைக்குச் செல்லாது தங்க, மகளிர் வெண்கூதாள மலர்மாலை சூடி சுறாமீனின் கொம்பை நட்டுக் கடல் தெய்வத்தை ஏற்றுவித்து, தாழைமலரும் பதனீரும் படைத்து வழிபடுவார்கள். பின் அம்மலர்களை யணிந்து, பதனீரையுங் குடித்து உண்டாடி, மீன் புலால் நாறும் மணல்பரந்த பூங்கானலிடத்துக் கூடற்றுறையில் (சங்கமத் துறை—காவிரி கடலொடு கலக்குமிடம்) தீமைதீரக் கடலாடியும், கடலாடியதால் ஆய உப்பு மாசுபோகக் காவிரிப் புனலில் குளித்தும், அலையை உழக்கி நண்டுகளோடாடியும் பகற்பொழுதில் இன்பம் நுகர்வர். அந்நுகர்ச்சியால் துறையானது 'பெறற்கருந் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும் பொய்யா மரபி,'னதாம்.

இரவில், கொழுநரோடுறையும் மடமங்கையர், பட்டாடை களைந்து துகிலாடை கட்டி, மட்டு என்னும் பானத்தை நீக்கி மதுவென்னும் பானத்தை அருந்தி, களிப்புற்று

> 'மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்
> மகளிர் கோதை மைந்தர் மலையவும்'

இன்பம் நுகர்ந்து, இன்னிசைப் பாடல்களைக் கேட்டும், நாடகங்கள் கண்டு மகிழ்ந்தும் துயில் கொள்வர். கடைக்கங்குல் நேரத்தில், வேந்தனுக்குரிய சுங்கப்பொருள் காக்கும் அலுவலாளர், அளந்தறியவியலா ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களைக்கொண்ட பொதிமூடைகளுக்குப் புலிமுத்திரை பொறித்து, சுங்கச்சாவடி முன்றிலில் சேர்த்துவைப்பார்கள்.

ஆவணத் தெருவில், படிக்கால் (Stairs), திண்ணை, பல்தகைப்பு, இடைகழி (ரேழி) இவை அமைந்த உயர்ந்த மாடங்களில், கிளிமழலை மெல்லியலார், பலகணிகளி லிருந்து கண்டு தொழ, 'குழலகவ யாழ்முரல, முழவதிர முரசியம்ப' செவ்வேளாய முருகனுக்கு வெறியாட்டெடுத் தல் போன்ற விழாக்கள் நடக்கும்.

கடவுள் உரு எற்றப்பெற்றுள்ள கோயில்களின் மல ரணி வாயிற்புறத்து நடப்பட்டுப் பலர்தொழுங்கொடிகளும், மஞ்சிகையுள் (Chest, box) இட்டுப் பேணப்பட்ட பண்ணி யங்கள் வைத்துள்ள கடைகளில் கட்டப்பெற்ற வெண் ணிறத் துணிக் கொடிகளும், பல்கேள்வித் துறைபோகிய நல்லாசிரியர் சொற்போர் (Debate) நடத்துவது குறித்து எடுக்கப்பெற்ற கொடியும், புகார்த்துறையில் தூங்குநாவாய் களின் கூம்புமிசைக் கட்டப்பெற்ற கொடிகளும், மீனையும் மற்றானையும் பொரிக்கும் முற்றத்தையுடைய மதுக்கடை யில் கட்டப்பெற்ற கொடியும், இன்னும் பல்வேறு வகை யில் பல்வேறு உருவொடு பொலிந்த கொடிகளும் நிறைந்து வெயில் நுழைவு அறியாதிருந்தது நகர்ப்புறம்.

நீர்வழிவந்த குதிரைகளும், நிலவழிவந்த நல்ல மிளகும், மலைபடுபொருள்களான மணியும், பொன்னும், ஆரமும், அகிலும், கடல்படுபொருள்களான முத்தும், பவழமும், ஈழம், காழகம் எனுமிடங்களிலிருந்து வந்த உணவு முதலிய பொருள்களும் நிறைந்து விளங்கியது சந்தைத்தெரு.

> 'கொலைகடிந்தும் களவுநீக்கியும்
> நல்லாறெடு பகடோம்பியும்
> நான்மறையோர் புகழ்பரப்பியும்
> பண்ணிய மட்டியும் பசும்பதங்கொடுத்தும்
> புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை'

நடாத்திய உழவரும்,

> 'நெடுநுகத்துப் பகல்போல
> நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
> வடுவஞ்சி வாய்மொழிந்து

தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்'

வணிகருஞ் செறிந்து வாழும் தெருக்கள் தோன்றும்.

பல்வகை மொழிகள் பேசும் பல்வேறு நாட்டார், தத்தம் தொழிலின்பொருட்டுத் தந்நாட்டை விட்டுவந்து, இங்குள்ளாரோடு இனிமையாகக் கலந்து வாழ்வார்.

இங்ஙனம் எவ்வாற்றானும் முட்டாச் சிறப்பினையுடையது காவிரிப்பூம்பட்டினம்.

பாலைப்பொருள் :—அப்பட்டினத்தையே பரிசிலாகப் பெறினும்

'வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே.'

எனெனின்,

'திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.'

வேலின் வெய்ய தன்மை:—திருமாவளன் இளமையிலே பகைவரிடஞ் சிறைப்பட்டான். சிறையகத்திருந்தே வீரமிகுந்து, மதிலேறிச் சிறைகடந்து, எதிர்த்தோரை வாளுக்கிரையாக்கி, முறையாகத் தன்னரசதாயத்தைப் பெற்றான். அதனுடைமையாது, யானைவீரரும் குதிரை வயவரும் பட்டுவிழவும், உழிஞை சூடிப் பகைவரது அரணைத்தாக்கிப் பகையொழித்தான். பகைப்புலத்து மருதநிலக் குடிகளை ஒட்டினன். வற்றாத நீருடைமையால் முதலைகள் மிகுந்த பொய்கைகள் அழிக்கப்பட்டு, அறுகோட்டு இரலையோடு மான்பிணை உகளும் முல்லைநிலமாய் மாறின. நந்தா விளக்கேற்றப் பெறுவதும், கந்து எனும் உருவமைந்ததுமாய கோயிலைப் பாழ்படுத்த, அங்குக் காட்டுயானைகள் உறைவனவாயின. கூத்தரது முழவோசையோடு யாழிசை கேட்கப் பெருவிழா நடை

பெரும் மன்றங்கள் பாழ்பட்டு, நெருஞ்சிற் செடியும் அறுகம்புல்லும் படர்ந்து, நரியுங் கூகையும் ஆண்டலைப் புள்ளும் கூளியும் கூடுமிடங்களாயின. விருந்து பேணும் ஆரவாரமும், பைங்கிளி மழலையொலியும் கேட்கப்படும் செழிப்பு மிகுந்த பேரில்லங்களைச் சார்ந்த களஞ்சியங் களிற் கிடந்த நெல்லை வேடர் கொள்ளைகொள்ள, அங்குக் கூகைகள் குடிகொண்டன.

இங்ஙனம் திருமாவளவன் தன் தெவ்வரது அருங்கடி யரண்களை அழித்தமையின்,

> 'மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
> வான்விழ்க் குவனே வளிமாற் றுவனென'

யாவரும் பாராட்டக் கேட்டு,

> 'பல்லொளியர் பணிபொடுங்க
> தொல்லருவாளர் தொழில்கேட்ப
> வடவர் வாடக் குடவர் கூம்பத்
> தென்னவன் றிறல்கெட...............
> ....
> புன்பொதுவர் வழிபொன்ற
> இருங்கோவேள் மருங்குசாய'

வெற்றித் திருவோடு பொலிந்து பீடுற்றான்.

கோலின் தன்மை:—காடுகளை அழித்து, குளங்கள் தொண்டி, நிலவளத்தை வளர்த்து நாடாக்கினான் மன்னன். உயர்நிலை மாடங்களோடு விளங்கிய உறையூர் எனுந் தனது உள்நாட்டுப் பெருநகரை விரிவாக்கி, கோயில் கட்டி, குடிகள் நிலைபெற்று வாழச் செய்தான். நகர்க்கு ஏமமாகச் சிறந்த அரணையும் அமைத்தான்.

பிறகுறிப்பு நயம்:—வானைப் பாடி நன்னீர்த்துளி பெற்று உயிர் வாழும் இயற்கையுடைய புள்ளானது, நீரின்றித் தேம்புமாறு வானம் பொய்ப்பினும், காவிரி யாறு பொய்க்காது என்றமையால், புரவலனாகிய திருமா வளவன் தன்னைப் பாடும் புலவனாகிய உருத்திரங் கண்ணனார் வறுமையால் வாடாதவாறு பொருள் அளித்துக்

காப்பான் என்பதும், பட்டினம் பெறினும் என்றமையால், பரிசில்வேண்டி நிற்பதும், வயங்கிழை யொழிய வாரேன் என்றமையால், காலந் தாழ்த்தாது பரிசில் கொடுத்து அனுப்பிவிடவேண்டும் என்பதும், பிறகுறிப்பாய் உணரப் பெறுமாறு இப்பாட்டில் ஆசிரியர் கூறியுள்ள அருமை எண்ணுந்தோறும் இனிமை பயக்கும்.

ஓர் இன் கலைநுட்பம் :—நிலவியற்கைக் காட்சி (Lands-capi) ஒன்றை ஓவியமாக அமைக்கும் வல்லுநன் ஒருவன், பூங்கொடி செடி மரங்களும், பொய்கையுங், குன்றுங், குடிசையும் அழகுற எழுதுவதோடு அமையாது, மரக் கிளையில் பறவைகளும், பொய்கையில் செந்தாமரையும், இயைபுற வரைந்து எழில் பெருக்குமாறுபோல், இவ் வாசிரியரும் தம் சொல்லோவியமாகிய இப் பாட்டில் இயற்றியிருப்பதைக் காண்கிறோம். கரும்பாலையை அடுத்த செறுவில் நின்ற நெய்தற்பூக்கள் ஆலைத்தீ வெக்கையால் வாடின என்பதும், தாழ்காவில் முனிவர் வளர்த்த வேள்வித் தீயினின்று எழுந்த புகையை வெறுத்து, பொழிலிலுள்ள குயில் தன் பெடையோடு போய்ப் புறாக்களோடு துச்சில் சேக்கும் என்பதும்,

> 'கல்லெறியுங் கவண் வெரீஇப்
> புள்ளிரியும் புகர்ப் போந்தை'

என்பதும், சுங்கச்சாலையில் பொதிமூடைப் போரேறி நாயும் ஆட்டுக்கிடாயுங் குதித்தாடும் என்பதும் இன்ன பிறவும் இவ்வகைப்பட்டன என்னலாம்.

மட்டும் மதுவும் :—பூமலி பெருந்துறையில் மங்கையர் பட்டுடுத்தி மாந்தரோடு மட்டருந்திப் பகற்காலத்து விளையாடிப் பின் இரவில் துகிலுடுத்தி மதுவருந்தி இன்பம் நுகர்ந்தாரென வருவதால், மட்டும் மதுவும் இருவேறு பானங்கள் என்பது தெரியலாம். இவற்றை வீரபானம் காமபானம் என்பர். எனின், இவற்றின் வேறுபாடென்ன? சங்க இலக்கியங்களினின்று அக்காலத்தில் தமிழர் பலவகை வெறிதரும் நறவுகள் மாந்தினரென

என்னுதற்கிடமுண்டு. மட்டு, மது, கள், நறவு என்ற சொற்களெல்லாம் கொங்கு பூந்தேன் எனப் பொருள் படுவனவே. இவ்வாசிரியர் பெரும்பாணாற்றுப்படையில் அரிசிகொண்டு ஆக்கப்படும் தோப்பி என்னும் இல்லடு கள்ளைப்பற்றியும், "நீலப்பைங் குடங்"களாகிய குப்பிகளில் உள்ள நறவைப்பற்றியுங் கூறுகிறார். இவ்வகை, யவனர் நாட்டினின்று வந்த கொடிமுந்திரிப்பழச்சாறு (Wine) எனக் கருதப்படும்.

உவமைகள் சில:—பொருள் தெளிவாயும் எளிதாயும் உணரப்படுமாறு, தொல்லாசிரியர் முறைப்படி, இவ்வாசிரியரும் உவமை உரைக்கும் நயம் நவில்தொறும் நனி இனிமை நல்குவதாகும். படகுகள் கழிக்கரையில் நடப் பட்டுள்ள தறிகளில் வடத்தால் கட்டப்பெற்று வரிசையாகக் கிடத்தலுக்குப் பந்தியில் புரவிகள் கட்டப்பெற்று ஒழுங்காக நிற்றல் உவமை. வெண்ணிறமணல் முற்றத்தில் (கருநிற) வலை கிடந்தணங்குதற்கு, நிறை வெண்மதியிற் காணப்படும் கறையிருள் உவமை. புகாரின் கூடல்துறையில் ஆற்றின் வெள்ளியநீர் கரிய கடல்நீர்ப் பரப்போடு கூடுதற்கு, வெண்மைகொண்ட மேகம் கருமையமைந்த மலையில் படிதல் உவமை. பண்ணியக் கடைகளில் வரிசையாக நடப்பெற்றுள்ள வெள்ளைத் துகிற்கொடிகட்கு, கரும்பின் வெள்ளைப்பூக்கள் உவமை. நடுநிலை நிற்கும் நன்னெஞ்சுக்கு நெடுநுகத்தின் பகலாணி உவமை. குழியில் விழுந்த களிறு கரையை இடித்துத்தள்ளி வெளியேறித் தன் பிடியை அடைதல், திருமாவளவன் பகைவரது திண்ணிய சிறைமதிலைக் கடந்து தன் தாயத்தை அடைந்ததற்கு உவமை.

செய்திகள் சில:—பட்டினப்பாலையினின்றும் நாம் அறியக்கூடிய பழங்காலச் செய்திகளும் வரலாறுகளும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் மன்னிய நம் முன்னோரது வாழ்க்கை முறைகளைத் தெளிவிப்பன. கரும்பை ஆலையிலிட்டுப் பிழிந்து சாற்றைக் காய்ச்சி, கட்டி கொள்ளப்பட்டது. சிறுவர் மூன்று உருளை

கொண்ட தேரை உருட்டி விளையாடினார்கள். வீடுகளில், நாய், ஆடு, சேவல், கோழி, கிளிகளும் வளர்க்கப்பட்டன. பரதவர் கடல்தெய்வத்தைச் சுறவுக்கோடு நட்டு வழிபட்டார்கள். வெள்*ளுவா (முழுமதி - பௌர்ணமி) நாளில் அவர்கள் மீன்வேட்டைக்குச் செல்லாது தம் மகளிரோடு உண்டாடியும் கடலாடியும் இன்பம் நுகர்ந்தார்கள். கூடல் (சங்கமம்) துறையில் குளித்தால் தீவினை தீரும் என்று மக்கள் நம்பினார்கள். சிறப்பாகப் பட்டாடைகளும் பொதுவாகப் பஞ்சாடைகளும் உடுத்தினார்கள். பாட்டுக் கச்சேரிகளும் நாடகங்களும் நடத்தி மகிழ்ந்தார்கள். படிக்கால் (Stairs) அமைந்த மாடகூடங்களைக் கொண்ட பெரிய வீடுகள் கட்டிக் குடியிருந்தார்கள். கடை முதலியவற்றுக்கு அடையாளக்கொடி கட்டும் வழக்கம் இருந்தது.

காவிரிப்பூம்பட்டினமானது பொழில் பொய்கை முதலியனவும், ஏழைகட்கு உணவூட்டுதற்கென்று அமைந்த அட்டிலும், புறச்சேரியொடு பூமலிபெருந்துறையும், சுங்கச்சாவடியும், (Custums House) வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும், உழவர் வணிகர் தெருக்களுங் கொண்டதாய் விரிவாய் அமைந்த பெருநகர் என இப்பாட்டு அறிவிக்கின்றது.

(சிலப்பதிகாரம் காட்டும் காவிரிப்பூம்பட்டினம் இதனினும் சிறந்ததாய், பலவகை மன்றங்களையும், வீதிகளையும், மாடமாளிகைகளையும் கொண்டிருப்பதும் பல்லாண்டுகளாக ஏற்பட்ட வளர்ச்சியின் பயன் எனக் கருதுதற்கு இடமுண்டு. ஆதலின் அந்நூலாசிரியராய இளங்கோவடிகள், உருத்திரங் கண்ணனார்க்கு ஒரு தலைமுறைக்கேனும் பிந்தியவராக வேண்டும்.)

[*உவா என்பது பழைய இலக்கியங்களில் முழுமதி (பௌர்ணமி) அழிமதி (அமாவாசை) என்ற இருநாளையுங் குறித்துவரும். மலையாள மொழியில் இச்சொல் 'வாவு' என்றும், முழுமதிநாள் 'வெளுத்த வாவு' என்றும், அழிமதிநாள் 'கறுத்த வாவு' எனவும் வழங்குகிறது.]

பண்டைத் தமிழர் வணிகப் பெருக்கும் பரப்பும், அவர்கள் திரைகடல் கடந்து ஈழம், காழகம் (பர்மா) முதலிய நாடுகளுடன் நடத்திய வாணிகத்தால் நன்கு விளங்கும்.

பொருநராற்றுப் படையாலும் மற்று சங்கப் பாடல் களாலும் அறியப்படுமாறுபோல் (வெண்ணி, வாகையென் னும் போர்க்களங்களில்), குடவர், தென்னவர், வடவர், அருவாளர், ஒளியர், இருங்கோவேள் முதலியோரைத் திருமாவளவன் வென்றான் என்பது இப் பாட்டால் வலியுறும்.

ஆசிரியர் :—ஆசிரியர் ஊராகிய கடியலூர் என்பது சோழநாட்டு மருதநிலப் பகுதியைச் சேர்ந்ததாகலாம். 'மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்,' என்ப தற்கேற்ப உருத்திரங்கண்ணனார் என்பது உருத்திரன் மகனாகிய கண்ணனார் என விரியும் என்ப. அக்காலத்தில் சிவபுராணக் கதைகள் வழங்கின என்பதற்குச் சான்று கள் உள்ளன. ஆதலின் இப்பெயர் மிகுந்த சினங் கொண்ட கண்ணையுடையவர் என்று பொருள்பட்டிருக்க லாம் எனக் கொள்வதற்கும் இடம் உண்டு.

தமிழ்நாட்டின் பல்வேறிடங்களிலுமுள்ள நிலவியற் கையையும் மக்கள் வாழ்க்கை முறையையும் ஆசிரியர் நுட்பமாய்க் கண்டு உணர்ந்தவரென்பது, பெரும்பாணாற் றுப்படையினும் இப் பட்டினப்பாலையிலும் அவர் விளக்கி யுள்ள ஐந்நிலத்தன்மை வருணனையாலும் அந்நிலத்து மக்கள் உறையுள், உடை, உணவு, உழைப்பு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை மிகத் தெளிவாய் நம் அகக் கண்ணால்காணுமாறு அரிய ஆற்றலோடு உரைப்பதாலும் அறியலாம்.

'பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறை.'

என்ற 104-105-ம் அடிகள் அப்படியே பெரும்பாண் 388-389-ம் அடிகளாக வந்துள்ளன. இத்தகைய தனி

மதிப்பு இவ்வடிகட்கு ஆசிரியர் கொடுப்பானேன்? மக்கள் பொழுது போக்காய இன்பநுகர்ச்சியுள் பூமலிபெருந் துறையில் பெற்ற களிப்பை மிகச் சிறந்ததாக இவர் கருதியதோடு, இங்ஙனம் உலகின்புறக் காண்பதையே தமதின்பமாகக் கொண்ட பெருந்தகைமையே என்னலாம் அன்றோ?

பாட்டின் காட்சி:—தற்காலப் படக்காட்சிகளில், செய்திப்படங்கள் காண்பிக்கப் பெறுகையில், படம் போய்க் கொண்டேயிருக்க ஒருவர் படத்திலடங்கிய பொருளை விளக்கிக் கூறிக்கொண்டிருப்பதையுங் கேட்கிறோம். அவர் உரையாலேயே படத்தைப்பற்றித் தெளிவாய் நாம் அறிந்துகொள்கிறோம். எனினும், சொல்லைவிடப் படக்காட்சிதான் நம் மனத்தில் அதிகம் தங்குகிறது. அங்ஙனமே சோழநாட்டின் இயற்கை வளம், காவிரிப்பூம்பட்டின அமைப்பு, மக்கள் வாழ்க்கைமுறை முதலியவைகளைச் சொல்லிக்கொண்டேபோக அச் சொல்லாற்றலால் காட்சி நம் அகக்கண்முன் மிகத்-தெளிவாய்த் தோன்றி மறைவதை உணர்கின்றோம்.

அடக்கம்:—நம் அருமைத் தாய்மொழி என்றுமுள தென்றமிழாய், கன்னித்தமிழாய், வழங்கி விளங்குதலை விரும்புதலும், அவ்விருப்பம் நிறைவேற முயல்வோரைப் புகழ்ந்து ஊக்குதலும், தமிழ்மக்கள் கடமையாம். சங்க இலக்கியம் பழையதே எனினும், புதுமை மாறாததாய், தமிழுக்குக் 'கன்னி' என்ற அரிய அடைமொழி அளித்து நிற்பது; நம் குலப் பெருமைக்குச் சான்று தருவது. ஆகவே சங்கவிலக்கியத்தைப் போற்றுதல் நம்மையே போற்றுதலாகும்.

'எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.' (திருக்குறள்: ௩௫௫)

——

௧௦. மலைபடு கடாம்

[வித்துவான், ந. சேதுரகுநாதன், விருதுநகர்.]

அவையடக்கம் :—தலைவருக்கு வணக்கம்; அவையோருக்கு என் பணிவு; கழகத்தாருக்கு என்நன்றி.

தலைப்பு :—எனது தலைப்பு 'மலைபடுகடாம்' என்பது; அஃது ஓர் இனிய பாட்டு; பத்துப்பாட்டினுள் பத்தாவதாக இலங்குவது; ருஅஙு வரிகள் உடையது;

ஆசிரியர் :—இதனை இயற்றியவர் பெருங்கௌசிகனார்; இவரது ஊர் இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்; இவர் சிறந்த நல்லிசைப் புலவர்.

பாடப் பெற்றவர் :—இவரால் பாடப்பட்டவன் நன்னன்; இவன் தந்தையின் பெயரும் நன்னன் என்பதே; இவன் பெரு வள்ளல்; வேளிர் குலத்தவன்; தொண்டை மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து அரசன்; செங்கண்மா என்பது இவனது தலைநகரம்; இவனது மலை நவிரம் என்பது; அது கண்ணுக்கு இனிய சேயாற்றுக்குப் பிறப்பிடம்.

புலமை :—கௌசிகனாரது புலமை நுட்பமுடையது; அறிவாழமுடையது; இயற்கைவளம் நிரம்பியது; ஒவிய அழகு உடையது; உணர்ச்சி நிரம்பியது; இனவேற்றுமையற்றது; ஒற்றுமைக்கு உதவக்கூடியது.

இவரது பாடல் :—இப்பாட்டு மிகப் பழமையானது; இலக்கணவளம் உடையது; வியக்கத்தக்க பெருமை உடையது; இயற்கை நெறி பிறழாதது; ஆற்றொழுக்காக ஓடுவது; புவியினுக்கு அணியாக இலங்குவது; ஆன்றபொருள் தருவது; அறிவுக்கு விருந்தாக அமைவது; அமைதியான தெளிவுடையது; தண்ணிய ஒழுக்கம் உடையது; சான்றோர் கவிக்கு இலக்காக இயங்குவது; மலையிலே பெய்த மழையின் வெள்ளமானது கடலிலே புகுந்து கலப்பதுவரை யாதொரு தடையுமின்றி

ஒழுகி ஓடுவதுபோல, "திருமழை தலைஇய," என்று தொடங்குவது முதல் "நாடு கிழவோனே," என்று முடிவதுவரை ஐந்நூற்று எண்பத்துமூன்று (௫அ௩) அடிகள் ஒரே தொடராக யாதொரு தடையுமின்றி ஓடுகிறது; "உரைப்போர் உள்ளக் கருத்தின் அளவே பெருமை," என்பதற்கு இது எடுத்துக்காட்டாக விளங்குவது; பிற மொழிகளில் ஒரே தொடராக இவ்வளவு பெரிய பாடலை இயற்றுவது அரிதினும் அரிது.

> 'பூவார் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
> காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி'

என்று பாராட்டப்பட்ட காவிரியாற்றைப்போல இப்பாடல் நடக்கின்றது.

> 'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூஆடை அதுபோர்த்துக்
> கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி'

என்று போற்றப்பட்ட பொன்னியைப்போன்று போகின்றது. ஒட்டமாகப் படித்தால் ஓடுவது காணலாம்; நடையாகப் பயின்றால் நடப்பதை உணரலாம்; ஒரு போக்காக நோக்கினால் போவது புலனாகும். கடலின் அகட்டிற் பிறந்த பவழக்கொடி மலையின் முகட்டின்வரை இடைவெளியின்றி ஒரே தொடராக அடர்ந்து படர்ந்து பல்வேறு மணிகள், பல்வேறு பூக்கள், பல்வேறு காய்கள், பல்வேறு கனிகள், பல்வேறு பொருள்கள் முதலிய எல்லாவற்றையுந் தோற்றுவித்துப் பல்வேறு ஒளியுடன், பல்வேறு மணத்துடன், பல்வேறு முழக்கத்துடன், பல்வேறு காட்சிகளுடன் விளங்கி என்றும் அழியாத இயல்புடன் இலங்குமாயின் அது, பாணர் புறப்படுகின்ற இடம் முதல் சென்று சேரும் மலைமுகடுவரை பல்வேறு பொருள் நலங்களைக் காட்டிக்கொண்டு ஒரே தொடராகப் படர்ந்து செல்லும் இப்பாடலுக்கு ஒருவகையில் உவமையாகுமென்று கூறலாம்.

இதன்கண், துள்ளுகின்ற மான்கள்; ஆடுகின்ற மயில்கள்; பாய்கின்ற புலிகள்; முட்டுகின்ற கடாக்கள்; கூக்குரலிடுகின்ற குரங்குகள்; மரங்களில் தத்தி விழும்

20

கவண்கற்கள்; கைபிணைந்து போராடும் யானைக்கன்று கள்; வழிமறித்துக் கிடக்கும் பாம்புகள்; அரும்புகின்ற காந்தளின் மொட்டுக்கள்; விழுகின்ற அருவிகள்; முரலு கின்ற வண்டினங்கள்; மணக்கின்ற பூக்கள்; கனிகின்ற கனிகள்; கரடியின் குட்டிகள்; மரையாவின் கன்றுகள்; துளிக்கின்ற தேனடைகள்; ஓடுகின்ற ஆறுகள்; பாடு கின்ற குயில்கள் முதலிய பல்வேறு வளங்கள் உண்டு.

இதன்கண், இயற்கைப்பொருளுக்கு இயற்கைப் பொருளுவமை, இயற்கைப் பொருளுக்குச் செயற்கைப் பொருள் உவமை, செயற்கைப் பொருளுக்கு இயற்கைப் பொருள் உவமை, செயற்கைப் பொருளுக்குச் செயற் கைப் பொருள் உவமை முதலியன விரவி வருகின்ற அழகு மிகுதியாய் இலங்குகின்றது; வண்ண உவமை, வடிவ உவமை, தொழிலுவமை, பயனுவமை முதலியன மிளிர்கின்றன.

நன்றாகப் பட்டஞ் செதுக்கப்பட்ட வயிரம் முதலிய மணிக்கற்களைப் பல்வேறு ஒளியில், பல்வேறு கோணத் தில், பல்வேறு கருத்துடன் பார்க்கும்போது, அவை பல் வேறு காட்சிகள் நல்குவதுபோல, இப் பாடலும் நோக்கு வாரது திறத்திற்கேற்பப் பல்வேறு பொருளும், பல்வேறு காட்சியும் வழங்கக்கூடிய இயல்பு உடையது.

இதன்கண், மலைகளின் வளப்பம், காடுகளின் கவின், நாடுகளின் நலம், வீடுகளின் விருந்து, உணவின் உயர்வு, பூக்களின் பொலிவு, காய்களின் காட்சி, கனிகளின் நறு மணம் முதலிய இன்னும் பலவுள.

இப்பாடல், காலத்தைக் கடந்துசென்று ஊடுருவிப் பார்ப்பதற்கு ஒப்பற்ற துணைபுரிவது; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து தங்கள் புகழைமட்டும் நிலை நாட்டிவிட்டு மாய்ந்துபோன மக்கள், இயற்கைப் பொருள்கள், மலைகள், ஆறுகள், யானைகள், புலிகள், மரை கள், கரடிகள், பாம்புகள் முதலியவற்றை இங்கிருந்து பார்ப்பதற்குக் காட்டும் கண்ணாடி; அன்றைய உலகத்தின்

ஒரு பகுதியை இன்றைய உலகத்திற்குத் தந்து உதவும் மணிப்பேழை; அன்றைய மலை முழக்கத்தை, இசை முழக்கத்தை இன்று நாம் கேட்பதற்கு உதவும் ஒப்பற்ற ஒலிக்கருவி; இன்னும் பல கூறலாம்; இதனுடைய பெருமை வரையறைக்குள் அடங்குவதன்று.

மலைபடு கடாஅம் என்ற பெயர்க்காரணம்:— இப்பாடலுள், மலைகளை மதயானைகளாக உருவகஞ்செய்து அவற்றிலிருந்து எழுந்த பலவகை ஓசைகளை மதநீராக உருவகஞ் செய்து, "மலைபடு கடாஅம்," (மாதிரத்தியம்ப) என்று ஆசிரியர் கூறுகின்றார். அத்தொடர் நவிரமலைத்தொடர்களின் இயல்பை உணர்த்துகின்றது. ஒரு கூடத்துள் நின்று முகடதிர முழங்குகின்ற மதயானைக் கூட்டங்களைப் போல விளங்குகின்றன நவிரமலைக்குன்றங்கள்; வானம் வளைந்த உலகமே யானைகள் கட்டும் பெரியகூடம்; அக் கூடத்துள் நின்று வானமுகடதிர முழங்கும் மதயானைக் கூட்டங்களே நவிரமலைக் குன்றங்கள்; அம் மலையிற் பிறந்த பலவகை ஓசைக் கூட்டமே யானைகளின் மதநீர், மதமுழக்கம், மதத்தின் மணம் ஆகிய இவைகள் என்ற கருத்துக்களை யெல்லாம் "மலைபடுகடாஅம்," என்ற அத்தொடர் உணர்த்துகின்றது; அதனால் அந்த மலைகளின் வளம் புலனாகின்றது; மதயானையின்மேல் இருந்து மத யானைக் கூட்டங்களை அடக்கி நடாத்தும் வல்லவன்போல அந் நவிரமலையின் மேலிருந்து பல்குன்றக் கோட்டத்தை அரசாளும் நன்னனது உயர்ச்சி தோன்றுகின்றது; இவ்வளவு நயமான தொடராக இருத்தலினால் "மலைபடுகடாஅம்," என்பதையே இப் பாட்டுக்குப் பெயராக வைத்து வழங்கத் தொடங்கினர். 'பதிற்றுப்பத்து' என்ற தொகை நூலுள்ளும் இவ்வாறு ஒரு சிறந்த தொடரால் பாடலுக்குப் பெயர் வைக்கும் முறை அமையப் பெற்றுள்ளமை காண்க.

நூலின் இயற்பெயர்:—இப்பாடலுக்குக் 'கூத்தராற்றுப்படை' என்றும் ஒரு பெயருண்டு. பரிசுபெற்ற பாணன் ஒருவன் மற்றொரு பாணனுக்கு வழி கூறிவிடுவதே கூத்த

ராற்றுப்படையின் இலக்கணம். 'மலைபடுகடாஅம்' என்ற நயமானதொடர் இந்த இயற்பெயரையும் மறைத்துவிட்டது எனின், இதன் அமைப்பை என்னென்றியம்புவது.

பாடலின் பொருட்கோவை

பாணரின் எதிர்ப்பாடு:—இவ்வருமைப் பாடலின் பொருளை நோக்குவோம். ஒரு பாணன் தனது சுற்றத்துடன் சென்று நன்னனது மலையை அடைகின்றான். அவனைப் பாடிப் பரிசு பெறுகின்றான். மலையிலிருந்து புறப்பட்டு வருகின்ற ஆறானது அங்குள்ள பலவேறு பொருள்களைக் கவர்ந்து சுழித்து அடித்துக்கொண்டு கடலைநோக்கி வருவதுபோல நன்னனது நவிரமலையிலிருந்து பலவேறு பொருள்களைப் பரிசு பெற்றுக்கொண்டு சுற்றத்துடன் வருகின்றான். வரும்வழியில் ஒரு காடு; செழிப்பாக மழைபொழிந்து குளிர்ந்திருக்கிறது; காட்டுவெள்ளம் நன்றாகக் குப்பைகளை அலசி வெண்மையான மணலைப் பரப்பியிருக்கின்றது; நன்கு அடர்ந்த மரங்கள்; குளிர்ந்த நிழல்; அங்கே ஒரு பாணன் தன் சுற்றத்தாருடன் தங்கியிருக்கின்றான்; அவனை இப்பாணன் நோக்க அவனும் இவனை நோக்க ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்கின்றனர். இருவர் சுற்றமும் அளவளாவின; இருந்து பேசுகின்றார்கள்.

இசைக் கருவிகள்:—முன்பே வந்து அங்கே தங்கியிருப்பவர்கள் கார்காலத்தில் முதல் மழை பொழியும்போது இடிமுழங்குவதுபோல மத்தளத்தைக் கொட்டிப் பார்த்து ஓசையை ஆராய்ந்து பண்ணமைத்திருக்கின்றார்கள்; அம் மத்தளத்தில் வார்கள் நன்கு வரிந்து கட்டப்பட்டிருக்கின்றன; மற்றும் சிறுபறை, வெண்கலதாளம், ஊதுகொம்பு, யானையின் தும்பிக்கைபோன்ற நெடுவங்கியம், சிறுவங்கியம், (குறுந்தூம்பு) இனிய ஓசைதரும் குழல்கள், கரடிகை, சல்லிகை, கிணைப்பறை ஆகிய இவற்றையும் மற்றும் பல இசைக்கருவிகளையும், பசிய நிறமுள்ள சிறியனவும் பெரியனவுமாகிய பல பைகளுக்குள்ளே போட்டுச் சுருக்கிக்

கார்காலத்திலே பழுக்கும் பலாக்காய்க் கொத்துக்களைப் போன்று, தோளில் வைத்துச் சுமக்கும் காவட்டுக்கம்பின் இருபக்கத்திலும் பாரம் ஒத்திருக்கும்படி கட்டித் தூக்கி யிருக்கின்றார்கள்.

பேரியாழின் இயல்பு :—இவைகளேயன்றிப் பேரியாழ் என்ற இனிய யாழும் அவர்களுடன் இருக்கின்றது. அந்த யாழில் பெரிதுஞ் சிறிதுமாக உள்ள கைவளையல்களைப் போன்று ஒன்பது வார்க்கட்டுக்கள் அமைந்துள்ளன; வடித்து முறுக்கிக் கட்டின நரம்புகள் விளங்குகின்றன; அவற்றில் சிறிதும் கொடிமுறுக்கு இல்லை. ஓசையை ஆராய்ந்து இனிமையாக அமைத்திருக்கின்றனர். நேர்மை யான அழகிய வரகின் கதிரில் வரகுகள் இரண்டு வரிசை யாக ஒழுங்குபட்டு அமைந்திருப்பதுபோல அந்த யாழின் நடுநீளத்தில் நெருக்கமாக வரிசையாகச் சிறிய துளைகள் அமைத்து அவற்றில் சுள்ளாணிகள் இறுகத் தைக்கப்பட் டிருக்கின்றன. யானைக்கொம்பினுற் புதிதாகச் செய்யப் பட்ட அழகிய ஆப்பு, யாழின் பத்தலில் குறுக்கே செருகப் பட்டிருக்கின்றது. அப்பத்தல் பிசினுெடு சேர்த்து இணைத்த பொன்னிறமான தோலால் பொதியப்பட்டுளது. அழ கெல்லாம் ஒருங்கே திரண்டு உருவெடுத்தாற்போன்ற ஒரு மடந்தையின் அடிவயிற்றிலிருந்து மேல்நோக்கி வளர்ந்து படிந்த மயிரின் ஒழுங்கு எவ்வாறு அமைந்திருக்குமோ அதுபோல யாழினைப் பொதிந்த தோலினை இணைத்து அழகாகத் தைத்த தையலின் ஒழுங்கு அமைந்திருக்கின் றது. யாழின் உந்தியிலமைந்த தையலின் ஒழுங்குக்கு மடந்தையின் உந்தியின்மேல் எழுந்த மயிரின் ஒழுங்கு உவமையாகப் பொருந்துகின்றது. அந்த யாழின் உந்தி கிளைப்பிரிவுகளெல்லாம் ஒழுங்காய் அமைந்து உயர்ந்து வளைந்து இலங்குகின்றது. அரத்தினல் நுட்பமாக அராவி அமைத்த யாழின்கோடு வளைந்து நிமிர்ந்து களாம்பழத் தின் நிறத்தினையொத்துக் கருமையாகக் காணப்படுகிறது.

பாணவின் உடன் வந்தவர் :—அத்தகைய பேரியாழை நூல்வல்லோர் கூறிய நெறிமுறை பிறழாது பொருந்த

அமைத்து இசைகூட்டிச் செவிச்செல்வர் வீற்றிருக்கும் அரசரது அவைக்களத்தில் அவர்கள் செவிகுளிரப் பல துறைகளைப் பாடி வெற்றிபெற்று இசைப்புலமை கனிந்த பாணர் பலர் அத்தலைவனுடன் வந்திருக்கின்றனர்.

கடந்துவந்த வழியின் இயல்பு :— இவர்கள் கடந்துவந்த வழியில் கடுக்காய் மரங்கள் மிகுதியாய் உள்ள பக்கமலைகள் பல. ஒத்த தளப்படுத்தி அமைக்கப்பட்டதுபோல விளங்குகின்ற கற்பாறையில் நிலத்தில் நீளமாக அமைந்து கிடக்கும் வழியை எடுத்து திருத்தினாற்போன்ற ஏற்றமான ஒடுங்கிய அரிய சிறிய வழிகள் பல. வில்லில் அம்புகளை ஏறிட்டுவைத்துக்கொண்டு தம்மனைவியருடன் தங்கியிருக்கும் வேடர்கள் இடையூறு செய்யாமல் போகச் செய்கின்ற மலையின் உச்சியில் கல்லை இடித்துத் திருத்திய அரிய இடத்திலுள்ள உயர்ந்த வழிகள் பல. இவற்றையெல்லாம் ஊக்கத்துடன் கடந்து வந்திருக்கின்றனர். இவ்வாறு ஓங்கி உயர்ந்த வழிகளில் பாணருடன் விறலியர்களும் பலர் நடந்து வந்திருக்கின்றனர்.

விறலியரின் இயல்பு :— அவ்விறலியருடைய கால்கள் கல்லால் அழுந்தப்பட்டுச் சிவப்பேறி, ஓடி இளைத்த நாயின் நாவினைப்போன்று இருக்கின்றன. மானின் கண்களைப் போன்ற அழகிய கண்கள் உடையவர்கள்; கையில் ஒளியுள்ள வளையல் அணிந்தவர்கள்; குழந்தைபெற்று நாட்பல கழிந்து உடலுரம் பெற்றவர்கள்; கூட்டமாகத் திரண்ட மயில்களைப்போல, கூந்தலை அவிழ்த்துத் தொங்கவிடுத்துக் காற்றூட இளைப்பாறிக்கொண்டு பாணர்களின் தலைவனைச் சுற்றி இருக்கின்றனர்; குளத்தினுள் மூழ்கினாற்போன்ற குளிர்ச்சியுள்ள நிழலில் தங்கி இளைப்பாறியதால் களைப்பு நீங்கி விளங்குகின்றனர்; அறிவு நிரம்பியவராய் நல்ல அணிகலன்களைப் பரிசுபெறும் இயல்பினராய் உள்ளனர்.

பாணரின் உயர்ந்த நோக்கம் :— இவர்களையும் இவர்களின் இயற்கையையும் பரிசுபெற்றுவரும் பாணன் பார்க்கின்றான். "நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"

என்ற உயர்ந்த நோக்கத்துடன் பேசுகின்றான். கூத்தர் தலைவனே! வருக! நினது வரவு நல்வரவு ஆகுக. நீ நல்ல நேரத்தில் புறப்பட்டிருக்கின்றாய்; நீ வரும்போது நல்ல அறிகுறிகளும் உனக்குக் கட்டாயம் எதிர்ப்பட்டிருக்க வேண்டும்; அதனாலேதான் என்னை நீ காணநேர்ந்தது.

பாணன் பரிசுபெற்றுவரும் இயல்பு:—பெரிய மலை முகட்டிலிருந்து சுழித்து அடித்துக்கொண்டுவரும் ஆறு னது பூத்த மரங்கள் இருமருங்கும் நெருங்கியிருக்கின்ற கரைகளை அரித்துக்கொண்டு கடலைநோக்கிச் செல்வது போல, யாங்களும் பெரிய வள்ளலாகிய நன்னனிடத்தி லிருந்து மிக்க பரிசுப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு வருகின்றோம்.

பரிசுக்குப் போவோர் இயல்பு:—நல்ல கனிகளைச் சொரி கின்ற மரககூட்டங்களுள்ள காட்டை நோக்கித் தன் இனத்துடன் விரைந்து பறந்து செல்கின்ற பறவைக்கூட் டங்களைப்போல, நீங்களும் புறப்பட்டு அந்த நன்னனை நோக்கிச் செல்லுங்கள். அவன் பகைவரது போர்முனை யைப் பாழாக்கி (நன்னன் இயல்பு) அழிக்கும் மிகுந்த வலிமை உடையவன். புகழாகிய விதையை விதைக்குஞ் சொல்லேருழவருக்குத் தண்ணீர் கிடையாத அரிய காலத் திலே வந்து உதவுகின்ற புதுவெள்ளப் பெருக்கினைப்போல உதவுந் தன்மையாளன். தண்ணியனாக அருளும் மெல்லிய இயல்பினன். அறிவுநெறிக்கு மாறான கெடுதல்களை நினை யாதவன். நலத்தையே உணருந் திண்ணிய எண்ணம் உள்ளவன். வில்லை வலித்து இழுத்து எய்து பருத்த பெரிய தோள்கள் உடையவன். அரிய பெரிய அணிகலன்கள் அணிந்தவன். ஓவியத்திலே வனைந்து அழகுசெய்து அமைத்தாற்போன்ற கொங்கைகளையும், மூங்கிலையொத் துத் திரண்ட தோள்களையும் உடையவராய், வண்டு மொய்க்கும்படியான மலர்மாலைகளை அணிந்தவராய் மலர் போன்ற மழைக்கண்களும் உடையவராகிய மங்கையரை மணஞ் செய்துகொண்டவன். இத்தகைய அண்ணலின் இருப்பிடத்திற்குச் செல்லும் வழியைப்பற்றி உங்கட்குச்

சொல்லவேண்டியவற்றைத் தொகுத்தும் வகுத்தும் கூறுகின்றேன்; நன்ருய்க் கருத்துடன் கேளுங்கள்.

சொல்லப்படும் பொருளின் தொகுப்பு:— இனிமேல் நீங்கள் செல்லும் வழியினது நன்மை தீமை முதலியவற்றின் அளவும், தங்கவேண்டிய நல்ல இடங்களின் இயல்பும், அவன் நாட்டில்மட்டும் விளைகின்ற சிறந்த உணவுப் பொருள்களின் பெருமையும், மலைகளின் தோற்றமும், சோலைகளின் அழகும், விலங்குகள் ஊடாடித் திரிகின்ற காடுகளின் இயற்கையும், உலகம் உள்ள அளவும் புகழ் நிலைபெறும்படி பகைவரை வென்று திறைபெற்று அறிஞருக்கும் மற்றையோருக்கும் அவன் சொரிகின்ற பொன் மழையின் சிறப்பும், தன்னை இகழ்ந்தவருக்கு அரசு கொடாமற் பிணிக்கக்கூடிய அறிவின் வலிமையும், தன்னைப் புகழுங் கூத்தர், பாணர், சூதர், மாகதர் முதலியவருக்குப் பகைவரிடந் தான் கவர்ந்த அரசாட்சி முழுதும் கொடுத்தும் அமையாமல், பெருமழை பொழிந்த வானம் பின்னும் பெய்யுமாறுபோல, பின்னரும் மாருமற் சொரியும் அவனது நாளோலக்க இருக்கையும், அறிஞர்கள் கூடிய தமது அவைக்கு வந்தவர் தாங் கற்ற பொருள்களை ஒழுங்காகச் சொல்லமாட்டாதவரா யிருந்தாலும், அதனை மறைத்துப் பொருளின் சிறப்பினைச் சொல்லிக்காட்டி அவர்களைச் சிறப்பாக நடாத்துகின்ற அவனது சுற்றத்தின் ஒழுக்கமும், கடல் சூழ்ந்த உலகம் முழுதும் நடுங்கும்படி துயர்செய்த கடுமையான கொடிய நஞ்சை உண்டு நவிர மலைமேல்—எழுந்தருளியிருக்கும் காரி உண்டிக் கடவுளின் இயல்பும், உலகிற் பரவிய இருள் முழுதும் நீங்க ஒளி செய்து தோன்றுகின்ற கதிரவனைப்போல பகையாகிய இருளை ஒட்டி விளங்கும் அவனது வசையில்லாத சிறப்பும், பகைவருடைய நாடு நெடுந்தொலைவி லிருந்தாலும் ஆங்குச்சென்று அறப்போர் செய்து கொன்று குவித்து வென்று வெற்றிப்படைஞருக்குக் கொடுக்குங் கொடைக் கடன் முழுதுங் கொடுத்துச் சிறப்பித்த அவனது தொல்லோரின் தோற்றரவும், முதலைகள் வாழும்படியாக ஆழ்ந்த

அகழும் மலைபோன்ற மதிலும் உள்ள அவனது பழைமையான ஊரின் இயல்பும், ஆகிய இவற்றைப்பற்றி வகுத்துக் கூறுகின்றேன். அவற்றுள் முதலில் ஆற்றின் அளவைப் பற்றிக் கேட்பாயாக.

வழியின் நன்மை :—மிகுந்த வளம் பழுத்துக் கிடக்கின்ற புதுவருவாய் உடைய ஊர்களிலிருந்து புதுப் பொருள்கள் வந்துகொண்டிருக்கின்றன ; எப்பொழுதும் இவ்வாறு புதுப்பொருள்கள் வருவது அவ்வழியின் இயல்பு. நிலத்திலே விதைத்த விதைகள் உழவர்களின் மனம்போல மிகுதியாய் விளைந்து மலிந்துள்ளன. வானத்தைப் பிளக்கின்ற மின்னல்களுடனே மேகம் மழையைப் பொழிந்து கொண்டிருக்கின்றது. அம்மழையின் செழிப்பினால் அகன்ற பசிய முல்லைநிலங்கள் அழகாக விளங்குகின்றன. அகன்ற கரிய வானவெளியில் கார்த்திகை மீன்கள் விளங்குவதுபோல, பின்னிப் படர்ந்திருக்கின்ற முசுண்டைக்கொடிகள் வெண்மையாகப் பூத்து விளங்குகின்றன. நீர்ச்சால்களைப்போல, சுனைகள் அமைந்திருக்கின்ற முல்லைநிலத்தில் விளைநிலம் முழுதும் நீலநிறமாகத் தோன்றும்படி எள்ளுக்காய்கள் கிளைத்து வளர்ந்திருக்கின்றன. செழிப்பாக மழை பொழிந்திருப்பதனால் அரக்குப் பாயாதபடி பிடிக்கு ஏழு காய்கள் நெருக்கமாக அமைந்து எண்ணெய் மிகுதியாகப் பொழியும்படி விளைந்திருக்கின்றன. விளையாட்டாகப் போர் செய்கின்ற யானைக்கன்றுகளின் கைகள் ஒன்றோடொன்று பிணைந்து பின்னி யிருப்பதுபோல, தினைக்கதிர்கள் விளைந்து கொய்யும்பருவம் அடைந்து ஒன்றோடு ஒன்று பின்னிக்கொண்டு கிடக்கின்றன. தினைக்கதிர்கள் கொய்யப்பட்ட அரிதாள் நிலங்கள்தோறும் படர்ந்து கொழுத்துள்ள அவரைக் கொடிகள் கட்டித்தயிரின் துண்டுகள் சிதறிக் கிடப்பது போல பூக்களை உதிர்த்து அரிவாள்போன்ற கூனற்காய்களைக்கொண்டு விளங்குகின்றன. எருமை படுத்துக் கிடப்பதுபோல மொட்டையான பெரிய கருங்கற்கள் கிடக்கின்ற காட்டுவழியில் தருக்கஞ் சொல்கின்றவ

னுடைய இரட்டித்த கைவிரல்களைப்போலக் கிளைத்து வளர்ந்துள்ள வரகின் இரட்டித்த கதிர்கள் விளைந்து முற்றிக் கொய்யப்பட்டுள்ளன. பூக்கள் மலிந்த முல்லை நிலத்தின்கண் மழைச் செழிப்பினால் நன்குமுற்றி விளைந்த குலைகளையுடைய மூங்கில்நெல், அவல் இடிக்கும் பருவமாக விளங்குகின்றன. உழாமல் களைக்கொட்டினாலே வெட்டிப் பருவஞ்செய்து விதைக்கப்பட்ட தோட்டங்களிலே வெண் சிறுகடுகு நன்றாக நெருங்கி விளைந்திருக்கின்றன. இஞ்சி செழிப்பாக வளர்ந்து ஓவியனாற் செய்யப்படாத பாவைகளைப்போன்று கிழங்கு வீழ்த்து உறைப்பு ஏறப்பெற்றன. கவலைக்கொடிகள் நன்றாக வளர்ந்து பெண்யானையின் மடித்த முழங்காலின் அளவு பருத்த கிழங்குகளைக் குழிகள் நிறைய வீழச் செய்திருக்கின்றன. யானைகளின்மேல் காம்புகள் உள்ள நீளமான வேல்களைக்கொண்டு குத்துவதுபோல பருத்த மலைக்கற்களைச் சுற்றி நிற்கின்ற வாழைகள் குலையின்முனையில் உள்ள அடியிதழ் உதிர்ந்த பூவின் முனை மொட்டுக்களால் அக்கற்களின்மேல் குத்திக்கொண்டு நின்று காய்கள் முதிர்ந்து கனியப்பழுத்து விளங்குகின்றன. பெரிய மூங்கில்கள் பயன் தரும்படி நெல் விளையப்பெற்று முற்றிக் காற்றில் அசைகின்றன. நிலத்தின் சிறப்பால் காய்க்கக்கூடிய காலமல்லாத காலங்களிலும் மரங்கள் பயன் கொடுக்குமாதலால் காற்றினால் கருமையான நாவற்பழங்கள் உதிர்ந்து கிடக்கின்றன. விடாயை நீக்கும் நீர் ஊறுகின்ற உயவைக்கொடிகள் தண்ணீருடன் எதிரிட்டுப் படர்ந்து அடர்ந்துள்ளன. கூவைக்கிழங்குகள் மாநிறையும்படி முற்றித் திரண்டிருக்கின்றன. தேமாங்கனிகள் முதிரப்பழுத்துச் சாறுமிகுந்து உண்போரைச் செல்லவிடாமல் தடுத்துக்கொண்டு தொங்குகின்றன. வானளாவி ஓங்கிய ஆசினிப்பலாவின் பழங்கள் புண்போல வெடித்துக் கொட்டைகளைச் சிதறுகின்றன. விரலால் அடிக்கப்படுகின்ற சிறு பறையின் கண்களிலிருந்து உண்டாகும் முழக்கத்தைப்போல பெரிய ஆந்தைகள் பேடும் சேவலுமாக ஒன்றையொன்று மாறி மாறிக் கூப்பிடுகின்ற பெரிய மலைப்பக்கத்தில் அசைகின்ற கிளை

களையுடைய பலாமரங்கள் பெய்கின்ற மழைநீரை நன்றாக ஏற்றுச் செழித்துக் காய்த்துக் கூத்தருடைய மத்தளங் களைப்போல தொங்குகின்ற கனிகளை அடிமரத்திலும் மேற் கொம்புகளிலும் நிரம்பப்பெற்றுத் தாழ்ந்து நிற்கின்றன. அதற்கப்பால் ஐவனநெல்லும் வெண்ணெல்லும் பால்கட் டிச் சிறிது முற்றி நான்கு பக்கத்திலும் வீசுகின்ற காற் றால் ஊடறுக்கப்பட்டு நன்றாக முதிர்ந்து விளைந்துள்ளன. இனிய கரும்புகள் நோடுகள் கவிழத் தண்டு திரண்டு பாத் தியில் இடம் குறைவின்றி நெருங்கி முற்றி வளர்ந்து வேற் படை வீரர்கள் எதிரிகளால் தாக்கப்பட்டுப் பின்வாங்கும் போது அவர்களுக்கு உண்டாகின்ற தடுமாற்றத்தைப் போலக் காற்று மோதுவதனாலே அசைவுற்றுத் தடுமாறி வெட்டப்பட்டு ஆலையிலே சென்று பயன்படுவதற்கு அசை கின்றன. நறுமணம் உள்ள நெய்தற்பூக்கள் நெடுக ஒரே கருமை வடிவாக மலர்ந்திருக்கின்றன.

வழியின் நன்மையும், உணவுப் பொருள்களும், தங்கும் இடமும் :—அதற்கு அப்பாலுள்ள இடத்தில், மழை தூறு கிறது ; செங்காந்தள் கொழுத்து வளர்ந்திருக்கின்றது ; தீயைப்போன்ற ஒளியுள்ள புதிய அரும்புகள் முகிழ்த் திருக்கின்றன. பருந்துகள் அவ்வரும்புகளைத் தசைத் துண்டமென்று கருதி எடுத்து ஏமாற்றமடைந்து சிதறிப் போட அந்த அரும்புகளிலுள்ள நெருப்பைப்போன்ற இதழ்கள் பரவி வெறியாடுகின்ற களத்தைப்போல விளங்கு கின்ற அகன்ற கற்பாறையுள்ள இடங்கள்தோறும் இருக் கின்ற சிறிய குடிசைகளுக்குப் போய்ச் சேர்வீர்கள். அக் குடிசைகள் மலைச்சாரலின் பக்கத்தில் அமைந்திருக்கின் றன ; மணவீடுபோல் எங்கும் நறுமணம் கமழ்ந்து கொண்டே யிருக்கும். அங்குள்ள வேடர்கள் தேன், கிழங்கு, ஊன்நிறைந்த வட்டக் கடகப்பெட்டி, சிறிய கண்களுடைய பன்றியில் பழுதானவற்றை நீக்கி வெட்டி எடுத்த தசைத்தொகுதி, மற்றுமுண்டான ஊன்வகைகள் முதலியவற்றைச் சேர்த்துக்கட்டி, ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்செய்து வீழ்ந்த யானைகளின் கொம்பு

களில் காவெட்டு (காவுதடி)ப் போட்டுக்கொண்டு வருவார்கள். அவர்களால் விருந்தினராக ஏற்றுக்கொள்ளப் பெறுவீர்கள். புதுவருவாய் உள்ள அவ்வீட்டில் அவ்வுணவுகளை மிகுதியாகப் பெற்று உண்பீர்கள்; உண்டு இளைப்பாறி இரவும் அவர்களுடன் தங்கியிருந்து விடிந்தபின்பு செல்லுங்கள். கன்றிய நெருப்பைப்போன்ற பூங்கொத்துக்களை நீவிரும் நுங்கள் சுற்றத்தாரும் தலைநிறையச் சூடிக்கொள்ளுங்கள்; செம்மையான அசோகமரங்கள் உள்ள வழியை முழுதும் கடந்துசென்று, அசைகின்ற மூங்கில்கள் ஒலிக்கும் அரிய பள்ளத்தாக்கான வழிகளையெல்லாங் கடந்துபோய் மலைச்சாரலிற் பொருந்தியிருக்கின்ற சிறிய ஊர்களை அடைவீர்கள். அடைந்து, அடங்காரை அடங்கப் பொருது வெற்றிபெறும் மானமுள்ள நன்னனுடைய கூத்தர் யாங்கள் என்று கூறுவீராயின், உங்கள் வீடுகளைப் போல, வாசலில் நில்லாது உள்ளே சென்று முன்பே உரிமை உடையவர்போன்று அவரைக் கேளாமலே உறவு கொள்ளலாம். நெடுவழி கடந்துவந்த உங்கள் வருத்தந் தீர இன்சொற் பேசுவார்கள். நெய்யுலையில் வெந்த தசைப் பொரியல்களுடன் நிறம் மிகுந்த தினைச்சோற்றினையும், பெறுவீர்கள். ஆனால் அவனது மலையுச்சியில் உள்ளநாடு இத்தன்மை உடையதன்று. அதன் சிறப்பு அளக்க வொண்ணாதது. பெண்ணாய் ஒடிக்கடித்த உடும்பின் தசை, ஓடிவருகின்ற விசையைக் கெடுத்துக் கொன்ற காட்டுமானின் தசை, முள்ளம்பன்றியை விரட்டிக் கொன்று பிளந்த தசை இவற்றை நன்றாகக் கலந்து உண்பீர்கள். மூங்கிற் குழாய்க்குள் பெய்து வைக்கப்பட்டுச் சுவை முதிர்ந்த தேனாற்செய்த தெளிந்த கள்ளையும் நிரம்பக் குடித்துப் பின்பு நெல்லால் ஆக்கிய கள்ளையும் பருகுவீர்கள். விடியற்காலம் செருக்கடைந்து மதங்கொண்டிருப்பீர்கள். பின்பு அது நீங்கும்படி அருவி கொண்டு வந்து உருட்டித்தள்ளிய பலாப்பழங்களிலிருந்து உதிர்ந்த கொட்டையின் மாவையும், புளிச்சாற்றினையும், மோரினையும் அளவாகக் கலந்து மூங்கில் அரிசியுடன் சேர்த்துச் சுரபுன்னைமலர்கள் மணக்கின்ற காடுமுழுதும் கமழும்படி

யாக, கரியகூந்தலில் மலர்சூடிய குறமங்கையர் இனிதாகத் துழாவி அமைத்த உணவினை, விருந்ினரைப் பெற்ற மனம்நிரம்பிய மகிழ்ச்சியுடன், மக்கள் எல்லோரும் உறவு முறை சொல்லித்தடுப்ப மனைகள்தோறும் பெற்று மகிழ் வீர்கள். மலைஉச்சியில் ஏறி வெட்டிக்கொண்டுவந்த சந்த னக்கட்டை, அகிற்கட்டை, பொன், மாணிக்கக்கற்கள் முதலியவற்றையும் பெறுவீர்கள். மேலும் அவர்கள் செய் யும் உதவியினால் நன்னனிடத்தில் நீவிர் பெறக் கருதிய பரிசுப் பொருள்களை மறக்கும்படி அங்கேயே காலந் தாழ்த்து நீட்டித்து இருக்கவும் செய்வீர்கள்.

வழியின் தீமை :—அடுக்கடுக்கான இதழ்கள் உள்ள புதிய குவளைப்பூக்களைத் தொட்டாலும், வரையரமகளிர் இருக்கும் நிலைமையைப் பார்த்தாலும், உயிர் போகும்படி வெம்பி நடுங்கும் நிலைமையை அடைவீராதலால் பலநாள் அங்கே நில்லாமல் நிலநாட்டை யடையுங்கள். முற்றிய தினைக்கதிர்களைப் பன்றிகள் தின்றழிப்பதைத் தடைசெய் யும்பொருட்டுக் கவர்த்த சில்வழிகள்தோறும் பெரிய பாறைக்கற்களின் பொறித்தொடுக்கி வைக்கப்பட்டிருக் கும். அங்கே சென்றால் உயிருக்குக் கேடு உண்டாகும்; ஆதலால் இரவுப்பொழுது குடிசைகளில் தங்கியிருந்து நன்றாக ஞாயிற்றின் கதிர்பரவிய விடியற்காலத்திற் செல் லுங்கள். மக்கள் நடமாட்டமில்லாத வழிகளில் நடந்து செல்லத்துணிவீராயின், அவ்விடத்தில் வெடித்த நிலப் பிளவுகளுக்குள்ளே பாம்புகள் கரந்து ஒடுங்கிக்கிடக்கும் குழிகள் உண்டு. ஆதலால் விலகி மரத்தில் ஏறிக் கொட்டிப் பார்த்துத்தெளிந்துகொண்டு, விறலியர்கள் தங்கள் வளையல் அணிந்த கைகளால் தொழுதுபோற்ற அப்பாம்பு கிடக் கும் வழியைவிட்டு விலகி வலப்பக்கமாகச் செல்லுங்கள். விளைந்த தினைக்கதிர்களைத் தின்றழிக்கும் யானைக்கூட்டங் களைக் கலைக்கும்பொருட்டுக் குறவர்கள் பரணின்மேல் இருந்து வீசிஎறிகின்ற கவண்கற்கள் உயிர்த்தொகுதியை அழிக்கின்ற கூற்றுவனைப்போன்று கொடியனவாய், மூங் கிற்கழைகளின்மேற் பட்டுத் தத்திக் கரியகுரங்குகள்

குட்டிகளுடன் ஆரவாரித்துக் கலையும்படி வந்துவிழும். அதற்குத் தப்புவதற்கு மரத்தில் மறைந்து செல்லுங்கள். இரவுக்காலத்தை யொத்த இருள்செறிந்த காவற் காடுகளை யுடையதும், வலியயானைகளை விழுங்கும் முதலைகள் தங்கும் இடங்களையுடையதும், குமிழிகளுடன் சுழன்று சுழன்று வரும் ஆழமான நீரோட்டத்தை யுடையதும், தண்ணீர் குத்தி அரித்த முடங்கலான முடுக்குகளை யுடையதுமான காட்டாறு உண்டு. ஏறுவதற்கும் இறங்குவதற்கும் அரிய வழிகள் உண்டு, அகழுக்குள்ளே இறங்கினாற் போன்றிருக்கும் நடைவழிகள் பலவுண்டு. அங்கே கால்களை வழுக்கிவிடும் இடங்களும் உண்டு. செம்மறியாட்டுத் தலைபோன்று பொலிவழிந்த தலைகளையுடைய பிள்ளைகளுடன், மரங்களில் சுற்றித் தொங்குகின்ற பருத்த கொடிகளைப் பிடித்துக்கொண்டு ஒருவரை யொருவர் பாதுகாத்து மெல்லமெல்லச் செல்லுங்கள். விழுந்தோரை மாயச்செய்யும் குளங்களின் அருகிலே துன்னிய பாசி படர்ந்து இடத்தை மறைத்துக்கொண்டிருக்கும். அங்கே மிதித்தால் கால்கள் வழுகித் தளர்ந்து புதையும். கடந்து போவதற்கும் முடியாது. ஆதலால் வழிநெடுகப் பின்னி வளர்ந்து நெருங்கியிருக்கின்ற மூங்கிலின் கோல்களையும், வேழத்தின் மெல்லிய கோல்களையும் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்லப் போங்கள்.

காரி உண்டிக் கடவுள்:—மலையையொத்த தோற்றத்துடன் முகபடாம் அணிந்து விளங்கும் யானைப்படைகளையும், விற்படைகளையும் உடைய பழைமையான மதிற் கோட்டைக்குள்ளே இருக்கின்ற காரியுண்டிக் கடவுளைக் காணின், தொழுதுகொண்டு செல்லுங்கள். இருந்து உங்கள் வாத்தியங்களை இயக்கத் தொடங்குவீராயின் மழைபெய்து யாழின் நரம்பு, மத்தளத்தின்கண் முதலியவற்றை நனைத்துவிடும். ஆதலால் தொழுதுகொண்டு அப்பாற் செல்லுங்கள்.

வழியின் தீமை:—பலகறையையொத்த வெண்மையான வேர்க் குருத்துக்களையுடைய தோகை மிகுதியாக

உள்ள மயில்கள் ஆடி இளைத்துத் தோகையின் பாரந்
தாங்கமாட்டாது நிற்பினும், நெடிய மூங்கிலின் உச்சி
களிலே கூத்தாடியின் பிள்ளைகளைப்போலக் குரங்குகள்
தாவிப்பாய்ந்தாலும், நேரே உயர்ந்து செங்குத்தாக இருக்
கும் மலையின் பக்கத்துச் சாரலிலே தேர்உருளைபோன்று
வைத்திருக்கின்ற தேனடைகளைக் கண்டாலும் அற்றைக்
குறித்து நோக்குதல் உரியதன்று. நோக்குவீராயின்
நமது மெல்லிய அடிகளால நடந்து செல்லமாட்டாது
வழி மாறுபட்டுப் போவீர்கள்.

உணவும் தங்கும் இடமும் :—மலையைச்சார்ந்த வழிகளை
யுடைய காட்டு வழியிற் செல்லுவீராயின், யானை முதலிய
விலங்குகளின் இடையூற்றுக்கு எட்டாத உயர்ந்த பரணின்
மேல் இருந்து தினைப்புனங் காக்கும் வேட்டுவனால் எய்யப்
பட்ட கொழுத்த பன்றி மார்பில் புண்பட்டு, கிழங்குகளைக்
குத்தி எடுத்துத் தேய்ந்த கொம்புகளுடனும், வெண்ணெய்
யைப்போன்று கொழுவிய நிணம் மிகும்படி பருத்துத்
திரண்டு சுரசுரப்பான கழுத்துடனும், இருள் துண்டுபட்
டுக் கிடந்தாற்போல வழியை அடைத்துக்கொண்டு கிடக்
கும். அதனை எடுத்து ஒன்றோடு ஒன்று உராய்ந்த மூங்கி
லிற் பிறந்த தீயில் மயிர்ப்புகை கமழாதபடி செதுக்கிச்
சுட்டுப் பதமாக எடுத்துச் சுவைத்து உண்டு, பார்த்தவர்
பளிங்கு என்று மருளும்படியாகக் கலக்கமறத் தெளிந்து
கிடக்கின்ற குவளைமலர் நிறைந்த பசிய சுனைநீரை இளைப்
புத் தீரும்படி குடிததுவிட்டு, அந்தத் தசையின் மிச்சத்
தைக் கட்டிப் பொதியாக எடுத்துக்கொண்டு தங்களை
ஈன்ற தாய்கள் வளையலைக் களைவதற்குக் காரணமாக
இருந்த சிவந்த தலையினையுடைய பிள்ளைகளுடன் மேற்
கொண்டு வழி நடப்பதற்கு நினையாமல் நும் வீட்டிற் புகுந்
தாற்போன்றிருக்கின்ற கற்குகைக்குள்ளே சென்று தங்
குங்கள். இரவில் அக்குகையினிடத்திலே தங்கி இளைப்
பாறி வானத்தின்கண்ணாக விளங்கும் கதிரவன் ஒளி
விரிந்த விடியற்காலத்தில் துயிலுணர்ந்து, காட்டுநெறியிற்
பொருந்திக்கிடக்கும் செவ்விய வழியை அறிந்து செல்லுங்

கள். நீர்த் தடாகம்போன்ற அகன்ற படத்தினையும், சாய்ந்து விழுந்து கிடக்கின்ற மரத்தைப்போன்ற பருத்த உடலினையும், அழகிய கண்ணினையும், வலிமிகுந்த சினமுள்ள களிற்றுயானையை விழுங்கி அடக்கக்கூடிய பேராற்றலும் உடைய பெரும்பாம்பு வழியில் குறுக்கிட்டுக் கிடக்கும்; குறிக்கொண்டு நோக்கிப் பார்த்து அகலவிலகிச் செல்லுங்கள்.

நெடுந்தொலைவரை பரவிச்சென்று மணக்கக்கூடிய நீளமான காம்புள்ள பூக்கள் உண்டு; தின்றவர்களை மறந்தும் உயிர்வாழ விடாமல் கொல்லக்கூடிய பழங்கள் பழுக்கின்ற பெரிய மரக் கூட்டங்கள் உண்டு. அவற்றின் பயனை விரும்பி முறைதவறி ஒருவரும் அணுகுவதில்லை. இரு மருங்கிலும் உள்ள இத்தகைய இடங்களைக் கருத்துடன் நோக்கிக் குறிப்பால் அறிந்து அவற்றின் பக்கத்தில் அணுகாமல் செல்லுங்கள். அதற்கப்பால் முற்றிய கொம்புகள் உள்ள ஆலமரங்கள் பழுத்து நிற்கின்றன. அவற்றில் வந்து சாய்ந்து பழந்தின்னும் பறவைகளின் ஆரவாரம் பற்பல வாத்திய முழக்கம்போல மிகுந்திருக்கும். அவ்விடத்திலிருந்து பார்த்தால் பல நாடுகளையும் கண்டு களிக்கலாம். அந்த உயரமான அகன்ற இடத்தில் மெல்லமெல்ல நடந்து செல்லுங்கள். அதற்கப்பால் நெருங்கிய மரங்களும் அடர்ந்த நிழலும் உள்ள குறுங்காடு உண்டு. வானவெளியில் திரியும கதிரோனின் வெயில் நுழையாத உச்சி; அகன்ற இடம உள்ள மலை. திசை தெரியாமல் மயக்கக்கூடிய இரவுக் காலத்திலும் வேட்டையாடுவதற்கு விருப்பங்கொண்டு விலங்கினங்களைத் தேடி முறியாத வில்லைக் கையிற் பிடித்துக்கொண்டு திரிகின்ற குறவரும் வழி தெரியாமல் மயங்கக்கூடிய குன்றத்தை அடைவீராயின், அதற்குமேல் செல்லவிரும்பாமல் அகன்ற பாறையில் இருந்துகொண்டு எதிரொலி முழங்கும்படி நும்முடைய வாத்தியங்களை முழக்குங்கள். இனிய ஓசையுடன் அருவி விழுந்தொலிக்கும் வளம் நிரம்பிய உச்சிமலையில் காட்டைக் காத்துத் தங்கியிருக்கின்ற கானவர் உளர்.

நிலைக்கும் நீர்த்துறையிலிருந்து வழுவித் தண்ணீர் வெள்ளத்திலே போவோரின் கூக்குரலைக் கேட்டு விரைந்துவந்து அவரைக் கரையேற்றுபவர்போல் அவ்வளவு விரைவாக வந்து திசைமயங்கிய கலக்கம் நீங்கச்செய்து உண்பதற்கு இனிய பழமும், அணிவதற்கு இனிய பூக்களும் தந்து உங்களை மகிழ்விப்பார்கள். பின்பு இடையூறு நிரம்பிய வழியில் அக்கானவர் முற்பட்டுச் சென்று வழிகாட்ட நீங்கள் அவரைத் தொடர்ந்து மகிழ்ந்து செல்வீர்கள். அதற்குமேல் திசைமயக்கம் அறிந்துகூறும் அறிஞர் கூறிய வழியைத் தொடர்ந்து, புதிதாக வந்தவர் கண்ணால் நோக்கினும் தலையை நடுங்கச்செய்யக்கூடிய நோய்மிக்க பக்க மலையினிடத்துப் பூக்கள் பரவிக் கிடக்கின்ற பல வரிகளையுடையவாகிய நிழலிலே இளைப்பாறும் பொருட்டு இருப்பின், பலவகையாக எழுகின்ற ஆரவாரமான ஓசையைக் கேட்பீர்கள்.

மலையிலிருந்து எழும் பலவகை முழக்கம் :—முசுக்கலை என்ற ஆண் குரங்கினாலே தோண்டப்பட்ட பெரிய பலாப் பழங்கள் பிளவுபட்டுத் தேன் மிகுந்து ஊறுதலினாலே அதன் நறுமணம் மலைமுழுதுங் கமழுகின்ற திசைகள் தோறும் அருவிப்பயனை நுகர்கின்ற வானர மகளிர்கள் அருவிவந்து விழுகின்ற விசையைத் தடைசெய்யாது ஏற்றுக்கொண்டு கையால் எற்றிஎற்றிக் குடைந்து ஆடுந் தோறும் இசையொலியை ஆராய்ந்து பழகிய உங்கள் வாத்தியங்களைப்போல் முழங்குகின்ற முழக்கமும், மலையின்மேலிட்ட பரணிலிருக்கின்ற கானவர், தினைப்புனத்தை அழித்துத் தின்றுகொண்டு அலைவதும், விளங்குகின்ற ஏந்திய கொம்புகள் உடையதும், இனத்திற் பிரிந்து திரிவதுமாகிய யானையைப் பற்றுதற்கு விரும்பி வளைத்துக் கொண்டு ஆரவாரிக்கின்ற ஆரவாரமும், நீண்ட குகைக்குள்ளிருந்து முள்ளம்பன்றி தன் கூரிய முட்களினாலே எய்து துன்புறுத்தப்பட்ட கானவரின் அழுகை ஒலியும், தங்கள் காதற் கொழுநரின் மார்பில் வரிப்புலி பாய்ந்ததனால் உண்டாகிய நெடிய பிளவுபட்ட சிறந்த புண்ணை

ஆற்றம்பொருட்டுக் கருமணல் ஒழுங்குபோன்ற கூந்தலையுடைய கொடிச்சியர் பாடுகின்ற பாடல்களின் ஒலியும், முதன்முதலிற் பூத்த பொன்னிறக் கொத்துக்களையுடைய வேங்கைப்பூவைக் கொய்து சூடும்பொருட்டு மகளிர் 'புலிபுலி' என்று ஆரவாரிக்கின்ற மகிழ்வுமிக்க முழக்கமும், கன்று ஈனும் பருவம் உள்ளதும மெல்லிய தலையை உடையதுமாகிய இளமையான பிடியானையை வலிமைக்குப் பேரெல்லையாக இலங்கும் அதன் கணவனாகிய களிற்றுயானை கவழ உணவு தேடிக்கொடுத்துக் காவல் செய்துகொண்டு பக்கத்திலுள்ள இடையூறுகளை நோக்காமல் போகும்போது அதனை ஒளித்திருந்து கண்ட ஒள்ளிய நிறமுள்ள வலிய புலி பாய்ந்து வீழ்த்த அதனைக் கண்டு கலங்கிய களிற்றுயானை தன் இனத்துடன் கூடி நெடிய மலையிடம் முழுதுங் கேட்கும்படி கூப்பிடுகின்ற இடிமுழக்கம் போன்ற ஓசையும், தன் வயிற்றைப் பற்றிக்கொள்ளக் கல்லாத தனது குட்டியைக் கையால் தழுவிக்கொள்ள மறந்த கரிய விரல்களையுடைய மந்தி எடுக்கமுடியாத ஆழமான மலைப் பிளவுக்குள்ளே வீழ்ந்து இறந்த தன் குட்டியின் பொருட்டு, தளிரைத் தின்று பேணிய உடல்வளம் நிரம்பிய தன் இனத்துடனே கூடித் துன்பப்படுகின்ற விலக்கமுடியாத ஆரவாரமும், முசுக்கலைக் குரங்குகள் ஏற முடியாமல் ஓய்ந்து செயலற்ற அவ்வளவு உயரமுள்ளதும், பார்ப்பதற்கு இனிய தோற்றமுள்ளதுமாகிய நெடிய மலையினிடத்து நிலைத்து நிற்கும்படியாக அமைந்த கண்ணேணி வழியாக ஏறிச்சென்று மிகுந்த பயனுண்டாகும்படி ஈக்கள் தொகுத்து வைத்திருக்கின்ற தேன்கூடுகளை அழித்துக் கொண்ட கொள்ளையால் உண்டாகிய ஆரவாரமும், திருந்திய வேலுடைய அண்ணலாகிய நன்னனுக்குப் புதுப் பொருளாகக் கொடுப்பதற்கு உரிய மிகுந்த பொருள்கள் அமைந்திருக்கின்ற குறுநில மன்னருடைய அரிய அரணங்களை அழித்த கானவர்களுடைய மகிழ்ச்சியினாலாகிய ஆரவாரமும், கள்ளினைக் காலையிலே பருகிய குறவர்கள் மான்தோல் போர்த்த சிறுபறை முழங்க வானமளாவிய மலையினுச்சியில் பெண்டிருடன் சேர்ந்து ஆடு

கின்ற குரவைக்கூத்தின் ஆரவாரமும், நல்ல அழகிய நெடியதேர்கள் வழியில் ஓடிவரும்போது உண்டாகின்ற ஓசையைப்போல ஒலித்துக்கொண்டு கல்லின்மேல் ஓடிவருகின்ற பல ஆற்றுவெள்ளம் முழைஞ்சுகளிலே வீழ்ந்து மாறுமல் ஒலிக்கும் ஓசையும், பெரிய நீர்ச் சுழியிலே அகப்பட்டுக் களைத்த அஞ்சாத யானையின் வலிய சீற்றத்தைத் தணித்துப் பெரிய கம்பங்களிலே பிணிக்கும்பொருட்டு விரவிய சொற்களை அதற்குப் பயிற்றுவிக்கின்ற யானைப்பாகரின் ஓசையும், ஒலிக்கின்ற மூங்கிலாற் செய்யப்பட்ட தட்டைப்பறையை அடித்து ஒலியுண்டாக்கித் தினைப்புனங்கள்தோறும் கிளியை ஓட்டுகின்ற பெண்கள் கூப்பிடுதலினல் உண்டாகிய ஆரவாரமும், நிரையிலிருந்து பிரிந்துவந்த பருத்து அசைகின்ற இமில் உள்ள காளையும், மலையினிடத்திலிருந்து வந்த மரையானின் இனத்திலுள்ள விரைந்த ஏறும், குறிஞ்சிநிலத்துக் குறவர்களும், முல்லைநிலத்துப் பொதுவர்களும் வெற்றி குறித்து ஒன்றுதிரண்டு ஆரவாரிக்கும்படி ஒன்றை ஒன்று முட்டிப் பாய்ந்து பொருகின்றதனல் உண்டாகின்ற ஆரவாரமும், வளவிய இலைகளையுடைய முல்லைப் புதர்களும், குறிஞ்சிப் புதர்களும் சிதையும்படி மிதித்து உழக்கி எருமைக்கடாக்கள் பொருகின்ற ஆரவாரமும், வளப்பமாகக் காய்த்து முற்றிய பலாப்பழங்களிலிருந்து எடுத்து உண்டு மிகுந்த சுளைகளை வட்டமாகத் திரட்டிப் போட்டுக் கொட்டை யெடுப்பதற்காகக் கன்றுகளைப் பிணையலாகப் பிணைத்துக் காந்தள்மடலால் அடித்து ஓட்டிப் பிணையல் துவைக்கும் இளைஞருடைய ஓசையும், முகிலின் கூட்டம் தவழுவதுபோல் காணப்படுங் கொட்டில்கள்தோறும் மூங்கிலையொத்துப் பருத்த கருப்பங் கழிகளை நெரிய உடைத்துச் சாறுபிழியும் கரும்பாலையின் ஓசையும், உலக்கையினல் தினையைக் குற்றுகின்ற மகளிர்கள் பாடுகின்ற இசைநலங் கனிந்த வள்ளைப்பாட்டின் ஓசையும், சேம்பு, மஞ்சள் இவற்றின் கிழங்குகளைப் பன்றியினங்கள் அகழ்ந்து சிதையாதபடி காக்கின்ற குறவர்கள் முழக்குகின்ற பறையின் ஓசையும், இவற்றல் உண்டாகும்

எதிரொலியும் ஆகிய இவ்வோசைகளெல்லாம் ஒருங்கு கூடித் திரண்டு தாழ்வரையிலும் உச்சிமலையிலுமுள்ள எல்லா முழக்கங்களுடனும் கூடியதனால் மலைகளாகிய யானைகளிடத்திலிருந்து பிறந்த—எண்ணமுடியாத—எண்ணிக்கையைக்கடந்த மதநீராகிய ஓசை எல்லாத் திசைகளிலுஞ் சென்று முழங்கக் கேட்பீர்கள்.

மலையூர் :— பலவகை நிறமுள்ள மலர்மாலைகளை அணிந்த ஆடல்மகளிர்கள் ஆட, முழவுகண்ணுறங்காத அகன்ற பேரூரில் நிகழுந் திருவிழாவினையொத்து அவனுடைய அகன்ற மலையூர் சிறப்புற்று விளங்கும். காண வேண்டிய காட்சிகளைக் கண்ணாரக்கண்டும், கேட்கவேண்டியவற்றைச் செவியாரக் கேட்டும், உண்டற்கு இனியவற்றை வயிறார உண்டும் இன்னும் நமக்கு இந்நுகர்ச்சி உண்டாவதாக என விரும்பிப் பழைய உறவினர்போன்ற முறைகள் உடையவராய்க் களைப்பு நீங்க அங்கே சிலநாட்கள் தங்குங்கள். பின்பு, பலவகை மாட்சிமையுடைய போர்த்துறைகளிலே மேம்பட்டு நடத்தலினால் உலகம் புகழும் சிறப்புப் பெற்றவனும், திருமகள் தங்கிய மார்பினை உடையவனுமாகிய நன்னனுடைய மலையைக் காண்பீர்கள். இடிக்கூட்டங்கள் முழங்குகின்ற அந்த நன்னனது மலை உங்களுக்குப் பிற்படும்படியாக முயன்று வியப்புமிக்க இனிய யாழையுடைய விறலியர்கள் நறுமணங் கமழும் பசுமையான பக்கமலையில் குறிஞ்சிப் பண்ணைப்பாடநங்களும் ஆங்கே உறையுந் தெய்வங்களைக் கையாலே தொழுது வாழ்த்திக்கொண்டு செல்லுங்கள். வில்லினால் தெறித்த பஞ்சு பொங்கிப் பரவுவதுபோல கருக்கொள்ளாத வெள்ளை மேகநிரைகள் தவழும் பெரிய மலையினிடத்தில் கையினால் எட்டிப் பிடிக்குமபடியாகத் தணிந்து தவழும் கார்மேகங்கள் தண்ணீரை வலிய மேலே இறைப்பதுபோல திவலைகளைத் தூவும்; அப்பொழுது திசைமயக்கம் ஏற்படும்; ஆதலால் நீங்கள் உங்களுடைய வாத்தியங்கள் நனையாதபடி கிணறு போன்றிருக்கின்ற மலைக் குகைக்குட் புகுந்து தங்குங்கள். பெரியகல்லின் திரண்ட

இடத்தில் முறிந்து நிற்கும் மலைப்பக்கம் அணுகாதீர்கள். நின்று பார்த்தாலும் கண்ணின் ஒளியையும் மனத்தையுங் கவரக்கூடிய மலைப்பாங்கான இடங்களில் மிக்க துன்பந் தருங் குழிந்த கிடங்குகள் உண்டு. உங்கள் மத்தளங் களைக் காவெட்டுப் போட்டிருக்குந் தடியை ஊன்று கோலாகக் கையிற்கொண்டு ஊன்றிப்பார்த்து வழுக்கிக் குழிகளில் விழாமல் மெல்ல மெல்லச் செல்லுங்கள். குளி ரின் கொடுமை தாக்காதபடி கடுவெயில் வீசும் இடங்கள் உண்டு. அங்கே பாறையின்மேல் உலைமுகத்திற் காய்ந்த வேல்போன்ற கூரிய வெவ்விய கற்கள் பரவிக் கிடக்கும். அவ்வழி மிகவுந் துன்பந் தரக்கூடியதாக இருக்கும். அவ் விடத்தில் நீங்கள் வெயில்தணிந்த இளநேரத்தில் நடந்து செல்லுங்கள். மிக உயர்ந்தனவும் முகிலினம்போன்ற தோற்றம் உடையனவுமாகிய யானைப் படைகளையுடைய அரணங்கள் பல அவ் வழிப்பக்கம் உண்டு. புகழ் எங்கும் பரவும்படியாகத் திரண்டு குழுமிய நன்னனுடைய சுற் றத்தாரும் அங்கே தங்கியிருப்பார்கள். அவ்வரண் பகை யரசனைத் தளரச்செய்யும் ஆற்றலுடையது. அவ் வரணின் ஓரங்களில் கொடிகள் பின்னிவைத்ததுபோலப் பிணங்கி அடர்ந்து அடைத்திருக்கும். நுழைந்து செல்லும்படி யான சிறியவழிகள் பல உண்டு. முன்னே செல்பவன் தன்னுடைய முகத்தில் தட்டாதபடி இழுத்துவிட்ட கடிய விசையுடனே வந்து தாக்குந் திரண்டகோலால் யாழின் பத்தரும், முழவின்கண்ணும் கெட்டுப்போகாதபடி கருத் தாக நோக்கி ஒருவர் கையை யொருவர் பற்றிய தொடர்ச் சியை விடாமல் மெல்ல மெல்லச் செல்லுங்கள்.

காடும், நடுகற்களும், நடுகல்லிற்குச் செய்யும் வணக்க மும் :—யானைகள் ஒன்றோடொன்று தாக்கிப் போர்செய் வதுபோன்ற தோற்றமுடைய பெரிய துறுகற்கள் நெருங்கி யிருக்கின்ற காடுகள் பல உண்டு. அங்கே மழை செழிப் பாகப் பெய்துகொண்டிருக்கும். பகைவருடன் போர் செய்யும்போது தமது படைகள் தளரும் நிலையைக்கண்டு பகைவர் வெற்றி கிடைக்குமென்று ஆரவாரித்தனர்.

அதனைக்கண்டு பொருத நாணம்மிக்க மறவர்கள் நம் உயிரைக் கொடுப்பதற்கு இதுவே வாய்ப்பான இடமென்று நினைத்துப் போர்செய்து இறந்து வீழ்ந்தனர். அவர்களுடைய பெயரும் பீடும் எழுதி நட்டகற்கள் ஆங்காங்கே முதுகிட்ட வீரர்களை ஏசுவனபோல நிற்கின்ற காட்டில் பல கிளைகளாகப் பிரிந்து செல்லுகின்ற வழிகள் எண்ணிக்கை மிகும்படி உள்ளன. அவ்வீரக் கற்களிலே நிற்குந் தெய்வங்கள் மகிழும்படியாக, தொன்றுதொட்டு நடுகல் வீரர்க்கு நீங்கள் பாடுகின்ற முறைமைப்படி இன்பம் மிக்க தாளத்துடன்கூடிய நும் பாடல்களைப்பாடி யாழினையும் வாசித்து விரைந்து செல்லுங்கள். தொன்றுதொட்டு நலம் பயவாமல் கேடே பயந்துகொண்டிருக்கின்ற தீய வழிகளிற் சென்று திகைத்து மீள்வீராயின், நுமக்குப் பின்பு வரும் புதியவரும் அவ்வாறு சென்று துன்புற்று மீளாதபடி கவர்த்த கிளைவழிகளைக் கையால் துடைத்து ஊகம்புல்லை முடிந்து அடையாளமிட்டு வைத்துச் செல்லுங்கள். அதற்கு அப்பால் மராமரக் காடுகள் உண்டு. அம்மரங்களின் அடியில் பொருதுவீழ்ந்த பொருநர்களின் பீடும் பெயரும் எழுதிய கற்கள் நட்டப்பட்டிருத்தலைக் காண்பீர்கள். அக்காடு தன் தெய்வத்தன்மையாலே மற்றைக் காடுகளைப் பழிப்பதுபோன்றிருக்கும்.

பகைவரைப் பணியச்செய்யும் ஆற்றல் :— அக்காட்டினுள்ள பலவழிகளில் நன்னனுடன் பொருந்தாது, அவனுடைய ஏவல்களையுங் கேளாது போகிய பகைவர்கள் இருக்கும் அருநிலங்கள் மிகப்பலவுள. அவைகள் ஊரிலிருந்து நினைத்தாலும் நடுங்கச்செய்யும். நீங்கள் அவ்வழியாகச்செல்லுங்கள்; அஞ்சவேண்டுவதில்லை. பரிசிலர்க்குத் தேர் முதலிய பொருள்களைக் கொடுத்துக்கொண்டேயிருத்தலினால் எப்பொழுதும் கவிழ்ந்து காணப்படுகின்ற கையுடையோனும், தனக்கென்று பொருள்களைப் பேணி வைத்துக்கொள்ளாதவனுமாகிய நன்னனை நினைந்து செல்லுகின்றேமென்று கூறுவீராயின், நம்போன்ற பரிசிலர்க்கு அவ்வூர்கள், எல்லா ஊர்களிலும் மேலாகச் சிறந்த நல்

லொழுக்கம் உடைய நன்னனுடைய பழைய ஊர்களைப் போன்று பயன் தரும். ஆதலால் இளைத்த இடத்தில் தங்கி இளைப்பாறி அஞ்சாது செல்லுங்கள்.

விலங்குகள் திரியும் காடு :—அதற்கு அப்பால், தன்னொடு இணைந்த தன் அருமைப் பிணைமானைப் புலிபாய்ந்து வீழ்த்திவிட நடுங்கிப்போய் நின்று கலைமான் கூவுகின்ற காடுகள் உண்டு. அக்காட்டை முறையாகக் கடந்து செல்லுங்கள். பின்பு, வில்லின் நாணொலிக்கு அஞ்சிச் சிவந்த கண்களுடைய மரையாவின் ஏறுகள் துள்ளிக் குதித்து ஓடும்.

முல்லை நிலத்து விருந்து :—நறுமணம் மிக்க கொடிகளுடைய குறுங்காட்டில், வேற்றுப் புலத்திற்சென்று காளைகளுடன் மேய்ந்துவந்த பசுவினங்களிற் கறந்த பாலைக், கோவலர்குலத்து நங்கையர்களால் வார்க்கப்பெற்று உண்டு மகிழ்வீர்கள். பரிசிற் பயன்பெற நினைத்து ஊரிலிருந்து புறப்பட்டு வந்த வருத்தமெல்லாம் நீங்கப் புதிய தன்மையுடையவராய் விருந்தினராகுவீர். பலவகைப் பண்டங்களை விற்று அதனால் பலரிடமிருந்து பெற்ற பல வகையான நெல்லிலிருந்து எடுத்த பல நிறமுள்ள அரிசியைப் போன்று பல நிறமுள்ள கிடாய்களுடனே விரவி நிற்கின்ற செம்மறியாட்டுத் திரளும், வெள்ளாட்டுத் திரளும் குழுமிக் கடல்போல் ஒலிக்கின்ற கல்லென்ற ஆரவாரமுள்ள காட்டின்வழி இரவிற் செல்லுவீராயின் பாலும் பாற்சோறும் நமக்கென்று ஆக்காமல் தமக்கென்று ஆக்கி வைத்தவற்றைத் தரப்பெற்று உண்டு மகிழ்ச்சியடைவீர்கள். மெல்லிய துய் மயிர்களை உள்ளே அமைத்துச், சேணமிட்ட படுக்கையைப்போல ஆட்டுத்தோலினாற் செய்யப்பட்டு வாரால் தைத்து ஒழுங்குபடுத்திய படுக்கையிலே கொடிய விலங்குகள் வராதபடி பக்கத்தில் கோவலர் வளர்த்துத்தரும் தீயின் வெளிச்சத்திலே தங்கி இரவுப் பொழுதைக் கழித்துப் பின்பு அப்பாலே செல்லுங்கள்.

வேட்டுவரின் உதவி :—கூப்பிடு தொலைக்கு அப்பால் நிற்பவரையும் கூப்பிடக்கூடிய வலியவராய் வில்லும் அம்

பும் கைக்கொண்டு நின்று காடுகளைக் காக்கும் வேட்டுவர்களைக் காணின் அவர்களிடம் தன்னை வணங்காத பகைவரை அழித்த ஆட்சித்திறமுடையவனும், வெற்றிக் கொடியுடையவனின் கணவனுமாகிய நன்னனைக் காணச் செல்கின்றோமென்று கூறினால் தசைகளையும் கிழங்குகளையும் கொண்டுவந்து மிகுதியாக வற்புறுத்தி உண்ணச் செய்து பாதுகாப்பவரேயன்றி உங்களை வருத்துவோர் ஒருவரும் இல்லை. அவர் தரும் உணவை உண்டு அவர் காட்டிய வழியை அறிந்துகொண்டு அவ்வழியே செல்லுங்கள்.

வழியின் இயல்பும் உணவும்:—தேன் துளிக்கும்படி பூத்திருக்கும் மராஅம் பூவின் கொத்துக்களையும், யானையால் முறிக்கப்பட்டுப் பின்பு தளிர்த்த ஒளி பொருந்திய தளிர்களையுடைய யாமரத்தினது பூக்களையும், தளிர்களையும் அமைத்து வாடிய மரலினது நாரினால் மாலை கட்டி அழகாக அணிந்துகொள்ளுங்கள். பருக்கைக் கற்கள் பரவிக் கிடக்கும் மேட்டு நிலத்திலுள்ள வெடிப்புக்கள் மறையும்படி மழைபெய்து வழிகள் குளிர்ச்சியடைந்திருக்கும். அவ்விடத்தில் தண்ணீர் பருகிக் குளித்துச், செல்லும் வழிக்கும் வேண்டிய அளவு முகந்துகொண்டு செல்லுங்கள். வேங்கைப்பூவின் நிறத்தைப்போன்ற அவரை விதைகளையும், மூங்கிலரிசியையும், மேட்டு நிலத்தில் விளைந்த நெல்லரிசியையும், புளிக்கரைத்த உலையிலே பெய்து ஆக்கிய புளியங்கூழினைக் கழிகள் வைத்துக்கட்டிப் புல் வேய்ந்த குடிசையிலிருந்து வாழும் குடிகள்தோறும் பெற்று உண்டு இரவில் அங்கே தங்குவீர்கள்! இளைப்பாறி அங்கே சில நாட்கள் தங்கினால் பொன்னைத் துணித்து ஆக்கினாற் போன்ற அரிசியைத் திட்டி ஆக்கப்பெற்ற சோற்றுத் திரளை நெய்யை உள்ளீடாக இட்டு உண்ணும்படி மிகுதியாகப் பெறுவீர்கள். கருப்புக்கட்டியின் தெள்ளிய பொடியைப்போன்று இடித்து ஆக்கப்பட்டதும், வேறு பொருளை நுகரவிடாது சுவை தருவதுமாகிய தினைமாவினையும் பெறுவீர்கள். காய்ந்த விறகுகளினால் மூட்டப்பட்ட

தீயின் வெப்பத்தினால் பனியின் குளிர்ச்சி நீங்க இனிதாக உறங்கி வைகறைப்பொழுதில் பறவையின் குரல்கேட்டு எழுந்து புறப்படுங்கள்.

தண்பணை நாடு :—அதற்கப்பால், புல்லிய தூர்களை யுடைய காஞ்சி மரமும், தண்ணீரால் மோதப்படுகின்ற அறுகம் புற்களும் உள்ள மெல்லிய நிலங்களும், யாழினது பலவகைப் பண்ணைப் பெயர்த்து வாசிப்பதுபோன்று வண்டினம் முரலுகின்ற சோலைகளும், தவமுனிவர் வாழும் பள்ளிகளும் உடைய மருதநிலம் மிகுந்த நாடாகிய தண் பணை நாடு உண்டு. அங்கே பல ஊர்களுண்டு. நீவிர் அவ்விடத்திலே ஒருநாள் தங்கியிருந்து செல்வீராயினும், பல நாள் நிலையாகத் தங்குவீராயினும், யாழின் இனிய பண்களைப் பல்வகையாகப் பெயர்த்து இசைப்பதனால் உண்டாகும் பல வேறுவகை ஓசையாலாகிய செவியின்பம் போல நாவுக்கு இன்பந்தரும் அளவில்லாத வகையான சுவைப் பண்டங்களைப் பெற்று மகிழ்வீர்கள். பண் ஒன்றை ஒன்று ஒவ்வாது இனிதாக இருப்பதுபோல நீவிர் நுகரும் பொருள்களும் ஒன்றையொன்று ஒவ்வாத இனிமை உடையனவாக இருக்கும்.

*கண்பங் கோரைகள் மலிந்த நீர்ப்பொய்கைகளில் பூக்கள் சிதைந்து கமழும்படி வலைவீசித்துழாவி ஆராய்ந்து பிடித்துக் கொண்டுவந்து வலைஞர்கள் தந்த பருத்த கழுத் துடைய வாளைமீன் துண்டுகளையும், ஓரிடத்தில் நிலையாக இருந்து நெடுங் கயிறுகட்டிய தூண்டிலிட்டுப் பற்றப்பட்ட தும், சிவந்த கண்கள் உடையதும் பிடியானையின் கைபோன்று பருத்ததுமாகிய வரால் மீன்களின் துடியின் கண்களையொத்த கொழுமையான துண்டுகளையும் கலந்து தந்து கள்ளின் தெளிவையும் தரப்பெறுவீர்கள். அவ்வாறு தருபவர், கள் விற்பவராகிய வலையருடைய மகளிர்; அவர் கள் பகன்றைப்பூவைச் சூடியிருப்பார்கள். அவர்கள் அவ் வாறு மீன் துண்டங்களுடன் உமக்கு வார்க்குங் கள்ளுக் குப் பதிலாக உழவர்கள் தங்கள் நெற்களத்திலிருந்து

* கண்பங்கோரை - சம்பங்கோரை.

நெல்லை முகந்து கொடுப்பார்கள். அந்நெற்களங்கள் நண்டுகள் உலாவித் திரியும் வயலின் பக்கத்து மேட்டு நிலத்திலே அமைந்திருக்கும். மலைபோல அடைந்திருக்கிற நெற்போர்களைப் பிரித்துத்தள்ளிக் கடாவிட்டுத் துவைத்து நெல்லை அளந்து குவிப்பார்கள். அத்தகைய களங்களிலே தான் களிப்பு மிகுதியால் பானையோடு அலம்பி அசைகின்ற பசுமையான முளைகளாலாக்கின கள்ளின் தெளிவை ஞாயிறு இளங்கதிர் வீசுகின்ற காலைப் பொழுதிலேயே மேற்கூறியவாறு மீன் துண்டங்களுடன் வார்க்கப்பெறுவீர்கள். வண்டு மொய்க்கும்படி கமழ்ந்து தேன் துளிக்கின்ற பூங்கண்ணி யணிந்த திண்ணிய தேருடைய நன்னனுக்கும் உணவாதற்குப் பொருந்துமென்று கண்டோர் வியக்கும்படி முள்ளைக் கழித்து அரிந்த கொழுப்புமிக்க வெண்மையான தசைத்துண்டங்களையிட்ட வெள்ளிய சோற்றை நும் சுற்றத்துடன் உண்டு எருதுகளை ஓட்டுகின்ற உழவரின் ஓசையுடன் இசைந்து ஒலிக்கும்படி நுமது யாழால் மருதப்பண்ணை இசைத்துச் செல்லுங்கள்.

நெற்கதிர் அறுப்பவர்களின் மத்தள முழக்கத்தைக் கேட்டுத் தன் இனத்திலிருந்து பிரிந்து கனைத்துக்கொண்டு பாயவரும் எருமைக்கடாக்களுக்குத் தப்பி விலகி நும்மைப் பேணிக்கொள்ளுங்கள்.

நன்னனுடைய சேயாறு :—வேட்கோவன் வனைகின்ற கலத்துடன் சுழற்றிவிட்ட திரிகை சுழலுவதுபோல குமிழிகள் சுழல விரைந்து வாய்க்காலிடந்தோறும் ஒழிவின்றி ஓடுகின்ற கண்ணுக்கினிய சேயாற்றைக் காண்பீர்கள். காண்போர் விரும்பும் அழகுமிக்கது அந்த ஆறு. கண்ணுக்கு இனிய புதுப்பொருள்கள் வந்துகொண்டிருக்கின்ற அந்த ஆற்றின் ஒரு பக்கத்துக் கரையை நுமக்கு வழியாகக்கொண்டு செல்லுங்கள்.

மூதூர் மாலை :—(பழைய ஊரின் இயல்பு) அதற்கு அப்பால் பலவகை வண்டினங்கள் முரலுகின்ற குளிர்ந்த பொழில்கள் உண்டு. உயர்ந்து ஓங்கிய பெரிய மதில்கள்

உண்டு. கடலெனக் காரென முழங்கும் ஆரவாரமுண்டு. திருவிழாவினைப்போன்ற கூட்டங்கள் உண்டு. சிறந்த கடைத்தெருக்கள் உண்டு. பல கிளையாகப் பிரிந்து செல்லும் குறுந்தெருக்கள் உண்டு. ஊர்விட்டுப் பெயராத பழங்குடிமக்கள் உண்டு. அவர்களிடம் அன்பு உண்டு. அருள் உண்டு. அமைதியுண்டு. மலையென மழையென ஓங்கிய மாடங்கள் உண்டு. பொற்குவியல் உண்டு. பொருட்குவியல் உண்டு. அவ்வூர் மிகவும் பழமையானது. தொன்மையான வெற்றிகள் உடையது. பகைவர் தலையைப் பருந்து குத்தும்படி வெட்டி வீழ்த்தும் வாள்மறவர்கள் அரண்மனைவாயிலைக் காத்து நிற்பார்கள். கரிய காம்புள்ள பெரிய வேல்களை வாசலிற் சாத்தியிருப்பார்கள். நீங்கள் ஐயப்படாது அவ்வாசலிற் புகுந்து செல்லுங்கள். உங்களைக் கண்டு எல்லோரும் இரக்கங்கொள்வர். 'மன்றத்திலே தங்குவோர், செய்மையிலிருந்து பரிசு பெற வந்தவர், வெற்றிப்போர் செய்து கொற்றம்பெறும் முருகனைப்போன்ற நன்னனைக் கருதிவந்தவர், மிகவும் பேணுதற்கு உரியவர்,' என்று, கண்டோரெல்லாம் விருப்பத்துடன் நோக்குவர். ஒவ்வொருவரும் விருந்தாக எதிர்கொள்ளுவர்; வழிநடந்துவந்த வருத்தந்தீர மகிழ்வீர்கள்.

அரண்மனைமுற்றம்:—பின்பு பூந்தாது உதிர்ந்த எருவினைப்போன்று பரந்துகிடக்கின்ற அவனது முற்றத்தை அடைவீர்கள். அம்முற்றத்தில் பல்வேறு பொருள்கள் வந்து குவிந்திருக்கக் காண்பீர்கள். தீயினைக் கக்குவது போன்ற பூங்கொத்துக்களையுடைய மராமரத்தின் அடியிலிருந்து கூட்டங்களெல்லாங் கலைந்து ஓடிவிடத் தனியே திகைத்து நின்று அசப்பட்ட மரையானின் கன்று; யானையின் கொழுமையான கன்று; வளைந்த காலுடையதும் வாய்திறவாததுமாகிய கரடியின்குட்டி; முதுகுப்பக்கத்தில் முடங்கி மேல்நோக்கியிருக்கும் வளைந்த கால்களையுடையதும் விரைந்து ஓடும் இயல்பு உடையதுமாகிய எண்கால் வருடை; வலிய தலையுள்ள பெரிய கடாய்; பாம்பின் வலிமையை அழித்த சிறு கண்களையுடைய கீரிகள்;

குகைக்குள்ளிருந்து விரைந்துபாய்ந்து புலியாற் கொல்லப் பட்ட மரையானின் கன்று; அரக்கினைப் பரப்பினாற் போன்ற செம்மண்ணிலத்திலுள்ள பருக்கைக் கற்களில் தவழும் வளைந்த காலுள்ள ஆண்உடும்பு; மலையின் பக்கங் களில் பொலிவுமுதிர ஆடுகின்ற கண்ணமைந்த தோகை யுள்ள மயில்கள்; பேடையை விரும்பி இரங்கிக் கூவு கின்ற கானங்கோழிச் சேவல்; மத்தளம்போன்று பருத்த காட்டுப்பலாவின் பழங்கள்; நறுமணமுள்ள வடுக்களை யுடைய மாமரத்திலிருந்து கற்கண்டின் கலவைபோன்று சுவைதரும் இயல்பான சாறுமிகும்படி கனிந்து முற்றின அழகிய மாம்பழங்கள்; மழை தூறுதலினாலே கொழுமை யாக அடர்ந்து படர்ந்து அரும்புகளுடன் மணக்கின்ற நறைக்கொடி; காவட்டுப் போட்டுக்கொண்டு வந்த நுகம் போன்று திரண்ட நூறைக்கிழங்கு; மரங்களிலிருந்து சிதறி உதிர்த்த பருத்துத் திரண்ட கருப்பூரம்; மிகுந்த விலைபெறும் மாணிக்கம்; நிறமுள்ள புலிகளால் கொல் லப்பட்டு விழ்ந்த யானைகளின் முத்துவிளைந்த கொம்பின் குவியல்கள்; உடைந்த வளையல்போன்ற வளப்பமான இதழ்களுடைய காந்தட்பூக்கள்; சுரபுன்னை யலர்கள்; திலகமலர்கள்; நறுமணம்மிகுந்த வயிரமான சந்தனக் கட்டைகள்; கரிய மிளகுக்கொடிகளில் விளைந்த பசிய மிளகுக் கொத்துக்கள்; தேனாற் செய்யப்பட்டு மூங்கிற் குழாய்க்குள்ளே பெய்துவைத்துச் சுவைமுதிரச் செய்த கள்ளின் தெளிவு; காட்டிலே மேய்ந்து காட்டிலே நிற் கும் எருமையின் பாலாற்காய்ச்சி ஆக்கி மூங்கிற்குழாயி னுள்ளே ஊற்றி வைக்கப்பட்ட இனிய தயிர்; நன்றாக முற்றி நீலநிறம் பரவித் தேனை வெளியே விசையாகத் துளிக்கின்ற தேனடைகள்; விருப்பங்கொண்டு இருகையா லுந் தழுவி எடுத்துக்கொண்ட ஆசினிப்பலாவின் பழங் கள் முதலியனவாகிய மேற்சொல்லப்பட்ட எல்லாப் பொருள்களும் ஒருமிக்கச் சேரப்பெற்று நெருங்கி, குடக மலையிற் பிறந்த குளிர்ந்த பெரிய காவிரியாறானது கடலிற் புகுந்து கலக்கின்ற ஆழமான புகார்த் துறைமுகத்தைப் போல மலைபடு பொருள்களெல்லாம் வந்து கடல்போல

மிகுதியாகத் தங்கியிருக்கின்ற அழகினையுடையது நன்னனுடைய முற்றம். அம்முற்றத்திற் கார்முகிற் கூட்டம் போல யானைகள் முழங்கிக்கொண்டு நிற்கும். பூந்தாதுகள் உதிர்ந்து பரவிக்கிடக்கும்.

விறலியர் கடமை :—அம்முற்றத்தை அடைந்து மழை முழக்கம்போல உங்கள் மத்தளமுழக்கம் முழங்க, மூங்கிலாற் செய்த பெருவங்கியத்தின் கண்கள் ஒலிக்க, யாழிலிருந்து இசைக்கும் மருதப்பண்ணின் ஓசையுடன் ஒன்றாக இணைந்து ஒலிக்கும்படி இனிய குரலுடன் பாடி மெய்ப்பாடுதோன்ற ஆடுகின்றவரும், தலைவனைக் கண்டால் செய்யத்தகுந்த தொழிலை அறிந்தவருமாகிய விறலியர்கள் தொன்றுதொட்டு ஒழுகும் மரபுமுறைமை தவறாது அரிய வலிமையுடைய கடவுளை வாழ்த்தித் தேவபாணியைப்பாடி முடித்தபின்பு, நீவிர் புதிதாகப்பாடும் பாடல்களைப் பாடுங்கள்.

கொடைக்கடனிறுத்த தொல்லோர் :—வேற்படையாளருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்து, இன்னதைச் செய்வேன் என்று கட்டுறுத்துச் சொல்லிய சூளுரையுந் தப்பாதவாறு செயல்கள் முடித்து நல்ல புகழ்வழியிலே நடந்த சான்றோர்களின் மரபில் தோன்றியவனே !

நீங்கள்பாட அவன் பாராட்டி அவைக்கு அழைத்துச் செல்லல் :—நலந் தீங்குகளை ஆராய்ந்து உணரும் பெரிய வள்ளல்கள் மாய்ந்துபோன இக்காலத்திலே இன்றோடு கழியாது என்றும் நிற்பதாகிய புகழ் நிலைபெறும்படி கொடைத்தொழிலாகிய கடனைச் செய்துமுடித்த தலைவனே ! என்றுகூறி அவனது வெற்றியாலாகிய பல புகழையும், ஐம்பொறிகளைத் தன் வயப்படுத்தின வெற்றியுடன் புகழ்ந்து பாடுங்கள். மேலும் நம் மனத்தில் தோன்றிய ஏனைப் புகழ்களையும் பாடுவதற்கு விடாது, "என்மேல் வைத்த விருப்பந் தூண்ட நீங்கள் வந்ததே போதும் ; உங்கள் வருத்தமும் பெரிது ;" என்று முகமன் கூறுவான் ; பகையைப் பொருது வெல்லும் வயவரொடு

விளங்கித்தோன்றும் அரண்மனை முற்றத்துக்கு உங்களை அழைத்துச் செல்லுவான். கல்லென ஒலிக்கும் ஆரவார முடைய சான்றோர் இருக்கும் அவையின்கண் வாய்ப்பான நேரத்தில் நல்ல இடத்தில் இருக்கச்செய்வான்.

நன்னனுடைய உட்கோள் :—உயர்ந்த அரசாட்சியும், நல்ல அமைச்சரும் அகன்ற நாடும்பெற்றிருந்தும் குறுகிய மனப்பான்மையராய் இரப்போருக்கு இல்லையென்று விரித்த கையுடன் தம் பெயரைத் தம்மோடு உடன் கொண்டு இறந்தொழிந்த அரசர், நெடிய மலையிலிருந்து வரும் வெள்ளப்பெருக்கு விரைந்து வருகின்ற கண்ணுக்கு இனிய சேயாற்றிலுள்ள வடுவுள்ள குவியலான மணலின் எண்ணினும் மிகப் பலராவார். அதனால் நமது வாழ் நாள் புகழுடன் கழிவதாக என்று நினைத்து வானவெளி யைப் போன்று பரந்த மனப்பான்மையொடு கொடைத் தொழிலை மிகுதியாகச் செய்யும் விருப்பத்துடன், பரிசு பெறுவதற்கு விரும்பிச் சென்ற உங்களைப் பார்க்கிலும் தான் மிகவும் மகிழ்ந்த மனத்துடன் விரும்பி நோக்குவான்.

பரிசில் :—ஊத்த ஆடைகளை உடுத்து வெளுத்த உங்கள் இடுப்பில், இழைசென்ற பக்கம் அறியமுடி யாதபடி நுண்ணிய நூலால் செய்த தாழ்வில்லாத சிறப் பினையுடைய ஆடைகளை அணியும்படி தரப்பெறுவீர்கள். அங்கே பல நாட்கள் தங்கியிருப்பினும், வெண்ணெல் அரிசியும் தசைத்துண்டங்களும குறைவின்றிப் பெறு வீர்கள். 'எங்கள் பழைய ஊருக்குப் போக விரும்புகிறோ,' மென்று அவன் வருந்தாதபடி மெல்லக்கூறி விடுப்பீ ராயின், உங்கள் தலைவன் தலையில் பொற்றாமரை மலர் அணியப் பெறுவான். விறலியர்களெல்லாம் புகழ் பொருந்திய சிறந்த பொன்னணி அணிந்து திகழ்வார்கள்; நீரோட்டம் போன்று செல்லும் நெடிய தேர்கள்; பகை வரிடம் திறையாகப்பெற்ற பெரிய மலைபோன்றயானைகள்; மணிகட்டிய கால்களுடன் கூடிய பெரிய பசுக்களின் கூட்டம்; பொன்னாற் செய்த கலனை அணிந்து விளங்கும் தலையாட்டமுள்ள குதிரைகள்; மண் தின்னும்படியாகக்

கிடந்த பழைய பொருள்களின் குவியல் ஆகிய எல்லா வற்றையும்,

ஈகைமாரி:—இலம்பாடு (வறுமை) உற்ற புலவர்களுக்குப் பொன்னணிகளைச் சொரிந்து கவிழ்ந்த கழல் தொடியணிந்த கையினால் என்றைக்கும் குறைவுவாராதபடி நவிரமலையில் பளீரென்று பெய்கின்ற மழைபோன்ற கொடையாலே முதல் நாளிலேயே பரிசுப்பொருள்கள் தந்து போகச் செய்வான்; மலைகளிலிருந்து விழுகின்ற வெள்ளருவிகள் அவனது வெற்றிக்கொடிகள்போல விளங்கும்படியான பல குன்றுகள் சூழ்ந்திருக்கின்ற நல்ல நாட்டுக்கு உரிமை உடைய நன்னன், இவ்வாறு உங்களுக்குச் சிறப்புச் செய்வான். 'நீங்களும் சென்று வாருங்கள்; யாங்களும் போகின்றோம்; வாழ்க தமிழ்; வணக்கம்,' என்று கூறி வழிப்படுத்தி விடுகின்றான். அவையோர்களே! மேற்கூறப்பட்ட பொருள்களின் தொகுப்பே மலைபடு கடாம் என்ற பாட்டிலமைந்துள்ளன. நிற்க,

சில ஆராய்ச்சிக் குறிப்பு:—அப்பாடலை ஆராய்வதனால் புலனாகும் பழைய வழக்க ஒழுக்கங்களும், மரபுமுறையும், சொல்லாராய்ச்சி பொருளாராய்ச்சி முதலியனவும் ஒரு பெரிய தனி நூலாக எழுதும் அளவுக்கு விரிந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை நினைவுறுத்தி இச் சொற்பொழிவினை நிறைவு செய்யலாம் என்று நினைக்கிறேன். இந்நூலிற் பாராட்டப் பட்டுள்ள நவிரமலை திருவண்ணாமலைக்கு வடமேற்கிலுள்ளது என்றும், அது இப்பொழுது திரிசூலகிரி, பருவதமலை என்ற பெயரால் வழங்கப் படுகின்றதென்றும், அங்கு இருக்குஞ் சிவபெருமானுக்கு இப்பொழுது காளகண்டேசுவரர் என்று பெயர் வழங்கப்படுகின்றது என்றும், அம்மலையில் ஓடிவருகிற கண்ணுக்கு இனிய "சேயாறு" (சேய்—முருகன்) இப்பொழுது சண்முக நதி என்று வழங்கப்படுகின்றது என்றும் இந்நூற் பதிப்பாசிரியரே குறித்துள்ளனர். இவற்றால் நாம் அறியக்கிடப்பன யாவை? தமிழருடைய பழைய நாகரிகச்சின்னங்கள், பெயர்கள்

முதலியன பிறரால் காலந்தோறும் மாற்றப்பட்டு வந்தன என்று நன்கு தெரிந்து கொள்கிறோம். "சேயாறு" என்பது தமிழ்ப்பெயராக இருப்பது கருதி மனம்பொறாது "சண்முக நதி" என்று மாற்றியும் "நவிரமலை" என்பதும் பழைய தமிழ்ப்பெயராக இருப்பது கருதி அகங் கனன்று, திரிசூலகிரி, பருவதமலை என இரண்டுபெயர்கள் கொடுத்து மாற்றியும், "காரியுண்டிக் கடவுள்" என்ற அருமைத் தமிழ்ப்பெயரைக் "காளகண்டேசுரர்" என்று மாற்றியும், தமக்கு மனம் போனவாறெல்லாம் பிழைபாடுபுரிந்து தமிழ்மொழியையும் பழமையையும் சிதைத்துப் போக்கினர். அந்தோ! இன்னுமிவர் என்னென்ன செய்வாரோ? யாம் அறியோம். நிற்க, அவையேயன்றிப் பிற பெயர்ச்சொற்களை மாற்றியிருக்கும் முறையையும் நோக்கின் தமிழின்பால் அன்னாருக்கு உள்ள வெறுப்பு உணர்ச்சி நன்கு புலப்படத் தடையில்லை. நீர் நிலையின் ஓரங்களில் வளர்வதும் சம்பங்கதிர் போன்று கதிர் நீட்டுவதும் கோங்காணி பின்னுவதற்கு உதவுவது மாகிய "சம்பு" என்கின்ற கோரையைப் பலரும் இப்பொழுது நன்கு அறிவர். "இது சகரமுதற் சொல்லாயிருக்கின்றதாதலின் இது தமிழ்ச்சொல்லன்று" என்று தமிழர்கள் கருதவுங்கூடும்; ஏனெனின், ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
> அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே"

என்ற நூற்பாவினால் சகரம் அகரத்துடனும் ஐகாரத்துடனும் ஔகாரத்துடனும் கூடி மொழிக்கு முதலில் வாராது என்று அறிவித்துள்ளனர். அதனை உணர்ந்தோரெல்லாம் இம்மூன்று எழுத்துக்களை முதலிற்கொண்ட சொற்களையெல்லாந் தமிழன்று என்று நினைப்பது இயல்பேயாகும். ஆனால் காலந்தோறும் தமிழிலுள்ள எண்ணிறந்த சொற்கள் திரிக்கப்பட்டுப் பிறமொழியாக்கப்பட்டன என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். "கண்பு" என்று "மலைபடுகடாம்" "மதுரைக்காஞ்சி"

"பெரும் பாணாற்றுப்படை" ஆகிய மூன்று நூல்களிலும் வழங்கும்சொல் பின்பு, "சம்பு" என்று மாற்றப்பட்டது. 'ககர சகரங்கட்குப் பொருளொக்கும் வடிவொக்கு,'மென்று சிவஞானமுனிவர் கூறியிருப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. "கைப்பாணி" என்ற சொல்லைச் "சப்பாணி" என்று ஆக்கியதும் இதே முறையைப் பின்பற்றியென்பது நன்கு விளங்கும். "பாணி" என்பது தாளத்திற்கும் பண்ணுக் கும் உரிய பெயராக வழங்கிவந்தது என்பது சேனாவரை யர் உரையாலும் அறியக்கிடக்கின்றது. ஆகவே "கைப் பாணி" என்பது கையால் பண்ணுக்கு ஏற்பத் தாளமிடுவது என்று பொருள்படும். இவ்வளவு அருமையான தமிழ்ச் சொல்லைச் "சப்பாணி" யாக்கியது எவ்வளவு தீங்கான செயல் என்பதனை நன்கு நினைத்துப்பாருங்கள். நிற்க, "பாணி" என்ற சொல்லும் பண்ணுக்கிசையத் தாளமிடும் கையை யுணர்த்துவதாய்த் தமிழிலிருந்து படைத்துத் திரித் துக் கொள்ளப்பட்ட சொல்லேயாகும். அதுவேயன்றி, "கயம்" என்ற சொல்லும் பிறரால் திரித்துக் கொள்ளப் பட்டது; "கயமுனிக்குழவி" என்று மலைபடுகடாத்தில் யானைக்கன்று குறிக்கப்படுகிறது; "தடவுங் கயவும் நளியும் பெருமை" என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி "கய" என்ற சொல்லுக்குப் பெருமை என்ற பொருளிருத்தல் உணரப்படும். ஆகவே, "கய" என்ற சொல்லில் "அம்" விகுதிசேர்த்து அகரம் குறைத்துக் "கயம்" என்றாக்கி விலங்கினுட் பெரிய யானைக்கும், பெரிய நீர்த்தடாகத் திற்கும் பெயராக வழங்கிவந்தனர். இச்சொல்லை "கஜம்" என்று திரித்து யானையையும், நீர்த்தடாகத்தை யும் குறிப்பதாகக் கொண்டு பிற சொல்லென்று கருதும் படி ஆக்கிவிட்டனர். அது நிற்க, இன்று "எள்" என்று வழங்குஞ்சொல் தொல்காப்பியனார் காலத்தில் "எண்" என்று வழங்கப்பட்டது. "எண்ணென் உணவுப் பெயர்," என்று அதை 'ணகார' இறுதியில் வைத்துத் தொல்காப்பி யம் புலப்படுத்துகின்றது. மலைபடுகடாத்திலும் எள்ளுக்கு "எண்" என்றே பெயர் வழங்கப் பட்டிருக்கின்றது; "நெய கொள ஒழுகின பல்கவர் ஈரெண்" என்று கூறுகின்றனர்

இம் "மலைபடுகடாம்" என்ற பாடலையும், பத்துப்பாட்டின் தொகுப்பிலுள்ள ஏனைய பாடல்களையும் ஒருமுறை நன்கு கற்று அறிந்த எவரும், "தமிழ்மக்களிடத்தி லிருந்துதான் இசைக்கருவியும், இசையிலக்கணம் முதலிய பண்வளங் களும் பிறந்து பின் உலகமுழுதும் பரவிவிட்டது," என் னும் உண்மையை மறுக்கமாட்டார்கள். "பல்குன்றக் கோட்டம்" என்பது நன்னனுடைய ஆட்சியில் அடங்கி யிருந்தது. ஆகவே அக்காலத்திலேயே நாடுகளைக் கோட் டம் முதலிய பிரிவுகள் பிரித்து ஆட்சி செய்யத் தொடங் கிய தமிழரின் அரசியல் அறிவும் நன்கு உணரப்படும். இந்நூலுட் பல உவமைகள் திறமையாகக் கையாளப்படு கின்றன. ஆனால் உருவகம் ஒன்றுதான். அதுவே, "மலைபடு கடாஅம்" என்பது. இவ்வுருவகத்தையும் உவமையினுள் அடக்கிக்கூறுவர் ஆசிரியர் தொல்காப் பியனார். அவ்வுருவகச் சிறப்பினாலேயே இப்பாட்டு "மலைபடு கடாஅம்" என்று பெயர் பெற்றதெனின் இவருடைய திறமையை என்னென் றியம்பமுடியும். அத் தகைய திறமையிருந்தும் உருவகங்களைக் கையாளவில்லை.

உவமையையும், தன்மையணியையும் கையாண்டு நூலியற்றிய இவரது அருமை பாராட்டத்தக்கது. பொருள்களுக்கு இவர் அமைத்து வழங்கக்கூடிய இயற் கையான அடைமொழிகளை நாம் கற்று அப் பொருள்களை நேரிற்கண்டு உணர்ந்து களிப்படைவதற்கே பலயாண்டுகள் செல்லும். ஆனல் பொருள்களை நேரிலுணர்ந்து அத்தகைய இயற்கை யியல்பினைத் தாமாக உணர்ந்த இவரது புலமை நிலை மிகவும் பாராட்டக்கூடியது என்பதற்குத் தடை யொன்றுமில்லை. பிற்காலத்து நூலியற்றியோரிற் பெரும் பாலோர், தம் நூலிற் கூறப்படும் தலைவன் தலைவியரையும் தம்மாற் பாடப்படும் நாடு வீடு பொருள் முதலிய இயற்கை களையும் நேரில் பாராதவராய்த் தம் மனத்திற்றோன்றியபடி யெல்லாம் பாடி இயற்கையுண்மையில் விளையும் பேரின்பச் சுவையினைக் கெடுத்துப் போயினர். அத்தகைய நூல் களைப் படித்த புன்மை நீங்கி உய்யவேண்டுமெனின்,

இத்தகைய அருமை நூல்களைக் கற்றல் வேண்டும். தமிழன் தனக்கு உரிய நூல்கல்லாது பிறர்க்குரிய நூல்களைக் கற்று ஏமாற்றமடைந்து மயங்கிக் கிடக்கும் நிலை என்றைக்கு மாறுமோ அன்றைக்குத்தான் தமிழனுக்கு நல்வாழ்வின் முதல்நாள் தொடங்குகின்றது. "வறுமையினால் ஒரு தமிழன் கல்லாதிருப்பினும் அதற்கு எல்லோரும் நாணமடைய வேண்டு," மென்ற அறிஞருரையைப் பின்பற்றுவோமாக. தமிழ்க்கல்வி பரவுக. தமிழ் வாழ்க. இத்துடன் என் சொற்பொழிவு நிறைகிறது. எல்லோருக்கும் நன்றி.

வெண்பா

"தூஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்தது கொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்
மாஅ மிசையான்கோ னன்ன னறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு."

அரிய சொற்பொழிவு நூல்கள்

கலித்தொகைச் சொற்பொழிவுகள் :

மலிவுப் பதிப்பு 2 0 *கலிக்கா* 3 0

குறுந்தொகைச் சொற்பொழிவுகள் :

மலிவுப் பதிப்பு 2 4 *கலிக்கா* 3 0

அகநானூற்றுச் சொற்பொழிவுகள் :

மலிவுப் பதிப்பு 2 0 *கலிக்கா* 3 0

நற்றிணைச் சொற்பொழிவுகள் :

மலிவுப் பதிப்பு 2 4 *கலிக்கா* 3 0

புறநானூற்றுச் சொற்பொழிவுகள் :

மலிவுப் பதிப்பு 3 8 *கலிக்கா* 4 0